— பன்னிரு —

சதகத்திரட்டு



பதிப்பிடம்:

B. இரத்தின நாயகர் அண்ட் சன்ஸ்,

57, வெங்கட்ராமய்யர் தெரு,

சென்னை—1.

இதன் விலை] —— [ரூ. அ—00.

உ

கடவுள் துணை

பல வித்துவான்கள் இயற்றிய

பன்னிரு சதகத்திரட்டு

இதனுள் :

பன்னிரண்டு சதகங்கள்

அடங்கியுள்ளன

வல்லை - பாலசுப்பிரமணியம், B.A ;

அவர்களால் பரிசோதிக்கப்பெற்றது

பதிப்பிடம் :

B. இரத்தின நாயகர் அண்ட் ஸன்ஸ்

சென்னை—1.

பதிப்புரிமை] [விலை ரூ. 6—00

பொருளடக்கம்

நெ.		பக்கம்.
1.	குமரேச சதகம்	3
2.	அறப்பளீசுர சதகம்	55
3.	கயிலாசநாதர் சதகம்	107
4.	அண்ணாமலைச் சதகம்	159
5.	அவையாம்பிகை சதகம்	213
6.	திருவேங்கட சதகம்	265
7.	கண்டலீயார் சதகம்	317
8.	அருணாசல சதகம்	355
9.	எம்பிரான் சதகம்	381
10.	கோவிந்த சதகம்	409
11.	தொண்டைமண்டல சதகம்	445
12.	வடவேங்கட நாராயண சதகம்	475

பன்னிரு சதகத்திரட்டு

திருப்புல்வயல்

குருபாத தாசர் இயற்றிய

1. குமரேச சதகம்

காப்பு

நேரிசை வெண்பா

பூமேவு புல்லைப் பொருந்துகும ரேசர்மேல்
தேமே வியசதகஞ் செப்பவே—கோமேவிக்
காக்குஞ் சரவணத்தான் கம்பகும்பத் தைந்துகரக்
காக்குஞ் சரவணத்தான் காப்பு.

அவை யடக்கம்

மாரிக்கு நிகரென்று பனிசொரிதல் போலவு
மணிக்குநிக ரென்று சிறுபெண்
மணல்வீடு கட்டுவது போலவுஞ் சந்திரன்முன்
மருவுமின் மினிபோ லவும்
பாருக்கு ணல்லோர்மு னேபித்தர் பலமொழி
பகர்ந்திடுஞ் செயல்போ லவும்
பச்சைமயி லாடுதற் கிணையென்று வான்கோழி
பாரிலா டுதல்போ லவும்
பூரிக்கு மினியகா வேரிக்கு நிகரென்று
போதுவாய்க் கால்போ லவும்
புகல்சிப்பி முத்துக்கு நிகராப் பளிங்கைப்
பொருந்தவைத் ததுபோ லவும்
வாரிக்கு முன்வாவி பெருகல்போ லவுமின்சொல்
வாணர்மு னுகந்து புல்லை
வாலகும ரேசர்மேற் சதகம் புகன்றனன்
மனம்பொறுத் தருள் புரிகவே.

நூல்

குமரேசர் மகிமை

இசட்டை யாசிரிய விருத்தம்

பூமிக்கோ ராறுதலை யாய்வந்து சரவணப்
பொய்கைதனில் விளையா டியும்
புனிதற்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும்
போதனைச் சிறையில் வைத்தும்
தேமிக்க வரிகரப் பிரமாதி கட்குஞ்
செகுக்கமுடி யாவ சுரனைத்
தேகங் கிழித்துவடி வேலினு லிருகூறு
செய்தமரர் சிறைத வித்தும்
நேமிக்கு ளன்பரிட ருற்றசம யந்தனி
னினைக்குமுன் வந்து தவியும்
நிதமுமெய்த் துணையாய் விளங்கலா லுலகிலுனை
நிகரான தெய்வ முண்டோ?
மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி
மார்பனே! வள்ளி கணவா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே!

அந்தண ரியல்பு

குறையாத காயத்ரி யாதிசெப மகிமையுங்
கூறுசுரு திப்பெரு மையுங்
கோதிலா வாகமபு ராணத்தின் வளமையுங்
குலவுயா காதி பலவும்
முறையா நடத்தலாற் சகலதீ விணைகளாயு
முளரிபோ லேதகிப் பார்
முதன்மைபெறு சிலைசெம்பு பிருதுவிக ளிற்றெய்வ
மூர்த்தமுண் டாக்கு விப்பார்
நிறையாக நீதிநெறி வழுவார்க ளாகையா
னீண்மழை பொழிந் திடுவதும்
நிலமது செழிப்பது மரசர்செங் கோல்புரியு
நிலையுமா தவர்செய் தவமும்
மறையோர்க ளாலேவி ளங்குமிவ் வுலகத்தின்
மானிடத் தெய்வ மிவர்காண்
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 2

அரச ரியல்பு

குடிபடையி லபிமான மந்திரா லோசணை
குறிப்பறிதல் சத்ய வசனங்
கொடைநித்த மவரவர்க் கேற்றமரி யாதைபொறை
கோடாத சதுரு பாயம்
படிவிசா ரணையொடுப்ர தானிதள கர்த்தரைப்
பண்பறிந் தேய மைத்தல்
பல்லுயி ரெலாந்தம் முயிர்க்குநிக ரென்றே
பரித்தல்குற் றங்கள் களைதல்
துடிபெறு தமக்குறுதி யானநட் பகமின்மை
சுகுணமொடு கல்வி யறிவு
தோலாத காலமிட மறிதல்விண வலிகண்டு
துஷ்டநிக் ரக செளரியம்
வடிவுபெறு செங்கோ னடத்திவரு மரசர்க்கு
வழுவாத முறைமை யிவைகாண்
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே!

வணிக ரியல்பு

கொண்டபடி போலும்விலே பேசிலா பஞ்சிறிது
கூடிவர நயமு ரைப்பார்
கொள்ளுமொரு முதலுக்கு மோசம்வ ராதபடி
குறுகவே செலவு செய்வார்
வண்டப் புரட்டர்தா முறிதந்து பொன்னடகு
வைக்கினுங் கடனீந்தி டார்
மருவுநா ணயமுளோர் கேட்டனுப் புகினுமவர்
வார்த்தையிலெ லாங்கொ டுப்பார்
கண்டெழுது பற்றுவர வினின்மயிர் பிளந்தே
கணக்கிலணு வாகிலும் விடார்
காசுவீ ணிற்செலவி டாருசித மானதிற்
கனதிரவி யங்கள் விடுவார்
மண்டலத் தூடுகன வர்த்தகஞ் செய்கின்ற
வணிகர்க்கு முறைமை யிவைகாண்
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மகிமேவு குமரேச னே! 4

வேளாள ரியல்பு

நல்லதே வாலயம் பூசனை நடப்பது
நாடோறு மழைபொழிவ தும்
நாடிய தபோதனர்கண் மாதவம் புரிவது
நவில்வேத வேதிய ரெலாஞ்
சொல்லரிய யாகாதி கருமங்கள் செய்வதுந்
தொல்புவி செழிக்கு நலமுஞ்
சுபசோ பனங்களுங் கொற்றவர்கள் செங்கோற்
றுலங்குமனு நெறி முறைமையும்
வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகன் கொள்விலையும்
விற்பனையு மதிக புகழும்
மிக்கவதி காரமுந் தொழிலாளர் சீவனமும்
வீரரண சூர வலியும்
வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்
வாழ்வினுல் விளைவ வன்றே?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மகிமேவு குமரேச னே! 5

பிதாக்கள்

தவமதுசெய் தேபெற் றெடுத்தவன் முதற்பிதா
தனைவளர்த் தவனொரு பிதா
தயையாக வித்தையைச் சாற்றினவ னொருபிதா
சாந்தசற் குருவொரு பிதா
அவமறுத் தாள்கின்ற வரசொரு பிதாநல்ல
வாபத்து வேளை தன்னி
லஞ்சலென் றுற்றதுயர் தீர்த்துளோ னொருபிதா
வன்புளமு னேனொரு பிதா
கவளமிடு மனைவியைப் பெற்றுளோ னொருபிதா
கலிதவிர்த் தவனொரு பிதா
காசினியி லிவரைநித் தம்பிதா வென்றுளங்
கருதுவது நீதி யாகும்
மவுலிதனின் மதியரவு புனைவிமல ருதவுசிறு
மதலையென வருகுரு பரா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 6

ஒன்றையொன்று பற்றியிருப்பன

சத்தியந் தவரு திருப்பவ ரிடத்தினில்
சார்ந்துதிரு மாதிருக் குஞ்
சந்ததந் திருமா திருக்கும விடந்தனிற்
றனதுபாக் கியமிருக் கும்
மெய்த்துவரு பாக்கிய மிருக்கும விடந்தனில்
விண்டுவின் கலையிருக் கும்
விண்டுவின் கலைபூண் டிருக்கும விடந்தனில்
மிக்கான தயையிருக் கும்
பத்தியுட னினியதயை யுள்ளவ ரிடந்தனிற்
பகர்தரும மிகவிருக் கும்
பகர்தரும முள்ளவ ரிடந்தனிற் சத்துரு
பலாயனத் திறலிருக் கும்
வைத்திசை மிகுந்ததிற லுள்ளவ ரிடத்தில்வெகு
மன்னுயிர் சிறக்கு மன்றே?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 7

இவர்க்கிவர் தெய்வமெனல்

ஆதுலர்க் கன்னங் கொடுத்தவர்க ளேதெய்வ
மன்பான மாணுக் கருக்
கரியகுரு வேதெய்வ மஞ்சினேர்க் காபத்
தகற்றினே னேதெய்வ மாம்
காதலுறு கற்புடைய மங்கையர் தமக்கெலாம்
கணவனே மிக்க தெய்வங்
காசினியின் மன்னுயிர் தமக்கெலாங் குடிமரபு
காக்குமன் னன்தெய்வ மாம்
ஓதரிய பிள்ளைகட் கன்னதந் தையர்தெய்வ
முயர்சாதி மாந்தர் யார்க்கு
முறவின்முறை யார்தெய்வம் விசுவாச முள்ள
குற்றசிவ பத்தர் தெய்வம் [பேர்க்
மாதையையி னுற்சூத் திரர்க்குமறை யோர்தெய்வம்
வானவர்க்குத் தெய்வ நீ
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 8

இவர்க்கு இதில் நினைவெனல்

ஞானநெறி யாளர்க்கு மோக்ஷத்தி லேநினைவு
நல்லறிவு ளோர் தமக்கு
நாடொறுந் தருமத்தி லேநினைவு மன்னர்க்கு
ராச்சியந் தன்னி னினைவு
ஆனகா முகருக்கு மாதர்மே லேநினைவு
அஞ்சாத திருட ருக்கிங்
கனுதினங் களவிலே நினைவுதன வணிகருக்
காதாய மீது நினைவு
தானமிகு குடியாள ருக்கெலாம் வேளாண்மை
தனினினைவு கற்ப வர்க்குத்
தகுகல்வி மேனினைவு வேசியர்க் கினியபொரு
டருவோர்கண் மீது நினைவு
மானபர னுக்குமரி யாதைமே னினைவெற்கு
மாருதுன் மீது நினைவு
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 9

இன்னவருக்கு இன்னதில்லை யென்னல்

வேசைக்கு நிசமில்லை திருடனுக் குறவில்லை
வேந்தற்கு நன்றி யில்லை
மிடியற்கு விலைமாதர் மீதுவங் கணமில்லை
மிலேச்சற்கு நிறைய தில்லை
ஆசைக்கு வெட்கமில்லை ஞானியா னவனுக்கு
ளகமில்லை மூர்க்கன் றனக்
கன்பில்லை காமிக்கு முறையில்லை குணமிலோற்
கழகில்லை சித்த சுத்தன்
பூசைக்கு நவிலங்க சுத்தியில்லை யாவுமுணர்
புலவனுக் கயலோ ரிலை
புல்லனுக் கென்றுமுசி தானுசித மில்லைவரு
புலையர்க் கிரக்க மில்லை
மாசைத் தவிர்ந்தமதி முகதெய்வ யானைபொடு
வள்ளிக் கிசைந்த வழகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 10

இப்படிப்பட்டவ ரிவரெனல்

நியாயநெறி தவறுமை லுலகபரி பாலன
நடத்துமவ னேயரச னும்
ராசயோ சனைதெரிந் துறுதியா கியசெய்தி
நவிலுமவ னேமந் திரி
நேயமுட னேதன் சரீரத்தை யெண்ணுத
நிர்வாகி யேசூர னும்
நிலைபெறு மிலக்கண மிலக்கிய மறிந்திசொலு
நிபுணகவி யேகவிஞ னும்
ஆயதொரு வாகடந் தாதுவி னிதானமு
மறியுமுதி யோன் வைத்திய
னகமின்றி மெய்யுணர்ந் தைம்புல னொழித்துவிட்
டவனேமெய்ஞ் ஞானி யெனலாம்
மாயவர் சகோதரி மனோன்மணிக் கன்பான
வரபுத்ர வடிவேல வா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 11

விரைந்து அடக்கத் தகுவன இவையெனல்

அக்கினியை வாயமுந்து துர்ச்சனரை வஞ்சமனை
யாளவளர் பயிர்கொள் களையை
யஞ்சா விரோதிகளை யனியாய முடையோரை
யகிர்த்தியப் பெண்க ளார்ப்பைக்
கைக்கிளிய தொழிலாளி யைக்கொண்ட வடிமை
களவுசெய் யுந் திருடரைக் [யைக்
கருதிய விசாரத்தை யடக்கமில் பலிசையைக்
கடிதான கோபந் தனை
மெய்க்கினித லாப்பிணியை யவையுதா சீனத்தை
வினைமூண்டி டுஞ் சண்டையை
விஷமேறு கோரத்தை யன்றடக் குவதலான்
மிஞ்சிவிட லாகாது காண்
மைக்கினிய கண்ணிகுற வள்ளிதெய் வானையை
மணஞ்செய்த பேரழக னே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 12

இவர்க்கிது துரும்பெனல்

தாராள மாகக் கொடுக்குந் தியாகிக
டமக்குநற் பொரு டுரும்பு
தன்னுயிரை யெண்ணுதை சூரனுக் கெதிராளி
தளமெலா மொரு துரும்பு
பேரான பெரியருக் கற்பரது கையினிற்
பிரயோச னந் துரும்பு
பெரிதான மோக்ஷசிந் தனையுள்ள வர்க்கெலாம்
பெண்போக மொரு துரும்பு
தீராத சகலமும் வெறுத்ததுற விக்குவிறல்
சேர்வேந்த னெரு துரும்பு
செய்யகலை நாமகள் கடாக்ஷமுள் ளோர்க்கெலாஞ்
செந்தமிழ்க் கவி துரும்பாம்
வாராரு மணிகொள்தன வள்ளிதெய் வானையை
மணம்புணரும் வடி வேலவா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே. 13

இதனை விளக்குவ தினி வெனல்

பகல்விளக் குவதிரவி நிசிவிளக் குவதுமதி
பார்விளக் குவது மேகம்
பதிவிளக் குவதுபெண் குடிவிளக் குவதரசு
பரிவிளக் குவது வேகம்
இகல்விளக் குவதுவலி நிறைவிளக் குவதுநல
மிசைவிளக் குவது சுதியூ
ரிடம்விளக் குவதுகுடி யுடல்விளக் குவதுண்டி
யினியசொல் விளக்குவ தருள்
புகழ்விளக் குவதுகொடை தவம்விளக் குவதறிவு
பூவிளக் குவது வாசம்
பொருள்விளக் குவதுதிரு முகம்விளக் குவதுநகை
புத்தியை விளக்குவது நூல்
மகம்விளக் குவதுமறை சொல்விளக் குவதுநிசம்
வாவியை விளக்குவது நீர்
மயிலேறி விளையாடு முகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 14

நல்லிடஞ் சேரினுங் கெட்டவை நல்லவை யாகா வெனல்

சிங்கார வனமதி லுதிப்பினுங் காகமது
தீஞ்சொல்புகல் குயிலாகு மோ?
திரையெறியும் வாவியிற் பூத்தாலு மேகொட்டி
செங்கஞ்ச மலராகு மோ?
அங்கான கத்திற் பிறந்தாலு முயலான
தானையின் கன்றுகு மோ?
ஆண்மையா கியநல்ல குடியிற் பிறந்தாலு
மசடர்பெரி யோராவ ரோ?
சங்காடு பாற்கடல் பிறந்தாலு நத்தைதான்
சாலக்கி ராம மாமோ?
தடமேவு கடனீரி லேயுப்பு விளையினுஞ்
சாரசர்க் கரையாகு மோ?
மங்காத செந்தமிழ்க் குறுமுனிக் குபதேசம்
வைத்தமெய்ஞ் ஞான குருவே!
மயிலேறி விளையாடு முகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 15

பலர்க்கும் பயன்படுவன

கொண்டலிற்பொழி மாரியு முதாரசற் குணமுடைய
கோவுமூ ருணியி னீருங்
கூட்டமிடு மம்பலத் துறுத்துவி னீழலுங்
குடியாளர் விவசாய மும்
கண்டவர்க ளெல்லாம் வரும்பெருஞ் சந்தியிற்
கனிபல பழுத்த மரமுங்
கருணையுட னேவைத் திடுந்தணீர்ப் பந்தலும்
காவேரி போலூற்ற மும்
விண்டலத் துறைசந்தி ராதித்த கிரணமும்
வீசுமா ருத சீதமும்
விவேகியெனு நல்லோ ரிடத்திலுறு செல்வமும்
வெகுசனர்க் குபகார மாம்
வண்டிமிர் கடப்பமலர் மாலையணி செங்களப
மார்பனே வடிவேல வா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 16

தாமழியினுந் தங்குண மழியாதவை

தங்கமா னதுதழலி னின்றுருகி மறுகினுந்
தன்னெளி மழுங்கி டாது
சந்தனக் குறடுதான் மெலிந்துதேய்ந் தாலுமே
தன்மணங் குன்றி டாது
பொங்கமிகு சங்குசெந் தழலில்வெந் தாலுமே
பொலிவெண்மை குறைவு ருது
போதவே காய்ந்துநன் பால்குறுகி னலும்
பொருந்துசுவை போய்வி டாது
துங்கமணி சாணையிற் றேய்ந்துவிட் டாலுந்
துலங்குகுண மொழியாது பின்
றொன்மைதரு பெரியோர் மடிந்தாலு மவர்களது
தூயநிறை தவருகு மோ?
மங்களகல் யாணிகுற மங்கைசுர குஞ்சரியை
மருவுதிண் புயவாச னே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 17

நரகில் வீழ்வோர் இன்னவ ரெனல்

மன்னரைச் சமரில்விட் டோடினவர் குருமொழி
மறந்தவர் கொலைப் பாதகர்
மாதா பிதாவைநிந் தித்தவர்கள் பரதார
மருவித் திரிந்த பேர்கள்
அன்னங் கொடுத்தபே ருக்கழிவை யெண்ணிஞே
ரரசடக் கிய வமைச்ச
ராலய மிகழ்ந்தவர்கள் விசுவாச காதக
ரருந்தவர் தமைப்ப ழித்தோர்
முன்னுதவி யாய்ச்செய்த நன்றியை மறந்தவர்
முகஸ்துதி வழக்கு ரைப்போர்
முற்றுசிவ பத்தரை நடுங்கச் சினந்தவர்கண்
முழுதும்பொ யுரைசொல்லு வோர்
மன்னெருவர் வைத்தபொரு ளபகரித் தோரிவர்கண்
மாநரகில் வீழ்வ ரன்ரே?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 18

சரீர சுகத்திற் கேதுவானவைகள்

மாதத் திரண்டுவிசை மாதரைப் புல்குவது
மறுவறு விரோச னந்தான்
வருஷத் திரண்டுவிசை தைலம் தலைக்கிடுதல்
வாரத் திரண்டு விசையாம்
மூதறிவி ஞெடுதனது வயதினுக் கிளையவொரு
மொய்குழ லுடன்சை யோகம்
முற்றுதயிர் காய்ச்சுபா னீர்மோ ருருக்குநெய்
முதிரா வழுக்கை யிளநீர்
சாதத்தி லெவளவா ஞலும் புசித்தபின்
ருகந் தனக்கு வாங்கல்
தயையாக வுண்டபி னுலாவலிவை மேலவர்
சரீரசுக மாமென்பர் காண்
மாதவகு மாரிசா ரங்கத் துதித்தகுற
வள்ளிக் குகந்த சரசா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 19

யார்க்கு மனுபோகம் விடாமை

தேசுபெறு மேருப்ர தக்ஷிணஞ் செய்துமதி
தேகவடு நீங்க வில்லை
திருமாலுறங்கிடுஞ் சேடனுக் குவணன்
செறும்பகை யொழிந்த தில்லை
ஈசன் கழுத்திலுறு பாம்பினுக் கிரைவே
றிலாமலே வாயு வாகு
மினியகண் ணுகிவரு பரிதியா னவனுக்
கிராகுவோ கனவி ரோதி
ஆசிலாப் பெரியோ ரிடத்தினி லடுக்கினு
மமைத்தபடி யன்றி வருமோ?
அவரவர்க ளனுபோக மனுபவித் திடல்வேண்டு
மல்லால் வெறுப்ப தெவரை?
வாசவனு மும்பரணை வரும்விசய சயவென்று
வந்துதொழு தேத்து சரணு!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 20

இதுவின்றி யிது சிறவாதெனல்

குருவிலா வித்தைகூ ரறிவிலா வாணிபங்
குணமிலா மனைவி யாசை
குடிநல மிலாநாடு நீதியில் லாவரசு
குஞ்சரமி லாத வெம்போர்
திருவிலா மெய்த்திறமை பொறையிலா மாதவந்
தியானமில் லாத நிஷ்டை
தீபமில் லாதமனை சோதரமி லாதவுடல்
சேகர மில்லாத சென்னி
உருவிலா மெய்வளமை பசியிலா வுண்டிபுக
லுண்மையில் லாத வசனம்
யோசனையி லாமந்த்ரி தைரியமி லாவீர
முதவியில் லாத நட்பு
மருவிலா வண்ணமலர் பெரியோ ரிலாதசபை
வையத் திருந்தென் பயன்?
மயிலேறி விளையாடு குகனே!புல் வயனீடு
மலைமேவு குமரேச னே!

பகைக்கத் தகாதவ ரிவரெனல்

அரசர்பகை யுந்தவம் புரிதபோ தனர்பகையு
மரியகரு ணீகர் பகையு
மடுத்துக் கெடுப்போர் கொடும்பகையு முட்பகையு
மருளிலாக் கொலைஞர் பகையும்
விரகுமிகு மூரிலுள் ளோருடன் பகையுமிகு
விகடப்ர சங்கி பகையும்
வெகுசனப் பகையுமந் திரவாதி யின்பகையும்
விழைமருத் துவர்கள் பகையும்
உரமருவு கவிவாணர் பகையுமா சான்பகையு
முறவின்முறை யார்கள் பகையு
முற்றதிர வியமுளோர் பகையு மந்திரிபகையு
மொருசிறிது மாகாது காண்
வரநதியின் மதலையென வினியசர வணமிசையில்
வருகருண சிறு குழவியே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 22

பேயெனப்படுவோ ரிவரெனல்

கடனுதவு பேர்வந்து கேட்கும்வே ளையின்முகங்
கடுகடுக் கின்ற பேயுங்
கனமருவு பெரியதனம் வந்தவுட னிறுமாந்து
கண்விழிக் காத பேயும்
அடைவுடன் சத்துருவின் பேச்சைவிசு வாசித்
தகப்பட் டுழன்ற பேயும்
ஆசைமன யாளுக்கு நேசமா யுண்மைமொழி
யானதை யுரைத்த பேயும்
இடரிலா நல்லோர்கள் பெரியோர்க ளுச்சற்று
மெண்ணு துரைத்த பேயும்
இனியபரி தானத்தி லாசைகொண் டொருவற்
கிடுக்கண்செய் திட்ட பேயும்
மடமன யிருக்கப் பரத்தையைப் புணர்பேயும்
வசைபெற்ற பேய்க ளன்றே?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 23

அவ்வவ் வினத்தி லுயர்ந்தவை

தாருவிற் சந்தான நதியினிற் கங்கைவிர
தத்தினிற் சோம வாரந்
தகைபெறு நிலத்தினிற் காஸ்மீர கண்டந்
தலத்திற் சிதம்பரத் தலம்
சீருலவு ரிஷிகளில் வசிட்டர்பசு விற்காம
தேனுமுனி வரிஞ ரதன்
செல்வநவ மணிகளிற் றிகழ்பதும ராகமணி
தேமலரி லம்போ ருகம்
பேருலவு கற்பினி லருந்ததி கதித்திடு
பெலத்தின்மா ருதர் யானையிற்
பேசிலை ராவதந் தமிழினி லகத்தியம்
பிரணவம் மந்திரத் தில்
வாரிதியி லேதிருப் பாற்கடல் குவட்டினின்
மகாமேரு வாகு மன்றே?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 24

அவரவர்க்குப் பெலமாவன

அந்தணர்க் குயர்வேத மேபெலங் கொற்றவர்க்
கரியசௌ ரியமே பெல
மானவணி கர்க்குநிதி யேபெலஞ் சூத்திரர்க்
காயினே ருழவே பெலம்
மந்திரிக் குச்சது ருபாயமே பெலநீதி
மானுக்கு நடுவே பெலம்
மாதவர்க் குத்தவசு பெலமடவி யர்க்குநிறை
மானமிகு கற்பே பெலம்
தந்திர மிகுத்தகன சேவகர் தமக்கெலாஞ்
சாமிகா ரியமே பெலஞ்
சான்றவர்க் குப்பொறுமை யேபெலம் புலவோர்
தமக்குநிறை கல்வி பெலமாம்
வந்தணை செயும்பூசை செய்பவர்க் கன்புபெலம்
வாலவடி வான வேலா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 25

இருந்தும் பயன்படாதவை

தருணத்தி லுதவிசெய் யாதநட் பாளர்பின்
தந்தென தராம லென்ன?
தராதர மறிந்துமுறை செய்யாத மன்னரைச்
சார்ந்தென்ன நீங்கி லென்ன?
பெருமையுட ஞண்மையில் லாதவொரு பிள்ளையைப்
பெற்றெனபெ ரும லென்ன?
பிரியமா யுள்ளன்பி லாதவர்க ணேசம்
பிடித்தெனவி டுக்கி லென்ன?
தெருளாக மானமில் லாததொரு சீவனஞ்
செய்தெனசெ யாம லென்ன?
தேகியென வருபவர்க் கீயாத செல்வஞ்
சிறந்தெனமு றிந்து மென்ன?
மருவிளமை தன்னிலில் லாதகன் னிகைபின்பு
வந்தெனவ ராம லென்ன?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே? 26

உபகாரமில்லாதவை

கடனீர் மிகுந்தென்ன வொதிதான் பெருத்தென்ன
காட்டிலவு மலரி லென்ன?
கருவேல் பருத்தென்ன நாய்ப்பால் சுரந்தென்ன
கானில்மழை பெய்து மென்ன?
அடர்கழுதை லத்திநில மெல்லாங் குவிந்தென்ன
அரியகுண மில்லாத பெண்
ணழகா யிருந்தென்ன வாஸ்தான கோழைபல
அரியநூ லோதி யென்ன?
திடமினிய பூதம்வெகு பொன்காத் திருந்தென்ன
திறன்மிகுங் கரடி மயிர்தான்
செறிவாகி நீண்டென்ன வஸ்த்ரபூ ஷணமெலாஞ்
சித்திரத் துற்று மென்ன?
மடமிகுந் தெவருக்கு முபகார மில்லாத
வம்பர்வாழ் வுக்கு நிகராம்
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 27

பத ரெனப்படுவோர்

தன்பெருமை சொல்லியே தன்னைப் புகழ்ந்தபதர்
சமர்கண் டொளிக்கும் பதர்
தக்கபெரி யோர்புத்தி கேளாத பதர்தோழர்
தம்மொடு சலிக்கும் பதர்
பின்புகா ணுவிடந் தன்னிலே புறணிபல
பேசிக் களிக்கும் பதர்
பெற்றதாய் தந்தை நுயர் படவாழ்ந் திருந்தபதர்
பெண்புத்தி கேட்கும் பதர்
பொன்பண மிருக்கவே போயிரக் கின்றபதர்
பொய்ச்சாட்சி சொல்லும்பதர்
புவியோர் நடத்தையை யிகழ்ந்தபதர் தன்மனை வி
புணர்தல்வெளி யாக்கும் பதர்
மன்புணரும் வேசையுடன் விபசரிக் கின்றபதர்
மனிதரிற் பதரென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 28

தமக்குரியவற்றைக் காணுவிடிற் றுயரப்படுபவை

இரவிகா ணுவனச மாரிகா ணுதபயி
ரிந்துகா ணுத குழுத
மேந்தல்கா ணுநாடு கரைகள்கா ணுவோட
மின்சொல்கா ணுவி ருந்து
சுர்பிகா ணுதகன் றன்னைகா ணுமதலை
சோலைகா ணுத வண்டு
தோழர்கா ணுநேயர் கலைகள்கா ணுதமான்
சோடுகா ணுத பேடு
குரவர்கா ணுதசபை தியாகிகா ணுவறிஞர்
கொழுநர்கா ணுத பெண்கள்
கொண்டல்கா ணுதமயில் சிறுவர்கா ணுவாழ்வு
கோடைகா ணுத குயில்கள்
வரவுகா ணுதசெல விவையெலாம் புவிமீதில்
வாழ்வுகா ணுவிளமை யாம்
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 29

வியாதிக்கு மூலங்கள்

கல்லினுன் மயிரினுன் மீதூண் விரும்பலாற்
கருதிய விசாரத்தி னுற்
கடுவழி நடக்கையான் மலசல மடக்கையாற்
கனிபழங் கறியண்ண லால்
நெல்லினு லுமியினு லுண்டபின் மூழ்கலா
னித்திரைக ளில்லாமை யா
னீர்ப்பகையி னுற்பனிக் காற்றிலுட னேதலா
னீடுசரு கிலையூற லால்
மெல்லிநல் லார்கலவி யதிகமுள் விரும்பலால்
வீழ்மலஞ் சிக்குகையி னுன்
மிகுசுமை யெடுத்தலா லிளவெயிற் காய்தலான்
மெய்வாட வேலை செயலால்
வல்லிரவி லேதயிர்கள் சருகாதி யுண்ணலால்
வன்பிணிக் கிடமென்பர் காண்
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 30

செத்தும் சாகாதவர்

அனைவர்க்கு முபகார மாம்வாவி கூவமுண்
டாக்கினோர் நீதி மன்ன
ரழியாத தேவால யங்கட்டி வைத்துளோ
ரறங்கள் செய்த பெரியோர்
தனையொப்பி லாப்புதல்வ னைப்பெற்ற பேர்பொருது
சமர்வென்ற சுத்த வீரர்
தரணிதனி னிலைநிற்க வெந்நாளு மாருத
தருமங்கள் செய்த பேர்கள்
கனவித்தை கொண்டவர்க ளோயாத கொடையாளர்
காவியஞ் செய்த கவிஞர்
கற்பினின் மிகுந்தவொரு பத்தினி மடந்தையைக்
கடிமணஞ் செய்தோர்க ளிம்
மனிதர்கள் சரீரங்கள் போகினுஞ் சாகாத
மனிதரிவ ராவ ரன்றே?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 31

சாகாதிருந்துஞ் செத்தவர்

மாருத வறுமையோர் தீராத பிணியாளர்
வருவேட் டகத்தி லுண்போர்
மனவியை வழங்கியே சீவனஞ் செய்குவோர்
மன்னுமொரு ராச் சபையில்
தூருக நிந்தைசெய் துய்குவோர் சிவிகைகள்
சுமந்தே பிழைக்கின்ற பேர்
தொலையா விசாரத் தழுந்துவோர் வார்த்தையிற்
சோர்வுபட லுற்ற பெரியோர்
வீருக மனையா டனக்கஞ்சி வந்திடு
விருந்தினை யொழித்து விடுவோர்
வீம்புடன் செல்லாத விவகார மதுகொண்டு
மிக்கசபை யேறு மசடர்
மாருக விவரெலா முயிருடன் செத்தசவ
மாகியொளி மாய்வர் கண்டாய்
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 32

சிறிதும் பயன்படாதவர்

பதராகி லுங்கன விபூதிவிளை விக்கும்
பழமைபெறு சுவராகி லும்
பலருக்கு மறைவா குமாடுரிஞ் சிடுமலம்
பன்றிகட் குபயோக மாம்
கதமிகு கடாவென்னி லுழுதுபுவி காக்கும்வன்
கழுதையும் பொதி சுமக்குங்
கல்லெணிற் றேவர்களு மாலயமு மாம்பெருங்
கான்புற்று மரவ மனையாம்
இதமிலாச் சவமாகி லுஞ்சிலர்க் குதவிசெயு
மிழிவுறு குரங் காயினு
மிரக்கப் பிடித்தவர்க் குதவிசெயும் வாருகோ
லேற்றமா ளிகை விளக்கும்
மதமது மிகும்பரம லோபரா லுபகார
மற்றொருவ ருக்கு முண்டோ?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 33

உலுத்த நியல்பு

திரவியங் காக்குமொரு பூதங்கள் போற்பணந்
தேடிப் புதைத்து வைப்பார்
சீலநல மாகவுங் கட்டார்க ணல்லமுது
செய்துணு றமுஞ் செய்யார்
புரவலர்செய் தண்டந் தனக்கும்வலு வாகப்
புகுந்திருட ருக்கு மீவார்
புலவரைக் கண்டவுட னேடிப் பதுங்குவார்
புராணிகர்க் கொன்று முதவார்
விரகறிந் தேபிள்ளை சோறுகறி தினுமளவில்
வெகுபணஞ் செலவாக லால்
விளையாடு கிழவனும் பிள்ளையே பிள்ளையென
மிகுசெட்டி சொன்ன கதைபோல்
வரவுபார்க் கின்றதே யல்லாது லோபியர்கண்
மற்றெருவருக் கீவரோ?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 34

திரு வாழிடங்கள்

கடவா ரணத்திலுங் கங்கா சலத்திலுங்
கமலா சனந்தன்னி லுங்
காகுத்தன் மார்பிலுங் கொற்றவ ரிடத்திலுங்
காலியின் கூட்டத்தி லும்
நடமாடு பயிரிலும் பொய்வார்த்தை சொல்லாத
நல்லோ ரிடந்தன்னி லும்
நல்லசுப லக்ஷண மிகுந்தமனை தன்னிலும்
ரணசுத்த வீரர் பாலும்
அடர்கே தனத்திலுஞ் சுயம்வரந் தன்னிலு
மருந்துளசி வில்வத் திலு
மலர்தரு கடப்பமலர் தனிலுமிர தத்திலு
மதிககுண மான ரூப
மடவா ரிடத்திலுங் குடிகொண்டு திருமாது
மாரு திருப்ப ளன்றே?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 35

மூதேவி வாழிடங்கள்

சோரமங் கையர்கணிச முரையார்கள் வாயினிற்
சூதகப் பெண்க ணிழலில்
சூகையிற் சூழ்தலுறு புகையிற் களேபரஞ்
சுடுபுகையி னீசர் நிழலில்
காரிரவி லரசு நிழ லிற்கடா நிழலினெடு
கருதிய விளக்கு நிழலில்
காமுகரி னிஷ்டையில் லாதவர் முகத்திற்
கடுஞ்சினத் தோர் சபையினில்
ஈரமில் லாக்களர் நிலத்தினி லிராத்தயிரி
லிழியுமது பானர் பாலி
லிலேவேல் விளா நிழலி னிதமழுக் கடைமனையி
லேனநா யசகரத் தூள்
வாரிய முறத்தூள் பெருக்குதூண் மூதேவி
மாரு திருப்ப லென்பார்
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 36

திருத்தினுந் திருந்தாதவை

கட்டியெருவிட்டுச் செழுந்தேனை வார்க்கினுங்
காஞ்சிரங் கைப்பு விடுமோ?
கழுதையைக் கட்டிவைத் தோமம் வளர்க்கினுங்
கதிபெறுங் குதிரை யாமோ?
குட்டியர வுக்கமு தளித்தே வளர்க்கினுங்
கொடுவிட மலாது தருமோ?
குக்கனெடு வாலுக்கு மட்டையைக் கட்டினுங்
கோணு மலே நிமிருமோ?
ஒட்டியே குறுணிமை யிட்டாலு நயமிலா
யோனிகண் ணுகி விடுமோ?
வுலவுகன கர்ப்பூர வாடைபல கூட்டினு
முள்ளியின் குணமாறு மோ?
மட்டிகட் காயிரம் புத்திசொன் னுலுமதின்
மார்க்கமரி யாதை வருமோ
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 37

குறிப்பறிதல்

மனதிற் கடும்பகை முகத்தினு லறியலா
மாநிலப் பூடுக ளெலாம்
மழையினு லறியலா நல்லோர்பொ லார்தமை
மக்களா லறிய லாகும்
கனமருவு சூரரைச் சமரினு லறியலாங்
கற்றவொரு வித்து வாணிக்
கல்விப்ர சங்கத்தி னுலறிய லாங்குணங்
கூனநடையி னுலறிய லாம்
தனதக மடுத்தது பளிங்கினு லறியலாஞ்
சாதிசொல் லாலறிய லாந்
தருநீதி கேள்வியா லறியலாம் பிணிகளூத்
தாதுக்க ளாலறிய லாம்
வனசவிக சிதவதன பரிபூர ணானந்த
வாலவடி வான வேலா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே. 38

குண மாருமை

குணமிலாத் துஷ்டமிரு கங்களையு நயகுணங்
கொண்டுட் படுத்தி விடலாங்
கொடியபல விடநோய்க ளியாவுமௌ ஷதமது
கொடுத்துத் திருப்பி விடலாம்
உணர்விலாப் பிரமராட் சசிமுதற் பேய்களை
யுகந்துகூத் தாட்டி விடலாம்
உபாயத்தி னுற்பெரும் பறவைக்கு நற்புத்தி
யுண்டாக்க லாமுயிர் பெறப்
பிணமதை யெழுப்பலா மக்கினி சுடாமற்
பெரும்புன லெனச் செய்யலாம்
பிணியையு மகற்றலாங் காலதூ துவரையும்
பின்புவரு கென்று சொலலாம்
மணலையுங் கயிறுய்த் திரிக்கலாங் கயவர்குண
மட்டுந் திருப்ப வசமோ?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 39

இத் தீக்குணத்தோ ரிவ்விலங்கு போல்வ ரெனல்

தான்பிடித் ததுபிடிப் பென்றுமே லவர்புத்தி
தள்ளிச்செய் வோர் குரங்கு
சபையிற் குறிப்பறிய மாட்டாம னின்றவர்
தாம்பய னிலாத மரமாம்
வீம்பினு லெளியவரை யெதிர்பண்ணி நிற்குமொரு
வெறியர்கு ரை ஞமலி யாவார்
மிகநாடி வருவோர் முகம்பார்த் திடாலோபர்
மேன்மையில் லாத கழுதை
சோம்பலொடு பெரியோர் சபைக்குட் படுத்திடுந்
தூங்கலே சண்டிக் கடா
சூதுட னடுத்தோர்க் கிடுக்கணே செய்திடுந்
துஷ்டனே கொட்டு தேளாம்
மாம்பழந் தனைவேண்டி யந்நாளி லீசனை
வலமாக வந்த முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 40

அற்பருக்கு வாழ்வுவரிற் குணம் வேறுபடு மெனல்

அற்பர்க்கு வாழ்வுசற் றதிகமா ஞல்விழிக்
கியாவருரு வுந்தோன் றிடா
தண்டிநின் றேநல்ல வார்த்தைக ளுரைத்தாலு
மவர்செவிக் கேறி டாது
முற்பக்ஷ மானபேர் வருகினும் வாருமென
மொழியவும் வாய் வராது
மோதியே வாதப் பிடிப்புவந் ததுபோல
முன்காலை யகல வைப்பார்
விற்பன மிகுத்தபெரி யோர்செய்தி சொன்னலும்
வெடுவெடுத் தேசி நிற்பார்
விருதா மகத்துவப் பேயது சவுக்கடி
விழும்போது தீரு மென்பார்
மற்புயந் தனினீப மாலையணி லோலனே!
மார்பனே! வடிவேல வா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 41

இன்ன தீங்குள்ளோர் இன்ன கிரகம் போல்வ ரெனல்

அன்னை தந் தையர்புத்தி கேளாத பிள்ளையோ
வஷ்டமச் சனியாகு வா
னஞ்சாம லெதிர்பேசி நிற்குமனை யாள்வாக்கி
லங்கார கச்சன்ம மாம்
தன்னைமிஞ் சிச்சொன்ன வார்த்தைகே ளாவடிமை
சந்திராஷ் டகமென்ன லாந்
தன்பங்கு தாவென்று சபையேறு தம்பியோ
சார்ந்தசன் மச்சூரி யன்
நன்னயமி லாதவஞ் சனைசெய்த தமையன்மூன்
ருமிடத் தில்வியா ழம்
நாடொறும் விரோதமிடு கொண்டோன் கொடுத்து
ராகுகே துக்க ளெனலாம் [ளோன்
மன்னயனை யன்றுசிறை தனிலிட்டு நம்பற்கு
மந்திர முரைத்த குருவே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 42

நல்லினஞ் சேர் பயன்

சந்தன விருக்ஷத்தை யண்டிநிற் கின்றபல
தருவுமவ் வாசனை தருந்
தங்கமக மேருவை யடுத்திடுங் காக்கையுஞ்
சாயல்பொன் மயமே தரும்
பந்தமிகு பாலுடன் விளாவிய தணீரெலாம்
பால்போ னிறங்கொடுக் கும்
படிகமணி கட்குளே நிற்கின்ற வடமுமப்
படியே குணங்கொடுக் கும்
அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடி
லடுத்ததும் பசுமை யாகும்
ஆனபெரி யோர்களொடு சகவாச மதுசெய்யி
லவர்கள்குணம் வருமென்பர் காண்
மந்தர நெடுங்கிரியின் முன்கடல் கடைந்தவரி
மருக!மெய்ஞ் ஞான முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 43

வலியோரையும் ஊழ் விடாதெனல்

அன்றுமுடி சூடுவ திருக்கரகு ராமன்மு
னருங்கா டுறைந்த தென்ன?
அண்டரெல் லாமமிர்த முண்டிடப் பரமனுக்
காலம் லபித்த தென்ன?
வென்றிவரு தேவர்சிறை மீட்டநீ களவில்வே
டிச்சியைச் சேர்ந்த தென்ன?
மேதினி படைக்குமய னுக்கொரு சிரம்போகி
வெஞ்சிறையி லுற்ற தென்ன?
என்றுமொரு பொய்சொலா மன்னவன் விலைபோன
தென்னகாண் வல்லமையி ஞ
லெண்ணத்தி ஞலொன்றும் வாராது பரமசிவ
னெத்தனப் படிமுடியு மாம்
மன்றுதனி னடனமிடு கங்கா தரன்பெற்ற
வரபுத்ர வடிவேல வா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 44

பெரியோர் வாக்கிய பரிபாலனஞ் செய்தோர்

தந்தைதாய் வாக்யபரி பாலனஞ் செய்தோர்
தசரத குமார ராமன்
தமையனருள் வாக்யபரி பாலனஞ் செய்தோர்கள்
தருமனுக் கிளைய நால்வர்
சிந்தையி லுணர்ந்துகுரு வாக்யபரி பாலனஞ்
செய்தவ னரிச்சந் திரன்
தேகியென் றேர்க்கிலை யெனுவாக்ய பாலனஞ்
செய்தவன் ருன கன்னன்
நிந்தைதவிர் வாக்யபரி பாலனஞ் செய்தவ
னீள்பெல் மிகுத்த வநுமான்
நிறையுடன் பத்தாவின் வாக்யபரி பாலன
நிலத்தினிண ளாயினி செய்தாள்
மந்தைவழி கோயில்குள முங்குலவு தும்பிமுகன்
மகிழ்தர வுகந்த துணைவா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 45

முயற்சியின் மிக்கது ஊழெனல்

வங்காள மேறுகினும் வாருகோ லொருகாசு
மட்டன்றி யதிக மாமோ?
வானேறி யுயரப் பறந்தாலு மூர்க்குருவி
வண்ணப் பருந்தாகு மோ?
கங்கா சலந்தன்னின் மூழ்கினும் பேய்ச்சுரைக்
காய்நல்ல சுரையாகு மோ?
கடலுக்கு ணுழியை யமுக்கியே மொண்டிடிற்
காணுமோ நாணுழி தான்
ஐங்காத மோடினுந் தன்வினைக டன்னேடே
யடையாம னீங்கி விடுமோ?
யாரிடஞ் சென்ருலும் வெகுதொல்லைகள் சுற்றினு
மமைத்தபடி யன்றி வருமோ?
மங்காத செந்தமிழ்க் கொண்டுநக் கீரர்க்கு
வந்ததுயர் தீர்த்த முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 46

இடும்பா லழிவு நேருமெனல்

சூரபத் மன்பெலமு மிராவணன் றீரமுந்
துடுக்கான கஞ்சன் வலியுந்
துடியான விரணியன் வரப்ரசா தங்களுந்
தொலையாத வாலி திடமும்
பாரமிகு துரியோத னுதிநூற் றுவரது
பராக்கிரம மது கைடவர்
பாரிப்பு மாபெலித ணுண்மையுஞ் சோமுகன்
பாங்கிலுறு வல்லமைக ளும்
ஏரணவு கீசகன் கனதையுந் திரிபுர
ரெண்ணமுந் தக்க னெழிலு
மிவர்களது சம்பத்து நின்றவோ? வவரவ
ரிடும்பா லழிந்த வன்ரே?
மாரனைக் கண்ணு லெரித்தருள் சிவன்றந்த
வரபுத்ர வடிவேல வா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 47

நல்லோர் நட்பு நிலை

மாமதியின் முயலான தருதேய் வுழித்தேய்ந்து
வளருமப் போது வளரும்
வாவிதனி லாம்பல்கொட் டிகளத்னி னீர்வற்றின்
வற்றிடும் பெருகி லுயரும்
பூமருவு புதல்பூடு கோடையிற் றீய்ந்திடும்
பொங்குகா லந்த ழைக்கும்
புண்டரிக மிரவிபோ மளவிற் குவிந்திடும்
போதுதய மாகின் மலரும்
தேமுட லிளைக்கிலுயிர் கூடவு மிளைக்குமது
தேறிலுயி ருஞ்சிறக் குஞ்
சேர்ந்தோர்க் கிடுக்கணது வந்தாலு நல்லோர்
சிநேகமிப் படியாகு மே
வாமனசொ ரூபமத யாணைமுக னுக்கிளைய
வாலகுரு பரவேல வா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 48

கைப்பலனுமவை

பருவத்தி லேபெற்ற சேயும் புரட்டாசி
பாதிசம் பாநடுகை யும்
பலமினிய வாடிதனி லாணவால் போலவே
பயிர்கொண்டு வரு கரும்பும்
கருணையொடு மிக்கநா ணயமுளோர் கையினிற்
கடனிட்டு வைத்த முதலுங்
காலமது நேரிற் றனக்குறுதி யாகமுன்
கற்றுணர்ந் திடுகல்வி யும்
விருதரச ரைக்கண்டு பழகிய சிநேகமும்
விவேகிகட் குபகார மும்
வீணல்ல விவையெலாங் கைப்பலன தாகவபி
விர்த்தியாய் வருமென்பர் காண்
மருவுலா வியநீப மாலையுந் தண்டரள
மாலையும் புனைமார்ப னே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 49

சமயத்துக் குதவாதவை

கல்லாது புத்தகந் தனிலெழுதி வீட்டினிற்
கட்டிவைத் திடு வித்தையுங்
காலங்க ளுக்குதவ வேண்டுமென் றன்னியன்
கையிற் கொடுத்த பொருளும்
இல்லாஊ நீங்கியே பிறர்பாரி சதமென்
றிருக்கின்ற குடிவாழ்க் கையும்
ஏறுமா றுகவே தேசாந் தரம்போ
யிருக்கின்ற பிள்ளூ வாழ்வும்
சொல்லான தொன்றுமவர் மனமான தொன்றுமாச்
சொல்லுவஞ் சகர் நேசமுஞ்
சுகியமா யுண்டென் றிருப்பதெல் லாந்தருண
துரிதத்தி லுதவாது காண்
வல்லான கொங்கைமட மாதுதெய் வானகுற
வள்ளிபங் காள நேயா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 50

திரும்பமாட்டாதவை

ஆடரவின் வாயினி லகப்பட்ட தவலையு
மானவா யிற் கரும்பு
மரிதான கப்பலிற் பாய்மரக் காற்றினி
லகப்பட்ட மெலி காக்கையும்
நாடறிய வேதாரை வார்த்துக் கொடுத்தது
நமன்கைக்கு ளான வுயிரும்
நலமாக வேயூண கடந்திட்ட வெள்ளமு
நாய்வேட்டை பட்ட முசலும்
தேடியுண் பார்கைக்கு ளான்பல வுடைமையுந்
தீவாதை யான மனையுந்
திரள்கொடுங் கோலரசர் கைக்கேறு பொருளுந்
திரும்பிவா ராவென்பர் காண்
மாடமிசை யன்னக் கொடித்திரள்கொள் சோணாடு
வாழவந் திடுமுதல் வனே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 51

இதினு மிது நன்றென்பவை

கடுகடுத் தாயிரஞ் செய்குவதி லின்சொலாற்
களிகொண் டழைத்த னன்று
கனவேள்வி யாயிரஞ் செய்வதிற் பொய்யுரை
கருத்தொடு சொலாமை நன்று
வெடுவெடுக் கின்றவோ ரவிவேகி யுறவினில்
விவேகியொடு பகைமை நன்று
வெகுமதிக ளாயிரஞ் செய்வதி னைரைக்காசு
வேஷாகண் டுதவ னன்று
சடுதியிற் பக்குவஞ் சொல்லுங் கொடைக்கிங்கு
சற்றுமிலை யென்ன னன்று
சம்பத் துடன்பிணியின் மெலிகுவதி னேயற்ற
தாரித்தி ரியநன்று காண்
மடுவினிற் கரியோல மென்னவந் தருள்செய்த
மான்மருக ஞான முதல்வா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 52

பல கூடினு மொன்றிற் கீடாகாதவை

தாரகைக ளொருகோடி வானத்திருக்கினுஞ்
சந்திரற் கீடாகு மோ?
தாருவிற் கொடிதொனிகள் பலகூடி னுலுமொரு
தம்பட்ட வோசை யாமோ?
கோரமிகு பன்றியின் குட்டிபல கூடினெரு
குஞ்சரக் கன்றுகு மோ?
கொட்டிமலர் வாவியிற் பலகூடி னுலுமொரு
கோகனக மலராகு மோ?
பாரமிகு மாமலைகள் பலகூடி னுலுமொரு
பைம்பொன்மக மேரு வாமோ?
பலனிலாப் பிள்ளைக ளனேகம் பிறந்தும்விற்
பனனெருவ னுக்கு நிகரோ?
வாரணக் கொடியொரு கரத்திற் பிடித்தொன்றில்
வடிவே லணிந்த முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே!

அருமை யறிதல்

மணமாலை யருமையைப் பூண்பவர்க ளேயறிவர்
மட்டிக் குரங் கறியுமோ?
மக்களுடை யருமையைப் பெற்றவர்க ளேயறிவர்
மலடிதா னறிவ துண்டோ?
கணவருடை யருமையைக் கற்பான மாதறிவள்
கணிகையா னவ ளறிவளோ?
கருதுமொரு சந்தியின் பாண்டமென் பதைவருங்
கள்வான நாயறியு மோ?
குணமான கிளியருமை தினைவளர்த் தவரறிவர்
கொடியபூ னூயு மறியு மோ?
குலவுபெரி யோரருமை நல்லோர்க ளேயறிவர்
கொடுமூடர் தாமறிவ ரோ?
மணவாள நீயென்று குறவள்ளி பின்றொட ர
வனமூடு தழுவு மழகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 54

தீச்சார்பாற் பயன் படாதவை

மடுவினிற் கஞ்சமல ருண்டொருவ ரணுகாமல்
வன்முதலை யங்கிருக் கும்
மலையினிற் றேனுண்டு சென்றொருவர் கிட்டாமன்
மருவியதில் வண்டிருக் கும்
நெடுமைதிகழ் தாழைமல ருண்டொருவ ரணுகாம
னீங்காத முள்ளிருக் கும்
நீடுபல சந்தன விருக்ஷமுண் டணுகாது
நீளரவு சூழ்ந்திருக் கும்
குடிமல்கி வாழ்கின்ற வீட்டினிற் செல்லாது
குரைநாய்க ளங்கிருக் குங்
கொடுக்குந்தி யாகியுண் டிடையூறு பேசுங்
கொடும்பாவி யுண்டு கண்டாய்
வடுவையுங் கடுவையும் பொருவுமிரு கண்ணிகுற
வள்ளிக் குகந்த கணவா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 55

வேசைய ரிழிவு

பூவில்வே சிகள்வீடு சந்தைப் பெரும்பேட்டை
புனமலர் படுக்கை வீடு
பொன்வாசல் கட்டில்பொறு வம்பல முடுத்ததுகில்
பொருவில்சூ தாடு சாலை
மேவலா கியகொங்கை கையாடு திரள்பந்து
விழிமனங் கவர்தூண்டி லாம்
மிக்கமொழி நீர்மே லெழுத்ததிக மோகமொரு
மின்னலிரு தொடைசர்ப்ப மாம்
ஆவலா கியவல்கு லோதண்டம் வாங்குமிட
மதிகபட மாமனது கல்
லமிர்தவா யிதழ்சித்ர சாலையெச் சிற்குழி
யவர்க்காசை வைக்க லாமோ?
மாவடிவு கொண்டே யொளித்தவொரு சூரனை
வதைத்தவடி வேலா யுதா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 56

கலிகாலக் கொடுமை

தாய்புத்தி சொன்னுன் மறுத்திடுங் காலமுயர்
தந்தையைச் சீறு காலஞ்
சற்குருவை நிந்தைசெய் காலமெய்க் கடவுளைச்
சற்றுமெண் ணுத காலம்
பேய்தெய்வ மென்றுப சரித்திடுங் காலம்
புரட்டருக் கேற்ற காலம்
பெண்டாட்டி வையினுங் கேட்கின்ற காலநற்
பெரியோர்சொற்கே ளாத காலம்
தேய்வுடன் பெரியவன் சிறுமையுறு காலமிகு
சிறியவன் பெருகு காலஞ்
செருவில்விட் டோடினோர் வரிசைபெறு காலம்வ
செப்புவோர்க் குதவு காலம் [சை
வாய்மதம் பேசிவிடு மனியாய காரர்க்கு
வாய்த்தகலி கால மையா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 57

அவரவர்க் குரியவை

கல்வியொடு கனமுறச் சபையின்மேல் வட்டமாக்
காணவைப் போன் பிதாவாங்
கற்றுணர்ந் தேதனது புகழாற் பிதாவைப்ர
காசஞ்செய் வோன் புத்திரன்
செல்வமிகு கணவனே தெய்வமென் றனுதினஞ்
சிந்தைசெய் பவள்மனைவி யாஞ்
சிநேகிதன் போலவே யன்புவைத் துண்மைமொழி
செப்புமவ னேசோத ரன்
தொல்வள மிருந்தநூற் கரைதெரிந் துறுதிமொழி
சொல்லுமவ னேகுரவ னஞ்
சொன்னநெறி தவருமல் வழிபாடு செய்துவரு
துய்யனே யினிய சீஷன்
வல்விரக மிஞ்சுகர குஞ்சரி யுடன்குறவர்
வஞ்சியை மணந்த கணவா !
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 58

சிறுமையிற் பெருமை

சேற்றிற் பிறந்திடுங் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக் குந்
திகழ்சிப்பி யுடலிற் சனித்தமுத் தரசரது
தேகத்தின் மேலிருக் கும்
போற்றியிடு பூச்சியின் வாயினூல் பட்டென்று
பூசைக்கு நேச மாகும்
புகலரிய வண்டெச்சி லானதேன் றேவர்கொள்
புனிதவபி டேக மாகும்
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுழு கனைவர்க்கு மாஞ்
சாதியீ னத்திற் பிறக்கினுங் கற்றோர்கள்
சபையின்மேல் வட்ட மன்றே ?
மாற்றிச் சுரத்தினை விபூதியா லுடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞான முதலே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 59

செய்யத் தகாதவை

தானஞ் சரித்துவரு தெய்வமிது வென்றுபொய்ச்
சத்தியஞ் செயில்வி டாது
தன்வீட்டி லேற்றிய விளக்கென்று முத்தந்
தனைக்கொடுத் தாலது சுடும்
ஆனலு மேலவர்கண் மெத்தவுந் தனதென்
றடாதது செயிற் கெடுதியா
மானதான் மெத்தப் பழக்கமா னலுஞ்செ
யாதுசெய் தாறகொன் றிடும்
தீனன தினிதென்று மீதூண் விரும்பினுற்
றேகபீ டைகளே தருஞ்
செகராசர் தனதென்ன வேலாத காரியஞ்
செய்தான் மனம்பொருர் காண்
வானடு புகழுமொரு சோணாடு தழைய்விவண்
வந்தவ தரித்த முதலே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 60

நடுவு நிலைமை

வந்தவிவ காரத்தி லினியபரி தானங்கள்
வருமென்று நேச ரென்றும்
வன்பகைஞ ரென்றுமய லோரென்று மிக்கதன
வானென்று மேழை யென்றும்
இந்தவகை யைக்குறித் தொருபக்ஷ பாதமோ
ரெள்ளள வுரைத்தி டாம
லெண்ணமுட னேலிகித புத்தியொடு சாக்ஷிக்கு
மேற்கச்ச பாச மதமாம்
முந்தவிரு தலையுஞ் சமன்செய்த கோல்போன்
மொழிந்திடிற் றர்மமது காண்
மூனவீம னுடல்பாதி மிருகந் தனக்கென்று
முன்றருமர் சொன்ன தலவோ?
மைந்தனென வன்றுமை முலைப்பால் கொடுத்திட
வளர்ந்தருள் குழந்தை வடிவே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 61

பக்ஷபாதத்தால் வரும் பயன்

ஓரவிவ காரமா வந்தவர் முகம்பார்த்
துரைப்பேர் மலைக்குரங் கே
யுயர்வெள் ளெருக்குடன் முளைத்துவிடு மவரில்ல
முறையுமூர் பாழ்நத்த மாம்
தாரணியி லிவர்கள்கிளை நெல்லியிலை போலுகுஞ்
சமானமா வெழுபிறப் புஞ்
சந்ததியி லாதுழல்வ ரவர்முகத் தினின்மூத்த
தையலே குடியிருப் பாள்
பாரமிவ ரென்றுபுவி மங்கையு நடுங்குவாள்
பறித்ததுர் மரண மாவார்
பகர்முடிவி லேரவுர வாதிநர கத்தனு
பவிப்பரெப் போது மென்பர்
வாரமுட னருணகிரி நாதருக் கனுபூதி
வைத்தெழுதி யருள் குருபரா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 62

ஒன்றில்லாமையாற் சிறவாதவை

கொங்கையில் லாதவட் கெத்தனை பணியுடைமை
கூடினும் பெண்மை யில்லை
கூறுநிறை கல்வியில் லாமலெத் தனைகவிதை
கூறினும் புலமை யில்லை
சங்கையில் லாதவர்க் கெத்தனை விவேகந்
தரிக்கினுங் கனதை யில்லை
சட்சுவை பதார்த்தவகை யுற்றுலு நெய்யிலாச்
சாதமும் திர்த்தி யில்லை
பங்கய மிலாமலெத் தனைமலர்கள் வாவியிற்
பாரித்து மேன்மை யில்லை
பத்தியில் லாமல்வெகு நியமமா யர்ச்சனைகள்
பண்ணினும் பூசை யில்லை
மங்கைய ரிலாமனைக் கெத்தனை யருஞ்செல்வம்
வரினுமில் வாழ்க்கை யில்லை
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 63

அளவு படாதவை

வாரியா ழத்தையும் புனலெறியு மலைகளையு
மானிடர்கள் சனனத்தை யும்
மன்னவர்க ணினைவையும் புருஷர்போ கங்களையும்
வானினுயர் நீளத்தை யும்
பாரிலெழு மணலையும் பலபிரா ணிகளையும்
படியாண்ட மன்னவரை யும்
பருப்பதத் தின்னிறையு மீசுரச் செயலையும்
பனிமாரி பொழிதுளியை யும்
சீரிய தமிழ்ப்புலவர் வாக்கிலெழு கவியையுஞ்
சித்தர்தம துள்ளத்தை யுந்
தெரிவையர்கள் சிந்தையையு மிவ்வள வெனும்படி
தெரிந்தள விடக்கூடு மோ ?
வாரிய மடந்தைகுடி கொண்டநெடு மாலுக்கு
மருகனென வந்த முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 64

பிறர்மனை நயப்பார்க் குறுபயன்

தந்தார மன்றியே பரதார மேனினைவு
தனைவைத்த காமுகர்க் குத்
தயையில்லை நிசமில்லை வெட்கமில்லை சமரினிற்
றைரியஞ் சற்று மில்லை
அந்தார மில்லைதொடர் முறையில்லை நிலையில்லை
யறிவில்லை மரபு மில்லை
யறமில்லை நிதியில்லை யிரவினிற் றனிவழிக்
கச்சமோ மனதி லில்லை
நந்தாத சனமில்லை யினமில்லை யெவருக்கு
நட்பில்லை கனதை யில்லை
நயமில்லை யிளமைதனில் வலிமையில்லை முத்திபெறு
ஞானமில்லை யென்பர் கண்டாய்
மந்தார பரிமள சுகந்தாதி புனையுமணி
மார்பனே! அருளாள னே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 65

மானம் விடாமை

கனபார மேறிற் பிளந்திடுவ தன்றியே
கற்றூண் வளைந்தி டாது
கருதலர்க ளாலுடைந் தாலுமுயி ரளவிலே
கனசூர னமரின் முறியான்
தினமோ ரிடுக்கண்வந் துற்றாலும் வேங்கைதோல்
சீவனள விற்கொ டாது
திறமான பெரியோர் சரீரங்கள் போகினுஞ்
செப்புமுறை தவறி டார்கள்
வனமேறு கவரிமா வுயிர்போகு மளவுந்தன்
மயிரிஞெ றுங்கொ டாது
வாராத வாபத்து வருகினுங் கற்புடைய
மாதுநிறை தவறி நடவாள்
மனதார வுனதடைக் கலமென்ற கீரற்கு
வன்சிறை தவிர்த்த முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 66

திருவருட் சிறப்பு

திருமகள் கடாக்ஷமுண் டானு லெவர்க்குஞ்
சிறப்புண்டு கனதையுண்டு
சென்றவழி யெல்லாம் பெரும்பாதை யாய்விடுஞ்
செல்லாத வார்த்தை செல்லும்
பொருளொரு துரும்புமரி யாதையாஞ் செல்வமோ
புகல்பெருக் காறு போலாம்
புவியின்முன் கண்டுமதி யாதபேர் பழகினவர்
போலவே நேச மாவர்
பெருமையொடு சாதியி லுயர்ச்சிதரு மனுதினம்
பேரும்ப்ர திஷ்டையுண் டாம்
பிரியமொடு பகையாளி கூடவுற வாகுவான்
பேச்சினிற் பிழைவரா து
வருமென நினைத்தபொருள் கைகூடி வருமதிக
வல்லமைகண் மிகவு முண்டாம்
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 67

நட்பு நிலை

கதிரவ னுதிப்பதெங் கேநளின மெங்கே
களித்துள மலர்ந்த தென்ன
கார்மேக மெங்கே பசுந்தோகை யெங்கே
கருத்தினட் பான தென்ன
மதியமெங் கேபெருங் குமுதமெங் கேமுக
மலர்ந்துமகிழ் கொண்ட தென்ன
வல்விரவு விடிவதெங் கேகோழி யெங்கே
மகிழ்ந்துகூ விடுத லென்ன
நிதியரச ரெங்கே யிருந்தாலு மவர்களொடு
நேசமொன் றுயிருக் கு
நீதிமிகு நல்லோர்க ளெங்கிருந்தாலு மவர்
நிறைபக்ஷ மறவார்கள் காண்
மதிலுடன் கோபுரமும் வாவியும் புடைசூழ
மருவுசோ ணாட்டதிப னே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 68

காலமறிதல்

காகம் பகற்காலம் வென்றிடுங் கூகையைக்
கனகமுடி யரசர் தாமுங்
கருதுசய காலமது கண்டடந்த வேளையிற்
காரிய முடித்து விடுவார்
மேகமுங் கார்கால மதுகண்டு பயிர்விளைய
மேன்மேலு மாரி பொழியும்
மிக்கான அறிவுளோர் வருதருண காலத்தின்
மிடியாள ருக்குதவு வார்
நாகரிக முறுகுயில் வசந்தகா லத்திலே
நலமென் றுகந்து கூவு
நல்லோர் குறித்ததைப் பதருமல் லந்தந்த
நாளையின் முடிப்பர் கண்டாய்
வாகனைய காலகன மாலைப்புல் லெனுமுலக
வாடிக்கை நிசமல்ல வோ?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 69

இடமறிதல்

தரையதனி லோடுதேர் நீர்கடலி லோடுமோ?
சலதிமிசை யோடு கப்பல்
தரைமீதி லோடுமோ? தண்ணீரி லுறுமுதலை
தன்முனே கரிநிற்கு மோ?
விரைமலர் முடிப்பரமர் வேணியர விணவெல்ல
மிகுகருட னுலாகு மோ?
வேங்கைக ளிருக்கின்ற காடுதனி லஞ்சாமல்
வேறெருவர் செல்ல வசமோ?
துரைகளைப் பெரியோரை யண்டிவாழ் வோர்தமைத்
துஷ்டர்பகை யென்ன செய்யும்?
துணைகண்டு சேரிட மறிந்துசே ரென்றெளவை
சொன்னமொழி பொய்யல்ல வே
வரையூது மாயவ னடுத்தலாற் பஞ்சவர்கள்
வன்போர் செயித்த தன்றே?
மயிலேறிவிளை யாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 70

யாக்கை நிலையாமை

மனுநன்மாந் தாதாமு னுனவர்க ளெல்லாரு
மண்மே லிருந்து வாழ்ந்து
மடியா திருந்தபே ரில்லையவர் தேடியதை
வாரிவைத் தவரு மில்லை
பனியதன நம்பியே யேர்பூட்டு கதையெனப்
பாழான வுடலை நம்பிப்
பார்மீதி லின்னம்வெகு நாளிருப் போமென்று
பல்கோடி நினைவை யெண்ணி
அனிதமாய் விருதாவின் மாய்வதே யல்லாம
லன்பாக நின்பதத் தை
யர்ச்சித்து முத்திபெறல் வேண்டுமென் றெண்ணு
ளாசைவலை யிற்சுழலு வார் [ர்க
வனிதையர்கள் காம விகாரமே பகையாகு
மற்றுமொரு பகைமை யுண்டோ?
மயிலேறி விளை யாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 71

வேட்டகத் திகழ்ச்சி

வேட்டகந் தன்னிலே மருகன்வந் திடுமளவின்
மேன்மேலு முபச ரித்து
விருந்துகள் சமைத்துநெய் பாறயிர் பதார்த்தவகை
வேண்டுவ வெலாமமைப் பார்
ஊ ட்டமிகு வர்க்கவகை செய்திடுவர் தைலமிட்
டுறுதியாய் முழுகுவிப் பா
ரோயாது தின்னவே பாக்கிலை கொடுத்திடுவ
ருற்றநா ளுலாகி லோ
நாட்டமொரு படியிறங் குவதுபோன் மரியாதை
நாளுக்கு நாள்குறைவு றும்
நகைசெய்வர் மைத்துனர்க ளலுவல்பார் போவெ
நாணுமன் மாமி சொல்வாள் [ன்று
வாட்டமில யாளொரு துரும்பாய் மதிப்பளவன்
மட்டியினு மட்டி யன்ரே?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 72

செல்வ நிலையாமை

ஓடமிடு மிடமது மணற்சுடுஞ் சுடுமிடமு
மோடமிக வேநடக் கு
முற்றதோ ராற்றின்மடு மேடாகு மேடெலா
முறுபுனல்கொண் மடுவாயி டும்
நாடுகா டாகுமுயர் காடுநா டாகிவிடு
நவில்சகடு மேல்கீழ தாம்
நடையுறுஞ் சந்தைபல கூடுமுட னேகலையு
நன்னிலவு மிருளாய் விடும்
நீடுபகல் போர்யபின் பிரவாகு மிரவுபோய்
நிறைபகற் போதாய் விடும்
நிதியோர் மிடித்திடுவர் மிடியோர் செழித்திடுவர்
நிசமல்ல வாழ்வு கண்டாய்
மாடுமன பாரிசன மக்கணிதி பூஷணமு
மருவுகன வாகு ன்ரே?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரே னே! 73

பிறந்தார் பெறு பேறு

சடமொன் றெடுத்தற் புவிக்குநல் லவனென்று
தன்பேர் விளங்க வேண்டுஞ்
சதிருடனி தல்லாது மெய்ஞ்ஞானி யென்றவ
தரிக்கவே வேண்டு மல்லால்
திடமினிய ரணசூர வீரனிவ னென்னவே
திசைமெச்ச வேண்டு மல்லால்
தேகியென வருபவர்க் கில்லையென் னுமலே
செய்யவே வேண்டு மல்லால்
அடைவுடன் பலகல்வி யாராய்ந்து வித்துவா
னுகவே வேண்டு மல்லா
லறிவான துரைமக்க ளாகவர வேண்டுமிவ
ரதிகபூ பால ராவார்
வடகுவடு கிடுகிடென வெழுகடலு மலையெறிய
மணியுரகன் முடிக ணெரிய
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 74

வேசை நிந்தை

தேடித்தம் வீட்டிற் பணக்காரர் வந்திடிற்
றேகசீ வன்போல வே
சினேகித்த வும்மையொரு பொழுதுகா ணுவிடிற்
செல்லுரு தன்ன மென்றே
கூடிச் சுகிப்பரென் னுசையுன் மேலென்று
கூசாம லாணை யிடுவார்
கொங்கையை வெடிக்கப் பிடிக்கக் கொடுத்திதழ்
கொடுப்பர்சும் பன முகப்பர்
வேடிக்கை பேசியே கைமுதல் பறித்தபின்
வேறுபட நிந்தை செய்து
விடவிடப் பேசுவார் தாய்கலக மூட்டியே
விட்டுத் துரத்தி விடுவார்
வாடிக்கையாயிந்த வண்டப் பரத்தையர்
மயக்கத்தை நம்ப லாமோ?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 75

இதற்கு இது உறுதி யெனல்

கைக்குறுதி வேல்வின் மனைக்குறுதி மனையாள்
கவிக்குறுதி பொருளடக் கங்
கன்னியர் தமக்குறுதி கற்புடைமை சொற்குறுதி
கண்டிடிற் சத்ய வசனம்
மெய்க்குறுதி முன்பின் சபைக்குறுதி வித்வசனம்
வேசையர்க் குறுதி தேடல்
விரகருக் குறுதிபெண் மூப்பினுக் குறுதியூண்
வீரருக் குறுதி தீரம்
செய்க்குறுதி நீரரும் பார்க்குறுதி செங்கோல்
செழும்படைக் குறுதி வேழஞ்
செல்வந் தனக்குறுதி பிள்ளாக ணாகர்க்குறுதி
சேர்த்திடுஞ் சர்ச்சனர்க ளாம்
மைக்குறுதி யாகிய விழிக்குற மடந்தைசுர
மங்கைமரு வுந்தலைவ னே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 76

வறுமையிற் சிறுமை

வறுமைதான் வந்திடிற் ருய்ப்பழுது சொல்லுவாள்
மனையாட்டி சற்று மெண்ணுள்
வாக்கிற் பிறக்கின்ற சொல்லொம் பொல்லாத
வசனமாய் வந்து விளையும்
சிறுமையொடு தொலையா விசாரமே யல்லாது
சிந்தையிற் றெரிய மில்லை
செய்யசபை தன்னிலே சென்றுவர வெட்கமாஞ்
செல்வரைக் காணி னுணும்
உறுதிபெறு வீரமுங் குன்றிடும் விருந்துவரி
லுயிருடன் செத்த பிணமா
முலகம் பழித்திடும் பெருமையோர் முன்புசென்
ருருவரொடு செய்தி சொன்னல்
மறுவசன முஞ்சொலார் துன்பினிற் றுன்பமிது
வந்தணுகி டாதருளு வாய்
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 77

தீச்சார்பால் நன்மை யிழப்பு

ஆனைதண் ணீரினிழல் பார்த்திடத் தவகூசென்
றங்கே கலக்கி யுலவு
மாயிரம் பேர்கூடி வீடுகட் டிடிலேத
மறைகுறளு முடனே வரும்
ஏனைநற் பெரியோர்கள் போசனஞ் செயுமளவி
லீக்கிடந் திசைகேட தாம்
இன்புமிகு பசுவிலே கன்றுசென் றூட்டுதற்
கினியகோ னதுதடுக் கும்
சேனைமன் னவரென்ன கருமநிய மிக்கினுஞ்
சிறியோர்க ளாற் குறைபடுஞ்
சிங்கத்தை யும்பெரிய ரிஷபத்தை யும்பகைமை
செய்ததொரு நரியல்ல வோ?
மானையுந் திகழ்தெய்வ யானையுந் தழுவுமணி
மார்பனே! அருளாள னே !
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 78

இடையூ றுற்றும் பயன்படுபவை

ஆறுதண் ணீர்வற்றி விட்டாலு மூற்றுநீர்
அமுதபா னங்கொடுக் கு
மாதவனை யொருபாதி கட்செவி மறைத்தாலு
மப்போது முதவிசெய் வன்
கூறுமதி தேய்பிறைய தாகவே குறையினுங்
குவலயத் திருள் சிதைக்குங்
கொல்லுதான் சாவிபோய் விட்டாலு மங்குவரு
குருவிக்கு மேய்ச்ச லுண்டு
வீறுட னுதாரிதான் மிடியான போதினிலு
மிகநாடி வருபவர்க் கு
வேறுவகை யில்லையென் றுரையா தியன்றள
வியந்துள மகிழ்ந் துதவுவான்
மாறுபடு சூரசங் காரகம் பீரனே!
வடிவே லணிந்த முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 79

இன்னவர்க்கு நிதில்லை யெனல்

சார்பிலா தவருக்கு நிலையேது முதலிலா
தவருக் கிலாப மேது
தயையிலா தவர்தமக் குறவேது பணமிலா
தார்க்கேது வேசை யுறவு
ஊரிலா தவர் தமக் கரசேது பசிவேளை
யுண்டிடார்க் குறுதி நிலையே
துண்மையில் லாதவர்க் கறமேது முயல்விலார்க்
குறுவதொரு செல்வ மேது
சோர்விலா தவருக்கு மற்றுமொரு பயமேது
சுகமிலார்க் காசை யேது
துர்க்குணமி லாதவர்க் கெதிராளி யேதிடர்செய்
துஷ்டர்க் கிரக்க மேது
மார்புருவ வாலிமே லஸ்திரம் விடுத்தநெடு
மான்மருக னுனை முருகா!
மயிலேறி விளையாடு குகனே புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 80

இதினுமிது நன்றெனல்

பஞ்சரித் தருமையறி யார்பொருளை யெய்தலிற்
பலர்மனைப் பிச்சை நன்று
பரிவாக வுபசாரமில்லா விருந்தினில்
பட்டினி யிருக்கை நன்று
தஞ்சமொரு முயலையடு வென்றிதனில் யானையொடு
சமர்செய்து தோற்ற னன்று
சரசகுண மில்லாத பெண்களைச் சேர்தலிற்
சன்னியா சித்த னன்று
அஞ்சலார் தங்களொடு நட்பா யிருப்பதனி
லரவிலெடு பழகுவது நன்
றந்தணர்க் காபத்தி லுதவா திருப்பதனி
லாருயிர் விடுத்த னன்று
வஞ்சக முடன்கூடி வாழ்தலிற் றனியே
வருந்திடுஞ் சிறுமை நன்று
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 81

நிலையாதவை

கொற்றவர்கள் ராணுவமு மாறுநே ராகிய
குளங்களும் வேசை யுறவுங்
குணமிலார் நேசமும் பாம்பொடு பழக்கமுங்
குலவுநீர் விளையாட லும்
பற்றலார் தமதிடை வருந்துவிசு வாசமும்
பழையதா யாதி நிணறும்
பரதார மாதரது போகமும் பெருகிவரு
பாங்கான வாற்று வரவும்
நத்துமொரு துர்ப்புத்தி கேட்கின்ற பேருறவு
நல்லமத யானை நட்பும்
நாவினல் லுறவுமொரு நாள்போ லிராவிவைக
ணம்பப் படாது கண்டாய்
மற்றுமொரு துணையில்லை நீதுணை யெனப்பரவும்
வானவர்கள் சிறைமீட்ட வா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 82

நற்புலவர் தீப்புலவர் செயல்

மிக்கான சோலையிற் குயில்சென்று மாங்கனி
விருப்பமொடு தேடி நாடும்
மிடைகருங் காகங்க ளெக்கனி யிருந்தாலும்
வேப்பங் கனிக்கு நாடும்
எக்காலும் வரிவண்டு பங்கேரு கத்தினி
லிருக்கின்ற தேனை நாடு
மெத்தனை சுகந்தவகை யுற்றுலு முருள்வண்
டினந்துர் மலத்தை நாடும்
தக்கோர் பொருட்சுவை நயங்களெங் கேயென்று
தாம்பார்த் துகந்து கொள்வார்
தாழ்வான வன்கண்ணர் குற்றமெங்கே யென்று
தமிழிலா ராய்வர் கண்டாய்
மைக்காவி விழிமாது தெய்வானை யுங்குறவர்
வள்ளியுந் தழுவு தலைவா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 83

தாழ்தற் பெருமை

வேங்கைகள் பதுங்குதலு மாமுகி லொதுங்குதலும்
விரிசிலை குனிந் திடுதலும்
மேடம தகன்றிடலும் யானைக ளொடுங்குதலும்
வெள்விடைக டுள்ளி விழலும்
மூங்கில்கள் வணங்குதலு மேலவ ரிணங்குதலு
முனிவர்க ணயந்து கொளலும்
முதிர்படை யொதுங்குதலும் விஞ்ஞர்க ளடங்கு
முதலினர் பயந் திடுதலும் [தலு
ஆங்கரவு சாய்குதலு மகிழ்மல ருலர்ந்திடலு
மாயர்குழல் சூடு படலு
மம்புவியி லிவைகாரி யங்களுக் கல்லாம
லதனு லிழப்பு வருமோ
மாங்கனிக் காவரண வலமது புரிந்துவளர்
மதகரிக் கிளைய முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 84

தெய்வச் செயல்

சோடாய் மரத்திற் புருரெண் டிருந்திடத்
துறுவுகண் டேவே டுவன்
ரோலாம லவையெய்ய வேண்டுமென் ருருகண்ண
தொடுத்துவில் வாங்கி நிற்க
ஊடாடி மேலே யெழும்பிடி லடிப்பதற்
குலவுரா சாளி கூட
வுயரப் பறந்துகொண் டேதிரிய வப்போ
துதைத்தசிலை வேட னடியில்
சேடாக வல்விடந் தீண்டவே யவன்விழச்
சிலையிற் ருெடுத்த வாளி
சென்றிரா சாளிமெய் தைத்துவிழ வவ்விரு
சிறைப்புரு வாழ்ந்த வன்ரோ?
வாடாம லிவையெலாஞ் சிவன்செயல்க ளல்லாதுன்
மனச்செயலி னலும் வருமோ?
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 85

பாட லியல்பு

எழுத்தசைகள் சீர்தளை யடிதொடைகள் சிதையா
திருக்கவே வேண்டு மப்பா
லீரைம் பொருத்தமொடு மதுரமாய்ப் பளபளப்
பினியசொற் கமைய வேண்டும்
அழுத்தமிகு குறளினுக் கொப்பாக வேபொரு
ளடக்கமு மிருக்க வேண்டு
மன்பான பாவின மிசைந்துவரல் வேண்டுமு
னலங்கார முற்ற துறையில்
பழுத்துள முவந்தோசை யுற்றுவரல் வேண்டும்
படிக்குமிசை கூடல் வேண்டும்
பாங்காக வின்னவை பொருந்திடச் சொற்கவிதை
பாடிற் சிறப்பென்பர் காண்
மழுத்தினஞ் செங்கைதனில் வைத்தகங் காளனருண்
மைந்தனென வந்த முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 85

விபூதி தரிக்கும் முறைமை

பத்தியொடு சிவசிவா வென்றுதிரு நீற்றைப்
பரிந்துகை யாலெடுத் துப்
பாரினில் விழாதபடி யண்ணாந்து செவியொடு
பருத்தபுய மீதிலொழுக
நித்தமு விரல்களா னெற்றியி னழுந்தலுற
நிணவாய்த் தரிப்பவர்க்கு
நீடுவினை யணுகாது தேகபரி சுத்தமா
நீங்காம னிமல னங்கே
சத்தியொடு நித்தம்விளை யாடுவன் முகத்திலே
தாண்டவஞ் செய்யுந் திரு
சஞ்சலம் வராதுபர கதியுதவு மிவரையே
சத்தியுஞ் சிவனென்ன லாம்
மத்தினிய மேருவென வைத்தமு தினைக்கடையு
மான் மருகனை முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 87

விபூதி வாங்கும் முறைமை

பரிதனி லிருந்துமியல் சிவிகையி லிருந்துமுயர்
பலகையிலிருந்து மிகவே
பாங்கான வம்பலந் தனிலே யிருந்தும்
பருத்ததிண் ணையிலிருந் தும்
தெரிவொடு கொடுப்பவர்கள் கீழ்நிற்க மேனின்று
திருநீறு வாங்கி யிடினுஞ்
செங்கையொன் றுலும்விரன் மூன்றுலும் வாங்கி
திகழ்தம் பலத்தி னேடும் [னுந்
அரியதொரு பாதையி னடக்கின்ற போதிலு
மசுத்தநில மான வதிலு
மங்கே தரிக்கிலுந் தந்திடிற் றள்ளினு
மவர்க்குநர கென்பர் கண்டாய்
வரிவிழி மடந்தைகுற வள்ளிநா யகிதனி
மணந்துமகிழ் சக நாதனே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 88

இன்ன வுறுப்புக்களாற் பயனில்லை யெனல்

தேவாலயஞ்சுற்றி டாதகா லென்னகா
றெரிசியாக் கண்ணென்ன கண்
தினமுமே நின்கமல பாதத்தை நினையாத
சிந்தைதா னென்ன சிந்தை
மேவாக மஞ்சிவ புராணமவை கேளாமல்
விட்டசெவி யென்ன செவிகள்
விமலனை வணங்காத சென்னியென் சென்னிபணி
விடைசெயாக் கையென்ன கை
நாவார நினையேத் திடாவா யென்னவாய்
நற்றீர்த்த மூழ்கா வுட
னுனிலத் தென்னவுடல் பாவியா கியசனன
நண்ணினுற் பலனேது காண்
மாவாகி வேலைதனில் வருசூரன் மார்புருவ
வடிவேலை விட்ட முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 89

நற்பொருளோடு தீப்பொருள் பிறத்தல்

கோகனக மங்கையுடன் மூத்தவள்பிறந்தென்ன
குலவுமாட் டின்க ணதர்தான்
கூடப் பிறந்தென்ன தண்ணீரி னுடனே
கொடும்பாசி யுற்று மென்ன
மாகருணை மமுதினெடு நஞ்சம் பிறந்தென்ன
வல்லிரும் பிற்றுருத் தான்
வந்தே பிறந்தென்ன நெடுமரந் தனின்மொக்குள்
வளமொடு பிறந்தென்ன வுண்
பாகமிகு செந்நெலொடு பதர்தான் பிறந்தென்ன
பன்னுமொரு தாய்வயிற் றிற்
பண்புறு விவேகியொடு கயவர்கள் பிறந்தென்ன
பலனேது மில்லை யன்றே?
மாகனக மேருவைச் சிலையென வளைத்தசிவன்
மைந்தனென வந்த முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! ஏ0

இனத்தை அழிப்பவை

குலமான சம்மட்டி குறடுகைக் குதவியாய்க்
கூரிரும் புகளை வெல்லுங்
கோடாலி தன்னுள்ளே மரமது நுழைந்துதன்
கோத்திர மெலா மழிக்கும்
நலமான பார்வைசேர் குருவியா னதுவந்து
நண்ணுபற வைகளை யார்க்கு
நட்புடன் வளர்ந்தகலை மானென்று சென்றுதன்
னவில்சாதி தனையி ழுக்கும்
உலவுநற் குடிதனிற் கோளர்க ளிருந்துகொண்
டுற்றுரை யீட ழிப்ப
ருளவனில் லாமலா ரழியா தெனச்சொல்லு
முலகமொழி நிசமல் லவோ?
வலமாக வந்தர னிடத்தினிற் கனிகொண்ட
மதயானை தன்சோ தரா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 91

வீணுக் குழைத்தல்

குயின்முட்டை தனதென்று காக்கையடை காக்குங்
குணம்போலு மீக்க ளெல்லாங்
கூடியே தாமுண்ண வேண்டுமென் றேதினங்
கூடுய்த்த நறவு போலும்
பயில்சோர ருக்குப் பிறந்திடத் தாம்பெற்ற
பாலனென் றுட்கருதி யே
பாராட்டி முத்தமிட் டன்பாய் வளர்த்திடும்
பண்பிலாப் புருடர் போலும்
துயிலின்றி நிதிகளைத் தேடியே யொருவர்பாற்
றொட்டுத் தெறித்தி டாமற்
றொகைபண்ணி வைத்திடுவர் கைக்கொண்டுபோக
சொந்தமா னவர்வேறு காண் [வரு
வயிரமொடு சூரனைச் சங்கார மேசெய்து
வானவர்க் குதவு தலைவா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 92

இது சேரின் இது பயன்படா தெனல்

அழலுக்கு ளேவிட்ட நெய்யும் பெருக்கான
வாற்றிற் கரைத்த புளியு
மரிதான கமரிற் கவிழ்த்திட்ட பாலும்வரு
மலகைகட் கிடுபூசை யும்
சுழல்பெருங் காற்றினில் வெடித்தபஞ் சும்மணற்
சொரிநறும் பனிநீரு நீள்
சொல்லரிய காட்டுக் கெரித்தநில வுங்கடல்
சுழிக்குளே விடுகப்ப லும்
விழலுக் கிறைத்திட்ட தண்ணீரு முகமாய
வேசைக் களித்த பொருளும்
வீணருக் கேசெய்த நன்றியும் பலனில்லை
விருதாவி தென்பர் கண்டாய்
மழலைப் பசுங்கிள்ளை முன்கைமல மங்கைதரு
வண்ணக் குழந்தை முருகா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 93

கைவிடத் தகாதவர்

அன்னைசுற் றங்களையும் மற்றைநாண் முதலா
வடுத்துவரு பழையோ ரையு
மடுபகைவ ரிற்றப்பி வந்தவொரு வேந்தனையு
மன்பான பெரியோரை யும்
தன்னைநம் பினரையு மேழையா னவரையுஞ்
சார்ந்தமறை யோர்தம் மையுந்
தருணமிது வென்றுநல் லாபத்து வேளையிற்
சரணம் புகுந்தோரை யும்
நன்னயம தாகமுன் னுதவிசெய் தோரையு
நாளுந் தனக்குறுதி யாய்
நத்துசே வகனையுங் காப்பதல் லாதுகை
நழுவவிட லாகாது காண்
மன்னயிலு மினியசெஞ் சேவலுஞ் செங்கைமலர்
வைத்தசர வணபூ பனே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 94

தகாச் செயல்கள்

அண்டிவரு முற்றுர் பசித்தங் கிருக்கவே
யன்னியர்க் குதவு வோரு
மாசுதபு பெரியோர்செய் நேசத்தை விட்டுப்பி
னற்பரை யடுத்த பேரும்
கொண்டவொரு மனையா ளிருக்கப் பரத்தையைக்
கொண்டாடி மருவு வோருங்
கூறுசற் பாத்திர மிருக்கமிகு தானமது
குணமிலார்க் கீந்த பேரும்
கண்டுவரு புதியோரை நம்பியே பழையரைக்
கைவிட் டிருந்த பேருங்
கரிவாலை விட்டுநரி வால்பற்றி நதிநீர்
கடக்கின்ற மரியாதை காண்
வண்டமர் கடப்பமலர் மாலிகா பரணமணி
மார்பனே! அருளாள னே!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 95

நல்லோர் முறைமை

கூடியே சோதரர்கள் வாழ்தலா லுந்தகு
குழந்தைபல பெறுத லாலுங்
குணமாக வேபிச்சை யிட்டுண்கை யாலுங்
கொளும்பிதிர்க் கிடுத லாலுந்
தேடியே தெய்வங்க ளுக்கீத லாலுந்
தியாகங் கொடுத்த லாலுஞ்
சிறியோர்கள் செய்திடும் பிழையைப் பொறுத்துச்
சினத்தைத் தவிர்த்த லாலும்
நாடியே தாழ்வாய் வணங்கிடுத லாலுமிக
நல்வார்த்தை சொல்ல லாலும்
நன்மையே தருமலாற் சூழ்ச்சிகள் வராவிவை
நல்லோர்கள் செயு முறைமைகாண்
வாடிமன நொந்துதமிழ் சொன்னநக் கீரன்முன்
வந்துதவி செய்த முருகா!
மயிலேறி விளையாடு குகனே!புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 96

அடைக்கலங் காத்தல்

அஞ்சலெனு நாயினுட றருமன் சுமந்துமுன்
னுற்றைக் கடத்து வித்தா
னடைக்கல மெனுங்கயற் காகநெடு மாலுட
னருச்சுனன் சமர்புரிந் தான்
தஞ்சமென வந்திடு புருவுக்கு முன்சிபி
சரீரந் தனைக்கொடுத் தான்
றடமலைச் சிறகரிந் தவனைமுன் காக்கத்
ததீசிமுது கென்பளிந் தான்
இன்சொலுட னேபூத தயவுடைய ராயினே
ரெவருக்கு மாபத்தி லே
யினியதஞ் சீவனை விடுத்தாகி லுங்காத்
திரங்கி ரக்ஷிப்ப ரன்றே?
வஞ்சகிர வுஞ்சமொடு தாருகன் சிங்கமுகன்
வளர்சூர னுடல்கீண்ட வா!
மயிலேறி விளையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 97

யோக்கியா யோக்கியம்

பாலினெடு தேன்வந்து சேரில்ருசி யதிகமாம்
பருகுநீர் சேரி லென்னும்
பவளத்தி னிடைமுத்தை வைத்திடிற் சோபிதம்
படிகமணி கோக்கி லென்னும்
மேலினிய மன்னர்பால் யாஜைசேர் வதுகனதை
மேஷமது சேரி லென்னும்
மிக்கான தங்கத்தி னவமணி யுறிற்பெருமை
வெண்கல் லழுத்தி லென்னும்
வாலிப மினுர்களுட னினை யோர்கள் சேரினலம்
வஜைகிழவர் சேரி லென்னும்
மருவுநல் லோரிடம் பெரியோர் வரிற்பிரியம்
வருகயவர் சேரி லென்னும்
மாலிகை தரித்தமணி மார்பனே! தெய்வாஜை
வள்ளிக்கு வாய்த்த கணவா!
மயிலேறி விஜையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 98

பெரியோ ரியல்பு

அன்னதா னஞ்செய்தல் பெரியோர்சொல் வழிநிற்ற
லாபத்தின் வந்த பேருக்
கபயங் கொடுத்திடுத னல்லினஞ் சேர்ந்திடுத
லாசிரியன் வழி நின்றவன்
சொன்னமொழி தவருது செய்திடுதல் தாய்தந்தை
துணையடி யருச்சனை செயல்
சோம்பலில் லாமலுயிர் போகினும் வாய்மைமொழி
தொல்புவியி லுட்டி யிடுதல்
மன்னரைச் சேர்ந்தொழுகல் கற்புடைய மனைவி
வைகினுந் தாமரை யிலை [யொடு
மருவுநீ ரெனவுறுத லிவையெலா மேலவர்த
மாண்பென் றுரைப்ப ரன்றே?
வன்னமயின் மேலிவர்ந் திவ்வுலகை யொருநொடி
வலமாக வந்த முருகா! [யில்
மயிலேறி விஜையாடு குகனே! புல் வயனீடு
மலைமேவு குமரேச னே! 99

நூலின் பயன்

வன்னமயி லேறிவரு வேலா யுதக்கடவுண்
மலைமே லுகந்த முருகன்
வள்ளிக் கொடிக்கினிய வேங்கைமர மாயினேன்
வானவர்கள் சேனு பதி
கன்னன்மொழி யுமையா டிருப்புதல்வ னரன்மகன்
கங்கைபெற் றருள் புத்திரன்
கணபதிக் கிளையவொரு மெய்ஞ்ஞான தேசிகக்
கடவுளா வினன்குடியி னன்
பன்னரிய புல்வயலில் வாலகும ரேசர்மேற்
பரிந்துகுரு பாத தாசன்
பாங்கான தமிழாசி ரியவிருத் தத்தினறை
பாடலொரு நூறு நாடி
நன்னயம தாகப் படித்தபேர் கேட்டபேர்
நாடொறுங் கற்ற பேர்கள்
ஞானயோ கம்பெறுவர் பதவியா வும்பெறுவர்
நன்முத்தி யும்பெறுவ ரே. 100


முற்றிற்று



அப்பலவாணக் கவிராயர்

இயற்றிய

2. அறப்பளீசுர சதகம்



காப்பு

வெண்பா

உம்பர்கோ னெம்பெருமா னேங்கறப்ப ளீசுரன்மேற்
பைம்பொருள்சே ருஞ்சதகம் பாடவே-அம்புவியோர்
ஆக்குந் துதிக்கையுளா னன்புடையார்க் கின்பருளிக்
காக்குந் துதிக்கையுளான் காப்பு.

நூல்

உயர் பிறப்பு

கடலுலகில் வாழுமுயி ரெழுபிறப் பினுண்மிக்க
காட்சிபெறு நரசென்ம மாய்க்
கருதப் பிறத்தலரி ததினுமுயர் சாதியிற்
கற்புவழி வருத லரிது
வடிவமுட னவயவங் குறையாது பிழையாது
வருதலது தனினு மரிது
வந்தாலு மிதுபுண்ய மிதுபாவ மென்றெண்ணி
மாசில்வழி நிற்ற லரிது
நெடியதன வானுத லரிததி னிரக்கமுள
நெஞ்சினே னுத லரிது
நேசமுட னுன்பதத் தன்பனுய் வருதலிந்
நீணிலத் ததினு மரிதாம்
அடியவர்க் கமுதமே! மோழைபூ பதிபெற்ற
வதிபனெம தருமை மதவே
ளனுதினமு மனதிலினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே!

மனையாட்டியின் சிறப்பு

கணவனுக் கினியளாய் ம்ருதுபாஷி யாய்மிக்க
கமலநிகர் ரூபவதி யாய்க்
காய்சின மிலாளுமாய் நோய்பழி யிலாததோர்
கால்வழியில் வந்தவளு மாய்
மணமிக்க நாணமட மச்சம் பயிர்ப்பென்ன
வருமினிய மார்க்கவதி யாய்
மாமிமா மற்கிதஞ் செய்பவளு மாய்வாசல்
வருவிருந் தோம்புவ ளாய்
இணையின்மகிழ் நன்சொல்வழி நிற்பவளு மாய்வந்தி
யென்பெய ரிலாதவளு மாய்
இரதியென வேலீலை புரிபவளு மாய்ப்பிறர்த
மில்வழி செலாதவளு மாய்
அணியிழை யொருத்தியுண் டாயினவள் கற்புடைய
ளாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினிணை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 2

நன்மமக்கட் பேறு

தங்குலம் விளங்கிடப் பெரியோர்கள் செய்துவரு
தருமங்கள் செய்து வரலுந்
தன்மமிகு தானங்கள் செய்தலுங் கனயோக
சாதக னெனப் படுதலும்
மங்குத லிலாததன் றந்தைதாய் குருமொழி
மருதுவழி பாடு செயலும்
வழிவழி வருந்தமது தேவதா பத்திபுரி
மார்க்கமுந் தீர்க்கா யுளும்
இங்கித குணங்களும் வித்தையும் புத்தியு
மீகையுஞ் சன்மார்க் கமு
மிவையெலா முடையவன் புதல்வனு மவனியே
யீன்றவன் புண்யவா னும்
அங்கச விரோதியே! சோதியே! நீதிசே
ரரசனெம தருமை மதவே
ளனுதினமு மனதினிணை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 3

சகோதர னொருமை

கூடப்பிறந்தவர்க் கெய்துதுயர் தமதுதுயர்
கொள்சுகந் தஞ்சுக மெனக்
கொண்டுதாந் தேடுபொரு ளவர்தேடுபொரு ளவர்
கோதில்புகழ் தம்புக ழெனத் [கொள்
தேடுற்ற வவர்நிந்தை தந்நிந்தை தந்தவந்
தீதிலவர் தவமா மெனச்
சீவனென் றுடல்வே றிவர்க்கென்ன வைந்தலைச்
சீறரவ மணிவாய் தொறும்
கூடுற்ற விரையெடுத் தோருட னிறைத்திடுங்
கொள்கைபோற் பிரிவின் றியே
கூடிவாழ் பவர்தம்மை யேசகோ தரரெனக்
கூறுவது வேதரும மாம்
ஆடிச் சிவந்தசெந் தாமரைப் பாதனே!
அண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 4

சற்குரு வியல்பு

வேதாந்த சித்தாந்த வழிதெரிந் தாசார
விவரவிஞ் ஞான பூர்ண
வித்யா விசேசற் குணசத்ய சம்பன்ன
வீரவை ராக்ய முக்ய
சாதா ரணப்பிரிய போகமார்க் காதிக்ய
சமாதிநிஷ் டாநுபவ ராய்ச்
சட்சமய நிலைமையும் பரமந்த்ர பரதந்த்ர
தருமமும் பர சமயமும்
நீதியி னுணர்ந்துதத் துவமார்க்க ராய்ப்பிரம
நிலகண்டு பாச மிலராய்
நித்தியா னந்தசை தன்யரா பாசையறு
நெறியுளோர் சற்குரவ ராம்
ஆதார மாமுயிர்க் குயிராகி யெவையுமா
மமலனம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 5

நன்மாணுக்க ரியல்பு

வைதாலு மோர்கொடுமை செய்தாலு மோசீறி
மாரு திகழ்ந்தாலு மோ
மனதுசற் ருகிலுங் கோணுது நாணுது
மாதா பிதா வெனக்குப்
பொய்யாம னீயென்று கரிவொடும் பணிவிடை
புரிந்துபொரு ளுடலாவி யும்
புனிதவுன் றனதெனத் தத்தஞ்செய் திரவுபகல்
போற்றிமல ரடியில்வீழ்ந் து
மெய்யாக வேபரவி யுபதேச மதுபெற
விரும்புவோர் சற்சீட ராம்
விணவே ரறும்படி யவர்க்கருள் செய் திடுவதே
மிக்கதே சிகரது கடன்
ஐயா! புரம்பொடி படச்செய்த செம்மலே!
அண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினிணை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 6

பொருள் செயல் வகை

புண்ணிய வசத்தினுற் செல்வமது வரவேண்டும்
பொருளா ரட்சிக்க வேண்டும்
புத்தியுட னதுவொன்று நூருக வேசெய்து
போதவும் வளர்க்க வேண்டும்
உண்ணவேண் டும்பின்பு நல்லவஸ்த் ராபரண
முடலிற் றரிக்க வேண்டு
முற்றபெரி யோர்கவிஞர் தமரா துலர்க்குதவி
யோங்குபுகழ் தேட வேண்டும்
மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டு முயர்
வழிதேட வேண்டு மன்றி [மோக்ஷ
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்க மறியாக் குருடராம்
அண்ணலே! கங்கா குலத்தலைவன் மோழைதரு
மழகனெம தருமை மதவே
ளனுதினமு மனதினிணை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 7

தீவழி விலக்கு

வஞ்சகர் தமைக்கூடி மருவொணு தன்பிலார்
வாசலிற் சொல்லொ ணுது
வாதெவ ரிடத்திலும் புரியொணு தறிவிலா
மடையர்முன் னிற்கொ ணுது
கொஞ்சமே னுந்தீது செய்யொணு தொருவர்மேற்
குற்றஞ்சொ லொண்ணு தயற்
கோதையர்க ளோடுபரி காசஞ்செ யொண்ணுது
கோளுரைகள் பேசொ ணுது
நஞ்சுதரு மரவொடும் பழகொணு திருள்வழி
நடந்துதனி யேகொ ணுது
நதிபெருக் காகின்தி னீஞ்சல்செய் யொண்ணுது
நல்வழி மறக்கொ ணுது
அஞ்சாம லரசர்முன் பேசொணு திவையெலா
மறியுமெம தருணை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 8

ஒன்றற்கொண்று அழகு செய்வன

வாழ்மனை தனக்கழகு குலமங்கை, குலமங்கை
வாழ்வினுக் கழகு சிறுவர்,
வளர்சிறுவ ருக்கழகு கல்வி, கல் விக்கழகு
மாநிலந் துதிசெய் குணமாம்,
சூழ்குண மதற்கழகு பேரறிவு, பேரறிவு
தோன்றிடி லதற் கழகுதான்
றூயதவ மேன்மையுப காரவிர தம்பொறுமை
சொல்லரிய பெரியோர் கௌரத்
தாழ்தல்பணி விடைபுரிதல் சீலநே சங்கருணை
சாற்றுமிவை யழகென்பர் காண்
செளரிமல ரோனமரர் முனிவர்முச் சுடரெலாஞ்
சரணமெமை ரட்சி யெனவே
ஆழ்கட லுதித்துவரு விடமுண்ட கண்டனே!
யண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 9

ஒன்றில்லாமையாற் பயன்படாதவை

கோவிலில் லாதவூர் நாசியில் லாதமுகங்
கொழுநனில் லாத மடவார்
குணமதில் லாவித்தை மணமதில் லாதமலர்
குஞ்சர மிலாத சேனை
காவலில் லாதபயிர் பாலரில் லாதமனை
கதிர்மதி யிலாத வானங்
கவிஞரில் லாதசபை சுதிலய மிலாதபண்
காவல ரிலாத தேசம்
ஈவதில் லாததன நியமமில் லாதசெப
மிசைலவண மில்லாத வூண்
இச்சையில் லாதபெண் போகநல மிவைதம்மி
னேதுபல னுண்டு கண்டாய்
ஆவியனை யாட்கிடந் தந்தவா! கற்பதரு
வாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 10

ஒன்றற்கொன்று தகாத சேர்க்கை

பூததயை யில்லாத லோபிய ரிடத்திலே
பொருளை யருளிச் செய்தனை
புண்ணியஞ் செய்கின்ற சற்சன ரிடத்திலே
பொல்லாத மிடி வைத்தனை
நீதியகன் மூடர்க் கருந்ததி யெனத்தக்க
நெறி மாதரைத் தந்தனை
நிதானமுள வுத்தமர்க் கிங்கித மிலாதகொடு
நீலியைச் சேர்வித்தனை
சாதியி லுயர்ந்தபே ரீனர்பின் னேசென்று
தாழ்ந்து பரவச் செய்தனை
தமிழருமை யறியாத புல்லர்மேற் கவிவாணர்
தாம்பாட வேசெய்த னை
ஆதரவி லாமலிப் படிசெய்த தென்சொலாய்?
அமல! எமதருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 11

குணக்கேடு ரியல்பு

மாருத கலிகற்று நிலைபெற்ற சபையிலே
வாயிலா தவனெரு பதர்
வாள்பிடித் தெதிரிவரி னோடிப் பதுங்கிடு
மனக்கோழை தானெரு பதர்
ஏரு வழக்குரைத் தனைவருஞ் சீசியென்
றிகழநிற் பானெரு பதர்
இல்லாள் புறஞ்செலச் சம்மதித்த வளோ
டிணங்கி வாழ்பவ னெரு பதர்
வேரெருவர் மெச்சாது தன்னையே தான்மெச்சி
வீண்பேசு வானெரு பதர்
வேசையர்க ளாசைகொண் டுள்ளளவு மனையாரை
விட்டுவிடு வானெரு பதர்
ஆருத துயரையு மிடியையுந் தீர்த்தருள்செ
யமல! வெமதருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 12

செய்யத் தக்கவை

வாலிபந் தனில்வித்தை கற்கவேண் டுங்கற்ற
வழியிலே நிற்க வேண்டும்
வகைகட நிரிந்துபொரு டேடவேண் டுந்தேடி
வளரறஞ் செய்ய வேண்டும்
சீலமுடை யோர்களைச் சேரவேண் டும்பிரிதல்
செய்யா திருக்க வேண்டுஞ்
செந்தமிழ்ப் பாடல்பல கொள்ளவேண் டுங்கொ
த்யாகங் கொடுக்க வேண்டும் [ண்டு
ஞாலமிசை பலதரும நாட்டவேண் டும்நாட்டி
நன்ருய் நடத்த வேண்டும்
நம்பனினையடிபூசை பண்ணவேண் டும்பண்ணி
னலுமிகு பத்தி வேண்டும்
ஆலமமர் கண்டனே! பூதியணி முண்டனே!
அனகவெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 13

மேன்மே லுயர்ச்சி

தன்மட்டி லிரவாது சீவனஞ் செய்பவன்
சாமர்த்ய முளபுருட னஞ்
சந்ததம் பதின்முரைக் காப்பாற்று வோன்மிக்க
தரணிபுகழ் தருதேவ னும்
பொன்மட்டி லாமலீந் தொருநூறு பேரைப்
புரப்பவன் பொருவி லிந்த்ரன்
புவிமீதி லாயிரம் பேர்தமைக் காப்பாற்று
புண்யவா னேபிரம னும்
நன்மைதரு பதினுயிரம்பேர் தமைக்காத்து
ரட்சிப்ப வன்செங்கண் மால்
நாளுமிவன் மேலதிக மாகவெகு பேர்க்குதவு
நரனே மகாதேவ னும்
அன்மட்டு வார்குழலி பாகனே! ஏகனே!
அண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 14

செயற்கருஞ் செயல்

நீர்மே னடக்கலா மெட்டியுந் தின்னலா
நெருப்பைநீர் போற்செய்ய லாம்
நெடியபெரு வேங்கையைக் கட்டியே தழுவலா
நீளரவி னைப்பூண லாம்
பார்மீது மணலைச் சமைக்கலாஞ் சோறெனப்
பட்சமுட னேயுண்ண லாம்
பாணமொடு குண்டுவில கச்செய்ய லாமரப்
பாவை பேசப் பண்ணலாம்
ஏர்மேவு காடியுங் கடையுற்று வெண்ணெயு
மெடுக்கலாம் புத்தி சற்று
மில்லாத மூடர்த மனத்தைத் திருப்பவே
யெவருக்கு முடியாது காண்
ஆர்மேவு கொன்றைபுனை வேணியா! சுரர்பரவு
மமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 15

உத்தம ராவோர்

செய்ந்நன்றி மறவாத பேர்களு மொருவர்செய்
தீமையை மறந்த பேருந்
திரவியந் தரவரினு மொருவர்மனை யாட்டிமேற்
சித்தம் வையாத பேரும்
கைகண் டெடுத்தபொருள் கொண்டுபோய்ப் பொரு
கையிற் கொடுத்த பேருங் [ளாளர்
காசினியி லொருவர்செய் தருமங் கெடாதபடி
காத்தருள்செய் கின்ற பேரும்
பொய்யொன்று நிதிகோடி வரினும் வழக்கழிவு
புகலாத நிலைகொள் பேரும்
புவிமீது தலைபோகு மென்னினுங் கனவிலும்
பொய்மையுரை யாத பேரும்
ஐயவிங் கிவரெலாஞ் சற்புருட ரென்றுலக
ரகமகிழ்வ ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 16

இதுவுமது

அடைக்கல மெனத்தேடி வருவோர் தமைக்காக்கு
மவனே மகா புருடனு
மஞ்சாம லெதுவரினு மெதுபோகி னுஞ்சித்த
மசைவிலன் மகா தீரனும்
தொடுத்தொன்று சொன்னசொற் றப்பாது செய்கின்ற
தோன்றலே மகாராஜனும்
தூறிக் கலைக்கின்ற பேர்வார்த்தை கேளாத
துரையே மகாமேரு வாம்
அடுக்கின்ற பேர்க்குவரு மிடர்தீர்த் திரட்சிக்கு
மவனே மகா த்யாகியாம்
அவரவர் தராதர மறிந்துமரி யாதைசெயு
மவனே மகா வுசிதனும்
அடர்க்கின்ற முத்தலைச் சூலனே! லோலனே!
அமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 17

ஒன்றிலொன் றில்லாமை

காமிக்கு முறையில்லை வேசைக்கு நாணில்லை
கயவர்க்கு மேன்மை யில்லை
கன்னமிடு கள்வருக் கிருளில்லை விபசார
கன்னியர்க் காணை யில்லை
தாமெனு மயக்கறுத் தோங்குபெரி யோர்க்குவரு
ஜாதிகுல மென்ப தில்லை
தாக்ஷணிய முடையபேர்க் கிகலில்லை யெங்கு
சார்பிலார்க் கிடம தில்லை [மொரு
பூமிக்கு ளீயாத லோபர்க்கு வளமான
புகழென்ப தென்று மில்லை
புலையர்க்கு நிசமில்லை கைப்பொரு ளிலாததோர்
புருடருக் கொன்று மில்லை
யாமினி தனக்குநிகர் கந்தரத் திறைவனே!
அன்புடைய அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 18

யாக்கை நிலையாமை முதலியவை

காயமொரு புற்புதம் வாழ்வுமலை சூழ்தருங்
காட்டி லாற்றின் பெருக்காங்
கருணைதரு புதல்வர்கிளை மனைமனைவி யிவையெ
கானல் காட்டும் ப்ரவாகம் [லாங்
மேயபுஜ பலவலிமை யிளமையழ கிவையெலாம்
வெயின் மஞ்ச ளுயிர் தானுமே
வெட்ட வெளி தனில்வைத்த தீபமென வேகருதி
வீண்பொழுது போக்காம லே
நேயமுட னேதெளிந் தன்பொடுன் பாதத்தி
னினைவுவைத் திரு போதிலு
நீர்கொண்டு மலர்கொண்டு பரிவுகொண் டர்ச்சிக்க
நிமலனே! அருள் புரிகுவாய்
ஆயுமறி வாளர்பணி பாதனே! போதனே!
அண்ணல்! எம தருமை மதவே
ளனுதினமு மன தினினை தருசதுரகிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 19

திருமங்கை யிருப்பிடம்

நற்பரி முகத்திலே மன்னவ ரிடத்திலே
நாகரிகர் மாமனையி லே
நளினமலர் தன்னிலே கூவிளந் தருவிலே
நறைகொண்ட பைந் துளவிலே
கற்புடையர் வடிவிலே கடலிலே கொடியிலே
கல்யாண வாயி றனிலே
கடிநக ரிடத்திலே நற்செந்நெல் விளைவிலே
கதிர்பெறு விளக் கதனிலே
பொற்புடைய சங்கிலே மிக்கோர்கள் வாக்கிலே
பொய்யாத பேர் பாலிலே
பூந்தடந் தன்னிலே பாற்குடத் திடையிலே
போதகத் தின் சிரசிலே
அற்பெருங் கோதைமலர் மங்கைவா ழிடமென்ப
ரண்ணல்! எம தருமை மதவே
ளனுதினமு மனதினிலை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 20

மூதேவி யிருப்பிடம்

மிதமின்றி யன்னம் புசிப்போ ரிடத்திலு
மிகுபாஷை யோரிடத் தும்
மெய்யொன் றிலாமலே பொய்பேசி யேதிரியு
மிக்கபா தகரிடத் தும்
கதியென்று மிலர்போல மலினங் கொளும்பழைய
கந்தையணி வோரிடத் துங்
கடிநா யெனச்சீறி யெவரையுஞ் சேர்க்காத
கன்னிவாழ் மனையகத் துந்
ததிசேர் கடத்திலுங் கர்த்தபத் திடையிலுஞ்
சார்ந்தவாட் டின்திரளி லுஞ்
சாம்பிண முகத்திலு மிவையெலாங் கவலைபுரி
தெளவைவா ழிடமென்பர் காண்
அதிரூப மலைமங்கை நேசனே! மோழைதரு
மழகனெம தருமை மதவே
ளனுதினமு மனதினிலை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 21

குணகுண மிரண்டினும் பயன்படாமை

குணமற்ற பேய்முருங் கைத்தழை தழைத்தென்ன
குட்டநோய் கொண்டு மென்ன
குரைக்கின்ற நாய்மடி சுரந்தென்ன சுரவாது
கொஞ்சமாய்ப் போகி லென்ன
மணமற்ற செம்முருக் கதுபூத் தலர்ந்தென்ன
மலராது போகி லென்ன
மதுரமில் லாவுவர்க் கடல்நீர் கறுத்தென்ன
மாவெண்மை யாகி லென்ன்
உணவற்ற பேய்ச்சுரை படர்ந்தென்ன படரா
துலர்ந்துதான் போகி லென்ன
உதவாத பேர்க்குவெகு வாழ்வுவந் தாலென்ன
வோங்குமிடி வரிலென்ன காண்
அணியுற்ற பைங்கொன்றை மாலிகா பரணனே!
ஆதியே! அருமை மதவே
ளனுதினமு மனதினிலே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 22

குறைவுற்றுங் குணங் கெடாமை

தறிபட்ட சந்தனக் கட்டைபழு தாயினுஞ்
சார்மணம் பழுதாகு மோ
தக்கபால் சுவறிடக் காய்ச்சினு மதுகொண்டு
சாரமது ரங்குறையு மோ
நிறைபட்ட கதிர்மணி யழுக்கடைந் தாலுமதி
னீள்குண மழுங்கிவிடு மோ
நெருப்பிடை யுருக்கினு மடிக்கினுந் தங்கத்தி
னிறையுமாற் றுக்குறையு மோ
கறைபட்ட பைம்புயன் மறைத்தாலு மதுகொண்டு
கதிர்மதி கனம்போகு மோ
கற்றபெரி யோர்மகிமை யற்பரறி கிலரேனும்
காசினி தனிற் போகு மோ
அறிவுற்ற பேரைவிட் டகலாத மூர்த்தியே!
ஐயனே! அருமை மதவே
ளனுதினமு மனதினிலே தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 23

இதற்கு உதவிசெய்வது இதுவெனல்

வானவர் பிதிர்க்கண்முச் சுடர்மூவர் கோன்கட்கும்
வாழ்வுதரு முதவி புவனம்
வளமிக்க புவனந் தனக்குமேன் மேலுதவி
வாழ்வுபெற் றிடுமன்ன ராம்
தேனமர் நறுந்தொடையல் புனைமன்ன வர்க்குதவி
சேர்குடி படைவர்க்க மாஞ்
சேர்குடி படைக்குதவி விளைபயிர் பயிர்க்குதவி
சீர்பெற வழங்கு மழையாம்
மேனிமிர் மழைக்குதவி மடமாதர் கற்பொன்று
வேந்தர்தந் நீதி யொன்று
வேதிய ரொழுக்கமொன் றிம்மூன்று மேயென்று
மிக்கபெரி யோருரைசெய் வார்
ஆனமர் நெருங்கொடி யுயர்த்தவெம் மிறைவனே!
அதிபனே அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 24

இதனைக்கண்டு மகிழ்வது இதுவெனல்

தந்தைதாய் மலர்முகங் கண்டுநின் ருலிப்ப
தவர்தந்த சந்ததிய தாஞ்
சந்த்ரோ தயங்கண்டு பூரிப்ப துயர்வாவி
தங்குபைங் குமுதமல ராம்
புந்திமகிழ் வாயிரவி வருதல்கண் டகமகிழ்வ
பொங்குதா மரைமலர்க ளாம்
போதவும் புயல்கண்டு கண்களித் தேநடம்
புரிவது மயூர வினமாம்
சிந்தைமகிழ் வாயுதவு தாதா வினைக்கண்டு
சீர்பெறுவ திர்வலர் குழாந்
திகழ்நீதி மன்னரைக் கண்டுகளி கூர்வதிச்
செகமெலா மென்பர் கண்டாய்
அந்தியம் வானனைய செஞ்சடா டவியனே!
அமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 25

அதுவது வாகாமை

உள்ளன் பிலாதபேர் தித்திக்க வேபேகி
யுறவாடு முறவு முறவோ
உபசரித் தன்புடன் பரிமா றிடாதசோ
றுண்டவர்க் கன்ன மாமோ
தள்ளாதிருந்துகொண் டொருவர்போய்ப் பார்த்துவரு
தக்கபயிர் பயிராகு மோ
தளகர்த்த னெருவனில் லாமன்முன் சென்றிடுந்
தானையுந் தானை யாமோ
விள்ளாத போகமில் லாதபெண் மேல்வரு
விருப்பமும் விருப்ப மாமோ
வெகுகடன் பட்டபேர் செய்கின்ற சீவனமு
மிக்கசீ வனமாகு மோ
அள்ளா திருங்கருணை யாள னே! தேவர்தொழு
மாதியே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 26

நற்குணங்களுக்கு இடமாகாதவர்

வெறிகொண்ட மற்கூடம் பேய்கொண்டு கள்ளுண்டு
வெங்காஞ் சொறிப்புதலி லே
வீழ்ந்துதேள் கொட்டிடச் சன்மார்க்க மெள்ளளவு
மேவுமோ மேவாது போல்
குறைகின்ற புத்தியா யிலற்ப சாதியாய்க்
கூடவே யிளமை யுண்டாய்க்
கொஞ்சமா மதிகார முங்கிடைத் தால்மிக்க
குவலயந் தனிலவர்க் கு
நிறைகின்ற புத்தியுஞ் சீலமும் மேன்மையு
நிதானமும் பெரியோர்கண் மேல்
நேசமு மீகையு மிவையெலாங் கனவிலும்
நினைவிலும் வராது கண்டாய்
அறைகின்ற சுருதியின் பொருளான வள்ளலே!
அண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 27

இதனுல் இன்ன முறையனும் எனல்

தன்னுல் முடிக்கவொண் ணுதகா ரியம்வந்து
தான்முடிப் போன்றமைய ணுந்
தன்றலைக் கிடர்வந்த போதுமீட் டுதவுவோன்
ருய்தந்தை யென்ன லாகும்
ஒன்னுர் செயுங்கொடுமை யான்மெலிவு வந்தபோ
துதவுவோ னிட்ட தெய்வம்
இயுத்திபுத் திகள்சொல்லி மேல்வருங் காரிய
முரைப்பவன் குருவென்ன லாம்
எந்நாளும் வருநன்மை தீமைதன தென்னவே
யெண்ணிவரு வோன் பந்துவா
மிருதய மறிந்துதன் சொற்படி நடக்குமவ
னெவனெனினு மவனே சுதன்
அந்நார மும்பணியு மெந்நாளு மேபுனையும்
அண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 28

அவரவரிடத்து நடக்கு முறை

மாதா பிதாவினுக் குள்ளன் புடன்கனிவு
மாருத நல்லொழுக் கம்
மருவுகுரு வானவர்க் கினியவுப சாரமுள
வார்த்தை வழிபா டடக்கம்
காதார் கருங்கண்மின யாள்தனக் கோசயன
காலத்தி னய பாஷணங்
கற்றபெரி யோர்முதியர் வருமாது லர்க்கெலாங்
கருணைசே ரருள் விதானம்
நீதிபெறு மன்னவ ரிடத்ததிக பயவிநய
நெறியுடைய பேர்க் கிங்கிதம்
நேயமுள தமர்தமக் ககமகிழ் வுடன்பரிவு
நேரல ரிடத்தில் வபிரம்
ஆதிமனு நூல்சொலும் வழக்கமிது வாகுமெம
தையனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 29

குணத்தை விட்டுக் குற்றத்தைக் கவர்தல்

துட்டவிக டக்கவியை யாருமே மெச்சுவார்
சொல்லுநற் கவியை மெச்சார்
துர்ச்சனர்க் ககமகிழ்ந் துபசரிப் பார்வருந்
தூயரைத் தள்ளிவிடு வார்
இட்டமுள தெய்வந் தனைக்கரு திடார்கறுப்
பென்னிலோ போய்ப் பணிகுவார்
ஈன்றதாய் தந்தையைச் சற்றுமதி யார்வேசை
யென்னிலோ காலில் வீழ்வார்
நட்டலா பங்களுக் குள்ளான பந்துவரி
னன்ருக வேபேசி டார்
நாளுமொப் பாரியாய் வந்தபுத் துறவுக்கு
நன்மைபல வேசெய்கு வார்
அட்டதிசை சூழ்புவியி லோங்குகலி மகிமைகாண்
அத்தனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 30

குணங்காண் குறி

கற்ரோர்க ளென்பதைச் சீலமுட னேசொலுங்
கனவாக்கி னுற்காண லாம்
கற்புளா ரென்பதைப் பார்க்கின்ற பார்வையொடு
கால்நடையி னுங்காண லாம்
அற்ரோர்க ளென்பதை யொன்றிலும் வாரா
வடக்கத்தி னுலறிய லாம்
அறமுளோ ரென்பதைப் பூததயை யென்னுநிலை
யதுகண்டு தானறிய லாம்
வித்தோங்கு பயிரைக் கிளைத்துவரு துடியினுல்
விளையுமென் றேயறிய லாம்
வீரமுடை யோரென்ப தோங்கிவரு தைரிய
விசேடத்தி னுலறிய லாம்
அத்தா! குணத்தினுற் நலநலந் தெரியலாம்
அண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 31

கூடிற் பயன்படல்

செத்தைபல கூடியொரு கயிறுயி னதுகொண்டு
திண்கரியை யுங்கட்ட லாம்
திகழ்ந்தபல துளிகூடி யாருயின் வாவியொடு
திரளேரி நிறைவிக்க லாம்
ஒத்தநுண் பஞ்சுபல சேர்ந்துநூ லாயிடி
னுடுத்திடுங் கலையாக்க லாம்
ஓங்கிவரு கோலுடன் சீலையுங் கூடினு
லுயர்கவிகை யாக்கொள்ள லாம்
மற்றுமுயர் தண்டுலத்தோடுதவி டுமிகூடின்
மல்குமுலை விளைவிக்க லாம்
மனமொத்த நேயமொடு கூடியொரு வர்க்கொருவர்
வாழின்வெகு வெற்றிபெற லாம்
அற்றகனி யைப்பொருத் தரிபிரமர் தேடரிய
வமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 32

அததற்கு வெற்றியிடம்

கலைவலா ருக்கதிக சயமதுர வாக்கிலே
காமுகர்க் கதிகசய மோ
கைப்பொருளி லேவரு மருத்துவர்க் கோசயங்
கைவிசே டந்தன்னி லே
நலமுடைய வேசையர்க் கழகிலே யரசர்க்கு
நாளும்ரண சூரத்தி லே
நற்றவர்க் கதிகசய முலகுபுகழ் பொறையிலே
ஞானவே தியர் தமக்கோ
குலமகிமை தன்னிலே வைசியர்க் கோசயங்
கூறியது லாக்கோலி லே
குற்றமில் லாதவே ளாளாருக் கோசயங்
குறையாத கொழுமுனையி லே
அலைவில்குதி ரைக்குநட வேகத்தி லதிகசய
மாமென்ப ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 33

ஒன்றனில்லாமையாற் பாழ்படல்

தாம்பூல தாரண மிலாததே வருபூர்ண
சந்த்ரனிகர் முகசூனி யம்
சற்சன ரிலாததே வெகுசனஞ் சேர்ந்துவாழ்
தரும்பெரிய நகர்சூனி யம்
மேம்பா டிலாதமன் னவர்கள்வந் தாள்வதே
மிக்கதே சச்சூனி யம்
மிக்கசற் புத்திர னிலாததே நலமான
வீறுசேர் க்ருகசூனி யம்
சோம்பாத தலைவரில் லாததே வளமுடன்
சொல்லுயர் சபாசூனி யம்
தொல்லுலகி லஜனவர்க்கு மாநிதிய மில்லதே
சுத்தசூ னியமென்பர் காண்
ஆம்பல்வத னத்தஜனக் குகஜனயீன் றருள்செய்த
அத்தனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 34

மூடர் தாரதம்மியம்

பெண்புத்தி கேட்கின்ற மூடருந் தந்தைதாய்
பிழைபுறஞ் சொலுமூட ரும்
பெரியோர்கள் சபையிலே முகடேறி வந்தது
பிதற்றிடும் பெருமூட ரும்
பண்புற்ற சுற்றஞ் சிரிக்கவே யிழிவான
பழிதொழில்செய் திடுமூட ரும்
பற்றற்ற பேர்க்குமுன் பிணைநின்று பின்புபோய்ப்
பரிதவித் திடுமூட ரும்
கண்கெட்ட மாடென்ன வோடியிர வலர்மீது
காய்ந்துவீழ்ந் திடுமூட ருங்
கற்றிறி விலாமுழு மூடருக் கிவரெலாங்
கால்மூட ரைமூடர் காண்
அண்கற்ற நாவலர்க் காகவே தூதுபோ
மையனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 35

இதற்கிது வேண்டுமெனல்

தனக்குவெகு புத்தியுண் டாகினும் வேறொருவர்
தம்புத்தி கேட்கவேண் டும்
தானதிக சூரனே யாகினுங் கூடவே
தளசேக ரங்கள்வேண் டும்
கனக்கின்ற வித்துவா னாகிலுந் தன்னினுங்
கற்றோரை நத்த வேண்டும்
காசினியை யொருகுடையி லாண்டாலும் வாசலிற்
கருத்துள்ள மந்த்ரி வேண்டுந்
தொனிக்கின்ற சங்கீத சாமர்த்ய னாகிலுஞ்
சுதிகூட்ட வொருவன் வேண்டுஞ்
சுடர்விளக் காயினு நன்றுய் விளங்கிடத்
தூண்டுகோ லொன்று வேண்டும்
அனற்கண்ண னேபடிக சங்கநிகர் வண்ணனே!
ஐயனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 36

வறுமையின் கொடுமை

மேலான சாதியி லுதித்தாலு மதிலென்ன
வெகுவித்தை கற்று மென்ன
மிக்கவதி ரூபமொடு சற்குண மிருந்தென்ன
மிகுமானி யாகி லென்ன
பாலான மொழியுடைய னாயென்ன வாசார
பரனா யிருந்து மென்ன
பார்மீது வீரமொடு ஞானவா னாயென்ன
பாக்கிய மிலாத போது
வாலாய மாய்ப்பெற்ற தாயுஞ் சலித்திடுவள்
வந்தசுற் றமுமிகழு மே
மரியாதை யில்லாம லனைவரும் பேசுவார்
மனைவியுந் தூறுசொல் வாள்
ஆலால முண்டகனி வாயனே! நேயனே!
அனகனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 37

ஈனத்துவம்

இரப்பவன் புவிமீதி லீனனவ னுக்கில்லை
யென்னுமவ னவனி லீனன்
ஈகின்ற பேர்தம்மை யீயாம லேகலைத்
திடுமூட னவனி லீனன்
உரைக்கின்ற பேச்சிலே பலனுண் டெனக்காட்டி
யுதவிடா னவனி லீனன்
உதவவே வாக்குரைத் தில்லையென் றேசொலு
முலுத்தனே வவனி லீனன்
பரக்கின்ற யாசகர்க் காசைவார்த் தைகள்சொலிப்
பலகா லலைந்து திரியப்
பண்ணியே யில்லையென் றிடுகொடிய பாவியே
பாரிலெல் லார்க்கு மீனன்
அரக்கிதழ்க் குமுதவா யுமைநேசனே! எளிய
ரமுதனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 38

மறைப்பனவும் வெளிப்படுத்துவனவும்

சென்மித்த வருடமு முண்டான வத்தமுந்
தீதில்கிர கச்சார முந்
தின்றுவரு மௌடதமு மேலான தேசிகன்
செப்பிய மகாமந்த்ர மும்
புன்மையவ மானமுந் தானமும் பைம்பொனணி
புனையுடை வார்கலவி யும்
புகழ்மேவு மானமு மிவையொன்ப துந்தமது
புந்திக்கு ளேவைப்ப தே
தன்மமென் றுரைசெய்வ ரொன்னூர் கருத்தையுந்
தன்பிணியை யும்பசியை யும்
தான்செய்த பாவமு மிவையெலாம் வேறொருவர்
தஞ்செவியில் வைப்பதியல் பாம்
அன்மருவு கண்டனே! மூன்றுலகுமீன்றவுமை
யன்பனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 39

தேவர்கள் காலவளவை

சதுர்யுக மோரிரண் டாயிரம் பிற்படிற்
சதுமுகற் கொருதினம தாம்
சாற்றுமித் தினமொன்றி லேயிந்த்ர பட்டங்கள்
தாமுமீ ரேழ்சென்றி டும்
மதிமலியு மித்தொகையி னனுயயு ணூறுபோய்
மாண்டபோ தொருகற்ப மாம்
மாறிவரு கற்பமொரு கோடிசென் ருனெடிய
மால்தனக் கோர்தினம தாம்
துதிபரவு மித்தொகையி லொருகோடி நெடியமால்
தோன்றியே போய்மறைந் தால்
தோகையோர் பாகனே! நீநகைத் தணிமுடி
துளக்கிடுங் காலமென் பார்
அதிகமுள பலதேவர் தேவனே! தேவர்கட்
கரசனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 40

தூய்மையிடமும் தூய்மை செய்வனவும்

வாம்பரி தனக்கதிக புனிதமுக மதனிலே
மறையவர்க் குயர்புனித மோ
மலரடியி லேபுனித மொளிகொள்கண் ணுடிக்கு
மாசின்முற் புறமத னிலே
மேம்படும் பசுவினுக் குப்பிற் புறத்திலே
மிக்கமட மாதருக் கோ
மேனியெல் லாம்புனித மாகுமா சௌசமொடு
மேவுவனி தையர்தமக் கும்
தாம்பிர மதற்குமிகு வெள்ளிவெண் கலமயந்
தங்கமீ யந்தமக் கும்
தரும்புனிதம் வருபெருக் கொடுபுளி சுணஞ்சாம்
சாருமண் டாது சாணம் [பல்
ஆம்புனித மிவையென்பர் மாமேரு வில்லியே!
அனகனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 41

அடங்காதவற்றை அடக்கு முபாயம்

கொடியபொலி யெருதையிரு மூக்கிலுங் கயிறொன்று
கோத்துவச விர்த்திகொள் வார்
குவல்யந் தனின் மதக் களிறதனை யங்குசங்
கொண்டுவச விர்த்திகொள் வார்
படியில்விட வரவமந் திரதந் திரத்தினுற்
பற்றிவச விர்த்திகொள் வார்
பாய்பரியை நெடியகடி வாளமது கொடுநடை
பழக்கிவச விர்த்திகொள் வார்
விடமுடைய துட்டரைச் சோர்பந்து கைக்கொண்டு
வீசிவச விர்த்திகொள் வார்
மிக்கபெரி யோர்களும் கோபத்தை யறிவால்
விலக்கிவச விர்த்திகொள் வார்
அடியவர் துதிக்கவரு செந்தா மரைப்பதத்
தையனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பவீ சுர தேவனே! 42

ஒளியி னுயர்வு

செழுமணிக் கொளியதன் மட்டிலே யதினுமோ
செய்யகச் சோதமென வே
செப்பிடுங் கிருமிக்கு மிச்சமொளி யதனினுந்
தீபத்தி னொளியதிக மாம்
பழுதிலாத் தீவர்த்தி தீபத்தி னதிகமாம்
பகல்வர்த்தி யதிலதிக மாம்
பாரமத் தாப்பினொளி யதிலதிக மதிலுமோ
பனிமதிக் கொளியதிக மாம்
விழைவுதரு பரிதிக்கு மனுநீதி மன்னர்க்கும்
வீரவித ரணிகருக் கும்
மிக்கவொளி திசைதொறும் போய்விளங் கிடுமெ
விரகுளோ ருரைசெய்கு வார் [ன்ன
அழல்விழிகொ டெரிசெய்து மதனவே டனைவென்ற
அண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பவீ சுர தேவனே! 43

குணங் குற்றமாதல்

வஞ்சிமதியை நோக்கிடிற் சோரர்கா முகருக்கு
மாருத வல்விடம தாம்
மகிழ்நன் றனைக்காணி லிதமிலா விபசரிய
மாதருக் கோவிடம தாம்
மேன்மைதரு நற்சுவை பதார்த்தமுஞ் சுரரோக
மிக்கபேர்க் கதிகவிட மாம்
வித்தியா திபர்தமைக் கண்டபோ ததிலோப
வீணர்க்கெ லாம்விடம தாம்.
ஈனமிகு புன்கவிவ லோர்க்கதிக சபைகாஞ்சி
லேலாத கொடியவிட மாம்
ஏற்றமில் லாதபடு பாவிகட் கறமென்னி
லெந்நாளு மதிக விடமாம்
ஆனதவ யோகியர்க ளிதயதா மரையுறையு
மண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 44

உயர்வன்றித் தாழ்வும் சிறக்குமிடம்

வெகுமான மாகிலு மவமான மாகிலும்
மேன்மையோர் செய்யிலழ காம்
விரகமே யாகிலுஞ் சரசமே யாகிலும்
விழைமங்கை செய்யிலழ காம்
தகுதாழ்வு வாழ்வுவெகு தருமங்க ளாச்செய்து
சாரிலோ பேரழக தாஞ்
சரீரத்தி லோரூன மானமெது வாகிலுஞ்
சமர்செய்து வரிலழக தாம்
நிகமேவு மதகரியி லேறினுந் தவறினு
நாளுமது வோரழக தாம்
நாலுமீதி லேறினும் வீழினுங் கண்டபேர்
நகைசெய்தழ கன்றென்பர் காண்
அகமாயு நற்றவர்க் கருள்புரியு மையனே!
ஆதியே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 45

நல்வினை செய்தோர்

சரணென்னக் காத்தவன் மெய்யினுல் வென்றவன்
ருனமினை யாதுதவி ஞேன்
தந்தைசொன் மருதவன் முன்னவற் கானவன்
தாய்பழி துடைத்தநெடி யோன்
வருபிதிர்க் குதவினேன் றெய்வமே துணையென்று
மைந்தன்மனை வியைவதைத் தோன்
மாருன தந்தையைத் தமையனைப் பிழைகண்டு
மாய்த்துலகின் மகிமைபெற் ருேன்
கருதரிய சிபியரிச் சந்திரன் மாபலி
கணிச்சியோன் சுழுத்திரை சுதன்
கருடன் பகீரத னுடன்சிறுத் தொண்டனெடு
கானவன் பிரகலா தன்
அரியவல் விபீஷண னெனுமகா புருடரா
மத்தனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 46

தீவினை செய்தோர்

வாயிகழ்வு பேசிமிகு வாழ்ஞிழந் தோன்சிவனை
வைதுதன் றலைபோயி ஞேன்
மற்றெருவர் தாரத்தி லிச்சைவைத் துடலெலா
மாருத் வடுவாயி ஞேன்
தாயத்தி னேர்க்குள்ள பங்கைக் கொடாமலே
சம்பத் திழந்துமாய்ந் தோன்
றக்கபெரி யோர்தமை வணங்கா மதத்தினுற்
றந்திவடி வாயலந் தோன்
மாயனைச் சபையதனி னிந்தைசெய் தொளிகொணவ
மணிமுடி துணிந்து மாய்ந்தோன்
வருநகுட னெடுத்தக்க னயிராவ தன்குருடன்
மகன்வழுதி சிசுபால னுடி
ஆயுமறி வாளரொடு தேவர்பணி தாளனே!
யவனிபுக ழருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 47

நன்னகர்

வாவிபல கூபமுட னுறருகு சேர்வதாய்
மலிகாத வழியினுளதாய்
வாழைகமு கொடுதெங்கு பயிராவ தாய்ச்செந்நெல்
வயல்கள்வாய்க் கால்களுள தாய்க்
காவிகம லங்குவளை சேரோரி யுள்ளதாய்க்
கனவர்த்த கர்கண் மறைவலோர்
காணரிய பலகுடிக ணிறைவுள்ள தாய்நல்ல
காவல னிருக்கை யுளதாய்த்
தேவரா லயமாடல் பாடலணி மாளிகை
சிறக்க வுளதாய்ச் சற்சனர்
சேருமிட மாகுமோ ரூர்கிடைத் ததிலதிக
சீவனமு மேகிடைத் தால்
ஆவலொ டிருந்திடுவ தேசொர்க்க வாசமென்
றறையலா மருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 48

தீநகர்

ஈனசா திகள்குடி யிருப்பதாய் முள்வேலி
யில்லில்லி னுக்குமுள தாய்
இணைமுலை திறந்துதந் தலைவிரித் திடுமாத
ரெங்குநட மாட்டமுள தாய்க்
கானமொரு பக்கமாய் மலையோர மாய்முறைக்
காய்ச்சறப் பாதவிட மாய்க்
கள்ளர்பய மாய்நெடிய கயிறிட் டிறைக்கின்ற
கற்கேணி நீருண்ப தாய்
மானமில் லாக்கொடிய துர்ச்சனர் தமக்கேற்ற
மணியமொன் றுண்டானதாய்
மாநிலத் தோர்தல மிருந்ததனில் வெகுவாழ்வு
வாழ்வதிலு மருநரகி லே
ஆனநெடு நாள்கிடந் தமிழ்தலே சுகமாகு
மமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 49

முழுக்கு நாள்

வருமோதி வாரந் தலைக்கெண்ணெ யானது
வடிவுமிகு வழகு போகும்
வளரீதிங்க ளுக்கதிக பொருள்சேரு மங்கார
வாரந் தனக் கிடர்வரும்
தீருமேவு புதனுக்கு மிகுபத்தி வந்திடும்
செம்பொனுக் குயரறிவு போம்
தேடிய பொருட்சேத மாம்வெள்ளி சனியெண்
செல்வமுண் டாயுளுண் டாம் [ணெய்
பரிகூர முளதாதி வாரந் தனக்கலரி
பௌமனுக் கானசெழு மண்
பச்சறுகு பொன்னவற் காமெருத் தூளொளிப்
பார்க்கவற் காகுமென வே
அரிதா வறிந்தபே ரெண்ணெய் சேர்த் தேமுழுக்
காடுவா ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 50

மருத்துவன்

தாதுப் பரீக்ஷைவரு காலதே சத்தொடு
சரீரலட் சணமறிந் து
தன்வந்த்ரி கும்பமுனி தேரர்கொங் கணர்சித்தர்
தமதுவா கடமறிந் து
பேதப் பெருங்குளிகை சுத்திவகை மாத்திரைப்
பிரயோக மோடுபஸ் மம்
பிழையாது மண்டூர செந்தூர லட்சணம்
பேர்பெறுங் குணவாக டம்
சோதித்து மூலிகா விதநிகண் டுங்கண்டு
தூயதை லம்லேகி யஞ்
சொல்பக்கு வங்கண்டு வருரோக நிண்ணயந்
தோற்றியே யமிர்தகர மாய்
ஆதிப் பெருங்கேள்வி யுடையனுயுர்வேத
னுகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 51

உண்மை யுணர்குறி

சோதிடம் பொய்யாது மெய்யென்ப தறிவரிய
சூழ்கிரக ணஞ்சாட்சி யாம்
சொற்பெரிய வாகடம் நிசமென்கை பேதிதரு
தூயமாத் திரைசாட்சி யாம்
ஆதியிற் செய்ததவ முண்டில்லை யென்பதற்
காளடிமை யேசாட்சி யாம்
அரிதேவ தேவனென் பதையறிய முதனூ
லரிச்சுவடி யேசாட்சி யாம்
நாதனே மாதேவ னென்பதற் கோருத்ர
நமகசம கஞ்சாட்சி யாம்
நாயேனை ரட்சிப்ப துன்பார மரியய
னுளுமர்ச் சனைசெய்சர ணத்
தாதிநா யகமிக்க வேதநா யகனென
அண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 52

பிறவிக்குண மாருமை

கலங்காத சித்தமுஞ் செல்வமுஞ் ஞானமுங்
கல்வியுங் கருணைவிளை வுங்
கருதரிய வடிவமும் போகமுந் த்யாகமுங்
கனரூப முளமங்கை யும்
அலங்காத வீரமும் பொறுமையுந் தந்திரமு
மாண்மையு மமுத மொழியு
மானவிச் செயலெலாஞ் சனனவா சனையினு
லாகிவரு மன்றி நிலமேல்
நலஞ்சேரு மொருவரைப் பார்த்தது பெறக்கருதி
னண்ணுமோ ரஸ்தாவி தன்
நற்சுவை தனக்குவர வேம்புதவ மேநெடிது
நாள்செயினும் வாராது காண்
அலங்கார மாகமலர் கொன்றைமா லிகைசூடு
மண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 53

ஊழ் வலி

கடலள வுரைத்திடுவ ரரிபிரம ருருவமுங்
காணும் படிக் குரைசெய்வார்
காசினியி னளவுபிர மாணமது சொல்லுவார்
காயத்தி னிலேமை யறிவார்
விடலறிய சீவநிலே காட்டுவார் மூச்சையும்
விடாமற் றடுத் தடக்கி
மேன்மேலும் யோகசா தனைவிளப் பாரெட்டி
விண்மீதி னுந்தாவு வார்
தொடலரிய பிரமநிலே காட்டுவா ரெண்வகைத்
தொகையான சித்தி யறிவார்
சூழ்வினை வரும்பொழுது சிக்கியுழல் வாரது
துடைக்கவொரு நான்முகற் கும்
அடைவ லவெனத்தெரிந் தளவில்பல நூல்சொல்லு
மண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 54

ஒப்புயர் வில்லாமை

வேதியர்க் கதிகமாஞ் சாதியுங் கனகமக
மேருவுக் கதிக மலையும்
வெண்டிரை கொழித்துவரு கங்கா நதிக்கதிக
மேதினியி லோடு நதியும்
சோதிதரு மாதவற் கதிகமாங் காந்தியுஞ்
சூழ்கனற் கதிக சுசியுந்
தூயதாய் தந்தைக்கு மேலான தெய்வமுஞ்
சுருதிக் குயர்ந்த கலையும்
ஆதிவட மொழிதனக் கதிகமா மொழியுநுக
ரன்னதா னந்தனிலு மோ
ரதிகதா னமுமில்லை யென்றுபல நூலெலா
மாராய்ந்த பேருரைசெய் வார்
ஆதவன் பிரமன்விண் ணவர்முனிவர் பரவவரு
மண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 55

வீண் செயல்

வேட்டகஞ் சேர்வோரும் வீணரே வீணுரை
விரும்புவோ ரவரின் வீணர்
விருந்துகண் டில்லா டனக்கஞ்சி யோடிமறை
விரகிலோ ரவரின் வீணர்
நாட்டந் தருங்கல்வி யில்லோரும் வீணரே
நாடியவர் மேற்கவி சொல்வார்
நானிலந் தனில்வீண ரவரினும் வீணரே
நரரைச் சுமக்கு மெளியோர்
தேட்டறிவி லாதபெரு வீணரே யவரினுஞ்
சேரொரு வரத்து மின்றிச்
செலவுசெய் வோரதிக வீணராம் வீணனுய்த்
திரியுமெளி யேனியாட் கொண்
டாட்டம் செயும்பதாம் புயமுடியின் மேல்வைத்த
வமலனே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 56

உதவியின்றிக் கெடுவன

மூப்பொருவ ரில்லாத குமரிகுடி வாழ்க்கையு
மூதர ணிலாத நகரும்
மொழியும்வெகு நாயகர் சேரிடமும் வருமெதுகை
மோனையில் லாதகவி யும்
காப்பமை விலாததோர் நந்தவன மும்நல்ல
கரையிலா நிறையேரி யுங்
கசடறக் கற்காத வித்தையு முபதேச
காரண னிலாத தெளிவும்
கோப்புள வினுதமுடை யோரருகு புகழாத
கோதையர்செய் கூத்தாட்ட முங்
குளிர்புன னிறைந்துவரு மற்றோர மதினின்று
கோடுயர்ந் தோங்கு தருவும்
ஆப்பதில் லாததே ரிவையெலா மொன்றுகு
மையனே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 57

இவையே போதுமெனல்

பொய்யாத வாய்மையுஞ் சீலமுஞ் சார்ந்துளோர்
பூவலஞ் செயவேண்டு மோ
பொல்லாத கொலைகள விலாதநன் னெறியுளோர்
புகழறஞ் செயவேண்டு மோ
நையாத கர்மத்தை லோபத்தை விட்டபேர்
நல்லறஞ் செயவேண்டு மோ
நன்மனே சுத்தியுண் டானபேர் மேலுமொரு
நதிபடிந் திடவேண்டு மோ
மெய்யாநி னடியரைப் பரவுவோ ருன்பதம்
விரும்பிவழி பட வேண்டுமோ
வேதியர் தமைப்பூசை பண்ணுவோர் வானவரை
வேண்டியர்ச் சனைசெய்வ ரோ
ஐயா றுடன்கமலை சோணை சலந்தில்லை
யதிபனே ! யருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 58

அரியராவோர்

பதின்மரி லொருத்தர்சபை மெச்சிடப் பேசுவோர்
பாடுவோர் நூற்றி லொருவர்
பார்மீதி லாயிரத் தொருவர்விதி தப்பாது
பாடிப்ர சங்கமிடு வோர்
இதனருமை யறிகுவோர் பதினாயிரத் தொருவ
ரிதையறிந் திதய மகிழ்வா
யீகின்ற பேர்புவியி லேயருமை யாகவே
யிலக்கத்தி லேயொருவ ராம்
துதிபெருக வருமூன்று காலமு மறிந்தமெய்த்
தூயர்கோ டியிலொருவ ராந்
தொல்லுலகு புகழ்காசி யேகாம் பரங்கைலை
சூழ மவினாசி பேரூர்
அதிகமுள வெண்காடு செங்காடு காளத்தி
யத்தனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 59

கற்பு மேம்பாடு

தன்கணவ னுருவமாய்த் தற்புணர வந்தோன்
றனக்கிணங் காத நிறையா
டழற்கதி ரெழாமலும் பொழுதுவிடி யாமலுஞ்
சாபங் கொடுத்த செயலாள்
மன்னிவள ரழன்மூழ்கி யுலகறிய வேதனது
மகிழ்நனைச் சேர்ந்த பரிவாள்
மைந்தனைச் சுடவந்த விறைவன் றடிந்தவடி
வாண்மாலை யான கனிவாள்
நன்னதி படிந்திடுவ தென்னவா ரழன்மூழ்கி
நாயகனை மேவு தயவா
ணுனிலம் புகழ்சாலி பேர்பெறு நளாயினி
நளினமலர் மேல் வைதேகி
அன்னமென வருசந்த்ர மதிதுரோ பதையென்ப
ராதியே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 60

கோடியுடுக்கு நாள்

கறைபடா தொளிசேரு மாதிவா ரந்தனிற்
கட்டலாம் புதிய சீலை
கலிமதிக் காகாது பலகாலு மழையினிற்
கடிது நனைவுற் றெழிதரும்
குறைபடா திடர்வரும் வீரியம் போமரிய
குருதிவா ரந்தனக் குக்
கொஞ்சநா ளிற்கிழியும் வெற்றிபோம் புந்தியிற்
குருவார மதிலணிந் தால்
மறைபடா தழகுண்டு மேன்மேலும் நல்லாடை
வருமினிய சுக்கிரற் கோ
வாழ்வுண்டு திருவுண்டு பொல்லாத சனியற்கு
வாழ்வுபோ மரண முண்டாம்
அறைகின்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்
கமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 61

சகுனம்

சொல்லரிய கருடன்வா னரமரவ மூஞ்சூறு
சூகரங் கீரி கலிமான்
றுய்யப்பரி ரத்வாச மட்டையெலி புன்கூகை
சொற்பெருக மருவு மாந்தை
வெல்லரிய கரடிகாட் டான்பூனை புலிமேல்
விளங்குமிரு நா வடும்பு
மிகவுரைசெ யிவையெலாம் வலமிருந் திடமாகில்
வெற்றியுண் டதிக நலமாம்
ஒல்லையின் வழிப்பயண மாகுமவர் தலைதாக்க
லொருதுடை யிருத்தல் பற்ற
லொருதும்ம லாணையிட லிருமல்போ கேலென்ன
வுபசுருதி சொல்லிவை யெலாம்
அல்லறரு நல்லவல வென்பர்முதி யோர்பரவு
மமலனே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 62

இதுவுமது

தரிமயில் பசுங்கிள்ளை கோழிகொக் கொடுகாக்கை
நாவிசிச் சிலியோந்தி தான்
நரையர்ன் கடுத்தவாய்ச் செப்போத் துடன்மேதி
நாடரிய சுரபி மறையோர்
வரியுழுவை முயலிவை யனைத்தும்வல மாயிடின்
வழிப்பயண மாகை நன்று
மற்றுமிவை யன்றியே குதிரையனு மானித்தல்
வாய்ச்சொல் வாவா வென்றிடல்
தருவனை தொனித்திடுதல் கொம்புகிடு முடிமுரசு
தப்பட்டை யொலிவல் வேட்டுத்
தன்மணி முழக்கெழுத லிவையெலா மூர்வழி
தனக்கேக நன்மை யென்பார்
அருண்கிர் ணைதயத் தருண்பா னுவையனைய
வண்ணலே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 63

இதுவுமது

தலைவிரித் தெதிர்வருத லொற்றைப் பிராமணன்
றவசி சன்னஞ்சி தட்டான்
தனமிலா வெறுமார்பி மூக்கறைபுல் விறகுதலை
தட்டைமுடி மொட்டைத் தலை
கலன்கழி மடந்தையர் குசக்கலஞ் செக்கான்
கதித்ததில தைல மிவைகள்
காணவெதிர் வரவொணா; நீர்க்குட மெருக்கூடை
கனிபுலா லுபய மறையோர்
நலமிகு சுமங்கலை கிழங்குசூ தகமங்கை
நாளும்வண் ணுளுழுக் கு
நசைபெருகு பாற்கலச மணிவளையன் மலரிவைக
ணுடியெதிர் வரநன்மை யாம்
அலைகொண்ட கங்கைபுனை வேணியாய் ! பரசணியு
மண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 64

உணவில் விலக்கு

கைவிலைக் குக்கொளும் பாலசப் பால்வருங்
காராக் கறந்த வெண்பால்
காளான் முருங்கைசுரை கொம்மடி பழஞ்சோறு
காந்திக் கரிந்த சோறு
செவ்வையில் சிறுக்கீரை பீர்க்கத்தி வெள்ளுப்பு
தென்னைவெல் லமலா வகஞ்
சீரிலா வெள்ளுள்ளி யீருள்ளி யிங்குவொடு
சிறப்பில்வெண் கத்தரிக் காய்
எவ்வமில் சிவன்கோயி னிர்மாலி யங்கிரண
மிளகுசுட ரில்லாத வூண்
இவையெலாஞ் சீலமுடை யோர்களுக் காகா
வெனப்பழைய நூலுரை செயும்
ஐவகைப் புலன்வென்ற முனிவர்விண் ணவர்போற்று
மமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 65

நற்பொருளிற் குற்றம்

பேரான கங்கா நதிக்குமதன் மேல்வரும்
பேனமே தோஷ மாகும்
பெருகிவிளர் வெண்மதிக் குள்ளுட் களங்கமே
பெரிதான தோஷ மாகும்
சீராந் தபோதனர்க் கொருவர்மேல் வருகின்ற
சீற்றமே தோஷமாகும்
தீதின்முடி மன்னவர் விசாரித் திடாதொன்று
செய்வதவர் மேற்றோஷ மாஞ்
தாராள மாமிகத் தந்துளோர் தாராமை
தானிரப் போர்தோஷ மாஞ்
சாரமுள நற்கருப் பஞ்சாறு கைப்பதவர்
தாலஞ்செய் தோஷ மாகும்
ஆராயு மொருநான் மறைக்குமெட் டாதொளிரு
மண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 66

மனைகோலுவதற்கு மாதம்

சித்திரைத் திங்கடனின் மனை கோல மனைபுகச்
செல்வமுண் டதினுநல மே
சேரும்வை காசிக்கு மேனு ளரன்புரந்
தீயிட்ட தானி யாகா
வெற்றிகொ ளிராகவன் றேவிசிறை சேர்கடகம்
வீறல்ல வாவணி சுகம்
மேவிடுங் கன்னியிர ணியன்மாண்ட தாகாது
மேன்மையுண் டைப்ப சிக் கே
உத்தமங் கார்த்திகைக் காகாது மார்கழியி
லோங்கு பாரதம் வந்ததா
ளுயர்வுண்டு காரத்தின் மாசிமா தத்தில்விட
மும்பர்கோ னுண்ட தாகா
தத்த! நீ மார்னை யெரித்தபங் குனிதானு
மாகுமோ அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 67

விருந்து வாரம்

செங்கதிர்க் குறவுபோம் பகைவரும் விருந்தொருவர்
செய்யொணு துண்ணொ ணுது
திங்களுக் குறவுண்டு நன்மையாம் பகைவருஞ்
செவ்வாய் விருந்தருந் தார்
பொங்குபுத னன்மையுண் டுறவாம் விருந்துணப்
பொன்னவற் கதிகபகை யாம்
புகரவற் காகிலோ நெடுநாள் விரோதமாய்ப்
போனவுற வுந்திரும் பும்
மங்குனிகர் சனிவார நல்லதா மிதனினு
மனமொத் திருந்த விடமே
வாலாய மாய்ப்போய் விருந்துண விருந்துதவ
வாய்த்த நாளென் றறியலாம்
அங்கையில் விளங்கிவளர் துங்கமழு வாளனே !
அண்ணலே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 68

பூப்பு வாரம்

அருக்கனுக் கதிரோகி யாவணற் சோமனுக்
கானகற் புடைய ளாவா
ளங்கார கற்குவெகு துக்கியா வாள்புந்தி
யளவில்பைங் குழவிபெறு வாள்
திருத்தகு வியாழத்தின் மிக்கசம் பத்திஞெடு
சிறுவரைப் பெற்றெடுப் பாள்
சீருடைய பார்க்கவற் கதிபோக வதியுமாந்
திருவுமுண் டாயிருப் பாள் [வாள்
கருத்தழிந் தெழில்குன்றி வறுமைகொண் டலகு
காரி வாரத்தி லாகில்
களபமுலை மடமாதர் புட்பவதி யாம்வார
காலபல மென்றுரை செய்வார்
அருத்தியுட னெளியேனை யாட்கொண்ட சோதியே!
அண்ணலே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 69

பூப்பிலக்கணம்

வறுமைதப் பாதுவரு மேடத்தி லிடபத்தின்
மாருது விபசாரி யாம்
வாழ்வுண்டு போகமுண் டாகுமிது னங்கடகம்
வலிதினிற் பிறரை யணைவாள்
சிறுமைசெயு மிடிசேர்வண் மிருகேந் திரற்கெனிற்
சீர்பெறுவள் கன்னி யென்னில் [வ
செட்டுடை யடுலையெனிற் பிணியான் மெலிந்திடு
டேளினுக்குத் தனுசெ னில்
தெறிசிதைவள் பூருவத் தபரநெறி யுடையளா
நீண்மகர மான மிலளா
நிறைபோக வதிகும்ப மெனின்மீன மென்னிலோ
நெடியபே ரறிவுடைய ளாம்
அறிவாளர் மடமாதர் தமையறியி ராசிபல
னதுவென்ப ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 70

தீவுங் கடலும்

நாவலந் தீவினைச் சூழ்கருங் கடலளவு
லட்சம்யோ சனையிதனை யே
நாடொறுஞ் சூழ்வதில வந்தீ வதைச்சூழ்த
னற்கழைச் சாற்றின் கடல்
மேவுமிது சூழ்வது குசத்தீ வதைச்சூழ்தன்
மிகுமதுக் கட லதனையே
விழைவொடுஞ் சூழ்தல்கிர வுஞ்சதீ வம்மிதனின்
மேற்சூழ்த னெய்க்கட லதாம்
பூவிலிது சூழ்தல்சா கத்தீவ மிங்கிதைப்
போர்ப்பது திருப்பாற் கடல்
போதவது சூழ்தல்சான் மலிதீவ மாந்தயிர்ப்
புணரியப் பாலுமப் பால்
ஆவலுறு புட்கரந் தீவா மிதைச்சூழ்வ
தரும்புனற் றருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 71

மேலான பொருள்

சுழிசுத்த மாயிருந் ததிலும் படைக்கான
துரகமோர் மாணிக்க மாஞ்
சூழ்புவிக் கரசனு யதிலே விவேகமுள
துரையுமோர் மாணிக்க மாம்
பழுதற்ற வதிரூப வதியுமாய்க் கற்புடைய
பாவையோர் மாணிக்க மாம்
பலகலைகள் கற்றறி யடக்கமுள பாவலன்
பார்க்கிலோர் மாணிக்க மாம்
ஒழிவற்ற செல்வனு யதிலே தியாகியா
முசிதனேர் மாணிக்க மா
முத்தம குலத்துதித் ததிலுமோ மெய்ஞ்ஞான
முடையனேர் மாணிக்க மாம்
அழிவற்ற வேதாக மத்தின்வடி வாய்விளங்
கமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 72

உண்டியிலையும் முறையும்

வாழையிலை புன்னைபுர சுடனற் குருக்கத்தி
மாப்பலாத் தெங்கு பன்னீர்
மாசிலமு துண்ணலா முண்ணுத:வோவரசு
வனசஞ் செழும் பாடலம்
தாழையிலை யத்தியா லேரண்ட பத்திரஞ்
சகதேவ முண்முருக் குச்
சாருமிவை யன்றிவெண் பாலெருக் கிச்சிலிலை
தனினுமுண் டிடவொணு தால்
தாழ்விலாச் சிற்றுண்டி நீரடிக் கடிபருகல்
சாதங்கள் பல வருந்தல்
சற்றுண்டன் மெத்தவூ ணித்தனையு மெய்ப்பிணி
தனக்கிட மெனப்பருகி டார்
ஆழிபுடை சூழுலகில் வேளாளர் குலதிலக
னுகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 73

கவிஞர் வறுமை

எழுதப் படிக்கவகை தெரியாத மூடனை
யிணையிலாச் சேட னென்று
மீவதில் லாதகன லோபியைச் சபையதனி
லிணையாகக் கர்ண னென்றும்
அழகற்ற வெகுகோர ரூபத்தை யுடையோனை
யதிவடிவ மார னென்று
மாயுத மெடுக்கவுந் தெரியாத பேடிதனை
யாண்மைமிகு விஜய னென்றும்
முழுவதும் பொய்சொல்லி யலைகின்ற வஞ்சகனை
மொழியரிச் சந்த்ரனென் றும்
மூதுலகி லிவ்வணஞ் சொல்லியே கவிராஜர்
முறையின்றி யேற்ப தென்னே?
அழலென வுதித்துவரு விடமுண்ட கண்டனே!
அமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 74

கவிஞன்

தெள்ளமிர்த தாரையென மதுரங் கதித்தபைந்
தேன்மடை திறந்த தெனவே
செப்புமுத் தமிழினெடு நாற்கவிதை நாற்பொரு
டெரிந்துரைசெய் திறமை யுடனே
விள்ளரிய காவியத் துட்பொரு ளலங்காரம்
விரிவிலக் கணவிகற் பம்
வேறுமுள தொன்னூல் வழக்குமுல கத்தியல்பு
மிக்கப்ர பந்த வண்மை
உள்ளவெல் லாமறிந் தலையடங் குங்கடலை
யொத்ததிக சபைகண்ட போ
தோங்கலை யொலிக்கின்ற கடல்போற்ப்ர சங்கம
துரைப்பவன் கவிஞ னுகும்
அள்ளிவிட முண்டகனி வாயனே! நேயனே!
அமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 75

நற்சார்பு

காணரிய பெரியோர்க டரிசனம் லபிப்பதே
கண்ணிணைகள் செய்புண்ணி யம்
கருணையா யவர்சொன்மொழி கேட்டிட லபிப்பதே
காதுசெய் திடுபுண்ணி யம்
பேணியவர் புகழையே துதிசெய லபித்திடுதல்
பேசில்வாய் செய்புண்ணி யம்
பிழையாம லவர்தமைத் தொழுதிட லபிப்பதுகை
பெரிது செய்திடு புண்ணியம்
வீணைறி செலாமலவர் பணிவிடை லபிப்பதுதன்
மேனிசெய் திடுபுண்ணி யம்
விழைவொடவர் சொற்படி நடந்திட லபிப்பதுதன்
மிக்கபூ ருவபுண்ணி யம்
ஆணவ மெனுங்கஞ கஞந்தறி வினைத்தந்த
வண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 76

பிறந்த நாளோடு வருகின்ற வார பலன்

சென்மநட் சத்திரத் தாதிவா ரம்வரிற்
றீரா வலைச்ச லுண்டாம்
திங்களுக் காகில்வெகு சுகபோ சனத்தினெடு
திருமாதி னருளு முண்டாம்
வன்மைதரு மங்கார வாரம்வந் தாற்சிறிதும்
வாராது சுகம தென்பார்
மாசில்பல கலைபயில்வர் மேன்மையாம் புந்தியெ
வாரத்து டன்கூடி னுல் [னும்
தன்மைதரு குருவார மதுசேர்ந்து வரிலாடை
நன்மையுட னேவந்தி டும்
நாரிய ருடன்போக மிகவுமுண் டொருவெள்ளி
நல்ல வாரத்தில் வந்தால்
அன்மருவு பீடையுண் டாமென்பர் சநியனுக்
கமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 77

இதனை யுடையவர்க்கு இது வில்லையெனல்

பொன்னுசை யுள்ளவர்க் குறவேது குருவேது
பொங்குபசி யுள்ளபேர்க் குப்
போதவே சுசியேது ருசியேது மயல்கொண்டு
பொதுமாதர் விழிவலையி லே
எந்நாளு மலைபவர்க் கச்சமொடு வெட்கமே
தென்றென்று முறுகல்வி மே
லிச்சையுள பேர்க்கதிக சுகமேது துயிலேது
வெளிதா யிருந்து கொண்டே
பன்னுளு மலைபவர்க் கிகழேது புகழேது
பாரிலொரு வர்க்கதிக மே
பண்ணியிடு மூடருக் கறமேது மறமலாற்
பகர்நிரைய மொன்றுளது காண்
அன்னுண வருகரி யுரித்தணியு மெய்யனே !
அமலனே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 78

மழைநாட் குறிப்பு

சித்திரைத் திங்கள்பதின் மூன்றுக்கு மேனல்ல
சீரான பரணி மழையுந்
தீதில்வை காசியிற் பூரணக ழிந்தபின்
சேருநா லாநாளி னில்
ஒத்துவரு மழையுமவ் வானியிற் றேய்பிறையி
லோங்குமே காதசியி னில்
ஒளிர்பரிதி வீழ்பொழுதின் மந்தார மும்மழையு
முண்டாயி ருந்தாடி யில்
பத்திவரு தேதியைந் தினிலாதி வாரமும்
பகரு மாவணி மூலநாள்
பரிதியு மறைந்திடக் கனமழை பொழிந்திடப்
பாரில்வெகு விளைவு முண்டாம்
அத்தனே ! பைங்குவளை மாலையணி மார்பனு
மண்ணலெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 79

இருந்து முதவாமை

சமயத்தி லுதவாத நிதியமேன் மிக்கதுயர்
சார்பொழு திலாதகிளை யேன்
சபைமுகத் துதவாத கல்வியே னெதிரிவரு
சமரத் திலாத படையேன்
விமலனுக் குதவாத பூசையேனுளமிருள்
வேளைக் கிலாத சுடரேன்
வெம்பசிக் குதவாத வன்னமே னீடுகுளிர்
வேளைக் கிலாத கலையேன்
தமதுதளர் வேளைக் கிலாதவோர் மனைவியேன்
சரசத் திலாத நகையேன்
சாமரண காலத்தி லுதவாத புதல்வனேன்
தரணிமீ தென்பர் கண்டாய்
அமரர்க்கு முனிவர்க்கு மொருவர்க்கு மெட்டாத
ஆதியே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 80

மறையோர் சிறப்பு

ஓராறு தொழிலையுங் கைவிடார் சௌசவிதி
யொன்று தப்பாது புரிவார்
உதயாதி யிற்சென்று நீர்படிகு வார்கால
மொருமூன்றி னுக்கு மறவா
தாராய்ந்து காயத்ரி யதுசெபிப் பார்நாளு
மதிதி பூசைகள் பண்ணுவார்
யாகாதி கருமங்கள் மந்த்ரகிரி யாலோப
மின்றியே செய்து வருவார்
பேராசை கொண்டிடார் வைதிகநன் மார்க்கமே
பிழையா திருக்கு மறையோர்
பெய்யெனப் பெயுமுகி லவர்மகிமை யெவர்களும்
பேசுதற் கரிதரிது காண்
ஆரார் நெடுஞ்சடில வமலனே ! எனையாளு
மண்ணலே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுரகி ரிவள
ரறப்பளீ சுர தேவனே! 81

அரசர் சிறப்பு

மநுநீதி முறைமையும் பரராசர் கொண்டாட
வருமதிக ரணவீர மும்
வாள்விஜய மொடுசர்ச சாதன விசேஷ மும்
வாசி மதகரி யேற்றமும்
கனமா மமைச்சரும் பலமான துர்க்கமுங்
கைகண்ட போர்ப் படைஞருங்
கஜரத பதாதியுந் துரகப்ர வாகமுங்
கால தேசங்க ளெவையும்
இனிதா யறிந்ததா னுதிபர்க ளொடுசமர்க்
கிளையாத தள கர்த்தரு
மென்றும்வற் றுதன தானிய சமுத்திரமு
மேற்றமுள குடி வர்க்கமும்
அனைவோரு மெச்சவிங் கிவையெலா முடையபே
ரரசரா மருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 82

வைசியர் சிறப்பு

நீள்கடல் கடந்திடுவர் மலையாள மும்போவர்
நெடிது தூரந் திரிந்து
நினைவுதடு மாறுர்கள் சலியார்கள் பொருள்தேடி
நீணிலத் தரசு புரியும்
வாளுழவ ரைத்தமது கைவசஞ் செய்வார்கள்
வருமிடம் வராத விடமும்
மனதையு மறிந்துதவி யொன்றுநூ றுயிட
வளர்ப்பர்வரு தூலை துலைக்கும்
ஆள்விடுவர் மலிவுகுறை வதுவிசா ரித்தி ருவ
ரளவில் பற்பல சரக்கு
மமைவுறக் கொள்வர்விற் பார்கணக் கதிலணுவு
மறவிடார் செல்வு வரிலோ
ஆளியொத் தேமலியி னளவுங் கொடுத்திடுவ
ரருள்வைஸ்ய ரருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 83

வேளாளர் சிறப்பு

யசனுதி கருமமுந் தப்பாமல் வேதிய
ரியற்றிநல் லோர் பெறுவதும்
இராச்யபா ரஞ்செய்து முடிமன்னர் வெற்றிகொண்
டென்றுநல் லோர் பெறுவதும்
வசனுதி தப்பாது தனதானி யந்தேடி
வசியர்நல் லோர் பெறுவதும்
மற்றுமுள பேரெலா மிடியென் றிடாததிக
வளமைபெற் றோர் பெறுவதுஞ்
சிசைதோறு முள்ளபல தேவா லயம்பூசை
செய்யநல் லோர் பெறுவதுஞ்
சீர்கொண்ட பைங்குவளை மாலைபுனை வேளாளர்
செய்யு மேழிப் பெருமைகாண்
அசையாது வெள்ளிமலை தனின்மேவி வாழ்கின்ற
அண்ணலே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 84

தானுதிபதி மந்திரி சேனுதிபதிகளி னியல்பு

தன்னரசன் வலிமையும் பரராச ரெண்ணமுஞ்
சாலமேல் வரு கருமமுந்
தானறிந் ததிபுத்தி யுத்தியுண் டாயினேன்
ருனுதி பதியாகு வான்
மன்னவர் மனத்தையுங் காலதே சத்தையும்
வாழ்குடி படைத் திறமையும்
மந்திரா லோசனையு மெல்லா மறிந்தவன்
வளமான மதி மந்திரி
துன்னிய படைக்குணங் கரிபரி பரீக்ஷையே
சூழ்பகைவர் புரி சூழ்ச்சியுந்
தோலாத வெற்றியுந் திடமான சித்தியுள
சூரனே சேனுதி பன்
அன்னையினு நல்லமலை மங்கைபங் காளனே !
அனகனே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 85

இராஜ கருணீகர் சிறப்பு

வருமோலை யுத்தரத் தெழுதிவரு பொருளினுல்
வரவிடுப் போன் மனதையும்
மருவிவரு கருமமுந் தேசகா லத்தையும்
வருகரத லாமலக மாய்
விரைவா யறிந்தரச ரெண்ணிலெண் ணினையள
விடவெழுத வாசிக்க வும்
வெற்றிகொண் டேபெரிய புத்தியுடை யோன்புவி
மேன்மை ராயச காரனும் [யின்
கருவா யறிந்துதொகை யீராறு நொடியினிற்
கடிதேற் றிடக் குறைக்கக்
கடுகையொரு மலையாக மலையையொரு கடுகுமாக்
காட்டுவோன் கருணீக னும்
அருவாகி யுருவாகி யொளியாகி வெளியாகு
மண்ணலே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 86

கோபத்தின் கொடுமை

கோபமே பாவங்க ளுக்கெலாந் தாய்தந்தை
கோபமே குடி கெடுக்குங்
கோபமே யொன்றையுங் கூடிவர வொட்டாது
கோபமே துயர் கொடுக்கும்
கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு
கோபமே யுற வறுக்குங்
கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி
கோபமே கருணை போக்கும்
கோபமே யீனமாங் கோபமே யெவரையுங்
கூடாம லொருவ னுக்குங்
கோபமே மறலிமுன் கொண்டுபோய்த் தீயநர
கக்குழியி னிற்றள்ளு மால்
ஆபத்தெ லாந்தவிர்த் தென்னையாட் கொண்டருளு
மண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 87

பல்துறை

தான்புரி தவத்தையுங் கொடையையும் புகழுவோர்
தங்களுக் கவை தழைவுறு
சற்றுமறி வில்லாம லந்தணரை நிந்தணை செய்
தயவிலோ ராயுள் பெருகார்
மேன்படு நறுங்கலவை மாலுதயிர் பால்புலால்
வீடுநற் செந்நெ லிவைகள்
வேறெருவர் தந்திடினு மநுமொழி யறிந்தபேர்
விலைகொடுத் தேகொள்ளு வார்
தேன்கனி கிழங்குவிற கிலையிவை யனைத்தையுந்
தீண்டரிய நீச ரெனினுஞ்
சீர்பெற வளிப்பரே லிகழாது கைக்கொள்வர்
சீலமுடை யோரென்ப ரால்
ஆன்கொடி யுயர்த்தவுமை நேசனே! ஈசனே!
அண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 88

தத்துவத் திரயம்

பூதமோ ரைந்துடன் புலனைந்து ஞானம்
பொருந்து மிந்திரிய மைந்து
பொருவில்கன் மேந்திரிய மைந்துமன மாதியாம்
புகலரிய கரண நான்கும்
ஓதிநே ரிவையான்ம தத்துவ மெனச்சொல்வ
ருயர்கால நியதி கலையோ
டோங்கிவரு வித்தைரா கம்புருடன் மாயையென்
றுரைசெய்யு மோரேழு மே
தீதில்வித் யாதத்வ மென்றிடுவ ரிவையலாற்
றிகழ்சுத்த வித்தை யீசன்
சீர்கொள்சா தாக்கியஞ் சத்திசிவ மைந்துமே
சிவதத்வ மென் றறைகுவார்
ஆதிவட நிழலிற் சனகாதி யர்க்கருள்செய்
அண்ணலே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 89

மன்மதபாணமும் அவற்றின் குணமுதலியவும்

வனசஞ் செழுஞ்சூத முடனசோ கந்தளவ
மலர்நீல மிவை யைந்துமே
மாரவேள் கணைகளா மிவைசெயுங் குணமுளரி
மனதி லாசையை யெழுப்பும்
வினவிலொண் சூதமலர் மெய்ப்பசலை யுண்டாக்கு
மிகவசோ கந்துயர் செயும்
வீழ்த்திடுங் குளிர்முல்லை நீலமுயிர் போக்கிவிடு
மேவுமிவை செயு மவத்தை
நினைவிலது வேநோக்கம் வேறென்றி லாசையற
நெட்டுயிர்ப் பொடு பிதற்ற
னெஞ்சந் திடுக்கிடுத லனம்வெறுத் திடல்காய்ச்ச
னேர்தன் மௌனம் புரிகுதல்
அனையவுயி ருண்டில்லை யென்னலீ ரைந்துமா
மத்தனே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 90

மன்மதன் உபகரணங்கள்

வெஞ்சிலை செழுங்கழைவி ஞரிகரு வண்டின
மேல்விடுங் கணைக ளலராம்
வீசிடுந் தென்றறேர் பைங்கிள்ளை யேபரிகள்
வேழங் கெடாத விருளாம்
வஞ்சியர் பெருஞ்சேனை கைதையுடை வாணடிய
வண்மைபெறு கடன் முரசமாம்
மகரம் பதாகைவரு கோகில்ங் காகளம்
மனதே பெரும் போர்க்களம்
சஞ்சரிக விசைபாடல் குழுதநே யன்கவிகை
சாரிரதி யேமனைவி யாந்
தருகண்மட மாதரிள முலைமகுட மாமல்கு
றவரு திருக்கு மிடமாம்
அஞ்சுகணை மாரவேட் கென்பரெளி யோர்க்கெலா
மமுதமே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 91

பகைகொளத் தகாதவர்

மன்னவ ரமைச்சர்துர்ச் சனர்கோளர் தூதரொடு
மாறுத மர்ம முடையோர்
வலுவர்கரு ணீகர்மிகு பாகஞ்செய் தன்னமிடு
மடையர் மந்திர வாதியர்
சொன்னமுடை யோர்புலைய ருபதேச மதுசெய்வோர்
சூழ் வயித்தியர் கவிதைகள்
சொற்றிடும் புலவரிவர் பதினைந்து பேரொடுஞ்
சொப்பனந் தனி லாகினும்
நன்னெறி யறிந்தபேர் பகைசெய் திடார்களிந்
நானிலத் தென்பர் கண்டாய்
நாரியோர் பாகனே ! வேதாக மம்பரவு
நம்பனே ! அன்பர் நிதியே !
அன்னமூர் பிரமனுங் கண்ணனுங் காணுத
அண்ணலே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 92

இதாகிதஞ் செய்து பயன் கொள்வன

சுவைசேர் கரும்பைவெண் பாலைப் பருத்தியைச்
சொல்லுநன் னெல்லை யெள்ளைத்
தூயதெங் கின்கனியை யெண்ணுத துட்டரைத்
தொண்டரைத் தொழு தொழும்பை
நவைதீரு மாறுகண் டித்தே பயன்கொள்வர்
நற்றமிழ்க் கவி வாணரை
நலமிக்க செழுமலரை யோவிய மெனத்தக்க
நயமுள்ள நாரியர் தமைப்
புவிமீது லுங்கார நெஞ்சரைச் சிறுவரைப்
போர் வீரரைத் தூயரைப்
போதவும் பரிவோ டிதஞ்செய்து மிகுபயன்
புகழ்பெறக் கொள்வர் கண்டாய்
அவமதி தவிர்த்தென்னை யாட்கொண்ட வள்ளலே !
அண்ணலே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 93

தரும்ம்

பெறுமில்பெரு வித்தலொடு காதோலை நாடோறும்
பிள்ளோக ளருந்திடும் பால்
பேசரிய சத்திர மடமா வுரிஞ்சுகல்
பெண்போக நாவிதன் வணுன்
மறைமொழிக ணுடிதண் ணீர்தலைக் கெண்ணெய்பசு
வாயினுறை பிண மடக்கல்
வாவியிறு முயிர்மீட்ட றின்பொரு ளடைக்காய்
வழங்கல் சுண்ணும் புதவுதல்
சிறையுறு பவர்க்கமுது வேற்றிலங் காத்தல்பொழில்
செய்தமுன் னூலின் மணந்
திகழ்விலங் கூண்பிச்சை யறுசமய ருக்குண்டி
தேவ ராலய மவுஷதம்
அறைதல்கற் போர்க்கன்ன நாலெட் டறங்களுமு
னன்னசெய லருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 94

இல்லறம்

தந்தைதாய் சற்குருவை யிட்டதெய் வங்களைச்
சன்மார்க்க முள மனவியைத்
தவருத சுற்றத்தை யேவாத மக்களைத்
தனநம்பி வருவோர் களைச்
சிந்தைமகிழ்வெய்தவே பணிவிடைசெய் வோர்களைத்
தென்புலத் தோர்வறிஞ ரைத்
தீதிலா வதிதியைப் பரிவுடைய துணவரைத்
தேனுவைப் பூசுரர் தமைச்
சந்ததஞ் செய்கடனை யொன்றுமிவை பிழையாது
தான்புரிந் திட லில்லறஞ்
சாருநல முடையராந் துறவறத் தோருமிவர்
தம்முடன் சரியா யிடார்
அந்தரி யுயிர்க்கெலாந் தாய்தனினு நல்லவட்
கன்பனே ! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 95

புராணம்

தகுமைசேர் பௌடிக மிலிங்கமார்க் கண்டமெழில்
சாரும் வாமன மச்சமே
சைவம் பெருங்கூர்மம் வருவரா கங்கந்த
சரிதமே பிர மாண்டமும்
நிகுமைசே ரிப்பத்து முயர்சிவ புராணமா
நெடியமால் கதை வைணவம்
நீதிசேர் காருட நாரதம் பாகவத
நீடிய புராண நான்காம்
கலிவலர்சொல் பதுமமொடு பிரமகை வர்த்தமே
கமலா லயன் காதையாம்
கதிரவன் காதையே சூரிய புராணமாங்
கனல்காதை யாக்கி னேயம்
அலைகொண்ட நதியும்வெண் மதியுமறு கும்புனையு
மத்தனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 96

புகழ்ச்சி

பருகாத வமுதொருவர் பண்ணுத பூஷணம்
பாரின் மறையாத நிதியம்
பரிதிகண் டலராத நிலவுகண் டுலராத
பண்புடைய பங்கே ருகம்
கருகாத புயல்கலைக ளருகாத திங்கள்வெங்
கானி லுறையாத சீயங்
கருதரிய விக்குண மனைத்துமுண் டானபேர்
காசினியி லருமை யாகும்
தெரியவுரை செய்யின்மொழி கீர்த்திவரு கல்வியொடு
சீரிதய மீகை வதன்ந்
திடமான வீரமிவை யென்றறிகு வார்களிச்
செகமெலாங் கொண்டாட வே
அருள்கற்ப தருவென்ன வோங்கிடுந் தானதுரை
யாகுமெம தருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 97

திருமால் அவதாரம்

சோமுகா சுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச்
சுருதிதந் தது மச்சமாஞ்
சுரர்தமக் கமுதீந்த தாமையாம் பாய்போற்
சுருட்டிமா நிலமெடுத் தே
போமிரணி யாக்கதனை யுயிருண்ட தேனமாம்
பொல்லாத கனக னுயிரைப்
போக்கியது நரசிங்க முலகளந் தோங்கியது
புனித வாமன மூர்த்தியாம்
ஏழுறு மிராவணனை வென்றவ னிராகவ
னிரவிகுலம் வேரறுத் தோ
னேர்பரசி ராமன்வரு கண்ணனெடு பலராம
னிப்புவி பயந் தவிர்த்தோர்
ஆமினிய கற்கியினி மேல்வருவ திவைபத்து
மரிவடிவ மருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 98

சிவமூர்த்தி

பிறைசூடி யுமைநேசன் விடையூர்தி நடமிடும்
பெரியனுயர் வதுவை வடிவன்
பிச்சாட னன்காம தகனன்மற லியைவென்ற
பெம்மான் புரந் தகித்தோன்
மறமலி சலந்தரனை மாய்த்தவன் பிரமன்முடி
வெளவினனென் வீரே சுரன்
மருநர சிங்கத்தை வென்றவர னுமைபாகன்
வனசரன் கங்கா ளனே
விறன்மேரு சண்டேச ரக்ஷிகன் கடுமாந்தி
மிக்கசக் கர முதவினனென்
விநாயகற் கருள்செய்தோன் குகனுமை யுடன்கூடி
மிளிரேக பாதன் சுகன்
அறவரிய தக்ஷிண மூர்த்தியொ டிலிங்கமா
மையனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே! 99

கவி வணக்கம்

மலரிதழி பைங்குவளை மென்முல்லை மல்லிகை
மருக்கொழுந் துயர் கூவிளம்
மற்றுமுள வாசமலர் பத்திரஞ் சிலர்சூட
மணிமுடி தனிற் பொறுத்தே
சிலரெருக் கொடுவனத் துட்பூளை பச்சறுகு
செம்முள்ளி மலர் சூடவே
சித்தம்வைத் திடவுமங் கீகரித் திடுமகா
தேவ தேவா! தெரிந்தே
கலிவல ருரைக்குநன் கவியொடம் பலவாண
கவிராய னுகு மென்புன்
கவியையுஞ் சூடியே மனமகிழ்ந் திடுவதுன்
கடனுகு மடனுக மும்
அலிபெருகு கங்கையுஞ் செழுமதிய மும்புனையு
மமலனே! அருமை மதவே
ளனுதினமு மனதினினை தருசதுர கிரிவள
ரறப்பளீ சுர தேவனே!

மூற்றிற்று.

சிதம்பரம்பிள்ளை அவர்கள்

இயற்றிய

3. கயிலாசநாதர் சதகம்

காப்பு

நேரிசை வெண்பா

சீரார் கயிலாச தேவன்மிசை யான்சதகம்
பாராரும் பைந்தமிழாற் பாடவே—ஏராரு
மிந்துநதிச் செஞ்சடிலத் தெந்தைதரு மைந்துகரக்
கந்தமதத் தந்திமுகன் காப்பு.

கடவுள் வாழ்த்து

ஆசிரிய விருத்தம்

சீர்மேவு திங்களணி தேவனே வண்மைபெறு
தில்லைவளர் நடராசனே
செங்கண்மா லயனுநின் னடிமுடிகள் காணுமற
றேடிய மஹாதேவனே
தார்மேவு பொங்கர வணிந்தசிவ சம்புவே
சங்கரா கங்காதரா
தயாபர விநோதமெய்ஞ் ஞானச் சொரூபனே
சண்முகனை யீன்ற கோவே
யேர்மேவு முப்பத்து முக்கோடி தேவர்க
ளிறைஞ்சிடு மலர்ப்பாதனே
யெழின்மிகு கரத்தினின் மான்மழு தரித்தவோ
ரெந்தையே யெனை யாளுவாய்
கார்மேவு சோலையொடு சங்கமா நதிசூழ்ந்த
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே.

நூல்

செய்யுள் வகை

நால்வகைச் சாதியும் பலவகையி னீதியொடு
நாற்கவிகள் சொலு முறைமையு
நவில்பரம லோபிநன் னடக்கைபண் டிதர்முறை
நாலெட்டி ராகவிதமுஞ்
சால்புயர் புராணமொடு வேந்தர்கலி யாண்டநா
டத்துவ மணித்தி னியல்புஞ்
சகலநற் கணிதசாத் திரமட்ட வர்க்கமுந்
தகுசகுன லட்சணமுட
னூல்களிற் சரசாஸ்திர மேன்மைபெறு கொக்கோக
நூலிஞ்சு கர்ப்போட்டமு
நுண்மையாங் கந்துகத் தியல்புசா முத்திரிக
நூன்மர பெலாமி தனிலே
காலமுத லியாவரு மறிந்திட வுரைத்தனன்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 2

வேதியர் சிறப்பு

ஆகம புராணகலை சாத்திரத் துண்மையுண
ரதிமந்திர பல மகிமையும்
யாகாதி கருமமோ டியமநிய மங்களு
மநுட்டான விதிமு றைமையும்
யோகநெறி வழுவாது காலநீ ராடலு
முவந்திடலு மெக்ய வோம
முள்ளமகிழ் சீலமுங் காயத்ரி நிலைமையு
முயர்வேத மோது சீரும்
பாகமிகு மவுபாச மர்க்கியபாத் தியமுமெய்ப்
பயனுதவு கிரியை யாவும்
பனிரண்டு மாதமுந் தவருது புரிவரிப்
பன்புமறை யோர்பெருமை காண்
காகனக வாழ்வுதரு மாமலைகள் சூழுமுயர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 3

அரசர் சிறப்பு

நீதிநெறி வழுவாது செங்கோ னடாத்துவது
நிலைமையது கோடாமலு
நிறைகுடியி லபிமான மொடுமந்திரி யோசனையு
நீள்சத்திய மிகுதானமுஞ்
சாதிமுறை யவரவர்க் கேற்ற மரியாதையுஞ்
சதுர்வித வுபாயங்களுஞ்
சர்வவுயி ரியாவையுந் தன்னுயிர்பொ லெண்ண
சதுரங்க சேனபலமும் [லுஞ்
வாதிபிரதி வாதிகள் வழக்கினடு நிலைமையது
மாருது முடிபுசொல்லு
மாதளக் கர்த்தர்பிர தானிதா னுபதிசூழ்
மகிமையும் வெற்றி வளமுங்
காதல்சே ரிவையெலா மரசர்கட் குரியவாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 4

வைசியர் சிறப்பு

வந்தமுத லீச்செலவி டார்கணூற் றுக்கொண்று
வட்டியுங் கொள்வர் மிக்க
வண்டப் புரட்டர்முறி தந்துதங் கட்கடகு
வைக்கினுங் கடனளிக்கார்
தந்திடும் பற்றுவர விற்பிசகி டார்சொன்ன
தவணைசற் றெனினும் வழுவார்
தந்நாண யக்காரர் கேட்டனுப்பினு மிங்கு
தாமதித்தே கொடுப்பார்
பந்துசன மெனினுநா ணயமிலா தவரெனிற்
பணத்திலுறு தூசுங் கொடார்
பாவாண ரைக்காணி லுபசரித் தேநல்ல
பரிசளித் துள மகிழுவார்
கந்தமணி வணிகர்முறை யிந்தவகை யென்பர்காண்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 5

வேளாளர் சிறப்பு

ஆட்சிதரு நீதியுங் கொற்றவர்கள் புஜபலமு
மதிவீர சூரர் வலியு
மாயிரவர் வாணிப மியற்றுதலு முலகெலா
மன்னதா தாவென் பதுந்
தாட்சியொன் றில்லாத வந்தணர் மகத்வமுந்
தங்குசுப கல்யாணமுஞ்
சந்ததஞ் செபதபம் பூசைநே மங்களிவை
தப்பாம லேபுரிவது
மோட்சநிலை தருமருட் குருவினுப தேசமும்
முநிவரிரு டியர் சீலமு
மூவுலக மும்புகழ வாழ்வுபெறு தலுமிவைகண்
முற்றுமே ழியர்பெருமை காண்
காட்சிதரு கர்த்தனே சூட்சகா ருண்யனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 6

கவிஞர் பெருமை

அணிகொளு மிலக்கிய விலக்கணக் கடன்மடுத்
தாசுமது ரஞ்சித்திர
மாகும்வித் தாரநாற் கவிமழை பொழிந்தவரு
மரிதரி தெனச் சொல்லவே
துணிகொளும் பிரபந்த மவையுட் கலம்பகஞ்
சொற்சந்த மாலை வண்ணந்
துகளிலா மடல்கோவை பரணிபிள் ளைக்கவிதை
தொகைநிலைச் செய்யுண் முதலாத்
திணிகொளுயர் நூலெலா மரைநொடியி லேசொலுந்
திறனுநன் மதுர வாக்குஞ்
செப்புமவை யோர்கள்பிர மிக்கவிடி யென்னவே
செய்யும்பிர சங்க நடையும்
கணிகொளிவை யாவுமுடை யோன்கவிஞ னுமெங்
கற்பக விராச மேவுங் [கள்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரி வாசனே. 7

உலுத்த ரியல்பு

தெள்ளுதமிழ் வாணரைக் கண்டுட னடுங்கித்
திடுக்கிட் டுளம் பதைத்துத்
திகைத்துமுகம் வேருகி வாயடைத்துக்கண்
சிவந்துபெரு மூச்செ றிந்து
மெள்ளவே யோடிப் பதுங்கிப் பணப்பெட்டி
மீதிற் கவிழ்ந்து காக்கும்
வீணலோப ரைச்செத்த சவமெனவு மாகாது
வீறுகல் லென லொவாது
வள்ளமா வென்றிடினு மமையாது கழுதையாய்
வகுக்கவுங் கூடாதுபுன்
வயிரவ னெனச்சொலவு மாகாது பதரென
வழுத்திடவு மாகாது காண்
கள்ளமன முள்ளமா லோபிக்கு லோபியிணை
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 8

பிறவிக்குணம்

விரும்பனத் தோடுபிடி யானைகள் நடைகற்க
மேதினியில் யார்முயன்றார்
வீறுகடன் மீனுக்கு மாமைக்கு நீந்தல்செய
மேனுள் பழக்கினவ ரார்
கரும்பினுக் கிரசமும் பாம்புக்கு விடமுமங்
கார்தான் புகட்டி னார்கள்
கானமல ருக்குமண மும்முள்ளின் முனையுமிக்
காசினியி லெவராக்கினர்
பரும்புலியி னெடுபூனை பறவையா ளிகளெலாம்
பாயப் பழக்கினவரார்
பாரவரை யுறைகழுகி னுக்கிரைக ளிங்கென்று
பார்த்தெவர்கள் சொல்லி வைத்தார்
கரும்புவியி லிவையெலாம் பிறவிக் குணங்கள்காண்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 9

செல்வத்தால் வருமுயர்வு

புல்லர்க டமக்குமிகு செல்வபாக் கியம்வரிற்
பொதிமுத்தன் முத்தப்பனும்
புகழ்முத்து முத்தையா முதலியா ராம்பின்பு
புகன்றிடுவ ரவர்க ளெனவே
செல்வர்க்கு மிக்கதாய்க் கிள்ளாக்கு சென்றிடுஞ்
செந்தமிழ்ப் புலவோ ரெலாந்
தியாகிமக ராஜனே யென்றுகொண் டாடுவார்
திருட்டியுந் தெரியாது போம்
நல்லசெவி கேளாது வாயடைத் திடுமிக்க
நண்பினரை யெதிர் காணினு
நட்டதலை யேறிடா மட்டிக் குலாலர்கடை
நாயினுங் கடைய ரந்தக்
கல்லாத மூடரைப் படைத்தவித மறிகிலேன்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 10

அரிதெனல்

ஊமைசெவி டொடுபேடு குருடுகூ னின்றியே
யுலகிற் செனித்த லரிதா
மோருறுப் புங்குறைக ளின்றியுயர் குலமதி
லுதித்தலது தனினு மரிதாம்
வாய்மைமிகு கல்விமா னுவதரி தாஞ்செல்வ
வானுவ ததினு மரிதா
வணக்கமு மொழுக்கமும் வாய்ப்பதரி தாந்தர்ம
வானுவ ததினு மரிதா
மாமிதினு மத்துவித நெறியுணர்ந் தாசா
னனுக்கிரகம் பெறுவ தரிதா
மட்டாங்க யோகமெய்ஞ் ஞானமு நிறைந்திடுத
லதினுமரி தரிது கண்டாய்
காமிசிவ காமியபி ராமிமதி சாமியே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 11

இறந்து மிருக்கின்றவர்

தேவால யங்கோ புரங்கல்வி பயிலிடந்
தேர்முதல வுண்டாக்கி னோர்
செகமெலாங் கீர்த்திபெறு மோயாத கொடையு
தேசத்தி னீதி மன்னர் [ளோர்
காவியஞ் செய்கவிஞர் சுத்தரண வீரரொடு
கனவித்தை கற்ற பெரியர்
கதிர்மதியு முள்ளளவு மாருத வறனெலாங்
காதல்கொடு செய்த பேர்கள்
வாவிகூ டஞ்சோலை தருமசத் திரமடம்
வண்மைபெற வேசெய்த பேர்
வானகத் துயிரகன் றேகினும் புவியதனின்
மாளாத பேர்க ளிவர்காண்
காவுடைய கோலமுயர் மாவுடைய தேவுமதி
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரி வாசனே. 12

இருந்து மிறந்தவர்

வெகுசன விரோதியர்கள் பழிமிகக் கொண்டபேர்
விதரணர்க் கீயாதபேர்
வேட்டகந் தன்னிலே மருவுண் டிருந்தபேர்
வெகுகடன் பட்ட பேர்கள்
செகமதனி லேவழக் கோரமது சொல்லுவோர்
செப்புமொழி தப்பு நடையோர்
தினைந்தினம் பொய்யுரை புகன்றுபா வலர்தமைத்
திருப்படிக் கின்ற தீயோர்
மகதமுத லாம்பாஷை யாவையுங் கற்றவையில்
வாய்மூடி நின்ற பேர்கள்
மாருத வறுமையோர் தீராத பிணியாளர்
மனவியை வழங்கி யுண்போர்
ககமென வலைந்துதிரி யினுமாண்ட பிணமென்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரி வாசனே. 13

செல்வச் சிறப்பு

பொருளுள்ள பேர்களுக் கருளுண்டு புகழுண்டு
புண்யவச மிக்க வுண்டு
பூதலத் தவரெலாங் கண்டவுட னேதொழுது
பூபதி குபேர னென்பார்
திருகொன் றிலாதமதி யுண்டுதிற னுண்டுமெய்த்
தேசிகர்த மருளு முண்டு
தீங்கியற் றினுநன்மை யென்பார்கள் பெருமையுந்
தீரமொடு வீர முண்டாங்
கருளுண்டு பந்துஜன வுறவுண்டு நண்பினர்க
ளானேர்க ளுண்டு நிதமும்
மவர்முகந் தன்னிலழ குண்டுகளை யுண்டுநல்
லானந்த பூர்த்தி யுண்டு
கருணைசெய் தன்பர்கட் கழியாத நிதியுதவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரி வாசனே. 14

வறுமைக் குணம்

படியதனி லேநூல்கள் பலகற் றுணர்ந்துநற்
பண்பினு லுயர்வு பெறினும்
பரிபவந் தருகின்ற வறுமைகுடி கொண்டிடிற்
பதிதரென வேமெலிகு வார்
மடிமைவிட் டொழியாது துயின்மிக விரும்புவார்
வாய்ச்சொ லெங் குஞ்செலாது
மங்கல மிழந்தமா தருமவ மதிப்பர்பிறர்
மனவயிற் செல வஞ்சுவார்
கொடியோ ரெனப்பெயர் தரிப்பர்மித மின்றியூண்
கொள்ளுவர் பகை யாவருங்
கூரறிவு குன்றுமோர் காசுக்கு நம்பாத
கொள்கைவறு மைக்குணங் காண்
கடிகம ழிதழ்க்கொன்றை முடியிடை யணிந்தருள்
கற்பக விராச மேவுங் [செய்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரி வாசனே. 15

கோபக் கொடுமை

குற்றங்கண் மூவகையு ணன்றிலாக் கோபமே
கொடிததன் செய்கை கூறிற்
குடிகெடுக் கும்பாப மதுவிளைத் திடுநல்ல
குணமழிக் குந்தன் முன்னே
யுற்றபொரு ளிணையறிய வொட்டாது பலநாளு
முறுகண்ட னைத் தந்திடு
மோங்குகன மொடுசிறப் பியாவையு மழித்துமெய்
யுறவோர்க டவ மழிக்கு
மற்றவர்சொல் புத்தியுஞ் செவிதனக் கேருது
மடமையின் மூழ்குவிக்கு
மாருத துன்பம் பயக்குமிதை மாற்றிநின்
மலரடி தொழச்செய்கு வாய்
கற்றவ ரகத்துளுறை வுற்றபரி சுத்தனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாச னே. 16

கல்விச் சிறப்பு

கடலுலகி லுற்றபொரு ளுக்குளே நன்மைதரு
கல்விநிலை பெற்ற பொருளாங்
கனலினு லுருகாது புனலினுற் கரையாது
கள்ளராற் றிருடொணாது
திடமான ராசாதி ராசரா லும்மதைத்
தெண்டம் பிடிக்கொணாது
தெரிவைபொது மாதரா ற்சேதமா காதொருவர்
செலவிடிற் குறைவுருதங்
கூடமிகு சகோதரர்க் கிடமது கொடாததை
யளவிடவு மூடியாதுகா
ணப்பொரு ளிணைப்பெரு திப்புவியி லகிலின்ற
வற்பருறு பயனென் கொலோ
கடகய முரித்துடலி னிற்றரித் திடுதேவ
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 17

பொருளாசைக் களவிலே யெனல்

கூடலிடத் தாழமு மதனினுண் மணலையுங்
கனம்பொழி மழைத் தாரையுங்
காயத்தி னிலேமையும் யோகியர்கண் மகிமையுங்
கருதுகல் விக் கெல்லையு
மடவரர்க ணினைவையுங் கவியினுட் பொருளினெடு
மாருத நினதருளையு
மகமேரு வளவையுஞ் சிரமீது ரோமமும்
வானத்தி னிறை மீன்களும்
புடவிநதி சலமுமா லோபியரு லோபமுமோர்
போதளவு செய்தாலுமே
பொருண்மீதி லாசைதனை யளவிடக் கூடாது
பூதலமெ லாந்துதிக்கும்
கூவுளே யரிபிரமர் காணுணை வள்ளலே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 18

இவர்க்கிது துரும்பெனல்

கனயோக மார்க்கத்தி னின்றதுற வீக்குநற்
காவலர்க ளோர் துரும்பு
கசடறக் கற்குமுணர் வுடையோர்க்கு முத்தமிழ்க்
கடலெலா மோர் துரும்பு
தினமுங் கொடுக்கின்ற கொடையாள ருக்கதிக
திரவியமு மோர் துரும்பு
திவ்யசுந் தரமுள வரம்பையா கினுமவ
டெளிந்தவர்க் கோர் துரும்பு
மனமிக வருந்தியே பசியிலார்க் குக்கருப்
பதுவுமோர் சிறு துரும்பா
மதிகரண வீரருக் குயிரொரு துரும்புபா
வலர்க்குமதி யார் துரும்பாங்
கனமிலகு சோலைவளர் சேலநக ரைச்சார்ந்த
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 19

இவ ரித்தன்மைய ரெனல்

அரியரன் பிரபந்த முறுதியாக் கேளாத
வசடனே கனசெவிடனு
மாங்கார மதுகொண்டு பெரியோரை மதியாத
வறிவிலா தவனுமையாம்
பெரிதாந் தலங்கணதி சென்றுதுதி செய்யாத
பேர்களே சப்பாணியாம்
பிசகாம லனுதினமு நின்பதம் தரிசியாப்
பெருமூட னதிகுருடனுந்
தருமங்கொ டுப்பாரைத் தடுத்திடுங் கொடியனே
சண்டாளன் மாபாவியாந்
தாரணியி லிவர்தம்மை யயனிந்த வண்ணமே
தப்பாம லேவகுப்பன்
கரிதனை யுரித்துமுய லகனையு மிதித்தவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 20

இப் பத்திரஞ் செல்லா தெனல்

சகமதனின் முப்பதாண் டுக்குமேற் பட்டகைச்
சாதனமெனும் பத்திரந்
தந்திட்ட தொருமுதற் பொருளுக்கு வட்டியது
சமமாகு காலமளவுந்
தகவுறுந் திறமுடைய ஞகியே தனிகன்மிகு
தனமிகுஞ் செல்வனுகிச்
சமீபத் திருந்துவாழ் கின்றகட ஞளியைச்
சற்றேனுங் கேளாமலுந்
துகளிலாச் சிட்டனைக் காட்டாம லும்மவன்
சும்மா விருந்து விடிலோ
தோன்றுமப் பத்திர நீதித் தலத்தினிற்
ரேல்வியுற் றழியுமெனவே
ககனத்தர் துதிமுனிவ ரகமுற் றுரைத்தனர்கள்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 21

இது செல்லு மெனல்

முன்னோர்கள் சொன்னநற் புத்தியுண ராதமுழு
மூடனெதிர் வருவதறியா
மூர்க்கங்கொ ளுன்மத்த னுரைவிட் டோடினேன்
மூதுரை வழாது காக்கு
மன்னவர்க்குத்தன்னு ளஞ்சினே னிளமைபெறு
வாலிபன் யாதாயினும்
வகுத்திடுந் திறமிலா தவன்மிகு பயத்தினுல்
மனம்வருத் திடப்பட்டவ
ரிந்நிலந் தனிலெவ ரிடத்தாயி னும்பொரு
ளேற்றெழுதி யீந்த பத்ர
மெக்காலு நெடுநாள தாயினுஞ் செல்லுமென
வேயிசைத் திடுவர் முனிவோர்
கன்னல்வில் லியைமுன்ன மின்னலடை யச்செய்த
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 22

குருவி னியல்பு

சீலமுயர் நிலைமையும் பாசவயி ராக்யமுஞ்
சிவபத்தி மிகவு முளராய்த்
திகழ்கின்ற வேதாந்த நாதாந்த யோகாந்த
சித்தாந்த நெறியுணர்ந்து
பாலதா கியநாலு வேதமறு சாத்திரம்
பதினெண் புரா ணமுடனே
பகர்கின்ற வறுபத்து நாற்கலைக் கியாண்மும்
பயனறிந் தநுபோகராய்
மேலதா கியவாறு தல்முங் கடந்தீபாழ்
வெளிகண்டு வீரசைவ
விதிமுறை வழாதுமெய்ஞ் ஞானவழி காட்டுவோர்
மேலான சற்குரவரோங்
காலனை யுதைத்துமார்க் கண்டனைக் காத்தவர
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 23

வைத்திய ரியல்பு

நாடிகண்ணி தானமு மெண்வித பரீட்சையொடு
நாடிப் பிணிக் குறிகளு
நவ்சித்தர் கோரக்கர் கும்பமுனி தன்வந்த்ரி
நவிலும்வா கடமுணர்ந்து
சாடிவரு மூலிகையு மறுபத்து நான்காஞ்
சரக்குவகை முறைதெரிந்து
தயிலங்கள் பஸ்பங்கள் கிருதங்கள் குளிகையொடு
சகலவவு ஷதமுறைகளு
நீடுமா யுருவேத நூலுமக ராதியு
நிகண்டுபனி ரண்டு மோர்ந்த
நிலையுளோர் தங்களைப் பண்டிதர்க ளென்பரிந்
நீணிலந் தனிலாணவக்
காடதனை வென்றசிவ யோகியர் நிதம்பரவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 24

வியாதி வருமூலம்

மயிரினு லுமியினுற் கடுவழி நடக்கையால்
மலசல மடக்கை யாலு
மன துதுய ரத்தினுற் கல்லினு னெல்லினுன்
மாதர்கள் புணர்ச்சி யாலுந்
தயிரிரவி லுண்ணலாற் கனிபல வருந்தலாற்
சருகூற னீரினுலுந்
தயிலமது மூழ்கிமட மங்கையொடு சேர்தலாற்
றண்பனியி னுற்காலையில்
வெயில்காய்தல் கண்விழிப் பகாலபோ சனமதால்
வெகுநித்ரை செய்த லாலும்
விளம்பிடும் பத்தியத் தாழ்வினுல் விணையினுல்
வியாதிவரு மூலமென்பார்
கயிரவந் தனைவென்ற செவ்விதழ் மடந்தைசூழ்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 25

இலட்சுமி யிருப்பிடம்

கொற்றவ ரிடத்தினுங் கோக்களின் வாலினுங்
குணவான்கள் வதனத்தினுங்
குடத்தினுறு பாலினுங் கடல்வார ணத்தினுங்
கொடியினுந் துரகத்தினுஞ்
சுற்றநீங் காதமனை தன்னினுங் கற்புமிகு
தோகைய ரிடந் தன்னினுஞ்
சொல்லரிய சிவிகைபே ரிகைதனங் களினுமது
சூதலான் றிருமார் பினுஞ்
சற்குயி னும்வாய்மை தவரு ரிடத்துஞ்
சலத்தினுந் தானி யத்துஞ்
சாதிமல ரதனினும் புண்ணிய ரிடத்தினுந்
தங்கநவ ரத்தி னத்தும்
கற்றவ ரிடத்தினுந் திருமக ளிருப்பிடங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 26

மூதேவி யிருப்பிடம்

வருகின்ற யாசக ரிடத்துநோ யினருளும்
வாகின்மட மங்கை பாலும்
வன்கூகை முகமதிற் றீபத்தி னிழலினும்
மட்சூலை யின் புகையினுங்
குருதிமட வரனீழ லாடுதூட் புகையினுங்
கொட்டிடு முறத்தூ ளினுங்
குருவரசு நிழல்விளாத் தாணிமர நிழலினுங்
குலைக்குநாய்க் காற்றூ ளினும்
பெருகுதரை தன்னைப் பெருக்கிடுந் தூளினும்
பிணமயா னப்புகை யுளும்
பீறலாங் கந்தையினு மதிகபே சனரினும்
பேசுபொய் யினரி டத்துங்
கருதரிய மூத்தா ளிருக்குமிட மிவையென்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 27

கலிகால வியல்பு

தாலமர நிழலினல் லோரமுத முண்கினுந்
தப்பாது குடியரென்பர்
தனமிகுத் துளபோர்கள் பித்தரே யணிந்திடிற்
றங்கமென் றேமொழிகு வார்
வாலிபந் தன்னிலே யதிசீல ராகவே
வைகினும் விடனென்பர் காண்
வறுமைசே ரெளியவர்கள் வயிரமது பூண்கினும்
வரையற்க லெனவுரைப்பார்
சீலம் புறத்தினு மகத்தினக் கிரமமுஞ்
செயுமீள ரைப்புகழுவார்
சித்தசுத் தியதாகி ஞானிநெறி தேர்ந்திடுந்
திவ்யபெரி யோரை யிகழ்வார்
காலகலி யுகதரும மீதென வுரைத்திடுவர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 28

இதற்கிது நன்றெனல்

ஈயாத லோபியைப் பல்லெலாங் கெஞ்சுவதி
லேற்றுண்ப தேநன் றதா
மிடர்தரு வியாதியாற் றேகமிக மெலிவதி
லிறந்திடுவ தேநன் றதாந்
தாயர்தந் தைகளுவக் காப்பிள்ளை பலரினுஞ்
சற்புத்ர னொருவ னன்ருந்
தன்மனைவி யாட்கஞ்சி யில்வாழ்க்கை செய்வதிற்
சந்நியாச மிக்க நன்ரு
மோயாது நிலையிலாச் சொற்பல வுரைப்பதினு
முறுதிமொழி யொன்று நன்ரு
முதவாத லோபர்மேற் கவிசொலித் திரிவதினு
முன்னடி துதித்த னன்ருங்
காயத்திரி மந்திரமற வாதவே தியர்துதிசெய்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 29

கருவத்தாற் பங்கமுற்றோர்

பிரமனது கருவமும் மாறன் புகழ்ச்சியும்
பீடுபெறு வாலி யகமும்
பேரிலங் கைக்கரச னுற்றலு மிராட்சதப்
பெண் டாட கைச்ச மர்த்துந்
திரிபுரர்க ளெண்ணமுந் தக்கனது வேள்வியுந்
தீங்குபுரி துரிய னினவுஞ்
சினங்கொள் கயி டன்மதஞ் சூரபற் பன்முளந்
தீரமிகு வீர வலியு
மிரணியன் பிடிமான மும்பகர் சூரன
தியொம்பொரு வுயிர் பறிப்பு
மின்னும் பராக்கிரம மிகுந்தபுர வலர்மதழு
மீதகில நிலைநின் றதோ
கரியமா றேடியுங் காலுத பாதனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 30

கடனீயாவிடம்

வாத்தியார் கவிவாணர் வறுமையர்க டனதுகுரு
மறையோர்கண் மந்த்ரவாதி
மாதர்பொது மங்கையர்கள் பண்டிதர்க ளஞ்சாத
மாவீர ரடிமை யானோர்
சாத்திரஞ் சொல்பவர்கள் கருணிகர்கள் தச்சாண்டி
தபசிசந் நியாசி தட்டான்
சவரகன் கூத்தாடி வேசிகாந் தன்பந்து
தாயாதி யிவர்கட் கெல்லாம்
பூத்தநற் செல்வர்கட னீந்திடின் மீண்டுமப்
பொருள்வந் துறுது கேட்கிற்
பொல்லாங்க தாய்ப்பினுங் கைபொருட் சேதமாய்ப்
போகுமென வேயு ரைப்பார்
காத்தருள் செய் கர்த்தனே நீத்தவ ரகத்தனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 31

பயனிலாதவை

கற்பிலா மங்கையர்க் கேழுசுற் றரணும்வெங்
காவலு மிருந்து மென்ன
காஞ்சிரங் கனியதைத் தேன்குடந் தனில்வெகு
காலம திருத்தி யென்ன
வற்பூத மதாகவே யரியகவி தைகளெலா
மற்பர்மு னுரைத்து மென்ன
வசாத்யநோ யாளருக் கமுதசிந் தாமணி
யரைத்துப் புகட்டி லென்ன
நற்புவியி லேபிறந் தொருசுகிர்த மும்பெரு
நரரிருந் தாவதென்ன
ஞானநெறி யின்றியே கோடிநூ லோதினும்
நயப்பென்ன வதுபோல வாம்
கற்பனைய முறுவலார் பொற்புயர் நடஞ்செய்திடு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 32

இவர் பகையாகாதெனல்

அற்ருர் தமைத்தாங்கு வேந்தரூப தேசிக
ரமைச்சர்மிகு பொருள் படைத்தோ
ரரியமந் திரவாதி கபடர்நய வஞ்சக
ரதிதுட்ட ரொடு கோளர்கள்
கற்ருய்த்த பாவாணர் பிறர்கள்வர விடுதூதர்
கள்ளரமர் புரிசூரர்கள்
கருணிகர் வைத்தியர் தவத்தினு னுயர்ந்துமெய்க்
காட்சிதரு சிவயோகியர்
சற்ருகி லும்மிந்த வீரெண்ம ரோடுபகை
தான்கொளிற் துன்ப மூளதாஞ்
சர்வசன முங்கொல்ல வந்தகொடு விடமுண்ட
தற்பரா சித்சொரூபனே
கற்ருரு தூரமேய்க்க வுற்ருன் றினம்பரவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 33

இருந்தும் பயனிலாதவர்

இரவலர்க் குதவாத நிதிமதியி லாவான
மிசைபொரு ளிலாத பாட
லிரக்கமில் லாமனது வணக்கமில் லாமதலை
யேந்திழை யிலாவில் வாழ்க்கை
புரவியில் லாதபடை சதுமறையி லாவேள்வி
புஷ்பமில் லாத சோலை
புத்திர ரிலாதமனை மந்திரி யிலாவரசு
புகழ்படைக் காத வுடலந்
திரவிய மிலாவிளமை கவிஞரில் லாதசபை
செங்கோ லிலாத நாடு
தியானமில் லாதசெப மாலய மிலாதவூர்
தீரமில் லாத சேனை
கரங்கா லிலாததனு கவினிலாச் சித்ரமாம்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 34

கர்வியாவோர்

தனையே புகழ்ந்துபிறர் யாரையு மிகழ்ந்திடுஞ்
சண்டியே தனக் கெருவியாஞ்
சற்றிரங் காதெருது போற்றலையை யாட்டிடு
சழக்கனே மதக்கெருவி யாம்
விநயங்க ளொடுபெரியர் செய்நூ லழிக்கின்ற
விகடனே தமிழ்க் கெருவியாம்
வேசையர்க ளாசையான் மனைவியை வெறுப்பவன்
வெகுமமதை சேர் கெருவியா
மனைவோரு மறியவே மதுவுண்டு திரிபவ
னுங்கார மிகு கெருவியா
மட்டதிசை யாள்பவன் றுட்டத் தனஞ்செயி
லதிகார கெருவி யென்பார்
கனமான கிருபைவைத் தெனையாண்ட முதல்வனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 35

பட்டணச் சிறப்பு

பக்கமொரு நாற்காத நீளஞ் சவுக்கமாய்ப்
பலர்கணிறை தருமா வணம்
பணிவாவி மாடமா ளிகைமேடை கோபுரம்
பகரால யங்க ளுடனே
மிக்கரத கசதுரக பதாதிகே தனமாடல்
வேசையர்க ளாடல் பாடல்
வீதியிரு பாலினுந் தாழைகமு கஞ்சோலை
மேவுமொளி சூழு மணிக
டக்கபுக ழுந்தணர்கள் மன்னர்மந் திரிமுதற்
சகலசா தியரு முளதால்
சற்சனரொ டட்டலட் சுமிவாச முள்ளதே
சதுரங்க பட்டண மதாங்
கைக்குளே நெல்லியங் கனியெனக் காட்சிதரு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 36

குணமாரு தெனல்

வேதமந் திரமோதித் தேன்பால் புகட்டினும்
வேம்பது கரும்பா குமோ
வெண்மைதரு சீனிச் சொரிந்துபயிர் செய்யினும்
வெள்ளுள்ளி குணமாறுமோ
கோதையர் முலைப்பால் குடித்துவளர் கினுமந்தி
கொடியசேட் டையினீங் குமோ
கோடிமாத் திரையிலே கியம்பல வளிக்கினுங்
குக்கலின் வானி மிருமோ
சாதிமலர் மாலைபோ னெட்டியிற் செய்திடிற்
சற்றேனும் வாச முறுமோ
சற்குணமி லாதவர்க் கெத்தனை யுரைக்கினுஞ்
சண்டிக் குணம் போகுமோ
காதலொடு மாறனை யணைந்தைய னுரையருள்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 37

கருமிகளாவோர்

மனிதனென வுருவுகொண் டுனதுதிரு வடியிணை
வணங்கிடா ஞெரு கருமியா
மனவிசுத ரலையவே வேசியே கதியென்று
வைகுவோ ஞெரு கருமியாந்
தனமிக விருக்கவுண் ணுதுடுக் காதுமெய்
தளருவோ ஞெரு கருமியாஞ்
சந்யாசி யாகியும் பெண்ணுசை விட்டிடாச்
சண்டாள ஞெரு கருமியா
மனவரத ஞானநூ லோதியா ணவமதை
யகற்றிடா ஞெரு கருமியா
மன்னைதந் தையர்கள்பசி நோய்கொண் டலைந்திட
வருந்துவோ ஞெரு கருமியாங்
கனகசபை தன்னிலே நடனமிடு பாதனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 38

கருடதரிசன பலன்

ஆதிவா ரந்தனிற் கருடனைத் தரிசிக்கி
லரியபிணி யாவு மகலு
மழகுபெறு திங்கண்மங் களவார முந்தொழ
வகத்தினுறு துயர்களும்போம்
நீதிதரு புந்தியுங் குருவார முந்தொழ
நெடியசூ னியமு மகலு
நிறைவெள்ளி சனிவார முறவுசா ருங்காலை
நித்தமுந் தரிசித் திடின்
மேதையொடு தனகனக வாகனு திகண்முதன்
மேன்மைபெறு செல்வ முளதாம்
வேந்தரென வாழ்ந்தே திருக்கண் களிக்கமுடி
விற்பரம பதமடை குவார்
காதலுட னேபணிசெ யன்பருக் கருளுதவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 39

இராகம் முப்பத்திரண்டாவன

மண்டலம் புகழும்வே ளாவளி சாரங்க
மாளவி நாரா யணி
மலகரி குறிஞ்சிதே வக்கிரியை பூபாளம்
வாராளி தன்னி யாசி
குண்டநற் கிரியைபல் லதிநேசி சாவேரி
கூர்ச்சரி பட மஞ்சரி
குணகொளி பௌளிபங் காளந்தே சாட்சரி
கோதில்சீ மேக ரஞ்சி
யண்டர்துதி கைசிகம் காம்போதி காந்தாரி
யாமிலலி தைவ சந்த
மமர்நாட்டை பைரவி யிந்தோள முந்தோடி
யாரிரா மக்கிரி யையுங்
கண்டமெழு ராகங்கண் முப்பத் திரண்டதாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 42

வாத்தியங்களாவன

தாளவாத் தியமொடு திறமான மத்தளஞ்
சரமண்ட லந்தாரை யுஞ்
சகமெலா மோசையெழு கின்றபே ரிகையுலகு
சாற்றுசர மணிவாத் தியமும்
நீளவாத் தியமதாங் கின்னரியி ஞெடுமுரசு
நேர்ந்ததவ ளச்சங் கழு
நேரான கொம்போசை பூரிதம் பட்டமிந்
நீணிலமெ லாமொ லிக்கு
மேளவாத் தியமும்வெகு விதமான நாகசுரம்
வெற்றிதரு தம்பூ ருடன்
வேடிக்கை யானதோர் டங்கா வுடுக்கையும்
விநோதமிகு மெக்கா ளமுங்
காளவாத் தியமுமெந் நாளினு முழங்கிடு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 43

பதினெண் புராணம்

மதிக்கின்ற பௌடிகங் காந்தமார்க் கண்டேயம்
வாமனம் கூர்மம் லிங்க
மன்னுசிவ பிரமாண்டம் வாராக மச்சமிவை
மங்கைபா கன்பு ராணந்
துதிக்கின்ற பாகவதம் வைணவங் காருடந்
தோன்றுநா ரதமா லதாஞ்
சொல்லரிய பிரமமொடு பதுமம் மிரண்டுமால்
சுதனயற் குரிய வென்பார்
விதிக்கின்ற பிரமகை வர்க்கமா தித்தற்கு
மேவுமக் கினித னக்கோ
வெற்றிசே ராக்நேய புராணமீ ரொன்பதென
மிக்கோ ருரைப்பர் கண்டாய்
கதிக்கின்ற தொண்டரு ளுதிக்கின்ற சோதியே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 40

உள்ளூரிற் சிறப்படையாதார்

உள்ளூரில் வேசையர் பணிக்கருப தேசிக
ளுபாத்தியா ரான பேர்க
ளுயர்தவம் புரிகுரவர் மறுதேச மன்னர்க
ளோங்கு வாதியர் தூதர்க
டெள்ளுதமிழ் வாணர்கள் கூத்தாடி கோணங்கி
செப்படிகள் கற்ற பேர்க
டிறமான நாணயர்கள் சோசியர் வைத்தியர்கள்
சிலதொழில் கற்றுளோர்க
ளுள்ளபடி யீரெட்டுப் பேர்களுயு மெள்ளளவு
முள்ளூரி லுறுதி கொள்ளா
ருண்மையாக் கள்ளுண்ப ராகிலும் புதியர்தமை
யுலகெலாங் கொண்டாடு வார்
கள்ளகலி யுகமதி னடக்கையிது வாகுமே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 41

தொண்ணூற்றாறு தத்துவம்

பூதங்க ளைந்தாகும் ஞானவிந் திரியமாம்
பொறியைந்து புலனைந்த தாம்
பொல்லாத தொழில்கரும விந்திரிய மைந்ததாம்
புகழ்பெறுங் கரண நாலாந்
தாதுவேழ் குணமூன்று மலமுமோ ரைந்ததாஞ்
சாற்றிடு விகார மாருந்
தழைத்திடும் வாயுவொரு டானென்பர் மண்டலந்
தானுமொரு மூன்ற தாகு
மாதார மாருகும் வாசல்களு மொன்பதா
மவத்தையைந் தாகு மிக்க
வருமைசேர்ந் துயர்நாடி பத்ததாங் கோசமைந்
தாம்பிணியு மூன்ற தாகுங்
காதல்செய் கருவியது தொண்ணூற்ரெ டாறென்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலை யங்கிரிவாசனே. 44

இதுவரையிற் கலியாண்டவரசர்

ஆதிப் பரிச்சித்தைஞ் ஞாறுசென மேசெய
ஞண்டதுவு முந்நூறதா
மடவாக வேநரேந் திரனென்று மூன்றுநூ
றவன்புதல்வ னென்ப தொன்று
நீதிபெறு விக்கிரனு மீராயி ரஞ்சாலி
நிறைமூன்று நூற்றைம்பதா
நிதிபோஜ னம்பதைந் தெண்டிங்கள் நானூறு
நிகரில்பிர தாப ருத்ரன்
சாதிமநு சோழனிரு நூற்ரெடிரு பத்திரண்
டாம்ராயர் மூவைம் பதாஞ்
சமர்புரி துலுக்கரைஞ் ஞூற்றியே ழைந்ததாஞ்
சாற்றுபரி தாபி முதலாக்
காதிகலி யுகமதிற் கும்பினி யரசுகாண்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 45

தோத்திரம்

சுக்கிலசு ரோணிதந் திரண்டுருவ தாயதிற்
ரூனரம் பெலும்பு மாகித்
தொல்லைமல பாண்டத்தி லீரைந்து திங்களாய்த்
துவண்டுகரு வூர் கடந்தே
யொக்கவைம் பூதங்கள் கோட்டை கொண்டேமாயை
யுலகினி லுதித்து நாளு
மூரினடை நூலோதி நாரியிடை மயன்மீறி
யுட்கவலை சமுசாரமா
மீக்கடலின் மூழ்கிவலை சிக்குமா னென்னவே
யிடருழன் றதுபோதுமே
யிப்பிறப் பதுநீக்கி மரணந்த காலமு
னெழுந்தருளி யென்ற னுடைய
கக்கிஷமெ லாந்தவிர்த் துனதுபத மேயருள்செய்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 46

இதுவுமது

அஞ்சுதே நெஞ்சமுங் கிஞ்சிதம தாகிலு
மடங்கியருள் பெறவு மில்லே
னடவிமலை குகைதனிற் சருகிலை யருந்தியே
யருந்தவ மியற்றியு மிலேன்
பஞ்சவிந் திரியம தடக்கிலே னுன்றிருப்
பணிவிடை புரிந்து மில்லேன்
பத்தியுட னஞ்செழுத் தோதுகில் லேனருட்
பரமனே யானுன் பதந்
தஞ்சமென நம்பினே னேழைபங் காளனே
தர்மவர்த் தனி பங்கனே
சருவசன ரட்சகா வெனதுசஞ் சலமெலாந்
தவிர்த்தருள்வ துனது கடனே
கஞ்சன்மா லிந்திரன் றேவர்முனி வோர்தொழுங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 47

சுகமகிழ்ச்சி

துதிவாணி திருவருளும் விசயநல் லாடையுந்
துணிவறிவு செளபாக்கிய முஞ்
சுகமான போகமுந் தனதானிய லாபமுஞ்
சொல்லரிய மைந்தர் வளமு
மதிபெருங் கல்வியொடு ஞானமுந் தர்மமு
மகத்தான பேர்க ளுறவும்
வண்மைமிகு கீர்த்தியு மிராப்பகன் மகிழ்ச்சியும்
வயதுசம் பூர்ணயுளு
மதிகசுந் தரமான தர்மவர்த் தனியுமை
யமையநீ ரிருவ ருந்தா
மடைவதற் கரியவிவ் வைந்நான்கு வகையுறும்
மடியனேற் கருள் புரிகுவீர்
கதிர்மதி யுடன்றேவர் கினரர்காந் தருவர்சூழ்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 48

கற்புடைப் பெண்டிரியல்பு

தங்கணு யகரினிற் றெய்வம்வே றிலையெனச்
சந்தத நினைந்தவர் சொலைத்
தட்டாது கோபம்வர வொட்டாது திட்டமாச்
சாற்றுபணி விடைகள் செய்தே
பொங்கமா யவர்குறிப் போர்ந்தொழுகி நித்தலும்
போந்தபெரி யோர்க் கருத்திப்
புரிந்தவ ருளங்களித் திடவிருந் தாற்றியிரு
போதுநன் னீராடியே
திங்கள்வத னத்திலே தங்குபொட் டிட்டுமெய்த்
தேசுற வலங்க ரித்துத்
தினமுநா யகனுண்ட பின்னுண்டு முன்னெழுஞ்
செல்விகற் புடைய ளாவன்
அங்கணந் திரிசூல மான்மழு தரித்தவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 49

வேசையரியல்பு

புருடனைக் கண்டவுட னேகத விடுக்கினிற்
போயொளித் திடுவர் பின்பு
பொல்லாத தாய்க்கிழவி தன்னையவர் பாலினிற்
போக்கிவச னிக்க விடுவார்
மருடருங் கண்ணினுர் சற்றருகி லேவந்து
மயல்விளைத் துறவு செய்வார்
மன்ன நின் னடிகளிச் சிறுகுடிலில் வைத்ததெம்
மாதவ மெனச் சொல்லுவா
ரருணிறைந் தவர்போல விருக்கையி னுற்றழுவி
யாவலொடு முத்த மிடுவா
ரையநீ பிரியிலெம துயிர்பிரியு மென்றவர்க
ளாவிமுழு தும்பறிப்பார்
கருமையணி வேசையர்கண் முறைமையிது காணெ [ன்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 50

வருட மறுபதுக்கு மாதம் பிறக்குநாள்

ஆதியிற் சித்திரை மாதம் பிறக்குநா
ளன்றைத் தினங்கார்த் திகை
யான்மார் கழியுவறு நாளினி லுதித்திடு
மதிகன்னி மூன்றி லாகு
நீதிதை யாடியும் வைகாசி நான்கிலா
நிகழ்த்துமைப் பசி யாறிலா
நிறைமாசி யைந்திலா மாணியா வணியுட
னேர்ந்தபங் குனி யேழிலா
மாதமுந் நான்குமுன் சொன்னவா ரங்களில்
வழுவாம லேயு திக்கும்
வருடங்க ளறுபதினு மாதம் பிறக்கின்ற
வாரங்க ளிவ்வித மதாங்
காதக ரகத்திலெய் தாததொரு பிரமமே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 51

வருடமறுபதுக்கும் வாரநட்சத்திரந் திதி நாழிகை பிறப்பு

மூன்வருட முதயநாள் பின்வருட மறுதின
முன்னேத்திடும் வருடங்கடா
முன்னேத்தநட் சத்திரம் பதினென்றி லுதயமா
முறைவருட நட்சத்திரம்
பின்றிதி பிறந்திடும் மீராறு தன்னிலே
பிறக்கின்ற வருட்மாகும்
பிறந்தமுன் னுழியீ ரெட்டின்மேற் ரேன்றிடும்
பிசகாமல் வகைவிபரமாய்
வன்மையில் லாமலே வருடநட் சத்திரம்
வாரங்க டிதிகளுடனே
வளர்நாழி கைத்தொகையு மிவ்விதம தாமென
வழுத்தினர் செழித்த நூலோர்
கன்மவினை யொழியவே நன்மையரு ளாயனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 52

கலியுகமுஞ் சாலிவாகன சகாப்தத் தொகையும்

பிரித்திடு மறுபதை யெண்பத்தி ரண்டினிற்
பெருக்கிக் கணக்காக்கவே
பேர்பரா பவமுத னடக்கின்ற வருடம்வரை
பிசகாது தொகை யான தி
லுரைத்தபனி ரண்டும் கழித்திடக் கலியாண்டு
ளோங்கிய சகாப்த வகைகே
ளுள்ளபடி யறுபது மிருபதோ டொன்பானை
யொட்டிப் பெருக்கி யேதான்
விரித்தபிர பவமுத னடக்கும்வரு டம்வரையில்
விடாதுதொகை கூட்டி யதனில்
விளம்புபதி னெண்றுங் கழித்திடச் சகாப்தமதின்
விபரமது வென்பர் மேலோர்
கரத்தினின் மான்மழு தரித்திடுங் கடவுளே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 53

மாதம் 12-க்கும் நட்சத்திர மறிவது

கனமான சித்திரைத் திங்கணட் சத்திரங்
கண்டதே யொன்ற தாகுங்
கருதரிய ரிஷபத்தி லைந்தானி யொன்பதாம்
கடகமோர் பதின்மூன்ற தாந்
துனிசிங்க மஃதுபதி னேழ்கன்னி மூவேழ
தாந்துலா மூவெட்ட தாந்
தொடுகார்த்தி யிருபதேழ் மார்கழி யிரண்டதாஞ்
சொன்மகர நாலாகுமே
செனிகும்ப மாறதா மீனமஃ தொன்பதாஞ்
சித்திரைத் திங்கண் முதலாத்
திகழ்கின்ற மாதங்கள் பனிரண்டு மிவ்விதஞ்
சேர்ந்துவரு நட்சத் திரங்
கனகசபை நாதனே யெனதுகலி நீக்கியருள்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 54

வருடம் 60-க்கும் பஞ்சாங்கப் பிறப்பு

பங்குனித் திங்களி லுகாதி பிறந்தநாள்
பாருலகி லரச னென்பார்
பத்திதரு சித்திரை பிறந்தநாண் மந்திரி
பகர்சிம்ம சேனுபதி
யங்குவரு மாடிநாள் பயிர்தனக் குடையவ
னுனதனு தான்யாதியா
மானிவள் ளந்தாங்கி தனபதி மகரமைப்
பசியரச வர்க்காபதி
யிங்கானி யாதிரை யுதித்தநாண் மேகாதி
பதியென வியம்பு வார்க
ளீராறு மாதம் பிறந்தநாட் கதிகார
மீதென்பர் கணிதநூலோர்
கங்கிலாப் புதியபஞ் சாங்கபல மிவ்வணங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 55

மாதம் 12-க்கு அமாவாசை வரு நட்சத்திரம்

சித்திரைக் கசுபதி வைகாசி ரோகணி
சீரானி திருவா திரை
சேருமா டிப்பூச மாஞ்சிங்க மகமாந்
திகழ்புரட் டாசி யுத்ரம்
மற்றுலாஞ் சோதியாங் கார்த்திகைக் கனுடமா
மார்கழியி னுக்கு மூல
மகரமுத் ராடமா மாசியி லவிட்டமெய்
வளர்பூரட் டாதி மீன
மொத்தவம் மாவாசை யீராறு மாதமு
முதித்துவரு நட்சத்திர
முண்மையிது வாகுமென வன்மைபெறு பெரியோ
ருரைத்தனர்கள் கணித நூலிற்
கத்தனே யத்தனே சித்தம்வைத் தெனையாண்ட
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 56

மாதம் 12-க்கும் பௌரணை வரு நட்சத்திரம்

சித்திரைத் திங்களிற் பௌரணை யுதிப்பதே
சித்திரை நட்சத்திரம்
சேர்ந்தவை காசியில் விசாகநட் சத்திரந்
திகழானி கேட்டை யாகு
மத்திபெறு கடகத்தி லுத்திரட் டாதியா
மாவணி யவிட்ட மாகு
மதிகன்னி மதிபூரட் டாதியைப் பசிகார்த்தி
மாதமஸ் வனிய தாகு
மற்றமார் கழிமாத மான்றலை தைப்பூச
மாசிமக மீன முத்ர
மாதமீ ராறினும் தவருது பௌரணை
வருகுநட் சத்திர மிதாங்
கத்தியலை யாதுபரி சுத்தவெனை யாண்டருள்செய்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 57

நட்சத்திரத்தில் அமிர்தயோகம்

மூலதிரு வோணமு மிரேவதியு மஸ்தமு
மூவுத்ர முடனருக்கன்
மோதுமான் றலைசோதி புனர்பூசந் திருவோண
மோ டுருளி சோமவார
மோலவுத் திரட்டாதி ரோகணியு மூலமு
முத்திரமு மங்காரக
னுத்திரட் டாதிமுப் பூரமுத் ரங்கீர்த்தி
யுயர்புதன் சோதி குதிரை
சூலமக மிகுபூசம் வியாழநா ளிரேவதி
துரகமு மஸ்த மூலஞ்
சுக்கிரவா ரஞ்சதைய ரோகணி மகங்கீர்த்தி
சோதியுஞ் சனிநா ளுறுங்
காலமிது வாநாள்க ளமுதயோ கங்களாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 58

நட்சத்திரத்தில் மரணயோகம்

அனுடமுங் கேட்டையு மகமும் விசாகமு
மவிட்டமிவை யாதி வார
மானபூ ரட்டாதி கிர்த்திகை விசாகமோ
டமைமகஞ் சோம வார
முனுசதைய மாதிரை விசாகபூ ராடமிவை
யோங்குமங் களவாரநா
ளுற்றரே வதியஸ்த துரகமூ லம்புந்தி
யுரோணிமான் றலைகார்த் திகை
யொனுசதைய மார்திரை யுத்திரங் குருவார
மூரோகணி மகங் கேட்டையா
மோணமா யிலிபூச மரணயோ கம்வெள்ளி
யுத்திரம் பூரட்டாதி
கனசனியி லாயிலிய மஸ்தம்ரே வதிசித்திரை
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 59

திதியி லமுதயோகம்

குருவுக்கு நவமியுஞ் சதுர்த்தசித் திதியுடன்
கூடினு லமிர்த யோகங்
கொடுஞ்செவாய் நாயிறு முதற்றிதியே காதசி
குணமான சஷ்டி யுடனே
தரும்புகர் திங்களுந் துதிகை துவாதசி
தம்மினல் லமிர்த யோகந்
தனிபுதன் திரயோதசி திருதிகையு மட்டமி
தான்கூடி லமிர்த யோகங்
கரியசனி தசமியொடு கூடியே வந்திடிற்
கனமான வமிர்த யோகங்
காசினியி லிந்நாட்க டியமிர்த யோகமாக்
கழறினுர் கணித நூலோர்
கரிமுகனே யுங்கந்த சாமியையு மீன்றவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 60

திதியில் தத்தயோகம்

இரவியிற் கீராறு திங்கள் பதினென்றதா
மியைந்தசெவ் வாய் பஞ்சமி
யினியபுத னுக்கிரண் டாம்பொன்ன வற்கா
றிடும்புகர்க் கெட்டு மாமே
சரசமில் லாச்சனிக் கொன்பதிவ் விதநாட்க
டத்தயோ கமதாகுமே
சகலசுப காரியங் களுஞ்செய்ய லாகாது
தாரித்ர னுஞ் செனிக்கிற்
புரமதின் மனைகோல லாகாது தீமைகள்
பொருந்துமென மேலோர்கண்முன்
புகன்றிட்ட சோதிடப் படியாக வடியனும்
புகன்றனன் புவிய தனிலே
கரதல கபாலனே கண்ணுதன் மூர்த்தி சே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 61

தரித்திரயோகம்

அனுடமொடு நாயிறும் முத்திரா டந்திங்க
ளங்கார கன்சதையமு
மசுவதி புதன்வார மிருகசீ ரிடங்குரு
வாயிலிய சுக்கிர வாரஞ்
சனிவார மஸ்தமுங் கூடிவரு மாயினது
தாரித்ர யோக மென்பார்
தனம்புதைத் திடவுநன் மருந்துணவு மாகாது
தானியம் விதைக்கொ ணாது
மூணியோட்ட லாகாது கடன்கொளிற் றீராது
முத்தணிகள் பூண லாகா
முதல்விருந் தாகாது சபைகூடி லவமான
முழுமிடிய னுழுதிக்கிற்
கனியினுக் குலகைவலம் வந்தவன் றந்ததயே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 62

மரணயோகம்

அனுடமுந் துதிகையும் மூவுத்ரங் கிர்த்திகை
யமர்ந்துறு மகம் பஞ்சமி
யதிசஷ்டி ரோகணி சித்திரை சுவாதியோ
டானது வாதசியுமே
மனுவஸ்த மூலமுஞ் சத்தமி தனிற்கூடின்
மரணயோ கங்களாகு
மதிகருமை மாகாது சோபனஞ் செயில்விதவை
மாவித்தை சொலின் மூடனந்
தனதானி யங்கண்முத லுண்ணினெய் வறுமையாத்
தடம்போகி லுடன் மரணமாந்
தப்பாது முன்னூ லுரைத்தபடி யானுமிச்
சதகத்தி லுஞ்செப்பி னேன்
கனமான மிடியோட வடியார்க ணடமாடு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 63

நட்சத்திரத்திற்கும் நாளுக்கும் பகை

ஆதிவா ரம்பரணி சோமவா ரஞ்சித்ரை
யரியசெவ் வாயுத்திர
மவிட்டமும் புந்தியுங் குருவார முங்கேட்டை
யதிவெள்ளி பூராட முஞ்
சோதிசனி யோடிரே வதியுமாக் கூடிடிற்
சோபனஞ் செயில் விதவையாஞ்
சொல்லுறுதி கொள்ளாது வழிபோகின் மரணமாந்
துணையாகி லிடருற் றிடும்
தூதனப் பிரதிஷ்டை யாகாது புதுமனைக
ணேக்கியே கோல லாகா
நோயாங் குழந்தையுஞ் செனித்திடின்மாயு மென
நூலோ ருரைத்த படியே
காதலுட னிக்கவிதை தன்னிலு முரைத்தனன்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 64

கிழங்கிடுநாட்கண் முதலியன

ஓணமா திரைபூச சதையமூ வுத்திர
மூரோகணி யவிட்ட மிவைதா
மொன்பானு மேனைக்கு நாண்மனைக டோப்புவி
யூன்றிடவு மிக்க நன்றும் [தை
வேணமுப் பூரமும் பரணிகார்த் திகைமகம்
விசாகமா யிலிய மூலம்
விளங்குமிவ் வொன்பதும் வையகந் தன்னிலே
வேர்கிழங் கிடு நாட்களா
மூணுமான் றலைகேட்டை சோதிசித் திரையனுட
மோங்கஸ்த மிரு பூசமு
முயரிரே வதியொடிவ் வொன்பது மரங்கொடிக
ளூன்றுதற் குரிய நாளாங்
காணுதற் கரியநின் னடியென்று காண்பனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 65

பல்லி முதலியது வீழிற் பலன்

ஆதிவா ரந்தனின் மேலான பங்கைவரு
மானம்தி சீவ னழிவா
மங்கார கன்பகைவர் தன்னினிட ராம்புத
னணபிதா மக்கள் சேத
நீதிகுரு வாரநாட் கரிபுரவி யுறவிஞெடு
நீணிதியெ லாமகற்று
நிகர்வெள்ளி சனியுடற் பிணியுண்டு பீடையா
நிகழாவி னமுத மெண்ணெய்
பாதக மகற்றுகோ மயமோம நெய்வெண்ணெய்
பரிகார மாக்கொண் டிடிற்
பல்லியெலி யோந்திபாம் பரணவிழு தோடங்கள்
பற்றற வகன்று விடுமே
காதிரா வணனையொரு விரறனி னெரித்தவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 66

வாஸ்து எழுகின்ற நாள்

சித்திரைக் கீராற தாந்துலா மெட்டினிற்
செய்கார்த்தி கைப்பத் தினிற்
சீராடி பதிஞென்று சிங்கமா றுயர்மாசி
தேதியிரு பத்தி ரண்டில்
வைத்தவை காசியிரு பாஞென்று நாளினில்
வாஸ்து வெழுகின்ற தினமாம்
வையகந் தன்னிலே புதுமனை யெடுப்பவர்
மகராச ராக வாழ்வார்
பத்தடிகள் பதிஞென்று பனிரண்டொ டேழடிகள்
பார்த்தகலம் வைக்க நன்றும்
பாருலகி லிவ்வாறு செய்தனல மென்றுயான்
பழமொழிப் படிசெப்பி னேன்
கத்தனே முனம்வீர பத்திரனை யின்றவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 67

வீடுகட்டுகையிற் சாத்திரம் பார்த்தல்

மணிகோல வேகுழிகள் கெல்லிநீர் விட்டுமேன்
மலர்தூவ வலமாகி டில்
வாழ்வா மிடப்புறஞ் சுற்றிடிற் பகையதாம்
வண்டுபுழு காணி நீதாஞ்
சிணையாகு சிலைகாணி லாக்கமாஞ் செங்கனிதி
சீரரணை நண்டு பல்லி
தேரை சிலந்தியாம் பூச்சியிவை கண்டிடிற்
செம்மையா மம்மனைக டாந்
தனதாமை பாம்புதே ளுடும்பு புலிபூரமிவை
தாங்காணின் மனைகள் பாழாஞ்
சங்குகன் யோகமாம் வேர்கள்கா ணப்பொரு
டப்பாது சேத மாகுங்
கனமலைகள் கோல்பவர்க் கிவைநல்ல சகுனமாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 68

கிரகச்சுற்று மவற்றிலுட்சி நிலையும்

கதிரவன் புகர்புந்தி யந்தந்த மாதலக்
கனத்திலொரு மாதம் வாழ்வர்
கலைநா ளிரண்டேகான் மாதமொன் றரைகுசன்
காரிவரு டம்ரண்டரை
யெதிர்குருவு மோரிரண் டிராகுகே தொன்றரையி
யேற்றகிர கச்சுற் றதா
மிசைகிரக நிலையாட்சி கேள்கதிர வன்சிங்க
மேதிங்கள் கடக குசனுஞ்
சதிர்விருச் சிகமேட புதன்மிதுன கன்னியாஞ்
சர்ச்சுகுரு தனுசு மீனஞ்
சனிமகர கும்பமும் புகர்துலா மிடபமுஞ்
சாற்றினு ராட்சி நிலையே
கதலிசண் பகவனங் கூவிளங் கன்னல்சூழ்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 69

கௌளி சொல்லல், தும்மல், ஆந்தை காகம் கூவுதலிவற்றிற் காரூட லட்சணம்

சூழுமேட ராசிபடை யொலிகளிட பப்பலன்
குடியோட்டு மிதுன நோயாங்
குலவுகட கம்நன்மை சிங்கமமு தந்தயிர்
கொடுத்திடுங் கன்னி வெற்றி
விழுதுலாந் தூதோலை வரும்விருச் சிகம்பொனும்
விருந்துண்டு தநுசி னுக்கே
மேன்மகர ராசிகோ ளுண்டுதீ தாங்கும்ப
மீனமு மகிழ்ச்சி நல்கு
மெழுவார மிரவுபகல் பனிரண்டு கோணமு
மியம்பிடுங் கௌளி தும்ம
லிசைகாக மாந்தைகட் காரூட பலமைந்து
மிவ்வித மெனப் புகலுவார்
கழனியில் செந்நெலொடு கன்னல்வள மோங்கிடுங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 70

மனுஷகண முதலிய மூன்றுமறிவது

அசுபதி சுவாதியும் மான்றலை யிரேவதியு
மனுடமுந் திருவோணமு
மஸ்தபுனர் பூசமும் பூசமீ தொன்பது
மடைவான தெய்வ கணமாம்
பசுபரணி ரோகணி முப்பூர மதனிலும்
பண்புடைய மூவுத் திரம்
பகருதிரு வாதிரையிவ் வொன்பதி லுதித்தவர்கள்
பாருலகின் மனிதர் கணமாம்
விசாகமுங் கார்த்திகை சதையசித் திரையினெட
விட்டமுங் கேட்டை மூலம்
விளம்பாயி லியமக மிவற்றினி லுதித்தவ
ரிராட்சத கணங்க ளாவார்
கசமதை யுரித்துமன் மதனையு மெரித்தவா
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 71

குளிக னிராகுகாலம்

பருதியிரு பத்திரண் டரையின்மேற் குளிகன்மதி
பதினெட்டே முக்காலின் மேற்
படைகுருதி பதினேந்து புந்திபதி னெண்றேகால்
பார்த்திபற் கேழரையின் மேற்
கருதுபுகர் மூன்றேமுக் காலின்மேற் சனிதனிற்
கதிருதய லயநடுவினுங்
காரியின் புதல்வனுங் குளிகன்வரு வேளையிது
கண்டறிக ராகு காலந்
திருவார மேழுமே செலபூநீ முடிவாச்
சேருயி ரெழுத்தின் தொகை
திறமாக மூன்றேமுக் காலொடு பெருக்கிடிற்
றெரித்திடு மிராகு காலம்
கருவினி லுதித்திடா தருள்செயுங் கடவுளே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 72

சென்ம நட்சத்திர வாரபலனும் மாதபலனும்

இரவிவா ரத்தில்வழி நடையிந்து போசன
மியம்புசெவ் வாய்வசியமா
மினிமைதரு புதன்வித்தை குருவினிற் பொன்னு
யியல்வெள்ளி செல்வ முளதாம் [டை
நரகசனி வியாதியாஞ் சென்மநட் சத்ரமதி
ஞட்களிப் பலனீந்திடும்
நவிலுமவ ரவர்சென்ன நட்சத்ர முதன்மாத
நண்ணுநட் சத்ர வரையிற்
சரியாக வேயெண்ணி யேழிற் பெருக்கியது
தனையெட்டி லேகழிக்கத்
தானேகல் வணிலாபம் வழிசேற னிதிதருஞ்
சாரின்ப வவமான மாங்
கருதினுர் மாதபல னிவ்வண்ண மாகவே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 73

ருது நட்சத்திர வார பலன்கள்

உத்ராட முதலவீ ராறுநட்சத்திரமு
முத்தம மெனச் சொல்லுவா
ருயருதிரு வாதிரை தொடர்ந்தநட் சத்திர
மோரேழு மத்திபமதா
மத்தமுஞ் சித்திரையு மதிவாழ்வு குன்றுமற்
ருறுமே விதவை யாக்கு
மருக்கனிற் சிசுவழிவு சோமவா ரத்தினிலு
மங்கார கன்விதவை யாம்
புத்திரர்க ளுண்டுபுதன் குருவார நன்மையாம்
புகரெனிற் செல்வ முளதாம்
பொல்லாத சனிதனிற் பிணிபீடை யுண்டெனப்
போற்றினர்க ளேற்ற நூலோர்
கத்தியலே யாதுன்னை நித்தந் துதிக்கவருள்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 74

புது வஸ்திர முடுக்க நாள் நட்சத்திரம்

மூவுத்தி ரந்தானு மஸ்தமொடு நான்கின்மேல்
மொழிபூச மிவ்விரண்டு
முடன்ரோணி யநுடமுஞ் சத்தமி துதிகையுடன்
முனைதசமி பஞ்சமியுமே
துவாதசி திரிதிகை திரையோத சியட்டமி
சுகமா மருக்க னன்ருஞ்
சொன்மதி தனக்குறுகண் செவ்வாயி னுக்கிடர்கள்
சுகவெற்றி போம் புந்தியில்
நோவுவரும் வாழ்வுபோ மரணமா குஞ்சனி
நுவல்குரு சுக்ர வாரம்
நோயில்லை திருவுண்டு வஸ்திரபூ டணமுண்டு
நுண்ணரும் பெருமை யுண்டாங்
காவுலகில் யாவர்க்கு மிவைநல்ல நாட்களாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 75

பயணம் போகுநாள் போகாதநாள்

அங்காரக் கன்னிந்த்ரி சனிதிங்கள் தெற்குமே
லதின்மேற்கு பூந்திகுருவா
மாதிவா ரம்வெள்ளி வடதிசைச் சென்றவர்க்
காகாத காரியமுமாந்
தங்கியிடு பரிதியொடு வெள்ளியிற் கீழ்த்திசைத்
தானேகி லதிக பகையாஞ்
சனிமதியு மேற்றிசைச் சென்றிடிற் காரியந்
தானகன் ரோடி விடுமே
மங்களவா ரம்மதில் தெக்ஷணத் திசையேகின்
மரணமாம் போன வர்க்கு
வாரகுரு புந்தியில் வடதிக்கு நோக்கிடின்
மறுபடி திரும்பி டார்கள்
கங்குலும் பகலுமென் பங்கினி லிருந்தருள்செய்
கற்பக விராச மேவுங்
கங்கைபூண யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 76

காக நூல்

அங்குதய நன்மையாய் விருந்துபொரு ணஷ்டியா
மழுகையான் மடந்தை வருவ
ளதிவருணந் தீமூட்டல் முகில்பொழுதி லுதிரஞ்சா
மாகுமிது காக சாஸ்திரந்
தங்கிட மிருந்துவல மாகவே சென்றிடிற்
சருவகா ரியமு மாகுந்
தரையினீர் புற்றிலு மகனெல்பான் மரத்திலுந்
தான்கூவன் மிக்க நன்றுந்
தோதாங்கியிடு கனிபலாக் கெள்விமூக் கிணநக்கல்
சோறிரைகள் கௌவி வருத
றெடர்வழியின் முன்னோடல் வாய்மெல்ல னன்ற
தொல்லுலகில் யாவ ருக்குங் [தாந்
கங்கையாஞ் சங்குநதி பெருகுவள நாடெனுங்
கற்பக விராச மேவுங்
கங்கைபூண யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 77

செஞ்செல்லெழும்பிற் பலன்

எமநிருதி வருணதிசை செஞ்செல் லெழும்பினு
லிஷ்டபாக் கியங்க ளுண்டா
மிந்திரதிசை வாயுதிசை யீசனழ லன்றிசை
யெழும்பினுற் றீங்கு வருமே
யமரீசுத் தொட்டிலடி மரணமாந் தூணடியி
லம்மனைக் கிறை மரணமா
மானபஞ் சணையினடி கட்டிலின் கீழுறி
னந்தமனை யாளு மரணம்
விமரிசைய தாநிலத் திற்செல் லெழும்பிடின்
வீடடங் கலு மாயுமே
விபரமுட னிந்நூலு முன்னூ லுரைப்படி
விளம்பிடும் புவிய தனிலே
கமகமென வாசமிகு புஷ்பவன மேபெருகு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 78

தேங்காய்ச் சகுனம்

அடியது பருத்துமுடி சிறுகிவட் டமதாகி
லாக்கமுக் கூருய்விடி
னதிகசந் தோஷமா மைந்திரண் டாயுடையி
லளவிலாச் செல்வ முளதாம்
நெடினரம் பிருகோண மாகிலோ துன்புறு
நிதானமாம் வாழ்வுதானு
நிறையோ டகன்றுதான் முட்டைபோ லாகிடி
னீலரத் தினஞ் சேருமாம்
வடிவுசுக் கெட்டாகி லரிசிவத் தியானமாம்
வட்டமா யுடையி னன்றும்
மஹாகண பதியின்முன் றேங்கா யுடைக்கையின்
மகிழ்சுபா சுபசகுனமாங்
கடலுலகில் யாவரு முணர்ந்திடச் செப்பினேன்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 79

இடமாகவேண்டுவன

கலிமானும் வானரங் கருடனுங் கீரியுங்
காடான் கருங் கூகையுங்
கரடிநாய் பன்றிமூஞ் சூருந்தை யாமையுங்
காடையொடு பூனை சிட்டும்
வலிமுய லுடும்பிவைகள் வலமிருந் திடமாகின்
மாவெற்றி தரு சகுனமாம்
வழிப்பயண மாகுமையி லோர்தும்ம லாணைதலை
வாசற் படியிடித்தங்
கலறியே யிருமலும் போகா தே யென்றிடலு
மாங்கவன் ரெடை யிருத்த
லவச்சொலுப சரித்தலிவை யாவுநன் றல்லவெவ்
வலுவலு முடிந்திடாது
கலியுகந் தன்னிலிது கைகண்ட சாஸ்திரங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 80

எதிர்வரில் நலமுந் தீதுமாவன

நிறைகொண்ட நீர்க்குடம் பாற்குட மெருக்கூடை
நீடுமங் கிலி யரசர்பார்
நிகழ்த்திடுங் கர்ப்பமுறு மாதர்வே சையர்சிரூர்
நீள்வனக ஞ்பய மறையோர்
கறைபலாக் கனியன்ன மிவையெலா முன்வரிற்
காரியங் கைகூடிடுங்
கனகுட்டை மொட்டையுந் தவசிதட் டானுடன்
காதுமூலை நாசி யிலியு
மறையாள ஞெருவனவ பாண்டநா விதன்கோடி
வஸ்த்ரம்விரி தலையத்தகன்
வாணியன் விறகுசந் நியாசியக் கினியெதிர்
வந்திடிற் றீதென்பர்காண்
கறைகண்ட னேதொண்டர் தெண்டனிடு பாதனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 81

உயிர்விடு நாளின்றோஷம்

உத்திரட் டாதிபூ ரட்டாதி ரேவதி
யுரோகணி யவிட்ட சதைய
மொருவருட தோடந்தா னுற்றபஞ் சமியிலே
யோராறு மாத தோடஞ்
சித்திரை புனர்பூச முத்திரங் கிர்த்திகை
செய்யமான் றலைவிசாகஞ்
சித்திதரு முத்ராட மிவ்வேழு மேமூன்று
திங்கள்வரை யுந்தோஷ மாம்
நத்துமூ லங்கேட்டை யாகுமிரு நாட்களு
நாற்பது தினந் தோஷமாம்
நலமாக மேற்கண்ட நட்சத்தி ரந்தவிர
நன்றதா மற்ற நாட்கள்
கத்தனே யுலகிலுயிர் செத்தநாட் டோஷமிது
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 82

ஆடுமாடு கொள்ளாத நாள்

சித்திரை மகத்திஞை டுத்ரபூ சத்திலுஞ்
சேர்ந்தரோ கணி தன்னிலுஞ்
செப்பவிட் டத்திலு முத்திரா டத்திலுந்
திகழுத்தி ரட்டாதியோ
டொத்தவிவ் வெட்டுநட் சத்திரந் தன்னிலே
யுலகுளோ ரெவர்க ளுந்தா
மூர்ப்புரவி மாடாடு கான்டை யடிமையோ
டாட்டைமுத லிவைக ளெல்லா
மெத்தனைகொள் கினும்வருட மொன்றிலே மாடுபேன்
றியம்பினூர் சோதி டத்தி
லிதமாக யாவர்களு நற்றினந் தன்னிலிவை
யெய்திடின் மிக்க நன்றுங்
கத்துமுதி லியகொடிய பித்தினை யகற்றியருள்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 83

சூரிய கலை

யார்க்கிலுப தேசமும் வித்தையுஞ் சேவையும்
படையோட்டு களவு சூதும்
பசாசோட்டுபங்கொளல் வழக்குபகை தீர்த்தலும்
பரிகரித் தேரூர்தலும்
வார்த்தையொ டெழுத்தெழுதல் கீதங்கள் பாடுதன்
மருந்துண்ணல் புனலாடுதல்
மந்திரஞ் செபித்திடுதல் விடமதை யறிந்துதன்
மணிமந்தி ரங்களுடனே
தூர்த்தல்கொடு பிணிமுதற் றம்பனநல் யோகமாஞ்
சூரிய கலைக் குரிமையே
தும்பிழுக ஜனப்பெற்ற வம்பிகை தனக்குமுன்
சுவாமியுரை செய்த விவையாங்
கார்க்கோட விடமுண்ட கண்டவென ரட்சிக்குங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 84

சந்திர கலை

கிளைக்குமனை யாடையா பரணங்கள் பூணலுங்
கேணிதோண் டிட லடிமையுங்
கீழ்சலந் தான்காணன் மன்னரெதிர் சாந்தியுங்
கீர்த்திப்பிர திஷ்டை சுரமு
முளைக்குநல் விதைநாட்ட லுண்மைவச னஞ்சொலை
முயல்தரித் திரர்க்குதவுதன் [ன்
மொழிகல்வி கற்குதல் தனம்புதைத் திடுதலிவை
முற்றுமதி கலையிலாமே
விழிக்கனலி னுலகங் கன்றனை யெரித்துளோன்
விளம்புசாத் திரநூலி தாம்
விபரமா யுலகுளோ ரியாவரு மறிந்திட
விரித்துரைத் தனனெளிய னுக்
களிக்கவறு பத்துமூ வர்க்குமெய்ப் பதமுதவு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 85

உபய கலைகள்

ஆதியா யிருக்கின்ற உபயகலை சமனதா
யடைவுட னடப்ப தாகி
லப்பொழுது தொட்டிடு நினைத்திடுங்காரிய
மாகா தினிச்சயம்
நீதியாய் மன தினி னினைத்தன்முடி யாதுதான்
நினையாது வந்தெய் திடும்
நிலையாத தவமது நிலைத்திடு மிக்கலையி
னேர்மையிஃ தாகு மெனவே
வாதவூரர்க்காக நரிபரிய தாக்குமெம்
மாதேவர் மன மகிழ்ந்து
மண்ணுலகி லியாவருந் திண்ணமிது வென்றுணர
வகைவகைய தாவுரைத்த
காதிபெறு சரநூலின் மார்க்கமிது வாகுமே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 86

பதுமினிப்பெண் குணம்

செண்பக நிறத்தினுள் கூவிளங் கொங்கையாள்
செய்யமலர் வாச முடையாள்
செயமதுர வாக்கினுள் பொய்யுரை சொலாதவள்
செந்திரு தனக்கு நிகரா
ணன்பாக வேயமரர் பெரியோர் தமைப்பணிவ
ணடையன்ன மின்சொ லுடையா
ணவிலிடை சிறுத்திடும் வெண்டுகி லுடுப்பணல்
லல்குரு மரை நேரினுள்
வண்மைபெறு சுரதநீர் கோகனக வாசமா
மானனைய காட்சி யுடையாண்
மாதுரிய கனியுண்ப ளெட்பூவி னுசியாண்
மாலிரவி சாயா முனங்
கணமெனுங் கண்படாள் பதுமினிப் பண்பிதாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 87

சித்தினிப்பெண் குணம்

சித்தினிப் பெண்ணடை பிடியானை போல்பவள்
சிவந்துடன் மிகுந்த வழகுந்
திரிவலம் புரிகழுத் தினள்வஞ்சி போல்பவள்
செய்யவிரு தனம் பசுமையாள்
சுத்தவன் னத்துகிலி லிச்சையது கொள்ளுவாள்
சுரதநீர் மதுவாசமாந்
துடியான வார்த்தைபுடை பரவுதன முடையளிதழ்
துகிர்கொவைக் கனிபோன்றவண்
மெத்தமய லாகவே யிருபோது மோர்சாம
மேவியணை வாள்புருடனை
மிகவற்ப மாகவே யுண்பள்சங் கீதத்தின்
மீதுநற் பிரிய முடையள்
கத்தனே சித்தினிப் பெண்களித் தன்மையர்கள்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 88

சங்கினிப்பெண் குணம்

சங்கினிப் பெண்ணினுடல் சிறுகாது பெருகாது
சமனுருவ தாயிருக்குஞ்
சாற்றிடுங் கழுதையைப் போற்கூவு வண்மூன்று
சாமம் விடாது புணர்வாள்
அங்குகோள் பொய்யுரை பொருந்தியிடு நாவினு
ளடியுதடு நீள முடையா
ளல்குல் கறுப்பதா நடுவிரல்க ணீண்டவ
ளகோரகோ பாக்கினி யுளாள்
தங்கிய சிவந்தமல ராடைமே லன்பினுள்
சலிப்பொடு களிப்பு முடையாள்
தனகும்ப மணையவள் வஞ்சக மனத்தினள்
சரீரவெம் மையினை யுடையள்
கங்குலகில் சங்கினிப் பெண்குணமி தென்பர்காண்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 89

அத்தினிப்பெண் குணம்

அத்தினிப் பெண்ணினுட லுயரமா மெந்நாளு
மடியுதறியே நடப்ப
ளவன்மிக்க தூலமா மரகூணயுடல் போற்குறி
யகன்றுமணி யார்ந்திருக்குங்
கற்குழை நாறுடலி னுடுவரி னிச்சையாள்
கனமுகில சுரைக்கா யனுள்
கருதூண் பொசிப்பள்குறு கியகழுத் தினளொழுகு
காமநீர் நாற்ற முடையள்
சத்தமிடி யோசைபோற் பேசுவாள் பாதவிர
ருனீண் டிருப்ப தன்றிச்
சாற்றிடு மிராப்பகன் முழுவதும் புருடனைத்
தழுவிவெகு கோஷ்டி செய்வள்
கத்தனே யத்தினிப் பெண்குண மிவ் வண்ணமாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 90

ஸ்ரீகளுக்கு இந்திரியநிலை

பெருவிரல் பெருங்கால்கள் கரடணி முழந்தாள்
பெருங்குய்ய முந்தி மார்பும்
பெறுங்கொங்கை கைமூல கண்டங் கபோலம்வாய்
பேதைகண் ணெற்றியுச்சி
மருவுமீ வைந்துதா னத்தினி லிடப்புறம்
வளர்பிறை தன்னி லாகும்
வலப்புறம் தேய்பிறை தன்னிலே சார்வதாம்
வலதுபா தம்வரையிலு
மருளுமுப் பதுதான மும்போக நிலைநிற்கு
மமுதினுக் கேழாமிட
மதிவிட மிருக்குமா மன்றுபோ கத்தொழி
லணுவளவு மாகா தெனக்
கருதினுர் மதனநூ லதனிலே கொக்கோகர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 91

போகிக்கு நாள்

அரிவையர்கள் பூப்புநா ளன்றுமுத லீரெட்ட
தானநாள் வரை தன்னிலு
மடைவாக வேகருத் தரிக்குநா ளதிலுன்கி
லாஞ்சிசுக் கல்வி வானும்
பெருகுநா ளந்தினிற் சோரஞ மாறினிற்
பெருந்தவசி யேழாந் தினம்
பிரபல தயாபர னெட்டதனின் மிடியனும்
பீடுதன வாஞென் பதி
லரியபத் தாந்தினங் காமியாம் பதிஞென்றி
லதிதுட்ட னீரா றினி
லருமைமிகு பண்டிதன் பதின்மூன்றி னேயிஞை
னமருபதி ஞன்கி லீனன்
கருதேந்தல் பதிஞைந்தி லீரெட்டில் யோகியாங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 92

க்ஷவரத்திற்குரிய நாள்

சேருமுத் திரநான்கும் பூசபுனர் பூசமுந்
திகழுமுத் ராடநான்குஞ்
செய்யமான் றலையுத்தி ரட்டாதி மூன்றுமாந்
திதிதசமி நன்ற தாகும்
மாரிவரு துதிகைதிரு திகையினெடு பஞ்சமி
வளர்கின்ற சத்தமியுமே
வகுக்குந்த்ர யோதசி துவாதசி மதிபுதன்
மயிர்கழித் திடுத னன்றும்
பாருலகில் வைகாசி யாணியா வணிகார்த்தி
கைதைபங் குனிதன் னிலே
பண்புதரு க்ஷவரமது செய்துகொள வேயஷ்ட
பாக்யங்கள் மேன்மே லுறுங்
காருலவு சோலையொடு சிகரநெடு மலைகள்சூழ்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 93

கூடவரத்திற்காகாத நாள்

ஆடிமார் கழிமாசி கன்னிமா தந்தனி
லாஞ்செல்வ மதுநீங்கிடு
மருக்கனுயி ரழிவாகு மகனவிபொருள் சேதமா
மானகுரு மானசேதம்
நாடிவரு சுக்ரவா ரத்துடற் பலஹீன
நவில்சனிக் கெவையு நாச
நவமிதன நஷ்டமாஞ் சதுர்த்திதாய்க் காகாது
நற்சஷ்டி பிதுர் சாபமாஞ்
சாடிவரு சதுர்த்தசியிற் சோதரர்க் காகாது
தன்மனைவி போமஷ்டமி
சாற்றுசெவ் வாய்நாயி றெண்மதித் தோடமாஞ்
சனிகுருவி னுக்கிடர தாங்
காடுமலை யாவுமகில் சூழுமிட மெனவீறு
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 94

கெற்போட்ட நாட்கள்

மார்கழித் திங்களி லொன்பதாந் தேதிமேன்
மாமழைக் கெற்போட்ட மாம்
வளர்சித்ரை வைகாசி நால்ரை நாட்களா
மன்னுதநு பதின்மூன்றரை
யாரிரண் டொன்றரைத் தேதிநா ளுக்குமே
லானிக்கு நாளொன்றரை
யாடிக் கிரண்டேகா லாவணி புரட்டாசி
யைப்பசி கார்த்தி கைக்கும்
பார்தா ளிரண்டேகான் மார்கழித் திங்களிற்
பற்றுநா ளதுவு முக்கால்
பட்சமுட னிவ்விதங் கெற்போட்ட மோடிடிற்
பஞ்சமது நீங்கி யுலகிற்
கார்மழை சொரிந்துநற் சீர்வள மிலங்கிடுங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 95

அசுவ லட்சணம்

விதிகொள்பரி சிரமதின் மத்தகச் சுழிரண்டு
மேன்மவுன சுழி முன்றதாம்
விளம்புஞ் செழுங்குளம் பிற்சுழிக ணுன்கதாம்
வீறிய கழுத்தோர் சுழி
சதிகொணரி காகம் பருந்தலகை சவையோரி
சாற்றிடுங் கேழ லிவைக
டருகுரல்க ளின்றிநல் லேழமங் கலஞ்சங்கு
தனிவாத்ய மென முழங்க
மதிக்கின்ற நாதமணி யோர்பதந் தூக்கியொலி
மாதங்க மென வாயினும்
வளர்செல்வ மிகுமமர்க் களஞ்சென்று பொருதினும்
வந்திடும் வெற்றி யுடனே
கதிகொண்ட துரககுண மீதென விளம்பிடுங்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 96

அசுவத்திற்கு ஆகாத சுழிகள்

சந்த்ரசுழி யகிலாண்ட வர்த்தமுந் தண்டையடி
தானுடற் பக்கச் சுழி
சாற்றுகவ் வகச்சுழிக் காவத்த சுழியுடன்
சதிரிலா வஜய சுழியும்
விந்தைய திலாததாங் கொடியசுழி கேதாரி
வீறுமடி சேர்ந்த சுழியும்
விகடகே சாப்பத்தங் கச்சுநிலை பட்டடை
வெள்ளிவிழி கொள்ளிப் பதஞ்
சிந்தனை பெருகிடுந் திரிகண்டி னிக்குண்டி
செயமிலா விலங்கின்சுழி
சேரவே சுடலைமுக நஞ்சபா தத்துடன்
செப்புமிச் சுழிக ளெல்லாங்
கந்துக மதற்குமிக வாகாத சுழியென்பர்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாச னே. 97

சாமுத்திரிக லட்சணம்

தாமரை யெனுக்கண்ண னுகிறன முடையனுத்
தருமதுக் கண்ண னெனிலோ
சகலசன திருவுண்டு கழனிக்க னுடையவன்
ரூரணியில் ராம னுவன்
பூமருவு விழியினுன் பொருந்துரைப் புலவனும்
பொருகங்கை யரணை சங்கு
பொற்கொடிகள் குண்டலஞ் சமுத்திரஞ் சாமரம்
பூங்கர மிருக்கி லரச
னுமரைக ணுலுமே மகரமிரு பிடரிதனி
லாரு யமைந்த தானு
லருநிதித் தலிவனு முதுகினி லிருந்திடி
லதிசெல்வம் வயது நூருங்
காமுறுசா முத்திரிக லட்சணமி தென்பர்காண்
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 98

இதுவுமது

தோளுகை நடுவிரலி னளவுநூ லிரட்டித்துச்
சொல்பாத பெருவிரன் முதற்
ருெடர்நெற்றி நாசிவாய் நின்றிடிற் கயிறுதான்
தொலையாத செல்வ முளதா
மாளுக்கு நெற்றிவரை யைந்தாகி னூறுநான்
காகிலெண் பானுகுமே
யமருமூன் றறுபதா மிரண்டற்கு நாற்பதா
மதனிலொன் றற்கிருபதாந்
தாளொடு கரிகுரற் பரிமுழக் கங்கள்போற்
றவன்சிறு முழக்கமாயின்
ரரணியிற் செல்வனும் பதுமினிப் பிரியனுஞ்
சாஸ்திர முரைத்த வாறே
காளகண் டத்தனே யாலடிவி லாசனே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 99

இந்நூல் பாடிய காலம்

ஆதிகலி நாலாயி ரத்துத் தொளாயிரத்
தாகுமுப் பானி ரண்டி
லாயிரத் தெழுநூற் றைம்பத்து மூன்றுவரு
டஞ்சகாப்தம் விகுர்தியா
நீதிசே ராண்டுமே டத்திங்கள் குருவார
நேர்ந்தபனி ரண்டாந்தின
நிறைகன்னி திதியைந்தி னோடமிர்த யோகமிவை
நீடிரே வதி நாளினிற்
சாதியில் வீரசை வன்விசுவ லிங்கன்பர்
தருசிதம் பரவாணன் யான்
சதகமெனு மிப்பனுவ னின்னடிக் கன்புகொடு
சாற்றின னுவந் தாளுவாய்
காதலுட னடியர்தொழு கறைமிடற் றண்ணலே
கற்பக விராச மேவுங்
கங்கைபுனை யீசனே மங்கைமகிழ் நேசனே
கயிலையங் கிரிவாசனே. 100

வாழி

சீர்வாழி நான்மறையி னேர்வாழி விண்ணிலுறை
தேவர்முநி வோர்கள் வாழி
செந்தா மரைத்தவிசு வந்துளாள் வாழியித்
தேசமன் னவர்கள் வாழி
பார்வாழி கலைமங்கை வாழிசெந் தமிழ்வல்ல
பாவாணர் வாழி நிதமும்
பரவுசெங் கதிர்வாழி மதிவாழி துதிவாழி
பத்திபுரி தொண்டர் வாழி
கார்வாழி யைங்கரன் ருள்வாழி முருகவேள்
கழல்வாழி நாரண னெனுங்
கருமுகி னிறக்கடவுள் வாழியெவ ரும்பரவு
கயிலையங் கிரிநாதரென்
போர்வாழி தர்மவர்த் தனியம்மை வாழியா
னுரைத்தவிச் சதகம் வாழி
யுவப்புடன் கற்றுளோர் கேட்டுளோர் வாழியவ
ருறவினரும் வாழி தானே.

முற்றிற்று.



திருச்சிற்றம்பல நாவலர்

இயற்றிய

4. அண்ணமலைச் சதகம்

விநாயகர் காப்பு

நேரிசை வெண்பா

அண்டமனைத் தும்பரவு மண்ணு மலைச்சதக
மொண்டமிழாற் பேதையே னேதவே— தொண்டர்
[பணிந்
தெண்ண வரந்தருநல் யானைதிறை கொண்டருண்
கண்ண வரந்தருந்தாள் காப்பு. [முக்

நூற் பெயர்

நேரிசை வெண்பா

மன்னுதிரு வண்ணு மலைச்சதக மென்றும்போர்
பின்னு மொருநாமம் பேசுவாம்— இந்நிலத்திற்
றங்கு புகழ்வசந்த ராயச் சதகமென்று
வெங்குந் துதிப்பதாமே.

நூல்

கடவுள் வாழ்த்து

ஆசிரிய விருத்தம்

கூர்கொண்ட திருமேனி செந்தா மரைக்கணன்
கமலால யத்தென்கணன்
காணரிய பேரொளிச் சுடராகி
யண்டக் கடாக மூடுருவி நின்ற
வேர்கொண்ட திருவுருவ மருவுருவ மாகியுல
கெங்கும் வியாபியாகி
யெல்லா வுருக்கடொறு முயிராகி யவ்வுயிர்க்
கின்பவா னந்தமாகிப்
பார்கொண்ட தூலசூக் குமமாகி யழியாத
பரசத்தி யிடமுமாகிப்
பஞ்சகிர்த் தியமும் புரிந்தருள் சுரந்தெழும்
பரசிவ மகாலிங்கமே
ஆர்கொண்ட மலைவளச் சிங்கபுரி யரசுசெய்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணவி னுற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணுமலைத் தேவ னே.

திருக்கோவலூர் ஸ்தலப்பெருமை கூறியது

கருணை கரக்குக முனிக்காக வேமுனங்
கைலாய கிரியின் முருகன்
கைவேல் விடுக்கவந் தூன்றலா லேதிருக்
கையில்வே லூராகு மெய்ப்
பொருணைய ளரவ தரித்ததல மௌவையார்
புகலும்வெண் பாவினுக்காய்ப்
பொங்குபா னெய்வந்த பெண்ணைநதி சூழ்தலம்
பொன்மாரி பொழியுந்தலம்
வருமா வருட்பெரிய நாயகியும் வீரட்ட
மாதேவர் வாழுந்தலம்
மாதவக் குகமுனி மகந்தனிற் றெய்வீக
மன்னன வதாரத்தலம்
அருணை சலக்கிருஷ்ண தாண்டவ வசந்தவா
ணந்தகை வசந்த ராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவ னே. 2

அபிஷேக விதி கூறியது

சுத்தசல மபிடேக நல்லெண்ணெ யரிசிமாத்
தூண்மஞ்ச ணெல்லிமுள்ளி
தூபஞ்ச கௌயமோ டாவினெய் பாறயிர்
சுவையான பஞ்சாமிர்தம்
உற்றபல மாக்கதலி மாதுளை யுமெலுமிச்சை
யோங்குதம ரத்தை நார்த்தை
யொண்கனிச் சூளகுளஞ் சித்தேன் றிரட்டுபா
லுயர்கருப் பஞ்சாறுடன்
மெத்துமிள நீரன்னம் வில்வநீர் தபனநீர்
மிளிர்சிபான் னிறத்தோதகம்
மென்பசுங் கற்பூர நன்புனுகு சந்தனம்
விளங்குதா ராபிடேகம்
அத்தனுக் கித்தகைய வபிஷேக மேபுரிந்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 3

அருள்பெறுமா றெங்ஙனமென விரங்கல் கூறியது

தருமல ரெடுத்துனைப் பூசைபுரி வோமெனிற்
றண்மலர்த் தேனருந்தச்
சமயந் தெரிந்துமுகை யவிழ்கின்ற போதுவீழ்
தனிவண்டி னுலைச்சிலாம்
விரிபுன லெடுத்துனக் காட்டுவோ மென்கிலோ
மேயுமண் ணீகமாமை
மீனத்தை ஞெண்டிருந் துலவலா லந்தநீர்
மிகுதியுந் தானெச்சிலாந்
தெரிமறை யிருக்காதி மூவர்தே வாரங்க
டிருவாச கத்துதிகளாச்
செய்வமெனி லோதுதிகள் செய்நாக்கு ளெச்சிலெ
செய்துனக் காளாவனே [ன்
அருள்பரம தேசிகக் குகநமசி வாயர்திரு
வருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணுமலைத் தேவனே. 4

திருவண்ணுமலைத் தீர்த்தத் தொகை வகை கூறியது

இந்திரன் றீர்த்தமோ டக்கினித் தீர்த்தமா
மெமதீர்த்த நிருதிதீர்த்த
மியல்வருண தீர்த்தமுயர் வாயுதீர்த் தம்வடக்
கெழிலாங் குபேரதீர்த்தம்
நந்தலறு மீசானி யன்றீர்த்த மிறைவியுண்
ணுமுலைத் தீர்த்தமரிய
நற்சிங்க தீர்த்தமா ணிக்கவா சத்தீர்த்த
நாடரும் பிரமதீர்த்த
மூந்துசிவ தீர்த்தமா மைந்துசக் கரதீர்த்த
மெய்ப்பெருங் கட்கதீர்த்த
முந்நூற்றின் மேலுமறு பதுதீர்த்த மேவுதல
மொழியினின் னருணசலம்
ஐந்துபூ தத்தலத் தொருதலமி தென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணுமலைத் தேவனே. 5

மூவர் பாடல்பெற்ற சிவஸ்தல மிருக்குமிடங் கூறியது

காவிரியின் வடகரையி லறுபத்து மூன்றுபதி
காண்டருந் தென்கரையினிற்
கருதுமொரு நூறுமிரு பத்தே ழெனும்பதி
கணக்கிலீ ழத்திரண்டு
கோவியற் பாண்டிபதி நான்குமலை நாடொன்று
கோங்கிலேழ் நடுநாட்டினிற்
கூறுமிகு பத்திரண் டாந்தொண்டை நாட்டிற்
குறிக்கிலெண் ணான்கு தலமாம்
பூவிரவு துளுவத்தி லொன்றுவட திசையைந்து
புகலிலிரு நூறுமெழுபான்
புணருமோர் நாலுதல மூவர்பா டியதலம்
புண்ணியத் தலமென்பர்காண்
ஆவிதொறு நின்றுண வளித்திடும் பரமனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 6

மாசந்தோறு மபிடேக வகை கூறியது

வருடாதி சித்திரைத் திங்கள்பூ ரணைநாண்
மருக்கொழுந் தபிடேகமாம்
வைகாசி சந்தனம தானியில் பலாப்பழமு
மாங்கனி கதலிக்கனி
கருதாடி சர்க்கரைந லாவணியி லதிரசங்
காணும் புரட்டாசியிற்
காய்ச்சிய திரட்டுபா லப்பசிக் கன்னமாங்
கார்த்திகைத் தீபார்ச்சனை
திருமார் கழிக்குநெய் தைத்தேன் குடங்கிர்தஞ்
சேர்ந்தகம் பளமீன்மதித்
தீந்தயிர் பரமனுக் காட்டல்விதி பூரணைத்
திதிதோறு மாசபூசை
யரிதா யறிந்துனக் கபிஷேக மதுபுரிந்
தருள்பெறு வசத்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 7

விபூதி தரிக்கும் விதி கூறியது

நித்தலும் வைதீக ராதிமறை யோர்கட்கு
நீர்கொடு குழைக்கு நீற்றை
நெற்றியிற் பன்னிரண் டங்குலத் தளவதாய்
நேராய்த் தரித்த னெறியாஞ்
சித்திரமி ழைத்தசிங் காதனத் தரசுபுரி
செங்கைவே லரசருக்குத்
திருநீற்றை யொன்பதங் குலநீள மாய்நுதற்
சேர்த்தணித லேவிதியதாஞ்
சுத்தவை சியருக்கு நாலிரண் டங்குலஞ்
சூத்திரற் கேழங்குலந்
தோகையர் தமக்குநா லங்குலத் தளவெனச்
சொன்னதே மகுடாகமம்
அத்தனே வாங்குலந் திரிசூல வடிவணித
லருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. ஆ

பிராமணர் சட்கருமாதி விதி கூறியது

வேதமது தானுதன் மற்றுருவ ருக்கோது
வித்தரு மியாகஞ்செயல்
விதியோடு மற்றுருவ ருக்குநல் யாகஞ்செய்
வித்தலோ டீதலேற்றல்
ஓதுமிவை சட்கரும மாகவன் னியமொன்
றுரைத்தகா ருகபத் தியம்
ஒன்றுசுடர் தக்ஷணக் கினியொன்ற திவைமூன்று
முறழுந் திரேதாக்கினி
கேதமறு மியல்பிரம சாரிகிர கத்தன்
கிளர்ந்தவா னப்பிரத்தன்
கேடில்சந் யாசியிவை யாச்சிரம நான்கதாங்
கீதவே தங்கணுன்காம்
ஆதிவரு ணர்க்கென வியாசமுனி செய்தவிதி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. இ

அருக்கியங் கொடுக்குங் காலபலன் கூறியது

இரவிலோ ரையைந்து கடிகையது ஷக்கால
மேத்துவான் மீனினங்க
ளெங்கும் விளங்குமக் காலையி லருக்கிய
மிறைத்திடுதல் பூரணபலன்
மருவுமிரு பானேழு கன்னலரு ணேதயம்
வானிலகு தாரகையெலா
மழுங்கியு மழுங்கா திருக்கவர்க் கியமீதன்
மத்திமப் பலனுகுமாம்
உரைசெயிரு பானெட்டி லின்னுதய முடுவொளி
யொழிந்தருக் கியமதமமா
முதயமே லர்க்கியம் வந்திமை துனபல
னுரைக்குமறை யோர்க்கென்பர்காண்
அருணகிரி நாதர்புக ழியிலவன் ருதையே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 10

அஷ்ட விவாகங்களில் பிராமணர்க் கிவையென்பதும், பிராமணர் நித்திய கரும விதியுங் கூறியது

கருதுபிர மந்தேவ தம்ப்ரசா பத்தியங்
கரணமகி ழாரூடமாங்
கந்திருவ மசுரசுமூமி ராக்கதம் பைசாச
கலியாண மோரெட்டினிற்
பரவுமுத னுன்கும் பொருந்திமா னினிகருப்
பாதான மாதியான
பதினறு மாச்சிரம நான்குசட் கருமமும்
பழகுமுத் தழலும்வேள்வி
யிரவியுதி யாமுன் னுஷக்கால நீராடி
யேன்றதிரி சந்திகால
மிருகையா லர்க்கியம் பூசையெள பாசன
மியம்புகா யத்திரிசபம்
அரியநால் வேதாத்தி யயனமறை யோர்செய்கை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 11

இருபத்தொரு யாகத்தின் பெயர் கூறியது

ஓதரிய வக்கினிட் டோமமத் தியாக்கினிட்
டோமமக் கிரகாயணி
யுத்தியஞ் சோடசீ வாசபே யம்மாக்னி
கோத்திரஞ் சதுர்மாசியந்
தீதிலா வத்தோரி யாமமதி ராத்திரஞ்
செப்புமக் கினியதேயந்
தெரிசபூ ரணமாச நிருடபசு பந்தஞ்
சிராவணி சவுத்ராவணி
மேதகைய சத்திரி சிரார்த்தமோ டட்டகை
விளங்குமாக் ராயணமுடன்
மேவுபார் வணமாசு வயசியிரு பத்தொன்றும்
வேதநவில் யாகங்களாம்
ஆதிவேள் வியில்வந்த வமிசநர சிங்கவே
ளருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 12

அரசாளவேண்டுந் தன்மை கூறியது

மலையரண் காடரண் மதிலரணு நீரரண்
மருவுமிந் நான்கரணமும்
மந்திரிக டளகர்த்தர் குடிபடையு முடையராய்
வலியசது ரங்கசேனை
நிலையுடைய ராயெளிய ரெளிதினிற் கண்டுகொள
நேரிடுங் கருணையுளராய்
நிலமுழுங் குடிகள்பா லாறிலொரு கடமையின்
னிதிகொண்டு தனதுநாட்டிற்
கலகமிடு வோர்களைக் கொலைகளவி னோர்களைக்
கனதுஷ்ட மிருகங்களைக்
கண்டித்து மனுநூ லறிந்துசெங் கோலின்முறை
காத்திடுத லரசாட்சிகாண்
அலைபுனற் பாண்டிநா டாண்டசொக் கேசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 13

அரசர்கட் குறுதிச் சுற்றங் கூறியது

மந்திரியர் கருமாதி காரர்க்டை காப்போர்கண்
மருவுநகர் மாக்கள் சுற்ற
மலைபடைத் தலைவரோ டிவுளியே றிடுமறவர்
மதயானை வீர ரெண்மர்
சந்ததமு மரசருக் குறுதுணைவ ராமியல்பு
தவருத வந்தணுளர்
சாந்தமுறு நட்பாள ரொடுமடைத் தொழிலர்தோங்
தனையறிந் தமிழ்த மீயும்
புந்தியுண் மருத்துவர் கலைஞரு நிமித்திகப்
புலவரிவ ரைவர்களுமெப்
போதுமர சர்க்குறுதி யாகின்ற சுற்றமிது
புகலுமனு நீதிகண்டாய்
அந்திசந் தியுமுச்சி வந்தனம் பூசைபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னுற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 14

திருமுனைப்பாடி நாட்டுப் பிரமாணங் கூறியது

மன்னியல் பசும்புரவி யேறியொரு கணமதில்
வலம்வரும் புவியைநீயே
மாமுடி கவித்தாள்க வென்றுமூ வேந்தரும்
வாய்மலர்ந் தருளவாங்கே
மின்னுறு குணக்குக் கடற்கரை வரைக்குமிகு
மேவுமலர் சோலைதெற்கு
விளங்குதிரு வாத்துறை வதிட்டகுடி வெள்ளாறு
மேற்றிசைக் கொல்லிமலையாந்
தென்னியல் வடக்குப் புனற்றுங் கடியாறு
செப்புமிந் நான்கெல்லையுட்
டிருமுனைப் பாடிநா டுதுசதுர் முடிபெற்ற
தெய்வீக மன்னனுண்ட
அந்நிலையில் சிங்கபுரி நன்னிலத் தரசுபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 15

தெய்வீகராசன் மங்களங் கூறியது

பணிவெள்ளி செம்பொனப ரஞ்சிமணி மரகதப்
பச்சைநிகழ் வைடூரியம்
பவளமா ணிக்ககோ மேதகங் கோமளம்
பணிமுத்து புஷ்பராகம்
மணியுந்து மாபரண மாலையும் பன்னிரு
வகைதெய்வ மலர்மாலையும்
மார்பத் தணிந்துமா முடிசூடி யிலகுபசு
வான்புரவி யூர்ந்துவேள்வி
நணியுள் ளெழுந்துவந் துயர்திரு முனைப்பாடி
நாடாந் திருக்கோவலூர்
நல்லசிங் காசனத் தெய்வீக ராசனு
நரசிங்க முனையர் வாழ்க
அணிவெள்ளி கோத்ரகுல தீபமென வந்தநிதி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 16

தெய்வீகராஜன் சதுர்முடிக் சிறப்புக் கூறியது

பன்னிரண் டலர்மாலை புனைகின்ற திண்புய
பராக்ரமத் தெய்வீகநீ
படையெடுத் தமர்புரிய வேண்டாவெனச்சொலிப்
பாராளும் வேந்தர்காண
மன்னரோர் மூவரும் மல்லுயுத் தம்மேற்று
மல்லாட லுக்கினைத்து
மற்போர் புரிந்திடற் கிவனெருவ னரசிங்க
மாவீர னெனவியந்து
தென்னனுஞ் சோழனுஞ் சேரனுந் தந்தமுடி
செல்வமுடி யென்றுசூட்டத்
திருமுடி யுடன்ரேன்று மொருமுடிச் சதுர்முடித்
தெய்விகக் குலத்துதித்த
அன்னமென மதிவளரு நிபுணகெம் பீரதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணுமுலகுக்குரிய
வண்ணுமலைத் தேவனே. 17

தெய்வீகராசன் பன்னிரண்டு மாலை வகை கூறியது

கொம்பலர் பசும்பொனேர் கொன்றைபுனை மாதுனை
கூவிளங் குமிழ் சண்பகங்
குலவுபரி மளவகுள மலர்துளவு கமலமலர்
கோங்குசெங் குவளைவாகை
தும்பையார் வேம்புபன் னிருமாலை கொண்டபுய
சுந்தர விலாசமார்பன்
தூயசதுர் முடிமகுட சேகரன் மும்மன்னர்
சொந்தசம் பந்தமுடையோன்
கம்பமத முத்தலைக் காரண்ட னைச்சயங்
கண்டவேல் கொண்டதிறலோன்
காசினியை யெழுநூறு வயதாண்ட தெய்விகக்
காவலன் மகிமைகண்டாய்
அம்புய மலர்ந்தமுக கெம்பீர ராசர்புக
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றிசை யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 18

மலையரயன் தெய்வீகனு யவதரித்தமை கூறியது

கரையில்புகழ் கைலையிற் சிவனுமையு மருவுமக
காலமலை யரயனேர்நாட்
கடவுளுக் கறிவியா தேபுகப் பரமனக்
காதன்மா துலனை நோக்கித்
தரையின்மா னிடனுச் சனிப்பையென் றுரைசெயத்
தாழ்ந்தவன் சோர்ந்து நிற்குந்
தருணத்தி லுமையெழுந் துன்மாம னுர்பிறவி
சார்வனே வென்றிறைஞ்சி
யுரைசெயச் சாபந் தவிர்க்கவேண் டுவதாலிவ்
வுலகத்தி லனைவயிற்றி
லுதியாமல் வேள்வியி லுதித்தவனி யாள்கவென்
றுதிடக் குகமுனிமகத்
தரயனென வந்ததெய் விககுலோத் துங்கதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசை யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 19

தெய்வீகராசன் மனைவிகள் பெயர் கூறியது

சேரன் பயந்தபது மாவதியெ னும்பெயர்த்
தேரிவையும் பாண்டியன்மகட்
டினமால் பொருந்துகாஞ் சனமாலை யென்னுமொரு
தேவியுஞ் சோழனீன்ற
பேரன்பு கொண்டசண் பகமாலை யென்கின்ற
பேதையு மணம்புரிந்த
பெண்ணையாற் றங்கரைக் கோவறெய் வீகன்ருள்
பெருமா னிலங்குநாவ
ரரன் றுதித்திருத் தொண்டத் தொகைக்குள்
ளுமாபதி யுருக்கலந்தே
யுற்றவறு பத்துமூ வரிலொருவ ராகின்ற
வோங்குநர சிங்கமுனையர்
ஆரவம் மிசகுல குபேரனிகர் செல்வதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 20

சத்தபுரிராச குமாரிகளைத் தெய்வீகராசன்
மணஞ் செய்தமை கூறியது

காசிரா சன்மக ளனப்பிரபை தன்னையுங்
காஞ்சிபே ரிகதனீன்ற
கமலா வதிப்பெணு மயோத்தியிற் சிசுருமன்
கன்னியாங் கனகைகயினையும்
மாசறும வந்தியா புரிவிசா லாக்கன்
மகிழ்ந்தருள் கலாவதியினை
மன்னுந் துவாரகைச் சந்த்ரவரு மன்றரு
மடந்தையும் பலமாலையுந்
தேசுவட மதுரையம் போசவிசை யாவருமர்
செல்விகம லக்கண்ணியைச்
செல்வபுரி மாயைமா சேனன் பயந்தமதி
சேர்ந்தவுற் பலநயனியை
ஆசையொடு வேட்டதெய் விகருலோத் துங்கதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 21

அங்கவை சங்கவை கலியாணங் கூறியது

சிங்களர் மெனும்தேய முழுதாளு மன்னன்
சிறந்தபேர் பாரிசாளன்
செய்தவப் பயனுற் பிறந்தநற் குணமான
சிறுமியங் கவைசங்கவை
மங்கையர்க ளிருவரை வளர்த்தெடுத் தெளவையார்
மாமுகக் கணபதி கையான்
மணவோலை யெழுதிமும் மன்னரைக் கோவலூர்
வரவழைத் தறுகிடற்குத்
தங்கிப் பனந்துண்ட மரமாகி யேபழந்
தரநதிப் பெண்ணை நெய்பா
ருன்வரப் பாடியப் பெண்களூத் தெய்விகத்
தலைவன் மணம் புரியவே
அங்குதவு மௌவைதொழு மைங்கரன் றந்தையே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 22

மெய்ப்பொருணாயனார் சரிதங் கூறியது

செப்பருந் தெய்வீக மன்னவன் றென்னவன்
செல்விகாஞ் சனமாலையைத்
திருமணஞ் செய்தவூர் மருவிப் பயந்ததொரு
சிறுவர்மெய்ப் பொருணாயனார்க்
கொப்புறு பசும்புரவி யூர்ந்துழன் வட்டம்வந்
துற்றநடு நாடுதன்னி
லொத்தவிந் திரதிசை யினத்தங்க ளெல்லா
முவந்தரசு புரிகுவாயென்
றிப்பெருங் கோவலின் மணிமுடி தரித்திட
விருந்தமெய்ப் பொருணாயனார்
ஈன்றசந் ததியெலா நத்தமன் னவனென்
றிருந்திடுங் குடிகள் கண்டாய்
அப்பெரிய மெய்ப்பொருளி னற்குலம் விளங்கவந்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 23

நரசிங்கமுனையர் சரிதை கூறியது

வந்துலகில் புகழ்கொண்ட தெய்வீக மன்னனெழில்
மலையமான் றந்துபதுமா
வதிமா தினைப்புணர்ந் தரிதாய்ப் பயந்ததொரு
மைந்தனர சிங்கமுனையர்க்
கிந்தநடு நாடெனுந் திருமுனைப் பாடிநாட்
டெல்லைக்குண் மலைமன்னனு
யிருவென்று முடிசூட்டி வைத்தபடி யாலதற்
கேய்ந்தநர சிங்கமுனையர்
சந்ததியில் வந்தவர்கள் மலையமன் னென்றுபெயர்
சாற்றநெடு மேற்றிசையெலாந்
தங்கிய பெருங்குடிக ளாய்நிறைந் துழுதுபயிர்
தானிடுஞ் செல்வர்கண்டாய்
அந்தநர சிங்கமுன யரையர்பே ரன்புநெறி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 24

குலசேகர நாயனார் சரிதை கூறியது

சோழன் பயந்தசண் பகமாலை வதுவையிற்
ரேய்ந்துதெய் வீகனீன்ற
தோன்றல்குல சேகரன் சுருதியை யுணர்ந்தன்ன
தூய்முனைப் பாடிநாட்டில்
வாழுமூன் றினிலொன்று தன்பங்கி லாசித்து
வடநாடு போய்வந்துதன்
மனைவியை விடுத்தே குடந்தையின் குடபான்
மணிச்சோழன் மாளிகைக்கண்
ணாழினெறி யாற்ருதி மூப்பியைச் சேர்ந்ததி
லுதித்தவர்கண் மூப்பனுரென்
றுலகெலாஞ் சொல்லவுஞ் சுருதிமன் னென்றுபெய
ருண்டா யிருப்பர் கண்டாய்
ஆழ்தரு பெருஞ்சுனைகள் சூழ்தருஞ் சிம்மபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 25

மிருகண்டு முனிவராற் காரண்ட னவதரித்தமை கூறியது

கற்கோட்டை யிறைசைநகர் நந்தன வனத்திற்
கனத்தமிரு கண்டுமுனிவன்
கடவுளைப் பூசிக்க மலர்கொண்டு வாவெனக்
கடிதிணைரு பிரமசாரி
விற்கோட்டு மலர்கொயச் செல்காலை வஞ்சனை
விபாவரி யரக்கமாதர்
விளையாட லைக்கண்டு தாழ்த்துவர வம்முனி
வெகுண்டசுர னுவாயெனச்
சொற்கேட்டவ் வசுரனுய்ப் பிறையூர் மலைச்சார
ரேன்றுகா ரண்டனைமுன் நீ
துண்டித்த வாகைவேல் கொள்புயத் தெய்விகத்
தோன்றல்புகழ் சொல்ல வெளிதோ
அற்கூட்ட மணிகண்ட னுதரவி னுதனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 26

வேளாளர் பெருமை கூறியது

தேவால யந்தொறுந் திருவிழாப் பூசையுஞ்
செப்பரிய பிரமாலயத்
தெய்வமறை யோர்செய்யு நித்தநை மித்யமுந்
திரிசந்தி யாகங்களும்
பூவாளு மன்னர்சது ரங்கபல முதலான
பொக்கிஷ மிகுஞ்செல்வமும்
பொன்வெள்ளி தனதானி யம்பல சரக்கினுற்
பொருளாக்கும் வணிகர்தொழிலுங்
கோவாதி சோடச மகாதான தருமமுங்
குவலயத் தலைவர் சுகமுங்
கோளாறு கொண்டுழும் வேளாள ருழுபடைக்
கோலதன் பெருமையன்றே
அவாற் கறந்தபா லபிடேக னேயனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 27

வைசியர் பெருமை கூறியது

செம்பொனைக் கல்லினி லுரைத்தாணி வைத்துத்
தெளிந்ததன் மாற்றுரைப்பர்
திரளுடைமை யடகுவைத் தாலுநிலை கண்டுமேற்
செட்டாக நிதிகொடுப்பர்
பம்புநவ ரத்நம் பரீட்சைரதி கண்களாற்
பார்த்துவிலை யைப்பணிப்பர்
படியுந் தராசுமுண் ணாடுநிலை நிதானம்
படைத்தநா நிலைமையுடையார்
நம்பவரு வர்த்தகமு காந்திரங் கோடிபொன்
னம்புவார் வரவுசெலவு
நாடோறு நாடுவார் நாணய மிலார்க்கணுவு
நல்கார்கள் வைசியர்கண்டா
யம்புவியில் வணிகர்பாற் செம்பொன் வளர்ந்திடுந
லருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 28

நான்குவருணர்க் கறுதொழில் கூறியது

வேதம் படித்தலொரு வர்க்கோது வித்திடுதல்
வேள்விசெயல் செய்வித்திடல்
வேண்டுவ திரத்தலொரு வர்க்கீத லாறுதொழில்
வேதியர்க் கானவிதியாம்
தருண் வேள்விசெய லீதலிவ் வுலகெலா
மோம்பல்படை பயிறல்பொருத
லோராறு மரசர்தொழி லோதலியா கஞ்செய்ய
லோங்குபொரு ளீட்டலீதல்
கோதனைக் காத்தலே ருழல்வைஸ்ய ராறுதொழில்
குயிலுவத் தொழிலேருழல்
கோகாத்தல் காருக வினைத்தொழிற் பொருளீட்டல்
குணமாக வீதலென்றும்
ஆதிசூத் திரர்தொழிற் பகரிலீ தாறுகா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 29

சூத்திரமுஞ் சாத்திரமு மவ்வாறெனக் கூறியது

சேசப்புமா பஸ்தம்ப சூத்திர மிசைத்திடுந்
தியாயியா யனசூத்திரம்
திறமான சத்தியா ஷாடசூத் திரமறை
தெரிந்திட்ட போதாயனம்
ஒப்பிலாக் காத்தியா யனமாசி லாயனமி
தோராறு சூத்திரங்க
ளோதரு வியாகரண சத்தசாத் திரமொன்
றுயர்ந்தசோ திடசாத்திரந்
தப்பறும் பரதசாத் திரமொன் றுரைப்பருந்
தர்க்கசாத் திரமிதொன்று
சாற்றும்வே தாந்தசாத் திரமந்த்ர சாத்திரந்
தகுசாத் திரங்களாரும்
அப்புலிங் கத்துருவ மாகின்ற வண்ணலே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 30

நிலையுள்ள புகழாளரைக் கூறியது

பாலனஞ் செய்துளோ ராலய மமைத்துளோர்
பகர்கோ புரங்கட்டினோர்
பத்திமணி மண்டபந் தேர்விமா னம்பொன்
பதித்தவா கனமமைத்தோர்
சாலையன சத்திரம் விக்கிரக ரூபஞ்
சமைத்துளோ ரன்னதானந்
தடமேரி யக்ரார நிலமானி யங்கோட்டை
தண்சாலை யுண்டாக்கினோர்
வேலையா யோயா தளித்தவர்கள் பொய்சொலா
விரதியர்கள் கவிவாணரான்
மேலாங் கவித்தொங்கல் பெற்றுளோ ரிவர்களே
வீயாத புகழ்படைத்தோர்
ஆலிலைத் துயிலுமா லறியாத பரமனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 31

சைவமுறை கூறியது

சந்தவல ரோனுமா லறியாத பரசிவந்
தானே யனுதியாகுஞ்
சகலரும் பணிசிவா லயமேய னுதியாஞ்
சைவமட மாகுமதுதான்
எத்தைசிவ லிங்கவுரு வைத்தீண்டி யர்ச்சித்
திறைஞ்சிவாழ் மறையோர்கடம்
மில்லமே யுயராதி சைவமட மாமென்
றிசைக்குமுய ராகமங்கள்
சிந்தையன் பாகியே மறவாது சந்ததஞ்
சிவசமஸ் காராதிகள்
செய்யுமறை வேதியர்க ளில்லமே கோகனகை
திகழ்மகா சைவமடமாம்
இந்துநதி யாந்தலச் சுந்தரச் சைவனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 32

பதினாறு பேற்றின்வகை கூறியது

நதிவளந் தருபூமி விளைகின்ற நெல்லாதி
நவதானி யப்பெருமையு
நற்குணத் தொடுசொன்ன சொற்படி நடந்துவரு
நன்மனை யுநன்மக்களும்
மதிவளந் தருகின்ற குறைவிலாக் கல்வியுடன்
மனமிக்க ஞானவறிவும்
வளர்கின்ற விளமையொடு மறுவிலா வழகும்
மகிழ்ச்சிதரு நோயின்மையும்
வதிவளந் தருகின்ற வாணுளு மெய்த்திடமு
மெய்த்துணிவு மிக்கபுகழும்
வேற்றியுட னல்லூழு மறுசுவை நுகர்ச்சியும்
மேலாய் திறைந்ததனமும்
அதிவளந் தருமிதைப் பேறுபதி னாறென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 33

பெண்கொள்ளு முறை கூறியது

தன்னுடைய கோத்திர மலாதநற் கோத்திரத்
தகையளாய்ப் பொய்ம்மையிலளாய்த்
தவறிலா தாண்பெண் சகோதரத் தவளாய்த்
தருங்குலத் தழிவில்லளா
யிந்நில மிகந்தபழி யுடையமர பில்லளா
யேந்துவிண் மீன்பறவையா
றெழில்வரைப் பாந்தள்பெய ரில்லளாய்ப் புருடனு
கிஷ்யளாய் மென்மொழியளாய்ப் [க்
பின்னுமுனி வில்லளாய் நன்னய குணத்தளாய்ப்
பெருமிதம் பிணியில்லளாய்ப்
பெருமதி முகத்தளாய்ப் பேசுமிப் பெற்றியுள
பேதையை மணஞ்செய்திடில்
அன்னையிலு மிக்கபே ரன்புடைய ளாமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 34

பெண்ணிலக்கணங் கூறியது

பம்பைச் சுருட்டைமயி ரில்லாம னுனிமயிர்
பகுவாய்ப் பிளப்பிலாமற்
பற்றுசடை யில்லாது கட்டைமயி ரோடுசெம்
பட்டைமயி ரில்லாமலுங்
கொம்புபோற் பிறமயிர் குறுகிவர வில்லாது
கொத்தாக மயிரிலாது
கோணலாய் மேன்மயிர் படைகொண்டி லாதுவரி
கொடுவெள்ளை மயிரிலாது
செம்பிறையி னெற்றிமேற் பாம்பின் படச்சுழிகள்
சேராம லந்நெற்றியுஞ்
செவியுமிரு கண்களுங் குறுகாமன் மூக்கொன்று
திகழ்நீள மில்லாமலும்
அம்பழுதி லாவிதே பெண்ணிலக் கணமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 35

புருஷலக்ஷணங் கூறியது

நெற்றியிடை யோரைந்து கீற்றுய் மடிப்புறையி
னிறைகின்ற வாயுளுண்டாம்
திறையாக நாலுவரை தோன்றிலெண் பதுவயது
நிலையான வாழ்வுமுண்டாம்
மற்றுமுக் கீற்றி யிருக்கிலறு பான்வருட
மட்டினு மகிழ்ச்சியுண்டாம்
மருவுமிரு வரைதோன்றி லாயுளாம் பானேக
வரைதோன்றி லாயுண்முப்பான்
றற்றையஞ் சுழிவலம் புரியாய் நடுத்தலையி
லொருமையுட னேயிருந்தா
லுலகமுழு தாளுவா னெற்றியில் வலம்புரிச்
சுழியொன் றிருக்கிலிறையாம்
அற்றுறந் தெழுசோதி நயனப்ர காசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 36

இதுவுமது

விழிதோள் கதுப்புமூக் கிருமுழந் தாளுந்து
மிகநீண் டிருக்கவேண்டும்
விரன்மயிர் நகந்தோ னெருங்குபல் லிவையைந்து
மெதுவா யிருக்கவேண்டும்
ஒழியாது நீறணியு நெற்றியிரு தோண்மார்பு
மொண்புறங் கைகள்வயிறு
மோதருங் கைம்மூல மாகுமிவ் வாறிட
முயர்ந்தே யிருக்கவேண்டுஞ்
செழியுமுள் ளங்கைகீ ழுதடுமுள் ளங்காற்
சிறக்குமுண் ணுக்குநாக்கு
சேருங் கடைக்கணுகிர் கூறுமிட னேழுஞ்
சிவந்தே யிருக்கவேண்டும்
அழிவிலா நூல்சொலும் புருடல க்ஷணமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 37

இதுவுமது

இடைமார்பு நெற்றியிம் மூன்றும் விசாலமா
யியல்பா யிருக்கவேண்டு
மிருமுழங் காற்கீழு மான்குறி கிரீபமிவ்
விடமிகக் குறுகவேண்டுந்
தடையிலா துந்தியுஞ் சந்துதாள் வாய்மிகத்
தாழ்ந்தே யிருக்கவேண்டுந்
தங்குசான் மேன்மையா யங்கைமி கூவன்மையாய்த்
தானங் கிருக்கவேண்டுங்
கொடைதருஞ் செங்கையிற் சங்குசக் கரரேகை
கோதண்ட மகரரேகை
குவிசமா லிகைரேகை நளினசா மரரேகை
கோணு திருக்க வேண்டும்
அடையுமிப் புருடல க்ஷணமுடைய ரரசரா
மருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 38

விபூதியிடுங்காலங் கூறியது

காலையி லெழும்போது மலசலம் விடுத்துமிகு
கால்சுத்தி செய்தபோதுங்
காரிகை யொடுங்கூடி நீராடி னுந்தரணி
காவல ரிடம்போயினும்
மாலயம் போதினுஞ் சண்டாளர் நிழல்படினு
மறுகூடு சென்றுவரினும்
மாதசூ தகமேவு மங்கையர்க ணிழல்படினு
மாபெரிய ரிடமேயினும்
பால்பழம் போசனங் கொண்டபினு மருமலர்
பறித்திடினு மாபாதகர்
பார்த்திடினு மெவ்வுழி பயப்படினு நன்னூற்
படித்திடினு மவிழ்தமுணினும்
ஆலயம் புகினும் விபூதியிடன் முறையென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 39

அறம்-32 கூறியது

ஓதுவார்க் குணவீத லாறுசம யத்துளோர்க்
கோதன மளித்தலாவந்
துரிஞ்சிடத் தறிநாட்ட ஞடொறும் பசுவினுக்
குவந்துவா யிரைகொடுத்தல்
காதோலை யீந்திடுதல் கண்ணுடி காட்டலிரு
கண்மருந் திடன்மடங்கள்
கட்டிடுதல் பூஞ்சோலை நாட்டிடுதல் பொருளீந்து
கன்னிகா தானஞ்செயன்
மாதுபோ கம்புரிய வைத்திட றலைக்கெண்ணெய்
வார்த்திடுதல் சுண்ணமீதல்
வருவிலங் கிற்குண வளித்தனு விதனுதவல்
வண்ணு னமைத்துவைத்தல்
ஆதுல ரிருந்திட வறச்சாலை செய்வித்த
லருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 40

இதுவுமது

செம்பொனள வின்றியே விலைகொடுத் துயிர்காத்தல்
சேருஞ் சிறைச்சோறிடற்
றின்பண்ட நல்கலற வைச்சோ றளித்திட
றினந்தோறு மையமிடுதல்
வெம்புநோய்க் கவிழ்தங் கொடுத்தலே றிடபம்
விடுத்தன்மக விணைவளர்த்தன்
மென்மகப் பால்வார்த்த னன்மகப் பெறுவித்தன்
மேவுபிறர் துயர்காத்திட
னம்புமற வைப்பிண மடக்கலற வைக்காடை
நல்குதல் குளங்கல்லுத
னல்லதண் ணீர்ப்பந்தல் வைத்திடுதல்சொற்றிட்ட
நாலெட் டறங்கண்முன்னம்
அம்பிகை வளர்த்தென் றருமறைக்கண் முறையிடுந
லருள்பெறுவசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 41

தந்தகாட்டவிதி கூறியது

இலைதிகழு மாவன்னி யரியநா யுருவியே
ரிதழிகரு வேலழிஞ்சி
லீந்துநறு விலிவாகை யார்ந்தபூ லரநெல்லி
யெழினுவல் வேம்புவார்த்தை
மலர்தருங் கொய்யா நறுங்குமி ழிருப்பைதுவர்
வாய்த்ததாய்ப் பாலுள்ளதாய்
மருவுகைப் புள்ளதாய்த் தருமுறித் தங்குலம்
மறையவர்க் கீராறதாங்
கலைதெரியு மன்னவர்க் கேகா தசாங்குலங்
கனவைசி யர்க்கோர்தசங்
கருதுசூத் திரர்தமக் கொன்பதா மங்குலங்
கழியின்மேற் ரூலுள்ளதாய்
அலர்தருந் தந்ததா வனவிதி யதாமென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. 42

விபூதி குழைத்திடு முறைமை கூறியது

குழைத்திடு விபூதிமூன் றங்குலத் தளவதாக்
கொண்டுதலை மேலிடநலங்
கூறுநெற் றியினிலிரு நான்கங் குலத்தளவு
கோணுது நெல்லெள்ளெவை
தழைத்தளவை யிடைவிட்டுத் திரிசூல வடிவாய்த்
தரித்திடுத றிரிபுண்டரந்
தனிமார்பி லும்புயத் தாறங்கு லம்முந்தி
தன்னிலோ ரங்குலமிடல்
கழைநிகர் முழங்கையின் மணிக்கட்டி லேநீறு
கனமிலா தேதொட்டிடல்
கழுத்திடுப் பினிலுமூன் றங்குலக் குறியிடல்
கணித்தமகு டாகமவிதி
அழைத்தன்ன முதவுபார்க் கவகோத்தி ரத்தில்வரு
மருள்பெறு வசந்தராயர்
அண்ணாவி னிற்றுதிசெ யுண்ணா முலைக்குரிய
வண்ணா மலைத்தேவனே. 43

பூசைக்காகாத பூக்களைக் கூறியது

இச்சிலா லரசுபூ சணியெருக் காமணக்
கிலியினி லெடுத்திட்டபூ
வீஞ்சோலை பனையோலை பின்னலிடு கூடையிலெ
டுத்தபூ விடதுகையிற்
பச்சிலையி லாவெறுங் கையினி லெடுத்தபூ
பாண்டத் தெடுத்திட்டபூ
பால்போ னிறத்துகி லதனிலு மெடுத்தபூ
பரிசுத்த மில்லாவிடத்
துச்சிதம தென்றெ யெடுத்தபூ கீழ்விழுந்
துதிர்ந்தபூ மோந்திட்டபூ
வுண்மையாய்ப் பூசனைக் காகாது குற்றமென
வோதுஞ் சிவாகமங்கள்
அச்சுதன் கண்மலர் பறித்திட வுவந்தவா
வருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 44

பூசைக்காகும் புஷ்பவகை கூறியது

வில்வமலர் கொன்றைமாந் தளிர்புன்னை மல்லிகை
விரித்தசத குப்பைதண்ணீர்
மிட்டான் பருத்திபொன் மத்தைவெண் தாமரை
வெண்பட்டி வெள்வழுதுணை
செல்வநிறை தாமரை நறும்பச்சை வெண்காசை
தேழறழ் மருக்கொழுந்து
செய்யமந் தாரைபன் னீர்முல்லை மாதுளஞ்
செழுமலர்க் கொன்றையாத்தி
புல்லறு கழிஞ்சில்பொன் னுவாரை செவ்வந்தி
பூத்திகழ் குதம்பைவெட்சி
பூனைமலர் நாரத்தைசெவ் வரவிந்த ஞாழலிவை
பூசனைக் காகுமலராம்
அல்லிமலர் கொண்டுசிவ பூசைபுரி நேசனு
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 45

இதுவுமது

தேவிசெங் கழுநீர் பசுந்தும்பை கோங்குசிறு
செண்பகம் வெண்பட்டிகை
சிறுநாக மல்லிகை வலம்புரி யடுக்குநந்
தியாவர்த்த நீலோற்பலம்
நாவல்பூம் பாதிரி புரோசைபொன் மத்தையெழி
னுயுருவி குமரிவேங்கை
நாணல்வெண் காக்கணங் கோட்டங் கடம்பலர்
நறுந்தாளி வெள்ளெருக்குப்
பூவுறு கருந்துழாய் வன்னிவெண் கருமையாம்
போதுமால் காந்திபிச்சிப்
பூவிஞெடு வேரிலா மிச்சமிவை சிவபூசை
புரியமல ரென்பர்கண்டாய்
ஆவலன் போடுதமிழ் நாவலர்க் குதவுமுகி
லருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 46

இதுவுமது

கரியசெம் பைப்பூ பசுங்குசை செழுசேவ
கன்போது செம்பாதிரி
கள்ளொழுகு வெள்ளலரி வெள்ளாத் திலோத்தங்
கமழ்ந்திடுஞ் சிவகரந்தை
விரிதரும் வெட்பாலை மாமணிப் பட்டிகை
மிகுங்கொடிப் புலித்தொடக்கி
மென்குராக் குன்றுத்தி சண்பகம் பூகம்
விளாகிளுவை வெள்ளாநொச்சின்
மருவுகரு வெண்ணெய்தல் கொட்டைக்கரந்தைகிளா
மண்டுகண் டங்கத்திரி
மாதுளா செருந்தியை வண்ணமிரு வாட்சியிவை
மாபூசை பண்ணுமலராம்
அரியகண் ணப்பர்கண் மலர்கொண்ட விமலனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னுற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 47

இதுவுமது

நிலமருவு தமரத்தை வெண்கோங்க சோகுதண்
ணீராம்ப லாண்குறிஞ்சி
நிலவுவெள் ளாத்துளவு மாவிலிங் கந்தளிர்
நிறைந்திடு பெருங்கரந்தை
குலவிய கருங்காலி செவ்வேங்கை வெண்ணிறக்
கொக்கிறகு வெள்ளடுக்குக்
கூடுமந் தாரங் கதிர்பச்சை யார்ந்ததுங்
குமவலரி கருமைவெண்மை
நல்விளா செவ்வந்தி யோரிதழ்த் தாமரை
நவின்றநூற் றெட்டுவகையின்
நன்மலர் சிவார்ச்சனைக் காமென்று புட்பவிதி
நவிலாக மத்தின்முறையே
அலர்கொண்டு நாடொறு மநோன்மணிப் பூசைபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 48

சிவலிங்க வகைப் பலன் கூறியது

ஆற்றுமண லாலே யிலிங்கமே பாணித்
தருச்சனை புரிந்தபேருக்
காயுளுண் டாம்பசுஞ் சாணலிங் கப்பூசை
யாற்றுவோர்க் கர்த்தமுண்டா
நீற்றிலிங் கார்ச்சனம் முத்தியுண்டா நித்த
நியதியா யாற்ரேரமண்
ணேயலிங் கஞ்செய்து பூசித்த பேர்க்கின்ப
நிதிமைந்தர் பேறுமுண்டா
மாற்றருஞ் சந்தனச் சாந்தா லிலிங்கம்
வகுத்துவழி பாடுசெய்யும்
மானிடர் தமக்குக் குபேரபாக் கியமவனி
மணிமாட மனைகளுண்டாம்
ஆற்றுமுடை யவர்பூசை யரசாட்சி செல்வமா
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 49

அர்ச்சனை முதலிய தருமமொன்றுக்கொன்று விசேஷங் கூறியது

ஓராயி ரம்பூவி னுலருச் சித்தனிக
ரொருவில்வ மர்ச்சித்தலா
மோராயி ரங்கிணறு வெட்டிவைத் ததுநிகரு
மொருதடா கப்ரதிஷ்டை
சீராயி ரம்மனைகள் கட்டிவைத் திடுபலன்
சேருமொரு மடமமைத்தல்
செப்பருங் கிரகத்த ராயிரம் போர்க்குநிகர்
தீதிலொரு சந்யாசியாம்
பேராயி ரஞ்சொல்லு மந்திர நிகர்க்குமொரு
பெருமுத்தி பஞ்சாக்கரம்
பெரிதுமெண் ணுன்கற நிகர்க்குமொரு ஞானியைப்
பிட்சைசெய் வித்தலாகும்
ஆராம சிங்கபுரி வாழ்தருந் தருமதுரை
யறுள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 50

பலன்களைக் குறித்துப் பூசை செய்ய வாரங்கட்குப் புஷ்பவகை கூறியது

ஆதிவா ரத்திலே வில்வமர்ச் சிக்கவே
யஷ்டமா சித்தியுண்டாம்
அமலனைச் சோமவா ரந்துளப மர்ச்சிக்கி
லளவிலாச் செல்வமுண்டாம்
நீதிசெவ் வாயினில் விளாவருச் சிக்கினன்
னேயமுள மைந்தருண்டா
நிகழ்புந்தி வாரமா துளையருச் சிக்கினன்
னெறியுமெய்ஞ் ஞானமுண்டாம்
வேதியன் வாரமதில் வங்கமலர் கல்வியாம்
வெள்ளிநா வற்கொழுந்து
மேதினிக் கரசனுஞ் சனிவார மால்காந்தி
மெய்யினேய் வாராதுகாண்
ஆதியினில் வல்லாள ராயர்க்கு நேயனே
யருள்பெறு வசந்த ராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 51

ஆலயத்தீப மொன்றுக்கொன்று விசேடங் கூறியது

ஓதரிய தேவால யங்களுக் குள்ளே
யுவந்துதேங் காயெண் ணெயா
லொருகோடி தீபமிட் டதையொக்கு நல்லெண்ணெ
யொருவிளக் கேற்றிவைத்தா
னீதருந் தெளிவான நல்லெண்ணெ யொருகோடி
தீபங்க ளிட்டதொக்குஞ்
சேமமிரு கொம்புள்ள வெண்பசுவி நெய்யினுற்
றீபமொன் றேற்றிவைத்தா
னீதிபுனை பசுவினெய் யாயிரம் விளக்கொக்கு
நிரைமுலைக் காயிழுப்பை
நெய்விளக் கொன்றிடலிவ் வாயிரஞ் சுடரொக்கு
நிறைகருப் பூரதீபம்
ஆதியிற் பரவைமனை தூதுசெலு மண்ணலே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 52

உட்சமயம் ஆறின் பெயருந் தேவதையுங் கூறியது

சந்தகண பதிபூசை பண்ணுவது பாசுபத
சமயமாக் கதிர்வேலவன்
றன்பூசை யண்ணன்மா விரதசம யஞ்சிவன்
றன்பூசை சைவசமயங்
கந்தரண வீரபத் திரபூசை பண்ணுவது
காளாமு கச்சமயமாங்
கருதுவை ரவதேவ ரைப்பூசை புரியுமது
காணும்வை ரவசமயமாம்
பந்தன பயோதர் பராசத்தி யைப்பூசை
பண்ணுவது வாமசமயம்
பகருமிச் சமயங்க ளாறுமுட் சமயமாய்ப்
பன்னுஞ் சிவாகமங்கள்
அந்தரற் கரிதான மெய்ஞ்ஞான பூசைபுரி
யறுள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 53

விபூதி வாங்கித் தரிக்கும் விதி கூறியது

ஒருகரந் தன்னீட்டி மூன்றுவிர லால்வாங்கி
யொளிவிரலி னுற்பூமிமே
லுதிரும் படிக்குநீ றிடுவோ ரகோரநர
கொருகோடி கற்பமாழ்வார்
இருகரங் கொடுதொழுது வலதுளங் கையிலேற்
றிறைவனெதிர் குருவினெதிரே
யெரியினெதிர் வழிநடுவி லாசூச மேவுவழி
யிடாமலெள் ளளவாயினும்
பெருநிலந் தன்னிலே வீழாம லண்ணுந்து
பேசுபஞ் சாக்கரத்தைப்
பேரன்பி னுலுன்னி வெண்ணிற விபூதியைப்
பெட்புடன் பூசுவோர்கள்
அருணிதியு முயர்கதியு மாயுளும் பெருகுவா
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணைவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 54

உருத்திராக்கந் தரிக்கும் விதி கூறியது

உச்சியிடை யோர்மணி தழைத்தவிரு காதிலு
முயர்ந்தமா மணியாறிரண்
டுத்தமாங் கச்சிரத் தெண்ணைந்து நீள்கழுத்
தாடுமுப் பத்திரண்டாஞ்
செச்சையணி மார்புநூற் றெட்டுறுமு முங்கையிற்
செப்புமிரு பத்தாறதாஞ்
சேர்ந்திரு மணிக்கட்டி லிருபத்தி ரண்டுமணி
தேர்ந்துருத் ராக்கமணியே
நிச்சயப் பயபத்தி நியமநெறி யுள்ளன்பு
நேயநிறை யார்வமுடனே
நித்தலும் பூசைபுரி காலத்தி லாயினு
நீங்கா தணிந்தபோர்கள்
அச்சிவ சொரூபரவ ராமென்னு மாமறைக
ளருள்பெறு வசந்தராயர்
அண்ணைவி-னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 55

செம்மூலக்கு விதியும் பலனுங் கூறியது

செய்யவிரு பத்தைந்து ருத்திர மணிக்கோவை
சேர்த்துசெப மன்பொடுசெயிற்
செப்பரிய முத்திதரு மூவொன்ப தக்கமணி
செல்வமேன் மேலாயிடும்
பையவெண் ணூன்குமணி கல்விநல முந்தரும்
பதினொ ந்து மாபிசாரப்
பாலதர்ம் பதின்மூன்று மேவுமுச் சாடன
பலந்தருஞ் செபமாலிகை
கையினிற் சிறுவிரலின் மேற்றுள்ளன் ஞானமது
காட்டும் பவித்திரவிரல்
கனகமுறு நடுவிரற் பகைதருந் தற்சனி
கடியநோய் விளிவுமுண்டாம்
ஐயமிலை யங்குட்ட மருளே தழைத்திடு
மருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 56

செபஞ் செய்யுந் திக்கின் பலன் கூறியது

நல்லகீழ் முகமா யிருந்துசெப மேசெய்யி
னுடொறும் வசியமுண்டா
நாடுமக் கினிமூலை நோயில்லை தென்றிசையை
நாடிச் செபம்புரிகிலோ
வெல்லருந் தீமைதரு நிருதிநல் குரவே
விளைந்திடுவ குடதிசையதோ
வேண்டிமுன் றேடிய பொருட்செலவு வாயுதிசை
வீறுமுச் சாடனமிகுஞ்
சொல்லரும் வடக்குமுக மாய்ச்செபஞ் செய்திடிற்
சொன்னமுங் கல்விநலமுந்
தோன்றுமீ சானதிசை முத்திவீ டாமென்று
சொல்லுஞ் சிவாகமங்கள்
அல்லலற வெத்திசையு மாகுமடி கட்குநல்
லருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 57

பிரதோஷ தரிசன விதி கூறியது

நண்ணுதிரை யோதசித் திதியதே பிரதோட
நாளென்று பெயராகுமந்
தாளிலிரு பத்தாறு நாழிகை யதற்குமே
னுநா ழிகையுநீல
வண்ணராத் திரியின்மூன் றரைநாழி கைத்தொகை
வரைக்கும்ப்ர தோடகாலம்
மறவாம லேசிவா லயநந்தி யிருகொம்பு
மத்தியினி னுட்டம்வைத்து
வெண்ணந்தி கேசுரன் விஷ்ணத்தை நீவிவான்
மேவிழியி னின்றிறைஞ்சி
விமலசிவ லிங்கத்தை யரகர வெனச்சொல்லி
விழியினுற் றெரிசிப்பவர்
அண்ணலரு ளாற்செல்வ மாயுளும் பெறுவர்நல்
லருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 58

அனுசித பதார்த்தங்களைக் கூறியது

பனையினது வெல்லங் கிழங்குறுங் கொடுபனம்
பழமிவை யருந்தலாகா
படர்தரு செடிப்பசலை செம்பசலை சிறுபசலை
பரியகுண் டைச்சுரைக்காய்
சினையுலவு மரவள்ளி யீருள்ளி வெள்ளுள்ளி
செங்கீரை செம்முருங்கை
தென்னை வெல் லத்தினெடு மீச்சவெல் லங்காய்ச்
சிரக்குபான் முள்ளி புண்ணுக்
கினியதேன் கையாற் பிசைந்ததயி ரொட்டைநெய்
யெருமைசெம் மறியசப்பா
லீன்றநாட் பத்திற் கறந்தபாற் சூதகத்
தில்லிற் கறந்திட்டபால்
அனுசித மிதாசார முடையோ ரருந்திடா
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 59

நாடொறுஞ் செய்கையால் வரும் ஐவகைப் பாவமும் அதற்கு நிவர்த்தியுங் கூறியது

தினந்தோறும் பலபண்ட மம்மியி லரைப்பதாற்
செறிவிற கடுப்பிலிட்டுச்
செந்தீ யெரிப்பதாற் றண்ணீர்க் குடத்தினுட்
சேர்ந்திட முகக்குமதனுன்
மூனந்துசோ தினிகொடு பெருக்கிநற் சாணிபட
முறையாய் மெழுக்கிடுவதான்
மூரியரி வாண்மணியி லேகறி குறைப்பதான்
மூளுமைம் பாவநீங்க
தினந்துமறை யோதிட றருப்பணம் விடுத்திட
னெருப்பினிடை யோமஞ்செய
னியமமொடு பலியிடுத றன்பா லுவந்துவரு
நியதிபெறு மதிதியோர்கட்
கனம்பகிர்த லிவைதினஞ் செய்மகம தென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 60

நாடோறுஞ் செயும் பஞ்சயாகங் கூறியது

பரிவொடுங் காலைக் கடன்கழித் தருமறை
பகர்ந்திடுதல் பிரமயாகம்
பலவமர ரிருடிபிது ராதிக டருப்பணம்
பண்ணுவது பிதுர்யாகமாந்
தெரிதரும் விதியினுற் றீவளர்த் தோமவிணை
செய்குவது தேவயாகஞ்
செப்புஞ் சிவாகமப் படியன்ன பலியிடுத
றேர்ந்திடும் பூதயாகம்
வருமரிய வதிதியர்க் குளமகிழ்ந் தன்னம்
வழங்கன்மா னிடயாகநோய்
மாற்றுமக மைந்துந் தினஞ்செயிற் பாவமது
வாரா தெனத்துணிந்தே
அரனருள் பெறுஞ்சைவ மறையவர் புரிந்திடுவ
தருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 61

போசனத்திற் குற்றங் கூறியது

பந்தியிடை யோதன மிருப்புக் கரண்டியாற்
பரிமாற வுண்ணரோடம்
பாவைய ரிடுங்கறியை மீண்டுகொடு வாவெனப்
பன்னியிட வுண்ணரோடஞ்
சந்தியா காலத்து மத்தராத் திரியினுந்
தயிரடிசி லுண்ணரோடஞ்
சாலவய லாருண்ட நற்கலந் தன்னிலே
தானுண்ண லதிகதோடம்
வெந்தெடுத் திடுமட் கலத்தினுந் தகரத்து
மிகவுடைந் திடுகலத்து
மேவுமுள் ளங்கையினு மிட்டுண்ண னின்றுண்ண
மேலான தோடமாகும் [ன்
அந்தமிகு பொன்வெள்ளி பாத்திரத் திலையுசித
மருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 62

போசனகாலத்து அன்னபலியிடும் விதி கூறியது

போசனஞ் செயுமிடந் திருமெழுக் கிட்டுப்
பொருந்திய கிழக்குமுகமாய்ப்
பொற்பா யிருந்திட்ட வடிசின்மே லுதகம்
புரோட்சித் துடன்வலப்பால்
வாசநறு நெய்யன்ன மைந்துபிடி பலிவைத்து
மந்திர நவின்றுநன்னீர்
வலமாக வாபோ சனங்கொண்ட மிகுதிநீர்
மறுவுசிறு விரலின்வழிவிட்
டேசிலப் பலிகொடிக் கிட்டசன மைங்கா
லெழிற்பிரா ணுகுதிபுரிந்
தின்னடிசி லுண்டுத்த ராபோச னங்கொண்
டெழிற்சேட நீர்ப்பெருவிரல்
ஆசில்வழி விட்டெழுத லாசார சைவநெறி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 63

போசனஞ் செய்தபின் அனுட்டான விதி கூறியது

போஜனஞ் செய்தபின் பாசமன முஞ்செய்து
பொற்புடன் வடகிழக்கம்
போருகா சனமேவி வில்வலன் வாதாவி
பொன்றிட வயிற்றைவருடித்
தோசொடுஞ் சீரணஞ் செய்தகும் போதுமச்
சிவமுனியை யுன்னியோர்ந்து
திலமளவு திருநீ றருந்திப் புனைந்துளந்
தேர்ந்தங்கன் னியாசமுடனே
வாசியு ளெழும்பிரா ணுடாம மாற்றிநா
மௌனமாய் மூவேழுரு
மந்திர மகோரத்தை யுள்ளே செபித்துமேன்
மகிழ்வொடு மிருப்பர்நாளும்
ஆசையுறு கிருகத்த வர்ச்சிரம நெறியென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 64

தாம்பூலந் தரிக்கும் விதிகூறியது

மெல்லிணைக் காம்பும் புழுப்போடு காம்பதன்
மேற்றெறும் புங்கசங்கள்
மிகமுறுக லழுகலும் வதங்கலிவ் வெட்டாகும்
வெற்றிலைக் குற்றநீக்கி
நல்லபாக் கெச்சின்முக் காலுமிழ்ந் தாராய்ந்த
நறியவெள் ளிலைகிழித்து
கண்ணுகற் சுண்ணங் கிராம்பேல தக்கோல
நன்மிளகு வான்மிளகுநேர்
சொல்லருஞ் சுக்குமண மேவுசா திக்காய்
தொடர்ந்திடுஞ் சாதிபத்திரி
சுகவாச பூரமிவை தாம்பூல சகிதமாத்
துய்த்திடுவர் செல்வர்கண்டாய்
அல்லியலர் வாவிசூ ழணியணு மலையனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 65

தோடம் வரும் வகை கூறியது

ஊணருந் துங்காலை பேசனகை செய்தல்பிடி
யுண்டையா யுண்ணல் சிந்தல்
ஒருவிரலை நீக்கியுணன் மயிரென்பு பூச்சிபுழு
வுகிர்பட்ட சோறுண்டிடல்
காணுநக மயிரினைப் பல்லாற் கடித்தலொரு
காலினுற் காற்றேய்த்துநீர்
கழுவிடுத லுண்கலத் தெச்சிலை யுமிழ்ந்திடுதல்
கையினு னகமுரித்தற்
பாணியாற் றலைசொரிதல் விரலினுற் றலைகீறல்
பாழ்மனையி லேயுறங்கல்
பட்டகஞ் சாக்கட் குடித்தல்பெரி யோரைப்
பழித்தனித் திரையெழுப்பல்
ஆணைதள் ளுதலிவை ம்காதோட மென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 66

ஆசமனஞ்செய்யுங் காலங் கூறியது

வாசமலர் கொய்யினும் வீதியிடை போய்வரினு
மலசலம் விட்டுவரினும்
மாதரொடு சம்போக மேவினு நீசர்நிழன்
மருவியுடன் மீதுபடினுந்
தூசரை யுடுக்கினும் பலகார முண்ணினுஞ்
சோறுணினு நீருண்ணினுந்
தூயநற் கருமங்க டருமங்கள் புரியினுந்
தொகுசிராத் தங்கள் செயினுந்
தேசுதரு தானங்கள் செய்யினுங் கனிகாய்க
டின்னினுந் தூங்கியெழினும்
தீயகொலை செய்குவோர் பாயுநிழ றேயினுந்
தீண்டொணு தவைதீண்டினும்
ஆசமன மக்கணஞ் செய்யல்விதி யென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 67

மூதேவி வாசமும், தோட முள்ளவையுங் கூறியது

நாட்டரசு நீழலும் விளாமரத் தடிநிழலு
நன்மனை விளக்கு நிழலு
நடமாடு மனிதர்நிழ லிரவினுடன் மேற்படியி
னலமிலாச் சேட்டைமருவும்
பூட்டுநூன் மறையவர்க டந்நிழன் மிதித்திடற்
புனிதமா யொருவனுண்ட
புனற்சேட மொருவனுண லாடைதோய்த் திட்ட
பொருந்தவுட் கொள்ளலாகா [நீர்
வீட்டிடை பெருக்கிய வளக்குமாற் றுப்புழுதி
மென்மயி ருகுத்தபுழுதி
வீறிடுங் கழுதைநாய்ப் புழுதிவெந் திடு சாம்பல்
வேகாக் கரிப்புழுதியும்
ஆட்டிடைப் புழுதிபட லாகாது மேலென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலூக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 68

இவ்வகை யமையிற் சிறப்பெனக் கூறியது

விளையுநன் னிலமுமாய்த் தண்ணீரு மருகதாய்
விரையெலா மணையிடமுமாய்
வெள்ளிமலை போலெருது கருமலை யெனக்கடா
விடுகோலு மாயேருமாய்க்
களவிலா நெஞ்சுடைய படியாளு மாயுளுங்
காலத்தி லேயுழவுமாய்க்
கனமான கிடையெருத் தழையுமாய் நாற்றுவிரை
காலுமாய் மேனடவுமாய்
வளமான பாடுமாய்க் கூளபறிவு மாய்வேலி
வலைவுமாய் நற்காவலாள்
வைப்புமாய் நாடோறும் வந்துபார்க் குந்திறமு
மாயிருந் தாற்பலிக்கும்
அளையுறுங் கொழுமுனைச் செல்வமே செல்வமா
மருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலூக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 69

இந்நாள் நீக்கி யிந்நாளிற் கூடிற் சுபுத்திர ருதிப்பா ரெனல்

இங்குள சரீரமுண் டாகின்ற வயணமே
காதசி யிலங்குபர்வ
மியலமா வாசைமா தப்பிறப் பாகா
திருக்குநாட் கூளநீக்கியே
மங்கையர்கள் பூத்துநீ ராடிய தினந்தொட்டு
வருமா றிரண்டுநாளில்
வாலாய மாய்க்கருக் குழிவாய் திறந்திடும்
மணவாள னெடுகலந்தாற்
பொங்குசுக் கிலமுஞ் சுரோணிதத் தொடுசேர்ந்து
பூரிக்கு மொண்சிப்பியிற்
பூத்தமுத் தைப்போலு மறுகுநுனி மேற்பனிப்
போலுந் திரண்டுருவமாம்
அங்கமல சன்வந்த மைப்பனே யிவ்வுருவ
மருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலூக்குரிய
வண்ணு மலூத்தேவனே. 70

சரீர முண்டாகு முறைமை கூறியது

சுக்கிலஞ் சோணிதத் துட்சேர்ந்து சோணித
சொரூபமாய்த் தவர்வாசலூத்
தோன்ரு தடைத்திடும் வாயுவே வேலிபோற்
சூழ்ந்துகாக் குறும்விந்துவோ
டொக்கப் பிராணவாய் வொளியாம பானவாய்
வொன்றியே வெளியினிற்கு
மூட்பாய்ந்து விந்துடன் பிராணவா யுவுகூடி
யுள்ளே கலந்துநிற்கும்
மிக்குதா னன்கரு வளர்க்குமக் கருவுக்குண்
மேவும் வியாதிமூன்று
விரவிக் கலக்குமைந் தாநாட் கருக்குமிழி
மேனிபோ லாய்வளருமே
அக்கமணி துர்க்கையுறை மிக்கபதி வாசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலூக்குரிய
வண்ணு மலூத்தேவனே. 71

சரீரம் வளரும் வகை கூறியது

கருத்தரித் திட்டபத் தாநா டிரண்டுருவு
கண்டுமூனா போன்முனாத்துக்
கருதுபதி னைந்தாந் தினத்திலே முட்டைபோற்
காணுமக் கருமிதந்தே
யுருத்தரு முதற்றிங்கள் கம்பமா மிருமதியி
லுற்றதலை முதுகுமுகமா
மோதுமூன் ருந்திங்கள் செய்கையும் பாதங்க
ளுறுவிரல்க ளரையுமுண்டாந்
திருந்துநா லாந்திங்கண் மூக்குமுக வுருவமாஞ்
செய்யவைந் தாந்திங்களிற்
செவிநாவு கண்களாஞ் செப்புமா ருந்திங்கள்
சேர்ந்திடு நகங்களுண்டா
மரத்தமா ணிக்கம் பதித்தமுடி யரசர்புக
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 72

இதுவுமது

விஞ்சுமே ழாந்திங்கண் மயிர்நரம் பென்பும்
விளைந்திடுஞ் சடமோடுதான்
மேவிடுஞ் சலமலந் தங்குதா துக்களு
மியைந்துமூச் சுண்டாகுமே
யெஞ்சிலெட் டாந்திங்க டாயுண்ட சாரங்க
ளியாவுமுனா யானகதிர்போ
லேய்ந்தருவி பாய்ந்தே கபாலத்தின் வழியாக
விழியவக் குழவிவளருங்
கொஞ்சவுரு வோவோன்ப தாந்திங்க ளறிவுமேற்
கொடுபிறப் பித்தோன்றனாக்
குறித்திரு கரங்கூப்பி யருடா வெனத்தவங்
கொண்டே யிருந்துபுரியும்
அஞ்சலப் பையொரீ இ வெம்பிறவி நோக்குமே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணுமலைத் தேவனே. 73

பிறவித் துன்பத்தினியல்பு கூறியது

கொடியபத் தாந்திங்கள் சற்குருப் பார்வையே
கொண்டிடுங் குழவிதன்னைக்
கோதறு மபானவளி கீழ்நோக்கு விக்குமக்
குழவிமிகு துன்பமுற்றுப்
படியிற் பிறந்தபின் பகரரிய மாயா
படப்போர்வை யான்மறைந்து
பண்டையி லிருந்தபே ரறிவழிந் திருவினைப்
பாசவலை யிற்படிந்து
துடியளவு நேரநீங் காக்கவலை நோயிலே
தோயுமிங் கிதனைநோக்கிற்
சுரைக்கொடி படர்ந்ததை நிகர்க்குமிச் சனனமாந்
தோதக மொழிப்பரறிவோர்
அடியணு மலையனே தொடியரா மணியனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 74

அஷ்டலட்சுமிகள் பெயர் கூறியது

மட்டிலாச் செல்வங்கண் மருவுதன லட்சுமி
வளர்ந்ததா னியலட்சுமி
மணிமாட மணியாதி செந்நெல்வய றேட்டங்கள்
வளமிகும் பூலட்சுமி
யிஷ்டபாக் கியகுணச் சந்தான லட்சுமி
யெழுத்தொடு நிறைந்தகேள்வி
யியல்பான புத்திவளர் வித்தியா லட்சுமி
யிசைந்தவீ ரியலட்சுமி
திட்டமா யெங்ஙணுஞ் சென்றபோ தினும்வெற்றி
சேர்தரும் விசயலக்ஷ்மி
தீமைவந் தாலுங் கலங்கா திருக்கின்ற
தீரதை ரியலட்சுமி
யட்டலட் சுமிவாச நேசதுரை ராசர்புக
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 75

ஆடி யைந்தாந் தேதி வரும் வாரத்தின் பலன் கூறியது

ஆடிமா தம்பிறந் ததைந்தாந் தினத்திலே
யரியபுத வாரம்வந்தா
லவ்வருட மொருபோக நாடெலா மிகவிளையு
மவனிமே லிட்டபயிர்கள்
பாடுள வியாழம்வரி லிருபோக மேவிளைவு
பாரெலாஞ் சுகசீவனம்
பன்னுசுக் கிரனெனில் கதிர்சாவி சனியனே
பயிரொன்றும் விளையாதுகாண்
நீடுஞா யிறுபயிர்கள் பாழ்திங்க ளொருபோக
நெல்விளையு மேசெல்வமாம்
நேர்ந்தவங் காரகன் பனிச்சோள மேவிளையு
நெறியீது குறியென்பர்காண்
ஆடல்புரி யண்ணலே மாடமா ளிகைசெல்வ
மருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவ னே. 76

பெண்கள் ருதுவாகும் நக்ஷத்திரபலன் கூறியது

மன்னுமச் சுவினியிற் புட்பவதி யாயிடின்
மகிழ்நனுக்கே தோடமாம்
வான்பரணி நாணல்ல மைந்தருண் டாங்கனக
மருவுகார்த் திகைமலடியா
முன்னுரோ கணிதீர்க்க மங்கிலிய முடையளா
முலவுமான் மூலதலைவனுக்
குயர்சுக மளிப்படிரு வாதிரை வெறுப்புமான
முடையளாம் புனர்பூசநாள்
பொன்னெழில் சுகந்தரும் பூசஞ் சிறப்புடையள்
பொலியுமா யிலியமைந்தர்
பூத்தொழியு மகமுரிய புருடன்மே லதிகாமி
பூரமைந் தர்களாணியாம்
அன்னநடை யார்நடன சாலைவளர் சிங்கபுரி
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 77

இதுவுமது

உத்திரம் பதிவிரதை யத்தமேன் மேற்செல்வ
முண்டா யிடுஞ்சித்திரை
யோங்கிய நலந்தரும் பாங்குறு சுவாதிசுக
முற்றிடுந் தனிவிசாகம்
மத்திமந் தலைவனுக் கல்லல்புன் நோய்கேட்டை
மறுபுருட னிச்சைமூலம்
வாழ்வுபால் பாக்கியம் பூராட மமைகெடு
மாமுத்தி ராடஞானப்
பத்தியுறு மோனநற் பொருளா மவிட்டம்
பசும்பொனுள் சதையநிதிபோம்
பகரும் புரட்டைமல டுத்திரட் டாதிமிடி
படுமிரே வதிநடலையாம்
அத்தந் துகிர்ச்செறி மடந்தையர்கள் பூத்தபல
னருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னுற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 78

ஆசூசமுறுத விடங்களைக் கூறியது

தேவால யங்களிற் சந்நிதா னங்களிற்
றிருவிழா விற்சிறந்த
தேர்நடந் திடுபொழுதி லருமறை பகர்ந்தவழி
செய்யுந் தழற்சாலையிற்
பாவாணர் கல்விப்ர சங்கம் புராணம்
படிக்கின்ற வித்வசபையிற்
பார்வைக் கலங்கார சோபன முகூர்த்தங்கள்
பண்ணும் விவாக சபையிற்
கோவான சிங்கா தனத்திருந் தரசுசெங்
கோல்கொண்ட ராசர்சபையிற்
கூறுமிவ் விடமெலா மாசூச மிலையென்று
கூப்பிட் டுரைக்குமறைகள்
ஆவா கனத்தனே மாவார் வனத்தனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 79

அசுவ இலக்கணங் கூறியது

நீலமர கதமுத்து மாணிக்க மம்பொன்
னிறைந்தவெண் பனிசந்திரன்
நெடியதர் மரைமலர்க் காசைமலர் கருமுகி
னெருப்புமணி வண்டுதீம்பாற்
கோலமுறு கின்றசெம் பஞ்சுக் குழம்புகுயில்
கூறுமீ ரெட்டுநிறமாங்
குதிரையுத் தமமிவையி லொருநிற முடைத்தாய்க்
குறித்தமுக மார்புச் சிவாற்
காணுலிவ் வெட்டிடம் வெளுப்பா யிருக்கிலது
கதியட்ட மங்கலமதாங்
கவினுமுக நாற்பாத மைந்தும் வெளுப்புறிற்
கனபஞ்ச கல்யாணியாம்
ஆலவா யிற்பரியி லக்கண முரைத்தவா
வருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலூக்குரிய
வண்ணு மலூத்தேவனே. 80

இதுவுமது

கட்டுவாம் பரிநாபி தொட்டுமுன் புறமெலாங்
கதிர்போற் சிவந்துமதிபோற்
கவினுறும் பின்முழுது நலமா வெளுக்கிலக்
கற்கிபகல் விஜயமென்பார்
வட்டமதி போலவே முப்புறம் வெளுப்பாய்
வயங்கியே பிற்புறமெலாம்
வடிவுசெங் கதிர்போற் சிவந்திடுங் கிள்ளாயது
மருவுகதிர் விஜயமென்பார்
இட்டநூ றங்குல முயர்ந்தபரி யுத்தம
மெண்பத்து நாலங்குல
மிவுளியது மத்தியம் தறுபத்தொ ரங்குல
மியம்புமத மக்கோடையாம்
அட்டமங் கலதுரக நித்தலு நடாத்துதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலூக்குரிய
வண்ணு மலூத்தேவனே. 81

இதுவுமது

வாசியின் வயதுமுப் பத்திரண் டேவருட
மருவிடும் பத்தவத்தை
மாற்றிலொரு மூன்றுவற் சரமுமிரு மாதமு
மன்னுநாட் பன்னிரண்டாம்
பேசுபரி யெவ்வண்ண பேதக மிருக்கினும்
பெருவெள்ளை தான்கலந்தாற்
பெட்புமிகு மப்புரவி தலைவன் றனக்குப்
பெருஞ்செல்வ முங்கல்வியாந்
தேசுள கறுப்புப் பரிக்குவயி றேனுந்
திகழ்ந்தநெடு மார்பமேனுஞ்
செஞ்சிவப் பேறினும் வெள்ளை நிற மேவினுஞ்
செயவாரு ணத்துரகமாம்
ஆசுமது ரஞ்சித்ர வித்தார கவிஞர்புக
ழருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 82

இதுவுமது

ஏறுபரி மாக்கழுத் திடையிரட் டைச்சுழி
யிருக்கின்மிடி யின்னலுண்டாம்
இருகாலி லேயிரட் டைச்சுழி யிருக்கிலவ்
விவுளியா னிகளபந்தங்
கூறருங் கொடியவினை யாமிறுதி யுண்டாங்
குதக்குமீ ருதடுதனினுங்
குலவுமுற் காலடியி லுங்கபோ லத்தினுங்
கோதறு முழந்தாளினும்
வீறுசுழி தானென்றின் மாவேறு தலைவனை
வெவ்வினை மிகுத்தொறுக்கு
மேவுமிவு ளிப்பந்தி யூடுறப் பண்டைய
மெலிந்துநல் குரவெய்திடும்
ஆறுலவு செம்பவள வேணிமதி முடியனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 83

இதுவுமது

தெரிதரு கழுத்தினிடை யொருசுழி யிருந்திடிற்
றெய்வமணி யென்றுபெயராம்
திருமகள் விலாசமுண் டாமுகந் தலைநாசி
திகழுமார் பிவைநாலிடம்
மருவிய விரண்டுசுழி யுண்டாயின் வெற்றிதரு
மாறிலாச் சரிமத்தகம்
மணியா யிருக்கிலவ் வாசிமே லேறுவோர்
வாழ்வுமேன் மேலெய்துவார்
விரவுநெற் றியினடுவி லொருசுழி யிருக்கினது
வீறுநிதி மதியுமுண்டாம்
வேளிவ் விடங்களிற் சுழியிலா விவுளியின்
மேலேற னன்றன்றுகாண்
அரியயற் களவிடற் கரியபே ரழகனே
யருள்பெறு வசந்தாரயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 84

இதுவுமது

வேங்கைநரி சிங்கமுயன் மயின்மல்ல ரம்புமத
வேழங் குரங்குபோல
வேகமுள நடையதாச் சங்குவெண் கன்னலின்
விலாழிகால் வாய்நுரையுமாய்த்
தூங்குவிற் றெனிசங்கு மேகமத் தளமேறு
தண்டிரை மடங்கருெனியாய்ச்
சாற்றுகுற மகள்போற் கவிழ்த்தமுக மாகநாத்
தழையுமாந் தளிரினிறமாத்
தேங்கமழ் மலர்ந்தகரு நெய்தல்போ லுக்கிரஞ்
சேர்ந்தவிழி யாய்ப்பற்கடாஞ்
செப்பமா யொப்பமாய் வாலுந்து சாணுய்ச்
சிறக்குங் குளம்புயரமா
யாங்குதிரை லக்ஷண முரைத்தவிதி யென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 85

இதுவுமது

பாயுமீ பெரும்பரி முகத்திடை வெளுத்திடிற்
பரராச ரைச்செயிக்கும்
பணிபூண் கழுத்துவால் முதுகிவை வெளுத்திடிற்
பாக்கியமெ லாங்கொடுக்கும்
ஏயுமிரு பிடர்வெள்ளை யாயிருந் தாற்புதல்வ
ரின்பமேன் மேலுமுண்டா
மெழின்மார்பில் வெள்ளையுறில் கவலைநோ யின்றி
யெப்போது மனமகிழ்தருந் [யே
தோயுமுக மிடதுபால் வெள்ளிநிற மேவிடிற்
றாயசந் தானமுண்டாந்
தோன்றிய வலப்புறம் வெண்ணிறஞ் செல்வமாந்
தூய்முகம் பிற்பாற்சுகம்
ஆயும்ப்ர பந்தகவி நேயம் பொருந்துதுரை
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 86

இதுவுமது

மார்புங் கழுத்துமர வப்படம் போலதாய்
வாழைமட லொத்தசெவியாய்
வதனமுக் கோணமாய் நுதலுயர்ந் தகலமாய்
வைக்குமடி பந்தொத்ததாய்
ஏர்பூணு நாலுகா லுங்கடைந் தேயதை
யெடுத்துநாட் டியதுபோலா
யிருதொடை திரட்சியாய்ச் சுழல்கின்ற போதுதீ
யெழுகடைக் கோலென்னலாய்
போர்புரி முகத்திலே வெட்டினு மெதிர்ப்பதாய்ப்
புரவியோன் மனமறிவதாய்
பொங்குகழி கோட்டையுந் தங்கிய துருக்கமும்
புலியெனப் பாய்கின்றதாய்
ஆர்பரி யிருக்கின்ற துத்தமப் புரவிகா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 87

இதுவுமது

கொய்யுலவு புரவியது நிற்கின்மலை யென்னவுங்
கூத்தினட மகளென்னவுங்
குலவிடும் வாசனையின் மான்மதம் பாளிதங்
குங்கும மகிற்கொப்பதாய்
வெய்யகட் பொறியரா வட்டநெடு வீதிநடை
விடுசுழற் பந்தென்னவும்
மேலேறு சேவகன் காற்குள் ளடங்கியே
வேகத்தில் வளியென்னவுஞ்
செய்யுநற் சாரிகை பதினெட்டு முள்ளதாய்த்
திருத்தமிரு நான்குவயது
சென்றபரி மேலேறல் விதியென்று மறையாஞ்
செழும்பரியி லேறிவந்தெம்
ஐயநீ பாண்டியற் கறிவித்த தென்பர்கா
ணருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 88

இவர் முன்னி லின்னது பெறவேண்டு மெனல்

தாமமா கியபிறவி சாராத மெய்ஞ்ஞான
சாதனம் பெறவேண்டினேர்
சரியைகிரி யாயோக மூன்றுங் கடந்தமெய்ச்
சற்குருவை யடையவேண்டும்
நாமமார் தருசிவா லயலிங்க தரிசன
நாடியருள் பெறவேண்டினேர்
நக்கன் வலக்கைதலை மேற்கொண்ட வதிகார
நந்திபையுன் காணவேண்டும்
பூமியா ளரசரைக் கண்டுகா ரியசெயம்
பூர்த்தியாய்ப் பெறவேண்டினேர்
புரவலர் கருத்துக் கிசைந்தமந் திரிகள்பாற்
போய்முன்பு காணவேண்டும்
ஆமிக வளங்கள்சிங் காபுரி விளங்கவரு
மருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 89

கலிவிருத்தம் கொக்கோகலீலை கூறியது

நாடுமுட லிழையுமா லிங்கனம தோரைந்து
நண்ணுமித ழுதரபான
நல்லசுவை பதினென்று மமிர்தநிலை பதினைந்து
நகுநகக் குறிகளேழுங்
கூறுதந் தக்குறிக ளெட்டுமுயர் பறவைபோற்
குரலோசை யெட்டுமிருகைக்
குவிதாட னங்களிரு நான்குமுரை கரணங்கள்
கூறுநாற் பத்தெட்டுமே
யூடுகல விப்போக மெய்ம்முயக் கீரெட்டு
முறழுநூற் றிருபதுடனே
யோராறு மொழிகின்ற கொக்கோக விதமறிந்
தூடலோ டினிதாகவே
யாடவரு மங்கையரு மனுபவித் திடலின்ப
மருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னுற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 90

பெரும்பாலும் நோய்கள் வராவகை கூறியது

எட்டுநா ளாக்கிரு முழுக்காடொவ் வோர்பட்ச
மிருகண் க்லிக்கமிடுவோர்
எத்தாக மதிதொறும் பித்தநீ ரெல்லா
மெடுத்திட மருந்துகொள்வோர்
திட்டமா யெண்ணுன்கு நாளினுக் கொருகாற்
றிருந்திழை புணர்ச்சி செய்வோர்
செப்புமொரு மூன்றுமா தத்திலகு நகியமது
சீருடன் செய்துகொள்வோர்
வட்டமா மூவிரு மதிக்கொரு விரோசனம்
வாங்காம லேவாங்குவோர்
வயிறுபசி கண்டுண்ணு வோர்களுக் கொருநோயும்
வாராது மிகுதியாக
அட்டமா சித்திமுன் னிட்டமது ரேசனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே.

தீயோர் தேடு பொருள் போம் வழி கூறியது

வையகந் தன்னிலே தீயோர்க ளீட்டுபொருள்
வம்பருக் காம்பிணக்காம்
வாயோட்ட மாகவே பேயோட்டு பூசாரி
மார்கடஞ் செலவினுக்காங்
கையகங் கொண்டகொலை பாதகர்க் காம்படைக்
கன்னமிடு கள்ளருக்காங்
கஞ்சா மயக்கபினி சாராய மாசுனங்
கடியகட் குடியருக்காம்
மெய்யகஞ் சிறிதிலாப் பொய்வழக் கதுபேசும்
வீணருக் காந்தழற்காம்
வேசையர்க் காம்பூத மூசுமண் ணுக்காகும்
வேந்தர் தண்டத்தி னுக்காம்
அய்யனே துய்யனே செய்யவெழின் மெய்யனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னுற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 92

நல்லோர் பொருள் பயன்படுமாறு கூறியது

சேர்கடற் ருரணியி னல்லோர்க ளீட்டுபொரு
டேவால யங்களுக்காந்
தேவாபி டேகமா ராதனைக் காமையர்
திகழ்சமா ராதனைக்கா
நூற்கடற் கரைகண்ட புலவர்கட் காமௌன
நுவலுமெய்ஞ் ஞானியர்க்காம்
நோற்குமா தவமுடைய பேர்க்காம் பசிக்கன
நுகர்ச்சிக்கு முதவலாகும்
நாற்கினரும் வேதநெறி வேள்விகட் காஞ்சுகுண
நண்ணுதா னங்களுக்கா
நற்ருெண்டர் பாகவதர் தங்களுக் காம்புரியு
நாலெட் டறங்களுக்காம்
ஆற்கணுல் வர்க்குமுன் னருள்பரஞ் சோதியே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 93

பிரயாணத்துக்கு ராசிபலன் கூறியது

மேடலக் கினமதனி லூர்ப்பயண மாகாது
வீறிடப நலமுள்ளதாம்
மிதுனத்தி லேசெலுங் காரியமெ திர்ப்படு
மென்கடக மரசர்சேவை
நாடருஞ் சிங்கத்தி லாதாய மாங்கன்னி
நளிர்ச்சுரங் காணுந்துலாம்
நற்பொருள் கிடைக்கும் விருச்சிகம் பிணியினு
னலிவுட னடுக்கமுண்டாங்
கோடுறுந் தனுசுசத் துருஜயம் மகரமது
கொடியபய மாங்கும்பமோ
கொடியர்தண் டனையெய்து மீனமழை யாற்பயங்
கொண்டயாத் திரைசெய்காலத்
தாடுவே யுருதோளி பங்கவிஃ துண்மையா
மருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 94

முக்குணத் தியல்பு கூறியது

ஞானமரு டவமேன்மை வாய்மைபொறை மோன
நவைசெயைம் பொறியடக்கல் [மொடு
நற்கரும வியல்புநெறி சாந்தமுயர் கல்வியிவை
நல்லசாத் வீககுணமாம்
ஈனமறு தானமன வூக்கந் தவந்தரும
மெழில்கல்வி கேள்விஞானம்
இசைவீர செளரிய மலங்கார மிவையே
யிராசத குணத்தியல்பாந்
தானுறு நெடுந்துயி லொழுக்கமுத னீதிவழு
தாழ்வுஞ் சமாதிகோபந்
தாவுகொலைபேருண்டி சோம்புபொய் காமமிவை
தாமத குணத்தன்மையாம்
ஆனமுத மைந்தாடு மந்திவண் ணத்தனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 95

நவக்கிரகதானங் கூறியது

பானுவுக் கீந்திடுந் தானமது கன்றீன்ற
பசுவாகு மதிதனக்குப்
பானிறச் சங்குசெவ் வாய்க்குச் சிவப்பெருது
பைப்புதற் குச்செம்பொனும்
வானியல் வியாழந் தனக்குவெண் பட்டாடை
மாசுக்கி ரற்குவெள் ளி
மருவிய சனிக்குமிவை கரியநிற மாயிலகு
மயிடமா வெருமைக்கடா
தானிய விராகுவுக் கச்சங் கறுப்புடைத்
தானவெள் ளாட்டுக்கடா
தக்கசெங் கேதுவுக் கோதரிய மதயானை
சாற்றுமறை யோர்க்கவித்தல்
ஆனது நவக்கிர தானவிதி யீதென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 96

நவக்கிரகவுருவுந் திசையுங் கூறியது

நடுவட்ட மாமிரவி யுருவிருக் கின்றநிலை
நாடுமக் கினிமூலதா
னற்சதுர மதியுறுக் காற்றிசைத் திரிகோண
நாணிலம கன்வடிவமாம்
வடுவிலீ சன்றிசைப் பாணவடி வம்புதன்
வடதிசைத் தீர்க்கசதுரம்
மருவுபொன் கீழ்த்திசைப் பஞ்சகோ ணத்துரு
வயங்குநீர் தருசுக்கிரன்
மிடையுமேற் றிசைதனுப் போலுருச் சனிநிருதி
மேவுசூர்ப் பாகாரமாய்
மேவுவனி ராகுவட மேற்றிசைத் துவசமென
வெங்கேது தங்குமிடமாம்
அடையுமொன் பதுகிரக வடிவமுந் திசையுமீ
தருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 97

நவதானியமுஞ் சமித்துங் கூறியது

சூரியன் கோதுமை செஞ்சாலி சோமனுந்
துவரைசெவ் வாய்தனக்காஞ்
சொல்லரிய புந்திக்கு நற்பசும் பயறதாந்
தூய்வியா ழுந்தனக்கு
வேரியங் கடலையாம் வெள்ளிக்கு மொச்சையாம்
மேவிய சனிக்கொள்ளதாம்
வெற்றிகொ ளிராகுவுக் கானமா டங்கேது
விகாகாண நவதானிய
நாரிய லெருக்குப் பலாசலங் கருங்காலி
நாயுருவி யச்சுவத்தம்
நல்லத்தி வன்னிகூர்ப் புல்லறுகு தர்ப்பையிவை
நவசமித் தாகுமென்றே
யாரிய முணர்ந்தமே லவரீது விதியென்ப
ரருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 98

மூவர் தேவாரத்தொகை கூறியது

பன்னருந் திருஞான சம்பந்தர் செந்தமிழ்ப்
பதிகமீ தெண்ணுயிரம்
பண்பான சுந்தர ரிசைத்ததே வாரமுப்
பஃதுமே லேழாயிரம்
நன்னுதற் நிலகவதி யாரொடுந் தோன்றுதிரு
நாவினுக் கரசர்சொன்ன
நற்றமிழ்ப் பதிகநாற் பத்தொன்ப தாயிர
நாடுமிம் மூவர்மொழியுட்
பின்னரெண் ணூற்றுறு பத்துநாற் பதிகமிப்
பேருலகு தனில்விளங்கும்
பேசுமிகு நூற்றேழு பத்தைந்து சிவதலப்
பெருமைசேர் பதிகமாகும்
அன்னதிரு முறையோதி நின்னடிப் பூசைசெய்
தருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 99

சிற்றின்பப் பேரின்ப அட்டாங்கயோகங் கூறியது

வனிதைபஞ் சணை யாறு சுவைபோச னங்கந்த
மருவுசித் திரவஸ்திரம்
மாழைமணி யிழையணித் தயிலதாம் பூலமெண்
வகையதே சிற்றின்பமாந்
தினமணி விபூதிருத் ராக்கபஞ் சாக்கரந்
தீர்த்தப்பிர சாதமாசான்
றெரிசன மிலிங்கசங் கமமெட்டு மன்பருட்
டெளிதரும் பேரின்பமாந்
தனியியம நியமமா தனபிரா ணயாம
தற்பிரத்தி யாகாரமாம்
தாரணை தியானஞ்ச மாதியிவ் வெட்டுமே
சாற்றுமட் டாங்கயோகம்
அனவரத நடனமிடு வளருக பதத்தனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதி செயுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 100

நாலு யுகத்திலும் பூசை செய்தவர்களைக் கூறியது

தீதிலா துயர்கிரே தாயுகந் தன்னிலே
செங்கனற் சோதிமலையாந்
திருமால யன்முத லிமையோர்கண் மறையினற்
சிவதரும மேபுரிந்தார்
நீதிமா மணிதிரே தாயுகத் தாகம
நெறித்தபோ தனர்பூசையா
நிதிதுவா பரமதில் வச்சிராங் கதனீன்ற
நிருபனும் வீரசம்பு
நாதனே கலியில்வல் லாளபிர புடதேவ
ராமர்தரு மஞ்சகாப்த
நவிலாயி ரத்தேழு நூறுமெழு பத்துமே
ணுடுபில வங்கவருட
மாதியாய் நின்றதல தருடிகர்த் தாவான
வருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதி செயுண்ணு முலைக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 101

அவையடக்கங் கூறியது

பரிமளந் தோயிதழி மாலையொடு மணமிலாப்
பச்சிளம் புல்லறுகினைப்
முதென்று தள்ளாம லீசனுள மகிழ்வொடும்
படர்சடையி லேற்றபடியால்
விரவுமா சையினு லுரைத்தவிச் சதகமது
மிக்கபுன் சொல்லாயிலும்
மேதினி யெலாம்புக ழிலக்கண மிலக்கிய
மிகத்தெளிந் தறிநாவலர்
பரவுநின் புகழ்தலப் பெருமையின் றுதியிருப்
பதனு லிகழ்ந்திடாமற்
படியுள நிறைந்தன்பு கொடிபெரி துவந்தருட்
பாலித்து மேற்கொள்ளுவார்
அரியயனெ டிந்திரன் பூசித்த வீரனே
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றுதிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 102

வாழி கூறியது

சந்ததமு மோதுநான் மறைவாழி யாகந்
தளிர்க்கும் பசுக்கள்வாழி
தரணிகா வலர்வாழி மனுநீதி வாழிமுத்
தமிழ்வாழி வேள்விதணிலே
வந்தெழுந் தெய்வீக மன்னவன் வாழியவன்
மதலைமெய்ப் பொருணையனுர்
மைந்தர்வழி வந்தவர்கள் வாழிகுக முனிவாழி
மாதவ நிறைந்துவாழி
சுந்தர மிகுந்தவுண் ணுமுலைத் தாய்வாழி
சோதிப்ர காசமாகத்
தோன்றுமண் ணுமலைப் பரமனுர் வாழிமெய்த்
துணைமனேன் மணியும்வாழி

யத்தணர்கள் வாழியெழில் சிங்கபுரி வாழிமெய்
யருள்பெறு வசந்தராயர்
அண்ணுவி னிற்றிசெ யுண்ணு முலகுக்குரிய
வண்ணு மலைத்தேவனே. 103

மூற்றிற்று.



மாயூரம் – கல்லத்துக்குடி

கிருஷ்ணையர் அவர்கள் இயற்றிய

5. அவையாம்பிகை சதகம்

காப்பு

நேரிசை வெண்பா

அவையாம் பிகைசதக மன்பா யுரைக்க
உபய சரண முதவுஞ்—சபைநடுவுள் [த
ஆடுகின்ற வையன்முத லன்பாகப் பெற்றெடுத்
கோடுள * மாதங்கங் குறித்து.

நூல்

பன்னிருசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பாதாம் புயத்திற் சிறுசதங்கைப் பணியுஞ்
சிலம்புங் கிண்கிணியும்
படர்பா டகமுந் தண்டையுடன் பணியுங்
கொலுசுந் தழைத்தருளும்
பீதாம் பரமுந் துவளிடையும் பிரியா
தரைஞாண் மாலைகளும்
பெருகுந் தரள நவமணியும் புனையுங்
குயமு மிருபுயமும்
போதா ரமுத வசனமொழி புகலு
நகையுங் கயல்விழியும்
புண்ட ரீகத் திருநுதலும் பொன்போற்
சடையு மதிமுகமும்
வாதா டியபே ரின்பரச வதனக்
கொடியே யுனையடுத்தேன்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 1

* மாதங்கம்-யானை; இங்கே யானை முகத்தினையுடைய விநாயகரைக் குறித்தது.

அஞ்சு முகத்தி நலமுகத்தி யாறு
முகத்தி சதுர்முகத்தி
யலையிற் றுயிலு மான்முகத்தி யருணை
முகத்தி பரம்பரத்தி
பஞ்சா க்ஷரத்தி பரிபுரத்தி பாசாங்
குசத்தி நடுவனத்தி
பதுமா சனத்தி சிவபுரத்தி பாரத்
தனத்தி திரிகுணத்தி
கஞ்சு முகத்தி கற்பகத்தி கருணை
கரத்தி தவகுணத்தி
கயிலா சனத்தி நவகுணத்தி காந்தண்
மலர்போற் சதுர்க்கரத்தி
* மஞ்சு நிலத்தி பரம்பரத்தி மதுரச்
சிவத்தி மங்களத்தி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 2

உச்சிக் கிளியே யருட்கிளியே யுணர்வுக்
குணர்வா -யுயிர்க்குயிரா
யுதித்த கிளியே பரவெளியி லொளிவான்
பழத்தை யுன்னிவரும்
நற்சொற் கிளியே கதம்பவன நகரில்
வாழும் பரைக்கிளியே
ஞானக் கிளியே மறைவனத்தி னடனக்
கிளியே சிவக்கிளியே
பச்சைக் கிளியே யன்பர் † ததிபடரும்
வாவி யோடையினிற்
பரவுங் கிளியே நிதிக்கிளியே பவழக்
கிளியே பதிக்கிளியே
வச்சிரக் கிளியே நவபீட வாசற்
கிளியே யருளமையும்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 3

* மஞ்சு-அழகு. † ததி-தத்துவம்.

பண்டு மறையின் முடிவினுள்ளே பழுத்த
பழமே யருட்பழமே
* பரிபா கத்துப் பத்தர்நெஞ்சிற் படர்ந்த
பழமே நவமுடியே
என்றுங் கனிந்த திருப்பழமே யிமையோர்
தேடித் தேடியுமே
யெட்டாப் பழமே காசினியி லெவர்தாந்
தஞ்ஞே யுணர்ந்தோர்கள்
கண்டு புசிக்கும் பதிப்பழமே கருணைப்
பழமே சிவப்பழமே
கயிலாயத்தி லரன்முடிமேற் கனிந்த
பழமே கதிப்பழமே
மன்றுண் மணக்கு மடியவர்க்கு மாயோ
கியர்க்கு முதவிநிற்கும்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 4

தேனே பாலே சருக்கரையே தெவிட்டா
ருசியே கற்கண்டே
சீனி யுடன்முப் பழச்சாற்றிற் சிறந்த
ரசமே செம்பொன்மலே
மானே மடலே மடக்கொடியே வளர்ந்த
வனமே திருவதன
மயிலே குயிலே யன்பரெலாம் வாரிச்
சொரியு மனுநிதியே
ஊனே யென்ற னுயிர்க்குயிரே வுள்ளும்
புறம்பே யுறுமொழியே
யொளிசேர் கனகக் கற்பகமே யுதித்த
சுடரே திருப்பரமே
வானே வானின் வளிக்கனலே வனமே
பூவே வரைமகளே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 5

* பரிபாகம் - முற்ற யக்குவம்

பஞ்சா பரணி நவபூர்ணி பரணு
பரணி தவசரணி
பரமேஸ் வரியே யீஸ்வரியே பஞ்சா
க்ஷரத்தி பங்கயத்தி
எண்சா ணுடம்பிற் ரெண்ணீற்ரு றிசைந்த
தத்வா திகமுகமே
யிறையோ னிடத்தி னடனமிடு மிமையோர்க்
கரசே யேகவெளிக்
கஞ்சா சனத்தி னிலையாளே கருணை
லயத்து ளுறைபவளே
கன்னற் சிலையு மம்பூவுங் கரத்திற்
சிறந்த பரைத்திருவே
வஞ்சா குலந்தீர் திருவடியர் மனத்து
ளுறையுங் க்ருபைக்கடலே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 6

எங்கு நிறைந்த வருண்மணியே யேக
மணியே யொளிர்மணியே
யிறையோ னிடத்தி னடனமிடு மிமைய
மணியே நவமணியே
கங்குல் பகலுங் கண்டவெளிக் கலைநான்
குடைய திருமணியே
கண்ணின் மணியே பொன்மணியே கமலா
சனத்தில் வளர்மணியே
தங்கு மடியா ரிதயமதிற் றழைத்த
மணியே நவமணியே
தரணிக் கொளிவா யிரவுபகல் தானே
வளர்ந்த தவமணியே
மங்குங் கருத்தை நிலைநிறுத்தி வதன
வெளியிற் படர்மணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 7

அழியச் சனன வலைமு ழுது மலையு
மனத்தை நிலைநிறுத்தி
யாதா ராதி யடிநடுவு ளருணை
சலத்தின் வேரினுள்ளே
சுழியைத் திறந்து வாவுவதாற் சுடரே
சகபூ ரகத்தாலுந்
தோன்றுங் கும்ப காதியுடன் சோதி
படரு ஞானவெளி
விழியுந் திறக்கு மதிக்குழம்பு மிகுந்து
சுரக்கு நவக்கிரக
வெளியா மேலே வெளிபடர்ந்து விம்மித்
தனையே யாண்டருள்வாய்
வழியைப் பொருத நாயடியேன் மனத்தா
மரையு ணீவருவாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 8

கண்ணு ரமுதே யுனையெனது * கண்டான்
களிக்க மொழிகுளறக்
கதித்த வுயிரு முடல்புளகங் காணும்
பருவம் பெறுவேனே
விண்ணு ரமுதே சிவபுரத்தில் விளைந்த
கனியே தேன்கடலே
வீசிப் படர்ந்த கமலமதில் வீற்றே
யிருக்கும் விழிச்சுடரே
பெண்ணு னதுவே யாண்வடிவே பேணு
மலியே பிறங்கொலியே
பேதை நாயே னிதயமதிற் பிரியா
திருக்குந் தவக்கொழுந்தே
மண்ணு டியவ னிடப்பாகம் வளருங்
கொடியே மடமயிலே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 9

---

* கண்டான் – கண்தான்.

தீரா மயக்கிப் பிணிநோயைத் தீர்க்கு
மருந்தே யருமருந்தே
தேவா திகளு மறியாத ஸ்ரீகிருஷ்
ணுதி * சோதரியே
ஆரா திப்பார் பூசிப்பா ரமைந்துன்
னும மதைநினைப்போ
ரடுத்தோ ரின்ப சுகமுமுனை யடையு
மெனவே மறைவிளம்ப
நேரே யிருந்து களிப்பவளே நித்யா
னந்த சுகப்பொருளே
நெறியே குறியே யெனையாளு நிமலி
யமலை சுகத்தாளே
வாரா கினியே துட்டரிட மனத்தை
யழிக்குஞ் சினத்தாளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 10

மெய்யிற் படர்ந்த வருட்கடலே வினவு
ஞான முளரியினில்
விரிவாய்ப் பொருந்தும் பரநிதியே விஜயை
யகற்றும் பதமுடையாய்
உய்யுந் தவத்தோர் மேலோர்க ளுறுதி
யுடனே மகிழ்பதியே
ஒன்ரு யோக முடிவதனி லொளியாய்
வெளியா யுதித்தவளே
செய்ய கமலத் தயன்மனவி தினமும்
பணியுந் திருவருளே
தேகா தேகக் கொடியையெலாஞ் சிறந்து
நிறைந்த சின்மயமே
வையத் தடங்கா வருளமலை வருண
வருண வொளிமணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 11

* சோதரி - சகோதரி.

வன்ன மொன்ரு யிரண்டாகி வளர்ந்தோ
ரைந்தா யெட்டாகி
வானுய் வானின் வளிக்கனலாய் வனமாய்ப்
பாராய் வகையையந்தாய்ப்
பன்னு மறையோர் நான்காகிப் பரந்த
சாத்ர மூடனுருப்ப்
பதினெண் புராண வாகமங்கள் பரிந்தோ
ரிருபத் தெட்டாகி
உன்னி நெடுமா லயனுலு முலகை
வகுக்கக் காப்பாற்ற
வுடனே சங்கா ரித்திடவு முமையா
லொடுதன் கேள்வனுமா
மன்னி நிதமு மூட்டிவைத்த மதலாய்
மேரு மகளாக
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 12

தந்தை தாயார் சுற்றத்தார் சகல
வாழ்வு முனதருளே
தமியேன் செய்யும் வினையுனது சடல
முனது வுயிருனது
சிந்தைக் கிசைந்த வடிமையென்றும் செகத்தி
லெவர்க்குந் தெரியாத
சிந்தா மணியே யெனக்குவருஞ் செயலே
யுனது செயலலவோ
சொந்த வடிமை கிடந்தலையச் சும்மா
விருந்தா லுனவிடுமோ
சோதி வதன மணிவிளக்கே * துவாத
சாந்தப் பெருவெளியே
மைந்த னெனவந் தாண்டருள்வாய் வசன
வதனி நவச்சரணி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 13

* துவாதசாந்தம்-பன்னிரண்டா மவத்தை. தலம்-இரண்டு. தசம் - பத்து.

பேயே னுமை விழிக்குருடு பேணுஞ்
செவிடு கான்முடமாய்ப்
பிள்ளை யெனவே யீன்றவர்க்குப் பிரிய
விடவு மனதாமோ
தாயேன் செய்யும் வினைமுழுது நலமாய்ப்
பஞ்சுப் பொறியெனவே
† நகத்திச் சிவத்து ளெனதுயிரை ஞானப்
பதியுட் சேர்த்தருள்வாய்
ஆயே யமலை யருட்கடலே யகிலா
தார முடிவிளக்கே
யணங்கே யிணங்கு மடியவர்கட் கமுத
ஞான மருளரசே
மாயே செகமோ கனமான வடிவே
முடிவே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே 14

எண்ண வடங்கா தெனதுசென்ம மேட்டி
லெழுதி முடியாதாங்
கிடிப்பார் நீண்ட மரம்போலு மெமனூர்
பதியி லடைந்தஃது
பெண்ணின் மயக்கம் வினைமயக்கம் பிறவி
மயக்கந் துலையாது
பித்தர் சாலப் புலையருடன் ப்ரமைகொண்
டடிமை யலைவேனை
வண்ணக் கலையே கதிமுதலே வனசப்
பதியே யதிமதுர
வனமே கனமே யோகியர்கண் மனமே
குடியே வாரிதியே
மண்ணிற் கனக முடிநடுவுண் வாதா
டியபே ரொளிவிளக்கே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே 15

† நகத்தி - அகத்தி.

பறந்த பறவை நாற்காலாய்ப் படரும்
விலங்கு மூர்வனவும்
பதிய தனில்வாழ் சீவர்களும் பாரி
னிலையாந் தாபரமும்
பிறந்த மனிதர் தேவரொடு பிசகா
தெடுத்த சென்னமதிற்
பெற்ற தாயா ரெத்தனையோ பிறவி
மனையாள் புதல்வர்களும்
திறைந்த கோடா கோடியினி னிலையா
னதுவு மொன்றறியே
னீயே தாயென் றநுதினமு நெறியே
யருளிப் பிறவியினி
மறந்து விடவு முனதுபய வனச
மலர்த்தா ளீந்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 16

செடத்தை யெடுத்து மயல்நிகழத் திகைப்பி
லுயிரு மதப்படவுந்
தேசா சார வதிமோகத் திருக்கில்
மனமு முருக்கமுடன்
கடத்தை யெனதென் றபிமானக் கருமா
மயிலா புடனுசைக்
காத லதனி லுயிர்மறைந்து கலங்கிக்
கலங்கி யலைவேனே
நடத்தை யறியாப் பரிபாக நாவா
லுன்ற னிருபதத்தை
நம்ப மனதி லுறுதியொன்றுய் நாட்டி
யெனையோ ராளாக்கி
மடத்தை யறிய வதிலழைப்பாய் மதிவா
ணுதலே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 17

காவே யிலங்கும் பொன்னிநதிக் கரையே
யிலங்கு மயிலை நகர்
கங்கை முதலாம் புண்யநதி கருதிப்
பணியு மூதூரே
பாலே யிலங்குங் கவிவாணர் பகரு
மறைவே தாகமங்கள்
பயிலும் வீதிக் கழுகிளநீர் பாயும்
வாழை குருந்தேறும்
ஆவே யிலங்கு வயல்சூழு மதிலே
நானு விருக்ஷமுட
னமுத ரசமாய்க் கனிபழுக்கு மருகிற்
பறவை யினஞ்சூழும்
மாவே யிலங்கு மநுதினமு மருவுங்
கயிலை நிகராகும்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 18

என்ன மயக்க மிதுபுதுமை யிதையா
ருடனே யானுரைப்பே
னெடுக்க முடியா வினைச்சுமையை யேழை
தலைமீ தெடுத்தேற்றி
மன்னிப் பிறக்க விடமுமன்றி வாகாய்
நடக்க வழியுமன்றி
மயக்கக் கொடுவேல் முனைக்கானில் வனவே
டர்கள்செந் நாயுடனே
என்னை மறிக்கக் கொடுமையுட னெழுந்தே
* யுழுவை பாய்ந்திடவிட்
டிதிலே நிறுத்தி யிலைச்சலைவிட் டெங்கே
யொளித்தா யீஸ்வரியே
வன்ன மயிலே யெனக்குரைத்த வசன
மதுபொய் யானதென்னை
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 19

* உழுவை = புலி.

பாகு சேருங் குழலணங்கே பணத்தை
யணியுஞ் சதுர்த்தோளி
பாதி மதியுங் கதிரணியும் பரம
ஞான வெளிச்சுடரே
ஆகும் பருவ மறிந்தென்ற னுவி
யாமுன் னுபயபத
மடுத்துக் கவிதைச் சரந்தொடுத்தே யமைந்து
பொழிய வரந்தருவாய்
ஏகு மயக்கத் துட்டருட னினிதா
வெனச்சேர்த் தகற்றுதே
யிமவா னளித்த திருமகளே யெங்கு
நிறைந்த பெருவெளியே
வாகு பொருந்துங் க்ருஷ்ணனது வரிசைத்
துணவி சுகவதனி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 20

வாதியின் முறைமை யெத்தனைநாள் வினையிற்
படுவ தெத்தனைநாள்
விசுவா சிக்கக் கொடுமையன்றி வினையும்
பகையு மெத்தனைநாள்
அதிக வினையு மெத்தனை நா ளற்ப
வாழ்வு மெத்தனை நா
ளதிலே குரோதித் திருப்பதெலா மழியும்
வகையு மெந்நாளோ
பொதிகை மலைய னரியயனும் புகழ்சேர்
காமன் றிசைப்பாலன்
போற்று முன்ற னிருசரணம் பொருந்தி
மகிழ்வ தெந்நாளோ
மதியைத் தரித்த முகில்வேணி மயிலே
குயிலே வான்மணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 21

சிந்தா மணியின் பூசைசெய்தாற் செகத்தி
லெவர்க்குங் குறைவருமோ
செல்வ முடனே கல்விதருந் திரளாம்
விஜ்ஞ களென்பவெலாம்
மூன்ரு ஞன போதிலேயே முதல்வி
யுன்ற னருளுலகில்
மூழ்க்கிக் கனபாய் விஜ்ஞயிருளு முறியப்
படர்ந்து மறைந்ததுபோல்
இந்தா வெனவே நீகொடுத்த வியல்பே
யல்லான் மானிடரோ
டேற்கை சேர்க்கை யவருரைத்த தேதா
கிலுமுண் டோவுரையாய்
மைந்தா வெனவே யமுதளித்த வகையை
நீயு மறந்தாயோ
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 22

வெகுநாட் பழைய வடிமையென மிகவுங்
கனிந்தே யருளளித்து
வெளியைக் காட்டிக் களிப்புடனே விம்மி
விழிநீர் சொரிந்தருளத்
தகுமெய்ஞ் ஞானச் சாரமெலாந் தந்தோந்
தந்தோ மென்றுரைத்த
தாய்தான் மறந்தா லுலகிலினித் தானுர்
பகையா ரென்செய்கேன்
புகழ்நா ரணியே யுன்ஜ்ஞவிடப் பொருளு
மருளும் வேறுண்டோ
பொல்லா தவனு ஞனுலும் பிள்ஜ்ஞ
யிவனென் றருள்புரிவாய்
வகுத்த சேயைப் பால்கொடுத்து வளர்க்கா
திருக்குந் தாயுண்டோ
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 23

* சோத்ர வழியால் வருவினையுந் † தொக்கு
வழியால் வருவினையுந்
தொடருஞ் ‡ சட்சு வழியாலுஞ் சொன்னு
வுடனே ‖ யாக்ராணம்
பார்த்த வழியிற் கரணமதைப் பற்றி
யுயிரைக் கலங்கடித்துப்
பண்ணும் வினையும் வெகுகோடி பாழ்போ
னதுவும் வெகுகோடி
ஆற்றிற் கரைத்த புளியெனவே யாச்சு
தொருவர்க் குதவியின்றி
யடியேன் முன்னு ளொருவருக்கு மாகா
தவனே வதையினித்தான்
மாற்ற வகையு மறியாயோ வகுத்த
வெனையு மறந்தாயோ
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 24

நாளோ வினையோ வீணுளோ நானு
தொழிலுக் கானதுவு
நலஞ்சேர் நிட்டைக் குதவிவரு நாழி
யொன்று யிந்நுமிலையோ
சூளாக் குயவன் விதிவசத்தாற் றுக்க
சுகமுந் தொடர்ந்துவரத்
துன்மார்க் கத்தால் வந்ததென்றுஞ் சொல்வார்
பாரிற் சூழ்மனிதர்
வேளாக் கிசைந்த மொழி பேசி வினையிற்
புகுந்த சுகம்போதும்
விமாயை யொழித்தே யமலசுக வெளியைப்
பொருந்தி வினைப்பிறவி
மாளும் படிநீ யருள் புரிவாய் வாலாம்
பிகையே வான்மணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 25

* சோத்ரம் = காது. † தொக்கு = தோல்.
‡ சட்சு = கண். ‖ க்ராணம் = மூக்கு.

என்ற னினைப்பு மினிக்கடந்தே யேக
வெளியி னிலைதுறந்தே
யிரவு பகலு மற்றவிட மினிதா
கியபே ரொளிவிளக்கே
சந்திக் கரையின் முடிவேற்றித் தனையுந்
தலைவ னடிசேர்த்துச்
சாட்சாத் கார பூரணமாய்ச் சர்வா
னந்த மாயிருக்க
உன்ற னிருதா ளடிக்கருணை யொளிசேர்
கனகக் கிரிமுடிமே
லுதித்தா யெனது விணையறவு முமையே
யிமையோர்க் கரசான
மந்த்ரக் கலைச்சி நவகோணம் வாழும்
யோக நாயகியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே 26

காமக் கிரிபீ டத்தழகி கனக
சபையி னடனமிடுங்
காளி வீரி கவுமாரி காமேஸ்
வரியே யீஸ்வரியே
பூம தேவி நான்முகவன் புணரு
மணவி யிந்த்ராணி
புகழ்நா ரணியுந் தினம்பணியும் பூர்ண
கலையே கதிமுதலே
சோம னுதய மணிநுதலே சோதி
ஞான முடிமுதலே
துவாத சாந்த நிலையாளே சுகமே
ஞான மணிவிளக்கே
* வாம நயனி யதிரூபி வனசா
சினியே மாமணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 27

* வாமம் - அழகு.

மூலத்துதிக்கு ஞாயிறு போன் முளரி
யிதழாய்ச் சதுர்முகனுய்
மூல வுந்தித் திருமாலாய் மூளுங்
கால காலனுமாய்
மேலுற் றருளுஞ் சதாசிவனும் விரியு
மிதமொன் றருள்பரையும்
வித்தா ரமுமா யுலகனைத்தும் விரிவாய்
நின்ற விரிசுடரே
ஞாலத் தமைந்த விருபதமு நடனச்
சிலம்புங் கிண்கிணியு
நறுகும் பெருகு மிந்துநிதி ஞான
நிதியாம் பரமநிதி
மாலற் றவர்க்கு முதவிநிற்கு மதுர
வசனி நவசரணி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 28

ஏன்ருன் மயக்கத் திருவினையு மிடியும்
வகையும் பொருதாதோ
வேழை தனையே பகைப்பவர்க ளிருமா
நிலத்திற் சலிமையுண்டாய்
நான்ருன் பெரிய னென்றுரைத்த நாவும்
வாயு மிகவடைத்தே
நகரிற் பயண மாகிவர நடத்தாய்
கருணைச் சுடர்விளக்கே
தான்ருன் செய்த வினைமுழுதுந் தனக்கே
யன்றி மனக்கவலை
தன்னுற் போமோ வென்மனதுட் டவழ்ந்து
புழுங்கு தென்னசெய்கேன்
வான்ருன் பரவுந் திரிபுரையே மௌனு
தீப மலர்க்கொடியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 29

கள்ள மயக்கந் தொடராமற் கவலைப்
பிணிகள் படராமற்
கனவை நிஜமாய்த் தொடர்ந்தடர்ந்து கரையா
விழியின் புனலாருய்த்
துள்ளி மனந்தான் மிகச்சலனந் தொடுத்துத்
தொடுத்தே யலையாமற்
சுகமா யுன்ற னிருபதத்தைத் தொண்டன்
மனதுட் கொண்டருள்வாய்
உள்ள படியே மனத்தடத்தி லொன்றுய்
வாழுங் கனியமுதே
வோங்கா ரத்துக் குள்ளிருந்தே யுயர்ந்த
கமலா சனத்தரசே
வள்ளன் * மயத்தி யருண்மனத்தி வனச
முகத்தி கனகசத்தி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 30

பெரியோ ரெவரைப் பழித்தேனே பிரம
தவத்தை யழித்தேனே
பெற்ற தாயார் பசித்திருக்கப் பேணி
வயிற்றை வளர்த்தேனே
அரிய தவத்தோர்க் கிடைஞ்சல்செய்தே யற்ப
ரிடத்திற் சேர்ந்தேனே
வறியா மையினு லென்னகுற்ற மார்க்குச்
செய்தே னேவறியேன்
கரிய விஷந்தா னெனதறிவைக் கலங்க
முடித்த முடிச்சதையுங்
கரைக்க வுன்கிர் பானந்தக் கடாக்ஷம்
பொருந்தி யருள்புரிவாய்
வரிவிற் புருவ மடமானே வதனும்
பிறைவா லாம்பிகையே
மயிலாபுரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 31

* மயத்தி - அழகுடையவன்.

கனத்த மலையை யெடுத்தணுவாய்க் காலா
லூன்றி மீதுவைத்தால்
கால்தான் தாங்க வசமாமோ கருணை
நிதியே யினியுனது
சினத்தை மகன்மேற் பொருத்தினின்றுற் சிறியேன்
பொறுத்து நிலைப்பேனே
சிவமே யுன்து தயவுவரச் செய்வா
யினி * யஞ் சுகவினமே
தொனித்த மறையின் முடிவிளக்கே சோதி
வதனச் சுடரொளியே
சுத்த வியோம மண்டலத்திற் சுகமாய்
வளருந் துரந்தரியே
மனத்து ளழுக்கை யகற்றியுன்றன் மலர்ப்பா
தமதிற் சேர்த்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 32

கிளியே யருண வொளிச்சுடரே க்ருபைசேர்
வதன முழுமதியே
கெடியா முன்ற னிருபதநான் கிடைக்கும்
வகையும் பெறுவேனே
ஒளியா யிருக்குங் கனகசபை யொன்றே
யிரண்டே விபரிதமே
யுரைக்குங் கருணை நிதிமயலே யுதித்த
பரம னுடனுடும்
அளியா ரமுதே பரம்பரையே யணுவி
லணுவா யண்டபிண்ட
மமர்ந்த சிவமே ஞான வெளிக்கரசே
வேதத் துட்பொருளே
வளியே சுழியி னடமிடுகண் மணியே
யெளியேற் கினியருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 33

* அஞ்சகம் - அழகிய இளி-

கவலைக் கடலின் விளையலையிற் கனத்த
மனமா கியமடுவிற்
கைநீச் சாக நீஞ்சவென்றுற் கரைதா
னடுத்துக் கிட்டவிலை
* சவல மலையி லிடர்ப்படவுந் † தகையும்
வெகுளி காமமது
தாவி வரவுங் கைப்பிடிக்கத் தானு
தரவு மில்லாமல்
சுவகா விழியிற் புனல்பெருகக் கோகோ
வெனயா னழுது நின்றுற்
குறித்துன் னருட்டோணியிலேற்றிக்கொண்டே
கரையிற் சேர்த்தாள்வாய்
மவுனச் சிவனு ரிடப்பாகம் வளருங்
கருணை நிதிமயிலே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 34

தல்லார் நடக்கும் வகையறியே னுனை
னெனவே யுலகமதில்
நாடு வீடு மாடுமக்கள் நம்பு
மனையாள் வாழ்வதனில்
பொல்லா வறுமை பொருந்திவரப் புல்லரி
தம்பால் வருந்திநின்று
பொழுதை வீணைக் கழித்தொழித்துப் பொய்யா
முடலம் வீழ்ந்துவிடில்
எல்லா மெனதென் றிருந்தவெலா மெள்ள
ளவும்பின் றொடர்வதில்லை
யிவைநீ நிறுத்தி மயக்கவதை யானே
வறியேன் விதிவசத்தால்
வல்லா ணவத்தா லழியாதென் மனதிற்
குடிகொண் டாண்டருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 35

* சவலம் - நடுக்கம். † தகையும் - இளைக்கும்

அடியார் செய்யும் வினை தனக்கோ ரருள்செய்
துவந்து காக்கிலையோ
யான்மாத் திரந்தா னுன்றனுக்கே யாகா
தவனுய்ப் போனேனே
படிமேன் முன்செய் தவக்குறையோ பத்தர்
தமக்குத் தீம்புசெய்த
பாபந் தானே வறியாமற் பலவா
யென்ற னுயிர்மறுகி
முடியாக் கலக்கங் கொள்ளவைத்து மூழ்காற்
றடிக்கு தென்னசெய்கேன்
மோச மான விருவினையில் முனைத்தே
யெழுந்த சனனமதை
மடியக் ருபைதா னினியருள்வாய் வைய
வாலத் திரிபுரையே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 36

எங்குஞ் சரியாய் நீயிருந்தே யேற்றல்
குறைச்சல் பேதத்தி
லெண்ணு துயிரை யிப்பிறப்பி லேதான்
வயது மறியேனே
சங்க மாழி தரித்தருளுஞ் சகல
வுயிர்க்கு முயிர்க்குயிராய்த்
தானு யிருந்த தவப்பொருளே தமியேன்
செய்த வினைமுழுதும்
மங்கும் படியே நீபார்த்து மயங்காக்
ககனப் பெருவெளியில்
மாருக் கருணைக் கமலமதில் வாழக்
ருபைநீ தானருள்வாய்
வங்கங் கொழிக்கும் பொன்னிநதி வளர்ந்த
புனலா றிசைந்துவரு
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 37

ஓல மிடவு மமலையுந்தா னுறுதி
மன திற் பொருத்தவில்லை
யொருநா ழிகையா யினுமிடிய னுபய
பதத்தை நினைத்ததில்லை
கால மறிந்து நினதடியர் கருது
மொழியுங் கேட்டதில்லை
கனமா கியசம் சாரமெனுங் கடலி
னிடைவீழ்ந் தலைமோத
நீல விருளில் விழிக்குருடராய் நின்றே
மயங்கிக் கிடப்பேனை
நீதான் கிருபை பொருந்தியுன்ற னெறிதா
னளித்து நிலையில் வைப்பாய்
வாலை முடிவே கனகமுடி வான
திருவே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அலையாம் பிகைத்தாயே. 38

ஆண்ட வளுநீ யாமாகி லழகு
துரைச்சி நீயாகில்
அருண னிறத்தி நீயாகி லமுதச்
சிவத்தி நீயாகில்
பூண்ட விமயா சலத்தினுயர் பொன்னே
நீதா னுமாகிற்
புகழ்ந்தே யெனக்குன் னருண்முலைப்பால் புசிக்
கொடுத்த தாயாகில் [கக்
நீண்ட புகழ்முன் சமயமெனு நெறிதந்
ததுவு நிசமாகில்
நிலத்தி லெனையே பகைத்தாட்டும் நேரில்
லாப்பாழும் பேருடலம்
மாண்டு விடவே யருள்புரிவாய் வாரா
கினியே யருண்மணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அலையாம் பிகைத்தாயே. 39

அலையிற் றுரும்பாய் மனதலைய வனலின்
மெழுகாய் மனமுருக
வழித்த பழம்போ லுடல்தளர வருவி
விழிகள் புனல்சொரிய
கலையி லறிவும் பிசகிநின்ற கலக்க
மதனை யகற்றியொரு
கனஞ்சே ருன்ற னினையடியைக் காண
வசங்கொண் டிருக்கவைத்தாய்
சிலையைப் பிடித்த கரத்தழகி சிவத்தி
தவத்தி பவமகற்றிச்
செயமே தரித்த மனோகரத்தி சிந்தா
மணிரத் னுபரணி
மலையி லுதித்த நவபீட வாச
முறைமா யேஸ்வரியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 40

உடலும் பகைக்க வகம்பகைக்க வொக்கப்
பிறந்தார் மனையாட்டி
யுடனே பகைக்க வூர்பகைக்க வொழிந்த
பெரியோர் களும்பகைக்கக்
கடலும் பகைக்க நிலம்பகைக்கக் கனல்கால்
ககன முடன்பகைக்கக்
கருதி யிருக்கும் வேலையதைக் கண்டா
யோவென் மாதாவே
சடலந் தனையே பகைப்பதல்லால் சர்வ
மூல முதல்வியுனைத்
தானே பகைக்க மிகக்கயவர் தம்மா
லாமோ தார்குழலே
மடலம் பரையே யுனையடுத்தேன் வந்தென்
றனை நீ காத்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 41

உற்றுர் பெற்றுர் தமைவேண்டே னூழி
வினையால் வரும்பொருளே
யுடலம் வேண்டேன் செழித்திருக்கு மூரு
முலக மதைவேண்டேன்
சற்று யினுமிவ் வுலகிலுள்ள தன்மா
திகளும் வரவேண்டேன்
றன்னை யறிய வறிவருளுந் தாயே
யுன்ற னிருபதங்கள்
பெற்று லடியேன் சிரமதனிற் பிரியா
திருக்க வகைவேண்டிப்
பிடித்தே னெனது மன நுறுதி பிசகா
திருக்க வரமருள்வாய்
மற்று ரையுநா னம்பவிலை வரையின்
மகளே யுனையடுத்தேன்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 42

ஒன்றே டொன்று நெருங்கியிந்த வுடலை
விலக்கி யுயிர்நெகிழ
வுற்ற கால மதனி லெனக் குனது
பதங்க ளெதிராக
நின்றே யெனக்குன் னருள ளிப்பாய் நீயே
கருணைக் கடல்மயிலே
நேரி லணமந்த பரநிதியே நித்யா
னந்த மானவளே
அன்றே யனைத்து மொன்றுக வரனு
ரிடத்தி லிருப்பவளே
யடர்விற் புருவ மணிந்துதலை யழுதே
யென்ற னகத்துயிரே
மன்றே பொருந்து மிருப்பி மறவா
திருக்க வரமருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே 43

அன்பத் தோரா மக்ஷரத்தி யகிலாண்
டத்தி யந்தரத்தி
* யமல சுகத்தி யருமயத்தி யருண
நிறத்தி யம்பரத்தி
ஒண்பத் தோராம் பதங்கடந்த வேக
வெளிச்சி காரணத்தி
யிமயா சலத்தில் வந்தருளி யிருநா
ழிகைநெற் கொண்டுலகில்
உம்ப ரடியர்க் கறம்வளர்த்த வுமையே
யருள்வா ரிதிமாதே
யுனது பதத்தை யடியேனு முரைத்து
மகிழ் வரமருள்வாய்
மண்பூத் தலருங் கமலமதில் வளருங்
கனமே கொடியனமே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 44

மண்ணுல் கரகந் தனைப்பிடித்து வாரி
யெடுத்துத் தலைமீது
வைத்தே யாடும் பூசாரி மனம்போ
லெனது மனமுன்றன்
அண்ணுந் திருந்து குறிபார்த்தே யசையா
திருக்கி லசைந்துருகி
யழுத தாரை யொழுகிவர வதனுட்
பொழுதைச் செலுத்தவருள்
† ஒண்ணுங் கனக முடிப்பொருளே யுள்ளச்
சிவமே நவரசமே
யொன்று யூக மனத்துயிரா யுயிருக்
குயிரா யிருந்தவளே
வண்ணு லயமே ஞானவெளி வனமே
யெனவந் தாண்டருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 45

* அமலம் - அழுக்கின்மை. † ஒண் - பிரகாசம்.

அவகா லத்தில் மனமுமெனக் கடங்கா
தெழுந்தே யெழுந்துவிம்மி
யகத்தைப் படைத்தே யுனதுதிரு
வருளைத் தாதிதனமறந்து
பவமா மயலா ருடன்சேர்ந்து பண்ணும்
வினைநா னென்னசொல்வேன்
பார்க்க வென்ரு லதற்கொருவர் பகைப்பா
ருலகி லுள்ளவர்கள்
சிவமா யிருந்த சமுத்திரத்தைத் திருகாய்
நினைக்கு திதின்வலுமை
தேய்த்தே யுனது திருவருளைத் திறமாய்த்
தரவே வரமளிப்பாய்
மவுனி தீப வலர்கொடியே வனமூ
லிகையே பூரணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 46

வினையின் பயனே பயனதனை வெறுக்கத்
தறிக்கப் போகாதோ
வெய்யோ னுதயத் தெதிர்பனியும் விம்மிச்
சுரந்து வளர்ந்திடுமோ
நினையு நினைப்பு மதற்காதி நீயு
முனது பதியோனு
நிசமா யென்றன் வசமானுல் நில்லா
தெந்த வெவ்வினையும்
தனையே யறிந்தா லின்பதுன்பத் தடைதான்
வந்தா லதுநிகரோ
தகைசே ரிவைகட் கஞ்சுவரோ தாயே
மிகுந்த சவுந்தரியுன்
மனையை யறியக் கருணைபுரி மணிநா
தாந்தத் திணிச்சுடரே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 47

கனிந்து கனிந்துன் றணைப்பாடிக் கசிந்தே
யிருகண் புனல்பெருகக்
காதுன் னுபயத் திருவருளாங் கதையைக்
கேட்க வகைபுரிவாய்
இனந்தா னுறவாய் மனம்புதைய வெந்த
நாளும் வருந்தியிந்த
விடத்தி லிருந்தால் மயக்கமரு விரவும்
பகலு நினதருளே
நினைந்த படியே சிந்தைசெய்ய நெறியை
யுதவி யெனைக்காப்பாய்
நித்யா னந்தப் பழம்பொருளே நிமலி
யமலை புகழ்விமலி
வனத்த சடலத் தொழிலுனது மதியே
யிதமா யருள்புரிவாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 48

குலந்தான் நலந்தான் குடியிலுள்ள குணந்தான்
கனந்தா னெமதெனவே
கொள்ளுங் கயவர்க் கதுவசனங் குலவு
முன்ற னிருபதத்தைச்
சிலந்தியிழைபோ லறிவுருகச் செகத்திற்
கண்டு பிடித்தவர்க்குச்
செகதூ ஷணிப்பு நகைப்பு மென்ன செய்யு
மவரை மலர்க்கொடியே
அலர்ந்த முளரி முகத்தாளுன் னடிமை
யான நாயேனை
யார்தா னகைத்துப் பழித்துமென்ன வாதி
க்குஷ்ணன் றன்றுணைவி
மலர்ந்த மனமா ரடியவர்பால் வளரு
மொளிசேர் நிலமாதே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 49

நீர்மேற் குமிழி யாமுடலே நிலையா
மெனவே கயவரெலாம்
நின்று புவியிற் றனந்தேடி நீள
மயக்கான் மிகவாடிப்
பார்மேற் பெரியோர் தமைப்பழித்துப் பண்ணும்
வினைகள் வெகுகோடி
பாவி யர்கள்பாற் சேராதுன் பதமே
கதியாய்ப் பொருத்திவைப்பாய்
கார்மேற் பொருது மதிக்கதிரே கனகா
பரணி மணிப்பிறையே
கனக முடியில் வளர்ந்தெழுந்த கஞ்சா
சனத்து நிலையாளே
வார்மேற் பொருது மலர்க்கரத்தி வானில்
வளரு முகில்வேணி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 50

ஏழை யெனையே காக்கவகை யெடுத்த
வுன்ற னிதயமெலா
மிரங்கி யிரங்கிச் சலித்துமதி யெனையே
குறிக்கப் பொருந்திலையோ
சூழ வுன்ற னிருபதத்தைச் சுகமாய் மனதிற்
பொருத்தி யின்னஞ்
சொந்த வடிமை யாக்கிலையோ சும்மா
விருப்ப தென்வகையோ
ஆழி யமுதை யடுத்தவருக் ககத்திற்
பசியு முண்டாமோ
வமுத வருஷம் பொழிந்திடலென் னதிட்ட
மதியோர் குடியாக
வாழப் பிடித்தா லுனையென்னுல் வசனித்
திடவாக் கினைதருவாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 51

கொடுங்கை தன்னு லெடுத்தசிறு குழந்தை
தணைத்தா யெறிவாளோ
கோபங் கொண்டால் யானிகரோ குலவுங்
கருணை நிலையாளே
அடங்கி யுனது கோபமெலா மகற்றி
யெனது பரிதாப
மறிந்து க்ருபைதா னருள் வேண்டி யாள்வாய்
வேத விழுப்பொருளே
துடங்கும் பரம னிடப்பாகத் தொளிரு
மணியே யணித்தாயே
துலையாச் சனன வலையகலத் தோற்று
முனது துணைப்பாதம்
மடங்கத் தெரிய மனதடங்க வாரிக்
கருணை பொழிந்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 52

கான லதனைப் புனலாகக் கருதி
நினைக்கும் வாறதுபோற்
கவலையுடனே குடும்பமெனுங் கனவா
கியபொய்ம் மாய்கைதனில்
ஈச ருடனே யிருந்துசொல்லி யெல்லா
மெமதன் ரெயிலாக
விறுமாப் படைந்து மனம்வீணு யிருந்து
கலங்கித் திரியுதையோ
நானு னெனவே மகிழ்ந்திருந்த நடத்தை
யறியச் சிவபுரத்தில்
நாதன் கழல்க ளுணர்வினுள்ளே நடுவாழ்ந்
திருக்க வருள்புரிவாய்
வானு னந்தத் தவக்கொடியே வனச
மதியே வாணுதலே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 53

நிலங்கால் ககனங் கடலனலும் நீள
விருந்த நெறிச்சுடரே
நிரவியுலகெங் கினுமுயிராய் நிறைந்தே
யிருந்த தவப்பொருளே
பலகா லமுமுன் னிருபதங்கள் பாடிப்
பாடிக் கசிந்துருகிப்
பரவும் விழிகள் புனலாருய்ப் பருகி
யெனது மனதுருகக்
கலையோ காலத் தெரிந்திருக்கக் கனக
வெளிகள் மறைந்திருக்கக்
* கபிலைப் பசுவுங் கதறிக்கத்திக் கன்றைத்
தேடி வருவதுபோல்
மலமாக் காதி யகலவென்பால் வந்துன்
னருட்பால் தந்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 54

எந்த நாளு முனதருட்பே ரழகை
யறிவி லொருபிடியா
யிருத்தி மகிழ்ந்து கனககிரி யேறி
முடியை யீசனது
சிந்தை மிகுந்து புகழ்ந்துவரச் செல்வ
முடனே கல்விவரச்
செகச்சா லங்க டமைக்கடந்து சிற்சொரூப
மனம் புணர்ந்து
வந்துன் னுத முடியருளு மௌனு
னந்தச் சுடர்விளக்கே
மாலா கியக்ருஷ் ணன்றுணவி வனச
மலரி னிலையாளே
மைந்த னிடம்வந் தெனைக்காப்பாய் மணியே
யோக வொளிமணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 55

* கபிலைப்பசு - தேவப்பசு.

கொஞ்சுங் கிளியே யருள்பழுத்த கொம்பே
கதம்ப வனத்தில்வளர்
குயிலே யிமயா சலத்தில்வருங் கொடிவான்
மதியே பேரொளியே
அஞ்சு தொழிலுக் கதிகாரி யதிமோ
கனமே மாமாயை
யமுத வசனி நான்மறைக்கு மடங்கா
தகண்ட பெருவெளியே
* விஞ்சு புகழ்சேர் திருமகளும் வேதன்
மனையா ளொடுதினமும்
மிகுந்து பணியு மரியயனும் † விபுதர்
முனிவர் மறையோர்கள்
வஞ்சி யேயுன் பதங்காண வகையு
மறியார் வளமயிலே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 56

ஏதோ மனத்தின் விவகார மிதனு
லுயர்த்தி தாழ்த்தியென
விறந்தும் பிறந்து நரகமதி லிருந்து
மனது சஞ்சலிப்பப்
பேதா பேத மிகப்பேசிப் பெருமை
பொறுமை யிதனுலே
பெற்ற சுகந்தா னினிப்போதும் பிரியா
துன்ற னிருசரண
வேதாந் தவருட் கமலமதை விருதாப்
பிடித்துக் கருதிநிற்ப
வெட்ட வெளியோ னேகனுடன் விளங்கக்
கருணை நிலையருள்வாய்
மாதா வேமெய்ஞ் ஞானமுதே வரையின்
முடியில் வளர்பவளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 57

* விஞ்சு - மிஞ்சிய. † விபுதர் - தேவர்கள்.

சோற்றுத் துருத்தி வெகுபுழுக்கள் சுகமா
யென்ற னகமென்னவே
சொல்லி வளருங் கருநாடு சூலக்
குயவ னுத்தியதால்
பார்த்துப் பிடித்த பழம்பாண்டம் பகைத்தே
யேமன் ருனுடைக்கும்
பனங்காட் டிலுறை நரிநாய்கள் பருந்தும்
விருந்தா யருந்திமகிழ்
ஊற்றைப் பிணத்தை யெனதெனவே யுகந்து
நின்ற சுகம்போது
முனது பதங்க ளென்மனத்து ளுறவே
கருணை மிகவளிப்பாய்
மாற்ருென் றில்லா தருட்கனக வரையின்
முடிமேல் வளர்பவளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 58

எடுத்த சனன மிறக்குமுன்னே யென்சிந்
தையுணீ வரவேண்டு
மிரவும் பகலு முனதடியையேத்தும்
வரநீ தரல்வேண்டும்
அடுத்த கலக மிருவினைக ளறவே
சிவத்தி லுறவேண்டு
மனுட்டா னுதி தன்னையிழந் தமல
சுகத்தைப் பெறவேண்டும்
தொடுத்த படியே யெனைச்சார்ந்து தூக்கி
யெடுத்து நடுவணையிற்
சுகமா யிருக்க வரமருள்வாய் துவாத
சாந்த நிலையாளே
* மடுத்த கனத்தி நின்மயத்தி மடலே
கருணைக் கடலாளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 59

* மடுத்த = நிறைந்த.

உந்திக் கமலத் துறைவாழ்வே யோங்கா
ரத்தி சதுர்க்கோண்த்
தொளிரு மிதய நிலையாளே யுமையே
கமலா சனமணியே
சிந்தித் திடவே யறுகோணஞ் செறிந்த
மலையி னிலையாளே
செயமோ கினியே டாகினியே சிந்தா
மணியே யோகினியே
சந்தித் திடமே யின்னிருதா டனே
யருள்வாய் தற்பரையே
சகல பகவான் றிருக்ருஷ்ண சாமி
துணவி பார்வதியே
வந்தித் திடவே தேவரெலா மகிழத்
தோற்று மலர்க்கொடியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 60

மூகம்பார்த் தொருவர் பேசாமல் முனிவாய்
ராக்ஷ தர்கள்போலே
முடியப் பழித்த பழிப்பாலே முனையு
மழுங்கி யென்றனுயிர்
அகந்தா னழகு தினியதைத்தா ஞரோ
டுரைப்ப தருட்கடலே
யதிக வினையே னற்பருக்கே யனைத்தும்
வசிய மாகுதையோ
சகந்தா னகைத்தால் ஞானியென்பர் தமியேன்
பருவம் பொருந்தாமற்
ருயே யனையாய் வேண்டுவரத் தயைசெய்
திருத்தி யெனதுளத்தில்
மகனு மெனவே யருள்புரிவாய் வடிவே
வேத மறைமுடிவே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே.

அரைசே யென்ற னகத்துயிரே யமுதே
கருணை மதிநுதலே
யகண்டா காரப் பெருவெளியே யமலச்
சுகமே யந்தரமே
உரைசேர் மறையின் முடிமுதலே யுணர்வே
யுணர்வி னெளிச்சுடரே
யோத லறியா வதிசயமே யுமையே
யிமையோர்க் கரசான
தரைசேர் தண்டைச் சிலம்பணியுந் தாளி
பணிதி யணிதோளி
தருணி தருணச் சிவபுரத்தி சர்வா
னந்த பரம்பரத்தி
வரிசை யிமையா சலத்திலிறை மயிலே
யெனக்குன் க்ருபைபுரிவாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 62

ஒன்றே கனக முடிமுதலே யொளியே
வெளியே * யகண்டிதமே
யுலகா சாரங் கடந்துநின்ற வுமையே
யமலச் சுகப்பொருளே
என்றே யுலக மனைத்துயிர்க்கு மிரவும்
பகலு மெங்கெங்கு
மிருநா ழிகைநெற் கொண்டேகை யிசைய
வளர்த்த மலர்க்கொடியே
தன்றே மூலா தாரமுதற் ருவும்
பருவ நடுவணையிற்
றழைந்த பரமே நிதிமயமே சாதாச்
சாகாப் பூரணமே
மன்றே நடன மிடு சரண மயிலே
குயிலே சிவபதியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 63

* அகண்டிதம் - பூரணம்.

ஆம்ந்த வுன்ற னருணூலை யடுத்தே
யிழையாத் தொடுத்தெடுத்து
மதணைக் கயிரு முறுக்கிமன ரழுக்கை
யிருத்தி யுன்றனிரு
தோய்ந்த சிவக்கால் தணைப்புகட்டித் தொண்ணூற்
ருறு கருவிமயல்
தொடுத்த சடத்தை யிகழ்ந்துனது துவாத
சாந்த நிலைதனிலே
பாய்ந்த படியே குடியாகப் பலசொப்
பனமுங் கண்டுவிடப்
பதத்தைக் கடந்தே யிதத்துடனே பரனூர்
தந்த சிவபுரத்தில்
வாய்ந்த வாஞ்சை யுடன்புகழும் வானே
வானோர் தொழுந்தேனே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 64

அருளுக் கறிவா யிருந்ததெய்வ மமர்ந்த
திருநாட் கொடியேறி
யலங்கா ரமுமாச் சித்தமெனு மமை * கே
டகத்தி லெழுந்தருளி
மருவு மனதைப் பலிகொடுத்து வரிசை
யுடனே நடுவீதி
வரிசை பலவா மதிசயங்கள் வகைதா
னுரைக்க முடியாது
சுருளப் பிரியா ரதமேறிச் சோதி
வதன வொளிதாண்டிச்
சுத்த † வியோம நிலையதனிற் சுகமாய்
நிறுத்திக் கொடியிறக்கி
மருளற் றிருப்ப வருள்புரிவாய் வாலாம்
பிகையே காரணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 65

* கேடகம் - ஒருவகை வாகனம். † வியோமம் - ஆகாயவெளி

ஊசி நுனியின் மனத்தையுன்னி யுயர்ந்த
மனிதர் மயிர்பதினு
ருன்று நுழையா விடத்தில்தம ரொடுங்கி
யடங்கிக் குறிபார்க்கில்
காசிப் புனலு நிறைந்த கங்கைக் கரையுங்
கடந்து திரைகடந்து
கனக மணியி ளெளிகடந்து கருணைக்
கடலுந் தான்கடந்து
பேசும் பருவ முரைகடந்து பெருமை
சிறுமை தமைக்கடந்து
பேயி னுடனே பேயனுமாய்ப் பிரமை
கொண்டென் னறிவழிந்து
வாசித் தடமே கடந்து நின்ற மௌனு
னந்த மெனக்கருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 66

செல்ல மனது மடங்கியபின் சென்றே
யூமைப் பருவமது
சேர வரவே யறிவழிந்து செகத்தோர்
நகைத்துப் பகைத்திடவே
அல்லி முளரித் தடந்தாண்டி யருண
வுதய ரவிதாண்டி
யடங்கி யிருக்கச் சிவபுரத்தி லடியே
னடியாய் நிலைக்கவருள்
நல்ல கமல முகத்தாளே நந்தி
விடையோ னிடத்தாளே
நறுமா மலர்ச்செஞ் சடையாளே நதிகள்
பெருகும் புதத்தாளே
வல்ல பரையே பரம்பரையே மௌனு
தீப மோகனமே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 67

அடர்ந்த ககன முடிவினிலோ ரமுத
நதிதான் பெருகிவர
வதனைப் புசித்துப் பணிதந்தே யடியேன்
மனதா லயமாகத்
தொடர்ந்து சிவமே யனுக்ரகித்துத் தொல்லை
வினையைப் பறக்கடித்துத்
தொலையாச் சென்ன வழிதொலைத்துச் சுகமா
யிருக்க வருள்புரிவாய்
படர்ந்த வருண மணிநுதலே பரம
சுகவா னந்தமதில்
பாவ மகன்ற மனத்துள்வளர் பத்மா
சனியே வான்மணியே
மடந்தைப் பருவ மூடையாளே வளர்மின்
கொடிபோ லிடையாளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 68

அணுவுக் கணுவா யிருக்குமுனை யறிய
வசமோ வருட்கடலே
யார்தா னறிவா ரரிபரம னவரா
லறியா வதிசயத்தாய்
குணமுற் றகன்ற நிரஞ்சனமே குறியற்
றிருந்த பரம்பரமே
கொள்ளைப் பிறவி தனையகற்றுங் கொடியே
ககன மின்கொடியே
கணுவற் றகண்ட வருட்கரும்பே கண்ணின்
மணியே மணியிலுள்ளே
கலங்கா திருந்த வொளிச்சுடரே கருணைக்
கடலே நவமணியே
மணமுற் றெளிர்பூங் கமலமிசை வளருந்
திருவே மலைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 69

நெஞ்சிற் சபலம் பொருந்தாது நின்னை
யறிவர லுணர்ந்தொன்றுய்
நினைக்கப் போகின் றதுவுமிலை நெறிமாற்
றுயருமா றதுபோல்
பஞ்சுப் பொறிபோற் பவமகலப் பரவும்
நினைப்பு களுமகலப்
பரிந்தென் பால்வந் தருள்புரிவாய் பரமா
னந்தச் சுகப்பொருளே
அஞ்சு முடலா யிருப்பவளே யாறுங்
கடந்த பரம்பரையே
யமுத வசனத் திருக்குஷ்ண ஞுதித்
துணைவி யந்தரியே
வஞ்சி நவமோ கனரூபி வதனும்
புயத்தி யருண்மயத்தி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 70

பச்சை முழுப்பொன் னிறமுடனே பளிங்கு
பவள முடனீலம்
பருத்த மேக முடனுகப் பரவி
யிருக்கும் பசுங்கிளியே
அச்ச மறவே யதன்மீதி லருண
வுதய ரஷிகோடி
யகண்ட கார சூபமதா யமர்ந்த
சிவமோ கனமாதே
செச்சை யடிமே லணிச்சிலம்புஞ் சிறுகிண்
கிணித்தண் டைகளொலிக்கச்
சிவனே டிருக்குங் கொலுமுகத்தைச் சிறியேன்
காண வருள்புரிவாய்
வச்ச வுனது பொருளெனக்கு வரத்தாற்
கருத்தி லுரைத்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 71

அணங்கே நவபீ டாசனியே யருளே
வுதய மதிச்சுடரே
யாகாயத்தில் முளைத்தெழுந்தே யருவி
முளரி நிலையாளே
இணங்கு மடியார் நினைந்தபடி யிசைந்த
புவன நவமணியே
யேகா கார மாகவெனை யெடுத்துன்
னருளைக் கொடுத்தாள்வாய்
பிணங்கு மலமா யாதிகளிற் பிரியும்
விடநீ காட்டாதே
பேரா யிரத்தி தவபுரத்தி பேசா
மோனக் கொடிமடலே
மணங்கொண் டிருக்குங் குழலாளே வந்தென்
றனையாட் கொண்டருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 72

குடும்ப மெனுமைக் கடலதனிற் குலவு
முடலா கியதோணி
குறித்தே பிரமன் வகுத்தவகை கொள்ள
மேற்கால் கீழ்க்காலாய்த்
தடம்புக் கியதோர் நாளையிலே தடித்து
வழியோர் சுழியேகிற்
றுறு மாறு யோர்நொடியிற் றுளை
யொதுங்கிக் கிடக்கு தையோ
திடம்புக் கிடவே நேர்கரத்தாய் சேர்ந்து
வரவே கரையொதுங்கிச்
சித்தே தயவாய்ப் பார்த்தருள்வாய்ச் செஞ்சொற்
கிசைந்த திருமாதே
மடம்பார் முடிவி னடனமிடு மதிசூ
டியபே ரொளிவிளக்கே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 73

கல்லாக் கயவர் முகம்பார்த்துக் காத்துக்
கிடந்து விழிபுனலாய்க்
கரையக் கரைய விதம்பேசிக் கலங்கித்
திரியக் கடையேனும்
நல்லார் பதத்துக் கானதொழில் நடத்தை
யறிய வெனதுமதி
நம்ப வுறுதி யருள்புரிவாய் ஞானு
னந்தச் சுடர்விளக்கே
பொல்லா வறுமை தனையகற்றிப் பொழுதை
மறைத்துச் சரமேகம்
பொழியும் வகைபோற் கவிமேகம் பொழிய
மொழிநல் வரக்களித்தே
வல்லா னுக்கி யெனையாள்வாய் வாலாம்
பிகையே நாரணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 74

அரிப்ரம் மாதி தேவரொடு மகிலையைக்
கடைய விடம்பிறக்க
வதனுற் பயந்தே யபயமிட வபயங்
காத்தோன் கரியுரித்தோன்
எரியப் புரத்தை நகைத்தெரித்தோ னிறையோ
னென்ப ரறியாதா
ரிறையோ னுடலில் நீபாதி யாயிருந்தே
செய்த வுபகாரம்
தெரியா துலக மறியாதோ சிவனுர்
தமக்கோர் தொழிலேது
தேகம் நீயுன் ருழிலெனவே செப்பு
மறைக ளநுதினமும்
வரிவில் தரித்த மலர்க்கொடி யே வந்தென்
றனையா தரித்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 75

இறையி லிருந்த வதிசயத்தை யெவரா
லறிய வசமாகு
மீசன் றனக்குட் டானறிவா னிருமா
நிலத்தோ ரறியாரே
நிறையுங் கடலு நிலம் * பவன நெருப்பு
ககன மறியாதே
நின்னே யறிந்தார் பிறப்பிறப்பு நிலத்திற்
றிரும்ப முனையாரே
அறையஞ் சிலம்பு மிகவொலிக்க வமுத
கிரணச் செஞ்சரணி
யடியே னறிவுக் கோரறிவா யமைந்தே
யிருந்த பரம்பரையே
மறைவின் முடிவி னடனமிடும் வனச
மலர்ப்பூம் பதத்தாளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 76

கருத்தோ செலுத்தச் சல்லடைக்கண் கனப்போற்
கலங்கி மயங்குதையோ
கனவி லெவர்க்கு மபகாரங் கருதி
னுப்போற் காணலுற்றேன்
பருத்த விருளில் விழிக்குருடன் பாதை
யறிந்து நடப்பானே
பதியே யெனது மதிவினையால் படும்பா
டிவைநா னேதுசொல்வன்
ஒருத்த ருதவி யதுங்காணே னுனையே
யடைந்தே னெளிச்சுடரே
யுதித்த கதிர்முன் னிருள்போலு மோட்டி
வினையை வாட்டிடுவாய்
வருத்த மறிந்த தாயேயுன் மலர்ப்பா
தத்தில் வீழ்ந்தடுத்தேன்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே 77

* பவனம் - காற்று.

சுத்த பரிச மொடுரூபந் தரித்த
ரசமா கனக்கந்தந்
தாவும் பொறிகள் தாமறியுந் தனேயே
யறியுங் கரணமது
உற்ற உயிர்தா னிவையறியு முயிர்தா
னறியு மதுசாக்ஷி
யுகந்த சாக்ஷி தனேயறிய வொருவர்
தமையு நான்காணேன்
முத்த வறிவு முடையோர்தாம் முதர
சாக்ஷி தனேயறிந்து
மோகா வேசந் தனேக்கடந்த முனிவ
ராஞே ரிருபதங்கள்
வைத்தென் சிரசிற் றியானமுடன் மகிழ்ந்தே
யிருக்கும் வகைபுகலாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 78

தனதென் றிருப்ப ருலகமதிற் றந்தை
யொடுதாய் தனதாமோ
தனந்தான் றனதோ வகந்தனதோ தழுவு
மனேயாள் தனதாமோ
எனதென் றிருந்த பாழுமுட லிதுதான்
றனதோ மனந்தனதோ
வெல்லாம் பிரபஞ் சவிர்த்தியினு லிதம்போற்
கரவி லிசைந்திருப்ப
உனது பதத்தை யான்பிடித்தே யுணர்ந்தொத்
திருக்கா வகையெடுத்தே
னுடலும் மனதும் வினவசத்தா லோங்கித்
தளர வடிக்குதையோ
மனது நீங்கி யெனதுவச மாகக்
கருணை யதுபுரிவாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 79

காண வேண்டு மிருபதத்தைக் களிக்க
வேண்டு மநுதினமுங்
கவலைக் கடலா கியவினைகள் கரைய
வேண்டு மெனையகன்று
தோண வேண்டும் ஸ்ரீக்ருஷ்ணன் றுணைவி
யுனது திருக்கருணை
தோற்ற வேண்டும் நடுவணையிற் றுவாத
சாந்த வெளியில் மனம்
பூண வேண்டு மருளமுதம் புசிக்க
வேண்டு மெனதுடலம்
புகழ வேண்டு மருட்கவிதை பொழிய
வெனக்குன் னருள்புரிவாய்
வான மதியே * யபரஞ்சி மணியி
லிருந்த சவுந்தரியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 80

அத்து விதமே சிவபுரமே யணுவி
லணுவே யகண்டிதமே
யழுதச் சிவமே யழகொழுகு மருண
நுதலே நவநிதியே
முத்த ரறிவே கனகமுடி மோனப்
பதியே வதிரசத்தின்
முக்ய ரசமே நவமுடியில் முடித்த
பரமே திருப்பரையே
சுத்த வெளியே வெளிக்குநடு சூழ்ந்த
வொளியே வொளிக்குமுனந்
தோய்ந்த திரையே திரைக்குமப்பால் தோய்ந்த
வெளியே வளிகனலே
மற்று முளப்ர பஞ்சமுறு வடிவே
யெனது மலைமகளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 81

* அபரஞ்சி - புடமிட்ட பொன்.

† மருத நிலத்தோ ணெருபாவில் வந்து
வணங்கக் கனமறலி
வருண னிருதி யருணனெடு வாயு
முடிவி லீசான்யன்
பொருந்தி வணங்க வமரர்முடி புனையும்
பதத்தி யருண்மயத்தி
பூமா தொடுவா ணியுவணங்கும் பொன்னு
பரணி பணிபூணி
கருது மடியார் நினைவிலுள்ளங் கரைந்த
வதனி கல்யாணி
காமக் கிரிபீ டாசனியே கன்னி
யுமையே தாரணியே
வருநற் பருவ மாக்கியெனை வளர்சே
வடிக்கா ளாக்கிடுவாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 82

தக்க திரிகோ ணசனத்தி சகல
புவன மானசத்தி
சர்வ பூத மானசத்தி சகலா
கமங்க ளானசத்தி
திக்கு முடையா யமர்ந்தவளே திரிகோ
ணதீ பப்பொருளே
செம்பொற் கலசத் தனத்தழகி திவ்ய
சோதி மயமானை
புக்கு மடியார் சிந்தையினில் புகழ்ந்து
நடன மிடுஞ்சரணி
பூத மைந்தாய் நாதாந்தப் பொருளா
யிருந்த மலர்க்கொடியே
மிக்கு மெனது மனச்சலன மறுத்துக்
கருணை மிகுந்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 83

† மருதநிலத்தோன் - இந்திரன்.

அனைத்து மகண்ட முடிவிலொன்று யருளாய்ப்
பழுத்த தவப்பொருளே
யகில புவனத் தனுகரண மான
சுகமே யற்புதமே
செனித்த பிறவித் துயரறுக்குஞ் சீர்வாள்
பிடித்த கரத்தழகி
தினமு முனையே பணிந்தவர்கள் சிந்தை
நிலையா யிருப்பவளே
கனத்த மயிடா சுரன்சிரத்தைக் கலங்க
வுதைத்த பதத்தாளே
கருணைக் கடலே பரநிதியே கண்மூன்
றுடைய கற்பகமே
மனத்துட் சலன மறக்கருதி மலர்ச்சே
வடியை யளித்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 84

துரங்கம் பதினா றங்குலமே சுகமாய்
நடன மிடுஞ்சரணி
தொலையா வெளியே வெளிமுதலே சுயம்பிர
காச நிலையாளே
இரங்கு மடியார் சிந்தையுள்ளே யினிதாய்
வளரும் வாரிதியே
யிலகு நினைவு முடையவளே யின
ரகம்விட் டிருப்பவளே
அரங்க முடிவில் நடுவணையி லமுதாய்ச்
சொரியு மருணதியே
யமல சுகத்தை யடியேனு மடையு
மறிவு தரவேண்டும்
வரங்க ளினிவந் தருள்புரிவாய் வனசா
சனத்து ளிருப்பவளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 85

உம்பர் முனிவர் முதலோர்க்கு முணர்தற்
கரிதா யிருப்பவளே
ஓதா வேத முணர்பவளே யுயிருக்
குயிரே யொளிக்கொளியே
அம்பு படர்ந்த விழிப்பொருளே யரவ
முடியி லிருப்பவளே
யரனுர் தமது நிஜனத்தருளு மடியா
ருளத்துண் மணிவிளக்கே
கும்ப முனிக்கும் வியாசருக்குங் குலவு
நவசித் தாதிகட்குங்
குறிக்குந் திக்குப் பாலர்கட்குங் குறியே
யருளும் நிலையாளே
வம்பில் பழுத்த ரசக்கனியே மதமோ
கினியே யோகினியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 86

தொந்த வினையா யிருந்தவினை தொலைக்கு
மருந்தா யிருந்தவளே
துக்க சுகமா யிருந்ததனைத் துடைக்குங்
கதியா யிருப்பவளே
* அந்த கனுமா யிருந்துமவர்க் கதிகா
வலுமா யிருப்பவளே
யரியு மயனு யிருந்துமவர்க் கப்பா
லாகி யிருப்பவளே
மூந்தி நடுவா யிருந்துமதன் முதலாய்
முடிவா யிருப்பவளே
முத்தர் சிவமா யிருந்துமருள் மோனப்
பதியா யிருப்பவளே
வந்தித் திடநீ வந்தெனக்கோர் வழியைக்
காட்டி யாதரிப்பாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 87

* அந்தகன் - எமன்.

பூத மைந்து சதுர்க்கரணம் புலனே
ரஞ்சும் பொறிகள்பத்தும்
புகழும் வித்யா தத்துவங்கள் பொருந்தோ
ரேழுஞ் சிவமஞ்சும்
பேதா பேத மோராறிற் பிடித்த
தேகக் கோடியினிற்
பிறந்தும் பிறந்தே யிறந்திறந்து பொய்யைப்
புசித்தே பொய்பேசிக்
காத லுடைய மனத்தையுன்றன் கருணை
விழிக்கொண் டினிநோக்கிக்
கவலை தணிய வரமருள்வாய் கண்ணே
யெனது கண்மணியே
வாத மகண்ட பெருவெளியில் வளரு
நடனத் தாண்டவத்தி
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 88

ஆரா ரகழு நீயாரு யாரா
வழுது நீயாரு
யாரா ருயிரு நீயாரு யாவர்
பொருளு நீயாருய்
பேரா யிரமு முடையாளே பேதா
பேதம் பேசியென்ன
பெருமை சிறுமை நீயாருய் பிரியா
வருளு நீயாருய்
நாரா யணியே பூரணியே நளினு
சனத்து ணடிப்பவளே
நாட்ட மறியா தவருளத்தும் நடனம்
புரிந்தே நிற்கிலையோ
வாரா கினியே தயைபுரிவாய் வாலாம்
பிகையே பலவகையே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 89

தட்டா துனது மொழிகேட்டுத் தமியேன்
பிழைக்கும் வழிதேடித்
தலைசெய் வதுமுன் கடனலவோ தாயே
கருணைக் கோர்முதலே
கட்டா யிருக்கு மூலகிலுள் ளோர் கலங்கிப்
பிரிய வருள்புரிவாய்
கமலா சனியே மாமணியே கருணை
நிதியே கற்பகமே
மூட்டா திருந்த சலனமிவை மூழ்க
வடிப்பாய் முழுமுதலே
முனிவோர் புகழுந் திருக்ருஷ்ண மூர்த்தி
துணைவி மோகனமே
வட்டா * காயத் தொளிர்சூடரே வாலாம்
பிகையே வந்தாள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 90

தத்வா தீதச் சுடர்விளக்கே தமியே
னுயிரா யிருப்பவளே
சர்வ லோக தயாபரியே சாக்ஷாத்
கார மானவளே
சித்த மோனத் தடியார்தஞ் சிந்தை
யிடையிற் குடியான
சேஷா பரணி மலர்ச்சரணி திருவே
யருவே திகழுருவே
வித்தா யடியிற் கனகசபை மேலாய்ச்
சுகமாய்க் † குண்டலியாய்
விளங்கா நிற்கு மருட்கனியே மேலோர்
கீழோர் தொழுபவளே
வற்ரு துலவு மருட்கடலே மகிழ்ந்தென்
றணவந் தாண்டுகொள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 91

* காயம் - ஆகாயம். † குண்டலி - மூலாதாரம்.

அம்மாவு ணேயே யடுத்தவர்கட் கணைத்து
முலக வசியமுண்டா
மஷ்டாங் காதி யோகமுட னடியு
முடியுங் கவனமுண்டாம்
தம்மாற் சாபா நுக்ரகமுஞ் சகல
மூர்த்தி கரமாகுஞ்
சடமே வெகுநாள் நரைதிரைக டமையே
யகற்றித் தனியிருக்கும்
சும்மா வவர்கள் விரலசைந்தால் தொடர்ந்தீ
ரெழுபர் சுழன்றருளுந்
துக்க சுகமு மணுகாது சுகரூ
பாதி யருளமையும்
வம்மா வதைத்தா னேதுசொல்வேன் வாக்கு
மனதுக் கடங்காதே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 92

பொன்னே நிறைந்த புதுமலரே புகழ்சேர்
மறையின் பொருளாணங்கே
பொற்ரு மரைப்பூங் கமலமதிற் புகழ்ந்தே
யிருக்கும் போதகமே
மின்னே பவழக் கொடிவடிவே மேக
மணைய கருங்குழலே
விளங்கு தவபீ டாசனியே வித்தாய்
மரமாய் மறைமுடிவில்
மூன்னே பழுத்த கதிப்பழமே முதிர்ந்த
மொழியிற் படர்ந்தகொடி
முதலே நுதலே குடியாக முடிவா
யிருந்த மோகனமே
வன்னே பொருந்த வருளளிக்கும் வாலாம்
பிகையே வான்மணியே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 93

தூல சூக்ஷ்ம காரணமே தொலையாக்
கருணை வாரிதியே
துவாத சாந்த வெளிதனிலே சுகமா
யிருக்கும் நிரந்தரமே
மேலாம் தவத்துக் கதிகாரி விரிந்த
கமல நடுப்பீடம்
வியாபித் தொளியாய் வெளியதன்மேல் வெளி
யிருந்த மெய்ப்பொருளே [யா
ஆல கால விடமருந்து மரணு
ரிடப்பா கத்தில்வள
ரமுதே தேக வொளிமயமே யருணம்
புயத்தி யம்பகியே
வாலாம் பிகையே யுனையடுத்தேன் வந்தென்
றனை நீ காத்தருள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 94

மூன்றே யெழுத்தா யிருப்பவளே முனமே
லெழுத்தே பதினைந்தா
முதலா யிருபத் தெட்டாக முடிவா
யிருந்த மோகனமே
நீண்ட சமயா சாரமுமாய் நெறியந்
தரமாய் முகமாகி
நிகழா தாரக் குண்டலியாய் நின்றே
யிருந்த நேரிழையே
பூண்ட வடியா ரகந்தோறும் பொன்னம்
பலமாய் நடனமிடும்
பொருளே யருளே யெனையாளும் பொன்னே
கண்ணி னுண்மணியே
* மாண்ட குருவாய் வந்தவளே மருவுஞ்
சுகத்தைத் தந்தவளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 95

* மாண்ட - மாட்சிமைப்பட்ட.

ஆறு சமயங் கடந்துநின்ற வருண
நிதியே சுந்தரியே
யாசா பாச மகன்றவர்பா லருளா
யிருந்த வருந்ததியே
தேறும் பதினெண் புராணமுமாய்த் தீபி
கையுமாய் நின்றவளே
திக்கோர் வடிவாய் நிற்பவளே செகமே
வடிவாய் நின்றுயே
கூறு:மைம்பத் தொன்றதிலுங் கோடி
கோடி மந்திரமுங்
குறிக்கு மனந்த வேதமுமாய்க் குறிப்பா
யிருந்த பரமாதே
மாறி யெனது மலமறவே வந்தே
யடிமை கொண்டாள்வாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 96

மூக்கட் பரம ரிடப்பாக முதலாய்
மூலத்துத் தழைத்தவளே
முன்ன மவனி யீன்றவளே முடிவி
லவனி யாண்டவளே
மொளரி மதிவதனத் தெளிவிற்
றெளிவே தெவிட்டாத் தேன்மொழியே
சக்கதேவி யாதி பரஞ்சோதி ஸ்ரீபீ
டாதி யருள்
பக்கத் துணையே பார்வதியே பரமேஸ்
வரியே காரணியே
பஞ்சா க்ஷரியே யுலகேழும் படைத்த
தாயே பைங்கிளியே
மக்கள்:தமைப்போ லெனைக்காக்க வகைநீ
யருள்வாய் வளமயிலே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 97

தில்லை யதலுள் நடனமிடுந் திருவே
யருவே திகழுருவே
தெளிந்த பரமே சிவபரமே செகசூத்
திரநான் மறையேமால்
அல்லித் தொலைக்கு மருமருந்தே யமுதா
னந்தக் கடற்பெருக்கே
யறிவுக் கறிவாய் நீயிருந்தே யனைத்துந்
துதிக்க வருள்பரையே
எல்லை கடந்த பரவெளியே யிசைபுட்
களமே யகண்டிதமே
இதத்துக் கிதமா யிருப்பவளே யிரவு
பகலா யொளிப்பவளே
வல்ல மதிசூ டியவனிடம் வளரும்
வாழ்வே யென்கோவே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 98

அணியுங் கனக வொளிமலையே யமுத
நதியே யிருட்கடலே
யதிகா ராதி தேவதையே யகண்ட
முடிவி லொளிச்சுடரே
பணியு மணியும் புயத்தாளே பரநா
தாந்த மடத்தாளே
பழகு மடியா ரிருதயத்துட் பரவி
யிருக்கும் பனிமொழியே
துணியு மனதா கியயோகி தொடரும்
படியே தொடர்பவளே
தூங்கா துறக்க மானவளே தொலையாச்
சுகமுண் டானவளே
மணியங் கிரணி விளையாடி வளருங்
கொலுவீற் றிருப்பவளே
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 99

நான்வே றெனநீ வேருனுப் நானு
வேதப் பொருளானுய்
நாயே னினியா ருடன்பேசி நண்ணுங்
குறையைப் போக்குவது
தான்வே தாந்த முடிவானுல் தனக்கோர்
செயலு முண்டாமோ
சர்வா னந்தி சக்கரத்தி சட்கோ
ணத்தி சதுர்க்கரத்தி
தேன்வே றுரிசை யுண்டாமோ தீபத்
தெளிவே றுண்டாமோ
தேக முயிரு முயிர்க்குயிராய்ச் சிவமே
யொன்ரு யானுயே
வான்வே றுண்டோ திருக்ருஷ்ணன் வளருந்
துணவி நீயுரையாய்
மயிலா புரியில் வளரீசன் வாழ்வே
அவையாம் பிகைத்தாயே. 100

மூற்றிற்று.



வெண்மணி நாராயண பாரதி

இயற்றிய

மணவாள நாராயண சதகம் என்கிற

6. திருவேங்கட சதகம்

காப்பு

செந்திருவாழ் மார்பன் திருவேங் கடசதகம்
பைந்தமிழா னீதிநெறி பாடவே—வந்தருளும்
கார்முகமஞ் சங்கத்தான் கைத்தா மரையணிந்த
கார்முகமஞ் சங்கத்தான் காப்பு.

தனியன்

ஓங்குதண் டூலசூழ மேகமூன தேன்சொரியு
மோமலூர் வேங்கைபூப
னுதவுமண வாளநா ராயணன் களமூரி
லுலகநீ திக்கேட்கமுன்
தேங்குநீர் வயல்சூழும் வெண்மணியில் வாழுமுயர்
செல்வன்முத் தாரையனூர்
செழுந்தவ முதித்தநா ராயணப் பாரதித்
திருவேங்க டச்சதகமே
பாங்குபெறு முலகுளோர்க் கிருகண்மணி யகவிருட்
பானுவிரு விழிவிழியதாம்
பவக்கடல் கடக்கவரு வங்கமாம் பொங்குமொளி
பரவுமெய்ஞ் ஞானவழியாம்
ஈங்கிக பரத்துணைய தாமிது படிப்பவர்க
ளியல்வேங்க டேசுரன்ற
னிசையருளா யுற்றுநல மேபெருகி வாழுமவ
ரெழுபொன்மலை போல்வாழ்வரே.

நூல்

கடவுள் வாழ்த்து

பூமேவு திசைமுகனு யுந்திதனி லீன்றதும்
புநிதவே தாகமமெல்லாம்
புருஷோத்த மன்றெய்வ மென்பதும் பூசுரர்கள்
புரியுமுந் திரகருமமும்
தேமேவு மலர்மங்கை மார்பில்வ்ளர் சீருஞ்
செகந்தனிக் காத்தருள்வதுந்
தேவர்முதன் மருகசெந்து பட்சிசிலை மரமுஞ்
செழிக்கப் பதந்தருவதும்
பாமேவு பொருளலங் காரஞ் சிறப்பதும்
பலவிதழ நீயென்றதற்
பரதெய்வ முண்டென் றிருப்பார்க ளெந்நூல்
படித்தவித மோதெரிகிலேன்
மாமேவு பைந்துளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 1

அந்தணர் சிறப்பு

சீலமிரு மாகம புராணமனு நீதியுந்
தேர்ந்துமெய்ஞ் ஞானநிறைவார்
செய்கின்ற யாகாதி மந்த்ரகரு மங்களாற்
றேவர்க்கு முதவிசெய்வார்
காலமுத லாகிய ப்ரமாணங்க ளங்கையிற்
கனிபோல வேகாட்டுவார்
காயத்ரி மகிமையாற் சகலதீ விணைகளுங்
கனலிட்ட பஞ்சுசெய்வார்
ஞாலமிசைத் திங்கண்மும் மாரியுங் கொற்றவர்
நடாத்துசெங் கோல்வளமையு
நாடுகள் செழிப்பதுஞ் சகலதரு மமும்வேத
நாயகர் மகத்துவங்காண்
வாலகரு டன்கண்டு கண்டகதை யல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 2

அரசர் சிறப்பு

சீருலவு மனுநீதி மந்திரிசொ றன்புத்தி
தேசத் தியற்கைநான்குந்
தேர்ந்து செவ்வி விழிமன துமூன்றினும் பொறுமை
சேர்ந்துசெங் கோல்செலுத்தித் [யே
தாருலவு கமலமுங் குமுதமுங் காலங்கள்
சார்ந்துமலர் கின்றவித முந்
தந்தியொடு முதலொபொரு தானபல முங்கண்டு
தரியலரை வெற்றிகொண்டு
பாருலவு கெடிசேனை தனதானி யஞ்சகல
பாக்கியமு மிகவிளங்கப்
பற்பலதன் மங்களொடு கீர்த்திப்ர தாபம்
படைத்ததிற லோனரசனும்
வாருலவு தனமங்கை மனமகிழ் நாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே. 3

வணிகர் சிறப்பு

தீடமுடன் றம்மன மறிந்தவா ணிபமதே
செய்வரா தாயமிஞ்சிச்
செலவுசெய் யார் யாவர் வருகினுங் கண்டபடி
தேர்ந்துநிறை போலுரைப்பார்
அடகுதந் தாலுமரி யாதையில் லாருக்
கரைக்காசு கடனுமுதவா
ரானமனு நீதியுடை யோர்களுரை வாய்மையா
லளவிலாப் பொருள்கொடுப்பார்
கடுகுதனி லெட்டிலொரு கூறுவர வெனினுங்
கணக்குமுறை தன்னில்வழுவார்
காரிய விசேஷமதி லொருகோடி வுதவுவார்
கருணைவர்த் தகர்பெருமைகாண்
வடமலை தினம்பரவு தென்மலைக் கதிபனே
மணவாள நாராயணன்
மன்திலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 4

வேளாளர் சிறப்பு

அந்தணர்கள் கருமமுஞ் சகராசர் புசபலமு
மவனிவர்த் தகலாபமு
மனுவர்க்கு மேன்மையுந் தருமமுந் தானமு
மன்புமங் கையரின்பமும்
யுந்திதெளி நியமமுஞ் சாத்திரமு மாகம
புராணமொடு சகலகலையும்
பொய்யாத வுண்மையுங் கீர்த்திப்ர தாபமும்
புகழ்கின்ற தேவர்நிலையும்
விந்தைபுரி மானமுங் குலமரபு நீதியும்
விதரண முதற்சகலமும்
வேளாளர் குவலயபூ காராளர் தங்களுடை
மேழியின் பெருமையன்றே
மந்தர மெனும்புய சவுந்தர முகுந்தனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 5

புருஷராய்ப் பிறந்தோர் பெறுபயன்

புருஷராய்ச் சநநம தெடுத்தபேர் மெய்ஞ்ஞான
போதத்தை யறிவதொன்று
பூமியொடு மிக்கதன வானுவ தொன்றலது
பூவலஞ் செய்வதொன்று
தருமவா ஞென்றுமிகு கீர்த்திமா ஞென்றுநற்
சற்குண விவேகியொன்று
சகலரும் புகழ்கின்ற வித்துவா ஞென்றுரண
சங்ராம வீரனென்று
கருணசே ரிந்தவகை யில்லாத மனிதரைக்
காசினியி லேன்படைத்தாய்
கருதுதா யுதரமும் பார்க்கின்ற பேர்களிரு
கண்களுஞ் செய்தவினையோ
மருவுலா வியதுளப மாலையணி மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 6

நகரச் சிறப்பு

பரதகீ தப்ரபல வேசியர்க ளாடலும்
பாடலும் பெறுகோயிலும்
பலவாவி மண்டபங் கோட்டையர ணங்களொடு
பலர்மேவு கடைவீதியும்
இரதகச துரகம்ப தாதிசது ரங்கபல
மேற்கின்ற தளகர்த்தனு
மெண்ணமிகு மந்திரிப்ர தானிதா ஞபதிய
ரியலுத்தி யோகசனமும்
விரதமறை யோராதி நாற்குலமு மொன்றென்று
மிக்கசோ டசதானமு
மேலாய்ச் சமீபித்த நதியுமாய் மநுநீதி
வேந்தனும் பெறுபட்டணம்
வரதருறை சீரங்க பட்டண மெனச்சொல்வர்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 7

அரசர்க்குரிய தொழிலாள ரியல்பு

காரியா காரியங் கொற்றவர் தெரிந்திடக்
கண்டுசொல் வோன்மந்திரி
காலமுந் தன்பலமு மெண்ணியிகல் வென்றிடக்
கருதுவோன் றளகர்த்தனும்
சீரிய தனங்களொடு ராச்சியஞ் சகலமும்
திட்டமிடு வோன்ப்ரதானி
செய்யவா சகதாட்டி யவதான வக்கணை
சிறக்குமவ னேராயசன்
சூரியன் றிசைமாறி னுந்தான் றெடுத்தவத்
தொகைகவிடான் கருணீகனுஞ் [தெரி
சொல்வன்மை சபைவன்மை பரராசர் வன்மை
சுமுகனே தானுபதி
மாரியது காத்தருளு மணிமேக வண்ணனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 8

இதனு ளிஃதுளதாமெனல்

அதிகார மதுவந்து சேரிலெவ ருக்குமே
யதிகவல் லமைகளுண்டாம்
ஆடையா பரணங்கள் சேரிலெவ ருக்குமே
யழகுபெறு வளமையுண்டாம்
நிதிமேவு செல்வமது சேரிலெவ ருக்குமே
நிறைகின்ற மேன்மையுண்டாம்
நெஞ்சமகிழ் விதரணஞ் சேரிலெவ ருக்குமே
நிலைபெற்ற கீர்த்தியுண்டாம்
துதிமேவு பத்தியது சேரிலெவ ருக்குமே
தோன்றவரு தெய்வமுண்டாஞ்
சுகமிக்க பருவமது சேரிலெவ ருக்குமே
துய்யமண வாசையுண்டாம்
மதிசே ரிலங்குமுத மலரா திருக்குமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 9

அரசரிடத்துப் பெறத்தகும் வரிசைகள்

சுற்றமொடு தானுநம் பினபேரு மின்பமாய்ச்
சுகமுறிற் புரவியமையுந்
துய்யதரு மங்களொடு கீர்த்திப்ர தாபந்
துலங்கினுல் சிவிகையமையும்
கொற்றவர்கண் மெச்சவே பரராசர் கெடிவெற்றி
கொண்டுவரி லாஜெயமையுங்
குறையொன்றி லாமனிறை புகழ்பெற்ற வீரர்முன்
கூறுங்கை வாளுமமையும்
உற்றவகை யிவையெலாம் வேந்தர்சன் மானமுட
லுதவாம லேபெற்றிடி
லுறைகொண்ட நாடகந் தன்னில்வரு கோலமுட
னூர்வலஞ் செய்கோலமும்
மற்றவர்கள் கோலமுஞ் சரியென்று சொல்வர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 10

பிதுர்வாக்கிய பரிபாலன முதலியவற்றுல் வருநன்மை

தந்தைதாய் வாக்யபரி பாலனம் புரிவதுந்
தான்சொன்ன படிசெய்வதுந்
தவருத விரதமும் பொய்யாத வசனமும்
தானமுங் கனபொறுமையும்
சிந்தைமகிழ் மரபினோர் செய்தொழில் முடிப்பதுந்
தேவதா விசுவாசமுஞ்
செய்தபேர் பரசுரா மன்கவச குண்டலன்
செயராம ஞெடுவீடுமன்
அந்தமிகு சொல்லரிச் சந்திரன் மாபலி
யடறரும ஞெடுபகிரத
னருள்பிரக லாதனிவர் போற்பெருங் கீர்த்தியொடு
மவனிமிசை நீடுவாழ்வார்
வந்தமரர் போற்றவளர் சேஷகிரி வாசனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 11

சூது முதலியவற்றுல் வருந்தீமை

சூதுபெறு வித்தையும் பரதார மோகமுஞ்
சோதரன் றனையிகழ்வதுந்
துலங்காத புத்தியு மடங்காத வார்த்தையுஞ்
சொல்லிச்செ யாததிறமும்
தீதுபெறு வஞ்சமு மதங்களும் பிறருடைய
திரவியந் தனிலாசையுஞ்
சிந்தையக மெனுமகங் காரமும் பெற்றபேர்
சீர்நளன் கீசகன்றுன்
மீதுபொரு வாலிசக ரன்குமரன் சிசுபாலன்
வென்றியுத் தரன்வில்வலன்
விந்தைபெறு துரியோத னன்சனகன் முன்பெற்ற
விதமுற் றிருப்பர்கண்டாய்
வாதுபெறு தானவரை மோதுமொரு திகிரியாய்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 12

சாதி முதலானவைகளின் குணமே சிறந்ததெனல்

தடவரை யதன்மீது விஷாயினுஞ் சோளமது
சன்னசம் பாவாகுமோ
சந்ததமும் வாடா திருந்தாலு மெட்டிமலர்
சாதிமல் லிகையாகுமோ
கடலெலா நிறைவெள்ள மாயினுஞ் சுவைபெற்ற
காவிரியி னூற்றுகுமோ
காகங்கள் கோடிதொனி செய்தாலு மொருசிறு
கருங்குயிற் ருெனியாகுமோ
படர்கின்ற பேய்ச்சுரை சொரிந்தபழ முந்திரிப்
பழமதற் கிணையாகுமோ
பகர்கின்ற சாதியுங் கனவயது மேன்மையும்
பலகூட்ட முந்தேகமார்
வடிவதிக மன்றுகுண மேயதிக மென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 13

செல்வத்தால் வரு முயர்வு

செல்வமது சேரிலோ வேங்குபேர் வேங்கனுந்
திரளாகில் வேங்கடனுமாஞ்
செயல்கொண்ட வேங்கடா சலனுமா மையராந்
திரளாய ரவர்களாகும்
நல்வரிசை கொடுதான டத்திடுங் காரிய
நயந்ததூ தாகுமப்பா
னல்லோலை கிள்ளாக்கொ டொப்பமே லொருவச
நவிலுமுன் கப்பமிடுவார் [ன
சொல்வன்மை வாவென்ற பேர்வாரு மென்பார்
சுவாமியாந் தேவரீராந்
துதிபெற்ற தேவரீ ரவர்களாங் காணுமுன்
ருெழுதெழுந் தருளுமென்பார்
வல்விதம் பெறுபரம லோபியர்கண் மிண்டனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 14

வறுமையால் வரு மிழிவு

துதிக்கின்ற மனைவியுங் குறைசொல்வ டந்தைதாய்
சோகமுற வசைகூறுவார்
துன்பமொடு மனமெலியு மேனிவேற் றுருவமாந்
தொலையாத கவலைவளரும்
உதிக்கின்ற புத்தியு மழுங்கிடுங் கல்விபோ
முதரத்தி லதிகபசியா [சொன்ன
முறவின்முறை யாருமொரு வார்த்தைசொல் லார்
வுத்தரமு மொருவர்கேளார்
விதிக்கின்ற வுலகத்தி லெல்லாரு மிகழுவார்
மிடிவந்து சேர்ந்ததென்ருன்
மேன்மையே தறிவேது குலமேது நலமேது
வித்தையே தெவரறிவர்காண்
மதிக்கின்ற வுன்பதம் போற்றிலவை சேருமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 15

உடனே கண்டிக்கப்படுபவர்கள்

முடிகொண்ட கொலையாளர் களவினேர் சாதிநெறி
முறைமைவழு கின்றதீயோர்
மூர்க்கமுறு பகையாளர் வெகுசன விரோதியர்கண்
மொழிமாறு கோளுரைப்போர்
மிடிகொண்ட பேரைக் கெடுத்துளோர் கற்புடைய
மெல்லியரை மேவுமயலோர்
விசுவாச காதகஞ் செய்குவோர் துஷ்டமா
மிருகங்கண் மிக்கபிணிகள்
கடிகொண்ட விஷமுடன் செய்கனல் லென்னவே
கருதுபதின் மூன்றுவகையும்
கண்டவுட னேபின்னை யெண்ணுது கண்டித்தல்
கருணைமனு நீதிகண்டாய்
வடிகொண்ட தெள்ளமுத மனையகுண சீலனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 16

பொறுத்துக் கண்டிக்கப்படுபவர்கள்

கண்டுநிரு பந்தஜனத் தள்ளுவோர் குருசுவாமி
காரியக் குறைசெய்குவோர்
காணு விடத்திற் பழித்துளோர் வஞ்சகங்
கருதுவோர் பொய்யுரைப்போர்
சண்டைகொடு தந்தைதாய் சுற்றமுட னனுதினந்
தவிராத கலகமிடுவோர்
தம்முடைய வலிமையா லெளியோர் வழக்கினைத்
தள்ளிய மதங்களுடையோர்
அண்டிவரு துஷ்டரொடு கூடிவினை செய்குவோ
ராகுமிவ ரெண்மர்தமையு
மாறுபோன் மூன்றுபிழை கண்டபின் கண்டிப்ப
தரசர்மனு நீதிகண்டாய்
வண்டுலவு கின்றமலர் தண்டுளப மார்பனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 17

என்றும் கண்டிக்கப்படாதவர்கள்

தூதாகி வந்தபேர் மிக்கதா ளுபதியர்
துதிபெற்ற தந்தைதாயர்
சொல்லுமா சாரியர் புரோகிதர் புராணிகர்
சுகந்தந்த போகமடவார்
வேதாக மங்கற்ற வைதிகர் தபோதனர்கள்
விகடப்ர சங்கமிடுவோர்
வித்தையா லுயர்கின்ற கவிராஜர் சுத்தரண
வீரர்மர பினிலுயர்ந்தோர்
தீதான வெம்பிணி யடைந்துளோர் வறுமையோர்
சிறுவரொடு தனநம்பினோர்
செய்யுமிவர் பதினெண்மர் மதியாத குற்றங்கள்
செயினும் பொறுப்பதல்லால்
வாதாடி யெதிர்செய்கை மன்னர்நெறி யன்றுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 18

இவர் இதனுல் வெல்வரெனல்

வேந்தருட னேவேந்தர் வாதுவரி லோகெடிகொள்
வெற்றிகொண் டேசெயிப்பார்
வீரருட னேவீரர் வாதுவரி லாயுத
விதத்தினு லேசெயிப்பார்
போந்திடு நியோகியர்கள் வார்த்தையுசி தத்தாற்
பொருந்தவே வாதுவெல்வார்
புல்லர்க்கு வாதுவரின் மரபெலாம் வசைசொலிப்
பொதுவிலக் காற்செயிப்பார்
சாந்தமணி வேசியர்கள் வாதுவந் தாற்பரத
சங்கீத மொடுசெயிப்பார்
சரசகவி ராசர்பிர சங்கத்தி னுல்வாது
தன்னேச் செயிப்பர்கண்டாய்
மாந்தளிரை நிகர்மேனி ராதையதி மோகனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 19

இக்குற்றத்தா லிது பயன்படாதெனல்

செயல்கொண்ட மானமது பங்கமா னுற்றிரு
செழித்தென்ன மாறிலென்ன
செய்யகுண வின்பரச மில்லாத மங்கையைச்
சேர்ந்தென்ன நீங்கிலென்ன
இயல்கொண்ட கீர்த்திமரி யாதையில் லார்களி
யிகழ்ந்தென்ன புகழ்ந்துமென்ன
விடருற்ற போதுதவி செய்யாத பேர்நட்
பிருந்தென்ன போயுமென்ன
கயல்கொண்ட விழியினுள் பேரிளம் பெண்கொங்கை
காட்டிலென் மூடிலென்ன
கருணைகொண் டொருவருக் குரையாதபோர்வித்தை
கற்றென்ன மறக்கிலென்ன
வயல்கொண்ட பயிர்மேனி புயல்கொண்ட களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 20

இவையெல்லா மளவுபடினும் ஆசையளவுபடாதெனல்

பொங்குநதி மண்ணுமா காயத்தி னெல்லையும்
பொழியமழை யின்றிவிலையும்
புடவிமிசை வருசனமு மடவிமிசை வளர்மரமும்
பொருப்பின்மிசை யுற்றசிலையும்
திங்களுட னுற்றதா ரகைகணமு முன்பாத
சேவைசெய் வோர்பெருமையுந்
தெரிவையர்கண் மனமுமுனை நினையாத பலமூடர்
சென்மமும் கட்லாழமும்
அங்கசன் கணைபுரியு மோகமுங் கவிராச
ரருள்பெற்ற புத்திநலமு
மளவுகண் டாலுமோ மனிதருறு மாசைதனை
யளவிடக் கூடாதுகாண்
மங்கைமிதி லாபுரி மடந்தைமகிழ் நேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 21

இன்னார்க்கு இது வில்லையெனல்

காதன்மிகு காமுகர் தமக்குமுறை யிலைவஞ்
சகர்க்குமரி யாதையில்லை
கட்டுண்ட கள்வருக் குறவின்முறை யாரில்லை
கசடர்க்கு ஞானமில்லை
வேதமறி பூசுரர் தமக்கருள்செ யாரிலை
விரோதிக்கு நேயரில்லை
மெய்ஞ்ஞானி யர்க்குவரு சாதிகுல மொன்றில்லை
வீரர்க்கு மனபயமிலை
போதமிகு யோகிக்கு வினைசெய்கு வாரில்லை
பொய்யர்முன் சாட்சியில்லை
புலவர்க்கு நேயமில் லாரில்லை செல்வரைப்
போற்றிலா ரொருவரில்லை
மாதரெழில் கண்டுமன மகிழாத பேரில்லை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 22

இது இவ்வாருயின் இதுவாமெனல்

எழுதினது சொல்வதே ராயரொப் பந்தனக்
கிசையுமவ ளேரம்பையா
மிடர்வேளை யுதவுமவ னேகன்னன் வழிநடைக்
கேற்றதே யுற்றவசுவம்
பழகிமன மறியுமவ னேயூகி மந்திரிநற்
பயநீக்கி னென்றந்தையாம்
பசியிற் கிடைத்ததே யமுதமாந் துயிலிநேர்ப்
பட்டதே புஷ்பசயனம்
நிழறந்து காத்ததே கற்பகந் தாகத்தி
னீர்தந்த தேகங்கையாம்
நிறைபிணி தவிர்த்ததே சஞ்சீவி தன்மட்டு
நீச்சுநீ ரேகடலதாம்
மழைமுகி லெழுந்தனைய மெய்யனே துய்யனே
மணவாள நாராயணன்
மன திலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 23

இவர்க்கு இது தெய்வமெனல்

தீதுபுரி லோபியர் தமக்குப் பணங்களே
தெய்வமாங் காமுகர்க்குத்
தெரிவையர்க டெய்வமாந் துஷ்டருக் கென்னிலோ
தீமையே தெய்வமாகும்
நீதியுடை யோர்க்குப் பயந்தீர்த் திரக்ஷித்த
நேயரே தெய்வமாகு
நீங்காத் தரித்திரர் தமக்குக் கொடுத்தபேர்
நித்தமுந் துதிதெய்வமாம்
சாதியனை வர்க்குமறை யோர்தெய்வ மம்புவி
தனக்கரச னேதெய்வமாம்
சகலர்க்கு மாசாரி யன்றெய்வ நாரியர்
தமக்நாநா தன்றெய்வமாம்
மாதவம் புரிஞானி யர்க்குநீ தெய்வமா
மணவாள நாராயணன்
மன திலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 24

இது உண்டாயினும் இது இல்லாவிடிற் பயனில்லை யெனல்

எத்தனை பொருட்சுவை யிருக்கினும் பக்திரச
மில்லாத கவிகளென்ன
வெண்கோடி சம்பளந் தருகினுஞ் சன்மான
மில்லாத் சேவகமென்ன
சித்ராதி லீலைபல செய்யினு மிதழுண்டு
சேராத சுகமதென்ன
செம்பொன்மிகு செல்வமுண் டாயினும் பயிர்கொ
செயலிலா வளமையென்ன [ண்ட
வித்தையுள வெல்லாம் படிக்கினுங் குணவினய
மேவாத பெருமையென்ன
மெய்த்துளசி யில்லாத நந்தவன மெனவே
விளங்குமென் பார்கள் கண்டாய்
மத்தகச ராசன்மகிழ் விசயநர சிங்கமே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 25

இது இச்சிறப்படையினும் பயனில்லை யெனல்

காட்டிலிண் டஞ்செடி தழைக்கிலென் காஞ்சிரங்
கனியது சிவக்கிலென்ன
கரைநாண லெல்லா மலர்ந்தென்ன காகங்
கழுத்திடை வெளுக்கிலென்ன
ஆட்டின் கழுத்திலதர் நீண்டென்ன நீர்ப்பாசி
யதுபச்சை யாகிலென்ன
அற்பருக் கதிகாரம் வந்தென்ன பேடிகை
யாயுத மிருந்துமென்ன
நீட்டமொடு கரடிக்கு மயிர்வளர்ந் தாலென்ன
நீதியறி யாதமூடர்
நிறைசெல்வ ராயென்ன ஞானமில் லாக்கல்வி
நெறிபோ லிருக்குமென்பார்
வாட்டடங் கண்ணிபுனை கண்ணிமகிழ் கண்ணனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 26

கலியுக தோஷம்

அம்புவியின் மிக்கமெய்ஞ் ஞானியைக் கண்டாலும்
அதுவுமொரு வேஷமென்பார்
ஆகம புராணமது நூல்விரும் பார்கள்பரி
யாசகதை யேமெச்சுவார்
கம்பமிசை யொருகோடி கரணமிட் டாலுமது
கண்கட்டு வித்தையென்பார்
கற்பனை யலங்கார மாக்கவிகள் பாடினுங்
கற்றவர்க் கெளியவென்பார்
நம்பிவிசு வாசமொடு துதிசெய்யி னுங்கள்ள
ஞானமென் பார்களவைபோ
னயந்தகலி யுகமகிமை நின்னையுஞ் சிலபேர்
நவின்றுகுறை சொல்வர்கண்டாய்
வம்பவிழ் மலர்ச்சோலை மலையலங் காரனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 27

அரசரது நன்றியறியாமை

அரசரைக் கண்டுபின் காரியக் காரருக்
கதிகபரி தானமுதவி
யதிகார மொன்றினைப் பார்ப்பவ ரிடத்தினு
மதுகொட் டிரட்டியீந்தும்
கருதுநிலு வைப்பணந் தவணைப் பணங்கண்முன்
கடன்வாங்கி யேகொடுத்துங்
கணக்கர்செல வெழுதார்க ணுட்டார்க டூறுவர்
கடன்காரர் தாமறிப்பார்
விருதுசீட் டுக்காரர் வைவார்கள் கொல்லரோ
வெயிலிடை நிறுத்திவைப்பார்
விதமாகு மவரவர்க ளெல்லாஞ் சபாசென்ன
மெய்ப்பாய் நடந்துகொளினும்
வரிசைபெறு துரைகளவ ரருமைசற் றறிவரோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 28

கவிவாண ரருமை யறிவா ரில்லாமை

கற்பனை யலங்கார மாக்கோவை பாடினுங்
கனவரிசை யொருபச்சடங்
கலம்பகங் கூறிலொரு துப்பட்டி பிள்ளைக்
கவிக்கென்னி லொருசோமனும்
நற்பொரு ளுலாவென்னி லுருமாலை மடலுக்கு
நாணயம தாயொருபணம்
நல்வண்ண மென்னிலொரு சாப்பாடு மாலையெனி
னன்மைதரு தாம்பூலமாம்
அற்புதம் பெறுகவிக ளென்னிற் பளாபளா
அதிகவெகு மானமாகு
மப்படியு மாயிரத் தொருவரென் ருலெங்க
ளருமையெவ ரறிவர்கண் டாய்
மற்பொருத மல்லரொடு முற்பொருத வீரனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 29

இதனை யிவரன்றி யிவ ரறியாரெனல்

கீர்த்தனைக ளின்மகிமை பாகவத ரல்லாற்
கிரிக்குறவர் தாமறிவரோ
கீர்த்திப்ர தாபமது விதரணிக ரல்லாது
கெட்டலோ பியரறிவரோ
சேர்த்தமநு விக்யான நீதிமன் னவரலாற்
சிலேவேடர் தாமறிவரோ
செய்யபக வற்கீதை மெய்ஞ்ஞானி யல்லாது
சென்மநீ சர்களறிவரோ
கோத்தமணி மாலையை மங்கையர்க ளல்லாற்
குரங்குகண் டாலறியுமோ
கொக்கோக மகிமைதனை நாகரிக ரல்லாது
கூறுபே டிகளறிவரோ
வார்த்தையுசி தத்தைமந் த்ரிகளன்றி யறிவரோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 30

பயனில் சொல்லி னிழிவு

அகமென்று தன்னைப் புகழ்ந்தபே யுந்தந்தை
யன்னையர் வருத்தமுறவே
யயலார் தமக்குதவு பேயுமட வார்புத்தி
யனுதினங் கேட்ட பேயும்
சுகமென்று பொதுமாத ரைக்கூடி மனைவியைத்
துயரமே செய்தபேயுந்
துணிந்துரண களமுற்று முறிகின்ற பேயுமுன்
சொன்னதிலை யென்றபேயும்
செகமன்ன ராமென்ற தலைவென்ற பேயுமியல்
செய்ந்நன்றி கொன்றபேயுந்
திரளான சபையினில் பயனிலா வார்த்தையுரை
செய்கின்ற பேய்க்குநிகரே
மகமென்று சோசிக னழைக்கமகிழ் தூயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 31

எல்லை கடத்தலின் வருமிழிவு

அரசர்மே லாணைதனை யெண்ணுத குடிகளு
மாதாய மிஞ்சு செலவு
மன்புடைய பேர்புத்தி கேளாத கோபமு
மவைக்கடங் காதநாவும்
சரசவகை மிஞ்சவே வந்தபரி காசமுந்
தனமிஞ்சு தொழிலாளருந்
தயிரியந் தனமிஞ்சு கவலையுஞ் சாக்ஷியோர்
தடைமிஞ்சு முறைவழங்கும்
கரசரண வவயவந் தனமிஞ்சு தேகமுங்
கவியின்மிஞ் சியவெழுத்துங்
கருதுமுரை கேளாத மனையாட்டி புணர்நாய
கன்புகழை யொக்குமென்பார்
வரசரச கவிராஜர் புகழ்வேத குலதிலக
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 32

இவர்க்கு அமுதம் இவ்விடத்தெனல்

அண்டருக் கமுதமது சொர்க்கத்தில் வேதியர்க்
கமுதமது சொல்லுரையிலே
யானகவி ராஜருக் கமுதமணி நாவிலே
யாவினுக் கமுத முகிலயில்
பண்டிதர்க் கமுதமது கையிலே விதரணிகர்
பங்கிலமு தங்கண்ணிலே
பாகவத ருக்கமுது காதிலே பரிவுடைய
பாங்கருக் கமுதமன தில்
ஓண்டொடிய ருக்கமுத மாமிய மெனவே
யுகந்திடுந் தேகமெல்லா
முற்றபெரி யோர்தமக் கமுதங் குணத்திலே
யுணர்வுடைய பேர்க்கமுதமோ
மண்டல மளந்தவுன் பாதத்தி லென்பர்காண்
மணவாள நாராயணன்
மன திலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 33

இவர்க்கு விஷம் இவ்விடத்தெனல்

திருடர்க்கு விடமெலாங் கையிலே காமமிகு
தெரிவைக்கு விடமுகிலயிலே
தீயபொய் யர்க்குவிட நாவிலே மதமுடன்
றிரிவோர்க்கு விடநிதியிலே
கருதரிய கோளர்க்கு விடமுதடு தன்னிலே
காமுகர் விடங்கண்ணிலே
கட்செவி விடங்கள்பல் லடியிலே தேட்கெனிற்
கனவிடங் கடைவாலிலே
அரியதுஷ் டர்க்கென்னி லெட்டிமர மென்னவே
யங்கமெல் லாம்விடமதா
மடுத்துக் கெடுத்திடும் பகைவர்விட மனதிலே
யம்பொன்விலை மாதருக்கு
மருவுவிட மல்குலிற் றெரியவச மன்றுகாண்
மணவாள நாராயணன்
மன திலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 34

இவர்க்குப் புண்ணிய மிதுவெனல்

உன்னுடைய பதசேவை கண்டுபணி கின்றதே
யுடல்செய்த புண்ணியமதாம்
உரைகொண்ட கீதையின் சாரங்கள் கேட்பதே
யுற்றசெவி யின்புண்ணியம்
தன்னுடைய புத்திர ரீனந்த சோறுண்பதே
சாற்றுநா வின்புண்ணியந்
தத்துவ முணர்ந்தபெரி யோர்தமைக் காண்பதே
சார்ந்தவிழி யின்புண்ணியம்
பன்னுமிர வலர்கேட்கு முன்னங் கொடுப்பதே
பாணியது செய்புண்ணியம்
பதிவிரத மங்கைகுண மிக்கபுரு டற்குப்
பலிப்பதே வெதுபுண்ணியம்
மன்னுமிவை முன்செய்த புண்ணியம தென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 35

இவர்க்குப் பாவம் இதுவெனல்

திருந்துகற் பனையிலாப் புன்கவிகள் கேட்பதே
செவிசெய்த பாவமாகுஞ்
செயலருமை யறியாத பேர்கண்முன் சேவகந்
திரிதல்கால் செய்த பாவம்
பரிந்த வுபசாரமா தரவிலார் மனையுணவு
பருகனு வின்பாவமாம்
பாவனை லயஞ்சுதி நயமிலாப் பரதமது
பார்த்தல்விழி செய்தபாவம்
தருந்தமிழை யறியாத பேர்களிட மேற்கின்ற
தகைமைகை செய்தபாவங்
தன்பெயர் விளக்காத பிள்ளையைப் பெறுவதே
தாய்வயிறு செய்தபாவம்
வருந்துயர முன்செய்த பாவவினை யென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 36

இவர்க்கிவை யுளவேனு மிவை வேண்டுமெனல்

அதிவீர னென்னிலுந் தந்தீரவு பாயமுட
னடையலரை வெல்லல்வேண்டும்
ஆயிரம் வித்தைகற் ருலுமுல கந்தனி
லடக்கம திருத்தல்வேண்டும்
நதிகோடி நீந்திவந் தாலுமோ டந்தனை
நயந்துகரை சேரல்வேண்டும்
ஞானதத் துவமுணர்ந் தாலுமுல கத்தினி
னடக்கைதனை யறிதல்வேண்டும்
துதிசேர் குபேரனென் ருலுமொரு லாபமுறு
தொழிலுட னிருத்தல்வேண்டும்
துய்யவல் லமையுடைய னெனினுமொரு சார்பி
றுரைகளைக் காணல்வேண்டும் [ஞற்
மதியூகி யென்னிலும் பெரியர்சொற் கொள்ல்வேண்
மணவாள நாராயணன் [டும்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 37

இவர்க்கு இவை வேண்டாவெனல்

பெற்றதாய் தந்தைதன் சுற்றமே முதலான
பெரியோரை முனிதல்வேண்டா
பின்னென்று முன்னென்று பேசியே யவமான
பேர்கொண்டு திரிதல்வேண்டா
உற்றவர்கள் போலவுட் பகையான வஞ்சகரை
யொருநாளு நம்பல்வேண்டா
ஒருவருக் கிச்சையாய்ப் பொய்சொல்லி பின்சபையி
லூமைபோ னிற்றல்வேண்டா
சற்றுமே பொறுமை யில்லாதவர்கள் சண்டையிற்
ருன்போய் விலக்கல்வேண்டா
தைரியந் தனில்விக்ர மாதித்த னென்னிலுந்
தன்னையே புகழல்வேண்டா
மற்ருென்று மெண்ணுது செய்யல்வேண்டாவென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 38

இவர்க்கு இவை பாவமெனல்

அரசர்வெகு மானஞ்செய் போதுதடை வருகிலோ
வன்றுவிதி பாவமாகு
மானபெரி யோர்பழமை யாய்வந்த நேயமதை
யகல்வதே தத்தயோகம்
தருகின்ற காரியங் கைகூடி யேபின்பு
தவறிலவை கிருதியாகுஞ்
சற்குண மடைந்துளோ ருத்தமரை முனிவதே
சந்திராஷ் டமமாகுமாம்
கருதிய விருந்தினுட னுண்ணுத தனியுணவு
காணுமது வேதுர்த்தினங்
கலகமே செய்கின்ற வீணரைக் காண்பதே
கன்வர்ஜ வேளைகண்டாய்
மரிசிசுத னெனவந்த காசிபகு லோத்துங்க
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 39

இவர் இத் தீக்கோளாவ ரெனல்

துரைமக்க ளைக்கண்டு தங்கள்கா ரியமெலாஞ்
சொல்லிச் செய் கின்றவேளை
சொல்லெலாம் பொய்யெனவு மிவர்சாட்சி மெய்யெ
தோன்றுவோ னவலமாகும் [னவுந்
திரமுற்ற கல்வியொடு குணமிக்க கவிராஜர்
திரளான ராஜசபையில்
செய்யும்ப்ர சங்கத்தி லொருபழுது சொல்லுவோன்
சென்மத்தி லங்காரகன்
அருள்பெற்ற விதரணிக ரைக்காத்த னேகநா
ளனுசரித் தியல்பாகியே
யவர்கொடுக் கும்போதி லிடர்சொல்லி விலக்குவோ
னஷ்டமச் சனியனுகும்
மருவற் றலர்ந்தவம் புவிமணியு மார்பனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 40

இது இவ்வாருயிர் இச்சிறப்பிற்ரு மெனல்

தரணிமன் னவர்சபையின் மெய்க்கின்ற வரிசையே
தனதுபட் டாபிஷேகஞ்
சபாசென்று மெச்சிக் கொடுக்குமதி காரமே
சாம்ப்பிராச்ய போகமாகும்
பரிவுட னினைத்தபடி காரியங் கூடிலது
பதினென்றி னிற்குருவதாம்
பந்துஜன வர்க்கங்க ளுடனுணவு செய்கின்ற
பாக்யமே கலியாணமாம்
அரிவைகுண ரஞ்சிதம தாய்வந்து சேருநா
ளன்றமிர்த சித்தயோகம்
அன்பான பெரியோர்க டரிசனஞ் செய்வதே
யானசுப தினமென்பர்காண்
மரகதம் பூவைமுகி னீலமணி வண்ணனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 41

மனிதர்களிலே துஷ்டரும் ராக்ஷதரும் பூதரும் இவரெனல்

புண்ணியம் பாவமறி யார்மாத வஞ்செயார்
புகல்கல்வி நெறியுமறியார்
புனிதரைப் போற்றுர்கள் பரதிரவி யங்கொள்வார்
புன்மைசேர் துஷ்டராவார்
எண்ணியொரு காரியஞ் செய்பவர்கள் வலுமையா
லெவருக்கு மிடர் புரிகுவார்
இரக்கமில் லார்பொய் யுரைப்பர்வஞ் சிப்பவர்க
ளிவர்கள்ராட் சதர்களாவார்
நண்ணியெளி யோர்தமை வெருட்டுவார் வலியவரை
நாடிவஞ் சனையில்வெல்வார்
நாரியர்க ளெவரையுங் கூடுவார் மிகவுண்பர்
நாணமறியார் பூதர்காண்
மண்ணிலொரு மூவடி யிரந்தநெடு மாயனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 42

மூர்க்கர் முதலியோ ரியல்பு

மெய்யான புத்திபல சொல்லினுந் தன்புத்தி
மேலாகி ஞேன்மூர்க்கனும்
மிக்கபெரி யோர்கூடத் தாழ்வுசெய் தற்பர்தமை
மேன்மைசெய் வோன்மூடனும்
செய்யாத காரியம தெனினும் பிடித்தபிடி
செய்யுமவ னேதுஷ்டனும்
திரளான நன்றிபல செய்தவர்க் கேயிடர்கள்
செய்பவன் மகாபாதகன்
ஐயா வெனப்பணிந் தாலுமே கோபம
தடங்காத வன்குரூரன்
அனுதினந் தீமைபுரி வோனெந்த நாளிலு
மடங்காத சண்டாளனும்
மையார் தடஞ்சோலை திகழ்கின்ற களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 43

இப்படிப்பட்டவன் இவ்வங்கவீன னவனெனல்

காதவழி யானநதி மாதலந் துதியாத
கயவனே யீனமுடவன்
கைதந்த வோலைவா சிக்கமாட் டாதவொரு
கசடனே மிக்ககுருடன்
தீதுபெறு தன்களவு கண்டவர்க் குத்தரஞ்
செப்பிலா தவனூமையாம்
செயலான தன்மகதை யொன்றெனினு மறியாத
செய்கையுடை யோன்செவிடனும்
ஏதெனினு மொருபேர் விளங்காத தேகம
தெடுக்குமவ னேகூபி
யென்றெனினு முன்பாத தரிசனஞ் செய்யாத
வீனனே நீசனென்பார்
மாதுசத் தியபாமை தழுவுமணி மார்பனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 44

உலோபியர் வகை

தசைபெற்ற வேதவே தியர்தமக் குதவா
னவின்றலோ பர்க்குநேயன்
நாற்கவி மொழிந்தகவி ராசர்க்கு மொன்றேனு
நல்கிடான் கொஞ்சலோபி
இசைபெற்ற கீதமுறை செய்பாட கர்க்குமொன்
றீகிலான் பாதிலோபி
யியலான பட்டுரா சர்க்குமொன் றுதவிலா
னேற்றமுக் காலுலோபி
திசைபெற்ற விகடகவி ராசர்க்கு முதவிலான்
றீயமுழு லோபிகண்டாய்
செய்மாத ரபிநயங் கண்டுமொன் றுதவிலான்
சேர்பரம லோபிகண்டாய்
வசைபெற்ற லோபமா தங்ககண் ஊரவன்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 45

உலோபியர் வஞ்சப் புகழ்ச்சி

கண்டபகை யாளிமுன் னின்றுபொரு தாமற்
களத்திற் புறங்கொடுப்பார்
கன்னமிடு கள்வருக் காடையும் பணிகளுங்
காணுமே லேகொடுப்பார்
சண்டமா ருதமென்ன வருகின்ற பகைவர்க
டமக்குமஞ் ஞையுங்கொடுப்பார்
சவுக்கிட் டடிக்கின்ற மன்னர்க்கு வீட்டுத்
தனங்களெல் லாங்கொடுப்பார்
அண்டிவரு மெமதூதர் வந்துதான் கேட்குமுன்
னங்குமுறு முயிர்கொடுப்பார்
அவனிமிசை யிப்படிக் கொடுக்கின்ற பேர்கடமை
யதிலோப ரென்பதென்னே?
மண்டலமும் விண்டலமு முண்டகனி வாயனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 46

உலோபியர் குண மாருமை

தேன்கொண்ட துளியொன்றி னுலேழு கடலெலாந்
தித்திக்க வேசெய்யினுஞ்
செய்யபூ மலரினுல் வச்சி ரந்தன்னைச்
சிறக்கவே பொடிசெய்யினும்
கான்கொண்ட மலையெலாங் கைகொண்ட வெண்
கவினுற்ற மெருகுசெயினுங் [ணெயாற்
கயவர்க்கு நீதியும் பேடிக்கு வீரமுங்
கபடர்க்கு மெய்ஞ்ஞானமும்
ஊன்கொண்ட மூடர்க் கிரக்கமுந் தெளிவுற
வுரைத்துநல மேசெய்யினு
மூமைசெவி டன்குருட னின் முத்தமிழ் படிக்கினு
முலோபருக் கீவுவருமோ
வான்கொண்ட தேவர்பொழி மலர்கொண்ட பாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 47

மக்களிற் பதராவா ரிவரெனல்

கோண்டகடன் வட்டியுட னன்றுபோற் குணமாய்க்
கொடுத்துமகி ழாதபதருங்
கூறுபிணை சாட்சிமுறி யுடன்மறித் தாலுங்
கொடாதொளிக் கின்றபதரும்
கண்டவுட னெருகோடி சொல்லிப்பி னென்றெனுங்
கருதிச்செ யாதபதருங்
காணு விடத்தினிற் பழிகூறி யவரையெதிர்
கண்டுபுகழ் கின்றபதரும்
பண்டொருவர் செய்ந்நன்றி தனையே மறந்துபின்
பழிசொல்லு கின்றபதரும்
பரமாத ராசையால் வசைகொண்ட பதரும்
பறந்துமிக வுஞ்சிதறவே
மண்டிவரு சண்டப்ர சண்டமா ருதமான
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 48

இக் குற்றமுடையோர்க்கும் இது செயல்வேண்டு மெனல்

கதித்திடும் பகைவரென் ருலுமா பத்தினிற்
கண்டுதவி செய்யல்வேண்டும்
கல்வியறி யாதசபை யெனினும்ப்ர சங்கங்கள்
கவிராஜர் செய்யல்வேண்டும்
விதித்தமுழு மூடரென் ருலுந்த மைந்தற்கு
வித்தைகற் பித்தல்வேண்டும்
வெஞ்சின மூர்க்கரென் ருலுநல் லோர்கண்டு
மேற்புத்தி சொல்லல்வேண்டும்
அதிர்ஷ்டமிலே யென்னினுஞ் சலியாமல் மிக்கதொழி
லதிலேமு யற்சிவேண்டும்
அசாத்தியம தானகன ரோகமென் ருலுமோ
ரவுஷதம தீவர்கண்டாய்
வதிஷ்டரொடு வான்மீக முனிதுதி சரித்ரனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 49

இதினும் இது மிக்கதெனல்

தினமுந் திரிந்துதனி யாகியே மிக்கபொரு
டேடியே வாழுமதிலுஞ்
செல்வ ரொடு தந்தைதாய் சுற்றமுங் கூடிச்
சிறந்துண்ட கூழதிகமாம்
தனதுமரி யாதையொடு பெருமையறி யாதபேர்
தனமாரி பொழியு மதிலுஞ்
சமமான மேன்மைதெரி கின்றபெரி யோர்தந்த
தாம்பூல மேயதிகமாம்
கனமருவு பலபல மகாவித்தை சிலசில
கருத்தோடு படிக்குமதிலுங்
கருணைபெற வொருவித்தை யாயினுங் குறைவறக்
கற்கின்ற தேயதிகமாம்
மனிதர்சில ரிவையன்றி யவையதிக மென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 50

இதினுமிது வென்றி யெனல்

மிக்கதுடி கண்டுளம் வெருண்டுகலை மானையே
வென்றுசய மாகுமதிலும்
வெஞ்சின மிகுந்துகவ ரும்புலி யுடன்பொருது
மெய்க்கொண்ட வடுவேசயம்
பக்குவமு திர்ந்தபே ரிளமாது கொங்கையிற்
பரிவுடன் சேருமதிலும்
பைம்பொன்பணி மாலைபுனை வாலாதி யூடலிற்
பாததா டனமேசயம்
தக்கதொரு கல்விநெறி யறியாத முழுமூடர்
சந்தோஷ மாகுமதிலும்
தமிழருமை யறிகின்ற பெரியோர் பழித்தநிந்
தனையதே சயமென்பர்காண்
மைக்குவளை செங்குவளை வாசமலர் களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 51

இது இதனை வசப்படுத்துமெனல்

சிந்தைதெளி கல்வியே லோகவசி யம்பத்தி
செய்வதே தெய்வவசியஞ்
செய்யுமரி யாதையே வித்வசன வசியமாஞ்
செல்வமுற வோர்கள் வசியம்
எந்தவித முந்திரள நல்கும்ப ணங்களே
யின்பவிலை மாதர்வசிய
மெப்பொழுது மவர்மன தறிந்துகட் டிக்காத்
திருப்பதே ராஜவசியம்
தந்ததண் டனைகளே துஷ்டஜன வசியமாந்
தானமே கீர்த்திவசியஞ்
சாந்தகுண நயமாய் நடந்திடு மொழுக்கமே
சகலசன வசியமாகும்
மந்திர மெழுத்தெட்டு மேயுனது வசியமா
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கை மணவாளனே
வரதவேங் கடராயனே. 52

இச் செய்கையோர் இச் சிறப்புப்பெயர் கொள்வரெனல்

சரணென்ன நடைந்தவர் தமக்குவரு வினையெலாந்
தாங்குவோன் புருஷமேரு [கின்ற
தன்னுடைய செய்கைபோ லெவரையும் பார்க்
தகைமையோன் தெய்வபுருஷன்
திரணமெனி னும்பிறர் பொருட்காசை யில்லாத
செய்கையோன் புருஷோத்தமன்
தீராத வினைவரினு மற்பரைப் பணியாத
தீரனே புருஷசிங்கம்
பொருவிலாத் தந்தைதா யென்னினுங் கண்டபடி
புகலுவோன் புருஷரத்நம்
போற்றுமவர் மனதிற் குறிப்பறிந்துதவுவோன்
புருஷநா யகமென்பர்காண்
மரபெலா மிப்படிப் புகழ்ந்தகுண சேகரன்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 53

இச் செய்கையோர் இவ்விழிபெயர் பெறுவ ரெனல்

சற்றெனினு மொருகல்வி யறியாத கயவனே
தாங்குமுயிர் கொண்டமரமாந்
தன்புத்தி யன்றிபிறர் புத்தியால் வினைசெயுந்
தகைமையோ னேபதுமையாம்
கொற்றவர்கள் பகையாற் றுரத்துண்டு திரிகுவோன்
கூகையுற வானபக்ஷி
கோபமது தந்தையே யன்றிமற் றுரையுங்
கோபிக்கு மவன்மிருகமாம்
கற்றபெரி யோரையெதிர் பணியாத மூடனே
கைகால் முளைத்தசிலையாம்
கண்டவர்க ளெல்லாம் பழிக்கின்றகோளனே
கனதுஷ்ட ஜெந்துவென்பார்
மற்றிவர்க ணேயமது கனவிலும் காணுத
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 54

கல்விப்பொருட் சிறப்பு

தெள்ளமுத மனையகல் விப்பொருள் படைத்திடிற்
றேசமெல் லாந்துதிக்குஞ்
செயத்தம்ப மானபுகழ் நிலைநிற்கு மிவையெலாஞ்
செம்பொன்மிகு செல்வமதுபோல்
வெள்ளமது கொளுமெனும் பயமில்லை கனலினுல்
வெம்பவரு சலனமில்லை
வேந்தர்கள் பறித்திடக் கூடாது சோதரர்
விரும்பினும் பங்குரூது
கள்ளராற் றிருடவும் முடியாது வரவரக்
கனமலாற் குறைவுரூது
கருணைஞா னந்தழையு மாகையா லுனையிதய
கமலத்தில் வைப்பதெளிதாம்
வள்ளலென வருகின்ற மாடபூ சியாதிபன்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 55

கவிதைச் சிறப்பு

உரைகொண்டு சொல்வரிசை சேர்ந்துபொரு ளின்ப
யோசைபெற் றேமதுரமா [வகை
யுற்றநவ ரசமுடன் கற்பனை யலங்கார
முண்டாகி யேகவுடமாய்
நிரைகொண்ட சீர்தளை விகற்பம் பொருந்திநன்
னீதியாய்க் கடைதுடிப்பாய்
நிறைகின்ற சபைதனி லுதாரணம தாகிநிலை
நின்றபழு தென்றிடாமல்
திரைகொண்ட தண்கடலில் வருமமுத பாகமாய்த்
தேசப்ர சித்தியாகச்
செப்புமொரு கவிகொண்டு குலமெலாம் வந்தடி
செயினுமது நிகராதுகாண் [மை
வரைகொண்டு பொழியுமழை காத்தருளு மையனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 56

தந்தீவினைப் பயன்

திங்களுத யங்கண்டு மலரா திருப்பது
செழுங்கமல முற்றவினை யே
தினகரனை யெதிர்கண்டு முகைகொண்டு வாடுவது
சேதாம்பல் செய்தவினை யே
கொங்குலவு சண்பக சுகந்தமலர் கண்டுமருள்
கொண்டது சுரும்பின்வினை யே
கொண்டன்மழை கண்டுள மெலிந்திட வருந்து
கோகிலஞ் செய்தவினை யே [வது
அங்கணுல கெங்கணு மகிழ்ந்தபெரி யோர்களுக்
கருளா திருந்துவிடினு
மவர்மீது குற்றமது சொல்வரோ சேர்ந்தவ
ரதிர்ஷ்டமென் பார்கள்கண் டாய்
வங்கியந் தருமிசை கனிந்தகனி வாயனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 57

அரசர் கவிவாணர்க்குச் செய்யு முபசாரம்

போசனஞ் சந்தமலர் மாலைதாம் பூலம்
பொருந்துவஸ் திரபூஷணம்
புரவியொடு கவிகையுஞ் சிவிகைகரி வாத்தியம்
பூமிமனை தனதானியம்
தூசுலவு துவசமெனும் வெகுமான சோடசந்
தூதரால் வரவழைத்தல்
தோன்றுமுன் னெழுதல்வந் தருள்கெனத் தழுவுத
றுதித்திட லிருக்கையுதவல்
நேசவெகு மானங்கள் செய்தெழுதல் வழிவிடுத
னிறையங்கி காரமேழாம்
நெறிகொண்ட புவிராசர் கவிராசர் பாற்செய்யு
நீதிமுறை யென்பர்கண் டாய்
வாசவன் பெறுவிசய சூதனெனு நாதனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 58

புல்லர் நல்லோர்குண மறியாரெனல்

சந்தன வனந்தனி லிருந்துமதன் மணம்மதைச்
சற்றுமறி யார்கிராதர்
தரளங் குளிக்குமவ ரதன்மாலை யணியார்கள்
சங்குமணி தன்னையணிவார்
கந்தமலி தாமரை யடுத்துமண் டூகங்
கருஞ்சேறு தானருந்துங்
காமருவு தேமாவின் மிசையிருந் தாலுமோ
காகமது வேம்புநுகரும்
அந்தவகை போலநல் லோர்தமை யடுத்தே
யனேகநாட் பழகிவிடினு
மற்பர்தா மறிகின்ற தறிவதல் லாமன்மற்
றவர்மகிமை யறிவார்களோ
வந்திடு கணந்தன்னி லவர்பெருமை யறிகின்ற
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 59

புல்லரைப் பாடும் புலவர் பயன் பெருமை

நாவினிற் சொல்லுநய முங்கண்டு வஞ்சகரை
நட்பென்று வருநேயரும்
நவமதன னென்னவெழில் கண்டுபே டன்றன்னை
நாடிவரு மடமாதரும்
காவினி லுயர்ச்சியும் பசுமையுங் கண்டிலவு
காத்திருக் கின்றகிளியும்
கானலைக் கண்டுபுன லென்னவே யாசையொடு
கருதியே யேகுமானும்
பூவினிற் பொலிவுமண முங்கண்டு கேதகை
பொருந்துதே னுடுமளியும்
புல்லர்தஞ் செல்வங்கள் கண்டுதுதி செய்திடும்
புலவர்செய லொக்குமென்பார்
மாவினிற் குயில்வேளை வாவெனுங் களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 60

மேலோர் செயல் கீழோர்க்கு ஆகாமை

எந்தவினை செய்தாலு முனிவோர்கண் மாதவ
மிசைந்ததாற் பெருமைபெறுவர்
இகழ்ந்துவசை சொல்லினுங் கவிராசர் வித்தையா
லென்றுமிகு மேன்மைபெறுவார்
சிந்தைமத மாயைஎன்று வழுவினுந் துரைகள்செந்
திருவினுற் புகழ்சிறப்பார்
சீரியர்க ளெப்படிப் புரிந்தாலு மேற்குமது
சிறுமையோர் செய்யவசமோ
தந்தியது நெறிதப்பி யேநடந் தாலுமது
தன்னினமத யானையென்பார்
தானுமப் படிதவறு செய்யிலோ பேயென்று
தள்ளிமுனி வார்கள்கண்டாய்
மந்திசெறி யிடபகிரி தன்னிலுறை வாசனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 61

இது இல்லையாயின் இது விளங்காதெனல்

சந்திர னிலாவிரவு மதுரமில் லாதகவி
தனயரில் லாதசெல்வஞ்
சற்சன ரிலாதவூர் புரவியில் லாதபடை
தளபதி யிலாதசேனை
பைந்தொடி யிலாதமனை பாடலில் லாவோசை
பத்தியில் லாதபூசை
பார்த்திப ரிலாதபட் டணம்யூக மந்திரிகள்
பற்பல ரிலாதவரசு
கந்தமில் லாதமலர் சத்தியமி லாதவாய்
கல்வியில் லாததேகங்
கனவினய மில்லா நியோகிசுசி யில்லாத
கன்மமுப தேசமில்லா
மந்த்ரமிவை வித்வசன மில்லாத சபையென்பர்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 62

சங்கீதச் சிறப்பு

புருவநெரி யாரமன்மணி யெயிறுதோன் முமல்விழி
புரளாம லங்கசேட்டை
புரியாமன் மிகுதலையை யசையாமன் மிடறுதான்
பொருமிவிம் மாமலியல்பாய்ச்
சுருதிலய சுரஞான நீதியொடு வீணையின்
ருெனியினு தப்பிரமமாய்த்
துய்யதந் திரியோசை மிடறேசை யெனவேறு
தோன்றும லின்பநயமாய்த்
தருமதுர வழுதரச மொழுதசர ளிகள்பழுது
சங்கீத வித்தையென்றுல்
சகலர்க்கு மானந்த மாகுமது பாடுமவள்
சரசகுண வஞ்சியெனிலோ
மருவியிதழ் பருகியீண யாமலுயி ருய்யுமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 63

பரதச் சிறப்பு

பரதாள மூஞ்சுருதி யடங்கமிகு தொனிசெயும்
பண்புபெறு வோன்மத்தளி
பலராக கீதமொடு தாளங்கொள் கனவிதம்
பாடுவோ னேபாடகன்
கரதாள மேன்மனமு நடனபா தத்தின்மேற்
கண்ணுமுடை யோனட்டுவன்
கையின்மேல் விழியுமங் கைவிழியி னபினயங்
காட்டுமவ ளேபாத்திரம்
சுரதாள லயமார்க்க மாகுமிங் கிதபதஞ்
சொல்லுமவ ரேபரிசனந்
துதிபெற்ற நடனப்ர சங்கமதில் வேறுதொனி
தொனியாத சபையேசபை
வரதாள முடனரவி னடனமிடு பாதனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 64

நாடகச் சிறப்பு

சுகந்தபரி மளவஸ்த்ர பூஷணு லங்கிருத
சோடுமுஸ் தீபுவேண்டுந்
தோகையர்க ளும்பரி சனங்களுங் கூடியே
சொற்படி நடத்தல்வேண்டும்
மிகுந்தரஸ் தாளிக் கரும்புதேன் முதலான
மேன்மைபோ லின்பரசமாம்
வேஷங்க ளந்தழுஞ் சாதியும் பாஷையும்
வெவ்வே றிருத்தல்வேண்டும்
புகழ்ந்தபத மிங்கிதம் பரிகாச விகடங்கள்
புண்ணிய கதாப்ரசங்கம்
போற்றுபா வாணர்மிகு ராகதா ளஞ்சுருதி
புகல்கின்ற பரதநடனம்
மகிழ்ந்திடுஞ் சபைதேவர் சபையென்று சொல்வர்கா
மணவாள நாராயணன் [ண்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 65

விஞ்ஞை வித்தைச் சிறப்பு

சத்திகண பதிதுர்க்கை சரஸ்வதி மகாகாளி
சாமுண்டி யென்றுவாழ்த்திச்
சங்கமொடு ஜயகண்டி டக்கைகைத் தாளங்கள்
சத்தமொடு மிகமுழங்கச்
சித்ரமிகு மாத்திரைக் கோலின்முறை யங்கமுறை
செப்புமுறை பத்துமுறைகள்
செய்யுமுறை யறுபத்து நாலுகஜ கரணங்கள்
சேர்ந்தகோ கரணமார்க்கம்
வித்தைபுரி ஸ்தம்பனம் தாதியா மஷ்டாங்க
விதமாம யேந்த்ரசாலம்
மிகுமிந்த்ர சாலமுத லானசெப் பிடுவித்தை
மேன்மையவர் தந்த்ரநீதி
மத்தகச ராசதே வேந்த்ரனுந் தெரிவனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 66

பௌராணிகர் முதலியோர் சிறப்பு

ஆருக்கு மானந்த மாகவே பொருள்சொல்லு
மவனே புராணநிபுண
னங்கமொடு கிரகநிலை கணிதமுந் தெரிகுவோ
னருள்புரோ கிதபூசுரன்
சீருற்ற சபையெலா மெச்சப்ர சங்கமுறை
செப்புமவ னேவித்துவான்
செய்யுமந் திரயந்த்ர தந்த்ரமொடு மிக்கசுப
சீலனே மந்த்ரவாதி
ஏருற்ற கல்விகுண மேன்மைபொறை போதங்க
ளிசையுமவ னுசாரிய
னென்றுமவர் சொற்படி நடந்துபய பத்தியொ
டிருக்குமவ னேசீடனு
மாருக்கு வேதாந்த வாசனே ! நேசனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 67

மருத்துவ னியல்பு

திரமான சாஸ்திர முணர்ந்தொரு சிகிச்சையது
செய்திட வழைத்தபின்போய்த்
தேசகா லஞ்சாதி தேகங் குணம்பிணி
சிறக்குமா றுந்தெளிந்து
கரமான நாடிமுத லெட்டுப் பரீட்சையுங்
கண்டுகலி கங்கியாழங்
கனகுளிகை பஸ்பமொடு சிந்துரஞ் சூரணங்
கருதுலே கியதயிலமாம்
பரமான நன்மருந் துங்கொடுத் துசிதமாய்ப்
பத்தியமு மெளிதாகவே
பரிவுபெறு மாரோக்கி யஞ்செய்து திரளாசை
பகராத பண்டிதனெனின்
வரமான தன்வந் திரிக்குநிகர் சொல்வர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 68

ஈனர் வயித்தியனுக்குச் செய்யு முறைமை

சேர்க்கின்ற கனமோக முற்றுல் வயித்தியன்
றெய்வமாங் கேட்டதெல்லாந்
திரள்கொடுப் போமென்பர் தீருமிப் பிணியென்று
செப்பினு லன்றுகுருவாம்
பார்க்கின்ற குளிகையது தந்தபின் தந்தையாம்
பாதிலகு வானபின்பு
பண்பான துணவனு ரோக்கியஞ் செய்தபின்
பார்க்கின்ற மைத்துனனுமாம்
ஏர்க்கின்ற மற்றைநா ணேயன்மறு நாளினி
லிசைந்தகட ஞளிமறுநா
ளெதிர்வரிற் பகையாளி யாகுமிப் படியென்னு
மீனர்சில ருண்டுகண்டாய்
வார்க்கின்ற தானமொடு வளர்கின்ற வள்ளலே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 69

ஆராயாது செய்யு மெழுவ ரடையுங் கதி

நீதிவழு வாவகை வழக்குரைப் போர்களு
நிறைந்ததீ வினைகளெல்லா
நீங்குபரி காரமுறை செய்குவோ ரும்பிணி
நிறுத்தவரு பண்டிதர்களும்
சோதிடஞ் சொல்லும்பு ரோகிதரு முலகந்
துதித்தசெங் கோல்வேந்தருந்
தூய்வுப தேசதே சிகருமவர் சீஷருஞ்
சொல்லுமிவ ரேழுபேரும்
ஆதிமறை நூலிலுரை செய்தவித மாராய்ந்
தறிந்துதெளி யாதுசெயிலோ
வடைக்கலப் பொருளைக் கவர்ந்திடு பேரிலு
மகோரநர கடைவர்கண்டாய்
மாதிர நெடுங்கடல் வளர்ந்தநெடு மாயனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 70

நித்தியகருமச் சிறப்பு

கருணைநதி மூழ்கியே சந்திவந் தனமுடன்
கருதஜப தபவேமமுங்
கடவுளோர் பூசையுஞ் செய்து வேதாகமக்
கல்வியது முறைபடித்துத்
தருமத் தியானநற் கருமமா நீதியொடு
தந்தைதாய் புத்திரருடன்
ருணுணவு செய்துரா மாயணம் போற்றியே
சந்தியொடு கருமநண்ணி
பரிவுடன் நின்றிருக் கோயில்வல மாகிப்
பணிந்துபத சேவைசெய்து
பண்பான சந்த்ரோ தயத்தின்மல ரணிமீது
பாரியுட னேமகிழ்ந்து
மருவியே வாழுமில் வாழ்க்கையே வாழ்வுகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 71

குடிவாழ்க்கைச் சிறப்பு

மிக்கதெய் வத்தலமு ஞானகுரு பீடமும்
விளங்குமா நதியுமறையோர்
மேவிய கிராமமும் பூமிநல முந்தனமு
மேலரசு முடையநாட்டில்
மூக்கனி தருஞ்சோலை நீர்வளங் குடிவள
முயங்குபயிர் வளமுளதாய்
மொழிந்தநாற் குலமுஞ்செ ழிப்பதாய்த் தேர்வீதி
முதலாய் விளங்குபூரில்
தக்கதொரு வீதியொரு பானடு விசாலமாய்ச்
சார்ந்தசிங் காரமணியிற்
தனதானி யங்கறவை முதலான செல்வந்
தழைத்தன்ன தானமுதவி
மச்சகண மக்களொடு வாழ்வதே வாழ்வுகாண்
மணவாள நாராயணன்
பனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 72

மருத்துவர் செல்லத்தகா வீடங்கள்

தீராத ரோகமுடை யோரிடமு முண்மையது
செப்பாத பொய்யரிடமுஞ்
சீரான வொருவர்பண் டிதமின்றி வெகுவிதஞ்
செய்துகொள் வோர்களிடமும்
ஏராத கோபமுறு மூர்க்கமன் னவரிடமு
மேந்திழையை மனதுபிரியா
வின்பமா மதிவிரக மானகா முகரிடமு
மெப்படி நலஞ்செய்யினும்
தாராத லோபரிட மும்பத்தி யந்தஹீனத்
தாழ்வுசெய் வோர்களிடமுஞ்
சகலசன கண்டக ரெனுந்துஷ்ட ரிடமுமிகு
தனமாரி யேபொழியினும்
வாரா திருப்பதே பண்டிதர்க ளீதிகாண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 73

நோய்க் கிடங்கொடார் செய்கை

சனிபுதன் றனிலெண்ணெய் வெந்நீரின் மூழ்குவார்
சாருமிள வெயில்விரும்பார்
தம்வயதின் மேலான மங்கை யைச்சேரார்
சதாகாலம் வழியினடவார்
பனியிலுங் காற்றிலும் மெய்வருந் தார்மடைப்
பள்ளியிற் சேவகமிரார்
பழங்கறி யருந்தா ரிரண்டடக் காரொன்று
பலகால மும்விட்டிடார்
கனியொடு கிழங்குகள் மிகுந்துபுசி யார்பசி
கலந்தன்றி யுணவுசெய்யார்
காய்ச்சுபா லுண்பர்நீர் மோர்கூட்டு வார்தினங்
காவேரி தனின்மூழ்குவார்
மனிதரிவர் பேர்சொன்ன பேர்க்குநோய் சேருமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 74

தந்தை முதலியோராவார் இவரெனல்

திலமுடன் கிருகமுஞ் செல்வமுந் தந்துகட
னிலுவையொன் றில்லாமலே
நிறைகல்வி யுரைசெய்து நெறியொடு வளர்க்கின்ற
நேசனே யுயர்தந்தையாம்
கலைமதிய மெனவே வளர்ந்தபின் செல்வங்கள்
கண்டுமிக மனமகிழ்ந்து
கருதரிய புத்திரன் போலமரு மகளையுங்
கருணைசெய் பவளன்னையாம்
பலகலை யுணர்ந்துமிகு செல்வமுந் தேடிப்
பகிர்ந்துதன் பேர்விளங்கப்
பண்பான தந்தைதாய்க் குதவியே யவர்சொன்ன
படிசெய்கு வோன்புத்ரனும்
மலர்பொழி செழுஞ்சோலை மலைவளரு மாயனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 75

நற்புதல்வ னியல்பு

அரிதான மாதவஞ் செய்கின்ற முனிவோ
ரடைந்திடுவ ரந்தணப்போ
லடுத்தவர் தமைக்காத்து மிக்கமே வலர்தமை
யடக்குமுன் சக்கரம்போல்
பெரியோ ரிருக்கின்ற சபையினிற் கவிராஜர்
பேசும்ப்ர சங்கமதுபோல்
பேருலக மெய்க்கவரு மனுநீதி முடிவேந்தர்
பெறுகின்ற மாகீர்த்திபோல்
ஒருகோடி நட்சத்தி ரங்களுட னடுவே
யுதித்தசந் த்ரோதயம்போ
லுபயகுல சுத்தனும் பகிரதன் போலவே
யொருபிள்ளை போதுமவனுல்
மரபெலா நன்மையே யடையுமென் பார்கள்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 76

சகோதர ரொருமை

தன துபட் டந்தனைத் தம்பியர்க் கீயெனத்
தந்துமகி ழுந்தமையனுந்
தமையனுர் வருமளவு மாவிரத மாகவே
தபசுபுரி யுந்தம்பியும்
கன தனப் பாலீந்த தாய்தனைப் போலவே
கருணைசெய் திடுமதனியுங்
காணுமுன் றந்தைபோற் றிருவடிகள் பணியுங்
கனிட்டனுடை மனையாட்டியும்
தின நந்தினம் பரிவாகி யம்மையே யென்றுபேர்
செப்புங் கொழுந்தனருஞ்
சேர்ந்துவாழ் கின்றபேர் திரேதாயு கந்தனிற்
றசரத குமாரர்கண்டாய்
வன சமலர் கமழ்கின்ற வாவிசூழ் கனமூரின்
மணவாள நாராயணன்
மன திலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 77

வேட்டகத் தியல்பு

வாளிகை தனைத்தந்த மாமனுர் மனைதனிற்
கருணைமரு மகன்வந்திடிற்
கண்டவுட னுசார வுபசார மாகவே
கனவிருந் துகள்சமைப்பார்
சேருதாண் மூன்றுகி லபரபட் சத்திற்
செனித்தசந் த்ரோதயம்போற்
றினந்தினம் பெருமைகுறை யுங்காரி யங்களுஞ்
செய்யென்ப ரத்தைமுதலோர்
ஆருமெண் ணுர்கண்மைத் துனர்சரச பரிகாச
மதிகமா மனைவியெனிலோ
அன்புடன் சொன்னபடி கேளாளி தாகையா
லாதியொரு கதையல்லவோ
வாருமென் றவரேக வசனமுஞ் சொல்வர்காண்
மணவாள நாராயணன்
மன திலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 78

மானங் கெட்டுப் பிழைப்பவரிவரெனல்

நேசமுறு சிறுமிதன துறவினுன் மருகன்மணி
நிலையென்று வாழ்ந்தபேரும்
நேரிழை தனத்தந்த மாமனுர் மனைதன்னி
னீங்கா திருந்தபேரும்
பேசரிய கல்விதெரி யாமூடர் பேரில்ப்ர
பந்தகவி சொன்னபேரும்
பெருமைபோய்க் கள்ளக் கடன்களே பட்டுப்
பிழைத்துயிர் சுமந்தபேரும்
ஏசுவரு பகையாளர் தங்கள்முன் கைகட்டி
யேவல்செய் கின்றபேரு
மீனமது பார்ப்பரோ வயிறுசா ணன்றிவர்க்
கெண்சாணும் வயிறுகண்டாய்
வாசமலர் மங்கைகுடி கொண்டுவளர் களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 79

கற்புடைப் பெண்டிரியல்பு

ஓதுஜப பூசைகட் கினியகுற் றேவல்க
ளுகந்துசெய் போதுகுருவா
முரைகொண்ட சரசஞ்செய் போதுமன் மகனை
மொழிந்தவே ளுத்தெய்வமாம்
நாதனைக் கருதியவ னுண்டகுறை யமுதாக
நவில்வதே யுபதேசமாம்
நதியாடல் பலநோன்பு தேவதா தரிசன
நயந்தபல விரதமுமவன்
பாததரி சனமாக்கொள் சுத்தியாய்ப் புத்தியாய்ப்
பத்தியாய்க் கடலினுழம்
பாரென்று கனவிலுரை செய்யினுஞ் செய்கின்ற
பதிவிரத மார்க்கமான
மாதர்புகழ் நீதியே துதிபெற்ற தல்லவோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 80

நற்பெண்டிரியல்பு

பஞ்சணையி னருகாக நின்றுவா வென்றபின்
பரிவினுட னருகில்வந்து
பாக்கிலே மடித்தசுரு ளீந்துமெத் தையில்வந்து
பரிமள மிகத்திமிர்ந்து
கொஞ்சிமலர் சூடியிசை பாடிவிளை யாடியே
கொக்கோக விதமறிந்து
கூடியித ழிருவோரு முறைபருகி யினியபுட்
குரலோசை மிகமுழங்க
நெஞ்சமகிழ் வொடுசுரத கரணகரி கரவுபரி
நேயரதி கேளிதன்னுல்
நிறையமிர்த போகசம் போகவை போகமுட
னீங்காத மோகமுதவும்
வஞ்சியின லாதுமனம் வேரொன்றின் மகிழுமோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 81

தீப்பெண்டிரியல்பு

ஐயருக் கமுதுபடை யென்றுவந் தாய்நீயு
மாண்பிள்ளை யென்றெண்ணவோ
அரிசியெங் கேபோன சட்டியெங் கேயென்ப
ளவள்சொன்ன வகைகளெல்லாம்
ஐயவே கொண்டுவந் தாலுஞ் சமைக்கப்
படாதுதலை நோகுதென்று
பாயிற் கிடப்பள்சின மாயொன்று பேசினுல்
பாருனக் கேற்றபுத்தி
செய்யவல் லேனென்பள் சற்றடித் தானஞ்சு
தின்கிறேன் கூகூவெனத்
தெருவீடு தோறுமுறை யிடுபெண்டி ருண்டெனிற்
றீயநமன் வேறுமுண்டோ
வையகம் புகழ்சோலை மலையலங் காரனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 82

பரத்தைய ரியல்பு

கொச்சியுறு மஞ்சள்வங் காளமுறு பச்சையிவை
கூறுசண் பகமொட்டுடன்
கூடிய நலங்குமஞ் சனமாடி பொற்கண்டை
கொண்டவெண் டுகிலுடுத்துக்
கச்சிளங் கொங்கைமேற் கந்தபரி மளகளப
கஸ்தூரி குழுகுமென்னக்
கனகநவ ரத்நமய பூஷணம் பூண்டுகிளி
கையின்மிசை யேந்திநலமாய்ப்
பச்சைமயில் போலிரதி வேளுக்கு மிகுசரச
பரிகாச நகைபுரிந்து
பண்பான மேடையுப் பரிகையி லிருக்கும்
பரத்தையுண் டாவளென்றுல்
வச்ரதர னுலகத்த ரம்பையிலு மதிகமா
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 83

பிரௌடை வேசைய ரியல்பு

ஆசையுட ஞெருவிரக புருஷன்வந் தான்மிகவு
மாசார வுபசாரமா
யாசனந் தனிலெழுந் தருளுமென் றருகிருந்
தழகான வொருதட்டிலே
நேசமொடு தாம்பூல முதவியே யவனுடைய
நெறிகண்டு வரவழைத்து
நீதியா யந்தநாள் வந்தநீர் பின்னெனே
நினைத்திலீ ரென்கொலென்று
பேசரிய சங்கீத சரசசல் லாபப்ர
சங்கமொடு ரதிகேளியில்
பிரியமுட னேயணைந் தின்பமா யுசிதம்
பெறில்ப்ரௌடை வேசையென்பார்
வாசமிகு பைந்துளப மாலையணி மார்பனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 84

பரத்தைய ரிழிவு

விலைமாதர் வீடுசவு ளிக்கடை படுக்கையது
மேவுமனை பொதுவம்பலம்
மெத்தையது சந்தியிற் பாறையவ ரங்கமோ
மேவிய படித்துறையதாம்
கலைமருவு மவர்கு லோடமா மிருகொங்கை
கடையிலெலு மிச்சம்பழங்
கனிவாய் படிக்கமிரு துடைகடண் ணீர்ப்பந்தல்
கட்டுகத லிக்கம்பமாம்
முலைமார்பு வாடகைக் குதிரையிடை யேணியவர்
மோகமெனி லெட்டிக்கனி
மொழிமுயற் கொம்புசே ரின்புவெந் நீராமை
முறைமையிவை கண்டிருந்தும்
மலைவுபெறு வார்கள்ரச வாதிக்கு நேயனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 85

சரீர நிலையாமை

ஆகாய மீதினி லெறிந்தசிலை காற்றினை
யடைத்துவைத் திடுதுருத்தி
யனலிட்ட மெழுகுவெயி லிடையிட்ட வெண்ணெ
யாற்றிடை யெழுந்தகுமிழி [ய்சுழி
மோகா விகார மொடு வருகின்ற மின்னல்விழி
மூடுதுயில் கண்டகனவு
மோதிவரு காற்றினிற் றீவிழுந் திடுபஞ்சு
மூச்சோடு கின்றபதுமை
மீகாம னில்லாத கப்பல்கண் ணிமைபோல்
விளங்கவரு தேகமிதனை
மெய்யென்று மெய்யெலாம் பொய்யென்று திரிகின்
விழலனை யாள நினைவாய் [ற
மாகாள முகிலனைய மெய்யுனே ! துய்யனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 86

நல்வினை செய்வோர் பேறு

ஓதுமா தாபித்தா குருதெய்வ விசுவாச
முடனதிதி பூசைசெய்வோ
ருற்றபர தாரசோ தரமாகு வோரகித
மொருவர்க்கு மெண்ணிலாதோர்
பூததய வுள்ளோர் சகாயமே புரிகுவோர்
பொய்யிலா வாய்மை யுடையோர்
பூர்வமாந் தருமபரி பாலனம் பண்ணுவோர்
பூஞ்சோலை நந்தனவனம்
பாதையிடை மண்டபங் கூபந் தடாகநீர்ப்
பந்தர்முத லாய்ப்புரிகுவோர்
பண்பா மிவர்க்குமலை போல்வந்த விடினயெலாம்
பனிபோல நீங்கிநலமாய்
மாதவ! முகுந்தவுன் பாதமே பெறுவர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 87

மாதர் அவயவ மயக்கு

சிக்குமிக வேநாறு கின்றகுழன் முகிலென்பர்
திரளுத்தை மாருதவாய்
செம்பவள மென்பர்சளி கொண்டுநீர் மாருத
சிறுநாசி குமிழதென்பர்
பக்குவம தன்றிவிழு கின்றமலை யானதோற்
பையமக மேருவென்பர்
பாராத நரகத் துவாரமாங் குழிதனைப்
பகரின்ப வாரியென்பர்
மிக்குவரு ரத்தமுஞ் சீயுமென் பும்போர்த்த
மேனிமலர் மாலையென்பர்
மீளாத நரகந் தருஞ்சிறிய வின்பமதை
மேலின்ப வீடென்பரிம்
மைக்கருங் கடலிலெனை வீழாம லாளுவாய்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 88

நிதியின் பெருமை

வித்தையே செய்திடும் குருபீட மொன்னலரை
வென்றுவரு கின்றதளவாய்
மித்திரர்கள் பகைவரா மேவலர்க ணேயரா
விந்தைபுரி தானுபதி
புத்திநல மேசொல்லு மதிமந்த்ரி யாவரும்
புகழ்கின்ற வசியகுளிகை
புளகமுலை மாதருக் கதிரூப வின்பம்
பொருந்தவரு காமதேனு
நித்தலும் பெருமையே செயுமரசு தான்மொழியு
நிலைசெயத் தக்கக்ஷாத்ரம்
நேர்ந்தமிடி யென்கின்ற மாதங்க கேசரி
நினைத்தவெல் லாங்கொணர்ந்தே
வைத்திடுங் குலதெய்வ நிதியன்றி வேறேது
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 89

உயர்ந்தபொரு ளிருக்குமிடத்து இழிந்தபொருளு மிருக்குமெனல்

கோகனக மலர்மலர்ந் தூறுகின்ற வாவியிற்
கொட்டியு மலர்ந்திருக்குங்
கோகிலந் தொனிசெயுந் தேமா வனந்தனிற்
கூறுவாய்ப் பக்ஷியுறையும்
ஏகமென வுலகம் புரந்தமன் னவர்சபையி
லீனமன் னருமேவுவா
ரிலகுமா ணிக்கங்கள் விற்கின்ற கடைவீதி
யிற்பாலை மணியும் விற்பார்
பாகனைய மதுரரச லளிதப்ர பந்தகவி
பாடுமன் னவர்கள் சபையில்
பழங்காடி தன்னிலும் புளித்தபுன் கவிசொல்லும்
பாவலரு முண்டுகண்டாய்
மாகனக முறையுமொரு மணியணியு மார்பனே !
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 90

சேர்ந்தவினத்தின்குணம் பெறுவோர் பெருதோரிவரெனல்

சோதிநவ ரத்நமணி மாலையிடை நூலுந்
துலங்குமணி யாய்விளங்குஞ்
சுரைப்பழந் தன்னுடன் சேர்ந்தசெம் பொன்னுந்
துரும்புபோ லேமிதக்கும்
நீதிபெறு குப்பையி லிருந்தாலு மாணிக்க
மெய்ம்மழுங் காதொளிவிடும்
மிகவுஞ் செழுந்தேன் சொரிந்தே வளர்க்கினும்
வெள்ளுள்ளி நாற்றமாரு
தாதலாற் சேர்ந்திடு மினங்களைப் போலவே
யவனியி லிருப்பர்சிலபே
ராரிசொல்லி னுந்தங்கள் சுயகுணம் விடாமலே
யமைவுற்று வாழ்வர்சிலபேர்
மாதர்துகில் கொண்டொரு குருந்தேறு மாயனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 91

வல்லோர்க்கும் புல்லோரால் தாழ்வு வருமெனல்

பராசர் வச்ரமகு டந்தகர்த் தீடுகத்தி
பஞ்சுமெத் தைக்குநாணும்
பணிராசர் மணிமுடிகள் சிதறநட மிடுதோகை
பச்சோந்தி யானடுங்கும்
கரராச மார்த்தாண்ட சந்த்ரகிர ணங்களொரு
கட்செவியி னுன்மறைபடுங்
கனதைபுரி விகடதட மத்தமா தங்கமொரு
கனல்சிறிது கண்டுபயமாம்
சுரராச கங்காப்ர வாகநிக ரூற்றுமொரு
துய்யசிலை யான்மறிபடுஞ்
சொல்கின்ற பெரியோர்க ளென்றுலு மற்பராற்
றோல்விகொடு முறிவர்கண்டாய்
வரராச தசரத மகாராச புத்ரனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 92

நல்லோர் புகழ் நிலைபேறு

விசயன்மனு வுடனிட்சு வாகுகுச நாபன்
விகுட்சிரகு காகுஸ்தனும்
மிகுமம்ப ரீஷன்மாந் தாதன்முசு குந்தன்
விசாலனே திரணபிந்து
சசிபிந்து வொடுதிலீ பன்னரிச் சந்திரன்
சர்வதா மன்பரதனே
சந்தனு நளன்சத்ய விரதன்ப கீரதன்
சகரனெடு தானகர்ணன்
தசரதன் மருத்துப் புரூரவன் சென்னியே
திரிசங்கு வுடன்யயாதி
சித்ரசே னன்வீர சேனன்ருது பனனிந்த்ர
சேனன்விது ரன்பாண்டவர்
வசுதேவ னுதியோர் புகழன்றி நின்றதிலை
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 93

தீயோர் பழிநிலை பேறு

சூரனெடு பானுகோ பன்றிரி புரத்தினோர்
துரகனே மதுகைடவர்
துந்துமகி டாசுரன் சம்பர சலந்தரர்
தூஷணன் றிரிசிரகரர்
வீரரா வணகும்ப கர்ணரிந் திரசித்து
மிகுகனக னிரணியாட்சன்
வெய்யவா தாவிவில் வலனுடன் சூர்ப்பணகை
மேவுமச முகிதாடகை
தாருலவு சிசுபால தந்தவக் கிரர்சரா
சந்தனெ டடற்கீசகன்
சகுனிதுரி யோதனன் கஞ்சன்முத லாயினோர்
தங்களப கீர்த்தியல்லால்
வாரிசூழ் புவியிலவர் கொடுமைநிலை நின்றதோ
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 94

வானப்பிரஸ்தன் முதலானோரியல்பு

ஒருபொழுது மவமே யிராமனற் கருமங்க
ளுணர்வுடன் செய்துமினியா
ளொடுகாம மின்றியுன் பாதங்கள் போற்றிவன
முறைவன்வா னப்பிரஸ்தன்.
கருமமுட னுனதுபக வற்கீதை துதிசெய்து
காமமுத லாறுமூன்றுங்
கருதாம லொருபோது சுவைநீக்கி யேயுண்ட
கருணையோன் சன்னியாசி
இருவினையு மவைசெய்த துஞ்செயச் செய்வது
மின்பமுங் கனதுன்பமு
மெண்ணரிய சாதிமர பும்பலவு முன்செய்கை
யென்றெண்ணி யடிகடொழுது
வருமவனை யவதூத மெய்ஞ்ஞானி யென்பர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 95

உத்தமர் முதலானோரியல்பு

வினயமுட னன்னமுஞ் சுகமுமே ஷமுமென்ன
வித்தையுரை தன்னையறிவார்
மிகுதாழை கற்பகங் கன்னன்மலர் போன்மரபு
விதமாய் விளங்கவருவார்
பணையினெடு நாளிகே ரங்கமுக மெனவே
பரிந்தவர்க் கன்புகூர்வார்
பனசமுஞ் சூதமும் பாடலமு மென்னவே
பண்பினுட னுதவிசெய்வார்
சினமருவி னீரெழுத் தொடுமண லெழுத்துடன்
சிலையெழுத் தெனமாறுவார்
செப்புமிவர் தமையாதி யந்தமாப் பார்க்கவே
சிந்தைதனி லாய்ந்து புவிமேல்
மனிதருத் தமர்கண்மத் திமரதமர் மூவர்காண்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 96

தேசங்களின் பெயர்கள்

அங்கமத் திரமான வஞ்சால மங்கேக
யாரியம் பாரசீன
மாந்திரம ராடமே கன்னட மிடங்கண
மவந்தியொடு சேதிகுகுதம்
அங்கைதிகழ் காஸ்மீர மச்சங் கிடாரங்
கரூசமே சூரசேனங்
கலிங்கமொடு வங்காள நேபாள சிங்களங்
கனத்ததுளு வங்கேரளம்
கோங்கணம் போடந்த்ரி கர்த்தம் புளிந்தங்
குளிந்தங் கிராடமகதங்
கூர்ச்சரம் பப்பரம்வி தர்ப்பகாம் போஜநற்
கோசலஞ் சிந்துகௌடம்
வங்கமும் பணிகின்ற கருடகிரி வாசனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 97

தேசமுதல் அண்டமளவாக நிற்குநிலை

ஓட்டமுறு சாதகஞ் சவ்வீர பாஞ்சால
மோங்குநிட தங்கடார
மூகந்தரஞ் சோனகஞ் சீனகாந் தாரமொ
டுலாவுமலை யாளவங்கம்
இட்டமுது த்ராவிடஞ் சோழபாண் டியமாதி
யெண்ணேழு தேசமாகி
யிலங்குபர தக்கண்ட மாதினவ கண்டங்க
ளேய்ந்த சம்புத்தீவுமே
அட்டதிசை பெற்றதீ வேழுபூ லோகமிஃ
தாதிமே லேழுலோக
மதலமே யாதிகீ ழேழுலோ கங்களிவை
யவையுமீ தோரண்டமாம்
ஊட்டிலா வண்டங்க ளுன்றிரு வயிற்றிலுறு
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 98

பதினெண்கணங்க ளிவையெனல்

தேவருட னசுரர்கள் சித்தர்க டயித்தியர்
சிறந்திடும் புருடர்கருடர்
செய்யகந் தருவர்கின் னரரிராக் கதர்பூதர்
தீதில்வே தாளர்முனிவோர்
மேவுவிஞ் சையருரக ரந்தர ரிய,க்கரே
மேலுமா காசவாசர்
மிகுபோக பூமியோர் முதலாய பதினெட்டு
விதமான கணநாதரும்
பூவையர்க ளுங்கண்டு துதிசெயுந் திருமலை
புகழ்ந்துகோ னேரிமூழ்கிப்
போற்றியுன் சந்நிதி வணங்கியே துதியாத
புன்சனன முஞ்சனனமோ
மாவலி யணிந்தசெம் மணிமகுட பாதனே!
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 99

பரம பாகவதராவா ரிவரெனல்

சுகனெனு வியாசன் பராசரன் சவுனகன்
துய்யநா ரதன்வசிட்டன்
துங்கவான் மீகிமா வலிருக்கு மாங்கதன்
சுக்கிரீ வன்மாருதி
தகுமிட்சு வாகுவீ டுமனுடன் பிரகலா
தன்குசே லன்விஜயனே
தருமனெடு முசுகுந்த னக்குரூ ரன்பணி
ஜடாயுவுட னம்பரீஷன்
அகலிதிரி சடைமாது பாஞ்சாலி சபரிமு
னழைத்திடக் கஜராஜனே
யாதிரா மானுஜன் றிருவரங் கத்தமுத
ராழ்வார்கள் பன்னிருவரும்
மகிமைபெறு முன்றெண்டர் பாதமே துணைகொள்ளு
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 100

அடியாருக்கு வருஞ் சிறப்பு

உனதுபா தம்போற்று மடியார்கள் சிந்தையி
லுவந்துநீ யென்றுமுறலா
லுன்னுடைய திருமாத ரெண்மருஞ் சேர்வரவ
ருறீறதா னிதிகள்சேரும்
கனநிதிகள் சேர்ந்திடத் தனதன்வரு வானுடன்
கருணைபுரி நேயன் வருவான்
காதல னடுத்ததா லுமைவருவ ளன்னையாற்
கந்தன்வரு வன்மருகனுல்
தனதுமா மன்வருவ னரசன்வர லாலமரர்
சகலருங் கண்டுவருவார்
தருமஞ் செழிக்குமருள் சேருமது வன்றியே
தவமொன்று செயல்வேண்டுமோ
வனசரோ ருகமலர் மடைந்தவளர் களமூரின்
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 101

அவையடக்கமும் பிரார்த்தனையும்

ஒருமலை யெடுத்துமழை காத்தவா மனதேவ
ருபயபத சேவைதனையே
யுளங்கொண்டு வெண்மணியில் வாழுமுத்தாரைய
னுதவுநா ரணபாரதி
பொருமலை பெறுங்கங்கை யுங்கானி யாறும்
பொருந்துகடல் போற்புலவர்கள்
புகழ்சபையி லெனதுவேங் கட சதக நீதிநெறி
புகலவரு நூறுகவியும்
பரிவினுட னனைவரும் கேட்டெனது தமிழின்மேற்
பக்ஷம்வைத் தாளவருவாய்
பாலகன் புன்சொலைக் கேட்டுமே மகிழுமவள்
பார்மீதி லன்னையலவோ
வருபவர் களிக்கநல் வரமுதவு நேயனே
மணவாள நாராயணன்
மனதிலுறை யலர்மேலு மங்கைமண வாளனே
வரதவேங் கடராயனே. 102

மூற்றிற்று.

படிக்காசுப் புலவர்

இயற்றிய

பழமொழி விளக்கம் என்னும்

7. தண்டலையார் சதகம்

காப்பு

விநாயகர் துதி

சீர்கொண்ட கற்பகத்தில் வாதாவி
நாயகனைத் தில்லை வாழுங்
கார்கொண்ட கரிமுகனை விகடசக்ர
கணபதியைக் கருத்துள் வைப்பாம்
பேர்கொண்ட ஞானநா யகிபாகன்
றண்டலையெம் பெருமான் மீதில்
ஏர்கொண்ட நவகண்ட மிசைந்தபழ
மொழிவிளக்க மியம்பத்தானே.

இதுவுமது

வேதநெறி விளம்பியசொல் லாகமநூல்
விளம்பியசொல் மிகுபு ராணம்
ஏதுவினிற் காட்டியசொல் லிலக்கணச்சொல்
ளிசைந்தபொரு ளெல்லா நாடி
ஆதிமுத லுலகுதனில் விளங்குபழ
மொழிவிளக்க மறிந்து பாடச்
சோதிபெறு மதவேழ முகத்தொருவ
னகத்தெனக்குத் துணைசெய் வானே.

———

அவையடக்கம்

வள்ளுவர்நூ லாதிபல நூலிலுள
அரும்பொருளா வன்மை யாக
உள்ளபடி தெரிந்துணர்ந்த பெரியவர்கண்
முன்னனு மொருவன் போலத்
பள்ளமுது நீருலகிற் பரவுபழ
மொழிவிளக்கம் பரிந்து கூறல்
வெள்ளாமதி யினன் கொல்லத் தெருவதனி
லூசிவிற்கும் விஞையதாமே.

——

நூல்

தண்டலையார் தேவாலயத்தில் திருவிளக்கிடுதற் பயன்

வரமளிக்குந் தண்டலையார் திருக்கோயி
லுட்புகுந்து வலமாய் வந்தே
ஒருவிளக்கா யினும்பசுவி னெய்யுடன்ரு
மரைநூலி னெளிர வைத்தால்
கருவிளக்கும் பிறப்புமிலை யிறப்புமிலை
கைலாசங் காணி யாகும்
திருவிளக்கிட் டார்தமையே தெய்வமளித்
திடும்விஞையுந் தீரும் தானே. 1

தண்டலையார் செய்த நன்றிக்குப் பிரதி நன்றி யில்லை யெனல்

கூன்செய்த பிறையணியுந் தண்டலையார்
கருணைசெய்து கோடி கோடி
யான்செய்த விஞையகற்றி நன்மைசெய்தா
லுபகார மென்னு லுண்டோ
ஊன்செய்த வுயிர்வளரத் தவந்தான
நடந்தேற வுதவி யாக
வான்செய்த நன்றிக்கு வையகமென்
செய்யுமதை மறந்தி டாதே. 2

முன் செய்த தருமத்திற்குத் தக்கபடியே இப்பொழுது பயன் கிடைக்குமெனல்

அட்டதிசை யெங்கணும்போ யலைந்தாலும்
பாதாள மதிற்சென் றாலும்
பட்டமென வானூடு பறந்தாலு
மென்னவதிற் பயனுண் டாமோ
பிட்டுவர மண்சுமந்த தண்டலையா
ரேமுன்னுள் பெரியோர் கையில்
இட்டபடி யேயொழிய வேறுசைப்
படின்வருவ தில்லை தானே. 3

பலர்க்கும் செய்யு முபகாரமே வேண்டப்படுவ தென்பது

தன்மமதைச் செயல்வேண்டுந் தண்டலை நீ
ணெறியாரே தயவு செய்வார்
வன்மவினை செயல்வேண்டாம் பொய்வேண்டா
பிறரையொன்றும் வருத்தல் வேண்டாம்
கன்மநெறி வரல்வேண்டாம் வேண்டுவது
பலர்க்குமுப காரமாகும்
நன்மைசெய்தார் நலம்பெறுவர் தீமைசெய்தார்
தீமைபெற்று நலிவர் தானே. 4

இல்லறத்தின் தன்மையும், துறவறத்தின் தன்மையும்

புல்லறிவுக் கெட்டாத தண்டலையார்
வளந்தழைத்த பொன்னி நாட்டிற்
சொல்லறமா தவம்புரியுஞ் சௌபரியுந்
துறவறத்தைத் துறந்து மீண்டான்
நல்லறமாம் வள்ளுவர்போற் குடிவாழ்க்கை
மனைவியுட னடத்தி நின்றான்
இல்லறமே பெரிதாகுந் துறவறமும்
பழிப்பின்றே லெழில தாமே. 5

பதிவிரதைகளின் தன்மை

முக்கணர்தண் டலைநாட்டிற் கற்புடைமங்
கையர்மகிமை மொழியப் போமோ
ஒக்குமெரி குளிரவைத்தா ளொருத்திவில்வே
டனையெரித்தா ளொருத்தி மூவர்
பக்கமுற வமுதளித்தா ளொருத்தியெழு
பரிதடுத்தா ளொருத்தி பண்டு
கொக்கெனவே நினைந்தனையோ கொங்கணவா
வென்றெருத்தி கூறி னளே. 6

நற்பிள்ளை யொன்றிருந்தால்
போது மென்பது

நன்றிதரும் பிள்ளை யொன்று பெற்றுலுங்
குலமுழுது நன்மை யுண்டாம்
அன்றியறி வில்லாத பிள்ளை யொரு
நூறுபெற்று மாவ துண்டோ
மன்றினடம் புரிவாரே தண்டலையா
ரேசொன்னேன் வருடந் தோறும்
பன்றிபல வீன்றுமென்ன குஞ்சரமொன்
றீன்றதனற் பயனுண் டாமே. 7

நல்லஞதப் பெரியோர் நாயகனுக்
களிப்ப ரென்பது

அல்லமருங் குழலாளை வரகுணபாண்
டியராச ரன்பா லீந்தார்
கல்லுதனின் மென்றுமிழ்ந்த வூனமுதைக்
கண்ணப்பர் கனிவா லீந்தார்
சொல்லியதண் டலையார்க்குக் கீரையுமா
வடுவுமொரு தொண்ட ரீந்தார்
நல்லதுகண் டாற்பெரியோர் நாயகனுக்
கென்றதனை நல்கு வாரே. 8

விருந்தின் உயர்வு

திருவிருந்த தண்டலையார் வளநாட்டி
லில்வாழ்க்கை செலுத்து நல்லோர்
ஒருவிருந்தா யினுமின்றி யுண்டபகல்
பகலாமோ வுறவாய் வந்த
பெருவிருந்துக் குபகாரஞ் செய்தனுப்பி
யின்னமெங்கே பெரியோ ரென்று
வருவிருந்தோ டுண்பதல்லால் விருந்தில்லா
துணுஞ்சோறு மருந்து தானே. 9

இன்சொல்லின் உயர்வு

பொற்குடையும் பொற்றுகிலும் பொற்பணியுங்
கொடுப்பதென்ன பொருளோ வென்று
நற்கமல முகமலர்ந்தே யுபகார
மிக்கவின்சொ னடத்த னன்றே
கற்கரையு மொழிபாகர் தண்டலையார்
வளநாட்டிற் கரும்பின் வேய்ந்த
சர்க்கரையின் பந்தலிலே தேன்மாரி
பொழிந்துவிடுந் தன்மை தானே. 10

ஞானமில்லாததற் கிரங்கல்

குறும்பெண்ணு துயர்ந்தநல்லோ ராயிரஞ்சொன்
னுலுமதைக் குறிக்கொள் ளாமல்
வெறும்பெண்ணு சையிற்சுழல்வேன் மெய்ஞ்
பொருந்தியுணே வேண்டே னந்தோ [ஞானம்
உறும்பெண்ணு ரமுதிடஞ்சேர் தண்டலைநீ
ணெறியேயென் னுண்மை நேரில்
எறும்பெண்ணு யிரமப்பா கழுதையுங்கை
நடந்ததெனு மெண்ணந்! தானே, 11

தினையளவு நன்றி பனையளவாய்ச் சிறக்கு மென்பது

துப்பிட்ட வாலம்விதை சிறிதெனினும்
பெரிதாகும் தோற்றம் போலச்
செப்பிட்ட தினையளவு செய்தநன்றி
பனையளவாய்ச் சிறந்து தோன்றும்
கொப்பிட்ட வுமைபாகர் தண்டலையார்
வளநாட்டிற் கொஞ்சமேனும்
உப்பிட்ட பேர்கடமை யுளவரையு
நினைக்குமிந்த வுலகந் தானே. 12

பயனற்ற செயல்கள்

மேட்டுக்கே விரைத்தவிரை வீணருக்கே
செய்தநன்றி மேயும் பட்டி
மாட்டுக்கே கொடுத்தவிலை பரத்தையர்க்கே
தேடியிட்ட வண்மை யெல்லாம்
பாட்டுக்கே யருள்புரியுந் தண்டலையார்
வீதிதொறும் பரப்பி டாமல்
காட்டுக்கே யெரித்தநிலாக் கானலுக்கே
பெய்தமழை கடுக்குங் காணே. 13

சிறியோர் நற்கதி யடையா ரென்பது

சங்கையறப் படித்தாலுங் கேட்டாலும்
பிறர்க்குறுதி தனைச்சொன் னாலும்
அங்கணுல கிற்சிறியோர் தாமடங்கி
நடந்துகதி யடைய மாட்டார்
திங்களணி சடையாரே தண்டலையா
ரேசொன்னேன் சிறிது காலம்
கங்கையிலே படர்ந்தாலும் பேய்ச்சுரைக்காய்
நல்லசுரைக் காயா காதே. 14

உலக ஆசை விடாததற் கிரங்கல்

உழையிட்ட விழிமடவா ருறவுவிட்டும்
வெகுளிவிட்டு முலக வாழ்விற்
பிழைவிட்டு மின்னமின்ன மாசைவிடா
தலக்கழியப் பெற்றே னந்தோ
தழையிட்ட கொன்றைபுனை தண்டலைநீ
ணெறியேயென் றன்மை யெல்லாம்
மழைவிட்டுந் தூவானம் விட்டதில்லை
யாயிருந்த வண்மை தானே. 15

துர்ச்சனப்பிள்ளைக்கு ஊரார் புத்தி சொல்வாரெனல்

கொச்சையிற்பிள் ளைக்குதவுந் தண்டலையார்
வளநாட்டிற் கொடிதாய் வந்த
வச்சிரப்பிள் ளைக்குமுன் மாதவனே
புத்திசொன்னன் வசையுஞ் சொன்னன்
அச்சுதப்பிள் ளைக்குமந்த வாண்டவரே
புத்திசொன்ன ராத லாலே
துர்ச்சனப்பிள் ளைக்கூரார் புத்திசொல்லு
வாரென்றே சொல்லு வாரே. 16

பொறுத்தார் அரசாள்வா ரென்பது

கறுத்துவிட முண்டருளுந் தண்டலையார்
வளநாட்டிற் கடிய தீயோர்
குறித்துமனை யாளரையிற் றுகிலுரிந்து
மைவர்மனங் கோபித் தாரோ
பறித்துரிய பொருண்முழுதுங் கவர்ந்தாலு
மடித்தாலும் பழிசெய் தாலும்
பொறுத்தவரே யரசாள்வார் பொங்கினவர்
காடாளப் போவர் தாமே. 17

பொறுமைக் குணத்தா ரியல்பு

அள்ளித்தண் ணீறணியுந் தண்டகையார்
வளநாட்டி லாண்மை யுள்ளோர்
விள்ளுற்ற கல்வியுள்ளோர் செல்வமுள்ளோ
ரழகுடையோர் மேன்மை நோக்கி
உள்ளத்தி லழன்றழன்று நமக்கில்லை
யெனவுரைத்திங் குழல்வா ரெல்லாம்
பிள்ளைபெற் றவர்தமைப்பார்த் திருந்துபெரு
மூச்செறியும் பெற்றி யோரே. 18

எதுவும் விதிப்படி நடக்கு மெனல்

மண்ணுலகா ளவுநினைப்பார் பிறர்பொருண்மே
லாசைவைப்பார் வலுமை செய்வார்
புண்ணியமென் பதைச்செய்யார் கடைமுறையி
லலக்கழிந்து புரண்டே போவார்
பண்ணுலவு மொழிபாகர் தண்டகையார்
வகுத்தவிதிப் படியல் லாமல்
எண்ணமெல்லாம் பொய்யாகு மெனனமே
மெய்யாகு மியற்கை தானே. 19

பகுத்தறிவில்லாதா ரியல்பு

சொன்னதைச் சொல்லுமிளங் கிள்ளையென்பார்
தண்டகையார் தொண்டு பேணி
இன்னத்துக் கின்னதெனும் பகுத்தறிவொன்
றில்லாத வீணரெல்லாம்
தன்னெத்துக் கண்டவுடன் காணுமன்
முறைபேசிச் சாடை பேசி
முன்னுக்கொன் றுயிருந்து பின்னுக்கொன்
றுய்நடந்து மொழிவர் தாமே. 20

கொடியர் இயல்பும், மடையர் இயல்பும்

கொடியருக்கு நல்லபுத்தி சொன்னலுந்
தெரியாது கொடையில் லாத
மடையருக்கு மதுரகவி யுரைத்தாலு
மவர்கொடுக்க மாட்டார் கண்டீர்
படியளக்குந் தண்டலைநீ ணெறியாரே
யுலகமெலாம் பரவிமூடி
விடியுமட்டு மழைபெயினு மதினேட்டாங்
குச்சின்முகா வீசி டாதே. 21

தன் பாவந் தன்னுடனே வருமென்பது

செங்காவி மலர்த்தடஞ்சூழ் தண்டலைநீ
ணெறியேநின் செயலுண் டாகில்
எங்காகி லென்னவவ ரெண்ணியதெல்
லாமுடியு மில்லையாகில்
பொங்காழி சூழுலகி லுள்ளங்கால்
வெள்ளெலும்பாய்ப் போக வோடி
ஐங்காதம் போனலுந் தன்பாவந்
தன்னுடனே யாகுந் தானே. 22

மூடர் தமிழருமை யறியா ரென்பது

தாயறிவாண் மகளருமை தண்டலைநீ
ணெறிநாதர் தாமே தந்தை
ஆயறிவா ரெமதருமை பரவையிடந்
தூதுசென்ற தறிந்தி டாரோ
பேயறிவார் முழுமூடர் தமிழருமை
யறிவாரோ பேசு வாரோ
நாயறியா தொருசந்திச் சட்டிப்பா
னையினந்த நியாயந் தானே. 23

ஈயார் வாழ்வு பயன்படா தெனல்

கட்டுமாங் கனிவாழைக் கனிபலவின்
கனிகளுப காரமாகும்
சிட்டருமவ் வணந்தேடும் பொருளேயெல்லா
மிரப்பவர்க்கே செலுத்தி வாழ்வார்
மட்டுலவுஞ் சடையாரே தண்டகேயா
ரேசொன்னேன் வனங்க டோறும்
எட்டிமரம் பழுத்தாலு மீயாதார்
வாழ்ந்தாலு மென்னுண் டாமே. 24

புகழுடையானே புருடனெனல்

ஓதரிய தண்டகேயா ரடிபணிந்து
நல்லவனென் றுலக மெல்லாம்
போதமிகும் பேருடனே புகழ்படைத்து
வாழ்பவனே புருட னில்லால்
ஈதலுட னிரக்கமின்றிப் பொன்காத்த
பூதமென விருந்தா லென்ன
காதவழி பேரில்லான் கழுதையோ
டொக்குமெனக் காண லாமே. 25

அன்பில்லா தன்னமிடுலும், ஊமை கண்ட கனவும், தமிழ்ஞான மில்லாதவன் அறிவும் ஒன்றெனல்

பரியாம லிடுஞ்சோறு மூமைகண்ட
கனவுமொன்று பரிசி லீயான்
அரிதான செந்தமிழி னருள்சிறிது
மில்லாதா னறிவுமே தான்
கரிகாலன் பூசைபுரி தண்டகேநீ
ணெறியாரே கதித்த வோசை
தெரியாத செவிடன்கா தினிற்சங்கு
குறித்ததெனச் செப்ப லாமே 26

ஜீவகாருண்யத்தின் உயர்வு

முன்னரிய மறைவழங்குந் தண்டலையா
ராகமத்தின் மொழிகே ளாமல்
பின்னுயிரை வதைத்தவனுங் கொன்றவனுங்
குறைத்தவனும் பேரு ளோனும்
அந்நெறியே சமைத்தவனு முண்டவனு
நரகுறுவ ராத லாலே
தன்னுயிர்போ லெந்நாளு மன்னுயிருக்
கிரங்குவதுந் தக்க தாமே. 27

பகவானடி பணிய நேரமில்லாதிருத்தல்பற்றி யிரங்கல்

உருவெடுத்த நாண்முதலா வொருசாணும்
வளர்க்கவுட லுழல்வ தல்லால்
மருவிருக்கு நின்பாத மலர்தேடித்
தினம்பணிய மாட்டே னந்தோ
திருவிருக்கு மணிமாடத் தண்டலைநீ
ணெறியேயென் செய்தி யெல்லாம்
சருகரிக்க நேரமின்றித் தீக்காய
நேரமில்லாத் தன்மை தானே. 28

வெளிவேடம் கூடாதெனல்

காதிலே திருவேடங் கையிலே
செபமாலை கழுத்தின் மார்பின்
மீதிலே தாழ்வடங்கண் மனத்திலே
கரவடமாம் வேட மாமோ
வாதிலே யயன்றேடுந் தண்டலைநீ
ணெறியாரே மனிதர் காணும்
போதிலே மவுனமிராப் போதிலே
ருத்ராக்ஷப் பூணே தானே. 29

தானென்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கு மென்பது

மானென்று வடிவெடுத்து மாரீசன்
போய்மடிந்தான் மானே யென்று
தேனென்று மொழிபேசிச் சீதைதனைச்
சிறையிருக்கத் திருடிச் சென்றோன்
வானென்று மரசிழந்தான் தண்டகூலயார்
திருவுளத்தின் மகிமை காணீர்
தானென்று நினைக்கையிலே தெய்வமொன்று
நினைப்பதுவுஞ் சகசந் தானே. 30

**பொய் சொல்லும் வாய்க்குப் போசனம்
கிடைக்கா தென்பது**

கைசொல்லும் பணைகாட்டுங் களிற்றுரியார்
தண்டகூலயைக் காணுர் போலப்
பொய்சொல்லும் வாயினர்க்குப் போசனமும்
கிடைக்காது பொருணில் லாது
மைசொல்லுங் காரளிசூழ் தாழைமலர்
பொய்சொல்லி வாழ்ந்த துண்டோ
மெய்சொல்லி வாழாதான் பொய்சொல்லி
வாழ்வதில்லை மெய்ம்மை தானே. 31

**பெரியோரைப் பழித்தலால் அவர்க்குக்
குறையில்லை யென்பது**

அந்தணரை நல்லவரைப் பரமசிவ
னடியவரை யகந்தை யாலோர்
நிந்தனை சொன் னலுமென்ன வைதாலு
மென்ன வதி னிஷ்டை முண்டோ
சுந்தரர்க்குத் தூதுசென்ற தண்டகூநீ
ணெறியாரே துலங்கும் பூர்ண
சந்திரனைப் பார்த்துநின்று நாய்குரைத்த
போதிலென்ன தாழ்ச்சி தானே. 32

பெரியோர்க்குத் தீங்கு செய்வோர் அழிவ ரென்பது

கோடாமற் பெரியவர்பா னடப்பதன்றிக்
குற்றமுடன் குறைசெய் தோர்கள்
ஆடாகிக் கிடந்தவிடத் ததன்மயிருங்
கிடவாம லழிந்து போவார்
வீடாநற் கதியுதவுந் தண்டலையா
ரேசொன்னேன் மெய்யோ பொய்யோ
கோடாலிக் காம்பேதன் குலத்தினுக்குக்
கேடான கொள்கை தானே. 33

நடக்கை குலைந்தால் சிறப்பில்லை யெனல்

சின்னமெங்கே கொம்பெங்கே சிவிகையெங்கே
பரியெங்கே சிவியா ரெங்கே
பின்னையொரு பாழுமில்லை நடக்கைகுலைந்
தாலுடனே பேய்பே யன்றே
சொன்னவிலுந் தண்டலையார் வளநாட்டிற்
குங்கிலியத் தூபங் காட்டும்
சன்னதமா னதுகுலைந்தாற் கும்பிடெங்கே
வம்பரிது தானெயெண் ணுரே. 34

துறவறம் பெரிதெனல்

சிறுபிறைதுன் னியசடையார் தண்டலைசூழ்
பொன்னிவளஞ் செழித்த நாட்டில்
குறையகலும் பெருவாழ்வு மனைவியுமக்
களும்பொருளாக் குறித்தி டாமல்
மறைபயில்பத் திரகிரியும் பட்டினத்துப்
பிள்ளையுஞ்சேர் மகிமை யாலே
துறவறமே பெரிதாகுந் துறவிக்கு
வேந்தனெரு துரும்பு தானே. 35

குணங்களுக் கழகு இன்னவை என்பது

ஓதரிய வித்தைவந்தா லுரியசபைக்
கழகாகு மூலகில் யார்க்கும்
ஈதலுட னறிவுவந்தா லினியகுணங்
களுக்கழகா யிருக்கு மன்றே
நீதிபெறு தண்டலையார் திருநீறு
மெய்க்கழகாய் நிறைந்து தோன்றும்
காதிலணி கடுக்கனிட்டான் முகத்தினுக்கே
யழகாகிக் காணுந் தானே. 39

கல்வி யில்லார் இடம்பஞ் செய்வ ரெனல்

பாரதியா ரண்ணுவிப் புலவரென்பார்
கல்வியினிற் பழக்க மில்லார்
சீரறியார் தஞ்ஞயறியார் பல்லக்கே
றுவர்புலமை செலுத்திக் கொள்வார்
ஆரணியுந் தண்டலைநீ ணெறியாரே
யிலக்கணநூ லறியா ரேனும்
காரிகையா கிலுங்கற்றுக் கவிசொல்லார்
பேரிகொட்டக் கடவர் தாமே. 40

சாஸ்திர மறியார் உபதேசம் பயன்படா தெனல்

அருண்மிகுத்த வாகமநூல் படித்தறியார்
கேள்வியையு மறியார் முன்னே
இருவினையின் பயனறியார் குருக்களென்றே
யுபதேச மெவர்க்குஞ் செய்வார்
வரமிகுத்த தண்டலைநீ ணெறியாரே
யவர்கிரியா மார்க்க மெல்லாம்
குருடனுக்குக் குருடன்கோல் கொடுத்துவழி
காட்டிவருங் கொள்கை தானே. 41

தேக மிருக்கும்போதே அறத்தைத் தேடிக்கொள்ள வேண்டுமெனல்

நேற்றுள்ளா ரின்றிருக்கை நிச்சயமோ
வாதலினி னிணைந்த போதே
ஊற்றுள்ள பொருளுதவி யறந்தேடி
வைப்பதறி வுடைமை யன்றே
கூற்றுள்ள மிலையவருந் தண்டலையா
ரேசொன்னேன் குடபால் வீசும்
காற்றுள்ள போதெவருந் தூற்றிக்கொள்
வதுநல்ல கருமந் தானே. 42

சந்நியாசிகள் பொருள் தேடல் இழிவென்பது

வர்க்கத்தார் தமைவெறுத்த விருத்தருமாய்
மெய்ஞ்ஞான வடிவ மானோர்
கற்கட்டா கியமடமுங் காணியுஞ்செம்
பொனுந்தேடுங் கரும மெல்லாம்
பொற்கொத்தாஞ் செந்நெல்வயற் றண்டலையா
ரேசொன்னேன் பொன்னு டாளும்
சொர்க்கத்தே போம்போதும் கக்கத்தே
ராட்டினத்தைச் சுமந்த வாறே. 43

பெரியோரை யடுத்தவர்க் குயர்வுண்டா மெனல்

ஆம்பிள்ளா யெனக்கொடுக்கும் பெரியோரை
யடுத்தவரை யவனிக் கெல்லாம்
நாம்பிள்ளா யதிகமென்பார் நண்ணுரு
மேவல்செய நாளும் வாழ்வார்
வான்பிள்ளா யெனுமேனித் தண்டலையார்
பூஷணமாய் வளர்த்த நாகம்
ஏன்பிள்ளாய் கருடாநீ சுகமோவென்
றுரைத்தவித மென்ன லாமே. 44

புல்லரை யடுப்பதால் மிடி தீராதெனல்

வடியிட்ட புல்லர்தமை யடுத்தாலும்
விடுவதுண்டோ மலிநீர்க் கங்கை
முடியிட்ட தண்டலைநா தரைப்புகழிற்
பெருவாழ்வு முழுது முண்டாம்
மிடியிட்ட வினைதீருந் தெய்வமட்டும்
விடியாமல் வீணர் வாயிற்
படியிட்டு விடிவதுண்டோ வவரருளே
கண்ணுகப் பற்று வீரே. 45

கண்ணீ ருகுத்தாலும் எமன் விடா னென்பது

பொலியவளம் பலதழைத்த தண்டலைநீ
ணெறிபாதம் போற்றி நாளும்
வலியவலஞ் செய்தறியீர் மறஞ்செய்வீர்
நமன்றூதர் வந்து கூடி
மெலியவரைந் திடுபொழுது கலக்கண்ணீ
ருகுத்தாலும் விடுவ துண்டோ
எலியழுது புலம்பிடினும் பூனைபிடித்
ததுவிடுமோ வென்செய் வீரே. 46

தமிழில் எவரும் கெட்டிக்காரனெனச் சொல்லமுடியா தெனல்

மற்றவரோ தமிழ்பாடி நாட்டவல்லார்
நக்கீரர் வலிய ராகி
வெற்றிபுனை மீனாக்ஷி சுந்தரநா
யகரடுத்து விளம்பும் போதில்
பற்றுளதண் டலைவாழுங் கடவுளென்றும்
பாராமற் பயப்ப டாமல்
நெற்றிவிழி காட்டுகினுங் குற்றமே
குற்றமென நிறுத்தி னீரே. 47

பஞ்ச காலத்தில் அன்ன மிடுதலே சிறந்த தென்பது

சீரிலகுந் தண்டலையார் திருவருளா
லகமேறிச் செழித்த நாளில்
பாரியென வாயிரம் பேர்க் கன்ன தா
னங்கொடுக்கும் பலனைப் பார்க்க
நேரிடும்பஞ் சந்தனிலே யெவ்வளவா
கிலுங்கொடுத்தா னீதி யாகும்
மாரிபதின் கலநீரிற் கோடைதனி
லொருகுடநீர் வண்மை தானே. 48

தண்டலையிற் சேராமல் திரிவார் பயன்பெரு ரென்பது

பிறக்கும்போ தொருபொருளுங் கொடுவந்த
தில்லையுயிர் பிரிந்து மண்மேல்
இறக்கும்போ திலுங்கொண்டு போவதில்லை
யென்றுசும்மா விருந்து வீணே
சிறக்குந்தா யினுமருள்வார் தண்டலையிற்
சேராமற் றேச மெல்லாம்
பறக்குங்கா கமதிருக்குங் கொம்பறியா
தெனத்திரிந்து பயன்பெ ருரே. 49

வரும் இன்ப துன்பங்களைத் தெய்வச் செயல்களென நினைக்கவேண்டு மெனல்

வைதிடினும் வாழ்த்திடினு மின்பதுன்பம்
வந்திடினும் வம்பு கோடி
செய்திடினுந் தண்டலைநீ ணெறியார்தஞ்
செயலென்றே தெளிவ தல்லால்
மெய்தவிர வவர்செய்தா ரிவர்செய்தா
ரெனநாடி வெறுக்க லாமோ
எய்தவர்தம் மருகிருக்க வம்பைநொந்த
கருமமென்ன வியம்பு வீரே. 50

போங்காலம் வருமுன் புண்ணியஞ் செய்ய வேண்டுமெனல்

வாங்கால முண்டசெழுந் தண்டலையா
ரடிபோற்றி வணங்கி நாடிப்
போங்காலம் வருமுன்னே புண்ணியஞ்செய்
தரியகதி பொருந்து ருமல்
ஆங்கால முள்ளதெல்லாம் விபசார
மாகியறி வழிந்து வீணே
சாங்காலஞ் சங்கரா சங்கரா
வெனின்வருமோ தருமந் தானே. 51

பயனற்ற உதவி இன்ன தென்பது

சுற்றமாய் நெருங்கியுள்ளார் தனியடைந்தார்
கற்றறிந்தார் துணைவே றில்லார்
உற்றவே தியர்பெரியோர்க் குதவியன்றிப்
பிறர்க்குதவு முதவி யெல்லாம்
சொற்றநான் மறைபரவுந் தண்டலையா
ரேசொன்னேன் சுமந்தே நொந்து
பெற்றதாய் பசித்திருக்கப் பிராமணபோ
சனநடத்தும் பெருமை தானே. 52

துன்மார்க்க ரியல்பும், நன்மார்க்க ரியல்பும்

துன்மார்க்கர்க் காயிரந்தான் சொன்னலு
மறந்துவிட்டுத் துடுக்கே செய்வார்
சன்மார்க்கர்க் கொருவார்த்தை சொலுமளவே
மெய்யதனிற் றழும்பாக் கொள்வார்
பன்மார்க்க மறைபுகழுந் தண்டலையா
ரேசொன்னேன் பதமே யான
நன்மாட்டுக் கோரடியா நற்பெண்டிர்க்
கொருவார்த்தை நடத்தை யாமே. 53

வையம் புரப்பார்க்குச் சுவர்க்கம் கிடைக்குமெனல்

கரப்பார்க்கு நல்லகதி வருவதில்லை
செங்கோலிற் கடல்சூழ் வையம்
புரப்பார்க்கு முடிவிலே சுவர்க்கமல்லா
னரகமில்லை பொய்யி தன்றுல்
உரப்பார்க்கு நலம்புரியுந் தண்டலையா
ரேசொன்னே னெருமை யாக
இரப்பார்க்கு வெண்சோறு பஞ்சமுண்டோ
வொருக்காலு மில்லை தானே. 54

கொடுங்கோல் மன்ன னியல்பு

படுக்கோல மறியாமற் றண்டலையார்
திருப்பணிக்குப் பங்களஞ் செய்வார்
நெடுங்கோளுந் தண்டமுமாய் வீணுர
வீணனப்போ னீதி செய்வார்
கெடுங்கோப மல்லாமல் விளைவுண்டோ
மழையுண்டோ கேள்வி யுண்டோ
கொடுங்கோன்மன் னவனுட்டிற் கடும்புலிவா
முங்காடு குணமென் பாரே. 55

கெடுபவர் இன்னுரென்பதும், கெடாதவர் இன்னவு ரென்பதும்

உள்ளவரைக் கெடுத்தோரு முதவியற்று
வாழ்ந்தோரு முரைபெற் ருேருந்
தள்ளிவழக் குரைத்தோருஞ் சற்குருவைப்
பழித்தோருஞ் சாய்ந்தே போவார்
பள்ளவயற் றண்டலையார் பத்தரடி
பணிந்தோரும் பாடி னேரும்
பிள்ளைகளைப் பெற்ருேரும் பிச்சையிட்ட
நல்லோரும் பெருகு வாரே. 56

அற்பருக்கு வாழ்வுவந்தால் அர்த்தராத்திரியிற் குடைபிடிப்ப ரென்பது

விற்பனர்க்கு வாழ்வுவந்தான் மிகவணங்கிக்
கண்ணேட்ட மிகவுஞ் செய்வார்
சொற்பருக்கு வாழ்வுவந்தாற் கண்டெரியா
திறுமாந்து துன்பஞ் செய்வார்
பற்பலர்க்கு வாழ்வுதருந் தண்டலையா
ரேசொன்னேன் பண்பில் லாத
அற்பருக்கு வாழ்வுவந்தா லர்த்தராத்
திரிகுடைமே லாகுந் தானே. 57

பிறர் பொருள் பறித்துத் தருமஞ் செய்வதால் பயனில்லை யெனல்

விசையமிகுத் தண்டலையார் வளநாட்டி
லொருத்தர்சொல்லை மெய்யா வெண்ணி
வசைபெருக வநியாயஞ் செய்துபிறர்
பொருளையெல்லாம் வலிய வாங்கித்
திசைபெருகுங் கீர்த்தியென்றுந் தன்மமென்றுந்
தானமென்றுஞ் செய்வ தெல்லாம்
பசுவினையே வதைசெய்து செருப்பினைத்தா
னங்கொடுக்கும் பண்பு தானே. 58

சிறியோர் அரசு பெற்றாலும் பெரியோராகா ரென்பது

சிறியவரா முழுமூடர் துரைத்தனமா
யுலகாளத் தறம்பெற் றாலும்
அறிவுடையார் தங்களைப்போற் சற்குணமு
முடையோர்க ளாக மாட்டார்
மறிதருமான் மழுவேந்துந் தண்டலையா
ரேசொன்னேன் வாரி வாரிக்
குறுணிமைதா னிட்டாலுங் குறிவடிவங்
கண்ணுகிக் குணங்கொ டாதே. 59

தண்டலையாரைப் பணிவார்க்குப் பிறப்பில்லை யெனல்

கற்றவர்க்குக் கோபமில்லை கடந்தவர்க்குச்
சாதியில்லை கருணை கூர்ந்த
நற்றவர்க்கு விருப்பமில்லை நல்லவருக்
கொருகாலு நரக மில்லை
கொற்றவருக் கடிமையில்லை தண்டலையார்
மலர்ப்பாதங் கும்பிட் டேத்தப்
பெற்றவர்க்குப் பிறப்பில்லை பிச்சைசோற்
றினுக்கில்லை பேச்சுத் தானே. 60

நல்ல பெண்ணை மட்டிக்குக் கொடுத்தல் தகாதெனல்

பரங்கருணை வடிவாகுந் தண்டலையார்
வள நாட்டிற் பருவஞ் சேர்ந்த
சரங்குலவு காமகலை தனையறிந்த
வதிரூபத் தைய லாரை
வரம்புறுதா ளாண்மையில்லா மட்டிகளுக்
கேகொடுத்தால் வாய்க்கு மோதான்
குரங்கினது கையினறும் பூமாலை
தனைகொடுத்த கொள்கை தானே. 61

நல்ல பெண்களால் நலமுண்டா மெனல்

பிரசமுண்டு வரிபாடுந் தண்டலையார்
வள நாட்டிற் பெண்க ளோடு
சரசமுண்டு போகமுண்டு சங்கீத
முண்டுசுகந் தானே யுண்டிங்
குரைசிறந்த வடிமையுண்டோ விடுக்கணுண்
வொன்றுமில்லை யுலகுக் கெல்லாம் [டோ
அரைசியுண்டேல் வரிசையுண்டா மக்களுண்
டாகின்மச்சா னன்புண் டாமே. 62

மந்திரி யில்லாச் சபையில் நீதி யில்லை யெனல்

தத்தைமொழி யுமைசேருந் தண்டலையார்
பொன்னிவள நந் தழைத்த நாட்டில்
வித்தகமந் திரியில்லாச் சபைதனிலே
நீதியில்லை வேந்தர்க் கெல்லாம்
புத்திநெறி நீதிசொல்ல மந்திரியில்
லாதொருவர் போதிப் பாரோ
நித்தலுமுண் சோற்றின்முழுப் பூசினிக்காய்
மறைத்ததுவு நிசம தாமே. 63

சமயமறிந்து பேசவேண்டு மெனல்

நேசமுடன் சபையில்வந்தால் வேளையறிந்
திங்கிதமா நிருபர் முன்னே
பேசுவதே யுசிதமல்லா னடுவிலொரு
வன்குழறிப் பேச லெல்லாம்
வாசமிகுந் தண்டலைநீ ணெறியாரே
யபிஷேக மலிநீ ராட்டிப்
பூசைபண்ணும் வேளையிலே கரடியைவிட்
டோட்டுவது போலுந் தானே. 64

கெடுவான் கேடு நினைப்பா னென்பது

மண்ணுலகிற் பிறர்குடியை வஞ்சனையிற்
கெடுப்பதற்கு மனத்தி னுலே
உன்னிடினு முரைத்திடினு மவன்றனே
கெடுவனென்ப துண்மை யன்றே
தென்னவன்சோ ழன்பணியுந் தண்டலைநீ
ணெறியாரே தெரிந்து செய்யுந்
தன்வினைதன் னைச்சுடவோட் டப்பம்வீட்
டைச்சுடவுந் தான்கண் டோமே. 65

பெரியோர் வழியைத் தள்ளலாகா தெனல்

முன்பெரியோர் தொண்டுபட்டு நடந்தவழி
தன்னைப்பழித்து முரணே பேசிப்
பின்பலரை யுடன்கூட்டி நூதனமா
நடத்துவது பிழைப்பா டெய்தில்
துன்பறியாக் கதியருளுந் தண்டலைநீ
ணெறியாரே தூய ளாகி
அன்புளதா யைப்பழித்து மகளேதோ
செயத்தொடங்கு மறிவு தானே. 66

நரஸ்துதி செய்யலாகா தெனல்

தண்ணமரு மலர்ச்சோலைத் தண்டலைநீ
ணெறியேநின் றன்னைப் பாடில்
எண்ணமிக விம்மையிலு மறுமையிலும்
வேண்டியதுண் டிதையோ ராமல்
மண்ணின்மிசை நரஸ்துதிகள் பண்ணியலைந்
தேதிரிபா வாண ரெல்லாம்
வெண்ணெய்தம திடத்திருக்க நெய்தேடிக்
கொண்டலையும் வீணர் தாமே. 67

இன்னருக்கின்னர் துணை யெனல்

அந்தணர்க்குத் துணைவேத மரசருக்குத்
துணைவய்யா ளவனி மீது
மைந்தருக்குத் துணைதாயார் தூதருக்குத்
துணைமதுர வார்த்தை யன்றே
நந்தமக்குத் துணையான தண்டலைநீ
ணெறியாரே நண்ப ரான
சுந்தரர்க்குத் துணைநாளு மேழையர்க்குத்
தெய்வமே துணையென் பாரே. 68

இன்னர் இன்னதற்கு அஞ்சா ரெனல்

போரஞ்சா ரதிவீரர் பொருளஞ்சார்
விதரணஞ்சேர் புருஷர் தோயும்
நீரஞ்சார் மறைமுனிவர் நெருப்பஞ்சார்
கற்புடைய நிறைசேர் மின்னர்
வாரஞ்சா முலையிடஞ்சேர் தண்டலையா
ரேசொன்னேன் மதமா வென்னுங்
காரஞ்சா திளஞ்சிங்கங் கனத்தவலி
யாந்தூதன் காலஞ் சானே. 69

இன்னருக்கு இன்னது ஒழியா தெனல்

உபசாரஞ் செய்பவரை விலக்கிடினு
மவர்செய்கை யொழிந்து போகா
தபசாரஞ் செய்வாரை யடித்தாலும்
வைதாலு மதுநில் லாது
சுபசாரத் தண்டலையார் வளநாட்டிற்
றிருடருக்குத் தொழினில் லாது
விபசாரஞ் செய்வாரை மேனியெல்லாஞ்
சுட்டாலும் விட்டி டாரே. 70

இழிந்த பிரபுக்கள் தரத்துக்குத் தக்க சன்மானஞ் செய்யா ரெனல்

சகமிக்க தண்டலையா ரடிபோற்று
மகராசர் சபையில் வந்தால்
சுகமிக்க வேசையர்க்குப் பொன்னூறு
கொடுப்பர்தமிழ் சொன்ன பேர்க்கோ
அகமிக்க சோறிடுவா ரந்தணருக்
கெனினுழி யரிசி யீவார்
பகடிக்கோ பணம்பத்துத் திருப்பாட்டுக்
கொருகாசு பாலிப் பாரே. 71

பணமே எல்லாவற்றிற்கும் பிரதான மென்பது

பணந்தானே யறிவாகும் பணந்தானே
வித்தையுமாம் பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும் பணமில்லா
தவர்பிணமாம் பான்மை சேர்வர்
பணந்தானே பேசுவிக்குந் தண்டலூநீ
ணெறியாரே பார்மீதிற்றுன்
பணந்தானே பந்தியிலே குலைந்தானே
குப்பையிலே படுக்குந் தானே. 72

சிவனடியார், எவர்க்கும் அஞ்சா ரெனல்

புனங்காட்டு மண்ணும்விண்ணு மஞ்சவருங்
காலனையும் போடா வென்றே
இனங்காட்டு மார்க்கண்டன் கடிந்துபதி
னுறுவடை தென்றும் பெற்றுன்
அனங்காட்டுந் தண்டலையா ரடியாரெல்
லாமொருவர்க் கஞ்சு வாரோ
பனங்காட்டு நரிதானுஞ் சலசலப்புக்
கொருநாளும் பயப்ப டாதே. 73

ஊரிலொருவனே தோழன், ஆருமற்றவனே தார மென்பது

சீரிலகுந் தண்டலையார் வளநாட்டி
லொருதோழன் றீமை தீர
வாரமிகும் பிள்ளாதனை யரிந்துண்டா
னெருவேந்தன் மணந்து கொண்ட
ஆர்வமிகு மனைக்கிழத்தி யாண்டிச்சி
வடிவுகொண்டா ளாத லாலே
ஊரிலொரு வன்றேழ னுருமற்ற
தேதார முண்மை தானே. 74

ஞானிகளின் இயல்பு

தானவனு கியஞானச் செயலுடையார்
மாதர்முலை தழுவி னுலும்
ஆனதொழில் வகைவகையாய்ச் செய்தாலு
மனுபோக மவர்பா லுண்டோ
கானுறையுந் தண்டலையா ரடிபோற்றுஞ்
சுந்தரனார் காமி போலாய்
மேனவிலுஞ் சுகம்படுக்கை மெத்தையறி
யாதெவே விளம்பி னுரே. 75

சோற்றின் செயல்கள்

சோறென்ன செய்யுமெல்லாம் படைத்திடவே
செய்யுமருள் சுரந்து காக்கும்
சோறென்ன செய்யுமெல்லா மழித்திடவே
செய்யுமதன் சொரூப மாக்தம்
சோறென்ன வெளிதேயோ தண்டலையார்
தம்பூசை துலங்கச் செய்யும்
சோறென்ன செய்யுமெலிற் சொன்னவண்ணஞ்
செயும்பழமை தோற்றுந் தானே. 76

பித்தருக்குத் தங்குணமே சிறந்ததா மெனல்

எத்தருக்கு முலுத்தருக்கு மீனருக்கு
மூடருக்கு மிரக்கம் பாரா
மத்தருக்குங் கொடிதாமவ் வக்குணமே
நற்குணமா வாழ்ந்து போவார்
பத்தருக்கு நலங்காட்டுந் தண்டலையா
ரேயறிவார் பழிப்பா ரேனும்
பித்தருக்குத் தங்குணமே நூலினுஞ்செம்
மையதான பெற்றி யாமே. 77

மனிதர், தங்கள் தங்கள் இயற்கைக்குத் தக்கபடி நடந்துகொள்ள வேண்டு மெனல்

பன்னகவே ணிப்பரமர் தண்டலையார்
நாட்டிலுள பலருங் கேளீர்
தன்னறிவு தன்னினிவு தன்மகிமைக்
கேற்றநடை தகுமே யல்லால்
சின்னவரும் பெரியவர்போ லேநடந்தா
லுள்ளதுபோஞ் சிறிய காகம்
அன்னநடை நடக்கப்போய்த் தன்னடையுங்
கெட்டவகை யாகுந் தானே. 78

பெரியோரைப்போல் சிறியோரும் தொழில்நடத்த ஆரம்பிப்பா ரெனல்

பேரான கவிராச ருடன்சிறிய
கவிகளுமோர் ப்ரபந்தஞ் செய்வார்
வீராதி வீரருடன் கோழைகளும்
வாள்பிடித்து விருது சொல்வார்
பாராளுந் தண்டலைநீ ணெறியாரே
யிருவரையும் பகுத்துக் காணில்
ஆராயு மகதேவ ராடிடத்துப்
பேய்களுநின் ருடு மாறே. 79

பொல்லாத கள்ளர் இன்ன ரென்பது

செழுங்கள்ளி நிறைசோலைத் தண்டலைநீ
ணெறியாரே திருடிக் கொண்டே
எழுங்கள்ளர் நல்லகள்ளர் பொல்லாத
கள்ளரினி யாரோ வென்ருல்
கொழுங்கள்ளர் தம்முடன்கும் பிடுங்கள்ளர்
திருநீறு குழைக்குங் கள்ளர்
அழுங்கள்ளர் தொழுங்கள்ள ராசாரக்
கள்ளரிவ ரைவர் தாமே. 80

பெரியோர் மனமும் செயலும் ஒன்றுயிருக்கு மெனல்

தனத்திலே மிகுந்தசெழுந் தண்டலையார்
பொன்னிவளந் தழைத்த நாட்டில்
இனத்திலே மிகும்பெரியோர் வாக்குமன
மொன்றுகி யெல்லாஞ் செய்வார்
சினத்திலே மிகுஞ்சிறியோர் காரியமோ
சொல்வதொன்று செய்வ தொன்று
மனத்திலே பகையாகி யுதட்டிலே
யுறவாகி மடிவர் தாமே. 81

உலகத்தோடு பொருந்தி நடக்கவேண்டு மெனல்

தேரோடு மணிவீதித் தண்டலையார்
வளங்காணுந் தேச மெல்லாம்
பேரோடும் விறல்படைத்து வீராதி
வீரனென்னும் புகழே பெற்றூர்
நேரோடு முலகத்தோ டொன்றுபட்டு
நடப்பதுவே நீதி யாகும்
ஊரோட வுடனேட நாடோட
நடுவோட லுணர்வு தானே. 82

இன்னவற்றினும் இன்னவை சிறந்தனவா மென்பது

இழைபொறுத்த முலைபாகர் தண்டலையார்
வளநாட்டி லெடுத்த ராகம்
தழுதழுத்துப் பாடுவதின் மௌனமா
யிருப்பதுவே தக்க தாகும்
குழைகுழைத்த கல்வியினுங் கேள்வியினுங்
கல்லாமைக் குணமே நாளும்
வழுவழுத்த வுறவதனின் வயிரம்பற்
றியபகையே வண்மை யாமே. 83

சிவனடியாரில் பெரியோர் சிறியோரென்ற வித்தியாசமில்லை யெனல்

அருப்பயிலும் தண்டலைவாழ் சிவனடியா
ரெக்குலத்தோ ராஞ லென்ன
உருப்பயிலுந் திருநீறுஞ் சந்தனமுங்
கண்டவுட னுகந்து போற்றி
இருப்பதுவே முறைமையல்லா லேழையென்று
சிறியரென்று மிகழ்ந்து கூறின் [ஞ்
நெருப்பினையே சிறிதென்று முன்ருனை
தனின்முடிய நினைந்த வாறே. 84

பெண்ணாசை ஆகாதெனல்

உரங்காணும் பெண்ணாசை கொடிதாகும்
பெண்புத்தி யுதவா தாகும்
திரங்காணும் பெண்வார்த்தை தீதாகும்
பெண்சென்மம் சென்ம மாமோ
வரங்காணும் தண்டலைநீ ணெறியாரே
பெண்ணிடத்தின் மயக்கத் தாலே
இரங்காத பேருமுண்டோ பெண்ணென்ற
வுடன்பேயு மிரங்குந் தானே. 85

பரத்தையர் சேர்க்கை கூடாதெனல்

மையிலே தோய்ந்தவிழி வஞ்சியரைச்
சேர்ந்தவர்க்கு மறுமையில்லை
மெய்யிலே பிணியுமுண்டாங் கைப்பொருளுங்
கேடாகி விழல ராவார்
செய்யிலே வளந்தழைத்த தண்டலையார்
வளநாட்டிற் றெளிந்த தன்ரே
கையிலே புண்ணிருக்கக் கண்ணுடி
பார்ப்பதென்ன கருமந் தானே. 86

கெட்டவிடத்தில் சேர்ந்து நல்லது செய்தாலும் கெட்டதாகக் கருதப்படு மென்பது

காலமறி தண்டலையார் வளநாட்டிற்
கொலைகளவு கள்ளே காமம்
சாலவருங் குருநிந்தை செய்பவர்பான்
மேவியறந் தனைச்செய் தற்கும்
சீலமுடை யோர்நினையார் பனையடியி
லேயிருந்து தெளிந்த வாவின்
பாலினையே குடித்தாலுங் கள்ளென்பார்
தள்ளென்பார் பள்ளென் பாரே. 87

சூது கூடாதென்பது

கைக்கெட்டா தொருபொருளுங் கண்டவர்க்கு
தகையாகுங் கன்மே யில்லை
இக்கட்டாம் வருவதெல்லாம் லாபமுண்டோ
கவறுகையி லெடுக்க லாமோ
திக்கெட்டே றியகீர்த்தித் தண்டலையார்
வளநாட்டிற் சீசீ யென்னச்
சொக்கட்டா னெடுத்தவர்க்குச் சொக்கட்டான்
சூதுபொல்லாச் சூது தானே. 88

புற்றடிமண் குருந்தடிமண் முதலியவற்றின் பிரயோசனம்

தனமேவும் புற்றடிமண் குருந்தடிமண்
பிரமகுண்டந் தன்னி லேய்மண்
மனமேவு மணியுடனே மந்திரமுந்
தந்திரமு மருந்து மாகி
இனமேவுந் தண்டலையார் தொண்டருக்கு
வந்தபிணி யெல்லாந் தீர்க்கும்
அனுபோகந் தொலைந்தவுடன் சித்தியாம்
வேறுமுள வவிழ்த்தந் தானே. 89

மானத்தின் உயர்வு

கானமருங் கவரியொரு மயிர்படினு
மிறக்குமது கழுதைக் குண்டோ
மானமுடன் வாழ்பவனே மாபுருஷன்
சுயோதனனே மறந்தா ருண்டோ
ஆனகஞ்சே ரொலிமுழங்குந் தண்டலையா
ரேசொன்னே னரைக்கா சுக்குப்
போனவபி மானமினி யாயிரம்பொன்
கொடுத்தாலும் பொருந்தி டாதே. 90

துரைகளை யடுத்திருப்பார்க்குப்
பலனுண்டாமெனல்

நிலைசேரு மதிகவித ரணசுமுக
துரைகளுட னேச மாகிப்
பலநாளு மேயவரை யடுத்தவர்க்குப்
பலனுண்டாம் பயமு மில்லை
கலைசேருந் திங்களணி தண்டலையா
ரேசொன்னேன் கண்ணிற் காண
மலைமீதி லிருப்பவரை வந்துபன்றி
பாய்வதெந்த வண்ணந் தானே. 91

பெரியோ ரியல்பும், சிறியோ ரியல்பும்

பொறுமையுட னறிவுடையா ரிருந்தவிடம்
விளக்கேற்றிப் புகுத வேண்டும்
கெறுவமுட னகந்தையுள்ளா ரிறுமாந்து
நடந்துதலை கீழாய் வீழ்வார்
வறுமையினு மறுமையினுங் காணலாந்
தண்டலையார் வாழு நாட்டில்
நிறைகுடமோ தளும்பாது குறைகுடமே
கூத்தாடி நிற்ப தாமே. 92

நல்லோர் செல்வம் பலர்க்கும் பயன்படு மென்பது

ஞாலமுறு நல்லவர்க்குச் செல்வம்வந்தா
லெல்லவர்க்கு நாவ லோர்க்கும்
காலமறிந் தருமையுடன் பெருமையறிந்
துதவிசெய்து கனமே செய்வார்
மாலறியாத் தண்டலைநீ ணெறியாரே
யவரிடத்தே வருவார் யாரும்
ஆலமரம் பழுத்தவுடன் பறவையின்பாற்
சீட்டெவரே யனுப்பு வாரே. 93

நாணமற்றூர் தன்மை

சேணிலகு மதிச்சடையார் தண்டலையார்
வளநாட்டிற் சிறந்த பூணிற்
காணவரு நாணுடையார் கனமுடையா
ரல்லாதார் கரும மெல்லாம்
ஆணவலம் பெண்ணவல மாடியகூத்
தவலமென வலைந்து கேடாம்
நாணமில்லாக் கூத்தியர்க்கு நாலுதிக்கும்
வாயிலெனு நடத்தை யாமே. 94

கெட்ட மனைவி இயல்பு

அடுத்தமன தொறும்புகுவாள் கணவனுணு
முனமுண்பா ளடக்க மில்லாள்
கடுத்தமொழி பேசிடுவாள் சிறுதனந்தே
டுவளிவளைக் கலந்து வாழ்தல்
எடுத்தவிடைக் கொடியாரே தண்டலையா
ரேயெவர்க்கு மின்ப மாமோ
குடித்தனமே கெடவேண்டிப் பிடாரிதனைப்
பெண்டுவைத்துக் கொண்ட தாமே. 95

செல்வருக்கு வலிமையுண்டென்பது

களித்துவருஞ் செல்வருக்கு வலிமையுண்டு
மிடியருக்குக் கனந்தா னுண்டோ
வகைத்தமலை யெனுஞ்சிலையார் தண்டலைசூழ்
தருமுலக வழக்கம் பாரீர்
ஒளித்திடுவர் தம்மனையிற் பெண்டிரைக்
கண்டவரு மொன்றும் பேசார்
இகைத்தவன்பெண் டிரென்ரு ரெல்லார்க்கு
மச்சினியா யியம்பு வாரே. 96

பிறர் வருத்த மறியாதவர் இன்னவ ரென்பது

நொந்தவரும் பசித்தவரும் விருந்தினரும்
விரகினரு நோயுள் ளோரும்
தந்தமது வருத்தமல்லாற் பிறருடைய
வருத்தமது சற்று மெண்ணூர்
இந்துலவுஞ் சடையாரே தண்டலையா
ரேசொன்னே னீன்ற தாயின்
அந்தமுலைக் குத்துவலி சவலைமக
வோசிறிது மறிந்தி டாதே. 97

இரவலர்க்குப் போசன சுகமில்லை யென்பது

ஆழியெல்லாம் பாலாகி யவனியெல்லா
மன்னமய மானு லென்ன
சூழவரு மிரவலர்க்குப் பசிதீர
வுண்டிருக்குஞ் சுகந்தா னுண்டோ
ஏழுலகும் பணியவருந் தண்டலையா
ரேசொன்னே னெந்த நாளும்
நாழிநெல்லுக் கொருபுடவை விற்றுலு
நிருவாண நாய்க்குத் தானே. 98

அற்பருக்கு அறிவிராதென்பது

கொச்சையிலே பாலுமுண்டோ கூத்தியர்க
டம்மிடத்திற் குணந்தா னுண்டோ
துச்சரிடத் தறிவுண்டோ துச்சரெங்கே
போனலுந் துரையா வாரோ
நச்சரவத் தொடையாரே தண்டலையா
ரேயிந்த நாட்டல்லாமல்
அச்சியிலே போனலு மகப்பையரைக்
காசதன்மே லார்கொள் வாரே. 99

கயவர் குணம் அகற்றலாகாது என்பது

நித்தமெழு நூறுநன்றி செய்தாலு
மொருதீது நேரவந்தால்
அத்தனையுந் தீதென்பார் பழிகருமக்
கயவர்குண மகற்ற லாமோ
வித்தகஞ்சேர் தண்டலையார் வளநாட்டிற்
சாம்பலிட்டு விளக்கினலும்
எத்தனைசெய் தாலுமென்ன பித்தளைக்குத்
தன்னுற்ற மியற்கை யாமே. 100

முற்றிற்று.



சில பிரதிகளிலே
அதிகமாகக் காணப்படும் பாடல்கள்

வம்பருக்கு அதிகார மிருப்பதால் பயனில்லை யெனல்

வம்பரெல்லா மாதிக்க மிகுந்திருந்தா
லென்னவது மாறி யோய்ந்த
பம்பரமாய் மூலையினிற் கிடந்திட்டா
லென்னவதிற் பலனுண்டாமோ
கம்புலவுந் தண்டலையார் வளநாட்டில்
வருந்துபல கழுதை தாமும்
அம்புவியிற் கிடந்தென்ன பாதாளந்
தனிற்கிடந்தென் னுகுந் தானே. 1

கடுந்தேட்டுக் கண்ணைக் கெடுக்கு மென்பது

தண்டலையா ரடிபணிந்து தவந்தான
மூபகாரந் தருமஞ் செய்து
கொண்டபொருள் விலைவாசி காணிதே
டிக்கோடி கொடுப்ப தல்லால்
வண்டருமா யொன்றுபத்து விலைகூறி
யநியாய வட்டி வாங்கிக்
கண்டவர்தங் கடுந்தேட்டுக் கண்ணையறக்
கெடுக்குமிது கருமந் தானே. 2

நல்ல தொழிலுக் கேவியபோது கெட்ட தொழிலைச் செய்வோ ரியல்பு

இதுகரும மிதனுலே யிதைமுடிப்பா
யெனத்தொழிலை யெண்ணிச் செய்தால்
அதுகருமம் பாராமற் றிருடியுமள்
ளியும்புரட் டா யலைவ தெல்லாம்
மதியணியுந் தண்டலையார் வளநாட்டி
னீராடு மாதர் தங்கள்
முதுகினைத்தே யெனச்சொன்னுல் முலைமீது
கையையிட்ட முறைமை தானே. 3

சிறியார்க்கு எதனாலு மகிமை யுண்டாகா தென்ன்

பார்க்குளறி விருந்தாலும் படித்தாலுங்
கேட்டாலும் பணித்து வேத
மார்க்கமுட னடந்தாலுஞ் சிறியவர்க்குப்
பெரியவர்கள் மகிமை யுண்டோ
ஆர்க்குமருங் கதியுதவுந் தண்டலையா
ரேசொன்னே னுகா யத்தில்
ஊர்க்குருவி தானுயரப் பறந்தாலும்
பருந்தாகா துண்மை தானே. 4

எல்லாம் தெய்வச்செய லென்பது

வல்லமையான் முடிவதுண்டோ தலைகீழாய்
நின்றாலும் வருவ துண்டோ
அல்லதுதா னவன்செயலே யல்லாம
றன்செயலா லாவ துண்டோ
புல்லறிவான் மயங்காம றண்டலையா
ரடிபணிந்து புத்தி யுண்டாய்
இல்லதுவா ராதுநமக் குள்ளதுபோ
காதெனவே யிருக்க லாமே. 5

காரியமறியார் செய்கையின் இழிவு

பேருரைகண் டறியாது தலைச்சுமையே
டுகள்சுமந்து பிதற்று வோனும்
போரினடந் தறியாது பதினெட்டா
யுதஞ்சுமந்த புல்லி யோனும்
ஆரணிதண் டலைநாத ரகமகிழாப்
பொருள்சுமந்த வறிவி லோனும்
காரியமொன் றறியார்க்குங் குமஞ்சுமந்த
கழுதைக்கொப் பாவர் தாமே. 6

பண்புடையா ரியல்பும், பண்பில்லா ரியல்பும்

கற்பூர வல்லியொரு பாகர்செழுந்
தண்டலையார் கடலேழ் சூழ்ந்த
நற்பூமி தனிற்பிறந்தோ ரெல்லோரு
மக்களென நாட்ட லாமோ
அற்பூரும் பண்புடையார் நற்குணமும்
பண்பிலா ரழகுங் காணிற்
பொற்பூவில் வாசனையும் புன்முருக்கம்
பூவுமெனப் புகல லாமே. 7

தருமப் பயன்

சலியாமற் றண்டலையி னுயகனு
ரருள்கொண்டு தருமஞ் செய்யப்
பொலிவாகிக் கொழுமீதில் வந்தபொரு
ளீந்தவைதாம் போக மீந்தால்
மலிவாகிச் செல்வமுண்டாம் வயன்முழுதும்
விளைந்திடுநன் மாரி யாகும்
கலியாணப் பஞ்சமில்லை களப்பஞ்ச
மில்லையொரு காலுந் தானே. 8

இரக்கப் போனலும் சிறக்கப் போகவேண்டு மெனல்

இரக்கத்தா லுலகாளுந் தண்டலையா
ரேசிவனே யெந்த நாளும்
இரக்கத்தான் புறப்பட்டே ரென்றனையு
மிரக்கவைத்தீ ரிதனு லென்ன
இரக்கத்தா னதிபாவ மிரப்பதுதீ
தென்றுலு மின்மை யாலே
இரக்கப்போ னலுமவர் சிறக்கப்போ
வதுகரும மென்ன லாமே. 9

காஞ்சிபுரம் - வித்வான்

சபாபதி முதலியார் இயற்றிய

8. அருணசல சதகம்

காப்பு

நேரிசை வெண்பா

தீருநாதன் றேடரிய சேவடியான் றன்மேல்
அருணை சலசதக மன்பாய்த்—தெருணைவால்
சொல்லுதற்கு மும்மதத்த தும்பிமுகத் தான்பதுமை
மெல்லடியே நற்றுணையா மே.

நூல்

கலி விருத்தம்

பொன்பாவுகொன் றையினே டுவான்
புனலாறுவெண் மதிசூடுநீ
என்பாரமு மினிதாவணிந்
திடுதன்மையா லெளியோன்சொலும்
புண்பாடலிங் கிதுதன்னையும்
போற்றிக்கொள்வா யெனவுள்ளெழும்
அன்பாலுரைத் தேன்கொண்டருள்
அருணசலா ! அருணசலா. 1

கடியார்துள வத் * தொங்கலான்
கமலப்புது மலர்மேவினன்
படியூடிடந் தடிதேடவும்
பறந்தன்னமாய் முடிதேடவும்
கொடியேன்மன மேகோயிலாக்
குடிமேவினை யெனிலெய நின்
அடியாரெலா மென்சொல்லிடார்
அருணசலா! அருணசலா. 2

* தொங்கல் - மாலை.

கற்பம்மனு கற்பம்முப
கற்பஞ்மெனு முறையால்வரு
பொற்பின்மிகு திருநீறணி
புனிதர்க்கலா னின்ருளெனு
நற்பங்கய நறுமாமலர்
நணுகும்மரு டானெய்துமோ
* அற்பின்னடி யார்போற்றிடும்
அருணசலா! அருணசலா. 3

வில்லார்மலர்க் கணையேவிய
வேளைப்பொடி யாச்செய்தனை
கல்லாலெறிந் தவன்முத்தியே
காணப்பரிந் தனையாதலாற்
பொல்லாமனத் தவனென்றனைப்
புறமேவிடுத் திடலையனே
அல்லார் † களத் தெம்மண்ணலே
அருணசலா ! அருணசலா. 4

முடிபட்டமென் றனக்கேமலர்
முகிழ்போற்குழைந் திடக்கண்டிடும்
வடிபட்டநோக் குடையாள்புவி
வானேடளித் திடுவாள்மனம்
பொடிபட்டநின் றிருமேனியிற்
பொரு ‡ பூழியன் கையிற்பிரம்
படிபட்டபோ தென்பட்டதோ
அருணசலா ! அருணசலா. 5

வானுகிளை வளியாகினை
மால்வேதனே டமரர்க்கெலாங்
கோனுகினை யடியார்மனங்
குடிகொண்டவ ருணவூறிடுந்
தேனுகினை யமுதாகினை
தேரூர்ந்திடர் செறிபோரினில்
ஆனுகிமால் வரவூர்ந்திடும்
அருணசலா! அருணசலா. 6

* அற்பு - அன்பு. † களம் - கண்டம். ‡ பூழியன் - பாண்டியன்.

புல்லாகியே பூடாகியே
புழுவாகியே மரமாகியே
கல்லாகியே னுந்நின்னகர்க்
கண்மேவிலே னினியெங்ஙனே
பொல்லாப்பிறப் பொழிந்துய்குவேன்
புலநாயினே னிமயந்தரும்
அல்லார்குழற் கொருபாகனே
அருணைசலா! அருணைசலா. 7

படைக்குந்தொழி லயற்கீந்தனை
பரிக்குந்தொழி லரிக்கீந்தனை
துடைக்குந்தொழி லரற்கீந்தனை
துதிக்குந்தொழி லடியார்க்கெலாங்
கிடைக்கும்படிக் கினிதீந்தனை
கிளரும்வகை தனையன்றுநீ
அடைக்குந்தொழி லாளான தென்
அருணைசலா! அருணைசலா. 8

பரிந்திட்டற மெண்ணுன்குமுன்
பயில்வாளிருக் கவுநின்னருள்
சுரந்திட்டவன் ருெண்டர்க்கெனச்
சோறன்றுநீ கச்சூரினில்
இரந்திட்டதென் னேசொல்லுவா
* யெகினத்தவன் றலையொன்றினை
அரிந்திட்டதிற் பலிதேர்ந்திடும்
அருணைசலா! அருணைசலா 9

மையார்விழி மலைமாதொடு
மருவுந்திருக் கோலத்தையோர்
கையார்புனன் மலரானிதங்
காணப்புரி யாதென்னையோ
மெய்யானது வேருகவே
வேதாவரி யுழல்வுற்றனர்
ஐயாவவர் மதியென்கொலோ
அருணைசலா! அருணைசலா. 10

* எகினம் - அன்னம்.

வாதாசன ஞண்வின்மலை
மாலார்கணை மறையேபரி
போதாசன னேசாரதி
புவியேரத மாக்கொண்டுபின்
நாதாபுர நகைத்திட்டது
நவிலும்மவ ரகமங்கவோ
ஆதாரமா நினுமேலுறும்
அருணைசலா! அருணைசலா. 11

முன்னுளிதழ் நறுமாலையு
முரிதோலுமே புனையத்தரும்
பொன்னு * ரித ழியினெடும்வெம்
புலியாஜின மற்றிவைதம்மொடு
மன்னுப்பயி ரறவெண்ணியோ
வளர்மாமலை யுருவாயினை
அன்னையெனு மன்பர்க்கருள்
அருணைசலா! அருணைசலா. 12

மேனுளொரு விழியுன்பத
மேல்சாத்திய மாயோன்பெரு
மீனுனநா லினுமாங்கவன்
விழிகொண்டது ருசியென்றுதீங்
கானுர்கரும் பதைவேரொடு
கூர்கின்றது போலானதால்
ஆனுயனுர் தொழுமையனே
அருணைசலா! அருணைசலா. 13

பாரின்கணே யைந்தாகினை
பகர்நீரிடை நான்காகினை
சேருந்தழற் கண்மூன்றெனச்
செறிந்தாயிவளிக் கிரண்டாகினை
நேரும்விணி லொன்றுகினை
நிமிரும்முயிர்க் குயிராகினை
ஆருன்னிலை யறிவார்சொலாய்
அருணைசலா! அருணைசலா. 14

* இதழி - கொன்றை.

மாருவரந் தருவோமென
வைகுந்தனும் மலர்த்தேவனு
நூருயிர முறைவந்தெதிர்
நுவல்கிற்கினு நின்னன்பர்கள்
பேருயதை நினைவார்கொலோ
பிறவிக்கட லதுநீந்தவே
ஆருறுநீத் தவர்வாழ்த்துறும்
அருணைசலா! அருணைசலா. 15

ஊனந்தரு மிவ்வாழ்வினி
லுலையேற்றுமா மையினண்ணியே
ஈனந்தொடர் துயர்மேவினே
னென்செய்குவே னெளியேனருண்
மோனந்தரு நிலையீதென
மொழிவாயெனி லினியுய்குவேன்
ஆனந்தமே யுருவாகிய
அருணைசலா! அருணைசலா. 16

இடியுங்கரை மரமாமென
வெண்ணுமவிவ் வுடறன்னையோர்
பிடியுங்குறை யாதுண்டுநான்
பெரிதேவளர்த் துனதன்பினில்
படியுங்குண மிலனாயினும்
பரிவாருனை யலதியாவரே
அடியும்முடி யுங்காணெனை
அருணைசலா! அருணைசலா. 17

* மட்டார்மலர் கொடுநின்னடி
மலர்பூசனை செய்கின்றிலார்
மொட்டார்தனத் தார்தம்மையே
முயங்கித்திகைப் பாரையையோ
கெட்டாரவர் தமக்குன்னருள்
கிடையாதுமுப் புரநீறெழ
அட்† டாரணன் றெழநின்றருள்
அருணைசலா! அருணைசலா. 18

* மட்டு - தேன். † ஆரணன் - பிரமன்.

பாம்பின்விட வாயிற்குளே
படுதேரைபோ லெளியேனுளந்
தேம்பிப்புல னிற்சிக்குருத்
திகைப்புற்றுநல் லுணர்வின்றியே
சாம்பிக்கிடக் கின்றேனரு
டருவாயெனி லினியுய்குவேன்
ஆம்பற்சிறு வாய்பங்கனே
அருணைசலா! அருணைசலா. 19

வீட்டுக்கொரு வித்தாகிய
மெய்ஞ்ஞான நன் னெறிதேர்கிலார்
பாட்டுக்கருள் செய்வாயெனும்
பண்பேனுநன் குணர்கிற்கிலார்
கேட்டுக்கிட மாய்நாடொறுங்
கிறிசெய்குவா ருய்வார்களோ
ஆட்டுக்குவல் லவனுகிய
அருணைசலா! அருணைசலா. 20

செம்பிற்களிம் பதுநீங்கவே
செம்பொன்னெனத் திகழ்தன்மைபோல்
பம்புற்றமும் மலநீங்கவே
பரமாவைநீ யெனவோதினை
வம்புற்ற நா யேனுேர்ந்திலேன்
மயிலைக்குளுங் கயிலைக்குளும்
அம்பர்க்குளு மகிழ்பூத்திடும்
அருணைசலா! அருணைசலா. 21

பாராளுமன் னவர்செல்வமும்
பகரும்விசும் பிறைசெல்வமுஞ்
சீரானவே தன்செல்வமுந்
திருமான்மகிழ் தருசெல்வமுங்
காராருமின் னெனவெண்ணியுன்
கழல்போற்றுவார் தஞ்செல்வமிங்
காராலுமோர் வொண்ணுததாம்
அருணைசலா! அருணைசலா. 22

உனக்குண்மறைந் திந்நாளுநா
னுறல்போலென தருளாவினி
யெனக்குண்மறைந் திருமைந்தனே
யென்றுய்குரு வாய்வந்துநீ
நினைக்குந்தொறு நினைக்குந்தொறு
நீயன்றியொன் றுங்காண்கிலன்
அனக்குண்டமோர் * பூதக்கருள்
அருணசலா ! அருணசலா. 23

காவிக்குநேர் விழிமாதரார்
காமக்கட லதின்மூழ்கிய
பாவிக்குநின் னிருதாட்புணை
பாலித்திடா யெனிலுய்வனே
நாவிக்கருள் செயுமையனே
ஞானத்தவர் புகழ்தூயனே
ஆவிக்குறு துணைமெய்யனே
அருணசலா ! அருணசலா. 24

ஒன்றுகினை பலவாகினை
யுளதாகினை யிலதாகினை
யென்றுரண மதுகூறுவ
தெண்ணுதுதாம் பரமென்றிடுங்
கன்றுல்விள வெறிமாயவன்
கமலத்தயன் வெருவுற்றிட
அன்றுரழல் வரையாகினை
அருணசலா ! அருணசலா. 25

வளர்கார்த்திகை மாதந்தொறும்
வருகார்த்திகை நாடன்னிலே
பளகானதில் லாவன்பர்கள்
பரிவாகவே யேத்தித்தொழக்
கிளர்மாமலை தனிலேயொளி
கெழுசோதிகாட் டாநின்றநின்
அளவார்தெரி பவரையனே
அருணசலா! அருணசலா. 26

* பூதக்கு - பூதத்துக்கு.

ஒருபான்மல ரயனுகவு
மொருபாறிரு மாலாகவும்
பொருவாவருட் டிருமேனியாய்ப்
பொலிவாயிதன் றியுமாமலே
வருபாவையோர் பாலாகவும்
வருவாயிதன் றியுமையனே
யருவாவையுன் னருளென்னையோ
அருணைசலா! அருணைசலா. 27

ஒப்பான தி லொருமூர்த்தியா
யொருபாதமார் திரிமூர்த்தியாம்
அப்பான்மைபோன் மலையாகியு
மருளின்பெரு மையினையனே
இப்பாருளோர் கண்டேதொழ
விருந்தாய்நதி மதியாடர
* வப்பார்சடை முடியண்ணலே
அருணைசலா! அருணைசலா. 28

இருப்பானது வெளிமாமலே
யிடத்தோர்மர கதமாமலே
மருப்பார்மத மலைபெற்றது
வனவில்லொரு பொன்மாமலே
விருப்பாமித ஞலோவெளி
மேவும்மலை வடிவாயினை
யருப்பாரெருக் கணிமாலையாய்
அருணைசலா! அருணைசலா. 29

பொறியின்வழி மனம்போக்கிடார்
பொன்னந்திரு வடிசேர்வதுஞ்
செறியும்மிரு வினையாளர்க
டிகழும்பிற வியிலாழ்வதும்
வெறிகொண்மரை மிதிக்கெதிர்
விகசித்தவா டுதல்போலுமென்
றறியுந்நிலை யெற்கீந்தருள்
அருணைசலா! அருணைசலா. 30

படியாவுமோர் குடைநீழலிற்
பரிக்கும்மவர் மகிழ்செல்வமுங்
கடியார்தரு நிழல்வைகுறுங்
* கண்ணுயிரன் மகிழ்செல்வமு
நெடியோர்மகிழ் தருசெல்வமு
நின்னன்பர்தாள் பணிந்தேத்திடும்
அடியாரடிப் பொடிநேருமோ
அருணைசலா! அருணைசலா. 31

காட்டுக்குளே தவஞ்செய்குவார்
கனலின்னடுத் தவஞ்செய்குவார்
தேட்டுற்றநற் கதிகாணவென்
செயலிங்கிதுன் கோயிற்குளே
வேட்டுற்றல கிட்டேதிரு
மெழுகிட்டிலார் கதிகாண்பரோ
ஆட்டுக்குமன் றினினின்றிடும்
அருணைசலா! அருணைசலா. 32

பிறவாநெறி தருவானுநீ
பிறக்கும்படி செய்வானுநீ
யிறவாவரந் தருவானுநீ
யிறக்கும்படி செய்வானுநீ
மறவாதுனை வாழ்த்தும்படி
வந்தாளவும் வேண்டும்மையா
† அறவாணர்வாழ்த் தொலிமேவிய
அருணைசலா! அருணைசலா. 33

உன்ருண்மலர் முடியாகவே
யுறுமன்பர்கூற் றுவர்பெற்றபே
ருன்றேனுமா லயன்வானுளோ
ருறுகின்றில ரெனிலாங்கவர்
கன்ருர்களோ லிதுநன்றுகொல்
கருணைகரா மதிசேகரா
அன்ருலமுண் டருள்செய்திடும்
அருணைசலா! அருணைசலா. 34

---

* கண்ணுயிரன் - இந்திரன்.

† அறவாணர் - தருமத்தினுல் வாழ்வோர்.

மானேந்தினை மழுவேந்தினை
மதியேந்தினை நதியேந்தினை
கானேந்திலா வெருக்கேந்தினை
கமலன்முடி கரத்தேந்தினை
வானேந்தினு ரெலும்பேந்தினை
வறியேன்மொழி யையுமேந்திநல்
ஆனேந்தவே வந்தாளுவாய்
அருணைசலா! அருணைசலா. 35

திருமாலொரு கண்வாங்கியுன்
செஞ்சேவடி மிசைசாத்தினன்
கருமாவடர் கண்ணப்பருன்
கண்ணுக்கொரு கண்சாத்தினர்
பெருமானிவர் களில்யாவரே
பெரியோரெனச் சிலரெண்ணுவார்
அருமாதவர் மெய்யோர்குவார்
அருணைசலா! அருணைசலா. 36

பூமாந்தினேன் முதலோர்தமைப்
பொன்றச்செய்வை யெனவோர்ந்துமே
காமாந்தக ஞவாயெனுங்
கருத்தேபெரி தாக்கொண்டுவீ
ணைமாந்தர்கள் புகழ்வாரிது
வெறியோமிகு மஞ்ஞான்மோ
ஆமாம்பிணை திரிசாரல்சூழ்
அருணைசலா! அருணைசலா. 37

கல்லாணமுன் கைநீட்டியே
கரும்புண்ணுமா றருள்செய்தநீ
பொல்லாதகன் மனமுன்னருட்
போதந்தனை யுண்ணச்செய
வல்லாயலை போனிற்பதென்
மாயஞ்சொலாய் மகிழ்தொண்டர்கள்
அல்லாதவர்க் கரிதாகிய
அருணைசலா! அருணைசலா. 38

வாட்டேறுகண் ணிசைஞானியார்
மைந்தன்றணி யாட்கொண்டநாள்
பாட்டேயருச் சனையாமெனப்
பகர்ந்தாயம் துணர்ந்தும்பிறர்
மாட்டேகவி சொலவெண்ணுமென்
மருணீக்குவா யிருவோர்கள்போ
ராட்டேசெய வவர்முன்வரும்
அருணாசலா! அருணாசலா. 39

ஈனந்தரு பிறவிக்கட
லிடையேழையேன் பலகால்விழ
ஊனந்தரும் வினையாம்வளி
யுறுவித்தலா லுனதின்னருள்
மோனந்தரு குகைசேரவே
முன்னிக்கொடு வந்தேனையா
ஆனந்துமா டியவையனே
அருணாசலா! அருணாசலா. 40

நாய்தன்னிலுங் கடையாகிநின்
னல்லன்பர்தம் பானண்ணிலேன்
வாய்தன்னினின் றணிவாழ்த்திலேன்
வணங்கிப்பணி செய்தும்மிலன்
பேய்தன்னெடா டியவாறுபோற்
பித்தேறுமென் னகநண்ணினை
ஆய்தன்னினு மருள்செய்திடும்
அருணாசலா! அருணாசலா. 41

சந்தித்துமா லயன்வாதுசெய்
தலினுங்கவர்க் கரிதாகினை
வந்தித்தலா லொருபாணன்முன்
வந்தாய்விற கோதிக்கொடு
சிந்தித்திடா லவரித்திறந்
தெளிவெய்தியின் னருள்சேர்குவார்
அந்திப்பிறை முடியாளனே
அருணாசலா! அருணாசலா. 42

உமையாளரு ளனையாகவு
மொருதந்தைநீ தானுகவுந்
தமருன்னடி யார்ராகவுஞ்
சார்பற்றவர் தண்ணநோக்குறி
னமனுர்நணு காதோடுத
ஞயேனுணர்ந் துனையண்டினேன்
அமர்நீதியார் தொழுமையனே
அருணைசலா! அருணைசலா. 43

கார்மேவிய களங்கண்டனன்
கழன்மேவுமால் விழிகண்டனன்
போர்மேவுசூ லங்கண்டனன்
போதன்றகூக் கரங்கண்டனன்
சீர்மேவுமா திடங்கண்டனன்
சிறியேனிட ரினிக்காண்பனே
ஆர்மேவுதா ரணிதோளனே
அருணைசலா! அருணைசலா. 44

திருமாலய னுனதாண்முடி
தெரிவானல மந்தார்முனம்
ஒருமாதுவந் தியின்வாய்தலி
னுறுமாறறி கிலராகினல்
லுருமாறிய திறனென்னையோ
வுமைபாகனே யருளாகனே
அருமாதவர் பலரேத்திடும்
அருணைசலா! அருணைசலா. 45

வல்லாளமன் னவன்வாழவோர்
மகவாயவற் கருளீந்திடும்
* வில்லார்மதி முடியண்ணலே
விணையேன்பிறந் திடவைப்பையேல்
கல்லாய்மர மாயேனுநீ
கனிவோடமர் தருமிப்பதி
யல்லாவிடந் தனில்வைத்திடேல்
அருணைசலா! அருணைசலா. 46

* வில் - பிரகாசம்

வரமாமல ரவனீந்திட
வானேர்களுக் கிடரேசெயு
நரகாசுரன் றனைவெல்லமுன்
னராயணன் றவஞ்செய்தலின்
ஒருபாதியாங் கவனுக்களித்
தொருபாதிதே விக்கீதலால்
அருவாய்மரு வினையோசொலாய்
அருணைசலா! அருணைசலா. 47

எள்ளுக்கு ளெண் ணெய்போலவு
மெறிமாமணி யொளிபோலவுங்
கள்ளுற்றபூ மணம்போலவுங்
கனகத்துறு மொளிபோலவுஞ்
விள்ளுற்றிடா துயிர்தோறுநீ
மேவுற்றதோர்ந் தவர்ப்போற்றுவேன்
அள்ளுற்றநீ றணிமெய்யனே
அருணைசலா! அருணைசலா. 48

உமையாளுனன் விழிமூடுநா
ளொளிருங்கதிர் மதிவானிடை
சமைவாயிருக் கவுநள்ளிரு
டரணிக்குண்மூ டியதன்மையாற்
கமையாருநின் விழிகாரணக்
கதிர்மாமதி யெனவோர்ந்தனன்
அமைவாமனத் தவர்போற்றிய
அருணைசலா! அருணைசலா. 49

பெருமைக்கட னிறவண்ணனும்
பிரமன்முத லியதேவரும்
ஒருமிக்கமாய் தருமூழிதோ
ருருதானுமாய் தரனீங்கவே
தருமக்கட வுள்வெள்விடை
தானுய்வர வுவந்தூர்ந்திடும்
அருமைத்திரு வருளாளனே
அருணைசலா! அருணைசலா. 50

கலையார்மதி கதிராகுநின்
கண்ணேரிரண் டையுமூடுநாண்
மலையான்மகள் கழுவாய்செயும்
வகைசொல்லியே வினைநின்னரு
ணிலையீதினி னெவருய்ந்திடார்
நிமிர்செஞ்சடை மிசையேமதி
அலையார்நதி யொடுசூடிய
அருணைசலா! அருணைசலா. 51

தக்கன்முனிந் தேகூறிய
சாபந்தொடர்ந் தெய்தாதுனைப்
புக்கண்முசந் திரனேர்கலை
பொலிவெய்தவுன் முடிமீதிலே
வைக்கும்படி யச்சந்திரன்
மனநைந்துசெய் தவமென்னையோ
* அக்கன்புட னணிமெய்யனே
அருணைசலா! அருணைசலா. 52

உன்னன்னிலை வினவும்பொழு
துமைதன்னையே வியந்தாளென
மன்னும்யமு னையிற்சங்கமாய்
மருவிச்சிறு விதிமாமக
ளென்னப்பொலி கென்றேவிய
தெவர்க்கும்மரு டரவல்லவோ
அன்னத்தவன் பணியையனே
அருணைசலா! அருணைசலா. 53

விண்ணுளுமிந் திரனக்கினி
† விறலந்தக னிருதர்க்கிறை
தண்ணுர்வரு ணன்வாயுவே
தனதன்னுட னீசானனும்
உண்ணுடிமூழ் கியதீர்த்தமின்
ருன்றேயெம திடர்தீர்த்திட
அண்ணுமலை யெனநீடிய
அருணைசலா! அருணைசலா. 54

* அக்கு - சங்குமணி. † விறல் - வெற்றி.

பூசிக்கநன் மலருண்டு தீம்
புனலுண்டுநன் னெறிதேர்குவான்
வாசிக்கவா கமமுண்டுநின்
மலர்நோக்கமு முண்டாகுமே
னேசித்தெளி யேனுய்குவே
னீரோடுகண் மணிபூண்டுளத்
‡ தாசற்றவர் தொழுமையனே
அருணைசலா! அருணைசலா. 55

திருவாசக மொன்றுண்டுநற்
றேவாரமு முண்டாங்கவை
கருவாய்வழி வாராநெறி
காட்டும்மெனச் சான்றோர்சொலத்
தெருளாதுவீ ணேயையையோ
தெருநாயினுங் கடையாயினேன்
அருமாதவர் துதியோவிலா
அருணைசலா! அருணைசலா. 56

பல்லார்விடப் பணியாமுனைப்
பரிந்தேதொழ வருளீந்ததும்
பொல்லாவிட முண்டண்டரைப்
புரந்தாள்வது மோர்ந்தும்முனைக்
கல்லார்களைச் சேராநெறி
கடையேற்கருள் செயவேண்டுமால்
அல்லார்சுட லையிலாடிய
அருணைசலா! அருணைசலா. 57

தேவாதிதே வாவென்கிலேன்
சிவலோகநா தாவென்கிலேன்
காவாயர னேயென்கிலேன்
காபாலிவந் தானென்கிலேன்
சேவானதூர் வோவென்கிலேன்
சிறியேனத னுலோவையா
ஆவாவென வருள்செய்கிலை
அருணைசலா! அருணைசலா. 58

‡ ஆசு - குற்றம்.

கன்னுகுபே ராவிந்திரா
காமாமூக சோமாபுவி
மன்னுவெலா வேபொய்யரை
வாழ்த்திக்கவி சொல்லாமனன்
சூன்னுரருள் பெறுமன்பர்தா
ளுளம்வைத்துவாழ்த் துறநல்குவாய்
அந்நாவலூ ராளிக்கருள்
அருணைசலா! அருணைசலா. 59

பச்சென்னிற மொருபாலுறப்
பைம்பொன்னிற மொருபாலுற
வெச்சென்றதீ நிறமேவிமேல்
வெண்ணீறுபூத் திடநின்றநீ
நச்சுண்டிருண்டிடுகண்டமு
நணலுற்றதைம் பூதங்களுக்
கச்சென்னநிற் பதுகாட்டவோ
அருணைசலா! அருணைசலா. 60

பன்னுகணத் துயின்மாயனே
பரிவோடுகாத் தருள்செய்குவ
னென்னுச்சில ரெடுத்தோதுவ
ரீதுண்மையே யிமையோர்வரை
தன்னுற்கடைந் திடவந்தநஞ்
சங்கண்டவ ரஞ்சித்தொழும்
அந்நாள்புர வாவண்ணமென்
அருணைசலா! அருணைசலா. 61

காமத்தொடு கொலைசூதுபொய்
களவுக்கிடந் தந்தென்மனம்
பூமத்தமென் பணிகின்றநீ
பொருந்தற்கிடந் தாராமையால்
ஈமத்தெரி நரகம்மெனக்
கிடமாகுமென் றெணிநின்னரு
ளாமெய்த்துணை யேநம்பினேன்
அருணைசலா! அருணைசலா. 62

உனக்குள்ளடி யேன்மேவியு
முனையோர்கிலா மையினிவ்வுடல்
எனக்கென்னவீந் தனைமுன்னிரு
ளென்னுநெடுசேர்ந் தந்தோவெனை
தினக்குப்புறம் பாய்நிற்கவே
நீடுற்றதா லென்செய்குவேன்
அனக்கன்னிநேர் தருமாதர்சூழ்
அருணைசலா! அருணைசலா. 63

பாசக்கிடம் * பசுவென்னவும்
பசுவுக்கிடம் பதியென்னவும்
மாசற்றமா மறைபேசுமம்
மாயைப்பசு வாமென்னுளே
தேசிற்பொலி பதியாகுநீ
திகழ்கின்றதற் புதமல்லவோ
ஆசைக்குமே னிமிர்சோதியே
அருணைசலா! அருணைசலா. 64

யான்செய்தனன் பிறர்செய்தன
ரெனதியானெனு மஞ்ஞானமே
யூன்செய்பிற வியைநல்குமென்
றுணர்ந்தேனின தருளாலினி
வான்செய்பத விகள்யாவினு
மயங்காநெறி தந்தாளுவாய்
ஆன்செய்நெடுங் கொடியாளனே
அருணைசலா! அருணைசலா. 65

சிவய்யோனுத யஞ்செய்திடில்
விரவும்மிரு ளொழிவாதல்போற்
பொய்யானதில் குருவந்திடப்
பொய்ப்போதநீங் கிடுமென்னவே
மெய்யானநூ லுரைசெய்யவும்
வீணேதிரிந் துழல்வார்சிலர்
ஐயாவவ ருய்வார்கொலோ
அருணைசலா! அருணைசலா. 66

* பசு - சீவன்

பரையுன்னிரு விழிமூடுகைப்
பதுமத்தனி விரற்பத்திலும்
வருகங்கைபத் தினின்மூன்றயன்
மாலிந்திர னுக்கீந்துமற்
றொருநான்குமூன் றையும்வேணியி
லொளித்துப்புவ னங்காத்தநின்
அருமைச்செய லறியாரெவர்
அருணைசலா! அருணைசலா. 67

மடவார்மய ருனேர்புறம்
வருகின்றபல் பிணியோர்புறம்
திடமாம்வறு மையுமோர்புறந்
தீராததீப் பசியோர்புறம்
கடனுகுவன் பேயோர்புறங்
கழிமானமாங் குரங்கோர்புறம்
அடலான்மெலிந் துனையண்டினேன்
அருணைசலா! அருணைசலா. 68

தாய்மார்களுஞ் சலித்தார்வரு
சமனுருமோ சலித்தார்மலர்
வாய்வேதனுஞ் சலித்தானழன்
மலிகும்பியுஞ் சலித்திட்டதாற்
சேய்நானினிச் செயும்வண்ணமென்
செப்பாய்பல கலைவேதமும்
ஆய்மேலவர் தொழுமையனே
அருணைசலா! அருணைசலா. 69

மனையாண்மனம் வெறுப்பாகவு
மாதாமனம் வெறுப்பாகவுங்
கனிவானபெண் கள்பிள்ளைகள்
கசந்தேமனம் வெறுப்பாகவுஞ்
சனியாமிரு மலமீழையுஞ்
சார்ந்தேழையே னலியாவகை
அனையாமென வந்தாளுவாய்
அருணைசலா! அருணைசலா. 70

காட்டுக்குளே தவஞ்செய்குவார்
கனலுக்குளே தவஞ்செய்குவார்
நாட்டுக்குளே யறஞ் செய்குவார்
நதியாவினும் போய்மூழ்குவார்
பாட்டுக்குநால் வர்களெய்திய
பரிசிற்பய னடைவார்களோ
ஆட்டிற்பொலி தீக்கண்ணனே
அருணாசலா ! அருணாசலா. 71

* பறவைக்கர சானந்தவெம்
பணிவந்துபோற் றப்பூண்டநீ
மறமுற்றுமா தவரேவிட
வருபாம்பணிந் திடவில்லையோ
திறமுற்றுவன் பிலனென்றெனைச்
செயித்தாட்கொளா வகையென்னமுன்
அறவர்க்கரு டருமையனே
அருணாசலா! அருணாசலா. 72

எரிகின்றதிப் போற்சீறியே
யியமன்வரு மேற்பேதையேன்
பரிகின்றமார்க் கண்டேயர்போற்
பணிந்துன்பதம் போற்றுந்திறந்
தெரிகின்றிலே னதனுலினே
சிறியேனையாண் டருள்வெம்பலி
யரிகின்றசென் னியிலேற்றிடும்
அருணாசலா ! அருணாசலா. 73

தம்மாலறி வனயாவையுந்
தாமல்லவென் பதுமைந்தனே
சும்மாவிருந் திடுமாறெனச்
சொல்லித்தெரி விப்பான்மலர்க்
கைம்மான்மூத லியயாவையுங்
கரந்தோர்குரு வாய்வந்தனை
அம்மாவுன தருளென்னையோ
அருணாசலா ! அருணாசலா. 74

* பறவைக்கரசு - கருடன்.

காலாழ்களர் படுமாயின்வெங்
கரிதன்னையு நரிகொல்வது
போலாசையாம் படுசேற்றினிற்
புலையேன்விழுந் துழல்கின்றதாற்
பாலாமிரு வினைவெல்லுநின்
பதமெங்ஙனந் தொழுவேனையா
ஆலாலமுண் டருணைதனே
அருணைசலா! அருணைசலா. 75

பொருளீட்டவு மதனைவப்
பொத்தற்சடந் தனையோம்பவு
மருளீட்டுமா தர்களாசையின்
மயங்கித்திரி தரவுங்கொலோ
தெருளீட்டுமித் தனுவீந்தனை
தேவாதிதே வாவென்னையே
அருளீட்டுமென் பர்கள்போற்றிய
அருணைசலா! அருணைசலா. 76

பொய்யானதே குடிகொண்டது
புழுவானதே நெளிகின்றது
சையோகமே விழைகின்றது
சவமாகிமேல் விழுகின்றது
மெய்யானதிங் கிதைநாயினேன்
வீணேசுமந் துழல்கின்றிலேன்
ஐயாவுன தருள்வேண்டினேன்
அருணைசலா! அருணைசலா. 77

இந்நாள்வரை யினுமுண்டசோ
றெல்லாமள விடவெண்ணிலோ
பொன்னுமகி தானேருமோ
புலையேனின மூணலேபெரி
தென்னுவழல் வேனுதலா
லியமன்வர வேயுன்னுவான்
அந்நாளின்மு னீவந்தருள்
அருணைசலா! அருணைசலா. 78

பறக்குஞ்சிறை மறையன்னமும்
படிகீண்டகோட் டொருபன்றியுங்
கறக்கின்றவான் பாலாட்டியே
கனிவாயருச் சித்தின்றவன்
இறக்கும்படி செயுமன்பர்தா
மெய்தும்படி னுணரார்கொலோ
அறக்குஞ்சியஞ் சடையாளனே
அருணாசலா! அருணாசலா. 79

தாய்தந்தைநீ குருதெய்வநீ
தமியேனுயி ரதுநீயெனு
வாய்தந்தன மொழிவேனலான்
மனமாண்டநின் னடியாரொடுந்
தோய்தந்துவல் வினைநீங்கவுந்
துலையொத்தநன் னிலைகூடவும்
ஆய்தந்திலே னுய்வேன்கொலோ
அருணாசலா! அருணாசலா. 80

மார்த்தாண்டனின் மலையுச்சிமேன்
மதியாதுநா டொறுமேகுதல்
பார்த்தாங்கவன் வெருவும்படி
பணிந்தோர்புறஞ் செலவைத்தநீ
வேர்த்தாவென வுனைமேவுமென்
வினையோர்புறஞ் செலவைத்திலை
ஆர்த்தார்முடிக் கணியண்ணலே
அருணாசலா! அருணாசலா. 81

தெள்ளித்தெளி தருமன்பர்பாற்
சேர்ந்தேயரு ளீவாய்படர்
முள்ளிக்குவே லிகள்போடுதன்
முறையல்லவென் பதுபோலெனை
யெள்ளித்திரு வருளீந்திலை
யெனினேழையே னென்செய்குவேன்
அள்ளிப்புனன் முடிமேற்கொளும்
அருணாசலா! அருணாசலா. 82

தேன்பட்டசொல் லியராசையிற்
திகழாலிவாய்க் கரும்பென்னவே
நான்பட்டுநொந் தனன்மேலுமோ
நமனுர்வரி லென்செய்குவேன்
கான்பட்டபூங் குழல்பாகநின்
கழல்சூடியாட் கொளவேண்டுமால்
ஆன்பட்டநீள் கொடியண்ணலே
அருணைசலா ! அருணைசலா. 83

பதியாகுநின் பதமாமலர்
பணியாதபே யருநின்புகழ்
துதியாதமூ டருமாலயஞ்
சூழ்வந்திடாப் புலியாளரும்
கதியாதுகா ணுவரையையோ
காலன்கதை யடிபட்டுநைந்
ததியாகுல மடைவாரலால்
அருணைசலா ! அருணைசலா. 84

மாயோனையுந் தொழுகின்றிலன்
மலரோனையுந் தொழுகன்றில
னுயேனினை யேபோற்றுவே
னல்காயரு ளெனி லாங்கவர்
ஏயேயென நகைசெய்வரே
யென நாணிநான் மெலிகின்றனன்
ஆயேயென அடியார்க்கருள்
அருணைசலா! அருணைசலா. 85

* பொருப்புச்சிலை யாயுன்னருட்
போதந்தலைப் படுமன்பர்க
ணெருப்புக்கும்வா யுவினுக்குநீ
ணீருக்குமஞ் சார்மேலுமோ
மருப்புக்கடா மறலிக்குமே
மனமாய்வுரு ரெனவோர்ந்துநின்
அருட்புக்குவான் விழைகின்றனன்
அருணைசலா ! அருணைசலா. 86

* பொருப்பு - மலை.

வாசிப்பதுன் னடியார்புகழ்
வந்திப்பதுன் னடியார்பத
நேசிப்பதுன் னடியார்பதம்
நினைகிற்பதுன் னடியார்பதம்
பூசிப்பதுன் னடியார்பதம்
புனைகிற்பதுன் னடியார்பதம்
ஆசிப்பதுன் னடியார்பதம்
அருணசலா! அருணசலா. 87

பொன்னுக்குளே யொளியென்னவும்
பூவுக்குளே மணமென்னவும்
என்னுக்குளே நீமேவுவ
தெளியேனுணர் தருமாறுசெய்
துன்னுக்குளே யான்மேவவு
மொருநீயருள் செயவேண்டுமால்
அன்னக்கொடி யோன்போற்றிடும்
அருணசலா! அருணசலா. 88

வேலிக்குமுள் ளிடவெண்ணிலார்
வெறிகொண்ட பேயர்களாகியோர்
காலுக்குமுள் ளிடல்போலுனைக்
கடையேன்மறந் திதுகாறுமே
மாலுற்றமெய் யதுபோற்றியுன்
மலர்த்தாடொழு மாரேர்ந்திலன்
* ஆலிக்குமுன் னத்தோர்க்கருள்
அருணசலா! அருணசலா. 89

† நட்டுந்தொழா தவனென்றரு
ணல்காயிஃ தோர்வாரெனிற்
றெட்டுக்கலா லெறிந்தோற்குமுன்
றெகீலயாதலின் பந்தந்தது
கட்டுக்கதை யென்றேசிலர்
கழறிக்கொள்வர் ரேயம்மொழி
யட்டிச்சுடு மென்காதினை
அருணசலா! அருணசலா. 90

* ஆலித்தல் - களித்தல். † நட்டு - நேசித்து.

கையாற்பெறு பயனின்மலர்க்
கழலர்ச்சனை யதுசெய்தலே
மெய்யாற்பெறு பயன்மெய்யனீ
மேவாலாய மதுசூழ்தலே
பொய்யான தில் வாயாற்பயன்
போற்றித்துதி செயலிங்கிவை
ஐயாவெளி யேற்கெய்துமோ
அருணாசலா! அருணாசலா. 91

மலமூன்றுடை யாருக்கருள்
வடிவங்கொடு வந்தாங்கவர்
சலமூன்றிரு விணையொப்பிலே
தருபோதுவா தனை நீங்கியே
நலமூன்றுற வருள்செய்யுநீ
நாயேற்கருள் செய்வாய்கொலோ
அலமூன்றுதோ ளவனேடிய
அருணாசலா! அருணாசலா. 92

பாசாடவிக் குள்ளாம்புலப்
பகைவேடருக் குறவாதலாற்
காசாசையான் கொண்டடற்பர்தங்
கடைவாயிரே றுங்காத்திது
பூசாபல னேவென்றுளே
புலம்பித்திருந் துழல்கின்றிலேன்
ஆசாரமா ருதார்க்கருள்
அருணாசலா! அருணாசலா. 93

புலையானதோர் தொழில் செய்யினும்
பொய்யானதோர் மொழிபேசினுங்
கோலையாகிய செயல்செய்யினுங்
கொடிதாங்கள் வதுசெய்யினு
மலையாதுநின் னருள்சேர்வரேல்
வறியேனவ ரடிசேர்வனல்
அலையாறுசூ டியவண்ணலே
அருணாசலா! அருணாசலா. 94

படைப்பானுநீ யுலகியாவையும்
பரிவாயளித் திடுவானுநீ
துடைப்பானுநீ பொய்பொய்யெனத்
தோற்றுவகை மறைப்பானுநீ
கடைப்பாலனுக் கிரக்கஞ்செயுங்
கண்ணுளனு நீயாயயன்
அடைப்பாற்றுயில் வோனுயதென்
அருணாசலா! அருணாசலா. 95

பாடார்கவி பரியாருணப்
பணிமாமலர் கொடுபூசியார்
தேடாரடி யார்தம்மையுந்
தினமுண்டதே யுண்டையையோ
மாடாரமெனத் திரிவாரவர்
மனம்வெந்துரும் பியில்வீழ்வரே
ஆடாதபே யுடனுடிய
அருணாசலா ! அருணாசலா. 96

போகாதுவா யுவையுள்ளுளே
பூரித்துநே ரிற்போக்கியே
சாகாமனத் தவராகிநின்
சார்புற்றிட வேயெண்ணுதல்
சேகார்தரு பலவேணிகள்
செறித்தாங்கதன் மேலேறியே
ஆகாயமெட் டிடல்போலுமால்
அருணாசலா ! அருணாசலா. 97

மாலாரொரு கற்பந்தனின்
மழைமேகமாய் வரவாங்கதன்
மேலாயினு பின்னும்மொரு
விடையாய்வர வேயூர்ந்தனு
பாலார்மொழி மாதாவரப்
பரிவாவிடப் பாலீந்தனு
ஆலாலமுண் ணும்பித்தநீ
அருணாசலா ! அருணாசலா. 98

பாய்வான தீ நீர்ப்பாய்ச்சினும்
படரெட்டியின் கணிகைப்பரு
நாய்வாணிமி ராதாற்பல
நாண்கொண்டிறுக் கிக்கட்டினு
மாய்வாகிவன் மனநேருரு
வகையாங்கவை போலாதலோர்ந்
தாய்வார்க்கரு ளுனையண்டினேன்
அருணைசலா ! அருணைசலா. 99

கொம்பாரிடை வண்டார்விழிக்
கொங்கார்தனச் சிங்காரிக
டம்பான்மனஞ் சென்றேயழி
சண்டாளனை யென்றுள்வையோ
செம்பாகினேர் மொழிபங்கனே
சிந்தித்தவர்க் குயர்வீடருள்
அம்பார்சடை நம்பாவொளிர்
அருணைசலா ! அருணைசலா. 100

படியாளுமன் னவர்வாழவும்
பரிவோடுமன் னுயிர்வாழவும்
முடியாமறை தான்வாழவும்
முதலானசை வம்வாழவுங்
கடியானெறித் தமிழ்வாழவும்
கவிவாணர்யா வரும்வாழவும்
அடியார்கள்வா ழவுநன்கருள்
அருணைசலா! அருணைசலா. 101

முற்றிற்று.



பூதூர்

கோபாலகிருஷ்ண தாசர் இயற்றிய

9. எம்பிரான் சதகம்

பரமபிரம்

காப்பு

என்றுந் திருமாற்கே யாளாவே னெம்பெருமான்
என்று மெனக்கே பிரானுவான்—என்றும்
ஜீவாத பேருளன் பேரா யிரமும்
மறவாது வாழ்த்துகவென் வாய்.

ஆழ்வார்கள் பன்னிருவர் பாடல் போற்றும்
அரிபத்தன் கோபால கிருஷ்ண னன்பால்
கேள்வியாற் றனதறிவின் மிகுதி யாலுங்
கிருபைகூர் குருகடா கூஷத்தி ஞலும்
தாழ்வில்லா வெம்பிரான் சதகந் தன்னைச்
சாற்றினன் போற்றியன்ப ரேத்தும் வண்ணம்
கேள்வியா லனுதினமுங் கீர்த்திப் பார்கள்
கிளர்விஷ்ஞு வைகுந்தத் துளராய் வாழ்வார். 1

பிடிபடா மறைபடித்து வேத மார்க்கப்
பிரதிஷ்டா பனுசார்ய ருபதே சத்தை
அடைவுடனே யெழுபத்து நால்வர்க் கீந்தே
அவர்கள்சிங்கா தனக்குருக்க ளாக வைத்தோர்
உடையவரெம் பெருமானுர் பாஷ்ய காரர்
உயர்பூதூர் வள்ளலார் நினைந்தோர்க் கெல்லாம்
இடரறுக்கு மெதிராசர் விப்பிர துங்கர்
எங்களிரா மானுசர்தா ளிறைஞ்சு வோமே. 2

கிம்புருடர் கருடர்காந் தருவர் சித்தர்
கின்னரர்வித் தியாதரர்சங் கீதம் பாடத்
தும்புருநா ரதர்சனகா தியர்நற் சேடன்
சுரருடனே ரிஷிமுனிவர் பலரும் போற்ற
அம்புயனுன் மறையோத வீற்றி ருக்கும்
அச்சுதனே யுனக்கென்றன் புன்சொல் லாலே
சம்பிரான் சதகமென விருத்தத் தாலே
இசைப்பதற்கே முன்னிற்பா யெம்பி ரானே. 3

பாயிரம் முற்றிற்று.

நூல்

திருமாது வீற்றிருக்குங் கமல மார்பா
திகிரிசங்கந் தரித்தருளுஞ் செய்ய கையா
கருமாணிக் கக்கிரிபோ னிறத்த மெய்யா
கதிரிரவி மதியிரண்டுங் கண்ணுங் கண்ணு
அருமாம றைப்பொருளா மாதி தேவா
அனைத்துலகும் படைத்தளித்திட் டழிக்குமையா
இருபாத மலர்போற்று மெய்யர் நெஞ்சில்
இருத்திநா ராயணனே யெம்பி ரானே. 1

மாதவனீ திருமங்கைக் குபதே சித்த
மந்திரஞ்சே ஞபதிமெய்ச் சடகோ பன்சீர்
நாதமுனி யுடனுய்யக் கொண்டார் மிக்க
ஞானமணக் கானம்பி யாள வந்தார்
நீதிபுனை பெரியநம்பி யுலகம் போற்றும்
திகரிலிலா மாநுசனல் லுபதே சம்பெற்
றேதமற வெழுபத்து நாலு பேருக்
கெதிராக னுரைக்கவைத்தா யெம்பி ரானே. 2

பூதலத்தி லுண்டான தலங்க டம்மில்
புண்ணியகோ டித்தலமொன் றுய்ந்து பார்த்தே
வேதநெறி யாலாதிப் பிரமன் முனும்
மிக்கதிருக் கச்சியில்வந் திறங்கி யுற்றே
ஆதரவா யத்திகிரித் தலத்தி லோமம்
அன்றவன்முன் பண்ணவந்த வோம குண்டத்
தேதமற வந்துதித்தே வரங்க ளீந்தாய்
எண்ணரிய வருளாளா வெம்பி ரானே. 3

உன்னுடைய வுடன்மயமே பூமி யெல்லாம்
உனதுசெவ்வாய் நீர்மயமே யுதக மெல்லாம்
மின்னியநின் கண்மயமே தேயு வெல்லாம்
வீறியநின் சுவாசமய மேகாற் றெல்லாம்
நின்னினைவின் மயமேயா காய மெல்லாம்
நின்மூர்த்தி மயமுயிர்க ளுணர்வி லெல்லாம்
என்னுடலோ டுயிர்செய்கை யெல்லா நீயே [னே.
இரண்டுபண்ணி யலைப்பதென்னே வெம்பிரா

அருளாளா வேகவதி நதிசூழ் கச்சி
அத்திகிரி நாதாவே தாக மத்தின்
பொருளாநா ராயணனே வாசு தேவா
புண்ணியகோ டிக்கிறைவா தேவ ராசா
மருளான விரணியன்முன் குறித்த தூணில்
வந்துதித்த நரசிங்கா வரத ராசா
இருளான தணுகாம னின்னுள் போற்றி
ஈடேற நினைவளிப்பா யெம்பி ரானே. 5

பண்ணியிடும் பணிபலவே பொன்னென் றேயாம்
பாண்டத்தின் பேர்பலவே மண்ணென் றேயாம்
வண்ணமிகும் பசுப்பலவே பாலொன் றேயாம்
வகையேழு டல்பலவே சீவ னென்றும்
நண்ணுமறு சமயங்கள் பேர்வே றல்லால்
நாதனீ யொருவனே யவர்க டம்மை
எண்ணியே செயுந்தொண்ட ரிச்சைக் கெல்லாம்
இரங்கிவரந் தருகின்ரு யெம்பிரானே. 6

கேசவநா ராயணமா தவகோ விந்தா
கிளர்விஷ்ணு மதுசூத கேடி லாத
நேசதிரி விக்ரமனே வாம னுசீர்
நிறைந்தருளுஞ் சீதரா விருடி கேசா
மாசிலெழில் சேர்பதும நாபா வெங்கும்
வளர்தாமோ தரவெனும்பேர் பன்னி ரண்டிற்
கீசனு யெண்டிசையுட் புறம்பு கீழ்மேல்
இவையீரா றிடத்துறைவா யெம்பி ரானே. 7

சங்கர்ஷ ணுவாசு தேவா முத்தி
தரும்பிரத்தி யும்மனு வனிருத் தாசீர்த்
துங்கபுரு டோத்தமனே யதோட்ச சாவெஞ்
சுடர்நார சிங்கவெழி லச்சு தாநீள்
அங்கசனுர்த் தனவுபேந் திரனே மிக்க
வரிகிருஷ்ணு வென்றுதிரி சந்தி தோறும்
எங்குமுள்ள பூசுரர்கள் சந்தி பண்ண
இருத்திநா ராயணனே யெம்பி ரானே. 8

அச்சுதனே மாதவனே தேவ தேவா
ஆதிபுரு ஷோத்தமனே யரியே மாலே
பச்சைநிறக் காகுத்தா வாசு தேவா
பரந்தாம னேமுகுந்தா பதும நாபா
நச்சரவின் மிசைநடித்த கோவிந் தாஸ்ரீ
நாராய ணுகேச வாவென் றுன்னை
இச்சையுடன் றுதிப்பதுவே யெனக்குப் போதும்
இதற்கிணையா யேதுமில்லை யெம்பி ரானே. 9

பரப்பிரம மாமாதி மூல மேநீ
படைத்தளித்திட் டழித்துவிளை யாட வென்றே
திருத்தமுடன் பிரமாவாய்ச் சிருஷ்டித் தன்றே
ஸ்ரீயபதியாம் விஷ்ணுவா யுயிரைக் காத்து
உருத்திரனு யுயிரையெல்லாஞ் சங்க ரித்திட்
டோருருவே மூன்றுருவாய் மூன்று மொன்றுய்
இருக்குமெழி லச்சுதநின் மகிமை சற்றும்
இமையவர்க்குங் காணவரி தெம்பி ரானே. 10

சிட்டிக்கப் பிரமாவைக் கருணை யாலுன்
திருநாபிக் கமலத்தே செனிக்கச் செய்தாய்
மட்டற்ற செனனமெல்லாங் காமத் தாலே
வர்த்திக்க மன்மதனே மனத்திற் றந்தாய்
நெட்டுற்ற விப்புவியிற் பிறந்த வெல்லாம்
நீரூக்க வுருத்திரனைப் பிரம னீந்தான்
இட்டத்தே யேகனு யிராதே யிங்ஙன்
ஏன் செய்தா யச்சுதனே யெம்பி ரானே. 11

பலர்கூடி யிருந்தசந்தை கலைந்த தொக்கும்
பழுத்தாலிற் பறவைகள்சேர்ந் தகன்ற தொக்கும்
நலமாகச் சூழையொன்றில் வெந்த பாண்டம்
நாற்றிசையும் போயுடைந்து போவ தொக்கும்
சலமீதில் மிதந்திரண்டு காஷ்டங் கூடிச்
சடக்கெனவே பிரிந்ததொக்குஞ் சமூசா ரந்தான்
இலதாகத் தெளிந்துனது திருத்தாள் போற்றி
ஈடேற நினைவளிப்பா யெம்பி ரானே. 12

அறக்கொடிய பவமெடுத்தா லதினூ ருண்டில்
ஐம்பதுநித் திரைபோய்மற் றைம்ப தாண்டில்
சிறுக்குழந்தை பேதையொடு பால னென்றே
திரிந்துபசி பிணிமூப்புத் துன்ப மேவிக்
கறுத்தமயிர் வெளுத்துடலங் கூனிப் பல்போய்க்
காதுகெட்டுக் கண்மூடிக் குழறிப் பேசி
இறக்கமுற்றுக் கிடந்திறக்கும் பிறவி வேண்டேன்
இனிக்கரையேற் றச்சுதனே யெம்பி ரானே. 13

பாதத்திற் பிரியாம லிருக்குங் கங்கை
பரமேட்டி பிறந்ததுந்திப் பதுமத் தண்பூ
தீதற்ற கௌத்துவமா மணிபூ ணுரம்
தேசுளபீ தாம்பரநீ யுடுக்குங் கூறை
வேதத்தை விரிஞ்சனுக்கு நீபோ தித்தாய்
விண்ணவர்க்குன் திருக்கையா லமுத மீந்தாய்
ஏதுற்று நாரணனே யுனைப்பூ சிப்பேன்
இமையவர்தம் பெருமானே யெம்பி ரானே. 14

அன்னுதி யாமரியே யுனது நாமம்
ஆயிரத்திற் பலவாத லொன்றே யாதல்
பன்னுளுங் கீழ்க்குலத்தோ ரெண்ணி னுலும்
பாலிக்குங் கோபாலர் பாண்ட மொப்பார்
நின்னுமை மெண்ணுமற் றர்க்கம் பேசும்
நெறியில்லார் குலம்பார்ப்பா ரானக் காலும்
இன்னுத கள்ளிருக்கு நவபாண் டத்திற்
கிணையிதுசத் தியமரியே யெம்பி ரானே. 15

வலாவான பெரும்பல்லு மெரிந்த கண்ணும்
மைம்மலைபோற் காத்திரமு முடைய காலன்
அளவான பெரும்பாசங் கொண்டே யென்றன்
அங்கத்தைப் பிணமாக்கி யாவி யென்னும்
ஒளிவேரு யாதனு சரீரக் கூட்டில்
உறப்பண்ணித் தெண்டிக்கு மிடரா னுயேன்
இலாயாம லிப்பொழுதே யடிமை கொள்வாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. 16

அச்சுதநின் மெய்யடியா ருகந்தே யிட்ட
தணுவெனினு மகமேரு வாகக் கொள்வாய்
நிச்சயமா யுனை நம்பி யெண்ணு மூடர்
நினைந்திடிலோர் நூற்றையொன்று யுங்கொள்
நச்சிமற்ற பிதிர்க்களுக்குந் தேவ ருக்கும் [ளாயால்
நமஸ்கரித்துப் படைத்தவெல்லா நதியின் வெள்
இச்சையுடன் சமுத்திரத்தே சேருமா போல் [ளம்
எல்லாங்கைக் கொள்கின்று யெம்பி ரானே. 17

தந்தைதாய் தினும்பண்டம் பிள்ளை வாயில்
தானிட்ட சேடத்தைக் கேட்டு வாங்கிச்
சிந்தைமகிழ்ந் தின்பமுறத் தின்னு மாபோல்
தேவாவுன் னுடைமையைநீ யடியார்க் கீய
அந்தவுன்றன் மெய்யடியார் பத்தி யாலே
அளித்தகூ முதிணையுண் டேப்ப மிட்டே
இந்திரைக்கு மிதுதிட்டங் காட்டித் தொண்டர்
ஏற்றமதைத் தெளியவைத்தா யெம்பி ரானே. 18

மன்னவராய் வாழ்ந்துசுகித் திருந்த பேரை
வறுமையராய்ச் சலித்திரந்து திரிய வைப்பாய்
அன்னமரி தாயிரந்து திரிந்த பேரை
அதிகராய் வாழ்ந்துசுகித் திருக்க வைப்பாய்
நின்னருளே யல்லாமல் யாவ ருக்கும்
நிணைத்தபடி நேரொண்ணு தாகை யாலீ
தென்னதிரு விளையாட்டுன் மகிமை சற்றும்
இமையவர்க்குங் காணவரி தெம்பிரானே. 19

அருளுடன்மீன் பார்த்தக்காற் சினைதான் குஞ்சாம்
ஆமைமுட்டை தாய்நினைந்தாற் குட்டி யாகும்
பரிசத்தாற் பறவைமுட்டை குஞ்ச தாகும்
படியிலிவை யிற்கடையாக் கிடக்கு நாயேன்
கருணையினுற் குருமூர்த்தி பார்த்த தாலும்
கருத்தாரத் திருவுளத்தே நினைத்த தாலும்
இருபதத்தைத் தலையில்வைத்த பரிசத் தாலும்
இருளறுத்தே னச்சுதனே யெம்பி ரானே. 20

சக்கரஞ்சங் கிருபுயத்திற் பொறித்த பின்பு
தயவுடனே பன்னிரண்டு திருமண் சாத்திச்
சிக்கெனவே தாசனென்று நற்பே ரிட்டுச்
செவிகுளிர மந்திரமு முபதே சித்து
அக்கினியிற் செந்துளவக் காஷ்டங் கூட்டி
ஆவினெய்யாற் புனர்சென்ன வோமம் பண்ணி
இக்கிரியை யைந்தினுற் திருத்திக் காக்கைக்
கெழிற்குருவா யுதித்தனையே யெம்பிரானே. 21

மணியிசைக்கா வந்திடுமான் செவியான் மாயும்
மகிழ்புணர்ச்சிக் காகவிப மண்ணிற் சிக்கும்
கணில்விளக்கைக்கண்டுவிட்டில் வீழ்ந்துபொன்றுங்
கடுந்தூண்டிற் கவ்விமச்சம் வாயான் மாளும்
அணுகியளி நாசியிற்சென் பகமோந் தெய்க்கும்
ஐம்பொறியு முடையநா னஞ்சந்தி டாமல்
இணையிலுப தேசத்தாற் திருத்திக் காக்கைக்
செழிற்குருவா யுதித்தனையே யெம்பி ரானே. 22

ஆகார நித்திரைமை துனம்ப யந்தான்
அனைத்துயிர்க்கு முண்டுநரர்க் கதிகம் ஞானம்
சேகாரு நல்வினை தீ வினையி ரண்டால்
சிற்றின்பம் பேரின்பஞ் சேர்ந்தி டாமல்
நாகாரி வாகனனே கேச வாநின்
நற்பதங்கண் டீடேறக் குருவு ரைக்கும்
ஏகாந்த வுபதேசப் பொருளை நம்பி
எண்ணமெய்ஞ்ஞா னந்தருவா யெம்பி ராளே.

பெருத்திருந்த பூசினிப்பூ வின்கீழ்க் கொட்டை
பெருத்துயர்ந்து காயாய்ப்பூத் தேய்ந்துற் றுற்
கருத்திலுறு நல்லறிவை விரைட் டாமல் [போல்
கபடமுறும் புல்லறிவு மேலிட் டந்நால்
குருப்பகரு முபதேசப் பொருளை நம்பிக்
குறைவறவே யுருவேறத் திருவு மேறி
இருட்பறந்து மெய்ஞ்ஞானம் விளங்கச் செய்தாய்
இறைவாநா ராயணனே யெம்பி ராளே. 24

உப்புததி தேனுததி கருப்பஞ் சாற்றின்
ஊததிநெய்யி னுததிதயி ருததி யுன்றன்
வைப்பெனும்பா லுததிநன்னீ ருததி யென்னும்
வளைகடலே ழுண்டாக்கித் தீவுண் டாக்கிக்
கப்பலுடன் சோங்குமரக் கலமுண் டாக்கிக்
கடலோடிக் கரையேறக் கற்பித் தாற்போல்
இப்பிறவிக் கடலேழுங் கடந்தே யுய்கைக்
கெழிற்குரு வா யுதித்தனையே யெம்பி ராளே. 25

சீராமா வென்றெருகா லுரைத்தா லுன்றன்
திருநாம மாயிரத்துக் கிணையா மென்றே
நீராருஞ் சடையான்பா கத்து மைக்கு
நிகழ்த்திடலம் மந்திரத்துக் கிணையொன் றுண்
பாராரு மதுதனையுச் சரித்தி டேறப் [டேன்
பத்துருவில் ராமனென்றே முக்கால் வந்த
ஏராரும் பரசுரா மாஸ்ரீ ராமா
ஏழிற்பலபத் திரராமா வெம்பி ராளே. 26

சீரரியே நின்கோயிற் றுவார பாலர்
செயவிசய ரிருவருநின் னேவ லாகும்
காரணத்தா லிரணியனே டிரணி யாட்சன்
கடியரா வணனுடனே கும்ப கர்ணன்
மாரிநிகர் சிசுபால னுடனே தந்தி
வக்கிரனு மாகமுக்கால் வதைத்து மீண்டும்
ஈரமுடன் பண்டையிலுஞ் சாரு பந்தந்
தேற்றமுற வைத்தனையே யெம்பி ரானே.

கரியுன்னி மூலமே யென்ற மட்டிற்
கராவைவதைத் தொருநொடியிற் கரியைக் காத்
துரிகின்ற துகில்வளரக் கிருஷ்ணு வென்றே [தாய்
உரைத்தளவிற் றுரௌபதைக்கு மானங் காத்தா [ய்
அரியெங்கு முளனென்றோர் பாலன் சொன்ன
அக்கணத்திற் றூணினர சிங்க மானாய்
எரிகின்ற பெருந்தணலை யவனுக் கன்றே
இமசலமாக் கினையரியே யெம்பி ரானே. 28

திருமணிட்டு நீறுமிட்டுத் திகழ்வை தீகச்
சீபெரிய வயிட்டிணவர் சைவர் புத்தர்
அருகர்சம ணர்கள்துருக்கர் கர்த்தா வுண்டென்
னறுசமயத் தோர்களுக்கு மிறைவ னீயே
தருமநெறி பதிவிரத மறையொ ழுக்கம்
தயவுசமஞ் சத்தியஞ்சூ ளுடைய பேர்க்கு
இருளறுத்துமெய்ஞ்ஞானம்விளங்கச் செய்வாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. 29

திருக்கச்சி நம்பியுனை நம்பிச் செம்பொற்
றிருவால வட்டகயிங் கரியஞ் செய்து
பெருக்கமகிழ்ந் தேதிருவாய் மலர்ந்து பேசிப்
பேதமற்றுத் திட்டமா யிருக்க வோர்நாள்
கருக்கவினி லருளாளன் மறைவிற் றூங்கக்
காணுமலருளாளா வென்ன நீவந்
தீரக்கமுடன் கைவிளக்குப் பிடித்துச் சென்றுய்
இயல்சக்க ராயுதனே யெம்பி ரானே. 30

திறத்தபொய்கை யார்பூதத் தார்பே யாழ்வார்
திருமழிசை யார்வில்லி புத்தூ ராழ்வார்
அறிக்கைமிகுங் குலசேக ழார்வார் ஞான
ஆரணத்தைத் தமிழ்செயுநம் மாழ்வார்பத்தி
குறைச்சலில்லாத்தொண்டரடிப் பொடியாழ்வார்பண்
குளிர்ந்தசொல்லாலிசைபாடுந் திருப்பாணழ்வார்
இறக்கவெட்டிப் பறித்ததிரு மங்கை யாழ்வார்
இவர்பதின்மர்க் கருளினையே யெம்பி ரானே. 31

பத்துப்பே ராழ்வார்கள் தமினம் மாழ்வார்
பாதார விந்தத்தைப் பணிந்து பாடி
முத்திபெற வருமதுர கவியாழ் வாரும்
மூதறிவா லுயர்வேதப் பொருளாக் கொ ண்டு
உத்தமமாம் பாமாலை யொடுபூ மாலை
உகந்துனக்குத் தருங்கோதை யாருங் கூட
இத்தலத்திற் பன்னிரண்டு பேராழ் வாரென்
றெண்ணமுற வைத்தனையே யெம்பி ரானே. 32

அருளுடனே பொய்கையா ருறங்கப் பூதத்
தாழ்வார்வந் திருவரா யிருக்கப் பேயார்
சொரிமழையிற் போய்மூவ ராகி நிற்கச்
சொலற்கரிய நீநாலாம் பேராத் தோன்றிக்
கருணையுட னம்மூவர் பாடல் கேட்டுக்
கமலமலர்த் திருவடிவீ டாகப் பாலித்
திருளறவே கோவலூ ராய னெரென்
றிடைகழியி னின்றனையே யெம்பி ரானே. 33

வெயிற்காயு மாதித்தன் கனகத் தேர்க்கு
விடநாகம் வடஞ்சகடொன் றேழு வாசி
சயத்தாலா காயத்திற் றோர்ந் டாத்தும்
சாரதிகா லிரண்டுமில்லா முடவ னுன்றன்
மயத்தான்மா மேருவைத்தேர் சுற்றிச் சுற்றி
மறைந்துதிப்ப தேதினமா நின்வே தத்தின்
இயற்சேரும் பிரமகற்பங் கிராண நன்னாள்
இதிற்ரேன்ற வைத்தனையே யெம்பி ரானே. 34

உதித்துவரும் போதுமத்தி யானப் போதும்
உயரத்த மலைவாயிற் புகுதும் போதும்
மதித்தசுர ருருக்கணைத்தேர் நடத்தொட் டாமல்
வலைந்துபொரத் திருநாபிக் கமலம் வந்த
விதிக்கடவு ளுரைத்ததிரு மந்தி ரத்தால்
விப்பிரர்கள் யாவருமுச் சந்திதோறும்
எதிர்த்திறைத்த நீர்கணையா லசுரர்கீழ்பட்
டெதிர்நடக்கப் பண்ணுகின்ரு யெம்பி ரானே.()

திண்ணமுடன் பாண்டுவுக்குச் சாப முற்றும்
திறற்றரும னுற்பவித்தா னென்ற மட்டில்
கண்ணில்லாத் திரிதராட் டிரன்றன் றேவி
காந்தாரி கர்ப்பம்விழப் புடைத்துக் கொள்ள
மண்ணிலது பொன்ருமுன் முனிவி யாசன்
வந்தெடுத்துப் பலகலசத் தடைத்து நின்பேர்
எண்ணவது நூற்றுவராய்ப் பிறக்கச் செய்தாய்
யிறைவாநா ராயணனே யெம்பி ரானே. 36

விண்ணுலகு மண்ணுலகு மசுரர் மிஞ்சி
வேதமற்று வேள்வியற்று நீதி யற்ருண்
பிபண்ணென்னுங் குலமிரண்டும் வரம்பு கெட்டுப்
பிரமாவும் படைப்பொழிந்திட் டிருந்தநாளில்
திண்ணமுடன் கெருடவா கனமீ தேறித்
திறலசுர ரனைவரையுங் கொன்று தேவர்
எண்ணவுல கீரேழும் படியப் பண்ணுய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. 37

வன்னியினன் புகழ்விசுவ தேவன் சுத்த
வருணன்வயிஷ்க் காரணிய னிந்தி ரன்சீர்
தன்னறிசேர் தேவமுனி யேக பாதன்
நமன்வாயு வுமைபிதுர்க்க டனக் குபேரன்
கொன்னமருஞ் சங்கரனுர் விதியோ னென்னும்
குறைவிலா விவர்கள்பதி னைந்து பேரும்
இன்னமுத மதிக்கலையைத் தினமொன் ருக
என்றுமுண வைத்தனையே எம்பி ரானே. 38

முதற்பிறையா மென்னுமோர் கலையிற் கூடி
மூவைந்தும் வளர்ந்துகலை பதினு ருகும்
மதிக்கலையிற் பதினைந்தைச் சுரருண் டென்று
வந்திதனைக் கூடுமமா வாசை நாளில்
கதிர்ப்பருதி பசும்பயிர்புல் கன்ம ரத்திற்
கலந்தனைந்து பசுவிடத்தே வந்து கூடி
இதிற்பஞ்ச கவ்வியத்தால் பணுமோ மத்தால்
இந்துதிக்கப் பண்ணுகின்ரு யெம்பிரானே. 39

காமனுரு விலிபுரவி கிளிதேர் காற்று
கடல்முரசங் குயில்காளஞ் சேனை மின்னூர்
மாமகரங் கொடிகரும்பு சிலைநாண் வண்டு
மலர்கணைக ளிவைகொண்டே மதனுய் வீறிப்
பூமியுயர் வானமெங்குஞ் சஞ்ச ரித்துப்
பூங்கணையெய் தாண்பெண்ணைப் பொருத்திக்
ஏமநிறத் தயன்படைப்பு மிவனுல் வர்த்தித் [கூட்டி
தேற்றமுற வைத்தனையே யெம்பி ரானே. 40

பட்டமற்றுப் பதினலாண் டடவி யுற்றுப்
பத்தினியுஞ் சிறைபோய்ப்பின் ஞேனு நீயும்
மட்டறவே சலித்திருக்கச் சுக்கி ரீவன்
வந்துதவக் கவித்திரளாற் சேது கட்டித்
துட்டனெனும் ராவணனைக் கொன்று தேவர்
தோத்திரிக்க வீடணற்குப் பட்டங் கட்டி
இட்டமுட னுலகாண்ட ஸ்ரீரா மாவென்
றெண்ணவிரு ளறுக்கின்ரு யெம்பிரானே. 41

மீதான மச்சகெந்தி மகன்செத் தில்லாள்
வியாசமுனிக்குப் பெற்ற பாண்டு தந்தை
மாதாக்கள் குந்தியுமத் திரையென் பாளும்
மந்திரத்தா லேவருக்கை வரையும் பெற்ரூர்
சூதாடிப் பொய்யுரைத்துக் குருவைக் கொன்ரூர்
துரௌபதையே பஞ்சவர்க்குத் தேவியானுள்
ஈதார ணப்பொருள்பா ரதமா மென்றே
எண்ணவிரு ளறுக்கின்ரு யெம்பிரானே. 42

நண்ணியொரு பாகவதன் வறுமை தன்னுல்
நாகரசன் பாற்சென்று நலிவுகூற
மண்ணிலவ னிருபதாண் டினுக்குச் செல்லும்
மஹவர்த்திக் கீந்துபின்னும் வாவென் ருேதக்
கண்ணதனுற் கானகத்திற் பதித்த வேங்கை
கண்டவனுங் கலங்கியந்தக் கலக்கந் தீர
எண்ணரியே யெனக்கேட்ட புலிக்கு முத்தி
ஈந்தஹவேங் கடத்தரியே யெம்பி ரானே. 43

அறுசமயத் துறைகளுக்கு மிறைவ னீயென்
றறியாமற் பாண்டியன்முன் றர்க்கத் துற்ருல்
சிறைலரசன் பொற்கிழியை யுயரக் கட்டி
விழப்பாடிக் கொடுபோங்கள் பெரியோ ரென்ன
மறைகளொன்று மோதறியாப் பெரியாழ் வாரை
மாமறைநீ யோதுவித்துக் கிழிய றக்கண்
டிறைவணங்கிப் பட்டர்பிரான் வந்தானென்றே
எண்ணவிரு ளறுத்தஹவே யெம்பி ரானே. 44

நந்தவனங் கொத்தநிலத் தெழுந்த பெண்ஹவ
நம்மாழ்வார் புத்திரியா வளர்த்த நாளில்
சிந்தைமகிழ்ந் துனக்காழ்வார் கட்டி வைத்த
திருமாலை யவள்சூடி நிழல்பார்த் தீய
உன்றனக்கு மற்புதமாத் தினமுஞ் சாத்த
உகந்துசூ டிக்கொடுத்த நாச்சி யாரென்
றிந்திரைக்கு மிதுதிட்டங் காட்டித் தொண்டர்
இருதயத்து ளிருக்கின்ரு யெம்பி ரானே. 45

மச்சகூர் மவராக நார சிங்க
வாமனமூ விராமபுத்த கற்கி யாம்பத்
தச்சமுன்ற னவதார மாகு மென்றே
அகிலாண்டந் தெளியவிவற் றிரண்டாம் ராமன்
கச்சமரா டக்குறுகும் பரசு ராமன்
கைச்சிலையை வாங்கியே நாரி யேறிட்
டிச்சகத்தி லெப்பொழுதும் பரசு ராமன்
இருத்துமுறை செய்திட்டா யெம்பி ரானே. 46

பிறக்குமுன்னே வயிற்றுக்குட் கருவி றந்து
பிணத்தைப்பெற் றழுதுசிலர் புரள வைப்பாய்
குறுக்கப்பட் டேவயிற்றிற் பிணமா வீங்கிக்
கூற்றுவனுய்ச் சிலதாயர்க் கொல்லச் செய்வாய்
பிறுக்கமற்று மகப்பெற்று முன்னஞ் செய்த
வினைகடமை யனுபவித்திட் டிறக்கச் செய்வாய்
இறக்குமிடர் பிறக்குமிட ரிரண்டும் வேண்டேன்
இனிக்கரையேற் றச்சுதனே யெம்பி ரானே. 47

ஆவணிரோ கிணிநாளி லமரபக்ஷத்
தஷ்டமியிற் சசியுதிக்கும் வேளை தன்னில்
தேவர்தொழும் வடமதுரா புரியிற் ரேன்றிச்
சிசுவடிவாய் வசுதேவன் கைமீ தேறி
நீவிரிற்ச யந்திநாள் வனத்துக் காளி
நேயமுடன் கனிகடரி லுகந்துகொண்டே
யாவருக்கு மரியபத மவளுக் கீந்தாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. 48

அரிதிவச மாமேகா தசிநன் ஞளை
அனுஷ்டித்த ருக்குமாங் கதனைக் கண்டவ்
விரதமனுஷ் டித்தளவி லாத பேர்கள்
மிகக்கதிசே ருகையாலே சுரர்சோ திக்க
உருவமிகு மோகினியை விடுத்த மட்டில்
உறுதியாய்த் தன்மகனை வெட்டுங் கூர்வாள்
இருபுயத்திற் பூந்தொடையா வைகுந் தத்தே
இனத்தோடும் வைத்தனையே யெம்பி ரானே. ()

பத்தியுடன் றுவாதசியன் றம்ப ரீஷன்
பாரணைசெய் வதுதவிர்ப்பான் றூரு வாசன்
குத்திரமா வந்தொழிக்க வுண்ண வஞ்சிக்
கோவிந்தா வென்றுனது தீர்த்தங் கொண்டான்
உத்தமமென் றெண்ணும லிடுஞ்சா பத்தால்
உயர்முனியைத் துரந்தண்டத் துறவொட் டாமை
இத்தலத்தி லம்பரீஷ நீயே காவென் [ல்
றிரந்தடையப் பண்ணினையே யெம்பி ரானே. ()

பாதகக்கண் டாகன்ன னெனுமி யக்கன்
பத்தியுற்றுன் பெரும்புகழைக் கேளோ மென்று
காதிரண்டிற் சத்தமிகு மணியைக் கட்டிக்
கணப்பொழுது மோயாம லசைத்தி ருக்கத்
தீதுநினைந் தானென்று மனத்தெண் ணுமல்
சிந்தையினுல் மறவாமல் தியானித் தானென்
றேதமற வவனுக்கு மவன்றம் பிக்கும்
இரங்கிமுத்தி யளித்தனையே யெம்பி ரானே. 51

கடிக்கிலிர தித்தமாங் கனியை மீளக்
கடியாமற் கல்லையில்வைத் துனக்கா மென்றே
படைத்துவைத்த வேடுவச்சி சபரி நெஞ்சிற்
பரிவுகொண்டு ரகுராம வவதா ரத்தில்
சடக்கெனவே முன்றின்ற கனியைத் தானே
தக்கவிதிப் படிபடைத்த தாக வுட்கொண்
டிடுக்கணறச் சாரூப மவளுக் கீந்தன்
றீடேற்றி விட்டனையே யெம்பி ரானே. 52

தீண்ணமுடன் கோபாலர் மனையில் வெண்ணெய்
திருடினதைக் கண்டவர்க டுரத்தும் போது
கண்ணில்லாத் ததிபாண்டன் மனையுட்புக்குக்[ள்ளம்
கண்கொடுத்தோர் சாடியிற்புக் கொளித்துக்கொ
புண்ணிகராங் கண்வேண்டேன் கதிதா வல்லால்
போகவிடே னெனச்சாடி மூடிக்கொள்ள
எண்ணரிய பரமபத மவனுக் கீந்தாய்
இறைவாநா ராயணனே யெம்பிரானே. 53

மிடித்தில்லாள் பசித்தொறுக்கிற் குசேல னென்னும்
விப்பிரன்ரு னஞ்சியுன்றன் பதிக்கு வந்தால்
அடுத்தசிநே கிதன்வந்தா னென்றே சிந்தித்
தறிந்தழைத்தென் கெடுவந்தீர் தாரு மென்றே
மடிக்கணுறு பொரியவலா மதனை வாங்கி
மகிழ்ந்துவிர லாலள்ளி யிருகா லுட்கொண்
டிடுக்கணறச் சம்பத்து முத்தி வீடும்
இரங்கியவற் களித்தனையே யெம்பி ரானே. 54

தந்தகோ பாலனுறுந் திருவாய்ப் பாடி
நகர்மீதிற் படையெடுத்து மண்டலீகர்
வந்திடலப் பகைவரெல்லா மடிவ ரென்றே
வரங்கொடுத்துப் பின்னகரங் கட்டு வித்தாய்
அந்தவரத் தாற்கஞ்சன் வரவே யஞ்சி
அசுரர்களிற் பலரைவிடுத் துன்னைக் கொல்கைக்
கெந்தவகை தொடுத்தாலுஞ் செயித்த நேக
ராட்சதரை வதைத்தனையே யெம்பி ரானே. 55

உக்கிரசே னன்றனைப்போல் வடிவு கொண்டே
உத்தமியைப் போரசுரன் வந்து கூடி
அக்கிரமக் கஞ்சனுதித் தசுர னுகி
அரக்கரைக்கூட் டிக்கொண்டே பிதாவைத் தள்
திக்கெல்ல மவனுரின் மதுரைக் கேகித் [ளித்
திரளுடனே கஞ்சனைக்கொன் றவன்பி தாவை
இக்குவலி யம்புரக்கப் பண்ணி வைத்தாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. 56

நின்னினைவா நித்திரையைத் துர்க்கையாக்கி
நிகரினந்த கோபனுக்குப் பெண்ண தாக்கி
அந்நிசியி லனைவரையு மயங்கப் பண்ணி
அருளுடனே வசுதேவன் கைமீ தேறி
நன்னெறிசேர் திருவாயர் பாடி புக்கு
நந்தனுக்கு மகவான துர்க்கைப் பெண்ணை
இந்நிசியிற் றேவகியார் பெற்ரு ரென்றே
இனிதுரைக்கப் பண்ணினையே யெம்பி ரானே.

கடியகர்த்த பாசுரனுஞ் சத்த மாகக்
கத்துவது கேட்டளவிற் கஞ்ச னஞ்சிப்
படையெடுத்துக் கவசந்தொட் டநேக ரோடும்
பதிலமாய் வந்திடத்தே வகியார் கண்டே
திடமுடையா ணல்லபெண்ணே யென்ற போதும்
சீக்சிரமாக் கல்லிலடித் திடவே யோங்க
இடியிடித்தாற் போன்மார்பி லுதைத்தே துர்க்கை
ஏகநினைத் தருளினையே யெம்பி ரானே. 58

முலையில்விட மருத்தியுனைக் கொல்ல வெண்ணி
மோகினியாய் வந்தபூ தகியென் பாளோர்
மலையெனவீழ்ந் திடமுலையி னஞ்சும் பாலும்
வல்லுயிருந் திருப்பவள வாயா லுண்டே
கொலைசெய்ய வந்தவுடன் பகையெண் ணுமல்
கொடுத்தனைசா யுச்சியவீ டென்னிற் போற்றும்
இலகியமெய்த் தொண்டருக்குக் கதிதா னீவ
தெளிதுனக்குச் சீரரியே யெம்பி ரானே. 59

குறைச்சலறக் கனிக்கரிசி யள்ளிமூடிக்
குதித்துவர மோதிரத்தின் வழியாச் சிந்தி
முறத்திலிட வெறுங்கையாய்த் திகைத்து நிற்க
முகம்பார்த்துத் தின்கனியிட் டப்பா வென்ன
நிறத்தநவ மணிகள்கனி விற்பாள் கூடை
நிறையவவ ளஞ்சிநந்த கோப னென்னும்
இறைக்குரைக்கி லுனதுசொம்மே கொடுபோ வம்மா
என்றுரைக்கப் பண்ணினையே யெம்பி ரானே. 60

மன்னனப்பா டாமற்போ கின்றே னீயும்
வாவரியே யென்றழைத்த புலவன் பின்னே
பன்னகப்பாம் பணைசுருட்டிக் கொண்டே யேகிப்
பத்துக்கொ லென்றமட்டிற் படுத்துக் கொண்டா
சொன்னவண்ணஞ் செய்த பெருமாளே யென்ற [ய்
சுரர்துதிக்கக் கச்சியில்வீற் றிருக்கின் றுய்நீ
என்னுயிரு மென்னுணர்வு மெல்லா நீயே
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. 61

கருதலர்க்குத் தோலாத வரத்தால் வந்த
காலயவ னன்போரிற் பின்னிட் டோடி
வரமுழையிற் றனையுறக்க மெழுப்பும் பேர்கள்
மடிவரென்றே முசுகுந்தன் வரத்தாற் றுஞ்சும்
பரிமளிக்க விடத்தொளிக்கத் துயிலு வானைப்
பதறிநீ யென்றுதைக்கின் முசுகுந் தக்கோன்
இருகண்விழித் திடக்கால யவன னீருய்
இறக்கவகை யிட்டனையே யெம்பி ரானே. 62

சயிந்தவனே யிப்பகலே கொல்வேன் றப்பில்
தழலிறப்பே னெனவிசயன் சபதங் கூறப்
பயந்தவன்பெட் டிக்குளுறச் சக்க ரத்தால்
பகலுமறைத் திரவாக்கித் தருமன் சேனை
மயங்கியிடச் சயிந்தவனு மொளிப்பு நீங்கி
வரவிரவைப் பகலாக்கி விசயா வெய்யென்
றியம்பியந்தச் சயிந்தவனே வதைத்துப் பார்த்தன்
இறவாமற் காத்தனையே யெம்பி ரானே. 63

மைந்தனெனுஞ் செயத்திரதன் சிரத்தை யிந்த
மண்ணில் விழச் செய்தவர்கள் மடிக வென்றே
சிந்துபதி தபசுபண்ணி யிருக்கப் பார்த்தன்
செயத்திரதன் றலையறவே யெய்த பாணம்
சந்திபண்ணுங் கையிற்சிரத்தைக் கொடுபோய் வைக்
தரையிலிட்டுச் சிந்துபதி தானே சாக [கத்
இந்தவகை தொடுத்ததனு லன்று பார்த்தன்
இறவாமற் காத்தனையே யெம்பி ரானே. 64

கன்னனெய்யுங் கடுநாகக் கணையாற் பார்த்தன்
கழுத்தறுந்து மாயாமற் றேரைத் தாழ்த்த
மின்னுமணி முடிக்கிலக்காய்க் கொடுபோய்ச் சர்ப்பம்
மிகவெட்கித் தனைமீண்டுந் தொடுக்கச் சொன்
உன்னருளான் முன்னுளிற் குந்தி தேவிக் [னுல்
குரைத்தசொற் காத்தொடுத்த கணையினித் தொ
[டேன்போ
என்னவந்தப் பாம்புதலை யடிக்துக் கொண்டே
இறக்கவகை யிட்டனையே யெம்பி ரானே 65

தினம்பன்னீ ராயிரங்கோ தானம் பண்ணும்
திறலரசன் முன்னைநா ளீந்த வோரா
தனதுகீ தாரத்திற் சேரி லத்தை
தானுமொரு வர்க்களித்த சாபத் தாலே
மனநடுங்கிக் கிணற்றினிற்பச் சோந்தியாகி
மயங்கியுற நீயெடுக்கச் சாப நீங்கி
இனனிறமா யுலகமெல்லாம் புரக்க வைத்தாய்
இறைவாநா ராயணனே வெம்பி ரானே. 66

வரத்திலர னுங்கணமும் வாசல் காக்க
மதத்தவா ணுசுரன்மே னீவந் தக்கால்
உருத்திரனக் கினிவிடநீ குளிரை யேவ
உஷ்ணமுடன் குளிருமா யரனுற் றக்கால்
கரத்திரளிற் படையெடுத்தே யெதிர்த்த வாணன்
கைகளோ ராயிரத்தி லிரண்டு கையை [தாய்
இருத்திமற்றைக் கரங்களெல்லாந் துணித்துக் காத்
இலகுசக்ரா யுதத்தரியே யெம்பி ரானே. 67

பொன்னுலகைச் செயித்தநர காசு ரன்ருள்
பூதலத்திற் கொடுவந்து வைக்குந் தேவ
கன்னியர்கள் பதினுரு யிரம்பேர் தம்மைக்
கலியாண முகூர்த்தமொன்றிற் பண்ணிக் கொ
ந்நேறிசே ரவரவர்க்கோர் புருட ணுகி [ண்டே
நாடோறு மவரவர்க ளுடனே கூடி
என்னகத்தி லேயிருப்பா ரெங்கும் போகார்
என்னவுற்ருய் மாயவனே யெம்பி ரானே. 68

உருக்குமணிக் கொருபூநீ யளித்த தாலே
உன்னுடன்சத் தியபாமை பேசா துற்ருல்
தருக்கொடுவந் துனக்களிப்பே னென்று சொல்லிச்
சயகருடன் மீதேறி வானுக் கேகி
மருக்கமழும் பாரிசா தங்கொள் போது
மறித்தசுர ரிந்த்ரன் விழச் சங்க மூதி
இரக்கமொடத் தருக்கொணர்ந்து மனவிக் கீந்தாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. 69

பயிர்க்கிறைத்துக் காலில்வருங் கிணற்று நீரைப்
பாகவதன் கைச்செம்பான் முகந்து கொண்டு
வெயிற்சுடுகால் குளிரவே நினைத்துக் கொள்ள
வேளாள னிறக்கவெம தூதர் பாசக்
கயிற்றினிற்கட் டொட்டாமன் முகுந்தா வுன்றன்
கணநாத ராதரவா யழைத்து வந்தே
இயற்சுருதி முழங்கியசீர் வைகுந் தத்தில்
இனத்தொடும்வைத் திடச்செய்தாயெம்பிரானே.

பாதகவெஞ் சினமுடைய கிராத கன்ருன்
பதியிழந்து விதவையைப்பெண் டாக்கிக்கொண்
பாதையினில் வீடுகட்டி யிருக்க வோர்நாள் [டே
பாகவதர்க் கமுதளிக்கும் பொருட்டா லுச்சிப்
போதொரடி யவனவன்பந் தலிலே நின்று
போகவடி யார்க்குநிழ லீந்தா னென்றே
ஏதமற விவனெடுஞ் சாலோ கத்தில்
ஏற்றமுற வைத்தனையே யெம்பி ரானே. 71

அடவிதனி லரிதாச னெறியே செல்ல
அறியாமற் பறிக்கவந்தோர் கள்ளன் கிட்ட
படைவிற்கொண் டோர்வேடன் கூடி யத்தால்
பறியாக்கள் ளன்ருெலைய வூர்பேரய்ச் சேர்ந்தே
திடமுற்ற பத்தியினு லுன்னைப் போற்றித்
திருவாரா தனஞ்செய்ய வேட னுலே
இடரற்று னென்றவனை வைகுந் தத்தே
எண்ணமுற வைத்தனையே யெம்பி ரானே. 72

உன்னும மாயிரத்தி லொருபேர் சொல்லான்
உனதடியார்க் கொருநாளும் வணங்கிப் பேசான்
சொன்னுலும் பெரியோர்கள் புத்தி கேளான்
சொல்வதெல்லாம் பொய்க்கொலையுங் களவுஞ்
அந்நீசன் திருடிவந்தே திருவ ரங்கத் [செய்வான்
தரிசியென்று விற்றதனு லவனுக் காவந்
தென்னூரின் பேர்சொன்னு னென்பேர் சொன்னுன்
என்றுமுத்தி யளித்தனையே யெம்பி ரானே. 73

தாயாய்நற் றந்தையாய்க் குருவாய்த் தேவாய்த்
தாரமாய்ப் புத்திரரா யுறவாய் நானுய்
நீயாகி யெள்ளிலெண்ணெய் போலே யெங்கும்
நிறைந்துபரி பூரணமாய் நிற்குஞ் சோதி
மாயாகண் ணுவரதா வாசு தேவா
மாதவா வென்றுசுரர் வணங்கிப் போற்ற
ஏயாவென் ருேயாமல் வேயால் வாயால்
இசையூதி நின்றனையே யெம்பி ரானே. 74

கன்றுடனே கோபால ரநேகம் பேரைக்
கமலவய னபகரித்துக் கொடுபோய் வைக்க
வென்றியுட னந்தந்த வடிவ மாகி
வேற்றுமையற் றணைத்துமுற வேசிட் டித்தாய்
அன்றிருந்து மற்றைநா ளயன்வந் தக்கால்
அணைத்துமுறக் கண்டஞ்சித் தெண்டன் பண்ணி
இன்றடியேன் செய்தபிழை பொறுத்துக் காவென்
றேத்தவளித் தணையரியே யெம்பி ரானே. 75

பலவிசையச் சராசந்த னுன்றன் பேரிற்
படையெடுக்க முறிந்தோடிப் பின்பொ ருக்கால்
மலைமிசைநீ யேறத்தீ மூட்டி நீதான்
மடிந்தணையென் றெண்ணிமிகச் சயமா யுற்றுல்
அலைவின்றி நீயுதித்து மாறு பாகம்
ஆகவொரு துரும்பினைத்தான் பிளந்தெ றித்தே
இலகுபல முளவீம சேனன் கையால்
இரு பிளவாக் கினையரியே யெம்பிரானே. 76

நிருவாணத் துடன்குளித்துப் பணைகள் போல
நின்றமையாற் சுரர்கள்முனி சாபத் தாலே
மருதாகி நிற்குமிடத் துன்னை யாயர்
மதியாமல் வெண்ணெய்க்கா யுரலிற் கட்ட
வெருவாம லேதவழ்ந்து மருதைக் கிட்டி
விறற்றிகிரி யாவிரலா லறுத்து வீழ்த்தி
இருளான சாபந்தீர்த் தவரைப் பண்டில்
ஏற்றமுற வைத்தணையே யெம்பி ரானே. 77

நிலமாது மோகித்தே யுனக்குப் பெற்ற
நிருதநர காசுரனை யும்பர்க் காநீ
கொலவேண்டி வந்துபொர வவன்வி டுத்த
கொடுங்கணை நின் னெற்றியிற்பட் டுதிரத் தாற்
மலர்மூடிக் கொள்கையினின் கரத்தி லுற்ற [கண்
வரிசிலையிற் சத்தியபா மைப்பெண் ணெய்ய
இலகாழி யெய்தாற்போ னரகன் மேற்பட்
டிறக்கநினைத் தணையரியே யெம்பி ரானே. 78

சயமிகுத்த சாம்புவனைப் பொருது வென்றே
சாம்பவதிப் பெண்ணையுங்கைக் கொண்ட வத்
நயமுடனே சமந்தகமா மணியுங் கொண்டே [நாள்
நாடனைத்தும் போற்றவெழி லாக வந்தாய்
அயனையளித் துலகனைத்தும் புடைக்கப் பண்ணும்
அச்சுதனே யென்றமரர் முனிவ ரெல்லாம்
இயலிசைசேர் வேதத்தாற் றுதிக்க வேவீற்
றிருக்குநா ராயணனே யெம்பி ரானே. 79

திட்டமுட னுயரில்லில் வெண்ணெய் நெய்பால்
திருடுகைக்கே கண்டபெண்க ளுனைக்க யிற்றுல்
கட்டிவைத்து நந்தன்மனை தன்னிற் சென்றே
கைதொழுத சோதையுடன் முறையிட் டக்கால்
தொட்டிலிலே பார்க்கமிக்க கொறுக்கை விட்டே
தூங்குதல்கண் டஞ்சியந்தப் பெண்க டெண்ட
இட்டறியா தேசொன்னேம் பொறுமா தாவே [ன்
என்றுரைக்கப் பண்ணினையே யெம்பி ரானே.

மகரத்திற் சூரியன்வந் துதித்த காலில்
வந்திக்க விந்திரனை நோக்கிப் பொங்கல்
மிகவிட்டுக் கயிலைமலை போலே வைக்க
விளையாட்டா யத்தனையும் நீயே யுண்ணக்
ககனத்தி லிந்திரனும் வந்து பார்த்துக்
கன்மழையை நிரைமீதில் விடுத்த மட்டில்
இகபரத்துக் கிறையவனே நிரைக்காக் குன்றை
எடுத்துமழை தடுத்தனையே யெம்பி ரானே. 81

தீமையினுல் மக்கள்பழிக் காக்கண் ணில்லாத்
திருதராட் டிரன்வீமற் கொல்ல வெண்ண
வீமனைப்போல் வல்லிரும்பாற் சமைப்பித் தந்த
விழியிலான் முன்னிறுத்தி வீமன் பேச
மாமிடுக்காற் கைநெருக்க விருப்பு வீமன்
வலியதலை தெறித்துயரப் பறக்க வேகண்
டேமமுடன் வீமனையாள் கண்ண வென்றே
எல்லோருந் தொழவிருந்தா யெம்பி ரானே. 82

உலகங்க ளீரேழு கற்பாந் தத்தில்
ஒருங்கவே யோர்கணத்தி லெளிதா யுட்கொண்
டூலவின்றிக் கற்பாந்த வெள்ளந் தன்னில்
ஆலிலமேற் குழவியாய்த் துயின்ற வந்நாள்
சலிலமற மதுகயிட வரையுண் டாக்கிச்
சக்கரத்தாற் பிளந்துடலாற் சலத்தை மூடி
இலகமுனுண் டருளுலகை யுமிழ்ந்தே பண்டில்
ஏற்றமுற வைத்தணையே யெம்பி ரானே. 83

அருமறையா ரிருக்கெசுர்சா மத்தி னுேடும்
அதர்வணமா கியசதுர்வே தங்க டம்மைத்
திருடியெடுத் துக்கொண்டே யுததி சேரும்
தீயனுக்கா மச்சாவ தார மாய்நீ
ஒருசெலுவிற் சமுத்திரத்தைச் சுருக்கி யேவைத்
துக்கிரத்தாற் சோமுகா சுரனைக் கொன்றிட்
டிருளறவே விதிபடைக்க வல்வே தத்தை
இரங்கியளித் தணையரியே யெம்பி ரானே. 84

மந்தரமத் தமிழ்ந்தாமற் பாற்க டற்குள்
வளர்ந்தாதி கூருமமாய் மலையைத் தாங்கிச்
சுந்தரவா சுகியைவட மாகச் சுற்றிச்
சுராசுரர்நின் றமிர்தங்க டைந்த வந்நாள்
ஐந்தருசிந் தாமணிநன் னிதிக ளொன்ப
தாணபரி மூதேவி தாரை தேனு
இந்திரைபொற் கௌத்துவமா மணியோ டாலம்
இளம்பிறையுந் தந்தணையே யெம்பி ரானே. 85

புண்ணியந்தெய் வதமுஞ்சேர் பூலோ கத்தைப்
புற்பாய்போற் சுருட்டிக்கொண் டேபா தாள
நண்ணிரணி யாட்சணப்பின் ருெடர்ந்தே யேகி
நலமுடனே யாதிவரா கத்தே வாகி
மண்ணுலக மணைத்துமிடந் தெடுத்தோர் கோட்டில்
வைத்துவர வவன்மறிக்க வதைத்துத் தேவர்
எண்ணவுல கீரேழும் படியப் பண்ணுய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. 86

நலமருவு பிரகலாத னிரணி யாய
நமவென்று சுக்கிரனன் றேதச் சொன்னஞ்
அலைவின்றி யுரிகரிநா ராய ணுவென்
றறிந்துரைக்கப் பிதாசுதனைக் கொல்ல விட்ட
பலமல்லர் மதகரிபாம் பனல்நீர் வெற்பு
படுபடைகண் மித்துருவாக் காக்கப் பண்ணி
இலகியபொற் றூணினர சிங்க மாய்வந்
திரணியனை வதைத்தனையே யெம்பி ரானே. 87

சுரரசுரர் முனிவர்நரர் கையிற் பாரிற்
சூடர்வானிற் பகலிரவி லுள்பு றம்பிற்
பெருபடையிற் றுன்சாகா விரண்யன் றன்னைப்
பிரகலாதன் தர்க்கித்துண் டென்ற தூணில்
நரகரியாப் பொழுதுபுகு நேரந் தன்னில்
நாடியுதித் துயர்வாசற் படிமீ தேறி
இரணியனைத் தொடைமிசைவைத் துகிரி னுலே
இருபிளவாக் கினையரியே யெம்பி ரானே. 88

தீமையினுல் மாவலிதான் வாழ்நா ளந்தத்
தேவர்செயும் வேள்வியைத்தான் செய்கை யா [லே
வாமனனுப் மூவடிமண் டாரை யேற்று
வானிலயன் பூசிக்க வொருதா ணீட்டிப்
பூமியோ ரடியாக்கித் தாரை வார்த்த
பூதானக் குறையடியுந் தந்து போவென்
றேமவுல கிற்சுகமாப் பாதா ளத்தில்
எழிற்பலியைச் சிறையில்வைத்தாயெம்பிரானே.

உளகலந்த போதுவளர்ந் தண்ட கோளத்
துதைத்தந்ததிரு வடியையன் விளக்குந் தீர்த்தம்
பலமுகமா யாகாச கங்கை யாகிப்
பகிரதன்மெய்த் தவத்தாற்பார்க் கிறங்கும்போதச்
சலமிகுந்தே யரன்சடையிற் றங்கி யுந்தச்
சங்கரனைச் சிவனுக்கி யிழிந்த தீர்த்தம்
இலகுபுகழ்க் காசியிலே கங்கை யாய்வந்
திடர்தீர்க்கப் பண்ணினையே யெம்பி ரானே. 90

தசரதன்பா லுதித்துமுனி யாக முற்றித்
தாளிணையாற் கல்லெப்பெண் ணுக்கி யார்க்கும்
வசமலாப் பிஞ்சுகத்தைக் குனித்தொ டித்து
மன்மகிழச் சீதையைநன் மணமுஞ் செய்து
குசலபண்ணிக் கவித்திரளாற் சேது கட்டிக்
கொடியரா வணகும்ப கருண ரைக்கொன்
றிசைபெறவே வீடணற்குப் பட்டங் கட்டி
ஏற்றமுற வைத்தனே யெம்பி ரானே. 91

வசுதேவன் சுதராறு பேரைக் கஞ்சன்
வதைத்தபின்னே ழாங்கருவால் வழுவியே வீழ்ந்
தசரீரி யாலந்த நந்த கோபன்
அடைக்கலமா முரோகிணியார் வயிற்றிற்புக்குச்
சசிவடிவாய்ச் சங்கரு ஷணனுய் வந்தே
தக்கதிறற் கண்ணனுக்குத் தமைய னுகி
இசைவாக வலாயுதத்தா லுலகைக் காத்தாய்
எழிற்பலபத் திரராமா யெம்பி ரானே. 92

வசுதேவ னிடத்துதித்து நந்த கோபன்
மகவாகிச் சுரர்பணிந்து போற்ற வீறி
அசுரேச ரநேகருடன் கஞ்ச னைக்கொன்
றைவருக்காப் பாரதப்போர் பொருது வென்று
சிசுபாலன் வசைகேட்டுப் பொருது சாபந்
தீர்த்தருளிப் பரமபத மவனுக் கீந்தே
இசையாகத் திருவிளையாட் டநேகஞ் செய்தாய்
ஏற்றமுள்ள கோவிந்தா வெம்பி ரானே. 93

நம்பியமெய்க் குருராமா நுசனைப் போற்றி
நலமுடனே கச்சியில்வாழ் கடாம்பி யாச்சான்
தும்பையூர்க் கொண்டியென்பா ணவப்பாண் டத்திற்
றேய்ந்ததயிர் விலைபேசிக் கொண்டு வந்தே
உம்பர்தொழு முனக்கேத்தித் தானு முண்ண
உளத்திருள்போய்த் தயிர்க்குவிலை வாங்காக்
[கொண்டிக்
கெம்பாமென் னுச்சான்சொற் கேட்டு முத்தி
ஈந்திட்டா யச்சுதனே யெம்பி ரானே. 94

பாகவத கிருஷ்ணயங்கா ரென்பார் நின்பால்
பத்திகொடு சங்கீதம் லட்சம் பாட
நீகருணை கூர்ந்துதிருப் பதிநூற் றெட்டும்
நிமிடத்தி னேசமுடன் ரேன்ற வைத்தாய்
மோகமுட னெடுத்தவகீ விழுங்கிக் காட்டி
முடியிலவன் றரித்தபட்டும் வாயிற் காட்டி
ஏகமாய் கூடியது திட்டங் காட்டி
எல்லாரு மறியவைத்தா யெம்பி ரானே. 95

சக்கரஞ்சங் குயர்கதைவா டணுவோ டைந்தும்
தரித்தருளும் பரம்புருடா கமலக் கண்ணு
மிக்கபரா பரமூர்த்தி துளபத் தாமா
விறலுடனே மண்ணளந்துண் டிருக்குஞ் சோ தீ
அக்கரமைம் பத்தொன்ருய்ச் சொல்லாய்ச் சொல்லின்
அருத்தமுமா யெட்டெழுத்தின் வடிவு மாகி
எக்கணிலு மணுவுக்கு மணுவாய் நின்றும்
எழிற்குருவா யுதிக்கின்ரு யெம்பி ரானே. 96

திருமாதும் நிலமாதும் பத்தி யாலே
திருவடிக்ள் வருடியிட விழித்து றங்கும்
கருணைக ராமுத்தி வீடா யெங்கும்
கருந்துருவா யருவாகி யிருக்கு மாயா
அருளாளா வுயர்சனகன் சனக்கு மாரன்
அனந்தன்கரு டன்விசுவச் சேன னென்றும்
இருள்சேரா மார்க்கண்டன் பிருகு போற்ற
இருக்கின்ரு்ய் நாரணனே யெம்பி ரானே. 97

கண்ணிரண்டா யிரமுடைய சேஷன் பன்னுள்
காத்திருந்து முன்னுடைய வடிவங் காணுன்
பண்ணுறத்தன் ஞவிரண்டா யிரத்தா லோதிப்
படித்துமுன்றன் பெருமைமதனைப் பகர மாட்டான்
மண்ணுலகிற் சிறியவனேர் நாவா லுன்றன்
மகிமையைக்கண் டுரைக்கவென்ரு்ல் வசமோ
எண்ணரிய மாயவனே கச்சி வாழும் [வானேர்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. 98

பட்டமரந் தளிர்த்துமிகப் பூத்துக் காய்க்கப்
பாற்பசுக்கள் சுரந்தொழுக்க மலடு மீனத்
துட்டவியாக் கிரமுமா னினமு மொன்றுய்த்
தோகைமயில் படநாக முடனே யாட
வட்டமுலைக் கன்னியர்கள் மாலாய் நிற்க
வானவருந் தானவரும் வணங்கிப் போற்ற
இட்டமுட னேவேணு காநம் பண்ணுய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. 99

ஆருமுனை நவமாகப் பாட வேதம்
ஆகமசாஸ் திரமனைத்தும் நீயு ரைத்தாய்
பேருமுனக் குண்டான பழைய பேரே
பெருங்கதையு மியலிசையும் பழைய வேயாம்
காருததி நீர்தனையே முகந்து பெய்யிற்
கடலிலது நீத்தமதாய்க் கலந்துற் றுற்போல்
ஈரமுடன் மெய்யடியார் நவமாப் பாடில்
இரங்கியதுட் கொள்கின்று யெம்பி ரானே. 100

திருநாம மறவாவுன் ருசர்க் கெல் லாம்
சீர்பாதத் தூளிநா யடியே னுன்றன்
அருளாலே யெம்பிரான் சதக மென்றே
அறைந்தகவி நூறதனி லொன்று னுலும்
பரிவாகக் கற்றவர்க்குங் கேட்டபேர்க்கும்
படிமிசையிற் றுன்பமறுத் தின்பம் பாலித்
திருவடியின் மெய்ஞ்ஞானம் விளங்கச் செய்வாய்
இறைவாநா ராயணனே யெம்பி ரானே. 101

முற்றிற்று.



நாராயண பாரதியார்

இயற்றிய

10. கோவிந்த சதகம்

காப்பு

கட்டளைக் கலித்துறை

மாவேழம் கூப்பிட வந்தாய்
யுலக வழக்கச்சொல்லென்
பாவேற யானுனக் கோர்சத
கஞ்சொலப் பாரதியென்
தாவேற வாழ்த்துகின் றேனுனக்
காத்தரு ணுன்முகற்கும்
கோவேசக் ராயுத னேயச்சு
தாநந்த கோவிந்தனே.

நூல்

படிக்கு அரச னிருந்தாற் குடிக்குச் சேத மில்லை

செடிக்கொரு வேங்கை குடிகொண்ட
காடெனத் தேசத்திலே
அடிக்கொரு தீம்புசெய் வாரைத்
துரந்தர சாளவிந்தப்
படிக்கொரு மன்னனுண் டானு
லுழுது பயிரிடுமக்
குடிக்கொரு சேதமுண் டோவச்சு
தாநந்த கோவிந்தனே.

கோட்டிஞல் தேள், கொட்டாவிட்டாற் பிள்ளைப்பூச்சி

கட்டாண்மை வேந்தர் பொறுமையெண்
ணுதவன் கண்ணரடி
பட்டாலல் லாமல் வணங்கார்
விடமுட்ப டாமற்சும்மாத்
தொட்டா லதுபிள்ளைப் பூச்சியென்
பார்முட் சுறுக்கெனவே
கொட்டாமற் றேளென்ப ரோவச்சு
தாநந்த கோவிந்தனே. 2

புண்ணிலே கோலிட்டதுபோல

பாலிட்ட தாகிய நீர்போற்
கலந்து பகருங்கல்வி
நூலிட்ட கேள்விக்குள் ளாவர்நல்
லோரிரு நூறுதரம்
மேலிட்ட புத்திசொன் ஞலுங்
கயவர்க்கு வெந்தபுண்ணிற்
கோலிட்ட வாருக்கு மேயச்சு
தாநந்த கோவிந்தனே. 3

மூழுக்கட்டி பேர்க்கிற பன்றிக்குக் கொழுக்கட்டி விட்டதுபோல

கழுக்கட்டி யேற்றினுங் காசொன்
றிலையெனக் கைவிரித்தே
மழுக்கட்டி யேந்தவல் லாரையுத்
யோகத்தில் மன்னர்வைத்தல்
மூழுக்கட்டி பேர்த்துக் கிழங்குண்ணும்
பன்றியில் மூஞ்சியிலே
கொழுக்கட்டி விட்டதன் ரூவச்சு
தாநந்த கோவிந்தனே. 4

காலத்துக்குத் தக்க கோலம்

நீலங் கவர்விடப் பாம்பைப்
பிடார னியமிக்கவே
ஆலங் கரந்திட் டெலியுடன்
வாழு மரசர்க்கஞ்சிக்
காலங் கருதி வலியா
ரெளியரைக் காண்கிலனு
கூலரைப் போலிருப் பாரச்சு
தாநந்த கோவிந்தனே. 5

குட்டிக்கரணம்போட்டாலுங் கொடுக்கிற தரிது

தடுப்பார் புலியையும் பாம்பையும்
வாய்கட்டித் தாங்கிக்கையால்
எடுப்பார் மழுவைத்தண் ணீர்மே
னடப்ப ரெவரு மெச்ச
அடுப்பார் சபையினி லூற்றெட்
டடிக்கம்பத் தாடுவர்பொன்
கொடுப்பா ரரியர்கண் டாயச்சு
தாநந்த கோவிந்தனே. 6

அயன் கணக்கு யாருக்கும் தப்பாது

ஆலிக்க வாழ்ந்துண் டிருந்தாலும்
யார்க்கு மயன்வகுத்த
சோலிக் கணக்கின் படிதப்பு
மோதொழு வார்க்குமுத்தி
பாலிக்கும் வெள்ளி மலையான்
பிரம்படி பட்டுப்பிட்டின்
கூலிக்கு மண்சுமந் தானச்சு
தாநந்த கோவிந்தனே. 7

கொடுத்தாற் குறை வராது

எடுத்தாலு மூறு மிறைத்தாலு
மூறு மிடைநடுவே
மடுத்தால் மறிப்பு மோமணற்
கேணித்தண் ணீரதுபோல்
அடுத்தாரை வாழ்விக்கக் கல்வியுண்
டானவ ரன்புடனே
கொடுத்தாற் குறைவரு மோவச்சு
தானந்த கோவிந்தனே. 8

குளத்துக்கு மழை குந்தாணிபோற் பெய்யுமா?

எந்தா யெனச்சென் றிரப்பவர்க்
கீபவ ரெள்ளளவு
தந்தாலும் போது மிகழுவொண்
ணுதெங்குஞ் சஞ்சரித்து
வந்தார் பருகுங் குளத்துக்குப்
பெய்யு மழைத்துளிகள்
குந்தாணி போற்பெய்யு மோவச்சு
தானந்த கோவிந்தனே. 9

கோடாலிக் காம்பு குலத்துக் கீனம்

பீடார் குலத்தினி லாகாத
பிள்ளைதற் பெற்றெடுத்தோர்
வாடாது வாடக் குலநாச
மாக்கிடு மற்றதுதான்
தாடாண்மை யாளர்கைக் குள்ளாய்த்
தருக்குலஞ் சாயவெட்டும்
கோடாலிக் காம்பல்ல வோவச்சு
தானந்த கோவிந்தனே. 10

அரைக்காசுக்குப் போன கற்பு ஆயிரங் கொடுத்தாலும் வராது

எடுத்தாலும் பிச்சை யழுதுநன்
றேயில்லை யாகிலுயிர்
விடுத்தாலும் வாசிநட் பில்லார்
மனதில் விருந்தெனப்போய்
அடுத்தாவ தேதரைக் காசுக்குப்
போனகற் பாயிரம்பொன்
கொடுத்தாலுந் தான்வரு மோவச்சு
தாநந்த கோவிந்தனே. 11

பொல்லாக் குணத்துக்கு நல்ல மருந்துண்டோ?

உணத்தக்க நன்மருந் தாற்பிணி
போமென் றுலகிலுள் ளோர்
பணத்துக்குக் கொண்டு பரிகரிப்
பார்விடம் பாய்ந்துசெத்த
பிணத்துக்கும் பச்சிலை யுண்டுபுல்
லோர்க்குப் பிறக்கும் பொல்லாக்
குணத்துக்கு நன்மருந் தேதச்சு
தாநந்த கோவிந்தனே. 12

கவி கொண்டார்க்குங் கீர்த்தி கலைப்பார்க்குங் கீர்த்தியா ?

மலைப்பாற் குறுமுனி போலும்
புலவர் வடித்ததமிழ்
விலைப்பாற் படுத்திற்கொள் வார்க்குண்டு
கீர்த்தி விதண்டைசெய்து
கலைப்பார்க்கும் பேய்கொண்ட நாய்களைப்
போற்புல்லைக் காட்டிநின்று
குலைப்பார்க்குங் கீர்த்தியுண் டோவச்சு
தாநந்த கோவிந்தனே. 13

வெள்ளாட்டிமேற் சன்னதம் வந்தால் விழுந்து விழுந்து கும்பிட வேண்டும்

எள்ளாடும் வாணியர் செக்கடித்
துண்டிடு மீனரென்று
விள்ளா ரவர்க்குப் பவிஷுவந்
தானிதம் வேலை செய்யத்
தள்ளா தடிபடும் வெள்ளாட்டி
மேற்சன்ன தங்கும்பிடு
கொள்ளாமற் போவதுண் டோவச்சு
தாநந்த கோவிந்தனே. 14

கெடுப்பாரைத் தெய்வங் கெடுக்கும், கொடுப்பாரைத் தடுக்க வாகாது

உடுப்பாருண் பார்தமைப் போனினை
யாதொருவன் பிழைப்பைக்
கெடுப்பாரைத் தெய்வங் கெடுக்குமென்
றேசொல்லக் கேட்டிருந்தும்
விடுப்பாரன் றேபுல்லர் துர்க்குண
முற்றும் விதரணத்தார்
கொடுப்பார் தமைத்தடுப் பாரச்சு
தாநந்த கோவிந்தனே. 15

தோட்டத்து நரி கூட்டத்திலே வராது

நாட்டம்ப ணத்தில்வைக் குங்கள்ள
லோமர்கள் ஞவலர்கள்
ஈட்டந்த வைக்கண்டு கிட்டுவ
ரோவிரை தேடிமனத்
தோட்டம் புகுநரி யஞ்சாம
னெஞ்சந் துணிந்துசந்தைக்
கூட்டந் தனில்வரு மோவச்சு
தாநந்த கோவிந்தனே. 16

நாய்வாலைக் குணக்கெடுக்க யாராலாகும்?

இணக்காதி ரார்வல் லிரும்பொடிந்
தால்வைத் திருதலையும்
வணக்காதி ரார்வின் னிமிர்ந்ததென்
ருற்புல்லர் மாறுபடும்
பிணக்கார் தடுப்பவர் நாய்வாலை
நீளப் பிடித்திழுத்துக்
குணக்கா ரெடுக்கவல் லாரச்சு
தாநந்த கோவிந்தனே. 17

குளப்படி நீரிறைத்தாற் கடற்பள்ளம் நிரம்புமா?

இறைமுறை யேழைக் குடிகளை
நோவச்செய் தேபசும்பொன்
அறையிடும் பொக்கசந் தானிரம்
பாதர சர்க்கியல்போ
னிறைகடற் கென்ன குறைவோ
குளப்படி நீரிறைத்துக்
குறைவறச் செய்பவ ராரச்சு
தாநந்த கோவிந்தனே. 18

எருது ஈன்றதென்ருற் கொட்டாயிற் கட்டென்பவர் உண்டு

கிட்டி யொருவன் றலைக்குளி
ரத்னங் கிடைத்ததென்ருல்
வெட்டி வெளிசெய்ய வேணுமென்
றேவிரும் பார்பெரியோர்
எட்டினை மாத்திரம் புத்தியில்
லாலெரு தீன்றதென்ருற்
கொட்டிலுட் கட்டுமென் பாரச்சு
தாநந்த கோவிந்தனே. 19

முத்து குலத்தாற் பெருமைப்படும், மூடர் குலத்தாற் பெருமைப்படார்

சலத்தால் விளைகின்ற சிப்பியின்
வாய்முத்தைத் தற்குலந்தான்
சொலத்தா னெவரு மிகழார்
விரும்பித் தொகுத்தணிவார்
அலத்தா மத்தவறி வீனர்
செனனம தாகியநற்
குலத்தாற் பெருமைபெ ருரச்சு
தாநந்த கோவிந்தனே. 20

நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தது போலாம்

களிப்பாற் றுரைக ளறிவீன
ரைக்கைப் பிடித்துச்செல்வம்
அளிப்பா ரெனிற்பின் னகைக்கிட
மாமென்று மாவதில்லை
வெளிப்பாற் றிரிகின்ற நாயா
னதைநடு வீட்டுக்குள் ளே
குளிப்பாட்டி வைத்ததொப் பாமச்சு
தாநந்த கோவிந்தனே. 21

ஆண்டி கையில் அகப்பட்ட குரங்காய் அலைவார்

வரங்காத லிக்குந் தவமுடை
யோர்வங் கணமெவர்க்கும்
உரங்காணு நன்மை பெறலாங்
கயவ ருடன்கலந்தால்
அரங்காஞ் சடையிற் சடையாண்டி
கையி லகப்பட்டதோர்
குரங்கா யலைவர்கண் டாயச்சு
தானந்த கோவிந்தனே. 22

வம்புத் துரைத்தனத்தாரைக் கும்பிடத் தகுமா ?

செம்பிடு மேனி யுருக்கொண்ட
தெய்வத்தைத் தெண்டமிட்டு
நம்பிட வேண்டும் பதம்பெற
லாநம்பி னேர்க்குதவா
வம்பிடும் லோபத் துரைத்தனப்
பேய்களு மன்னரென்று
கும்பிட வுந்தகு மோவச்சு
தாநந்த கோவிந்தனே. 23

குருவிக் கூட்டைக் கோலாலே குலைப்பார்களா ?

சோட்டைப் புனைத்து ரணவேட்டை
யாடுந் துரைகடங்கள்
தாட்டைப் புரப்பது ஞாயங்
கெடுப்பது ஞாயமன்றே
வீட்டுக்கு ணம்பி யடைக்கலச்
சிட்டுவெண் முட்டையிடும்
கூட்டைக் குலைப்பர்க ளோவச்சு
தாநந்த கோவிந்தனே. 24

பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டுப்
பார்க்கவேண்டுமா ?

சடத்துக் கழகென்பர் தான்கற்ற
கல்வி தகுமதல்லால்
இடத்தக்க பூஷணந் தாணணி
யாவிடி லேசுவரோ
புடத்துட் படத்தங்கக் கட்டி
யுருக்கிப் புதுக்கியபொற்
குடத்துக்கும் பொட்டழ கேனச்சு
தானந்த கோவிந்தனே. 25

படியாள்வார் நீதி தப்பிற் குடி யாரிருப்பார் குவலயத்தில்?

படியாளு மன்னர் மனுநீதி
தப்பும் படிநடந்தால்
விடியாது நாடு மழைபொழி
யாது விளைவுகுன்றும்
பொடியாம் பசும்புன் னெருப்பெழக்
காயுமப் பூமிதனிற்
குடியா ரிருக்கவல் லாரச்சு
தாநந்த கோவிந்தனே. 26

கோவுக் கழகு செங்கோல்

பாவுக் கழகு பொருட்சுவை
சொற்சுவை பன்மலர்ப்பூங்
காவுக் கழகு மயிலுங்
குயிலுங்கண் டாய்கமலப்
பூவுக் கழகு மணமுந்
திருவும் புவிபுரக்கும்
கோவுக் கழகுசெங் கோலச்சு
தாநந்த கோவிந்தனே. 27

குட்டுப் பட்டாலும் மோதிரக் கையாற் குட்டுப்பட வேண்டும்

மட்டுப்ப டாத வநுமா
ரசோக வனமழித்துக்
கட்டுப்பட் டாரிந்த்ர சித்தன்கை
யாற்கர்த்தன் காரியத்தால்
முட்டுப்பட் டாலுஞ் செயங்கொள்வ
ராகிற்பொன் மோதிரக்கைக்
குட்டுபட் டாற்குறை வோவச்சு
தாநந்த கோவிந்தனே. 28

திக்கு விஜயங் கொள்பவனுக்கும் ஜெயாபஜய காலந் தெரியாது

இயல்புடன் றிக்கு விசயங்கொள்
வேந்தரென் ருலுமப
செயம்வருங் காலந் தெரிபவ
ராரிரு வுந்திறமும்
புயபெல முன்னின்ற வோவிக்ர
மாதித்தன் போர்பொரப்போய்க்
குயவன்கை யான்மடிந் தானச்சு
தானந்த கோவிந்தனே. 29

பாலைப் புகட்டுவாள் பாக்கியத்தையும் புகட்டுவாளோ ?

சலிக்கக் கணக்கென்ன தான்பெற்ற
பிள்ளைக்குத் தாய்முலைப்பால்
ஒலிக்கக் கனிந்தழ வூட்டிவ
ளர்ப்பள்பின் னூழ்வினையால்
பலிக்குட் படிலன்னை யென்செய்வள்
பாக்கியம் பாலடையில்
குலுக்கிப் புகட்டுவ ளோவச்சு
தாநந்த கோவிந்தனே. 30

எல்லை பாழ்பட்டாலும் கொல்லைக் கடமை விடார்

சொல்லைப் புரட்டுங் கொடுங்கோன்
மணியத்தர் தோஷமெண்ணூர்
கல்லற்படுத்திக் குடிகளை
நோவக் கணக்கெழுதி
எல்லைக்கு ளாநிலம் பாழ்படி
னும்பிடித் தேருழுத
கொல்லைக் கடமைவி டாரச்சு
தாநந்த கோவிந்தனே. 31

கப்பலேறிப் பயிர் கடன் கொட்டை நூற்றே விடியும் ?

இட்டுநோற் றுப்பிறந் தாற்செல்வ
மூற்று மிடாதவித்தி
பட்டுநூற் றுக்கிருந் தேயுழைத்
தாலும் பலிசெய்துமோ
விட்டுநோக் குங்கப்ப லோடியு
மேவிடி யாமனையிற்
கொட்டைநூற் றேவிடி யுமச்சு
தானந்தி கோவிந்தனே. 32

மானுக்கொரு புள்ளி யேறினு லென்ன ?
குறைந்தா லென்ன?

நிறைந்தே வருங்கப்ப லாயிரந்
தம்மினின் றேர்கப்பல்தான்
மறைந்தே திகைதப்பிற் றுழ்வென்றெண்
ணூர்வர்த் தகர்கள்வனத்
துறைந்தே வளர்புள்ளி மானுக்
குடம்பினி லோர்புள்ளிதான்
குறைந்தேதல் லான்மிகுந் தேச்சு
தானந்த கோவிந்தனே. 33

கங்காநதியில் முழுகினுலும் காக்கை
அன்னம் ஆமா ?

ஒளித்தாலுந் தூர்க்குணம் போமோ
குருவுப தேசமந்த்ரம்
அளித்தாலும் புல்லர்நல் லோராவ
ரோசென் றடித்தடுத்துக்
களித்தா யிரந்தரங் காக
முழுகிக்கங் காநதியிற்
குளித்தாலு மன்னமொவ்வாதச்சு
தானந்த கோவிந்தனே. 34

கொல்லை பாழானலும் குருவிக்கு இரங்கு பஞ்சமோ ?

தருவிற் பனமன்னர் கையினைத்
தாலென்ன தம்மைநம்பி
மருவித் திரியுஞ் சனங்கள்
பசிகொண்டு வாட்டமெய்தார்
பருவக் குறிப்பின்றிச் சாவிபட்
டாலும் பயிர்க்கொல்லையிற்
குருவிக் கிரைபஞ்ச மோவச்சு
தாநந்த கோவிந்தனே. 35

இராவுத்தனைத் தள்ளின குதிரை குழியும் பறித்ததுபோல

மொழியின் படிநட வாடன்
கணவனை மோசஞ்செய்து
பழியுஞ் சுமக்கும் படிசெய்த
னம்பப் படர்விசிகம்
பொழியுஞ் சமரிடை ராவுத்த
னைத்தள்ளிப் போட்டசுவம்
குழியும் பறித்ததொப் பாமச்சு
தாநந்த கோவிந்தனே. 36

கொடிக்குக் காய் கனமா ?

அடித்தழு தூட்டி வளர்த்திடுந்
தாய்தன் னகமெலிவாய்
மிடித்திடி னும்பெற்ற பிள்ளைக
ளைக்கை விடநினையாள்
பொடித்தெழும் பிஞ்சு திரளாயும்
பாரம் பொறுக்கும்படர்
கொடிக்கென்ன காய்கன மோவச்சு
தாநந்த கோவிந்தனே. 37

நெருப்பு சிறிதென்று முன்ருனையில் முடியலாமா?

தண்டா ரணியும் மரசிளம்
பாலகர் தம்மையெதிர்
கண்டா விகீாயரென் றெண்ணவொண்
ணுதுகண் டாரெவரும்
அண்டா நெருப்பைச் சிறிதென்று
முன்ருனை யின்முடிந்து
கொண்டா லதுசுடுங் காணச்சு
தாநந்த கோவிந்தனே. 38

மீன் குஞ்சுக்கு நீச்சுப் பழக்கவேண்டுமா ?

பிஞ்சுப் பருவ முலேவிலேப்
பெண்கள் பெறும்பொருட்கா
வஞ்சிக்கும் வித்தை குலவித்தை
தானே வருமவர்க்கு
விஞ்சுக் குளப்புன னீச்சுப்
பழக்குவித் தாரெவர்மீன்
குஞ்சுக்குத் தற்குணங் காணச்சு
தாநந்த கோவிந்தனே. 39

நீஞ்ச அறியாதவனே ஆறு இழுத்துக்கொண்டுபோம்

விடுபோர் முகத்தில் நகைப்பா
ரெனச்சுத்த வீரர்சண்டை
இடுபோ தொளித்துப் பிழையாம
லாண்மையி லார்மதிகெட்
டடுபோரி னிற்புகி ஞீஞ்சறி
யான்றனே யாறிழுத்துக்
கொடுபோன வாருக்கு மேயச்சு
தானந்த கோவிந்தனே. 40

முற்ற நனைந்தார்க்குக் குளி ரில்லை

தளிரே யணையமெய்ப் பெண்டீர்
கணவன் றணையிகழ்ந்து
வெளியே புறப்பட்டுக் கற்பழிந்
தாற்பின்னை வெட்கமென்னை
நளிரே தரும்புன லேய்ந்துடம்
பெங்கு நனைந்தவர்க்குக்
குளிரேதப் பாலென்ப ரேயச்சு
தாநந்த கோவிந்தனே. 41

நூற்றுக் கிருப்பவர்க் கைம்பதிற் சாவில்லை;
நூற்றுக் கிருந்தாலும் கூற்றுக் கிரை

சோற்றுக் கடன்கொண் டிருக்குஞ்
சரீரந் தொலையுநில்லா
தாற்றுப் புனலிற் குமிழியைப்
போலென் றழுங்கிலென்னும்
நூற்றுக் கிருப்பவர்க் கைம்பதிற்
சாவில்லை நூற்றுக்கப்பால்
கூற்றுக் கிரையென்ப ரேயச்சு
தாநந்த கோவிந்தனே. 42

நன்றிசெய்த கீரியைக் கொன்ற பழங்
கதைபோல்

நன்றிசெய் தாரென் றறியாமற்
றீங்கு நமக்குச்செய்தா
ரென்று செருக்கவொண் ணுது
குழந்தை யிளந்தசையைத்
தின்றெதிர் வந்தது கீரியென்
றந்தணன் றேவிமுன்னுள்
கொன்ற பழங்கதை யாயச்சு
தாநந்த கோவிந்தனே. 43

கரையான் புற்றில் அரவங் குடிகொண்டதுபோல்

அடிகொண் டளந்திட்டுக் கோட்டை
யரண்செய்தென் ஞண்மையில்லார்
கெடிகொண்ட வேந்தர்கைக் கொள்வா
ரவரைப்பின் கிட்டவொட்டார்
படிகொண்ட மண்ணில் கரையா
னிடும்புற்றிற் பாம்புவந்து
குடிகொண் டிருப்பது வாமச்சு
தாநந்த கோவிந்தனே 44

பன்றிக் குட்டிக்கொரு சந்தி யேன்?

தெட்டிப் பறிக்கின்ற வேசியர்
வீட்டிற் றிரிந்தலையு
மட்டிக் குலாமருக் காசார
மேன்றெய்வ வந்தனை யேன்
பட்டிக் கொதுங்கி யடிபடு
மூர்க்கரும் பன்றியிட்ட
குட்டிக் கொருசந்தி யேனச்ச
தாநந்த கோவிந்தனே. 45

அற்பருக்குப் பவிஷு வந்தால் அர்த்தராத்திரியிலுங்
குடை பிடிக்கச் சொல்வார்

நடைகற்கு முன்னங் கொடைகற்ற
பேர்க்கு நடக்கைவந்தாற்
புடையிற் றெவருந் துதிக்க
வணங்கிப் புகழ்பெறுவார்
அடையற் பருக்குப் பவிஷுவந்
தாலர்த்த ராத்ரியினுங்
குடையைப் பிடியென்பார் காணச்சு
தாநந்த கோவிந்தனே. 46

பிடாரியைப் பெண்டு வைத்துக்கொண்டவன் பேயன்

கண்டனுக் கேற்றவ ளாக்குல
மானுஷிக் கற்பினளாத்
தெண்டனைக் கஞ்சி நடப்பவ
ளாமணஞ் செய்வதல்லாற்
பிண்டமுந் துண்டமு நேர்ந்தே
பிடாரியைப் பெண்டுவைத்துக்
கொண்டவன் பேயனன் றேவச்சு
தாநந்த கோவிந்தனே. 47

கொழுமீதி கொள்ளுங் குடிச் செல்வமே செல்வம்

பொடிச்செல்வம் யாசகச் செல்வம்
கொடுமைப் பொருட்செல்வமோர்
நொடிச்செல்வ மீதலில் லாச்செல்வம்
வீண் செல்வ நூற்றுக்குமே
மிடிச்செல்வ மின்றிச் சுகசீவி
யாக்கொழு மீதிகொள்ளும்
குடிச்செல்வ மேசெல்வங் காணச்சு
தாநந்த கோவிந்தனே. 48

கசக்கி முகர லாகாது

வண்டா னதுமெள்ளப் பூமணங்
கொள்ளும் வகையதுபோற்
பெண்டாசை யுள்ளவர் காமசம்
போகம் பெறுவதல்லாற்
கண்டா தரவின் மலரெடுத்
தேகசக் கிழுகர்ந்து
கொண்டான் மணந்தரு மோவச்சு
தாநந்த கோவிந்தனே. 49

தானே கனியாத காய் தடிகொண் டடித்தாற் கனியாது

அண்டினர்க் கீபவர் தாமே
தருவதல் லாதிரப்போர்
தெண்டனைக் காகக் கொடுப்பதுண்
டோசெழுங் காய்மரத்திற்
கண்டிடிற் றானே கனியாத
முன்கனி யைத்தடிகைக்
கொண்டடித் தாற்கனி யாதச்சு
தாநந்த கோவிந்தனே. 50

கிளியை வளர்த்துப் பூனை கையிற் கொடுப்பா ருண்டோ?

விடுப்பார் பிழைக்கும் வழியினல்
லோரன்றி வேறுபடக்
கொடுப்பார் வசஞ்செய்வ ரோநம்பி
னேரைக் கிளிப்பிள்ளை யை
எடுப்பார்கை யார வளர்ப்பதல்
லாலெட்டிப் பூனை கையிற்
கொடுப்பா ருலகிலுண் டோவச்சு
தாநந்த கோவிந்தனே. 51

எய்தவ னிருக்க அம்பை நோகலாமா ?

உண்டான குற்றஞ் சகியாமல்
வேந்தனுத் தாரமிட்டால்
தின்டாடத் தெண்டனை செய்வார்க்குக்
குற்றமுந் தெண்டமுமோ
அண்டாமல் விற்பிடித் தெய்தோ
னிருக்கக்கண் டம்பைநொந்து
கொண்டாலவ் வம்பென் செய்யுமச்சு
தாநந்த கோவிந்தனே. 52

ஒரு புத்திரனும் குருபுத்திரன் ஆகான்

வருபுத்ர வாஞ்சையிற் றெய்வத்தை
வாழ்த்தி வணங்கிவரந்
தருபுத்ர னேப்பெறிற் காவடி
கட்டித்தன் முய்தந்தையை
ஒருபுத்ர னேனுஞ் சுமந்ததுண்
டோவுல கம்புகழக்
குருபுத்ர னேசுமந் தானச்சு
தாநந்த கோவிந்தனே. 53

கொக்கரிப்பார்க்கா சொர்க்கம்? தீயில் குதிப்பவர்க் கல்லவோ சொர்க்கம் ?

கதிப்பா னடத்துங் குதிரையும்
யானையுங் காற்பலமும்
மதிப்பா லிகல்சுத்த வீரர்க்குச்
சொர்க்கங் வருவதுபோல்
துதிப்பார்க்குங் கொக்கரிப் பார்க்குமுண்
டோதுணிந் தேநெருப்பிற்
குதிப்பா ளொருத்திக்கன் றேவச்சு
தாநந்த கோவிந்தனே. 54

பரத்தைக்குக் கொடுக்கும் பணயத்தைக் குடிப்பெண் வாங்கிக் குலங் கெடுவாளா ?

மிடியிற் கொடுமைக் கிரப்பதல்
லாற்குல மேன்மைகுன் றப்
படியிற் பசும்பொன் றரிற்கொள்வ
ரோபரி வாற்பெரியோர்
கொடிய பரத்தையர்க் குக்கொடுக்
கும்பண யங்கொளென்றுற்
குடியிற்பெண் வாங்குவ லோவச்சு
தாநந்த கோவிந்தனே. 55

கொடுங்கோல் அரசர்க்கீழ்க் குடியிருக்க லாகாது

திறமுஞ்செங் கோலு முளமன்னர்
நாட்டிற்சிந் தாகுலத்தீர்ந்
துறவுங் குடிசத மென்றிருப்
பார்பயி ரிட்டுண்பர்காண்
அறவுங் கொடுமை செயுமன்னர்
சீமைக்குள் ளாமிருப்புக்
குறவன் குடியிருப் பேயச்சு
தாநந்த கோவிந்தனே. 56

நல்லவர் கண்ணிற்பட்ட காகமுஞ் சாகாது

பல்லால் விடங்கக்கு நாகந்
திகைத்துப் பயந்தொதுங்கி
நல்லார்கண் காணவந் தாலுங்கொல்
லார்நண்ண லார்வரினும்
பொல்லா தவரிவ ரென்னுர்
மனம்பொறுத் தேயவரைக்
கொல்லாமற் முங்குவர் காணச்சு
தாநந்த கோவிந்தனே. 57

புலையனுக்கு வாக்கு சுத்தியும் ஆணையு மில்லை

செல்வாய்ப் படும்பணை யேட்டெழு
தாமறைச் செம்மொழிபோற்
சொல்வார்சொ னம்பத் தகுவதல்
லாமற்சொல் கூப்புரட்டும்
வல்வாய்ப் புலையர்சொ னம்புவ
ரோநித மாடுதின்னக்
கொல்வார்க்கொ ராணையுண் டோவச்சு
தாநந்த கோவிந்தனே. 58

பனங்காட்டி லிருந்துகொண்டு பாலைக் குடித்தாலும் கள் என்பார்கள்

மிடித்தாலு மெத்தப் பசித்தாலு
நல்லவர் மேரைதப்பி
வடித்தா யிரந்தரங் கட்குடிப்
பார்மீனை வாசல்புகார்
படித்தார்கள் கள்ளிறக் கும்பனங்
காட்டினிற் பால்கொண்டுபோய்க்
குடித்தாலுங் கள்ளென்ப ரேயச்சு
தானந்த கோவிந்தனே. 59

பட்சி பசித்தாலும் எட்டிக் கனியைத் தின்னுது; கொள்ளி கொண்டு தலை சொறிந்துகொள்ளார்

தெள்ளா ரமுதக் கடற்கரை
யெட்டிச் செழுங்கனியைப்
புள்ளா னதுபசி கூர்ந்தாலு
மேபுசி யாதுகண்டாய்
தள்ளாது கொள்ளிகொண் டேதின
வென்று தலைசொறிந்து
கொள்ளா ரெவருஞ்சொன் னேனச்சு
தானந்த கோவிந்தனே. 60

பூவிற்குங் கடையிலே புல்லு விற்பது போல

தேறிய மானுஷ்ய மூள்ளோர்
பெருமை சிறுமைபட
மாறிய வீன விருத்திக்குள்
ளாம்நின்று வாழ்வரென்றுல்
வீறிய பூமலர் விற்குங்
கடையிற்புல் விற்கவிலை
கூறிய வாறுக்கு மேயச்சு
தானந்த கோவிந்தனே. 61

குங்குமஞ் சுமந்த கழுதை மண மறியாது

தமத்தி னெளிசெய்யும் பொற்பூ
ஷணங்கட லுச்சு மையாய்ச்
சுமத்தலு மாதர்க் கழகோ
கணவற் றுழா திருந்தால்
கமத்திற் பொதிச்சுமை யாய்ச்சுமந்
தாலென் கழுதையுங்குங்
குமத்தின் மணங்கொள்ளு மோவச்சு
தாநந்த கோவிந்தனே. 62

பெருமாள் நினைத்தால் வாழ்வு குறைவா ?
பிரமா நினைத்தால் ஆயுசு குறைவா ?

நிறையா யரசன் றயவுசெய்
தாற்கலி நீங்கியிளம்
பிறையா வளர்ந்து நிரம்புநல்
வாழ்வு பிரியப்பட்டு
மறையால் விளங்கும்பிர்ம் மாநினைந்
தால்வர்த்திக் கும்வயது
குறையா தெனச்சொல்வ ரேயச்சு
தாநந்த கோவிந்தனே. 63

தம்மினந் தம்மைத் தாங்கும்;
மூலை சரிந்தால் வயிறு தாங்கும்

தம்மின மானவர் கையினைத்
தேசர ணென்றடைந்தால்
வம்மினென் றுதரிக் கத்தகுந்
தள்ள வழக்கல்லவே
விம்முமென் கொங்கை சரிந்தே
வயிற்றில் விழிலதுதாங்
கும்மெனச் சொல்லுவ ரேயச்சு
தாநந்த கோவிந்தனே. 64

கழுதைக்கு விரி கட்டினதினுலே குதிரையாமா?

சதிசெய்யு நீலியைப் பெண்ணென்று
கொள்ளிற் றனதுகெடு
மதியது வாமவண் மேற்குறை
யில்லவை யாளிவிட்டால்
கதிபெற வேநட வாவிரி
கட்டுங் கழுதையைநற்
குதிரையென் றேற்றங்கொள் ளாரச்சு
தாநந்த கோவிந்தனே. 65

ஏர் பிடித்தவன் என்ன செய்வான் ?
பானை பிடித்தவள் பாக்கியம்

பெண்டகு மில்லவள் வந்த
முகூர்த்தம் பெருகுஞ் செல்வம்
உண்டவள் வாழு மனையிலெந்
நாளு முடுக்கைபொற்பூண்
பண்ட மிலையெனிற் பானை
பிடித்தவள் பாக்கியமோ
கொண்டவ னென்னசெய் வானச்சு
தாநந்த கோவிந்தனே. 66

உடும்பு போனலும் போகட்டும்,
கையை விட்டால் போதும்

அடும்பழி காரண வெட்டாமல்
மன்னித் தனுப்பிவிட்டால்
தொடும்பழி பேச வழக்குமுண்
டோதொடர்ந் தேபிடித்த
உடும்பது போயினும் போகட்டுங்
கைவிடென் றுண்மைசொல்வோர்
கொடும்பழி யேன்சுமப் பாரச்சு
தாநந்த கோவிந்தனே. 67

கரும்பு ருசியென்று வேரோடே பிடுங்க லாகாது

வள்ள லெண்ணத்தருந் தாதாவென்
றேதினம் வந்துவந்து
கள்ள மனத்திற் பொருள்கேட்
கொணுதுகண் டாய்திரளா
யுள்ள கரும்புதித் திப்பென
வேருட னேபிடுங்கிக்
கொள்ள நினைப்பர்க ளோவச்சு
தாநந்த கோவிந்தனே. 68

அழிந்த நந்தவனத்திலே
அசுவ மேய்ந்தென்ன ? கழுதை மேயந்தென்ன ?

விதிமுறை நீதிசெங் கோல்கெடத்
தேச மெலிந்தலைய
மதிலரண் செய்த லெவர்க்காக
நந்த-வனமழிந்தால்
எதிரெதி ரோடிக் கழுதைகள்
மேயிலென் னேற்றந்தரும்
குதிரைகள் மேய்ந்திடி லென்னச்சு
தாநந்த கோவிந்தனே. 69

ஆடு கொழுக்கிறது இடையனுக்கு லாபம்

செழித்திடுஞ் செல்வி பிறந்தகம்
போய்த்திரும் பாமையினுல்
கழுத்திடு தாலிகை யாற்கட்டி
னேன்பல காலும்வந்தே
அழைத்திடக் கூட்டிவி டாரே
யிடையனுக் காடுநன்ருய்க்
கொழுத்த லிலாபமன் ருேவச்சு
தாநந்த கோவிந்தனே. 70

பன்றியின் பின் போன பசுக்கன்றும் மலந் தின்னும்

பன்றி யுடனுற வாகப்
பழகினும் பாற்பசுவின்
கன்று மலத்தைப் புசிக்குமென்
பாரக் கதையதுபோல்
சென்றுற வாடிக் கயவர்பின்
னேதிரிந் தாலறிவு
குன்றும்வ சைக்கிட மாமச்சு
தாநந்த கோவிந்தனே. 71

கொள்ளைக்குப் போனலுங் கூட்டாகாது

தேட்டாளர் தம்மிச்சை யாய்த்தேடு
வர்பொருள் தேடும்வழி
காட்டா ரெவர்க்கும் பின்வில்லங்க
மாகு மெனக்கதவு
பூட்டாத பொக்கச வீட்டினிற்
கொள்ளைக்குப் போய்ப்புகினும்
கூட்டாகு மோவென்ப ரேயச்சு
தாநந்த கோவிந்தனே. 72

**ஆனை தன்னைக் கட்டுதற்குச் சங்கிலியைத்
தானை யெடுத்துக் கொடுக்கும்**

தொடுத்திடு மூழ்வினை போகா
தெவர்க்குந் தொடருமுற்றும்
இடுக்கண் வருமது தன்னுல்
வருங்குற்ற மென்பர்தன்னைத்
தடுத்துத்தன் காலி லிடநிக
ளந்தனைத் தாளொடுத்துக்
கொடுத்திடும் யானைகண் டாயச்சு
தாநந்த கோவிந்தனே. 73

குளத்தைக் கலக்கிப் பருந்துக் கிரையிட்டதுபோல்

தளத்தைக் கண்டஞ்சிக் குறுமன்னர்
கப்பந் தரக்கொள்வர்போர்க்
களத்துட் படவவர் சீமையை
வேந்தர்கைக் கொண்டழித்தல்
விளர்த்திட்ட மீன்களைக் காகம்
பருந்து விருந்துணவே
குளத்தைக் கலக்கிய தாமச்சு
தாநந்த கோவிந்தனே. 74

தோட்டிபோ லுழைக்கவேண்டும்
துரைபோற் சுகிக்க வேண்டும்

தோட்டியைப் போலுழைப் பார்பொரு
டேடிச் சுகிப்பதல்லாற்
பூட்டி யறைக்குட் புதைத்துவைத்
தாற்புசி யாரெவர்க்கோ
ஈட்டிடத் தேன்பல பூவினிற்
சென்றுசென் றீயெடுத்துக்
கூட்டி யிழப்பது வாமச்சு
தாநந்த கோவிந்தனே. 75

துர்ச்சனப் பிள்ளைக்கு ஊரார் புத்தி சொல்வார்

சற்சன ராயுற வுற்றுரைப்
பேணித் தவத்தியல்பாய்
நற்சன னங்க ளெடுத்தாரை
மெச்சுவர் நாணமில்லாத்
துற்சனப் பிள்ளைகட் கூரார்சொல்
வார்புத்தி யென்றுலகோர்
குற்சிதஞ் சொல்வர்மெய் யேயச்சு
தாநந்த கோவிந்தனே. 76

வயிற்றைப் பீறிக் காட்டினாலும்
மகேந்திரசாலம் என்பார்

தேறிய நெஞ்சிற் பரிசுத்த
னென்று தெளிந்திடினும்
மாறிய வன்கண்ண ருண்மைகொள்
ளாரொரு வன்வயிற்றைப்
பீறிமுன் காட்டினு மாகேந்
திரசாலப் பிரமையென்றே
கூறிய லோப்பர்கள் காணச்சு
தாநந்த கோவிந்தனே. 77

கோழி கூப்பிட்டு விடிகிற பொழுது
குக்கல் குரைத்தா விடியும்?

திரைத்தோளி யிட்ட திரைப்பாண்டியன்
மேலிட்ட நித்திரைகொளுந்
தரைத்தோ கையர்வந் தெழுப்புந்
தபனன் சமயமறிந்
திரைத்தோ வெனக்குக் கிடங்கூப்
பிடாம லிரவிடைநாய்
குரைத்தோ விடியுமென் பாரச்சு
தாநந்த கோவிந்தனே. 78

உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகாது

தருவையொப் பாமைந் தருவென்ப
ரோவுத் தமபுருஷன்
உருவையொப் பாருத் தமராவ
ரோகுண மொப்பதல்லால்
கருவியொப் பாயுய ரப்பறந்
தாலுங் கருடனுக்கூர்க்
குருவியொப் பாமென்ப ரோவச்சு
தாநந்த கோவிந்தனே. 79

ஐங்காதம் போனலும் அகப்பை விலை அரைக்காசுதான்

ஐங்காதம் போயு மகப்பை
விலையரைக் காசென்பர்காண்
எங்காகி லும்பண மிட்டுக்கொள்
ளாரறி வீனர்சென்றுல்
சிங்கார மானபொற் பூஷண
மாடை தியாகம்பெறூர்
கொங்கார் துளபத்த னேயச்சு
தாநந்த கோவிந்தனே. 80

மழைக்குத் தண்ணீர் மொண்டு வார்ப்பவர் ஆர்?

மழைக்குத் தண்ணீர்மொண்டு வார்ப்பவ
ராரிந்தவையகத்தோர்
பிழைக்கப் பொழிவது தற்குணங்
காண்பெறும் பேற்றினுக்காய்
அழைக்கக் கசேந்திரன் மூலமென்
றன்றதி னன்பினுளம்
குழைக்கக் கராவரிந் தாயச்சு
தாநந்த கோவிந்தனே. 81

நரிவால் பற்றி நதி கடக்கலாகாது

திண்டாட வெட்டும் ரணகளத்
திற்செயங் கொள்ளும்வலி
கண்டா லெதிர்நிற்பர் கூளப்
படையைக்கைக் கொண்டுபுகார்
அண்டாத வெள்ளத்தி லோடங்கொ
ளாம லடுநரிவால்
கொண்டாறு தாண்டுவ ரோவச்சு
தாநந்த கோவிந்தனே. 82

குடியிருக்கும் வீட்டிலே கொள்ளி வைத்தாற்போல

நள்ளிருட் போதில் விளக்கிட்ட
தாநல் லவரிருந்தால்
தெள்ளிய சீர்பெறும் வீட்டுக்
கழகென்பர் தீம்பர்வந்தால்
தள்ளிவி டாமற் குடிவைத்துக்
கொள்ளிற் றமதிறப்பிற்
கொள்ளிவைத் துக்கொண்ட தாமச்சு
தாநந்த கோவிந்தனே. 83

தலைவன் நிற்கத் தண்டு நிற்கும் :
தலைவன் மயங்கச் சர்வம் மயங்கும்

பொரக்கத் திகட்டிக்கொண் டேதுரை
யானவன் போர்முகத்தில்
வரக்கொக் கரித்தெழுஞ் சேனையஞ்
சாது வரும்விசயம்
அரக்கர்க்கி ராம னெதிர்நிற்க
லங்கை யழித்ததன்று
குரங்குப் படையல்ல வோவச்சு
தாநந்த கோவிந்தனே. 84

குழந்தையும் தெய்வமும் கொண்டாடின இடத்திலே

அண்டா ரெவரும் குணவீனர்
செல்வர்க ளாயிருந்தும்
கண்டா தரவி னழைத்தால்
வருவர் கரிசினம
துண்டாய்க் குழந்தையுந் தெய்வமு
நித்த முறவுசெய்து
கொண்டாட முன்னிற்கு மேயச்சு
தாநந்த கோவிந்தனே. 85

கோணக் கொம்பேறியென்ன ? குதிரை யேறியென்ன?
வீணர்க்குங் கீர்த்திக்கும் மெத்தவுந் தூரம்

பூணத் தகும்புகழ்ப் பூஷணங்
கொள்ளப் பொருளுதவா
வீணர்க்குங் கீர்த்திக்கு மெத்தவுந்
தூர மிகுஞ்செல்வராய்க்
காணத்தை யுண்ணுங் குதிரையி
லேறிற் கவிக்குலம்போற்
கோணக்கொம் பேறிலென் னுமச்சு
தாநந்த கோவிந்தனே. 86

பன்றிக்குட்டி பருத்த யானைக்குட்டியாமா ?

வெஞ்சரக் குப்பை தொடுத்தெய்ய
வேவெற்றி ராகவன்கைச்
செஞ்சரத் துக்கிணை யாமென்ப
ரோவிட்ட தீனிதின்று
சஞ்சரிக் கும்பன்றிக் குட்டிக
டாமதத் தாரைபொங்கும்
குஞ்சரக் கன்றுக்கொவ் வாவச்சு
தாநந்த கோவிந்தனே. 87

தன்னைக் கொல்ல வந்த பசுவைத்
தான் கொன்றுற் பாவ மில்லை

ஆறிய வெஞ்சினத் தீமூளச்
செய்யி னரசர்கொல்வார்
தேறிய நெஞ்சன் றனைக்கொல்ல
வந்த சினப்பசுவை
மாறிடக் கொன்றிடிற் பாவ
மிலையென்று வையகத்தோர்
கூறிய வார்த்தைபொய் யோவச்சு
தாநந்த கோவிந்தனே. 88

செம்பா லடித்த காசுங் கொடார்

வம்பா வசைக்கவி நூறுசொன்ன
ஞலும்வை தாலுமெண் ணூர்
தம்பாடு சொல்லி வழிவிடு
வார்கட னப்புலையர்
செம்பா லடித்திடுங் காசுங்கொ
டார்செய்ய ரோகுதிரைக்
கொம்பா கிலுங்கொடுப் பாரச்சு
தாநந்த கோவிந்தனே. 89

பொருளும் போகமும் கூட வரா

சூடவ ராதிட்ட பொற்பூஷ
ணங்க டுரையெனக்கொண்
டாடவ ராது சதுரங்க
சேனையு மாண்மையும்போம்
ஓடவ ராதெம தூதர்வந்
தாலுள்ள ரொக்கமுந்தன்
கூடவ ராதென்றெண் ணுரச்சு
தாநந்த கோவிந்தனே. 90

இயல்பாய் மணமில்லாத சந்தனக்கட்டை யிழைத்தாலுங் குழைத்தாலு மணக்காது

அழைத்தா யிரந்தரம் புத்திசொன்
னுலடங் காதவம்பர்
தழைத்தாலு மென்னவர் கெட்டாலு
மென்கந்த மற்றகுற
டிழைத்தா யிரந்தரஞ் சாணையிற்
சுற்றி யெடுத்து நன்னீர்க்
குழைத்தாலும் வாசந்த ராதச்சு
தாநந்த கோவிந்தனே. 91

கூடியிருந்து குலாவுவார் வீட்டில்
ஓடி யுண்ணுங் கூழ மினிதே

சூழாது வண்டினஞ் செண்பகப்
பூவைத்தொ டாதுவெறும்
பாழான நத்தத் தெருக்கீன்ற
பூமணம் பற்றிப்புல்லும்
தாழாது நட்பி னுறவுகொண்
டாடத்தக் கார்மஞ்ஞயில்
கூழா கிலுமினி தேயச்சு
தாநந்த கோவிந்தனே. 92

ஆயிரம் பசுக்களி லொரு பசு வுதைத்துக்
கொண்டால் என்ன ?

தண்டா தருள்செயுந் தாதாக்
களிலொருத் தன்மறுத்தல்
கண்டா லதுகொண்டு தாழ்வல்ல
வேகலி யாலிரப்போர்க்
குண்டான பால்கறக் கும்பசு
வாயிரத் தொன்றுதைத்துக்
கொண்டாற் குறையென்ப ரோவச்சு
தாநந்த கோவிந்தனே. 93

இறந்தவன் பிள்ளை இருந்தவ னடைக்கலம்

இடைப்பட்ட செத்தவன் பிள்ளைநன்
ருக விருந்தவன்கை
அடைக்கல மென்றுல கஞ்சொலு
மேயது போற்றமியேன்
மிடைப்படப் பார்த்திருந் தாற்றகு
மோபசு மேய்த்தவந்நாள்
குடைக்குவ டேந்தினை யேயச்சு
தாநந்த கோவிந்தனே. 94

கரும்பு கசப்பது வாயின் குற்றம்

வணங்காருன் பாதங்கள் வாழ்த்தாருன்
னுமங்கள் வாழ்த்தி நித்தம்
இணங்கா ரறிவற்ற புல்லர்நல்
லோர்தம் மியற்கைகுன்றார்
கணங்காணுங் கட்டிக் கரும்புதின்
பார்க்குக் கசப்பதுவாய்க்
குணங்காண் கரும்பதென் னுரச்சு
தாநந்த கோவிந்தனே. 95

நடந்தார்க்கு நாடெங்கு முறவு,
கிடந்தார்க்குப் பாயே உறவு

நடந்தார்க்கு நாடெங்கு நல்லுற
வாகு நடையொழிந்து
கிடந்தார்க்குப் பாய லுறவன்றி
யென்னென்று கேட்பவரார்
இடந்தா வெனக்குன் பதமே
கதிசிற் றிடைச்சியர்பாற்
குடந்தா வியமுகுந் தாவச்சு
தாநந்த கோவிந்தனே. 96

கரும்பு தின்னக் கூலி கொடுப்பார்களா ?

வாலியைக் கொன்றுசுக் ரீவனைப்
பட்டத்தில் வைத்துமுந்நீர்
வேலிக டந்திலங் கைவீ
டணனை விளங்கவைத்தாய்
காலியை மேய்த்துள்ள பால்குடித்
தாய்நற் கரும்புதின்னக்
கூலிகொ டுப்பவ ராரச்சு
தாநந்த கோவிந்தனே. 97

வல்லார் இனத்தால் வந்தினைப்பாறுமென்று
சொல்லாதிரார்கள் சுத்த வீரர்கள்

வல்லா ரமர்செய்து கையினைத்
தாலவர் வம்மினெனச்
சொல்லாதி ராரினைப் பாறுமென்
பார்சுத்த வீரர்படை
எல்லாமி ழந்துநி ராயுத
னுய்நின்ற ராவணனைக்
கொல்லாது விட்டனை யேயச்சு
தாநந்த கோவிந்தனே. 98

வஞ்சகர்க்கு எத்தனை வாஞ்சையாய் நடக்கினும்
நெஞ்சகந்தன்னில் நேசங் கொள்ளார்

நெஞ்சார வஞ்சகர்க் கெத்தனை
செய்யினு நேசங்கொள் ளார்
அஞ்சாயன் மென்குயின் மூட்டையைத்
தன்மூட்டை யாமென்றெண் ணி
வஞ்சா தடைகிடந் துங்கருங்
காக மிகல்விளைக்கக்
குஞ்சாகிப் பூங்குயி லாமச்சு
தாநந்த கோவிந்தனே. 99

மஞ்சனந் தேடி மலர்தேடி
யுன்னை வணங்கப்பெற்றேன்
நெஞ்சகந் தன்னி னிலைக்கப்பெற்
றேனினை யாவிடினும்
அஞ்சலன் றென்ன வுனக்கே
பரமட லாழிகொண்டு
குஞ்சரங் காத்தவனே யச்சு
தாநந்த கோவிந்தனே. 100

தேனே யெனுமொழி மானுர்
கலவியிற் சேர்ந்துறினும்
தானே யெனக்குன் பதந்தரு
வாயென்று சானகிக்கா
மானே யெனவந்த மாரீசன்
மேற்செல வாவிதொட்ட
கோனேசக் ராயுதனே யச்சு
தாநந்த கோவிந்தனே. 101

முந்தச் செனனத்தில் யான்செய்த
பூசை முயற்சியிற்கோ
வீந்தச் சதகம்விண் ணப்பஞ்செய்
தேனென்ன விஃனதொலத்தேன்
இந்தச் செனனத்திற் றுன்பப்
படாம லிருந்திடவை
குந்தப் பதவிபெற் றேனச்சு
தாநந்த கோவிந்தனே. 102

மூற்றிற்று.



படிக்காசுப் புலவர்

இயற்றிய

11. தொண்டைமண்டல சதகம்

வழிபடு கடவுள் வணக்கம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கொண்டலே நிகர்க்கும் வேளாண்
குடியொடு தழீ இய தொண்டை
மண்டல சதகந் தன்னை
வளமையான் வகுப்ப தற்குப்
புண்டர நுதலி ரண்டு
புயமிசை யிருந்தி ரண்டு
குண்டல நிகரி ரண்டு
குமரரை வணக்கஞ் செய்வாம்.

நூல்

கட்டளைக் கலித்துறை

சீர்கொண்ட கச்சித் திருவேகம்
பத்தரன் செல்வமுக்கட்
கார்கொண்ட மும்மதத் தைங்கரந்
தாங்கிக் கடவிகடப்
பேர்கொண்ட சக்கரப் பிள்ளையைத்
தான்பெற்ற பேறதனுல்
வார்கொண்ட கீர்த்தி படைத்ததன்
ரேதொண்டை மண்டலமே.

சேவடி செய்வ தறியாத
மாவலி முன்புசென்று
மூவடி வேண்டுந் திருமான்
மருகனிம் மூவுலகுங்
காவடி யாக வொருதலை
மேவிய காஞ்சிபுர
மாவடி மேவும் பெருமான்
பதிதொண்டை மண்டலமே. 2

கயிலையுங் கச்சியும் விற்கோ
லமுநற் கழுக்குன்றமும்
பயில்வலி தாயமும் பாசூரு
மச்சிறு பாக்கமுநல்
லயிலையிம் வல்லந் திருவொற்றி
யூரு மரசிலியு
மயிலையு மீசன் மகிழ்ந்ததன்
ரேதொண்டை மண்டலமே. 3

இளைத்தெழு வெண்பிறை யார்கச்சி
யேகம்ப ரின்னருளால்
விளைத்தெழு நாலி லொருமருந்
தாலும் விலக்கரிதாய்
முளைத்தெழும் பொற்சிக ரம்போலு
மம்மை முலைத்தழும்பும்
வளைத்தழும் பும்பெற் றிருப்பதன்
ரேதொண்டை மண்டலமே. 4

சேணூர் கழுகு பழகுதெய்
வீகச் சிறப்புமன்றி
யேணரும் பூதங் கொடுபோ
வதுமன் றி யெண்ணிரெல்சீர்க்
காணுது காண்பது கச்சியி
லேயென்று காசினியோர்
வாணு ளளவுந் துதிப்பதன்
ரேதொண்டை மண்டலமே. 5

நீடார் துளப மணநாறு
கச்சியி னீலமொன் றுங்
கோடா விளக்கொடு சேர்நீல
மொன்றுங் குலவுபுக
ழோடார் சுனையின் மலர்நீர்
மொன்றுமற் றெப்பொழுதும்
வாடாமற் காட்டவும் வல்லதன்
ரூதொண்டை மண்டலமே. 6

பூதவஞ் சூத முதலாக
நின்ற பொதும்பிற்சந்த
பாதவம் போன்மிக்க வேளாளர்
தங்கிய பான்மையினு
லாதவஞ் சூழ்தரு பல்கோடி
தேச மனைத்தினுமா
மாதவஞ் செய்ததன் ரூதமிழ்
சேர்தொண்டை மண்டலமே. 7

இன்னும் புகழ்நிற்க வோர்பழிக்
காமற் ரூழுபதின்மர்
துன்னுந் தழல்புக் கொளித்ததெல்
லாஞ்சுரு திப்பொருளா
யுன்னும் புரிசைத் திருவாலங்
காட்டி னுரைபதிக
மன்னுந் தமிழில் வகுத்ததன்
ரூதொண்டை மண்டலமே. 8

கண்ணூர் கருணைக் கடற்ரூண்டை
மான்கைக் கடாசலத்தைத்
தண்ணூரு முல்லைக் கொடிதடுத்
தாட்கொண்ட தன்மையெல்லாம்
பண்ணூருஞ் செஞ்சொல் திருமுல்லை
வாயிற் பதிகஞ்சொல்ல
மண்ணூழி காலமு நிற்பதன்
ரூதொண்டை மண்டலமே. 9

நன்கண் மையாக வயாவுற்ற
நோய்கண்டு நாடரிய
புன்கண்மை நோக்கியுஞ் சற்றுமெண்
ணுதொர் புலவனுக்காத்
தன்கண்மை சூலி முதுகினிற்
சோறிட்ட தன்மையினுல்
வன்கண்மை செய்யவும் வல்லதன்
ரூதொண்டை மண்டலமே. 10

வீரு ரிசையு நசையும்வல்
லோரிந்த மேன்மை சற்றுந்
தேரூத போதிது செப்புவ
ரால்வரைத் திண்புயத்தே
பேரூன பாணன் பிணஞ்சுமந்
தேவரும் பெற்றிகொண்டே
மாரூத கீர்த்தி படைத்ததன்
ரூதொண்டை மண்டலமே. 11

கொங்கலர் மாலையுங் கல்லாய்
விடுமன்பு கொண்டெறிந்தா
லிங்கல ராய்விடுங் கல்லா
னதுமென்ப தின்றறிந்தோஞ்
செங்கலி னுலெறிந் தேசிவ
னுர்பதஞ் சேர்வர்சங்க
மங்கையின் மேவிய சாக்கிய
னுர்தொண்டை மண்டலமே. 12

தெள்ளத் தெளிந்தவர் செய்தக்க
தோர்முறை செய்யிலையா
வெள்ளத் தணமலை யத்தணை
யர்மென்ப தின்றறிந்தோ
முள்ளற் கரிய தொடையாடை
கீறிய தொன்றுமொரு
வள்ளற் றகைமையொ டொத்துள
தாற்ரொண்டை மண்டலமே. 13

தாயினு நல்ல தயையுடை
யோர்க டமதுடலம்
வீயினுஞ் செய்கை விடுவர்கொல்
லோதங்கண் மெய்ம்முழுதுந்
தீயினும் வீழ்வர் முதுகினுஞ்
சோறிட்டுச் சீறரவின்
வாயினுங் கையிடு வாரவர்
காண்டொண்டை மண்டலமே. 14

மீனவர் நாட்டினுஞ் செம்பியர்
நாட்டினும் வில்லவர்கோ
னைவ னுட்டினு மிக்கதென்
பார்க ளதிசயமோ
கோனவ னுட்டிம் மூவையமு
தாகிற் குலவமுதார்
வானவர் நாட்டினு மிக்கதன்
றேதொண்டை மண்டலமே. 15

சாய்த்திட் டவர்க்குத் திருமேனி
முன்கையைச் சந்தனமாத்
தேய்த்திட் டவர்க்கெவர் நேரென்ப
ராலங்கஞ் செந்தழலிற்
றேய்த்திட் டவர்க்குச் சர்வாங்க
முந்திரி தூள்படவே
மாய்த்திட் டவர்க்கரி தோவெளி
தோதொண்டை மண்டலமே. 16

கேட்டாலு மின்பங் கிடைக்குங்கண்
டீர்கொண்ட கீர்த்தியொடு
பாட்டா லுயர்ந்த புகழேந்தி
சொன்ன படியறிந்து
பூட்டார் சிலைமன்னன் வையம்
பெறினும்பொய் தானுரைக்க
மாட்டா ரெனச்சொன்ன நாட்டார்
திகழ்தொண்டை மண்டலமே. 17

கையா நிரண்டுடைக் காஞ்சீதன்
வாயிற் கவிதைகொண்ட
பொய்யா மொழிக்கும் புகலிட
மானது பொய்கையெல்லாஞ்
செய்யார் கமல மலரவண்
டானங்கள் சென்றுதிகழ்
மையார் குவளை வயல்புடை
சூழ்தொண்டை மண்டலமே. 18

விண்ணிற் பிறக்கும் புகழ்க்குன்ற
நாடன் விளங்குதமிழ்ப்
பண்ணிற் பிறக்கும் பெரிய
புராணம் பகர்ந்தபிரா
னெண்ணிற் பிறக்கும் பததூளி
யென்றலை யெய்தவந்த
மண்ணிற் பிறக்கவும் வைக்குங்கொ
லோதொண்டை மண்டலமே. 19

தேமாம் பொழிறிகழ் சம்பந்தர்
வாழுஞ் சிரபுரம்போற்
ருமா தவஞ்செய்த தெத்தனை
யோதென் றமிழியல்சேர்
பாமாலை சூட மதுரநல்
வாயிற் பதியுடனே
மாமா சிலாமணிச் சம்பந்தன்
வாழ்தொண்டை மண்டலமே. 20

பொய்யக மாகிய மாயாப்
பிரபஞ்சம் போக்குதற்குக்
கையக நெல்லிக் கனியதன்
ரூகச்சி யேபெரிதாய்
மெய்யக மேபுரி காரிகைப்
பாட்டில் விளங்கவைத்த
வையக மென்னுந் தமிழே
புனைதொண்டை மண்டலமே. 21

அஞ்சொன் முதுதமிழ் நால்வேந்தர்
வைகு மலையிலெளவை
செஞ்சொற் புனைகின்ற வேளாளர்
வைகுஞ் சிறப்புடைத்தால்
விஞ்சிய வேழ முடைத்தென்னும்
பாடல் விளம்பிப்பின்னும்
வஞ்சி வெளிய வெனும்பா
மொழிதொண்டை மண்டலமே. 22

படவேங் கடற்கட லன்னதொல்
காப்பியப் பாயிரஞ்சொல்
லிடவேங் கடலின்றி யேபனம்
பாரர்மற் றெல்லைசொல்லக்
கடவேங் கடலன்ன செந்தமிழ்க்
கேயென்று காட்டுதற்கு
வடவேங் கடந்தென் குமரியென்
றுந்தொண்டை மண்டலமே. 23

இடஞ்சூழுங் காரிகை யாப்பிற்
குதாரண மென்றுகொண்டு
விடஞ்சூ ழரவென் றெழுவாயிற்
றோற்றி வெறிகமழ்வேங்
கடஞ்சூழ் கரடக் கடாக்களிற்
றுனியற் காளிம்பன்மேல்
வடஞ்சூ ழெனச்சொன்ன பாமாலை
யுந்தொண்டை மண்டலமே. 24

படையிற் கொடையிற் பெரியோனை
யக்கணம் பாடக்கம்பர்
கடையக் கொடுத்திட வாங்கின
ஞலரு மந்த முத்தைக்
கடையிற் கடைசிய ருப்பிற்கு
மாறக் களகனென
மடையிற் றரளஞ் சொரிவயல்
சூழ்தொண்டை மண்டலமே. 25

கிளப்பார் கிளப்ப வடிமடக்
காகக் கெழுமியசொல்
லளப்பா மதுரத்துடன்பூக்
கமலமென் முகிழ்ந்தெடுத்த
களப்பாள னெற்குன்ற
வாணனந் தாதிக் கலித்துறையே
வளப்பார் புகழை வளர்ப்பிக்கு
மாற்றெண்டை மண்டலமே 26

போனத்தி னுலொர் புறவினை
யேற்றவன் போலவுமோ
ரேனத்தி னுலெதி ரேற்றவன்
போலவு மேன்றுகொண்ட
மீனத்தி னுன்மற் றெருகோடி
செம்பொன் விலைகொடுத்த
மானத்தி னுலும் வலியதன்
றேதொண்டை மண்டலமே. 27

கூட்டுங் கரந்தங் கொழுநர்க்கல்
லாமற் கொடிவெருவ
வோட்டும் பொழுதுங் கரங்குவி
யாரமு தூட்டுதற்கு
மூட்டுந் தழற்கொரு முன்றினில்
லார்கற்பு மூட்டியெரி
மாட்டுந் திறமினை தோறுமுண்
டேதொண்டை மண்டலமே. 28

பின்போர் தமைக்கண்டு பாவித்த
தோவன்றிப் பின்புவந்தோர்
தன்போ னடக்கப் பணிப்பித்த
தோதமிழ்க் கேயிரங்கி
முன்போம் புலவற்குப் பின்போயி
னுனு முகுந்தனிது
வன்போ மனத்தினி லன்போசொல்
வீர்தொண்டை மண்டலமே. 29

சென்னியிற் சென்ற துகிலொடு
சென்று சிலரிழிந்தார்
பன்னியிற் சென்றது போலிழிந்
தார்சிலர் பாங்குடனே
பொன்னியிற் சென்று கரையேறி
னுரைப் புணர்ந்ததன்று
வன்னியிற் சென்று கரையேறி
னுர் தொண்டை மண்ட லமே. 30

பொள்ளா நுழைவழி போய்த்தலை
நீட்டும் புலவன்முன்னுள்
கள்ளாறு செஞ்சொற் கலம்பக
மேகொண்டு காயம்விட்ட
தெள்ளாறை நந்தி யெனுந்தொண்டை
மான்கலி தீர்ப்பதற்கு
வள்ளார் முரச மதிர்த்தாண்
டதுந்தொண்டை மண்டலமே. 31

நீளத் திரிந்தென்று வெண்பாவி
னலன்று நின்றையர்கோன்
காளத்தி வாணனைப் பாடிய
பாடல் கருதுமண்ட
கோளத்தி னுஞ்சென்று பாதாளம்
புக்குக் குலவுசக்ர
வாளத்தி னுஞ்சென்ற தாலெளி
தோதொண்டை மண்டலமே. 32

பாகொன்று சொல்லியைப் பார்த்தமை
யாலன்று பாண்டியன்மு
னேகின்று சிற்றிடை வேழம்பக்
கூத்தி கொடிவரையிற்
சாகின்ற போது தமிழ்சே
ரயன்றைச் சடையன்றன்மேன்
மாகுன் றெனச்சொன்ன பாமாலை
யுந்தொண்டை மண்டலமே. 33

சொல்லியி லாகச் சொரிகவி
மாரி சுருதிவல்லான்
செல்லியில் சோலைக் குறுங்குடி
வாழ்நம்பி சென்றுகண்ட
வெல்லியி னீடுங் கரடக்
கடாக்களி றென்றுசொன்ன
வல்லியிற் காளத்தி வாழ்வா
னதுந்தொண்டை மண்டலமே. 34

நூலார் கலிவல்ல செம்பியன்
கேட்க நொடித்துமிக்க
கோலா கலஞெட்டக் கூத்தனீ
யன்றுதற் கோலியென்று
மேலார் கவிசொல்லி நெய்த்தானத்
தேசென்று வென்றுகொண்ட
மாலார் களந்தைப் புகழேந்தி
யுந்தொண்டை மண்டலமே. 35

ஏரி னியற்றுங் களைக்கோட்டை
யீந்தன்ன மிட்டுநல்ல
பாரி பறித்தென்னும் பாடல்கொண்
டோன்பண்பு சேர்பழய
னூரி லிருப்பவ னெளவைதன்
பாடற் குவந்தபிரான்
மாரி யெனத்தரு கைக்காரி
யுந்தொண்டை மண்டலமே. 36

விழுவே னெனச்சென்று வீழ்ந்தாரி
லோர்மைந்தன் வேறுபட
வுழுவேலி யீற்சென் றிருநீலி
முன்கை யுடையவர்க்குக்
கொழுவே படைக்கல மென்றுசொல்
லாமுனங் கூறியசொல்
வழுவே யெனப்பொன்று வல்லாள
னுந்தொண்டை மண்டலமே. 37

வீரூர் நெருப்பிடை வீழ்த்தவும்
பாடிமுன் வீழ்த்ததற்பி
ஞரு நெருப்பினை யாறவும்
பாடி யடியவரைச்
சீருத தெய்வத் திருஞான
சம்பந்தர் செய்ததமிழ்
மாருது நிற்கப் படைத்ததென்
பார்தொண்டை மண்டலமே. 38

ஏத்தளித் தாயிரம் பாடல்கொண்
டேநிரை யீந்தெருமைப்
போத்தளித் தாடையும் பூணூர
முந்தந்து போதரவாய்க்
காத்தளித் தாதரித் திட்டதல்
லாமலுங் கம்பருக்கு
மாத்தளித் தாட்பட்டு வாழ்வதன்
ரேதொண்டை மண்டலமே. 39

புறவோ டுடற்றசை போக்கிய
வேந்தன் புரிந்ததிலு
மறவோ கொடிது கொடிதுகண்
ணுரற னன்றுமற்றுப்
பிறவோ மறுத்துரை செய்யான்
மிகச்சிரம் பேர்த்துவைத்த
மறவோனைத் தாங்கிய வையமன்
ரேதொண்டை மண்டலமே 40

வள்ளல் சிலைப்பெரு மாணச்சர்
சாத்தர் வழுதிமுதற்
றள்ளுவ னூர்க்குத் தலையான
பேரையுந் தன்னுரையை
விள்ளுவ னூர்க்குந் திருக்காஞ்சி
வாழ்பரி மேலழகன்
வள்ளுவ னூர்க்கு வழிகாட்டி
னன்ரெண்டை மண்டலமே. 41

கண்ணுலென் னெஞ்சத் தழுக்கறுத்
தேகடை யேன்றனையுந்
தண்ணருங் கூலிக் கடிமைகொண்
டேதடுத் தாண்டருளி
எண்ணருங் காஞ்சித் திருக்குறிப்
புத்தொண்ட ரென்னுந்தெய்வ
வண்ணர் வடிவு கொடுபோந்
ததுந்தொண்டை மண்டலமே. 42

சயிலேத் திருமுலேப் பாலறு
மட்டுண்ட தண்டமிழாற்
குயிலேப் பணிகொண்டு வெந்தற
மாண்ட குடத்தி லென்பை
யயிலேப் பொருகண் ணதிருப
மென்கிளி யாக்குவித்த
மயிலேப் பதியுஞ் சிவநேச
ருந்தொண்டை மண்டலமே. 43

பிணிக்கோர் மருந்தன யார்வாயி
லாரன்று பிஞ்ஞ கனூர்
பணிக்கோர் குறைவின்றி யந்தரி
யாகத்திற் பண்ணுவித்த
வணிக்கோ யிலும்பொற் சிகரமும்
வீதியு மாடரங்கு
மணிக்கோ புரமு முடையதென்
பார்தொண்டை மண்டலமே. 44

பேணிய செந்தமிழ்த் தாதனுக்
கேயன்பு பெற்றமையா
ணிய கம்பன் சிவிகையுந்
தாங்கி நயந்ததமிழ்
பூணிய நின்றதும் பொச்சாப்பி
லாது புகுந்துபின்னும்
வாணியத் தாதற்குத் தாதா
னதுந்தொண்டை மண்டலமே 45

பட்டா பிடேகம் பரிந்தார்க்குண்
டோவிந்தப் பான்மைகெடக்
கெட்டார் கவிசொல்லி வந்தோர்க்கெல்
லாம்பொற் கிழியீத்துந்
தட்டா னுதவிடுங் கூவந்தி
யாகச் சமுத்திரத்தின்
மட்டார் கவிகொண்ட மண்டலங்
காண்டொண்டை மண்டலமே. 46

தன்னு விசைபெறக் கூவந்தி
யாக சமுத்திரமென்
றன்னு ளொருவ னெடுந்தாண்டி
லிட்டிட வாங்கொருமீன்
பொன்னு லமைத்துப் பொருந்திடச்
சேர்த்துப் புகழ்கொண்டதான்
மன்னு வுலகத்து மன்னிய
சீர்த்தொண்டை மண்டலமே. 47

ஈட்டால மன்னவன் பின்னே
யறிய வெனக்கெனமுன்
கேட்டா னதற்குமுன் சென்றதவ்
வாருயிர் கேட்டவர்க்கு
நீட்டா விடினுந் தனக்கெனக்
கேட்பினு நெஞ்சழ்ய்ய
மாட்டா திரண்டுமுன் கற்றில
தோதொண்டை மண்டலமே. 48

உளத்துத் தயையற்ற வோர்புல
வோனுக் குடையுதவிக்
குளத்துப் புனலு யுடுத்துநின்
றேபின்பு கூவியவைக்
களத்துப் புகுதக் கலியுடுத்
தேகரை யேறிவந்த
வளத்துப் புகழ்பெற்ற வல்லாள
னுந்தொண்டை மண்டலமே. 49

வில்லேச் செருப்பிட்ட காலா
லுதைத்து வியனுலகிற்
சொல்லற் கரிய புகழ்கொடுத்
தோன்றுட்ட வீரன்றன்னுற்
பல்லக்கி லேயன்றி மண்படு
மோவெனும் பாடல்கொண்ட
வல்லப் பதிகச்சி யப்பனும்
வாழ்தொண்டை மண்டலமே. 50

மிண்டரை வெல்லும் வளர்சிங்க
ராயன் விலேகொடுப்பத்
தண்டமிழ் மேக முறத்தூரில்
வேதியன் ருனும்விற்பக்
கொண்டவன் பின்சென்று மண்டலத்
தேபுகழ் கொண்டபிரான்
வண்டமிழ்க் கும்ப னனதாரி
யுந்தொண்டை மண்டலமே. 51

கோல்லையிற் பாற்பசு மேய்ப்போன்
கறப்பவன் கொண்டுசென்றே
யெல்லையிற் சேர்ப்பவன் பாலடு
வோனிவை யித்தனையுஞ்
சொல்லையிற் பாவல ஞேரோர்
கவிசொல்லச் செல்வநல்கும்
வல்லையிற் காளத்தி வாழ்வா
னதுந்தொண்டை மண்டலமே. 52

சீரூறும் பாடல்பன் னீரா
யிரமுஞ் செழுந்தமிழ்க்கு
வீரர்தஞ் சங்கப் பலகையி
லேற்றிய வித்தகனுர்
பாரதம் பாடும் பெருந்தேவர்
வாழும் பழம்பதிகாண்
மாருதம் பூவின் மணம்வீ
சிடுந்தொண்டை மண்டலமே. 53

சொல்லாயு மெளவை பரிவாய்த்
தனக்கிட்ட சோறுலக
மெல்லாம் பெறுமென்று பட்டோதப்
பெற்றவ னின்னருளாற்
கல்லாரற் சுற்றிக் கிணறேறிப்
பாயுங் கழனிபெற்றுன்
வல்லாண்மை பூத மகிபால
னுந்தொண்டை மண்டலமே. 54

ஆரான் முடியுமிக் காரியந்
தோடவி ழாத்திமலர்த்
தாராஜ வேம்பின் ருெடையாஜப்
பெண்ஜையுந் தாமஜையும்
போராடிக் காவலில் வைத்தவப்
பாட்டும் புஜைந்ததன்ரே
வாராரு மோட்டிளங் கொங்கைநல்
லாய்தொண்டை மண்டலமே. 55

சூழுவார் குடிமக்க ளானகண்
ணுளர் குறும்படக்கி
யெழுவா யமைந்த மனுநீதி
யாற்பதி னெண்மரபு
முழுவா னரித்துக் கிடந்து
விடாம லுலகுக்கெல்லாம்
வழுவா தமைக்கவும் வல்லது
நீடொண்டை மண்டலமே. 56

அழுவதுங் கொண்டு புலம்பாது
நஞ்சுண் டதுமறைத்தே
ரெழுவதுங் கொண்டு புகழ்க்கற்ப
நாட னெழுப்பாவிசை
முழுவதுங் கொண்டொரு சொற்பேச
நெய்யின் முழுகிக்கையின்
மழுவதுங் கொண்டு புகழ்கொண்ட
தாற்ருெண்டை மண்டலமே. 57

நேயத் துடன்பிறந் தோன்பிண
மூடி நெருப்பவித்துத்
தாயொப் பெனவெதிர் கொண்டழைத்
தேதன் னூடனைவே
யாயத் தமிழ்கொண் டருங்கவி
ராயனுக் கன்புசெய்த
வாயற் பதியில் வடுகனும்
வாழ்தொண்டை மண்டலமே. 58

நெடுக விரித்துப் பிணமூடி
னேன்மக னீயெனில்வா
கடுக வெனக்குமுன் முந்தவென்
றேயொர் கவிதைசொல்ல
முடுக வழைப்ப மனையாள்
பிணந்தனை மூடிச்சென்ற
வடுக னளித்த மகன்வாய
லான்றொண்டை மண்டலமே. 59

பயிரைப் பெரும்பன்றி தின்றதற்
காகப் பரிசனத்தோ
ருயிரைப் பருகி யுடலவர்க்
கீய வொருபுலவோன்
செயிரப் புடைத்ததுந் தானே
பொறுத்தந்தச் செய்யுதவும்
வயிரப்ப னென்பவன் வாழ்வா
னதுந்தொண்டை மண்டலமே. 60

ஈரக் கருக்கரி வாள்கொண்டு
போகையி லின்புலவோ
னேரொக்க வேநின்று வண்டோ
லிடுமென நின்றுதனஞ்
சேரக் கொடுப்பவொன் றில்லாமன்
மன்னவன் செம்பொன்னெல்லாம்
வாரிக் கொடுக்கத் துணியவல்
லான்றொண்டை மண்டலமே. 61

பண்டை நிகண்டு திவாகரம்
பிங்கலம் பன்னுரிச்சொ
லெண்டிசை யின்சொல் வடமொழி
செய்யுளெல் லாமுணர்ந்தே
தண்டமிழ் கொ ுடு நிகண்டுசூ
ளாமணி தானுரைத்த
மண்டல வன்குடி கொண்டது
நீடொண்டை மண்டலமே. 62

காரார் களந்தைப் புகழ்ந்தி
சொன்ன கலம்பகத்தி
னேரான நையும் படியென்ற
பாடல நேரியர்கோன்
சீராகச் செப்பிய நற்பாடல்
கொண்டவன் செஞ்சியர்கோண்
மாராபி ராமனங் கொற்றந்தை
யூர்தொண்டை மண்டலமே. 63

தாறற்ற செந்தமி ழொப்பாரி
யென்னுந் தமிழ்புணர்ந்தோன்
சேறைப் பதிசந்த்ர சேகர
வாணன்முன் சென்றவந்தாள்
வீறுற் றனரென்று வேளாள
ரைமன் விலங்கிலிட
மாறற் குவந்து முடிசூட்டி
னுன்ருெண்டை மண்டலமே. 64

தன்னூர்ச் சனகையிற் சன்மதி
மாமுனி தந்தமைந்த
னன்னூ லுறைத்த பவணந்தி
மாமுனி நற்பதியுஞ்
சின்னூ லுரைத்த குணவீர
பண்டிதன் சேர்பதியு
மன்னூ புரத்திரு வன்னமின்
னேதொண்டை மண்டலமே. 65

ஊரார் மலிபுலி யூர்க்கோட்ட
நற்குன்றத் தூரிலுள்ள
தீரார் வளமலி பாக்கிழ
வோன்புகழ்ச் சேக்கிழவோன்
காராளன் கூடற் கிழவோன்
முதுமொழிக் காஞ்சிசொற்ற
வாரார் புரிசைக் கிழவோனும்
வாழ்தொண்டை மண்டலமே. 66

நீண்டார் வணங்குந் திருவாலங்
காடற்கு நெல்லமுதே
வேண்டா வெனக்கிந்தக் கூழே
யமைகென்று வேண்டியகூ
ழாண்டா ரொருவ ரறுபத்து
மூவரி லன்புவைத்து
மாண்டா ரவர்க்கு வளநாடு
நீடொண்டை மண்டலமே. 67

நன்ருய் விளைந்ததை வேதியர்க்
கீந்தந்த நன்மையினுற்
பொன்ருன் விளைந்திட நெற்போல
வேயதைப் போரடித்துக்
குன்ருக் குவித்ததை நெற்பரி
மாற்றங் கொடுத்தளித்தான்
மன்ஞர் களந்தைக் குடிதாங்கி
யுந்தொண்டை மண்டலமே. 68

வெங்கொலைக் கஞ்சி யடைக்கலந்
தான்புக வேந்தன்மைந்த
னுங்கலை யாம லொளித்துவைத்
தேதன் ஞெருமகவை
யிங்கிவன் ருனவ னென்றே
யடையலர்க் கீந்துவிட்டான்
மங்கலஞ் சேர்க்கிடங் கிற்பெரு
மான்ஞெண்டை மண்டலமே. 69

எண்ணுன் கறந்தொண்டை மண்டலத்
தார்க்கன்றி யில்லையெனத்
தண்ணுர் வயலுழன் ருன்சொல
வேந்தன் றலைதடிந்த
தெண்ணுமன் மன்னனு மப்படி
யெசொல விப்படியின்
மண்ணுளும் வேந்தன் வரிசைபெற்
ருன்ருெண்டை மண்டலமே. 70

கோலூ ருழவுக் குடியா
னவன்றன் குமிழம்பட்டு
வேலூர்க் கிழானெரு வேளாளன்
பஞ்சம் விடியளவு
நாலூரி லுள்ள புலவோர்க்குந்
தேசத்து நாவலர்க்கு
மாலூரு மன்னங் கொடுத்தளித்
தான்ருெண்டை மண்டலமே. 71

நறுங்கூ ழெனையன்றி யுண்டனை
யோவென நாணிவயி
றுறுங்கூர் நுதிவடி வாளாற்
பிளந்திட் டிருங்கரினை
யுறுங்கூழ்புறத்தி லிருந்தானுக்
குய்த்துப்பி லாதபுற்கை
வறுங்கூழ் சொரிந்திட்ட முற்றவுண்
டான்ருெண்டை மண்டலமே. 72

போதாருந் தன்பொழில் வீடூ
ரதிபன் புலவர்க்கெல்லாந்
தாதாவெனக்கொடி கட்டுத
லாலவன் றன்மனையை
நீதா வெனவொரு பாவாணன்
கேட்பவந் நேரிழையை
மாதர வெனவழைத் தானென்கொ
லாந்தொண்டை மண்டலமே. 73

கடைவா யிலினின்றி யாசகர்
கூப்பிடக் காதிலது
தடையா யவனும்பசியால்
வருந்தத் தடையகற்றி
யடையாத வாச லுடையா
னெனும்பெய ராதரித்தான்
மடையார் கழனி யிடையாலத்
தான்றொண்டை மண்டலமே. 74

தரையார் மழையுந் தபனனும்
போலத் தடையுமின்றி
யுரையாது நீசனெ டுண்டமை
யாலுமொ ருனமின்றித்
திரையார் புவியிற் புகழே
படைத்துத் தினந்தினமும்
வரையாது வள்ளன்மை நாட்டுவ
தாற்றொண்டை மண்டலமே. 75

கூற்றார் புலவ னெருபரி
கேட்பக் கொடைமதத்தா
லாற்றார்க் கிழான்பரி யாயிர
மீந்தன னுதலினுல்
வேற்றார் பலவிது நம்மூ
ரெனும்படி வெம்பசியை
மாற்றார் பலவுள மண்ட லங்
காண்டொண்டை மண்டலமே. 76

ஏதிலுந் தொண்டர்க் கிசையா
தனக்குற்ற மின்பஞ்செய்தாற்
றீதிலு நன்மை பெறலா
மெனவையந் தேறத்தெவ்வைச்
சூதிலும்வென்று புலனைந்தும்
வென்றெம தூதரையும்
வாதிலும் வென்று வருமூர்க்க
ருந்தொண்டை மண்டலமே. 77

மெய்ப்பார் மனவியைக் கொள்வாரு
மற்று விளக்கு முட்டக்
கைப்பாணி கொண்டு கழுத்தீர்ந்
துதிரங் கலத்துளட்டி
பொய்ப்பார் புகழ வகல்விளக்
கோடு புகழ்விளக்கு
வைப்பார் கலியர் திருவொற்றி
யூர்தொண்டை மண்டலமே. 78

கொத்தலர் கோதை வியன்பாண்டி
மண்டலக் கொம்பைத்தம்பால்
வைத்திருந் தாங்கவ டன்கேள்வன்
றேடி வரவவற்கே
யுய்த்திரு வோர்க்கும் வரிசையு
மாற்றி யுடனுஞ்சென்று
மைத்துனக் கேண்மை படைத்ததன்
ரூதொண்டை மண்டலமே. 79

மோதிச் சிவந்த கவிகாள
மேக மொழிந்தவெண்பா
பாதிக்கு முந்திப் பரிசளித்
தோன்களப் பாளனெனு
மாதிக்கம் பெற்றவ னூர்
முதலி யரசிருப்பா
மாதிக்கெ லாம்புகல் கின்றதொல்
சீர்த்தொண்டை மண்டலமே. 80

வேலி யழித்துக் கரும்பையெல்
லாந்தின்ன விட்டிரவோர்
காலில் வணக்கமுஞ் செய்தேத்திப்
பின்னுங் கரும்புதின்னக்
கூலி யளந்துங் கொடுத்தா
ரெருவன் குமணனப்போல்
வாலிதின் மிக்க கொடையாள
னுந்தொண்டை மண்டலமே. 81

உணலைப் பசும்பொன் முதலான
வற்றை யுதவிப்பின்னுங்
குணலச்சை யுள்ளவர் கேட்கவுங்
கூசுவர் கொல்லெனவே
யெணலைக் கருதி யெழுதிவைப்
பீரென வின்மறைந்து
மணலைப் பரப்பிய முன்றிலுள்
ளான்றெண்டை மண்டலமே. 82

பன்னுந் தமிழ்க்கவன் மாமணி
தாதி பரிசளிப்ப
முன்னம்பி காளிக்கு நெற்குன்ற
வாண முதலியென்போன்
பின்னுஞ் சிலபல பொன்னுங்
கொடுத்துத்தன் பேர்நிறுத்த
மன்னுந் தமிழு முரைத்தான
வன்றெண்டை மண்டலமே. 83

சீரொன்று தேவர் முதலாத
லாற்றில்லை வாழ்முதலி
யாரென்று நாமம் படைத்தது
போன்மற் றவருமந்தப்
பேரொன்று பெற்றது வேளாண்
முதன்மையைப் பெற்றல்லவோ
வாரொன்று பூண்முலை யாயெளி
தோதொண்டை மண்டலமே. 84

கசிட்டன் புடைய விராவணன்
வீழக் கயிலையுறைந்
தசிட்டன் றிருவடித் தாமரை
பூசிக்கச் சார்ந்தபசு
விசிட்டந் தருமுலைப் பாலாறு
கொண்டு விருப்பமுடன்
வசிட்டன் றவஞ்செய்த மண்டலங்
காண்டொண்டை மண்டலமே. 85

வெல்லாமல் வென்றுநற் சந்தனக்
காட்டத்தின் மேலிருந்து
தல்லாறை நந்திக் கலம்பகங்
கேட்டபி னற்றுணைக்குக்
கொல்லா புரிசந்த்ரன் மாமுடி
சூட்டக் குடைகவித்து
மல்லார் புரித்தொண்டை மானுன
துந்தொண்டை மண்டலமே. 86

அந்தப் புரமு மறுநான்கு
கோட்டகத் தாருமொன்றுய்க்
கந்தப் புராணம்பன் னீராயி
ரஞ்சொன்ன கச்சியப்பர்
தந்தப்பல் லக்குச் சிவிகையுந்
தாங்கியச் சந்நிதிக்கே
வந்தப் புராண மரங்கேற்றி
னுர்தொண்டை மண்டலமே. 87

உறைவா ளரச னெறுப்பானென்
றஞ்சி யொளித்ததுவும்
பிறவாமல் வைத்தவர் பேணுத
லாலவர் பேர்புனைந்து
திறவா ணிபர்முதற் சாதியுள்
ளோரன்று செய்தநன்றி
மறவாம லின்னமும் பாராட்
டிடுந்தொண்டை மண்டலமே. 88

மேதைப் புலவரெண் ணேகாம்
பரசம்பு மெச்சநெடுங்
காதைப் புலவ ரிரட்டையர்
பாடுங் கலம்பகமு
மோதற் கரியநல் லேகம்ப
வாண ருலாவுமந்த
மாதைப் பனுவலும் பாராட்
டிடுந்தொண்டை மண்டலமே. 89

தாளாண்மை யுள்ள புகழ்கிருஷ்ண
ராயன் சமுகத்திலே
வேளாண் மகளிரைப் போலே
விநோதித்து வேடங்கொண்டு
கோளார் வயிரியர் கூத்தாடத்
தங்கள் குடிமையெண்ணி
வாளா லவனுயிர் மாய்த்ததன்
ரேதொண்டை மண்டலமே. 90

தருவுற்ற காளத்தி கச்சியந்
தாதியுந் தண்டமிழ்தேர்
திருவொற்றி யூரிற் குறுந்தொகை
தானுந் திரைகடலைப்
பொருவுற்ற கச்சி மலிதே
ரெனமுன் புகல்கவியு
மருவுற்ற கூந்தன்மின் னேயுண்டு
காண்டொண்டை மண்டலமே. 91

பண்டையொர் நாளையி லோரேழ்
கலிங்கப் பரணிகொண்டு
செண்டையு மேருவிற் றீட்டுவித்
தோன்கழற் செம்பியன்செய்
தொண்டைநன் னாடு புரக்கின்ற
கோனந்தித் தோன்றலெங்கள்
வண்டையர் கோனங் கருணை
கரன்ரெண்டை மண்டலமே. 92

தேர்கொடுத் தோனும் பரிகொடுத்
தோனுந் திருமனையிற்
ரூர்கொடுத் தோனுந் தலைகொடுத்
தோனுந் தமிழினுக்கா
வூர்கொடுத் தோனு முயிர்கொடுத்
தோனு முதைகொடுக்க
மார்கொடுத் தோனு மனவோரு
ளார்தொண்டை மண்டலமே. 93

துரைத்தியாக ராயர்முன் சுந்தரர்க்
காவொரு தூதுசென்ற
விரைத்தா மரைமணம் வீசுதல்
போல்விடப் பாய்சுருட்டித்
திரைத்தா வணத்தி லொருபுல
வோன்பின்பு சென்றசெந்தா
மரைத்தாண் மணிமின்ன நாறுங்கண்
டீர்தொண்டை மண்டலமே. 94

வானப்பிர காசப் புகழ்க்கிருஷ்ண
ராயற்கு மஞ்சரிப்பா
கானப்பிர காசப் புகழாய்ந்து
கச்சிக் கலம்பகஞ்செய்
ஞானப்பிர காச குருராயன்
வாழ்ந்து நலஞ்சிறந்த
மானப்பிர காச முடையோர்
வளர்தொண்டை மண்டலமே. 95

மந்தா கினியிற் றிரிவேணி
சங்கத்தின் மாண்டொருவன்
மந்தா கினியுற்ற பாதாளம்
புக்கு வணங்கிநின்று
மந்தா கினிக்கு மகவாகக்
கேட்ட வரங்கொடுப்ப
மந்தா கினிக்கு மரபான
துந்தொண்டை மண்டலமே. 96

காவிய மாகிய காமீகங்
கண்டுங்கங் காகுவத்தோ
ரோவிய சூத்திர ராக
விருபத்து நான்குயர்ந்த
மேவிய கோட்டத்தி லுங்கரி
கால வளவன்மிக்க
வாவிய மேன்மை கொடுத்தளித்
தான்றொண்டை மண்டலமே. 97

யுகமேழு கோடி யிருப
திலக்கமு முள்ளமட்டுஞ்
சகமேழு மேழும் புகழே
நிறுத்தித் தமிழ்புனைந்து
புகழ்மேழி வாகைப் பதாகையும்
வீரப் புலிக்கொடியு
மகமேரு விற்சென்று தீட்டிய
தாற்றொண்டை மண்டலமே. 98

நாடான கோட்ட மிருபத்து
நான்கினு ணற்றண்டகத்
தாடாத செக்கு மரையாத
வம்மியு மாகிவளர்
பீடாதி பிடத் திருக்காமக்
கோட்டம் பிறங்குகச்சி
மாடா திபரெனுங் காலாண்ட
ருந்தொண்டை மண்டலமே. 99

இன்னவர் காலத்தி லெத்தனை
பேர்மற் றிவர்களுக்கு
முன்னவர் காலத்தி லெத்தனை
பேரிம் முதலிகடம்
பின்னவர் காலத்தி லெத்தனை
பேர்கள் பிறப்பவர்முன்
மன்னவர் காலத் தொடர்புடைத்
தாற்றொண்டை மண்டலமே. 100

நிலைவாழ்வு பெற்றிடும் வேளாளர்
வாழிநன் னீருழவு
தலைவாழி யேகம்பர் சந்நிதி
வாழிசங் காழிதண்டு
சிலைவாழி வாழி திருநெடு
மாறிரு வேங்கடமா
மலைவாழி பெண்ணெண் கலைவாழி
வாழ்தொண்டை மண்டலமே. 101

மூற்றிற்று.

தனிக் கவிகள்

கட்டளைக் கலித்துறை

தகைவந்த சீர்த்தொண்டை மண்டலத்
தார்தஞ் சரிதையையித்
தொகையென் றெருவர்க்குஞ் சொல்லப்
படாதுசொன் னலுமிக்க
நகைவந்தி டுஞ்சொற் புலவோர்
சபையினி னமுநம்மால்
வகைவந்த மாத்திரஞ் சொல்லிவைத்
தோமிந்த மண்டலத்தே. 1

விருத்தம்

காவைவென் றிடுகத் தூரி
கண்மணிக் கறுப்ப னென்னு
மாவையம் பதியான் றெண்டை
மண்டல சதகங் கேட்டு
தாவலர் புகழ்ந்து மெச்ச
நவநிதி பொழிந்து நன்ருய்ப்
பூவுல கெங்கும் போற்றப்
புகழ்நிலை நிறுத்தி னனே. 2

வேறு

கன்மாரி காத்தமுகிற் கத்தூரி
யருண்மாவைக் கறுப்ப னென்னு
மின்மாரி தனதுகிளை யத்தனையுஞ்
சபைகூட்டி வியந்து கேட்டுச்
சொன்மாரி பொழிந்திடவே சிரகரகம்
பிதஞ்செய்து சுருளுந் தந்து
பொன்மாரி பொழிந்துதந்தப் பல்லக்குச்
சுமந்துமிகு புகழ்பெற் றனே. 3

ஓர்கறுப்பு மில்லாத தொண்டைவள
நன்னாட்டி லுசித வேளாச்
சீர்கறுப்பொன் றில்லாத கத்தூரி
மன்னனருள் சேயைப் பார்மே
லார்கறுப்ப னென்றுசொல்லி யழைத்தாலு
நாமவனி யன்பி னுலே
பேர்கறுப்ப னிறஞ்சிவப்பன் கீர்த்தியினுல்
வெளுப்பனெனப் பேசு வோமே. 4

எல்லப்ப னம்மையப்பன் றருதிருவேங்
கடநாத னெழிற்சி ராமன்
வல்லக்கொண் டையன்மாதை வேங்கடே
சுரன்போல வரிசை செய்தான்
செல்வத்தம் பியருடனே கத்தூரி
மகன்கறுப்பன் தெருவீ திக்கே
பல்லக்குத் தான்சுமந்தா னதுநமக்கோ
ராயிரம்பொன் பரிசு தானே. 5

கட்டளைக் கலித்துறை

இந்தச் சதக மரங்கேற்று
கைக்கிசைந் தேனெவரும்
வந்திக்கு மாவைக்கத் தூரிக்
கறுப்பன் வளமைபெறு
புந்திக் குலாவுநள் ளாறர்தம்
பாதம் பொருந்துமன் பன்
வந்துற்பவிக்க மகிழ்வா
னதுந்தொண்டை மண்டலமே. 6

இந் நூலாசிரியர் சரித்திரக்குறிப்பு

இத் தொண்டைமண்டல சதகஞ் செய்த புல வர், ஸ்ரீமத் உபசுப்பிரமணிய ரென்றும் சேஜனத் தலவ ரென்றும் சொல்லாநின்ற செங்குந்தர் மரபிற் ரேன்றி, சிவானுக்கிரகத்தால் தமிழ்க்கலை முழுதும் பயின்று, தெய்வீகம் விளங்கிய நல்வாக்கினைப் பெற்று, சிதம்பரத்தில் ஸ்ரீ சபாநடேசர் பொற்பணம் ஐந்து பஞ்சாக்ஷரப்படியில் வைத்தருளக் கொண்டு, அதனால் **படிக்காசுப்புலவ** ரென்று பெயர் பெற்றவர்.

தொண்டைமண்டலம்

"வேழ முடைத்து வலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து — பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்ரெ
நன்னாடு சான்ரே ருடைத்து" [ண்டை

என்று ஔவையாரால் புகழப்பட்ட இந்த நாடு கிழக்கே கடலும் மேற்கே பவளமலையும் வடக்கே வேங்கடமலையும் தெற்கே பிநாகி நதியும் எல்லைக ளாக வுடையது; இதற்கு இராஜதானி காஞ்சிபுரம்; இந்நாடு பூர்வகாலத்தில் சோழநாட்டைச் சேர்ந்தது; நாகப்பட்டினத்துச் சோழன் நாகலோகஞ் சென்ற காலத்திலே நாககன்னிகையை மணம் புரிந்து அவள் வயிற்றிலே பிறக்கும் புத்திரனுக்குத் தனது நாட்டில் பாதி கொடுப்பதாக வாக்களித்து மீண் டான்; மீளும்போது நாககன்னிகை புத்திரனை யனுப் புவ தெவ்வாறென்று வினவ, அவன் தொண்டைக் கொடியை அடையாளமாகக் கட்டித் தெப்பத்தி லேற்றி யனுப்பக்கடவை யென்ரான்; அவ்வாறே

அப்புதல்வன் தொண்டைத்தழை யுடுத்திக்கொண்டு அலைகளாற் செலுத்தப்பட்டு நாகபட்டினத் துறை யை யடைந்தான்; சோழன் அவனை வளர்த்து இந் நாட்டைப் பிரித்து அவனுக்குக் கொடுத்து தொண்டைமான் என்னும் பெயரும் முடியும் சூட்டி னான்; தொண்டைமான் ஆண்டமையால் இது **தொண்டை மண்டலம்** என்னும் பெயர்த்தாயிற்று; இது நெடுங்காலம் உபநாடாகவும், சில காலம் தனி நாடாகவுமிருந்து பெரும்புகழ் படைத்தது. இந்நாட் டிலே திருவள்ளுவர், கச்சியப்ப சிவாசாரியர், குக னேரியப்பர், கம்பர், பரிமேலழகர், ஒட்டக்கூத்தர், இராமாநுஜர், சேக்கிழார், இரட்டையர், அருணகிரி நாதர், பவணந்தி, படிக்காசுப்புலவர், அப்பைய தீக்ஷிதர் முதலிய வித்வசிகாமணிகளும், அதிக மான், கறுப்பன், சடையப்பன், மணிகண்டன் முத லிய மஹா பிரபுக்களும், உத்தம குணத்தாற் சிறந்த அரசர்களும் இருந்து விளங்கினரென்றல், இதன் பெருமையை அளவிட்டுரைத்தல் கூடுமோ? இத் தகைய இந்நாட்டின் பெருமையைப் படிக்காசுப்புல வர் இத் தொண்டைமண்டல சதகத்தில் விரித்துப் பாடி யிருக்கின்றனர்.

திவ்யகவி நாராயண தாசரவர்கள்

இயற்றிய

12. வடவேங்கட நாராயண சதகம்

பாயிரம்

நேரிசை வெண்பா

நஞ்சுவினைக் காமமுத னமதுயிரைக் காக்கும்
செஞ்சொல் லினுற்சதகஞ் செப்பியது—விஞ்சுபுகழ்
நாரா யணதாசர் நன்ருக நானிலத்தே
பாரா யணஞ்செய் பவர்க்கு.

கா ப் பு

நேரிசை வெண்பா

நல்லவட வேங்கடத்து நாரா யணச்சதகம்
சொல்ல வெனக்குத் துணையாமே—மல்லர்
பணையான தின்புயத்துப் பாண்டவர்க்கு முன்னந்
துணையான பாதந் துணை.

நூ ல்

கலி விருத்தம்

பிரிக்கிசை வண்ணம்

நீர்கொண்டுதண் மலர்கொண்டுநன்
னெறிகொண்டுநின் குறிகொண்டுவன்
சீர்கொண்டுவந் தணைசெய்துணைச்
செறிவார்களென் பெறுவார்களோ
பேர்கொண்டிலன் பொறிகொண்டிலன்
பெரியோர்களா லருள்கொண்டிலன்
நார்கொண்டுகண் டருள்சோதியே
நாராயணு நாராயணு.

பரகாரியம் பலசெய்துனைப்
பணியாமலே பிணியானபின்
விடசாயிரந் தழுவாததென்
வெறியார்குண்டங் குறிப்பார்களோ
உரகாரிமே லுபகாரியா
யொருசாரியா வுலவாரியா
நரகாரியே முரகாரியே
நாராயணு நாராயணு. 2

சிவனீதலம் புயனீதலந்
திரனீதலந் திரனீதலா
கவனீதல்விண் ணவனீதன்மா
தவரீதலோ டெவரீதலும்
அதனீதலந் தனிலெண்ணினுன்
னடியாரடிப் பொடியாகுமோ
நவநீதமுண் கருமேகமே
நாராயணு நாராயணு. 3

அலசத்தரும் பிணிவந்துநா
னலையாமலே யமரர்க்கிடும்
மலசத்துளோர் துளிநல்கியென்
கவியைக்கொளாய் கருணைகரா
குலசக்கரன் சலசேகரன்
குலசேகரன் புகழ்சாகரா
நலசக்கரா சலசக்கரா
நாராயணு நாராயணு. 4

எதிரும்பெரும் பிணியும்பறந்
திரையுஞ்செறிந் தழிதலும்பறந்
துதிரந்திரிந் துடலங்கொளுநீ
துயரந்தெளிந் துணநம்பவர்
மதிமயங்கிடந் தொளிருஞ்சடா
மகுடந்தொறுந் தொணியும்பவா
னதிவந்தெழும் பதபங்கயா
நாராயணு நாராயணு. 5

எல்லாருமுன் னுதரத்துளே
யென்னேடுமங் குறைகின்றபேர்
அல்லாதுவே றில்லாமையா
லஃனவர்க்குமோ ரருளல்லவே
வல்லாருளார் மாட்டாருளார்
வறியாருளார் வாழ்வாருளார்
நல்லாருளார் பொல்லாருளார்
நாராயணு நாராயணு. 6

நீகாசுதா நீதூசுதா
நீயாடுதா நீமாடுதா
போகாதபோர்க் கிடுசோறெனப்
புலியர்க்கு நெஞ் சுருகச்சொனேன்
ஆகாதகா ரியமென்னிடத்
தளவற்றதுண் டவையாய்வையோ
நாகாசலா நாகாலயா
நாராயணு நாராயணு. 7

அயனுரெழுத் தளவின்றியே
அதிகங்கணப் பொழுதாயினும்
பயனுயிருப் பவரில்லையிப்
படிமீதிலிப் படியன்றியே
வியனுயுஃனத் தொழுவார்களவ்
விதிவெல்வராய் மறைசொல்லுமே
நயனுரதன் புகழ்சோதியே
நாராயணு நாராயணு. 8

ஓமங்களால் விரதங்களா
லுயர்தீர்த்தயாத் திரைகோடியால்
ஏமங்கள்கன் னியரீதலா
லெழுபாரையுஞ் சுழல்கின்றதால்
ஆமைம்புலன் கடிகின்றதா
லடைபுண்ணியங் கணமேனுநின்
நாமம்புகன் றதுபோலுமோ
நாராயணு நாராயணு. 9

பாடேனலோ கவிசிந்துனை
பணிகேனலோ பலகாலெழுந்
தாடேனலோ பலிபீடமுன்
னணுகேனலோ சடகோபமோ
சூடேனலோ வலமாகவே
சுழலேனலோ கதியென்றுனை
நாடேனலோ கொடியேனலோ
நாராயணு நாராயணு. 10

அறவைக்கெலா மடிமூலகா
னருளுக்கெலா மடிமூலநீ
பிறருக்கெலாம் பெருவித்ததும்
பெறுவிப்பதும் பிணிதட்டிலே
உறவைக்கிலென் னுயிர்காவலுக்
கொவ்வாதுரை யென்செய்வனே
நறவைத்துழா யணிமார்பனே
நாராயணு நாராயணு 11

பசியாதமந் திரமேவரும்
பழியாத மந்திரந்தான்
விசியாதமந் திரநோயிலே
விழியாகமந் திரநெஞ்சிலே
முசியாதமந் திரமோதுவார்
முதலானமந் திரமொன்றிலே
நசியாதமந் திரமோநமோ
நாராயணு நாராயணு. 12

அபராதமா கியபலசரக்
கடலாகவோ டமதேற்றியே
விபரீதமோ யலையிற்குளே
விடநின்றதூழ் வினையென்செய்வேன்
இபராசனைக் கரையேற்றுநீ
யெனையேற்றலிங் கரிதல்லவே
நபராசனே சுபராசனே
நாராயணு நாராயணு. 13

வான்சொல்லுமே புவிசொல்லுமே
மறைசொல்லுமே நிறைசேடன்வாய்
தான்சொல்லுமே முனிவோர்பெருஞ்
சபைசொல்லுமே கதிசொல்லுமே
தேன்சொல்லுபங் கிறைசொல்லுமே
திகைசொல்லுமே திகையாமலே
நான்சொல்லவே துவுமாவெனே
நாராயணு நாராயணு. 14

சிருக்காமருந் துடற்கூறியே
சுழற்றுருருந் தழற்றீயிலே
உருக்காமருந் துலர்த்துண்டையா
வுருட்டாமருந் துழக்கெண்ணெயில்
கருக்காமருந் திருக்கையிலே
கசக்காமருந் திருக்கல்லிலே
நருக்காமருந் திருக்கின்றதே
நாராயணு நாராயணு. 15

தகவாயுணப் புகழாமலே
சலமேதொடுத் திகழ்பேசுவார்
முகவாயிலே புழுவீழுமே
முனையந்தகன் கிளர்போதுமே
ககவாகனு மிகுமோகனு
கனகன்களே பரமார்பெலாம்
நகவாளினு லரிசீயமே
நாராயணு நாராயணு. 16

தலமேழையும் படமோதினுஞ்
சலமோவிடா வகிலாண்டநற்
பலம்யாவுமென் மனசேரினும்
பசைபோதிடா திசைமாதரார்
குலம்யாவுமின் பம்தீயினுங்
குறுகாதுமால் பெறுகாயமே
தலமேவுமே திறமேவுமே
நாராயணு நாராயணு. 17

பண்டிட்டதா மரையுந்தியிற்
படிவார்நிண்ங் கடியாரெனத்
தொண்டிட்டுநின் ரெழில்கொள்வதோ
துயரத்திலே யடைவிப்பதோ
கொண்டிட்டநின் புகழ்நிற்கவே
குறையாளரைப் புகழ்கின்றவாய்
நண்டிட்டபாழ் வஈயொக்குமே
நாராயணு நாராயணு. 18

பகையானவன் பிணிசெய்ததோர்
பதினுயிரம் பிழையுண்டுநான்
வகையாநினக் குரைசெய்கிலேன்
வருநோயுநின் னருளாதலால்
மிகையானபின் முறையிட்டனன்
விடுவித்தியாய் விஈயாடினுல்
நகையார்களோ அகையார்களோ
நாராயணு நாராயணு. 19

குப்புற்றகன் றுடனுவெலாங்
குழுவாகவோர் குழலூதவே
மப்புக்கொளுந் தொனிகாதிலவ்
வழியேகுபுட் களுமுண்ணவே
துப்புக்குமோர் தயிர்வெண்ணெய்பால்
சொரிகைக்குமவ் விடைநங்கைமார்
நட்புக்குமா டியகண்ணனே
நாராயணு நாராயணு. 20

தாயற்றபேர் தாயாகுவாய்
தமரற்றபேர் தமராகுவாய்
சேயற்றபேர் சேயாகுவாய்
செயலற்றபேர் செயலாகுவாய்
வாயற்றபேர் வாயாகுவாய்
மஈலபோலுநோய்க் குஈநம்பினுல்
நாயிற்றுமுன் பணிநிற்குமோ
நாராயணு நாராயணு. 21

மந்தன் புதன் குருவெள்ளிசெய்
மதிராகுகே தரிநாடொறுத்
தந்தம்பெலா விடமேவினுஞ்
சகலேசநின் சரணண்டினுல்
எந்தம்பிரா னிவனென்றுகொண்
டேகாதசப் பலனீலமே
நந்தன்கதா நம்பும்பதா
நாராயணு நாராயணு. 22

ஆற்ருமையொன் றமையாமையொன்
றறியாமையொன் றருளாமையொன்
றேற்ருமையொன் றிசையாமையொன்
றின்ஞமையொன் றிருதாஞயும்
போற்ருமையொன் றடியாருடன்
பொலியாமையொன் ருெருமெய்யிலே
நாற்ருய்விஞந் திடலாகுமோ
நாராயணு நாராயணு. 23

தன்மைக்குநீ யடியேனுடைச்
சலிகைக்குநீ பொலிகைக்குநீ
மென்மைக்கு நீ வன்மைக்குநீ
மிகுதிக்குநீ தகுதிக்குநீ
புன்மைக்குநீ புலமைக்குநீ
பொறுமைக்குநீ மறுமைக்குநீ
நன்மைக்குநீ தின்மைக்குநீ
நாராயணு நாராயணு. 24

வேட்பித்ததுன் பெருநெஞ்சமே
வியப்பித்ததுன் விஞையாடலே
கேட்பித்ததுன் பலநூல்களே
கிளர்வித்ததுன் மதிவாசமே
பேட்பித்ததுன் கனசத்தியே
பிழைப்பித்தவெம் பிணிப்பித்தவாழ்
நாட்பிச்சையுந் தரவேண்டுமே
நாராயணு நாராயணு. 25

பூரிக்குநின் கொடியென்னவே
புளகிக்குநின் சனமென்னவே
ஈரிக்குநின் சபையென்னவே
யிரதிக்குநின் புகழென்னவே
ஆரிக்குணம் பெருதேவர்தா
னடியாருளத் தானந்தமே
நாரிக்குவில் லொடியச்செய்தாய்
நாராயணு நாராயணு. 26

தேன்பாடிதா வனமாலையந்
திருவாழிசங் கமுமேந்தியே
தான்பாடி நா ரதனுடுமுன்
சபைமானிடர்க் கதிதூரமே
வான்பாடியுட் புயலொன்றுதான்
வருமென்றுவா டுவதென்னவே
நான்பாடினுல் வரவேண்டுமே
நாராயணு நாராயணு. 27

மானுயுநின் னருளுற்றளாய்
வாம்நீர்மருந் தாயங்கனே
ஆனேடுநின் னருநாற்றநாள்
சஞ்சீவியைத் தளியேதுமே
தானேரையண் டினபேர்கடா
மடியாருளத் தானந்தமே
நானேதவா ஞானேதயா
நாராயணு நாராயணு. 28

ஈசன்பரன் பிரமன்பிதா
விறைவிண்டுவண் டுறைதண்டுழாய்
வாசன்சரா சரனென்றுநின்
வழியன்பர்வாழ் வதிதன்னிலே
தீசங்கடம் பிணிதாமுமே
சிறைசண்டைவஞ் சனைவீழுமே
நாசங்கடந் துயிர்வாழுமே
நாராயணு நாராயணு. 29

ஆபாதவா யுணவாழுமே
யடியாருடன் படைபண்ணுமே
மாபாவநூல் பலகற்குமே
மறைபன்னுவா தியர்தம்மினும்
ஓபாவியே னிவைநின்முனே
யுரைசெய்தனன் விரைசெய்தபூ
நாபாரனே பரநேயநீ
நாராயணு நாராயணு. 30

காற்பாலினிற் கடவாதவன்
கலிகாலமே திரையாடிடுந்
தோற்பாவைநா னதுமெச்சவே
தொடுசூத்திரத் துரைகாரனீ
மேற்பாவபுண் ணியமானநல்
விணதீவிணக் கெவராகுவார்
நாற்பாலினுக் கொருமூலமே
நாராயணு நாராயணு. 31

இறையாலெழுஞ் சுவரானநா
லிருசாணுடம் பிடியாமலே
கரையாமலே தகராமலே
கழலாமலே யழலாமலே
திரையாமலே விணமூடிகண்
டிறவாமலே வகையென்னதா
னரையாதசோ றிடுமையனே
நாராயணு நாராயணு. 32

புற்கொண்டுவாழ் பசுவாரெடார்
புலிபாழ்கிணற் றிடைவீழினுங்
கற்கொண்டுவா தடிகொண்டுவா
கொடிதென்பரப் படுபாவிநான்
எற்கொண்ட நோய்க்கெவராகுவா
ரினிநீயலா தில்லையெட்டியும்
நற்கொண்டலால் வளர்கின்றவே
நாராயணு நாராயணு. 33

அரசன்கையா லபயம்பெரு
ரயலாளுமன் னரையண்டினுல்
வரசங்கரா தியரஞ்சுவார்
வருகென்னமேல் வகையென்னதான்
கரசக்ரதா ரிதுவென்கொலோ
கார்வண்ணனே கதியாகுவாய்
நரசிங்கனே முரபங்கனே
நாராயணு நாராயணு. 34

கோட்சொல்லுவேன் வசைசொல்லுவேன்
குறைசொல்லுவேன் முறைசொல்லுவேன்
கீட்சொல்லுவேன் மிகைசொல்லுவேன்
கிறிசொல்லுவேன் வலிசொல்லுவேன்
சூட்சொல்லுவேன் னயனுழிநாள்
சொலவேண்டினுஞ் சிறிதுன்னையோர்
நாட்சொல்லுவென் றறிகின்றிலேன்
நாராயணு நாராயணு. 35

ஆளாகிநின் னிருநாலெழுத்
தறியாதநா ளறிவார்களைக்
கேளாதநாள் செவியூரவே
கிடையாதநா ளதில்லாசையே
மூளாதநா னிலமீதுதான்
முதனுவிலங் கெழுதாதநாள்
நாளாகுமோ வாளாயுதா
நாராயணு நாராயணு. 36

வீட்டுக்குளே துணையாவதும்
வெளியிற்குளே துணையாவதும்
கூட்டுக்குளே துணையாவதுங்
குன்றுக்குளே துணையாவதும்
காட்டுக்குளே துணையாவதும்
கடலுக்குளே துணையாவதும்
நாட்டுக்குளே துணையாவதும்
நாராயணு நாராயணு. 37

வாய்க்கின்றதேன் புகையுண்ணலா
மணக்கின்றசாந் தரையுண்ணலாங்
காய்க்கின்றமா வெறியுண்ணலாங்
கறக்கின்றவர்க் கட்டுண்ணலாம்
தோய்க்கின்றபால் கடையுண்ணலாஞ்
சுவைகெட்டமா னிடவாலிலா
நாய்க்கிந்தவா தனேயேனையா
நாராயணு நாராயணு. 38

தும்பிக்கையா னையுமையவர்
முன்றுகிலொடுவா டியநங்கையும்
தம்பிக்கையா மகயோகருந்
தாநிற்கவே சதுர்வேதியன்
சம்பிக்கையா லரனுக்குநீ
கனியையிட் டினியையமேன்
நம்பிக்கையா கியதெய்வமே
நாராயணு நாராயணு. 39

பாலாவதோ தேனுவதோ
பழமாவதோ பாகாவதோ
மேலானசர்க் கரையாவதோ
விரையாருநல் லமுதாவதோ
கோலாகலப் பிணிதீரவே
குளியங்களோ வனமூலியோ
நாலாவதோ ரின்போ சொலாய்
நாராயணு நாராயணு. 40

பூவுக்குநல் லதுசொல்லவோ
பொலிசீதளம் புதுவாசமோ
தேவுக்குநல் லதுசொல்லவோ
செவியார்முனு னெதிர்நிற்பதோ
ஆவுக்குநல் லதுசொல்லவோ
வதுசாதுவா யமுதீவதோ
நாவுக்குநல் லதுசொல்லவோ
நாராயணு நாராயணு. 41

ஆனந்தமா யழுவார்முனே
அலர்சூடியே தொழுவார்முனே
மோனந்தனிற் கரைவார்முனே
முகிலென்னவே புகழ்வார்முனே
தானந்தவம் புரிவார்முனே
தகுகல்வியால் மிகுவோர்முனே
நானென்செய்கே னிவையொன்றிலேன்
நாராயணு நாராயணு. 42

செரிக்கின்றவு ணுகர்வேனலேன்
சிரிக்கின்றகா ரியமேசெய்வேன்
கரிக்கின்றகண் படையேன்வெறுங்
கழப்பன்கொடுங் கடுவஞ்சகன்
பரிக்கின்றநின் னடியாரொடும்
பழகேனலேன் படர்வந்தவிந்
நரிக்கின்றிலே னினியென்செய்வேன்
நாராயணு நாராயணு. 43

ஆதாரதே வதைபென்பனே
வடியேனையா ளாயென்பனே
ஓதாதுணர்த் திடவன்புகூ
ருபதேசதே சிகனென்பனே
மாதாபிதா வுடலாவிநீ
மலைகாணிபொன் வலிசெல்வநீ
நாதாவுநீ தாதாவுநீ
நாராயணு நாராயணு. 44

வடுநிந்தையே னிடுவந்தியேன்
மருள்விஞ்சினே னருளஞ்சினேன்
அடுசிந்தையே னெடுவிந்தையே
னலபண்பினே னுனைநம்பினேன்
விடுந்துன்பிலே முடுகன்பிலேன்
வினைமண்டிலே னுனையண்டினேன்
நடுவொன்றிலே மிடைகுன்றுமோ
நாராயணு நாராயணு. 45

குடிநீர்கொடீர் முகவேதிடீர்
குடவெண்ணெயை வடியீர்பிரம்
படியீர்வெணீ றெறிவீர்விழிக்
கதிகோரவஞ் சனமேயிடீர்
கடியீர்வயித் தியரால்வரா
கமதாடுகுக் குடமிட்டுளே
நடியீரெனிற் பிணியஞ்சுமோ
நாராயணு நாராயணு. 46

பிரப்புக்குமுள் ளிடுமாதரைப்
பிணிகட்டுநீள் பிணியுற்றவென்
உரப்புக்குளே யறியாததெ
னுலகத்தெலா முரைசோதிதோல்
வரப்புக்குளே யெலுப்புக்குளே
புகவெட்கியோ இருள்அட்கியோ
இறப்புக்குளே நிரப்பின்றியே
நாராயணு நாராயணு. 47

மன்ருடியே யதிசோபன
மழைவண்ணனே விசயங்கரா
வென்ருய்செயஞ் செயுமச்சுதா
மிகவாழிகே சவனேசுபங்
கன்ருல்விள வெறிந்தாய்பெருங்
கலியாணமங் கலமாதவா
நன்ருயவேங் கடநாயகா
நாராயணு நாராயணு. 48

இந்தாவெனு வெனதிச்சைநீ
யெளிநீவையே விழியாகுமோ
சந்தானமா மலராலருச்
சனைசெய்குவார் தவிவார்களோ
வந்தானபோர் துதியார்களோ
வசுதேவர்சொற் குறையாகுமோ
நந்தாதபெண் ணைகைசெய்வளோ
நாராயணு நாராயணு. 49

சிற்றப்பனே துருவர்க்குநீ
தெதிபாண்டனர் பெரியப்பனே
கற்றத்தைதே வகிதங்கையோ
கண்டாகனன் மிதிலேசனே
சுற்றத்தரோ பெறுவோரெலாந்
தொடுவேன்வழக் கிடுவேன்விடேன்
நற்றப்படும் பொருடந்துபோ
நாராயணு நாராயணு. 50

தன்னெட்டெழுத் தயன்மத்தகந்
தனிலேபொறித் தடிநாவிலே
உன்னெட்டெழுத் தெழுதாமையா
லுலகத்துளோ ரவனீத்தொழார்
கன்னெட்டிடத் தருநெட்டிடக்
கன்னெட்டிடக் கனகாலிபின்
நன்னெட்டெலாந் தொடர்பாதனே
நாராயணு நாராயணு. 51

உரலுக்குமோ ருறுபஞ்சமோ
வுனநச்சினே னெனையச்சமன்
விரலிட்டுதேர் வினவல்லனே
விதிகைக்குமிழ் விரலோசையால்
பொரலுற்றநோய் கழலப்பணுப்
புரிதாமருந் தொருதூதனுல்
நரலோக்குளாய் வரவேண்டுமோ
நாராயணு நாராயணு. 52

சமையாதிதே வதையென்பதுஞ்
சமையாதிநின் பெயரென்பதும்
உமையாளுடன் பரமன்புரிந்
துனமாமறைப் பொருளென்பதும்
கமையாள்வதென் றிமையோர்திலோத்
தமையாதியுன் புகழ்கின்றதும்
நமையரமலே எனையாளுவாய்
நாராயணு நாராயணு. 53

நீயண்டரா லடிபட்டநா
ணினனவில்லை நின் னுதரத்துளே
போயண்டகோ டியிலெந்தவோர்
புரையிற்குளே விளையாடினேன்
மாயங்கடந் தறிவேனலோ
வரதன்கெஹர் வானேர்க்கெலாம்
நாயன்கெஹர் விடுமன்பனே
நாராயணு நாராயணு. 54

காசிக்குளுங் கயையிற்குளுங்
கழியாதபா தகனுகையால்
வாசிக்குலந் துணவந்தியேன்
குறையாகுமோ வினையென்பதோர்
வாசிக்குவந் தருள்செய்குவாய்
வயிரத்திரா வணன்றங்கைதன்
நாசிக்குவா ளெறியையனே
நாராயணு நாராயணு. 55

தாளுக்கவா வியநாவினுஞ்
சலியாதுவா சனியானநோய்
ஆளுக்கெடா தின்றைக்குவா
வசையாமலே யன்றைக்குவா
தோளுக்குவா ளியைசெய்தவன்
துயர்க்கண்டிரா வணவின்றுபோய்
நாளுக்குவா வெனுமையனே
நாராயணு நாராயணு. 56

விக்கற்கிடம் பொருமற்கிடம்
விடுமூச்சுமே லெழுதற்கிடம்
கக்கற்கிட மிருமற்கிடங்
கருதற்கிடந் திருதற்கிடம்
சொக்கிற்கிடங் குளிர்தற்கிடஞ்
சுடுதற்கிடம் ஒருவற்கிடம்
நக்கற்கிடந் தருமையனே
நாராயணு நாராயணு. 57

துளசீதளத் துளசீதளத்
தூய்நீரதே குடிநீரதாம்
உளதாயிரம் பெயரெண்ணுநூற்
றொருகோடிமந் திரமேலதாம்
வளமார்பின்மா மணியென்னவே
மணியாமெனீப் பிணியென்செய்யும்
தளகூபரன் பகைவென்றவா
நாராயணு நாராயணு. 58

சுவையோசையூ றொளிமாமணந்
தொடராமணஞ் சுழல்கெண்டையும்
கவைமானுமா னுவிட்டிலுங்
களிவண்டுமே விளிகின்றபோல்
இவைதூயவென் றினிதூண்டிலே
னினியென்செய்வேன் நவைதீரவே
அவைமேவிய அருளாளனே
நாராயணு நாராயணு. 59

தெட்டேணியின் படியெட்டுமோ
நின்னெட்டெழுத் தெழிலண்டமேல்
எட்டாமெனும் பதமெட்டவே
யிரதித்தசர்க் கரையேயதின்
வட்டேபசும் பழமேசதா
மதுரித்தவா ரமுதேயெனுள்
நட்டேயருட் புனல்காட்டுவாய்
நாராயணு நாராயணு. 60

காணுங்கணே குவியுங்கையே
கருதுள்ளமே கனலாஞ்சனம்
பூணும்புயம் புளகாங்கமே
புகழ்நாவதே திகழ்கேள்வியே
ஆணும்பெணுஞ் சரணென்பதே
யலையல்லநா னபராதிகாண்
நாணும்பெயர்க் காதாரமே
நாராயணு நாராயணு. 61

கவிநல்லதோ கலிதீயதோ
கனமூடனுன் விதைவித்திடும்
புவிநல்லதேல் விளை வெய்துமே
புகழ்நல்லதேல் புகர்கேட்கவென்
செவிநல்லதே லருணல்லதே
செயனல்லதே லியனல்லதே
நவினல்லதே வரிநாவிலே
நாராயணு நாராயணு. 62

பசைகொண்டபா க்வதாக்மம்
பருகாதுகா துருகாதுநெஞ்
சசைகொண்டபா தகநீரிலே
யமிழ்வேணியா ணவமாதியாம்
கசைகொண்டமோ துகைதாக்குமோ
களவுள்ளநா னுனதன்பிலே
நகைகொண்டகா ரியமாகுமோ
நாராயணு நாராயணு. 63

பலகூறுபட் டொருநெஞ்சினன்
பரிசென்னவெங் கணுமானவா
விலைகூறுகொண் டெனைவிண்டதென்
விரனீக்கிமோர் நுகர்வார்களோ
மலகூறலாய் நீதானுமென்
மதிதன்னைவிட் டெனையொத்தனை
நலகூறுவார் சுரதேனுவே
நாராயணு நாராயணு. 64

வாஞ்சித்ததே வதையாகுநீ
வடவேங்கடந் தனிநிற்கவும்
நீஞ்சித்திரிந் தனன்வீணிலே
நிழல்கண்டபின் வெயினிற்பரோ
காஞ்சித்தலத் தருளாளனே
கனகோபுரக் கொடியாடுபொன்
னஞ்சிற்றிருப் பதிவள்ளலே
நாராயணு நாராயணு. 65

மைநாகமா ழியையாண்டவாழ்
வகையென்ன நின் னருள்வெள்ளவாழ்ந்
சையினுலிருந் ததிலூறவே
கமைவேணுறத் தருமாறெவன்
கையினுலரிந் திடரண்ணிய
கலிதீரநீ யருள்செய்திடும்
தையினுரினிற் சரியாவனே
நாராயணு நாராயணு 66

எமக்கென்றுவாழ் குடும்பத்திலே
யிழுப்புண்ணுவா ரெமதாதையார்
தமக்கொன்றுவைத் திலரென்பரே
சழக்குள்ளபோர் வழக்குள்ளபோர்
சுமக்கின்றவச் சுமையாளனச்
சுதன்மற்றைய சுமைகட்கெலாம்
நமக்கென்னகா ரியமென்பரே
நாராயணு நாராயணு. 67

பசுகட்குமா யினைபாடியிற்
பலபாடியா டியுமாயர்தம்
சிசுகட்குமா யினைமைந்தனுய்த்
திருட்டுக்குமா யினையன்றுதான்
முசுகட்குமா யினைநாயினேன்
முசிப்பிக்குமா யருள்பூவையே
நசுக்கிப்பின்வா சனைகொள்வரோ
நாராயணு நாராயணு. 68

குலங்காணவே குடிகாணவே
குணங்காணவே பழுதாயினும்
பலங்காணுநின் னடியாரெனிற்
பவசாகரப் பரப்பென்னுளங்
கலங்காமலே கலங்காணுமே
கழலாமலே கழல்காணுமே
நலங்காமலே நலங்காணுமே
நாராயணு நாராயணு. 69

ஈன்ரேனுநீ யலனனுமவ்
வியலுந்திவண் டினனல்லனிற்
போபோன்ரேனெவன் பெறுபிள்ளாபோ
போபிதா வினவாதிரான்
சான்ரோர்முனே யினிநோயைநீ
தவிராயெனிற் சபதங்கெடும்
நான்ரேரைவீ சியவாளனே
நாராயணு நாராயணு. 70

கஞ்சப்பதந் தனையங்ஙனே
கட்டிக்கரைந் தவசத்தராய்
நெஞ்சத்துநா ரணவென்றுதா
னியமித்துநித் திரைகொள்ளுவார்
கொஞ்சத்தைநின் றளவாக்குவாய்
குணபத்தைவாழ் குடியாக்குவாய்
நஞ்சத்தையா ரமுதாக்குவாய்
நாராயணு நாராயணு. 71

எழினெட்டுருப் பருமேனிவந்
தென்கைக்ககப் படுமென்றுநான்
தழுவிக்கொளத் திரிகின்றதென்
சவுசக்கரா சரமாகுநீ
வழுவிக்கொடங் கிங்கொடியே
வரநல்லமுன் வரவஞ்சியே
நழுவிக்கொடே திரிகின்றதென்
நாராயணு நாராயணு. 72

எனைக்காக்கநீ வரன்மேன்மையென்
றிருப்பாரவர்க் கதுவுண்டுநின்
தனைக்காத்தவா கனவில்லையோ
தகுசேனகா வலனில்லையோ
தினைக்காத்தசே யனுமில்லையோ
நினைவில்லையோ விமையோர்பிரா
ணனைக்காத்தமா ருதியில்லையோ
நாராயணு நாராயணு. 73

கண்பொன்றுகோ முகன்மாற்றவன்
கடுகொத்தபொய்க் கிருள்பார்த்ததோர்
பண்பொன்றுநூ லுரைசெய்யநான்
பழபொய்ச்சலால் விளையாடினேன்
மண்பொன்றுநீ ரனல்பொன்றவிண்
வளிபோன்றவே வருமென்றுநின்
நண்பொன்றுநீ தரல்வேண்டுமே
நாராயணு நாராயணு. 74

போகேந்திரன் சிரமேந்துநின்
பூதேவிபுல் லரையேத்தவே
ஆகேனெனு வுரைசெய்தவ
ளாலடியேனேயேத் துகைவேண்டுவாய்
மாகேந்திரன் றனதம்பியே
வடவேங்கடா சலவள்ளலே
நாகேந்தியே நகமேந்தியே
நாராயணு நாராயணு. 75

ஊழிற்பிறந் திடுபாவநோ
யுடலூத்தொடா வகைதந்திடாய்
வாழிக்குநா யகனிந்திரன்
மனுவின்பதம் பெறவிச்சியேன்
ஆழிக்கையுன் கொடைமிக்கதென்
றடியேன்மிகப் பெறலாகுமே
நாழிக்குடங் கலங்கொள்ளுமோ
நாராயணு நாராயணு. 76

தனுவுக்குளே யுளராறுபேர்
சலிகைக்குநா யகருன்னைநா
பனுவற்சொலா வகைதட்டுவார்
பழகிச்சதா நெறிகட்டுவார்
அணுவுற்றசோ ரரையெற்றியே
யடியேனையா ளாயென்னவே
நணுகிக்கொடே திரிகின்றனன்
நாராயணு நாராயணு. 77

உடைச்சேலுதா குழைச்சோலுதா
வுணச்சோறுதா பணப்பேறுதா
கறுக்காசடா கடைக்கோளனே
கடைப்பூவடா வடைக்காயுடா
கிடைக்கோடிவா முடிச்சேதடா
கிறுப்பாவையார் வெறுப்பார்பொலா
நடைக்காசையா யிழந்தேன்கொலோ
நாராயணு நாராயணு. 78

கன்னிப்பெருங் கடலோடுவான்
கம்பத்திலே விளையாடுவான்
உன்னிக்கொளும் பயனென்னநோ
யொருமட்டுநெஞ் சொருமிக்கிலேன்
என்னிற்பயந் தெளிவித்திடா
யெல்லார்க்குமீந் தென்மட்டிலே
நன்னிக்குணம் பிடிபட்டது
நாராயணு நாராயணு. 79

புட்புள்ளவன் கொடியென்னவே
பொற்பொன்னவன் கலியென்னவே
கட்புண்டரீ கமலத்தினோர்
கண்ணென்னவே கரைகின்றிலேன்
சட்புள்ளவன் சமயத்திலே
சலமண்டினேன் சரணண்டினேன்
நட்புள்ளதோ பகையுள்ளதோ
நாராயணு நாராயணு. 80

கச்சுப்பிதிர்ந் தெழுகொங்கையார்
கடைவாளழிப் படைகோடிகள்
இச்சுக்கிடந் திடுநெஞ்சிலே
னிலாயம்புதைத் தவருய்வரே
பிச்சுத்தயர் பரனுனீ
பெருமந்திரந் தனிலாற்றுவாய்
நச்சுப்பெருஞ் சுதைவேலையாய்
நாராயணு நாராயணு. 81

எய்தாரிருந் திடவம்பைநோ
மிழிவாளர்போற் பழிபாதகம்
செய்தாரிருந் திடலன்றியே
தெய்வந்தஞ்ச் சிதைவாகவே
வைதாவதென் விதனத்திலே
வழிதப்புமே வாய்பாருமே
நைதாதுவின் வரகாரமே
நாராயணு நாராயணு. 82

மூகிலுக்குளே யடிபட்டவோர்
முதுமக்கள்போற் றுணிவிக்குநோய்
மிகலற்பமோ விடுவித்திடாய்
விமதத்தநீர் மடுவுக்குளே
ஞிலைக்கொடாய் துகில்விட்டிடாய்
தொழவெட்கமே விமையக்கணூர்
நகிலுக்குள் வீழ் நகையச்சுதா
நாராயணு நாராயணு. 83

அமலத்தைவந் தயல்வண்டுணுங்
கருதாததோர் வகையொக்கவே
அமலத்தநீ ரிடைவாழினு
மதுபோலவே அயலாரெலாம்
நிமலப்பதந் தொழுமூரிலே
நிலைபெற்றிருந் துணைவந்தியேன்
குமலிக்குமோ ரருள் செய்திடு
நாராயணு நாராயணு. 84

என்மாடுவீ டென்பிள்ளைபெண்
டென்காணிமண் ணென்சொத்தெனும்
தன்மாலிலே யறியாதபேர்
தனதாகுமோ தானுவதார்
வன்மாயமென் றதுகண்டுநின்
வடவேங்கடம் பதிவைகியே
நன்மானுடர் நிலைநிற்பமே
நாராயணு நாராயணு. 85

பரலோகமும் பரரூபமும்
பரபோகமும் பரமாயுவும்
சுரலோகமுஞ் சுயரூபமுஞ்
சுரபோகமுஞ் சுரவாயுவும்
திரலோகமென் றிவையாவையுந்
திருவேங்கடந் தனிலுள்ளதால்
நரலோகமே மிகநன்றுகாண்
நாராயணு நாராயணு. 86

அசுவாதவன் பழிவேடரா
யடியேனுமிப் பிணிநோயெலாம்
கசவாதுதின் பலர்போலவே
கவராமலிங் கருள்கூறுவாய்
குசவாயதா சிறுகோவலா
குறுவேதியா குலமன்னர்மா
னசவாவியிற் பயிலன்னனே
நாராயணு நாராயணு. 87

மீன்கூறுமங் கிடிபாதியான்
மிருதங்குரள் பரசாலிகோ
மான்கூறலா யுதனுயன்மேல்
வருவாசியும் பெருவாசியேற்
தேன்கூறுமா கமசாரமுஞ்
சிறுபோகமோ கமசாரமும்
நான்கூறுமங் குருபத்தனே
நாராயணு நாராயணு. 88

வெறுக்கத்தகா தெனதாவியின்
விளக்கிற்குநின் னருணெய்யிடாய்
பொறுக்கத்தகா ததுமெய்யுடல்
புழுக்கத்தகா தொருபோரிலே
குறிக்கிட்டமோ நடுக்கிட்டிடக்
குலவாணனுர் திரடோளெலாம்
நறுக்கிக்கையோர் துணைவிட்டவா
நாராயணு நாராயணு. 89

புன்சொல்லிலே யகப்பட்டதும்
போதாமலே யமமேற்றெனக்
கென்சொல்லுவோ மெனவெண்ணியோ
யாதோவெனக் கீயாதுநீ
தென்சொல்லிலே வடசொல்லிலே
திருவாய்மொழிச் சதுர்வேதமா
நன்சொல்லிலே விளையாடுவாய்
நாராயணு: நாராயணு. 90

மெலியாமையுந் திருஞானமு
மிகுபோகமுந் திடதேகமும்
சலியாமையும் பகைநாகமுந்
தனராசியுந் தருசீலமும்
கலியாணமும் பெறநீதரக்
கடனுளியாற் பினுமுன்னை நான்
நலியாமலே யருள்கூறுவாய்
நாராயணு நாராயணு. 91

சமத்தேதுநல் லறமேதருந்
தயையேதருந் தவமேதுமிக்
கமைத்தேதுமே லடைவேதுகா
ரணமேதுபூ ரணமேதுசங்
கமத்தேதுரா கதவேதுசொல்
கமையேதுசொல் கதியாவுநீ
நமத்தேதுவா ரகைவாசனே
நாராயணு நாராயணு. 92

பித்தங்கயஞ் சொரிதேமல்கம்
பிதமீளகா மாலைபாண்டுவுன்
மத்தஞ்சுரஞ் சளிசன்னிகால்
வலிசூலவிக் குதல்கக்குவா
யுத்தமேபனந் தலைநோவுமற்
றுளநோயெலாந் தொடராமலாள்
நத்தின்முத்தற் கொருக்காலனே
நாராயணு நாராயணு. 93

துறையூருமா முதலிக்குலச்
சுனையொத்தமன் னவர்வாசலில்
குறையூர்வதுங் கசைசாடவே
குலுகின்றதுந் தலைசோரியாய்
முறையூர்வதும் பிறருன்னையே
முனிபாவமுந் தெரியேனலோ
தறையூரனே கருடாசலா
நாராயணு நாராயணு. 94

பிணிவிட்டதே விதியாவையும்
பிழைவிட்டதே சுகசீவியாய்ப்
பணிவிட்டதே நமனுரெனும்
பகைவிட்டதே பலபூசலும்
தண்ணிவிட்டதே யதிஞானமே
ரதவிட்டதே யுனையோதவாய்
நணிவிட்டதே யென்மட்டிலே
நாராயணு நாராயணு. 95

வாய்செய்தபுண் ணியங்கோடியென்
வழிசெய்தபுண் ணியங்கோடியென்
தாய்செய்தபுண் ணியங்கோடிதந்
தையற்செய்தபுண் ணியங்கோடியென்
பாசெய்தபுண் ணியங்கோடியென்
பதிசெய்தபுண் ணியங்கோடியென்
நான்செய்தபுண் ணியங்கோடிகாண்
நாராயணு நாராயணு. 96

உன்கோயிலென் கால்சூழவு
முன்பாதமென் கண்காணவும்
நின்பாடலென் வாய்பாடவு
நின்காரியங் கைசெய்யவும்
வன்காதுநின் புகழ்கேட்கவு
மென்னெஞ்சநின் நினைவுன்னவும்
நன்காகநல் வரமேயருள்
நாராயணு நாராயணு. 97

இதற்கெண்ணலா நாராயணு
வெங்கெங்கணு நாராயணு
சொற்கண்ணெலா நாராயணு
தொழிலெங்கணு நாராயணு
முற்கெண்ணெலா நாராயணு
முகமெங்கணு நாராயணு
நற்கண்ணலா நாராயணு
நாராயணு நாராயணு. 98

தேறுந்திருப் பதிவேங்கடந்
தெரிசித்துநா ரணவென்றுநான்
நூலும்படிப் பவர்பண்ணுவார்
நூறும்மிருந் துலகாண்டபின்
பேரும்பெறும் பிள்ளையைப்பெறும்
பெருமைப்பெறும் பெறுவிப்பையே
நாறுந்துழா யணிமார்பனே
நாராயணு நாராயணு. 99

நனிவாழிநின் பல்கோயிலு
நனிவாழிநின் பலதேவிமார்
நனிவாழிநின் னடியாரெலா
நனிவாழிநின் பலவைபவம்
நனிவாழிநின் வடவேங்கட
நனிவாழிநின் கவிகற்றபேர்
நனிவாழிநின் கவிகேட்டபேர்
நாராயணு நாராயணு. 100

முற்றிற்று.

பன்னிரு சதகத்திரட்டு
முற்றிற்று.

செய்யுள் முதற்குறிப்பகராதி

1. குமரேச சதகம்

செய்யுள்.	பக்கம்.
அ	
அக்கினீயை	10
அஞ்சலெனு	52
அண்டிவரு	51
அந்தணர்	16
அரசர் பகை	15
அழலுக்கு	50
அற்பர்க்கு	24
அனைவர்க்கு	19
அன்றுமுடி	26
அன்னதானஞ்	53
அன்னைசுற்	51
அன்னைதந்	25
ஆ	
ஆடாவின்	29
ஆதலர்க்	8
ஆறுதண்ணீர்	43
ஆனைதண்	,,
இ	
இரவிகாண	18
எ	
எழுத்தசைகள்	47
ஓ	
ஓடமிடு	40
ஓர விவகார	35
க	
கடவாரணை	21
கடனீர்	17
கடனுதவு	15
கடுகடித்	30
கட்டியெருது	22
கதிரவ	38
கல்லாதி	29
கல்விஞன்	19
கல்வியொடு	33
கணபார	37
கா	
காகம்	38
கு	
குடிபடையி	5
குணமிலாத்	23
குயின்மூட்டை	50
குருவிலா	14
குலமான	49
குறையாத	5
கூ	
கூடியே	52
கை	
கைக்குறுதி	42
கொ	
கொல்லையில்	35
கொண்டபடி	6
கொண்டல்	12
கொற்றவர்கள்	45
கோ	
கோகனக	49
ச	
சடமொன்	41
சத்தியங்	7
சந்தனவிருகூ	25
சா	
சார்பிலா	44
சி	
சிங்கார	11
சூ	
சூரபத்மன்	27
சே	
சேற்றிற்	33
சோ	
சோடாங்கு	46
சோரமங்கையர்	22
ஞா	
ஞானசெறி	8

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
த		**ந**		மனுசன்மசந் தாதா	39
தங்கமான து	12	நல்லதேவாலய	6	மன்னரைச்	16
தந்தாட	86	**நி**		**மா**	
தாய்தைதாய்	26	நியாயசெறி	9	மாதத்திரண்டு	19
திருணத்தி	17	**ப**		மாமதிலின்	26
தூரையதனி	89	பகல்விளக்	11	மாரிக்கு	8
தூமதுசெய்தே	7	பஞ்சரித்	44	மூரூத	29
தூம்பெருமை	18	பதசாதிலுங்	20	**மி**	
தா		பத்திரியொடு	47	மிக்கான	45
தாய்புத்தி	32	பரிதனி	48	**வ**	
தாரகைக	30	பருவத்திலே	28	வங்கான	27
தாரானமாக	10	**பா**		வத்தவிவ	34
தாருவித்	16	பாலிஞெடு	53	வறுமைதான்	42
தாஞ்சரித்தி	34	**பூ**		வன்னமயி	54
தான்பிடித்	24	பூமேவு	3	**வா**	
தி		பூமிக்கோ	4	வாரியாழி	36
திரவியங்	21	பூவில்வேசி	32	**வே**	
திருமகள்	37	**ம**		வேங்கைதன்	46
தே		மடுவினிற்	31	வேசைக்கு	9
தேசுபெறு	14	மண்மாலை	31	வேட்டகத்	40
தேடித்தம்	41	மனதிற்	23		
தேவாலயஞ்	48				

2. அறப்பளீசுர சதகம்

செய்யுள்.	பக்கம்.
அ	
அடைக்கல	63
அருக்கனுக்	89
இ	
இரப்பவன்	74
ஈ	
ஈனசாதிகள்	79
உ	
உம்பர்கோ	55
உள்ளன்பிலா	68
எ	
எழுதப்படி	92
ஒ	
ஒர்ஆறு	95
க	
கடலளவுரை	82
கட லுலகில்	55
கணவனுக்	56
கலக்காத	81
கலேவலா	71
கறைபடா	85
கற்றோர்க	70
கா	
காணரிய	93
காமிக்கு	64
காயமொரு	64
கு	
குணமற்ற	66
கூ	
கூடப்பிறந்	57
கை	
கையிலைக்	87
கொ	
கொடியபொலி	76
கோ	
கோபமே	93
கோவிலில்	60
ச	
சதுர்யுக	75
சமயத்தி	95
சரணெனக்	78
சி	
சித்திரைத்	88
சித்திரைத்திங்	94
சு	
சுவைசேர்	101
சுழிசுத்த	91
செ	
செங்கதிர்க்	89
செத்தைபல	71
செய்கன்றி	66
செழுமணிச்	79
சென்மகட்	98
சென்மித்த	74
சொ	
சொல்லரிய	96
சோ	
சோதிடம்	81
சோமுகா	104
த	
தங்குலம்	56
தந்தைதாய்	67
தந்தைதாய்	102
தாமோதரச்	103
தலைவிரித்	87
தறிபட்ட	66
தனக்குவெகு	78
தன்கணவ	85
தன்மட்டி	62
தன்னரசன்	97
தன்னல்முடி	69
தா	
தாதுப்பரீக்ஷை	80
தாம்பூல	72
தான்புரி	99
து	
துட்டவிக	79

செய்யுள்.	பக்கம்.
தெ	
தென்னமிந்த	92
நி	
நரிமயில்பசு	86
நற்பரி	65
நா	
நாவலந்	98
நீ	
நீயே	62
நீள்கடல்	96
ப	
பதின்மரி	84
பருகாத	103
பி	
பிறைசூடி	104
பு	
புண்ணிய	58
பூ	
பூதலை	60
பூதமோ	99
பெ	
பெண்புத்தி	72
பெருமில்பெரு	102
பொ	
பொய்யாத	84
பொன்னுசை	91
போ	
போதான	88
ம	
மதுநீதி	96
மலரிதழி	105
மண்ணெரமை	101
மா	
மாதாபிதா	69
மாறுத	61
மி	
மிதமின்றி	65
மூ	
மூப்பொருவ	83
மே	
மேலான	73
ய	
யசனுதி	97
வ	
வஞ்சகர்	59
வருமாதி	80
வருமோலே	98
வறுமைதப்	90
வனசஞ்	100
வா	
வாம்பரி	75
வாயிதழ்வு	78
வாலிபந்	61
வாலிபல	79
வாழையிலை	91
வாழ்மனை	59
வானவர்	67
வான்மதியை	77
வெ	
வெகுமான	77
வெஞ்சிலை	100
வெறிகொண்ட	68
வே	
வேட்டகஞ்	88
வேதாந்த	57
வேதியர்க்	82
வை	
வைதாலு	58

3. கயிலாசநாதர் சதகம்

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
அ		ஈ		கு	
அங்கார	145	ஈபாத	121	குருவுக்கு	137
அங்குதய	145	உ		குழுமேட	142
அசுபதி	142			குற்றங்கான்	115
அஞ்சுதே	130	உத்திரட்	148		
அடிபத	146	உத்திராட	144	கோ	
அணிகொளு	110	உள்ளுரில்	127		
அத்தினிப்	152			கொற்றவ	120
அரியரன்	117	ஊ			
அரிவையர்	152			ச	
அற்சூர்	123	ஊமைபெசவி	112		
அனுடமுங்	136			சகமதனின்	117
அனுடமுந்	133	எ		சங்கினிப்	151
அனுடமொடு	138			சந்திரசுழி	155
		எமகிருதி	146		
ஆ				சி	
ஆகம	108	ஒ			
ஆடிமார்	154	ஒணமா	139	சித்திரை	148
ஆட்சிதரு	110			சித்திரைக்	135
ஆதிகலி	157	க		சித்திரைக்கீ	140
ஆதிப்பரிச்	129			சித்திரைத்திங்	135
ஆதியா	150	கடலிடத்	116	சித்தினிப்	151
ஆதியிற்	132	கடலுலகி	115		
ஆதிவாரக்	126	கதிரவன்	141	சீ	
ஆதிவாரத்தனி	140	கலைமானும்	147	சீரார்	107
ஆதிவாரம்	139	கற்பிலா	128	சீர்மேவு	107
		கனமான	134	சீர்வாழி	158
இ		கனயோக	116	சிலமுயர்	118
		கி		சு	
இரவலர்க்	124				
இரவியிற்	137	கிஷக்குமனை	149	சுக்கிலசு	130
இரவிவா	143				

செய்யுள்.	பக்கம்.
செ	
செண்பக	150
சே	
சேருமுத்	158
த	
தக்கனை	131
தனேயே	124
தா	
தாமரை	156
தால்மா	121
தானவாத்	128
தி	
திதிவாணி	131
தெ	
தென்னுதமிழ்	111
தே	
தேவால	113
தோ	
தோளுகை	156
நா	
நாடிகணி	119
நால்வகை	108
நி	
நிறைகொண்ட	147
நீ	
நீதிகெறி	109
ப	
பக்கமொரு	125
பங்குனித்	134
படியதனி	114
பதியிரு	143
பா	
மார்க்கிலுப	149
பி	
பிரமனது	122
பிரித்திடி	133
பு	
புருடனேக்	132
புல்லர்க	112
பூ	
பூதங்க	129
பெ	
பெருவிரல்	152
பொ	
பொருளுள்ள	114
ம	
மண்டலம்	128
மதிக்கின்ற	127
மயிரிலு	119
மனிதனென	126
மனைகோல	141
மா	
மார்கழித்	154
மு	
முன்வருட	133
முன்னோர்கள்	118
மூ	
மூலதிரு	136
மூவுத்தி	144
வ	
வந்தமுத	109
வருகின்ற	120
வா	
வாத்தியார்	122
வி	
வீதிகொள்	155
வீரும்பனத்	111
வெ	
வெகுசன	113
வே	
வேதமந்	125

4. அண்ணாமலைச் சதகம்

செய்புள்.	பக்கம்.	செய்புள்.	பக்கம்	செய்புள்.	பக்கம்
அ		ஓதரிய தேவா	186	சு	
அண்டமனே	159	ஓதிவார்	180	சுக்கிலஞ்	195
		ஓராயி	185	சுத்த சல	161
ஆ		க		சூ	
ஆடிமா	198	கட்டுவாம்	200	சூரியன்	209
ஆதிவா	185	கரியசெம்	183	செ	
ஆற்றுமண்	184	கருணை	161	செப்பருக்	171
இ		கருதபிர	165	செப்பூமா	175
இக்குள	195	கருத்தரித்	196	செம்பொனள	180
இச்சிலர	182	கரையின் புகழ்	169	செம்பொனை	174
இடைமார்பு	179	கற்கோட்டை	179	செய்யவிரு	188
இந்திரன்	162	கா		சே	
இரவீலோ	164	காசிரா	170	சேரன்	170
இலைதிகழு	181	கார்கொண்ட	160	சேற்கட்டற்	206
உ		காலயி	179	சோ	
உச்சியிடை	137	காவிரியின்	163	சோழன்	172
உத்திரம்	199	கு		ஞா	
ஊ		குழைத்திடு	181	ஞானமரு	201
ஊணருந்	193	கொ		த	
எ		கொடியபத்	197	தருமமல	162
எட்டுசா	205	கொம்பலர்	169	தன்னுடைய	177
ஏ		கொய்யூர	204	தா	
ஏறுபரி	201	ச		தாமமா	204
ஒ		சந்தகண	186	தி	
ஒருகரம்	187	சந்ததமு	211	தினந்தோறும்	109
ஓ		சந்தவல	176		
ஓதரிய	166	சி			
		சிங்கள	171		

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
தீ		ப		மெ	
தீதிலா	210	பண்ணிவெள்ளி	168	மெவ்லிலை	192
தெ		பந்தியிடை	191	மே	
தெரிதரு	202	பம்பைச்	177	மேடலக்	207
தே		பரிமளக்	211	வ	
தேவால	173	பரிவொடுங்	190	வக்துலகில்	172
தேவால	199	பனையிணை	189	வருடாதி	163
தேவிசெங்	183	பன்னருக்	209	வனிதைபஞ்	210
ந		பன்னிரண்	188	வா	
நடுவட்ட	208	பா		வாசமலர்	193
நண்ணுதிரை	189	பாயும்	203	வாசியின்	201
நதிவளந்	176	பாலனஞ்	175	வி	
நல்லகீழ்	188	பாலுவுக்	208	விஞ்சுமே	196
நா		போ		வில்வமலர்	182
நாடுமுட	205	போஜனஞ்	191	விழிதோள்	178
நாட்டரசு	194	போஜன-செயு	192	வீரயுநன்	194
நி		ம		வே	
நீத்தலும்	164	மட்டிலா	197	வேங்கைசரி	202
நிலமருவு	184	மந்திரியர்	167	வேதமது	164
நீ		மலையாண்	166	வேதம்	174
நீலமர	200	மன்னியல்	167	வை	
நெ		மன்னுதிரு	159	வையகந்	206
நெற்றியிடை	178	மன்னுமச்	198		
		மா			
		மார்புங்	203		

5. அவையாம்பிகை சதகம்

செய்யுள்.	பக்கம்.
அ	
அஞ்சு	214
அடர்த்த	227
அடியார்	231
அணக்கே	249
அணியுங்	262
அணுவுக்	247
அத்துவிதமே	253
அம்மா	259
அரசே	244
அரிபிரம	250
அருளுக்	245
அலையிற்	283
அவகா	236
அவையாம்	218
அழியச்	217
அனேத்து	255
அன்பத்	235
ஆ	
ஆண்ட	232
ஆய்ந்த	245
ஆராகழு	257
ஆறுசமயங்	261
இ	
இறையி	251
உ	
உச்சிக்	214
உடனும்	233
உற்றிக்	243
உம்பர்	256
உற்றூர்	234
ஊ	
ஊசி	246
எ	
எங்கு	216
எங்குஞ்	231
எடுத்தசனன	242
எண்ண	220
எத்தகாலு	240
என்ற	226
என்ன	222
ஏ	
ஏதோ	241
ஏழை	238
என்றுன்	227
ஒ	
ஒன்றே	244
ஒன்றே	234
ஓ	
ஓலமிடவு	232
க	
கண்ணு	217
கருத்தோ	251
கல்லாக்	250
கவலைக்	230
கன்மமய	228
கனத்த	229
கனிந்து	237
கா	
காண	253
காமக்	226
காவே	222
கான	239
கி	
கிளியே	229
கு	
குடும்ப	249
குலந்தான்	237
கொ	
கொஞ்சுங்	241
கொடுங்கை	239
சி	
சித்தா	224
சு	
சுத்த	252
செ	
செடத்தை	221
செல்ல	246
சோ	
சோந்த	225
சோற்றுத்	242

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
த		**நா**		**பே**	
தக்க	254	காலோ	225	பேயே	220
தட்டா	158	கான்வே	263	**பொ**	
தத்வாதித	258	**நி**		பொன்னே	259
தந்தை	219	நிலங்கால்	240	**ம**	
தன்தென்	252	**நீ**		மண்ணுல்	235
தி		நீர்மேற்	238	மருத	254
தில்லே	262	**நெ**		**மு**	
தீ		நெஞ்சிற்	248	முகம்பார்த்	243
தீரா	218	**ப**		முக்கட்	261
து		பச்சை	248	**மூ**	
துரங்கம்	255	பஞ்சா	216	மூஉத்	227
தூ		பண்டு	215	மூன்றே	260
தூல	260	பறந்த	221	**மெ**	
தே		**பா**		மெய்யிற்	218
தேனே	215	பாகு	223	**வ**	
தொ		பாதாம்	213	வன்ன	219
தொந்த	256	**பூ**		**வி**	
ந		பூதமைந்து	257	விதியின்	223
நல்லார்	230	**பெ**		வினையின்	236
		பெரியோ	228	**வெ**	
				வெகுகாட்	224

6. திருவேங்கட சதகம்

செய்புள்.	பக்கம்.	செய்புள்.	பக்கம்.	செய்புள்	பக்கம்.
அ		ஓ		சரணென்	292
அகமென்று	281	ஓங்குதண்	265	சற்றெனினு	292
அங்கமத்	314	ஓட்டமுறு	314	சனிபுதன்	302
அண்டரூக்	282	ஓதுமா	309	சி	
அதிகார	270	ஓதுஜப	305	சிக்குமிக	309
அதிவீர	284	க		சிக்கைதெளி	291
அந்தணர்	268	கண்டபகை	288	சீ	
அந்நாவி	279	கண்டுநிரு	274	சீருலவு	267
அரசரைக்	279	கதித்திடும்	290	சிலமிகு	266
அரசர்மே	281	கருணாநதி	301	சு	
அரசர்வெகு	285	கற்பனை	280	சுகந்தபரி	298
அரிதான	303	கா		சுகனெடு	315
ஆ		காட்டிலின்	278	சுற்றமொடு	270
ஆகாய	308	காதவழி	287	சூ	
ஆசையுட	307	காதன்மிகு	276	சூதுபெறு	271
ஆருக்கு	299	காரிகை	304	சூரனெடு	312
உ		காரியா	269	செ	
உரைகொண்டு	293	கீ		செந்திரு	265
உன்துபா	316	கீர்த்தனை	280	செயல்கொ	275
உன்னுடைய	283	கொ		செல்வமது	272
எ		கொச்சியுறு	307	சே	
எத்தனை	278	கொண்ட	289	சேர்க்கின்ற	309
எந்தவினை	296	கோ		சோ	
எழுதினது	277	கோகனக	310	சோதிகவ	311
ஐ		ச		த	
ஐயருக்	306	சத்திகண	298	தடவரை	272
ஒ		சந்தன	295		
ஒருபொழுது	313	சந்திர	296		
ஒருமலை	316				

செய்யுள்.	பக்கம்.
தந்தைதாய்	271
தாணிமன்	286
தனதிட்ட	304
தி	
திங்களுத	294
திடமுடன்	267
திரமான	299
திருடருக்	282
திருந்துகற்	283
தினமும்	290
தீ	
தீதுபுரி	277
தீராத	302
து	
துதிக்கின்ற	273
துரைமக்க	285
தூ	
தூதாகி	274
தெ	
தென்னமுத	293
தே	
தேவருட	315
தேன்கொண்ட	289
ந	
நசைபெற்ற	288
நா	
நாவினிற்	295
நி	
நிலமுடன்	303
நீ	
நீதிவழு	300
நே	
நேசமுறு	305
ப	
பஞ்சணை	306
பாதகீ	269
பாராசர்	311
பாதான	297
பு	
புண்ணியம்	286
புருவகொரி	297
புருஷாய்	268
பூ	
பூமேவு	266
பெ	
பெற்றதாய்	284
பொ	
பொங்குகதி	276
போ	
போசனஞ்	294
மி	
மிக்கதடி	291
மிக்கதெய்	301
மு	
முடிகொண்ட	273
மெ	
மெய்யான	287
வி	
விசயன்	312
வித்தையே	310
வீலமாதர்	308
வினயமுட	313
வே	
வேர்தருட	275

7. தண்டலையார் சதகம்

செய்யுள்.	பக்கம்.
அ	
அடித்தமனை	349
அட்டதிசை	319
அந்தணரை	323
அந்தணர்க்கு	340
அருண்மிகு	331
அருப்பயிலு	346
அல்லமருங்	320
அள்ளித்தண்	324
ஆ	
ஆம்பிள்ளா	332
ஆழியெல்லா	350
இ	
இதுகருமை	352
இரக்கத்தா	354
இரந்தனை	330
இழைபொறுத்	345
உ	
உபசாரஞ்	341
உரங்காணு	346
உருவெடுத்த	327
உழையிட்ட	323
உள்ளவரை	336
எ	
எத்தருக்கு	343
ஒ	
ஒதரியதண்	326
ஒதரியவித்	331
க	
கட்டுமாங்	326
கரப்பார்	336
களித்துவரு	350
கறுத்துவிட	323
கற்பூர	354
கற்றவர்க்	338
கா	
காதிலே	327
காலமறி	347
கானமருங்	348
கு	
குறும்பெண்ணை	321
கூ	
கூன்செய்த	313
கை	
கைக்கெட்டா	347
கைசொல்லும்	328
கொ	
கொச்சையிலே	351
கொச்சையிற்	323
கொடியருக்கு	325
கோ	
கோடாமற்	329
ச	
சகமிக்க	341
சங்கையற	322
சலியாமற்	354
சி	
சிறியவரா	337
சிறுபிறை	329
சின்னமெய்	329
சீ	
சீரிலகுந்	334
சீரிலகுஞ்	342
சீர்கொண்ட	317
சு	
சுற்றமாய்	335
செ	
செங்காவி	325
செழுங்கள்ளி	344
சே	
சேணிலகு	349
சொ	
சொன்னதை	324
சோ	
சோறென்ன	343
ஞா	
ஞாலமுறு	349
த	
தண்டலையா	352

செய்புள்.	பக்கம்.
தண்ணமரு	340
தத்தைமொழி	339
தனத்திலே	345
தனமேவும்	347
தன்மமதை	319
தா	
தாயறிவாண்	325
தானவனு	343
தி	
திருவிருந்த	321
து	
துப்பிட்ட	322
துன்மார்க்கர்	335
தே	
தேரோடு	345
நி	
நன்றிதரும்	320
நா	
நாற்கவியு	330
நி	
நித்தமெழு	351
நிலைசேரு	348
நே	
நேசமுடன்	339
நேற்றுள்ளா	332
நொ	
நொந்தவரு	350
ப	
பஞ்சகோல	336
பணந்தானே	342
பர்ங்கருணை	338
பரியாம	326
பன்னகவே	344
பா	
பாரதியா	331
பார்க்குளறி	353
பி	
பிரசமுண்டு	338
பிறக்கும்	334
பு	
புல்லறிவுக்	319
புனங்காட்டு	342
பே	
பேரான	344
பேரியைக்	330
பேருரைகண்	353
பொ	
பொலியவ	333
பொறுமையுட	343
பொற்குடை	321
போ	
போரஞ்சா	341
ம	
மண்ணுலகா	324
மண்ணுலகிற்	339
மற்றவரோ	333
மா	
மாஞென்று	328
மு	
முக்கணர்	320
முன்பெரி	340
முன்னரிய	327
மே	
மேட்டுக்கே	322
மை	
மையிலே	346
வ	
வடியிட்ட	333
வபபரெல்லா	352
வரமளிக்கு	318
வர்க்கத்தார்	332
வல்லமை	353
வள்ளுவர்	318
வா	
வாங்கால	335
வி	
விசையமிகு	337
விற்பனர்க்	337
வே	
வேதநெறி	317
வை	
வைதிடினு	334

8. அருணசல சதகம்

செய்புள்.	பக்கம்.
இ	
இடியுக்	359
இந்நான்	374
இருப்பான	362
ஈ	
ஈனந்தரு	365
உ	
உமையாளரு	366
உமையாளுன	367
உற்றுண்	363
உனக்குண்	361
உனக்குள்	371
உன்னன்	368
ஊ	
ஊனந்தரு	359
எ	
எரிகின்ற	373
எள்ளுக்கு	367
ஒ	
ஒருபான்	362
ஒப்பான	362
ஒன்றுகி	361
க	
கடியார்	355
கலையார்	368
கல்லானை	364
கற்பம்	356
கன்னுகுபே	370
கா	
காட்டுக்குளே	363
காட்டுக்குளே	373
காமத்தொடு	370
கார்மேவி	366
காலாழ்	374
காவீக்கு	361
கை	
கையாற்	378
கொ	
கொம்பா	380
ச	
சந்தித்து	365
செ	
செம்பிற்	360
த	
தக்கன்	368
தம்மாலறி	373
தா	
தாய்தந்தை	375
தாய்மார்	372
தி	
திருநாதன்	355
திருமாலய	366
திருமாலொரு	364
திருவாசக	361
தெ	
தெள்ளித்தெளி	375
தே	
தேவாதி	369
தேன்பட்ட	376
ந	
நட்டுந்தொழா	377
நா	
நாய்தன்	365
ப	
பச்சென்	370
படியாவு	363
படியாளு	380
படைக்குந்	357
படைப்பானு	379
பதியாகு	376
பரிச்சிட்	357
பரையுன்	372
பல்லார்வி	369
பறக்குஞ்	375
பறவைக்	378
பன்னுகணை	370

செய்யுள்.	பக்கம்.
பா	
பாசக்கிடம்	371
பாசாடவி	378
பாடார்	379
பாம்பின்	360
பாய்வா	380
பாராளு	360
பாரின்	358
பி	
பிறவா	363
பு	
புலையான	378
புல்லாதி	357
பூ	
பூசிக்க	369
பூமாந்தி	364
பெ	
பெருமைக்கட	367
பொ	
பொய்யான	374
பொருப்புச்	376
பொருளீட்	374
பொறியின்	362
பொன்பரவு	355
பொன்னுக்கு	377
போ	
போகாது	379
ம	
மடவார்	372
மட்டார்	359
மலமூன்	378
மனையாண்	372
மா	
மாயோனே	376
மார்த்தாண்ட	375
மாலாரொரு	379
மாருவரத்	359
மானேந்தி	564
மு	
முடிபட்ட	356
முன்னுளி	358
மே	
மேனுனொரு	358
மை	
மையார்	357
யா	
யான்செய்த	371
வ	
வரமாமல	367
வல்லான	366
வளர்கார்த்	361
வா	
வாசிப்ப	377
வாட்டேறு	365
வாதாசன	358
வாளுகினை	356
வி	
விண்ணுளு	368
வில்லார்	356
வீ	
வீட்டுக்	360
வெ	
வெய்யோ	371
வே	
வேலிக்கு	377

9. எம்பிரான் சதகம்

செய்யுள்.	பக்கம்.
அ	
அச்சுதனின்	386
அச்சுதனே	384
அடவிதனி	400
அரிஇவச	394
அருமறையா	403
அருளாளா	383
அருளுடனே	390
அருளுடன்	387
அறக்கொடிய	385
அறுசமயத்	393
அன்னுதி	386
ஆ	
ஆகார	388
ஆருமுனே	407
ஆவணிரோ	394
ஆழ்வார்கள்	381
உ	
உக்கிரசே	396
உதித்தவரும்	391
உப்புதனி	388
உருக்குமணி	399
உலகங்க	403
உலகளந்த	404
உன்னுமை	400
உன்னுடைய	383
எ	
என்றும்	381
க	
கடிக்கிலிர	395
கடியகர்த்த	396
கண்ணிரண்டா	406
கரிபுன்னி	389
கருதலர்க்கு	397
கன்றுடனே	401
கன்னனெய்	398
கா	
காமனுரு	392
கி	
கிம்புருடர்	382
கு	
குறைச்சலற	397
கே	
கேசவநா	384
ச	
சக்கரஞ்சங்கிரு	387
சக்கரஞ்சங்குய	406
சங்கர்கூ	384
சயமிகுத்த	402
சயித்தவனே	398
சி	
சிட்டிக்க	385
சீ	
சீரரியே	389
சீராமா	388
சு	
சுரரசுரர்	404
த	
தசரதன்	405
தந்தைதாய்	386
தா	
தாயாய்நற்	400
தி	
திட்டமுட	402
திண்ணமுடன் கோ	395
திண்ணமுடன் பாண்	391
திருக்கச்சி	389
திருகாம	407
திருமணிட்டு	389
திருமாது	382
திருமாதும்	406
திறத்தபொய்	390
தினம்பன்னீ	398
தீ	
தீமையிலுல்மத்	402
தீமையிலுல்மா	404

செய்யுள்.	பக்கம்.
ந	
ணண்ணியொ	393
கத்தகோ	396
கந்தவனங்	393
கம்பியமெய்	405
கலமருவு	404
நி	
கிருவான	401
கிலமாது	401
கின்னினைவா	396
ப	
பட்டமரர்	407
பட்டமற்று	392
பண்ணியிடு	383
பத்தியுடன்	394
பத்துப்பே	390
பரப்பிரம	384
பயிர்க் கிறைத்து	399
பலர்கூடி	385
பலவிசைய	401
பா	
பாகவத	406
பாதகக்கண்	395
பாதகவெஞ்	400
பாதத்திற்	385
பி	
பிடிபடா	381
பிறக்குமுன்	394
பு	
புண்ணியர்	403
பூ	
பூதலத்தி	383
பெ	
பெருத்திருந்த	388
பொ	
பொன்னுல	399
ம	
மகரத்திற்	402
மச்சகூர்	393
மணியிசைக்கா	387
மந்தரமத்	403
மன்னவராய்	387
மன்னுப்	397
மா	
மாதவரீ	382
மி	
மிடித்தில்லான்	395
மீ	
மீதான	392
மு	
முதற்பிறை	392
முலேயில்	397
மை	
மைந்தனை	393
வ	
வசுதேவனி	405
வசுதேவன்	,,
வரத்திலர	399
வலேவான	386
வன்னியினன்	391
வி	
விண்ணுலகு	391
வெ	
வெயிற்காயு	390

10. கோவிந்த சதகம்

செய்யுள்.	பக்கம்.
அ	
அடிகொண்	424
அடுத்தரு	421
அடும்பழி	431
அண்டா	437
அண்டினர்க்	426
அழைத்தா	439
ஆ	
ஆவிக்க	411
ஆறிய	438
இ	
இடைப்பட	440
இட்டுநோற்	420
இணக்காதி	415
இயல்புடன்	419
இறைமுறை	415
உ	
உடுப்பாருண்	414
உணத்தக்க	413
உண்டான	426
எ	
எடுத்தாலுமூறு	412
எடுத்தாலும்	413
எந்தா	412
எள்ளாடும்	414
ஐ	
ஐங்காதம்	436
ஒ	
ஒளித்தாலும்	420
க	
கட்டாண்மை	410
கண்டனுக்	425
கதிப்பா	427
கழுக்கட்டி	410
களிப்பாற்	416
கி	
கிட்டியொரு	415
ச	
சடத்துக்	417
சதிசெய்யு	431
சலத்தால்	416
சலிக்கக்	419
சற்சன	434
சூ	
சூடவ	439
சூழாதி	440
செ	
செடிக்கொரு	409
செம்பிடு	417
செல்வாய்	428
செழித்திடு	432
சொ	
சொல்லைப்	419
சோ	
சோட்டைப்	417
சோற்றுக்	423
த	
தடுப்பார்	411
தண்டாதரு	440
தண்டாரணி	422
தமத்தி	430
தம்மின	,,
தருவிற்	421
தருவையொப்	435
தனத்தை	434
தனிரே	423
தி	
திண்டாட	436
திறமுஞ்	428
தெ	
தெட்டிப்	424
தென்னா	429
தே	
தேட்டானர்	438

செய்யுள்:	பக்கம்.
தேறியநெஞ்	435
தேறியமா	429
தேனே	443
தொ	
தொடுத்திடு	433
தோ	
தோட்டியை	434
ந	
நடந்தார்க்கு	441
நடைகற்கு	424
நள்ளிருட்	437
நன்றிசெய்	423
நா	
நாட்டம்ப	414
நி	
நிரைத்தோ	435
நிறைந்தே	420
நிறையா	430
நீ	
நீலங்	411
நெ	
நெஞ்சார	442

செய்யுள்	பக்கம்.
ப	
படியாளு	418
பல்லால்	428
பன்றி	433
பா	
பாலிட்ட	410
பாவுக்	418
பி	
பிஞ்சுப்	422
பீ	
பீடார்	412
பூ	
பூணத்	438
பெ	
பெண்டகு	431
பொ	
பொடிச்செல்	425
பொரக்கத்	437
ம	
மஞ்சணந்	442
மட்டுப்ப	418
மலைப்பாற்	413
மழைக்கு	436

செய்யுள்.	பக்கம்.
மா	
மாவேழங்	409
மி	
மிடித்தாலு	429
மிடியிற்	427
மு	
முந்தச்	443
மொ	
மொழியின்	421
வ	
வணங்காருன்	441
வண்டானது	425
வம்பா	439
வருபுத்ர	427
வல்லா	442
வள்ளலெ	432
வரங்காத	416
வா	
வாலியை	411
வி	
விடுபோர்	422
விடுப்பார்	426
விதிமுறை	432
வெ	
வெஞ்சரக்	438

11. தொண்டைமண்டல சதகம்

செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.	செய்யுள்.	பக்கம்.
அ		ஓ		கோ	
அஞ்சொன்	451	ஓர்கறுப்பு	472	கோலூ	463
அத்தப்புரமு	467				
அழுவதுங்	459	க		கை	
		கசிட்டன்	466	கையா	450
ஆ		கடைவா	464		
ஆரான்	459	கண்ணு	456	ச	
		கண்ணூர்	447	சயிலத்	456
இ		கயிலையுங்	446		
இடஞ்சூழுங்	451	கன்மாரி	471	சா	
இந்தச்	472			சாய்த்திட்	449
இளைத்தெழு	446	கா			
இன்னவர்	470	காரார்	461	சீ	
இன்னும்	447	காவிய	469	சீருறும்	458
		காவைவென்	471	சீரொன்று	466
ஈ				சீர்கொண்ட	445
ஈட்டால	457	கி			
ஈரக்	460	கிளப்பார்	452	செ	
				சென்னியிற்	453
உ		கு			
உணலெப்	466	குழுவார்	459	சே	
உன்னத்துத்	457			சேணூர்	446
உறைவா	467	கூ		சேவடி	446
		கூட்டுங்	452		
ஊ		கூற்றார்	464	சொ	
ஊரார்	462			சொல்லாயு	459
		கே		சொல்லெயி	454
எ		கேட்டாலு	449		
எண்ணன்	462			தா	
எல்லப்ப	472	கொ		தாகைவேத்த	471
		கொக்கலர்	448	தாருவுற்ற	468
ஏ		கொண்டலே	445	தாளையார்	464
ஏதிலுங்	464	கொத்தலர்	465	தாழை	457
ஏத்தலித்	455	கொல்லெயிற்	458	தாழ்ஞர்ச்	461
ஏரினியற்	454				

செய்யுள்.	பக்கம்.
தா	
தாயினு	449
தானாண்மை	468
தாறற்ற	461
து	
துரைத்தியாக	469
தெ	
தென்னத்	448
தே	
தேமாம்	450
தேர்கொடுத்	468
ந	
நறங்கூ	463
நன்கண்	448
நன்றுய்	462
நா	
நாட்டான்	470
நி	
நிலைவாழ்வு	470
நீ	
நீடார்	447
நீண்டார்	462
நீளத்	453
நூ	
நூலார்	454
நெ	
நெடுக	460
நே	
நேயத்	460
ப	
படவேங்	451
படையிற்	451
பட்டாபி	457
பண்டைநிக	461
பண்டையொர்	468
பயிரைப்	460
பன்னுங்	466
பா	
பாகொன்று	453
பி	
பிணிக்கோர்	456
பின்போர்	452
பு	
புறவோ	455
பூ	
பூதவஞ்	447
பே	
பேணிய	456
பொ	
பொய்யக	450
பொள்ளா	453
போ	
போதாரு	463
போனத்தி	452
ம	
மந்தா	469
மி	
மிண்டரை	458
மீ	
மீனவர்	449
மெ	
மெய்ப்பார்	465
மே	
மேதைப்	467
மோ	
மோதிச்	465
யு	
யுகமேழு	470
வ	
வள்ளல்	455
வா	
வானப்பிர	469
வி	
விண்ணிற்	450
வில்லேச்	458
விழுவே	454
வீ	
வீரரி	448
வீரர்	455
வெ	
வெங்கொலை	462
வெல்லாமல்	467
வே	
வேலி	465

12. வேங்கட நாராயண சதகம்

செய்புள்.	பக்கம்.
அ	
அசுவாத	497
அபராத	478
அயனுரை	477
அரசன்	484
அலசத்தரும்	476
அறவைக்	478
ஆ	
ஆதார	486
ஆபாத	483
ஆனாகி	484
ஆற்றுமை	481
ஆனந்தமா	486
இ	
இதெற்கென்	500
இந்தாவெ	487
இறையா	483
ஈ	
ஈசன்பரன்	482
உ	
உடைச்சேலை	495
உரலுக்கு	488
உன்கோயி	499
ஊ	
ஊழிற்பி	494
எ	
எதிரும்	476
எமக்கென்	429
எய்தாரி	496
எல்லாரு	477
எழினெட்டு	493
எனைக்காக்க	,,
என்மாடு	496
ஒ	
ஓமங்க	477
க	
கம்சுப்பி	495
கஞ்சப்	493
கண்பொன்று	494
கறலத்தை	496
கவீகல்ல	491
கற்பாலினீ	488
கன்னிப்பெ	495
கா	
காசிக்கு	489
காணுங்க	490
கு	
குடிநீர்	487
குப்புற்ற	480
குலங்காண	492
கோ	
கோட்சொல்	484
ச	
சமத்தேது	498
சமையாதி	488
சி	
சிருக்காமருங்	479
சிவனீதலம்	476
சிற்றப்ப	468
சு	
சுவையோ	490
செ	
செரிக்கின்ற	486
த	
தகவா	479
தலமேழை	,,
தனுவுக்கு	494
தன்மைக்கு	481
தன்னெட்	488
தா	
தாயற்ற	480
தாளுக்க	489
து	
துப்பிக்கை	485
துளசி	490
துறையூரு	499
தே	
தேறுந்தி	500
தேன்பாடி	482
ந	
நஞ்சுவினை	475
நல்லவட	475

செய்யுள்.	பக்கம்.
கனிவாழி	500
கன்றேறு	493
நீ	
நீகாசு	477
நீயண்ட	489
நீர்கொண்டு	475
நெ	
நெட்டேணி	490
ப	
பசையான	480
பசியாத	478
பசுகட்கு	492
பசைகொ	491
பண்டிட்ட	480
பரகாரி	476
பரலோக	497
பலகூறு	491
பா	
பாடேன	478
பாலாவ	485
பி	
பிணிவிட்ட	499
பித்தங்	493
பிரப்புக்கு	487
பு	
புட்புன்ன	495
புற்கொண்டு	483
புன்சொல்	498
பூ	
பூரிக்கு	482
பூவுக்கு	485
போ	
போகேந்தி	494
ம	
மந்தன்	481
மன்றுடி	487
மா	
மானுய	482
மீ	
மீன்கூறு	497
மு	
முகிலுக்கு	496
மெ	
மெலியாமை	498
மை	
மைசாக	492
வ	
வடுநிந்தை	486
வா	
வாஞ்சித்த	491
வாய்க்கின்	485
வாய்செய்த	499
வான்சொல்லு	479
வி	
விக்கற்	489
வீ	
வீட்டுக்கு	484
வெ	
வெறுக்கத்	497
வே	
வேட்பித்த	481

திருமகள் அச்சகம், சென்னை-1—.1969

பிரபஞ்ச உற்பத்தி **விலை ரூ. 8-00**

1. உலகோற்பத்தி காண்டம் 2. மக்கள் காண்டம்
3. தோவோற்பத்தி காண்டம் 4. மதபேத காண்டம்.

டெ நான்கு காண்டங்கள் அடங்கியுள்ளன. டெம்மி 1X8 அளவில் 630-பக்கங்கள் கொண்டது; உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு காலிகோ கட்டிடம் செய்துள்ளது. பண்டிதர்களும் பத்திராதிபர்களும் புகழும் அரிய பெரிய நூல்.

இதில் பூமி முதல் பதினான்கு லோகங்களின் அமைப்புக்கள், அந்தந்த லோகங்களின் வாழும் ஜீவர்களின் தன்மைகள், பூலோகத்தில் பலவித கண்டங்களின் பிரிவுகள், அந்தந்த கண்டங்களில் வாழும் ஆண் பெண்களின் குணகுண இரகசியங்கள், ஆண் பெண் ஒருவரை யொருவர் காதல் அடைதலும் கருத்தொருமித்தலும் ஆகிய இயற்கையின் ரகசியங்கள், கடிமணம் புரிந்து குறைவற்ற இன்பமடைவதற்குரிய ஒழுக்க இரகசியங்கள், பெண்கள் ஆடவர்களின் சுபலட்சணங்கள், விவாக விதி, விவாகப் பொருத்தங்கள் புணர்ச்சி விதி ஆகிய உண்மை இரகசியங்கள், பிறப்பு முதல் இறப்பு வரையும் அடைதற்கான இன்பமுறைகளும், இல்லற ஒழுக்க நெறிகளும் நன்மை தீமை விதிவிலக்குகள் ஆராய்ந்தறிதலும் ஆகிய இரகசியங்கள், ஆயுளை நீடிக்கச் செய்யும் பிராணயாம முதலிய யோக முறைகள், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய திரிமூர்த்திகள் முதல் சிறு தேவதைகள் வரை எல்லா தெய்வங்களினுடைய மதத் தவேஷமற்ற உண்மை வரலாறுகள், சிவபெருமான்-சத்தி-விஷ்ணு முதலியவர்களின் அந்தந்த லீலா வைபவங்களையும் தசாவதாரத் தத்துவங்களையும் எல்லாக் கடவுளர்களுடைய படை-கொடி-விருது-தேர்-வாகனம் முதலிய சின்னங்களையும் பற்றிய உண்மைகள், வழிபடு முறைகள், இந்தியா, சீனா, ஜப்பான், ஜர்மனி, ருஷ்யா, ஐரோப்பா முதலிய எல்லாத் தேச மக்களினுடைய மதபேதங்கள் அவரவர் வணங்கும் தெய்வம் வழிபாடுகள் முதலிய இரகசியங்கள், சைவம், வைஷ்ணவம் இவற்றின் உட்பிரிவுகளும் அவற்றின் கொள்கைகளாகிய உண்மைகள் ஆகிய எண்ணற்ற விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

திருப்புகழ் மெய்ஞ்ஞான விருத்தியுரை ரூ. 4-00

மேற்படி உயர்ந்த கிளேஸ் கடிதம் ரூ. 5-00

அருணகிரி நாதருக்கு முருகக்கக் கடவுள் காட்சி யளித்த திருவுருவப்படத்துடன் அழகிய காலிகோ கட்டிடம் செய்யப்பட்டிருக்கிறது.

அருணகிரிநாத சுவாமிகள் இயற்றிய திருப்புகழ்ப் பாடல்கள் படிப்பாருள்ளத்தையும் கேட்பாருள்ளத்தையும் பரவசப்படுத்திப் பேரானந்தப் பெருக்கில் ஆழ்த்தும். இச் சிறப்புவாய்ந்த பாடல் களில் முதல் 100-பாடல்களுக்கு திரிசிரபுரம் எஸ். பி. ஜி. காலேஜ் தமிழ்ப்பண்டிதர் திருவாளர் **அமிர்தம் சுந்தரநாதம் பிள்ளை** யவர்க ளால் பல சாஸ்திர மேற்கோளுடன் **'மெய்ஞ்ஞான விருத்தி யுரை'** என்கிற விரிவான உரை எழுதப்பெற்றுள்ளது. ஒவ் வொரு பாடல்களின் தலைப்பிலும் சந்தக் குறிப்புகள் சேர்த்தும், அரும் பதப்பொருள் விளக்கியும் உதவப்பெற்று, அருணகிரி நாதரின் சரித்திரத்துடன் சுத்தப் பிரதியாய் வெளியிட்டுள் ளோம்.

பல வித்வான்கள் பாடிய

தனிப்பாடற்றிரட்டு மூலமும் - உரையும்

முதல் பாகம் விலை ரூ. 5-00

இரண்டாம் பாகம் விலை ரூ. 5-00

இந்நூலுக்கு திருநெல்வேலி சைவ சித்தாந்தப் பேராசிரியர் **கா. சுப்பிரமணியப் பிள்ளை**, எம். ஏ. எம். எல், (அட்வகேட்) அவர்கள் பண்டைக்காலத்து வித்துவான்களின் உள்ளக் கருத்து களை விளக்கி உரை எழுதியுள்ளார். முதற் பாகத்தில் 35-புலவர் கள் இயற்றிய பாடல்களும், இரண்டாம் பாகத்தில் 58-புலவர்கள் இயற்றிய பாடல்களும், பாகமிரண்டிற்கும் 1734-பாடல்களுக்கு சிறந்த உரையுடன் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பெற்று காலிகோ கட்டிடம் செய்துள்ளது.

விநோதரச மஞ்சரி

கிளேஸ் பதிப்பு — விலை ரூ. 4-00

சென்னை துரைத்தன வித்தியாசாலையில் சென்ற நூற்றாண்டின் இடைக்காலத்தில் பிரதமதமிழ்ப்பண்டிதராயிருந்த அஷ்டாவதானம் வீராசாமி செட்டியாரவர்கள் ஆடவரும் மகளிரும் அவசியமாக அறியவேண்டிய நூல்களிலுள்ள கருத்துக்களை வகுப்பிலுட்படுத்தி யெடுத்து விளக்கியும், அவற்றினிடையிடையே சமயோசிதமும் சாதாரியமுமாகிய பற்பலபழமொழிகளைச் சேர்த்தும், வாசிப்பவர்களுடைய காவிற்கு ரசமும், செவிக்கின்பமும், மனதிற்கு மகிழ்ச்சியும், அறிவுக்கு விருத்தியும், பொழுதுபோக்கிற்கு உல்லாசமும் தரத்தக்க இனிய செந்தமிழ் வசன நடையில் அவ்விஷயங்களைத் தொகுத்து இயற்றியுள்ளார். அறிஞை விருத்திபண்ணக்கூடிய பல விஷயங்களடங்கிய சிறந்த நூல்; 440 பக்கங்கள் கொண்டது.

பரிசிப் பதிப்பு — இதிலடங்கிய விஷயங்கள் :

1. தெய்வக் கொள்கை
2. கற்பு நிலைமை
3. கீத வாத்திய விநோதம்
4. கற்ருய்ந்தொழுகல்
5. பயனில் ஜழவு
6. மகா பண்டிதனைச் சிறுபிள்ளை வென்றது
7. காலபேத வியல்பு
8. நன்றி மறவாவை
9. கம்பர் சரித்திரத்தின் ஒரு பகுதி
10. கம்பர் இராமாயணப் பாடி அரங்கேற்றியது
11. ஒட்டக்கூத்தர் ஈட்டெழு பது பாடியது
12. ஒட்டக்கூத்தர் சோழனுக்குப் பெண் பேசியது
13. புகழேந்திப் புலவர் வெண்பா பாடியது
14. காளமேகப் புலவர் சரித்திரம்
15. ஏகம்பவாணன் சரித்திரம்
16. ஒளவையார் சரித்திரம்
17. அவிவேக பூரணகுரு கதை
18. சிறு கூனன் கதை
19. ஓர் பதிவிரதை சரித்திரம்
20. காளிதாசப் புலவர் சரித்திரம்

வில்லி பாரத வசனம்

மகாபாரத வசன சங்கிரகம் — விலை ரூ. 8-00

எல்லாப் பருவங்களுமடங்கியது. டபின்கிரௌன் 1x16 அளவில் சுமார் 800-பக்கங்கள் கொண்டது.

பாரதம் ஆதி முதல் அந்தம் வரையில் இடையில் எவ்வித உபகதையும் விடாமற் சுருக்கி தெள்ளிய தமிழ் வசன நடையில் "கம்பநாடர்" ஆசிரியர்: மோ. வே. கோவிந்தராஜ ஐயங்கார் அவர்களால் எழுதப்பட்டது. அநேக அழகிய ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு காலிகோ கட்டிடம் செய்யப்பட்டிருக்கிறது.

நாலடியார் மூலமும்-உரையும் விலை ரூ. 4-00

மகா வித்துவான் கோமளபுரம் இராஜகோபாலப் பிள்ளை அவர்களிற்றிய விருத்தியுரையுடன் கூடியது. கையடக்கமான பரிசுப்பதிப்பு, உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு காலிகோ கட்டிடம் செய்துள்ளது.

அரசர், அந்தணர், தாய், தந்தை, ஆசிரியர், நட்பினர், உறவினர், மேலோர், கீழோர், முதலாயினோருடைய தன்மைகளையறிந்து அவர்மாட்டுத் தக்கவாறொழுகி, இம்மையிலின்பமும் மறுமையில் முத்தியும் பெறும் உபாய வழிகளை உணர்த்தும் இந்நூல் 400-வெண்பாக்களையுடையது. சமண முனிவர்களால் அருளிச்செய்த சிறந்த நீதி நூல். பதினெண்கீழ்க் கணக்குகளில் இதுவுமொன்று கல்வி அறிவைக் கோரும் ஒவ்வொரு வருக்கும், உயர்தரக் கல்லூரிலைய மாணவர்களுக்கும் இன்றியமையாதது.

பதினெண்சித்தர்கள் ஞானக்கோவை ரூ. 6-00

டை உயர்ந்த கிளேஸ் பதிப்பு ரூ. 7-00

தமிழ்நாட்டுச் சிறப்புகள் பலவற்றில் தலையாய சிறப்பு, சித்தர்கள் பலர் தோன்றி சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய பல அரிய விஷயங்களை தெளிவாக இந்நூலில் விளக்கப்பட்டிருப்பதேயாம். இதன் சிறப்பை அறியாதார் இவ்வுலகில் மிகச் சிலரே எனக் கூறுவது மிகையாகாது.

வா. சரவணமுத்துப் பிள்ளையவர்களால் ஞானவான்களுக்கு உபயோகமாகும் பொருட்டு சில எட்டுப்பிரதிகளிலிருந்தும் அச்சுப் பிரதிகளிலிருந்தும் 44 நூல்களை திரட்டியதை சுத்தப் பதிப்பாக டபில்ரொளன் 1x16 அளவில் வெளியிட்டுள்ளோம். 850-பக்கங்கள் கொண்டது. உயர்ந்த காலிகோ கட்டிடம் செய்தவை.

கிடைக்குமிடம்: B. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 57, வெங்கட்ராமையர் தெரு, சென்னை-1.

பிரபஞ்ச உற்பத்தி விலை ரூ. 8-00

1. உலகோற்பத்தி காண்டம் 2. மக்கள் காண்டம்
3. தோவோற்பத்தி காண்டம் 4. மதபேத காண்டம்.

இது நான்கு காண்டங்கள் அடங்கியுள்ளன. டெம்மி 1X8 அளவில் 630-பக்கங்கள் கொண்டது; உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு காலிகோ கட்டிடம் செய்துள்ளது. பண்டிதர்களும் பத்திராதிபர்களும் புகழும் அரிய பெரிய நூல்.

இதில் பூமி முதல் பதினொன்று லோகங்களின் அமைப்புக்கள், அந்தந்த லோகங்களின் வாழும் ஜீவர்களின் தன்மைகள், பூலோகத்தில் பலவித கண்டங்களின் பிரிவுகள், அந்தந்த கண்டங்களில் வாழும் ஆண் பெண்களின் குணகுண இரகசியங்கள், ஆண் பெண் ஒருவரை யொருவர் காதல் அடைதலும் கருத்தொருமித்தலும் ஆகிய இயற்கையின் ரகசியங்கள், கடிமணம் புரிந்து குறைவற்ற இன்பமடைவதற்குரிய ஒழுக்க இரகசியங்கள், பெண்கள் ஆடவர்களின் சுபலட்சணங்கள், விவாக விதி, விவாகப் பொருத்தங்கள் புணர்ச்சி விதி ஆகிய உண்மை இரகசியங்கள், பிறப்பு முதல் இறப்பு வரையும் அடைதற்கான இன்பமுறைகளும், இல்லற ஒழுக்க நெறிகளும் நன்மை தீமை விதிவிலக்குகள் ஆராய்ந்தறிதலும் ஆகிய இரகசியங்கள், ஆயுளை நீடிக்கச் செய்யும் பிராணயாம முதலிய யோக முறைகள், பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய திரிமூர்த்திகள் முதல் சிறு தேவதைகள் வரை எல்லா தெய்வங்களினுடைய மதத் துவேஷமற்ற உண்மை வரலாறுகள், சிவபெருமான்-சக்தி-விஷ்ணு முதலியவர்களின் அந்தந்த லீலா வைபவங்களையும் தசாவதாரத் தத்துவங்களையும் எல்லாக் கடவுளர்களுடைய படை-கொடி-விருது-தேர்-வாகனம் முதலிய சின்னங்களையும் பற்றிய உண்மைகள், வழிபடு முறைகள், இந்தியா, சீனா, ஜப்பான், ஜர்மனி, ரஷ்யா, ஐரோப்பா முதலிய எல்லாத் தேசமக்களினுடைய மதபேதங்கள் அவரவர் வணங்கும் தெய்வம் வழிபாடுகள் முதலிய இரகசியங்கள், சைவம், வைஷ்ணவம் இவற்றின் உட்பிரிவுகளும் அவற்றின் கொள்கைகளாகிய உண்மைகள் ஆகிய எண்ணற்ற விஷயங்கள் இதில் அடங்கியிருக்கின்றன.

கிடைக்குமிடம்: R. இரத்தின நாயகர் ஸன்ஸ்,
நெ. 57, வெங்கட்ராமையர் தெரு, சென்னை-1.